கிறிஸ்தோ மரியாம்பிள்ளை

புலவரின்

# வாழ்வும் படைப்புக்களும்



தொகுப்பு

கவிஞர் நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா

அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்

# கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரின்

# வாழ்வும் படைப்புக்களும்

**தொகுப்பும் வெளியீடும்**

**கவிஞர்**
**நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா**
**(கனடா)**

# கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரின் வாழ்வும் படைப்புக்களும்

நூலினுள்ளே...


01. என்றாவது ஒருநாள் எனது பரம்பரை தேடும் ..................... 03
*கவிஞர் நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா*

02. மரியாம்பிள்ளை புலவர் பரம்பரை ..................... 06

03. கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரின்
வாழ்வும் படைப்புக்களும் ..................... 09
*அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்*

04. நினைவில் நனையும் சொல் ..................... 17
*மாரீசன் கூடல் வசீகரன்*

05. இந்த நூலுக்கு வரலாற்று முக்கியத்துவம் ஒன்று உளது ..................... 19
*பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா*

06. மடுமாதா அம்மானை முதலாம் பதிப்பின் முகவுரை ..................... 22

07. மடுமாதா அம்மானை இரண்டாம் பதிப்பின் முகவுரை ..................... 23

08. மடுமாதா அம்மானை மருதமடுத் திருப்பதியின் ..................... 25
சரித்திரச் சுருக்கமும் ஞான வளர்ச்சியும்

09. திருமருதமடுவில் எழுந்தருளியிருக்கும்
அர்ச்சியசிஷ்ட செபமாலை மாதாவின் அம்மானை ..................... 32
*கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவர்*

10. அர்ச் அருளப்பர் வாசாப்பு ..................... 87
*கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவர்*

11. புனித சந்தியோகுமையோர் நாடகம்
(வடமோடி நாட்டுக்கூத்து) ..................... 163
*கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவர்*

12. வரலாறு - கிறிஸ்தோ சூசைப்பிள்ளை (நல்லையா) ..................... 288
*கவிஞர் நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா*

13. சூசைப்பிள்ளை (நல்லையா) புலவர் பரம்பரை ..................... 290

14. வரலாறு - புலவர் மரிசால் சிந்தாத்துரை
*கவிஞர் நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா* ..................... 293





# என்றாவது ஒருநாள் எனது பரம்பரை என்னைத் தேடும்

கவிஞர்
நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா
கனடா.

**க**விதை எனது வாழ்வில் பிரிக்க முடியாத துடிப்பு அதை என்னில் புகுத்தியது என் தாய் மாமனும் என் ஆசானுமான அமரர் மரிசால் சிந்தாத்துரை புலவர்தான். அப்போது அதை நான் உணர்ந்து கொள்ளவில்லை. காலங்கள் ஓடின என்னுள் கவிதைத் தளிர் துளிர்விட்டது. கவிதைகள் எழுத விரல்கள் விரைந்தன ஆனால் மனதில் அன்று தயக்கமும் நிறைந்தது.

தயக்கம் களைந்து எனது முயற்சியைத் தொடர்ந்தேன். எனது முதல் கவிதை நான் பிறந்த மண்ணின் வாசம் பற்றியது. இது மிகுந்த வரவேற்பைப் பெற்றது. என் மனமும் உவகை கொண்டது. இதனால் எழுதும் வேகம் என்னுள் அதிகரித்தது பின் நான் எழதிய பல கவிதைகள் பத்திரிகைகளிலும். இணையத்திலும் வெளிவந்து பலர் என்னைப் பாராட்டினார்கள். என்னைப் பெற்றவர்களும் என்னை வாழ்த்தி நீ மரியாம்பிள்ளைப் புலவரின் வழிவந்தவன் என்றதனால்தான் உனக்கு புலமை வந்துள்ளது என்றார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. யார் அந்த மரியாம்பிள்ளைப் புலவர் என அவர்களிடம் வினவியபோது அவர் எனது அம்மம்மாவின் தகப்பன் என்பதை அறிந்தேன். அதனால்தான் புலமையுள்ள எனது தாய் மாமன் மரிசால் சிந்தாத்துரை அவர்களைப் புலவர் என அழைத்தார்களாம்.

அன்றிலிருந்து எனது பூட்டனாரான மரியாம்பிள்ளைப் புலவர் அவர்களைப் பற்றி அறியும் ஆவல் என்னில் குடி கொண்டது. அதனால் அவரைப் பற்றிய ஆய்வில் இறங்கினேன். ஆனால் அவரைப் பற்றி தகவல்கள் அறிந்தவர்கள், அவருடன் வாழ்ந்தவர்கள் யாரும் தற்போது உயிருடன் இல்லை. இது எனக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது இருந்தும் எனது முயற்சியைத் தொடர்ந்தேன்.

எமது நாவாய் கிராமியப் பாடலில் ஒருவரியில் புலமைமிகு கிருத்தோவும் அவர் புதல்வன் மரியாம்பிள்ளையும் தான் என எழுதியுள்ளதை அறிந்தேன். இது எனது முயற்சிக்கு வலுச்சேர்ப்பதாக அமைந்தது. இருப்பினும் நாவாந்துறையில் எனக்கு இதைவிட வேறு தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால் சிறு தகவல் ஒன்று எனது காதை எட்டியது. அவர் கடைசிக் காலங்களில் மன்னார் அரிப்பில் வாழ்ந்ததாகவும் முருங்கனில் அவருடைய கல்வெட்டு ஒன்று இருப்பதாகவும் என்பதே அத்தகவல்.



அன்ரனி திரேசியான்
(மரியாம்பிள்ளை மகன்)

எனது ஆய்வின் முக்கிய திருப்பம் இங்கே தான் ஆரம்பமாகியது. முதலில் முருங்கனில் இவர் பற்றிய தகவல்கள் அறிவதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டேன். அது எனக்கு கடினமாகவே இருந்தது. காரணம் நான் கனடா நாட்டில் இருந்து தொலைபேசி மூலம் தான் இத்தகவல்களைச் சேகரித்தேன். இருப்பினும் எனது முயற்சிகளைக் கைவிடவில்லை.

பின்னர் இம் முயற்சியின் பயனாக முருங்கனிலுள்ள திரு குழந்தை மாஸ்ரர் என்பவருக்கு மரியாம்பிள்ளைப் புலவர் பற்றிய தகவல் தெரியும் என்பதை அறிந்து கொண்டேன். ஆனால் அவருடன் தொடர்புகொள்ள தொலைபேசி எண் என்னிடம் இல்லை. இவ்வேளையில்தான் யாழ்ப்பாணம் நாவாந்துறையில் உள்ள எனது தம்பியை (சித்தப்பாவின் மகன்) அரியகுமாரன் நிரோஜனை தொடர்பு கொண்டு அவருக்கு சகல விடயங்களையும் விளக்கி முருங்கன் சென்று குழந்தை மாஸ்ரரின் வீட்டை அறிந்து புலவர் பற்றிய தகவல்களை கேட்டறியுமாறு கூறினேன். நான் சொல்வதெல்லாம் செய்வதற்கு அவரும் ஆவலாக இருந்தார். காரணம் என்னுடைய அப்பாவும் அவருடைய அப்பாவும் சகோதரர்கள். அதேபோல் என்னுடைய அம்மாவும் அவர் அம்மாவும் சகோதரிகள்.

பின்னர் அவர் முருங்கன் சென்று குழந்தை மாஸ்ரரின் வீட்டை அறிந்து எனக்கு அங்கிருந்து தொலைபேசி எடுத்தார் என்னால் நம்பமுடியவில்லை. நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அவர்கள் எனது தம்பியை அன்பாக உபசரித்து மரியாம்பிள்ளைப் புலவர் பற்றிய தகவல்களையும் கல்வெட்டு பற்றிய விடயங்களையும் அவரிடம் கூறினார்கள். அதில் மரியாம்பிள்ளைப் புலவர் அரிப்பிலிருந்து இங்கு நாடகம் எழுத வருவதாகவும் தங்கள் ஊர் மக்களுடன் அவர் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததாகவும் கூறினார். மற்றும் முருங்கனில் உள்ள ஒரு வீட்டில் முருங்கன் புலவர் ஒருவருடன் மரியாம்பிள்ளைப் புலவரும் இணைந்து அதிக தடவை பாட்டுக்கள் நாடகங்கள் எழுதியுள்ளதாகவும் கூறினார்கள். அவ்வீட்டை நான் காணொலியில் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அத்துடன் இவ்வீட்டில் இருந்த புலவரின் பேரன்தான் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். பின் அவருடன் தொடர்புகொண்டு நடந்த விடயங்கள் அனைத்தையும் கூறி எனது ஆய்வுக்கு உதவுமாறு கேட்டேன்.

அப்போது அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார், தான் நிட்சயம் இவ் ஆய்வுக்கு உதவுவதாகவும் மரியாம்பிள்ளைப் புலவரைப் பற்றி தானும் அறிந்துள்ளதாகவும் கூறினார். இவ்வேளையில் எனது ஆய்வு இருமுனை நோக்கியதாக அமைந்தது. அடிகளாரின் தொடர்பானது எனக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியைத் தந்தது. பின் இருவரும் பல வழிகளில் இவ் ஆய்வினை மேற்கொண்டோம். மீண்டும் தம்பியை மன்னாரிலுள்ள பல ஊர்களுக்கு அனுப்பி புலவர் பற்றிய தகவல்களை சேகரித்தேன். இவ்வேளையில் இவ் ஆய்வின் மிகப் பெரிய திருப்புமுனையாக எனது நீண்டகால இணையத் தேடுதலின் பயனாக மரியாப்பிள்ளைப் புலவரால் எழுதப்பட்ட 'மடுமாதா அம்மானை' எனும் நூலை நான் கண்டறிந்தேன் அந்த நிமிடங்கள் என் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாதவை. எனது மகிழ்வுக்கு அளவே இல்லை.



மரிசால் இன்னேசம்
(மரியாம்பிள்ளை மகள்)

அதில் அவர் பற்றிய நிறைய விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தது. இவ் அம்மானையானது. இரண்டாம் பதிப்பாக முன்னாள் யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க யாழ் கத்தோலிக்க இலக்கியக்

கழகத்தினால் *1990*ம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது. இதை நான் ஆய்வு செய்ததில் இவ் ஆய்வுக்குத் தேவையான முக்கியமானவர்களுடனான தொடர்பை என்னால் ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. இதில் முதலாம் பதிப்பை வெளியிட்ட பதிப்பக உரிமையாளரான மாரிசன்கூடலைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை எசேக்கியேல் அவர்களின் பேரனான வசீகரன் (ஜேர்மனி) மற்றும் இளவாலையில் இருப்பவரான அருட்சகோதரி பூபதி அவர்கள். இவ் அருட்சகோதரி அவர்களின் மூலம்தான் மரியாம்பிள்ளைப் புலவர் புற்றிய தகவல்களை முன்னாள் யாழ் ஆயர் அவர்கள் அறிந்து கொண்டதாக எமது ஆய்வில் கண்டு கொண்டேன். இன்னும் இவ் அம்மானையை ஆய்வு செய்த இந்தியாவிலுள்ள பேராசிரியர் ஆ.பி. அந்தோனி இராசு அவர்களின் தொலைபேசி எண்ணை பல சிரமங்கள் மத்திலும் கண்டறிந்து இவர்கள் மூலமாக பல தகவல்களை சேகரித்தேன்.

பின்னர் இவ் அம்மானை சம்பந்தமாக அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாருடன் தொடர்பு கொண்டு சகல விடயங்களையும் விளக்கினேன். அவர்கள் தானும் புலவர் சம்மந்தமாக பல தகவல்களைச் சேகரித்துள்ளதாகவும் தொடர்ந்து நாம் ஆய்வை முன்னெடுக்கலாம் என்றும் கூறினார். இவ்வேளையில் சுவிஸ்நாட்டிலுள்ள எனது அண்ணன் வென்சிலாஸ் அன்ரனிடன்சன் (செல்வா) அவர்கள் தனக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களுக்கும் நல்லுறவு இருப்பதாகவும் அவரிடமும் ஆலோசனை பெறலாம் என எனக்கு அறிவுரை கூறினார். அதன் பின் நான் பேராசிரியர் அவர்களைத் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கிக் கூறினேன். அவர்களும் தன்னாலான உதவிகளைச் செய்து தருவதாகக் கூறினார்.

இன்னும் இரண்டாம் பதிப்பான இவ் மடுமாதா அம்மானை முதல் பதிப்பில்லாமல் வெளியிட முடியாது எனும் கருத்திற்கமைய முதலாம் அம்மானையிலும் இன்னும் பல தகவல்கள் இருக்கலாமென அதை பல இடங்களில் தேடினேன். பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களின் உதவியுடன் இப்போதைய எமது யாழ் ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் அனுமதியுடன் அருப்பணி புலேந்திரன் அவர்கள் மூலம் ஆயர் இல்ல ஆவணக் காப்பகத்தில் முதலாவது அம்மானையை தேடினோம் அங்கு அவ் அம்மானையைக் கண்டு பிடிக்க முடியாவிடினும் புலவர் பற்றிய சில தகவல்களை அங்கிருந்து பெற்றேன்.

புலவர் மரியாம்பிள்ளை அவர்களின் ஆய்வு முடிக்க முடியாத நீண்ட பயணமாக தொடர்ந்து கொண்டே செல்கின்றது. எனவே தற்போது நாம் சேகரித்த தகவல்களை உள்ளடக்கி அவரின் வாழ்வும் படைப்புக்களும் என்ற கருவில் நூல் ஒன்றை வெளியிட எண்ணினேன் இவ்விடயம் சம்பந்தமாக மதிப்பிற்குரிய அருட்திரு. தமிழ் நேசன் அடிகளாருடன் கலந்து ஆலோசித்து இருவரும் சேகரித்த தகவல்களைக் கொண்டு இந்நூலானது வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் எனது ஆய்வின் மூலம் ஒரு தகவலை அறிந்தேன். அது மரியாம் பிள்ளைப்புலவர் அவர்கள் தனது நண்பரிடம் தன்னை, “என்றாவது ஒருநாள் எனது பரம்பரை என்னைத் தேடும்” என்று கூறியதாக அவரது நண்பர் வழி உறவினர் ஒருவர் மூலம் அறிந்தேன்.

இவரது மகள் வழிப் பூட்டனாகிய நான் மேற்கொண்ட ஆய்வு அவர் கூறியதை உண்மை யாக்குவது போல் உள்ளது. புதைந்து கிடந்த ஒரு கவி இமயத்தின் வரலாறு மீட்டெடுக்கப்பட்டுள்ளது. காலத்தால் அழியாத இவர் படைப்புக்கள் என்றும் காவியாமாய் மிளிரட்டும். ■

# மரியாம்பிள்ளை புலவர் பரம்பரை

**கிறிஸ்தோ**
(தகப்பன் - புலவர்)

**திரேசம்மா**
(தாய்)

**மரியாம்பிள்ளை**
(புலவர்)

**றோசம்மா**
(மனைவி)

**மிக்கேல் விக்ரோறியா (கித்தோரி)**
(மகள்)

**ஆகத்தம்மா (கனகம்)**
(மனைவி)

**மரிசால் இன்னேசம் (பரிமளம்)**
(மகள்)

**மாசில்லா**
(மனைவி)

**அன்ரனி திரேசியான்**
(மகன்)

---

**மிக்கேல் விக்ரோறியா (கித்தோரி)**
(மகள்)

**செபமாலை** (பேரன்)
**நேசம்**

தேவதாசன் (அரியம்) -பூட்டன்
செபமாலை குறுஸ் மரியசலோமை (அரியமலர்) -பூட்டி
கனகராசா மரியம்மா (நிர்மலா) -பூட்டி
மரியதாசன் (அரசன்) -பூட்டன்
யேசுதாசன் (நேசன்) -பூட்டன்

**ஆசீர்வாதம்** (பேரன்)
**மரியம்மா (தங்கமணி)**

டனிசியஸ் அக்கினேசம்மா (மலர்) -பூட்டி
அந்தோனிப்பிள்ளை மரியபுஸ்பம் (ராசாத்தி) -பூட்டி
நற்குணசிங்கம் அசுந்தாமரியை (தங்க நாச்சியார்) -பூட்டி
யேசுதாசன் மரியசலோமை (தங்கக்கிளி) -பூட்டி

**நீக்கிலாஸ்** (பேரன்)
**கத்தறீனா (சலேற்)**

சந்தியோ மரியம்மா (பூபதி) -பூட்டி
மரியநாயகம் பாலா -பூட்டன்
மரியதாஸ் பாலச்சந்திரன் -பூட்டன்

செல்லப்பிரகாசம் யசிந்தாமரி (ராணியம்மா) -பூட்டி
பாலராசா சகாயமரி (அன்னக்கிளி) -பூட்டி
கயிலைநாதன் அந்தோனியம்மா -பூட்டி
அருட்சகோதரி மேரி கபிரியேல் -பூட்டி
அல்போன்ஸ்சஸ் (ஜெயகாந்தன்) -பூட்டன்
ஜஸ்ரின் கிறிஸ்ரில்டா (கறோலினா) -பூட்டி

**அல்பிறட்**
**மரியசலோமை (சைனம்மா)** பேத்தி

அருள்தாஸ் (சூரி -பூட்டன்
யேசுதாசன் மரியறீற்றா (டெசிராணி) -பூட்டி
காணிக்கைராசா கனிராணி -பூட்டி
சிலுவைதாஸ் (பாஸ்கரன்) -பூட்டன்
காணிக்கைமலர் இன்பராணி -பூட்டி
சகாயமேரி (சோபியா) -பூட்டி
அன்ரனியம்மா (நிலாவதி) -பூட்டி
செபமாலையம்மா (செல்வதி) -பூட்டி

**சைமன்** (பேரன்)
**தங்கப்பொன்** (முதல் மனைவி)

யேசுதாசன் (பாலகுமாரன்) -பூட்டன்
தாசன் ஆத்துமசீலி (ரதி) -பூட்டி
எக்ஸ்பீரியர் பரலோகசீலி (சான்றிலா) -பூட்டி
அமுதசிங்கம் ஆரோக்கியசீலி (சைலா) -பூட்டி

**சைமன்** (பேரன்)
**பாக்கியலட்சுமி (மல்லிகா)** (2வது மனைவி)

அன்ரனி குயின் யசோ -பூட்டன்
வடிவேல் அன்ரனிராணி (தங்கம்) -பூட்டி
தேவதாஸ் ஜீவராணி (பவுண்) -பூட்டி
மைக்கல் கொளமன் (வசந்தன்) -பூட்டன்
ஞானேஸ் (லீவர்) -பூட்டன்
வீரத்திருமகன் யாழினி -பூட்டி

**மரிசால் இன்னேசம் (பரிமளம்)**
(மகள்)

**முடியப்பு (காணிக்கை)**
**லூத்தம்மா** - பேத்தி

ஜெயநாதன் செபமாலையம்மா -பூட்டி
பிரான்சிஸ் சேவியர் அல்போன்சம்மா (ஜசிந்தா) -பூட்டி
யோசேப் இராசு ஆகத்தம்மா (மெசியா) -பூட்டி
அருள்ராஜ் (ரவி) -பூட்டன்
தேவதாஸ் (சின்னவன்) -பூட்டன்
ஜெகன் அமிலன் பரலோகராணி (மீனா) -பூட்டி

**யோண் (முத்தையா)**
**காணிக்கைமலர்** - பேத்தி

செபமாலை பிறகாசியம்மா (மாலா) -பூட்டி
வனராணி (வளர்மதி) -பூட்டி
வரதராஜா ஜேட்றூட்டம்மா (இத்திரம்) -பூட்டி
செபமாலை அஞ்சலினம்மா (ஜெயிலா) -பூட்டி
அன்ரனிதாஸ் (உலகவீரன்) -பூட்டன்
காணிக்கைதாஸ் (வேங்கை) -பூட்டன்
கமலதாஸ் -பூட்டன்

**அருமைத்துரை** - பேரன்
**அன்னபாக்கியம்**

அருள்மேரி (வசந்தா) -பூட்டி
மைக்கல் (பெனட்) -பூட்டன்
அல்வீனஸ் (நிச்சன்) -பூட்டன்
எமில் (நியூட்டன்) -பூட்டன்
அருணோதயமாலன் குயின்மேரி (ராஜி) -பூட்டி
றோய் -பூட்டன்
றொபின்சன் -பூட்டன்

**அன்ரனி யோசேப்**
**பவுலீனம்மா (தங்கப்பொன்)** பேத்தி

மேரி அஞ்சலா (சுதாமதி) -பூட்டி
சாள்ஸ் டிக்சன்சன் (யோண்சன்) -பூட்டன்
யேசுதாசன் ஜேந்திரன் -பூட்டன்
அன்ரனி டெனிஸ் (லுவின்சன்) -பூட்டன்
டொன்பொஸ்கோ (வில்சன்) -பூட்டன்
கண்ணன் மேரி கொலஸ்ரிக்கா (ஜசோதா) -பூட்டி
அன்ரனி ஜேக்கப் (றொபின்சன்) -பூட்டன்
மேரி வலன்ரீனா (றொபினா) -பூட்டி
மேரி யொணாபாத் (சுபனா) -பூட்டி

**அருள்ராசா (அரியகுமாரன்)**
**அடைக்கலமேரி (மலர்)** பேத்தி

யூடிற் (சுபனா) -பூட்டி
யூலியஸ் (பிரபு) -பூட்டன்
நிரோஜன் (விஜயசிங்கம்) -பூட்டன்
வேளாஜினி (சுபா) -பூட்டி
விக்ரம் யுனிற்றா (சாணுகா) -பூட்டி
யூட் (அனுஸ்ரன்) -பூட்டன்
அன்ரனி டண்சன் (பிரசாந்த்) -பூட்டன்

**வென்சிலாஸ்**
**மேரியம்மா (ஞானமணி)** பேத்தி

சாள்ஸ் மேரி ஐடா (ரதினி) -பூட்டி
அன்ரனி டண்சன் (செல்வா) -பூட்டன்
தேவராஜா மேரி வின்செல்லா (நந்தினி) -பூட்டி
யேசுதாசன் மேரி ஸ்ரெலா (சோதினி) -பூட்டி
அன்ரனி கிளாறன்ஸ் (அனுரா) -பூட்டன்
***(கவிஞர், நூலின் தொகுப்பாளர்)***
அன்ரனி யூட் (சுயாத்தன்)
லிவிங்ஸ்ரன் மேரி கனிஸ்ரா (குமுதினி) -பூட்டி
அன்ரனி ஜெராட் (உசாந்தன்) -பூட்டன்
சுமணன் மேரி ராஜி (அமுதினி) -பூட்டி

**தேவராஜா (ஆசைத்துரை)** பேரன்
**விஜயகுமாரி**

அன்ரனி வினிற்றன்

**சிந்தாத்துரை** - பேரன்
**ராணிமலர்**

அன்ரனி பிறேம்குமார் (பிறேமிஸ்) -பூட்டன்
அன்ரனி ஜெயக்குமார் -பூட்டன்
கிறிஸ்ரன் எழில்ராணி (சோபா) -பூட்டி
லக்ஸ்மன் இதயராணி (றூபா) -பூட்டி
அன்ரனி சுவாஸ்கர் -பூட்டன்
அன்ரனி சுதர்சன் (றொயன்) -பூட்டன்

**அன்ரனி திரேசியான்**
(மகன்)

**அந்தோனிப்பிள்ளை (தறுமு)**
**கொலிஸ் பிறித்தம்மா (வசந்தமலர்)** பேத்தி

குகதர்சன் -பூட்டன்
லூட்டன் -பூட்டன்
அன்ரனிகுயின் மேரி அன்ரனியா (தர்சினி) -பூட்டி
மேரி லூட்ஸ் (லக்கி) -பூட்டி
ஜெமிஸ் மில்லர்

**பர்நாந்து அரசன்**
**மேரி ராஜேஸ்வரி (லீமலர்)** பேத்தி

பிறேம்ராஜ் மேரி அன்ரனிற்றா (சுபிதா) -பூட்டி
கமல்மேரி அனிற்றா (சுயந்தா) -பூட்டி
விஜயகுமார் சகாயராணி (டிலா) -பூட்டி
ராஜேஸ்வரன் (கட்சன்) -பூட்டன்
மகிசன் -பூட்டன்
பெனட்சியா (தனு) -பூட்டி

**ஜெகநாதன்**
**சகாயமேரி (சொர்ணமலர்)** பேத்தி

ஜெருசன் -பூட்டன்

**சேவியர்**
**அஞ்சலீனா (புனிதமலர்)** பேத்தி



# கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரின் வாழ்வும் படைப்புக்களும்

## ஓர் ஆய்வு நோக்கு

**அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்**

### வாழ்க்கைச் சுருக்கம்

மரியாம்பிள்ளைப் புலவர் யாழ்ப்பாணம் நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.[1] இவருடைய தந்தையார் பெயர் கிறிஸ்தோ அல்லது கிறிஸ்தோப்பு ஆகும். இவரும் ஒரு மரபுவழிப் புலவர் ஆவார். மரியாம்பிள்ளை அவர்கள் நாவாந்துறையில் றோசம்மா என்ற பெண்ணை முதலில் மணந்து கித்தோரி என்று அழைக்கப்பட்ட விக்ரோறியா என்ற பெண் பிள்ளையைப் பெற்றார். றோசம்மா இறந்த பின்னர் கனகம் என்ற ழைக்கப்பட்ட ஆகத்தம்மா என்ற பெண்ணைத் திருமணம் முடித்து பரிமளம் என்று அழைக்கப்பட்ட இன்னேசம் என்ற பெண் பிள்ளையைப் பெற்றார்.

இவர் இளைஞனாக இருக்கும்போது மன்னார் மாவட்டத்தில் உள்ள முத்தரிப்புத்துறையில் வந்து குடியேறினார். முத்தரிப்புத்துறையில் மாசில்லா என்பவரைத் திருமணம் செய்த இவருக்கு அன்ரனி திரேசியான் என்ற ஒரே மகன் இருந்தார்.[2] புலவர் இறந்தபிறகு அவருடைய மனைவி மாசில்லா மறுமணம் செய்து முத்தரிப்புத்துறையிலேயே வாழ்ந்துள்ளார்[3]

முருங்கன் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் புலவர்மேல் கொண்ட அன்பின் காரணமாக முத்தரிப்புத்துறை ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு காணியை புலவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளார்கள். இந்தக் காணியிலேயே இவர் வீடு கட்டி வாழ்ந்துள்ளார். இவ்வீட்டில் புலவரின் மகன் அந்தோனி திரேசியான் வாழ்ந்துள்ளார்.[4]

புலவர் ஒரு மடுத்திருவிழாவுக்குச் சென்றபோது அங்கு மடு அன்னையின் திருச்சுருபப் பவனி வந்தவேளை, “இப்பதியைவிட்டு அப்பதிக்கு என்னை எடுத்துக்கொள்ளும்” என்ற வகையில் ஒரு பதிகம் பாடினார் என்றும் அதன்படி அவ்வேளையிலேயே அவர் உயிர் பிரிந்தது என்றும் சொல்லப்படுகிறது. புலவருடைய இறப்புத் தொடர்பான இந்தத் தகவலை உறுதிப்படுத்த வேண்டி உள்ளது.

### படைப்புக்கள்

புலவருடைய படைப்புக்களை அவருடைய ஒரே மகனாகிய அன்ரனி திரேசியான் அவர்கள்தான் கையடக்கப்படுத்தி வைத்திருந்தார் என்று அறியப்படுகின்றது. ஆயினும் அவருடைய மறைவோடு அப்படைப்புக்களும் காணாமல்போய்விட்டமை கவலையளிக்கும் விடயமாகும். தற்போது எமது தேடலில் நாம் பெற்றுக்கொண்ட, நாம்

அறிந்துகொண்ட படைப்புக்களை மட்டும் அடிப்படையாக வைத்தே இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது.

மரியாம்பிள்ளைப் புலவர் பல வகையான கலை இலக்கியப் படைப்புக்களை எழுதியுள்ளார். நாட்டுக்கூத்து நாடகங்கள் (வாசாப்புக்கள்), அம்மானைகள், பல்வேறு வகையான கவிகள் எனப் பலவற்றைப் படைத்துள்ளார்.

**நாடகங்கள்**

கிறித்தோ மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் சில நாட்டுக்கூத்து நாடகங்களை குறிப்பாக ஒரு இரவு பாடி ஆடப்படும் வாசகப்புக்களை எழுதிக்கொடுத்துள்ளார். அவை பற்றிய விபரங்களைக் கீழே காணலாம்.

## ஊசோன் பாலந்தை நாடகம்

ஊசோன் பாலந்தை என்ற நாடகம் தொடர்பான குறிப்பு மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் எழுதிய மடுமாதா அம்மானை நூலின் முதலாவது பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரியாம்பிள்ளைப் புலவரின் தந்தையார் கிறித்தோ புலவர் அவர்கள் இந்நாடகத்தை எழுதியதாகவும் இந்நாடகம் முற்றுப்பெறாத நிலையில் மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் இந்நாடகத்தை பூர்த்திசெய்து எழுதியதாகவும் அந்தக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஊசோன் பாலந்தை என்ற இந்நாடகம் புகழ்பெற்ற ஒரு நாடகமாகும். இது இன்றும் யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் - நாவாந்துறை, மெலிஞ்சிமுனை போன்ற இடங்களில் - பல ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.[5] இந்நாடகம் ஒரு இரவுக் கூத்தாகச் சுருக்கப்பட்டு மாதகல், முல்லைத்தீவு, பருத்தித்துறை, மண்டைதீவு எனப் பல்வேறு பிரதேசங்களில் மேடையேற்றப்பட்டுள்ளது.

## சந்தியோகுமையோர் வாசாப்பு

*(புனித சந்தியோகுமையோர் நாடகத்தின் ஒரு பகுதி)*

முருங்கன் புனித சந்தியோகுமையோர் ஆலய மக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க புனித சந்தியோகுமையோர் வாசாப்பை இவர் எழுதிக்கொடுத்துள்ளார். முருங்கன் புனித சந்தியோகு மையோர் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் முற்காலத்தில் முருங்கன், ஆவணம், முள்ளிக்கண்டல் (தேனுடையான்) என மூன்று கிராமங்களைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். முருங்கன் புனித சந்தியோகுமையோர் ஆலய மக்கள் மரியாம்பிள்ளைப் புலவரிடம் தமக்கென ஒரு நாடகத்தை எழுதித்தரும்படி கேட்ட சூழ்நிலை மிகவும் சுவாரஸ்யமானது.

இந்த மக்கள் தமக்கென்று ஒரு நாடகம் இல்லாத நிலையில் முருங்கன் சுண்டிக்குளிப் புலவரின் பரம்பரையில் வந்த - சுண்டிக்குழியில் வாழ்ந்த **'சின்னச் சமரர்'** என்று அழைக்கப்பட்ட **அந்தோனி பிலிப்பு நேரிசு**[6] என்ற புலவரிடம் சென்று தமக்கு ஒரு நாடகம் எழுதித்தரும்படி கேட்டுள்ளனர். இவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் புலவர் **விக்றோறி** என்னும் நாடகத்தை சில நிபந்தனைகளுடன் பாடிக்கொடுத்துள்ளார். இதுபற்றிய குறிப்பை திரு. பெஞ்சமின் செல்வம் அவர்கள் எழுதிய **மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம்** என்னும் நூலில் காணலாம்.[7]

இந்த மக்கள் தம்மைவிட உயர்ந்துவிடக்கூடாதென்ற உள்நோக்கம் கொண்ட இந்தப் புலவர் தான் எழுதிக்கொடுத்த நாடகத்தில் 'அறம்' பாடிக்கொடுத்தார் என்று அறியமுடிகிறது.[8] அறம் பாடுதல் என்பது தீமை விளையவேண்டும் என நினைத்து தீய நோக்கத்தோடு பாடப்படும் பாடலாகும். புலவர்களின் இத்தகைய பாடல்கள் பலிக்கும் என்ற நம்பிக்கை பொதுவாக கிராமப்புற மக்களிடம் உண்டு. சின்னச் சமரர் என்ற அந்தப் புலவர் எழுதிக்கொடுத்த நாடகத்தில் ஒரு பாடல் இவ்வாறு உள்ளது.

"கட்டண்டார் தாலியைக் கிட்டக்கொண்டேகினேன்
அத்தருணத்தில் அவள் செத்த குரல் வைத்து அழுதார்கள்
அண்டைக்கவன் ஆகாதெண்டு கண்டேன் பூவில் வெகு நன்மை ஆச்சே" [9]

இதில் 'அறம்' பாடப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகவே அறிந்துகொள்ள முடிகிறது. இந்த நாடகம் அரங்கேற்றப்பட்ட பின்னர் முருங்கன் சந்தியோகுமையோர் ஆலயத்தைச் சார்ந்த மக்கள் சமுதாயத்தில் மரணங்கள் அதிகரித்தன. பிள்ளைச் செல்வம் இல்லாமல்போனது. இதனால் இச்சமுதாயம் அழியும் நிலையை எதிர்நோக்கியிருந்தது. இப்படியானதொரு நிலையில்தான் இம்மக்கள் முத்தரிப்புத்துறையில் வாழ்ந்த நாவாந்துறையைச் சேர்ந்த மரியாம்பிள்ளைப் புலவரிடம் இந்நாடகத்தைக் கொண்டுசென்று காட்டினார்கள். அதைப் பார்வையிட்ட அவர் அந்நாடகத்தில் பல அறங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார். அத்தோடு அம்மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சந்தியோகுமையோர் நாடகத்தை ஒரு இரவுக்கதையாகப் எழுதிக்கொடுத்தார்.

அந்நாடகத்தின் காப்புக்கவியில் முன்னைய அறங்கள் விலகும்படி அவர் பாடியுள்ளதை அவதானிக்கலாம்.

"பொடிபொடியாய்த் தகர்த்தெறிந்தேன் முன்னே உள்ள
புலவர் செய்த தடையறங்கள் பேயின் மாய்கை
கடிதகன்று இன்று சந்தியோகு மையோர்
கருணை வளர் நாடகப்பாவானதாலே"

என்று பாடிக் கொடுத்தார். இந்த வாசாப்போடு முருங்கன் சந்தியோகுமையோர் ஆலயத்தைச் சேர்ந்த (இந்தக் கட்டுரையாசிரியரின் பேரனார்) திரு. மரியான் சந்தான் புலவர் (1905 - 1957) அவர்கள் எழுதிய 'வர்த்தகன் கோர்வை' என்று அழைக்கப்படுகின்ற பகுதியையும் இணைத்து 'புனித சந்தியோகுமையோர் நாடகம்' என்ற பெயரில் இந்நாடகம் இரண்டு இராக்கதையாக முருங்கனில் மேடையேற்றப்பட்டு வருகின்றது.

இந்நாடகத்தில் புனித இயாகப்பரின் போதனையிருந்து அவருடைய இறப்பு வரையுள்ள பகுதியை புலவர் மரியாம்பிள்ளை எழுதியுள்ளார். தொம்பிலிப்பு வத்தகன் வருகையிலிருந்து தொம்பிலிப்பு வத்தகன் மகன் கழுவேற்றி இறக்கப்பட்டது வரையான பகுதியை முருங்கனைச் சேர்ந்த புலவர் மரியான் சந்தான் எழுதியுள்ளார். றெம்மிகேல் அரசன் வருகை தொடக்கம் படைப்போர் முடியும்வரை உள்ள பகுதியை மீண்டும் புலவர் மரியாம்பிள்ளை எழுதியிருக்கிறார்.

சிலாவத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் திருவிழாக்களை முன்னிட்டு அரங்கேற்றப்பட்ட நாடகங்களைப் பழக்குவதற்காக மரியாம்பிள்ளைப் புலவர் அடிக்கடி சிலாவத்துறைக்கு வந்துபோய் இருப்பதை அறியமுடிகிறது. சிலாவத்துறைத் திருவிழாவுக்கு போய்வந்த முருங்கன் ஊர்ப் பெரியவர்கள் இவரை அறிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. இந்த அறிமுகத்தின் நிமித்தமே இவர்கள் இந்தப் புலவரிடம் தமது நாடகம் தொடர்பான விடயத்தைப் பேசியிருக்க வாய்ப்பு உண்டு.

முருங்கன் புனித இயாகப்பர் கோவிலடி மக்கள் என்று பொதுவாக அறியப்படுகின்ற மக்கள் சமூகத்தின் கலைப்பொக்கிசமாக விளங்குவது சந்தியோகுமையோர் நாடகமாகும். வழக்கமாக இச்சமூகத்தைச் சேர்ந்த முருங்கன், ஆவணம், முள்ளிக்கண்டல்[10], என்ற மூன்று கிராமத்து மக்களுடன் பின்னாளில் மன்னார் நகரத்தைச் சேர்ந்த இந்த மக்களின் உறவுகளும் இணைந்து இந்நாடகத்தை மேடையேற்றிவருகின்றனர். இதனால் இது 'பெரிய நாடகம்' என்று இம்மக்களால் அழைக்கப்படுகின்றது.

இந்நாடகம் 1940, 1958, 1969, 1978, 1994, 2009 ஆகிய காலப்பகுதியில் முருங்கனில் மேடையேற்றப்பட்டதாக அறியமுடிகிறது.

## புனித அருளப்பர் வாசாப்பு

(அர்ச். அடைக்கல மாதா நாடகத்தின் ஒரு பகுதி)

மாவிலங்கேணி என்ற கிராமத்தில் அர்ச். அடைக்கலமாதா நாடகம் இரண்டு இராக்கதையாக பாடப்பட்டுவருகின்றது. இது மறவர் சமூகத்திற்கான சாதி நாடகமாக அந்த மக்களால் கொள்ளப்படுகின்றது. இந்த நாடகத்தின் இரண்டாம் இரவுக் கதையான புனித அருளப்பர் கதையை[11] மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிக்கொடுத்துள்ளார். வெட்டப்பட்ட புனித அருளப்பரின் கையை மாதா ஒட்டுகின்ற கதையாக இந்த நாடகம் அமைந்துள்ளது.

இந்த வாசாப்பின் கதைச்சுருக்கம் இவ்வாறு அமைந்துள்ளது. தமஸ்கு என்ற நகரத்தை இயத்து என்னும் மன்னன் மகிழ்வோடு ஆண்டுவந்த காலம். இசோரி தேசத்தை லேயோன் என்னும் சிற்றரசன் சத்தியவேதத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கத்தோடு திருச்சுருபங்களுக்கு வணக்கம் செய்பவரை இம்சை செய்கிறான். சுருபங்களை வணங்கும் பெண்களை சிறையில் அடைத்து வருத்துகின்றான். லேயோனின் அட்டகாசங்களை அடக்கும்பொருட்டு இயத்து மன்னனின் மந்திரியாகிய அருளப்பருக்கு தேவதாய் காட்சி கொடுக்கிறாள். அதன் பயனாக சிறையில் இருக்கும் பெண்களுக்கு சுருப வணக்கத்தைக் கைவிடாதபடி அருளப்பர் புத்திமதி கூறுகின்றார். இதை அறிந்த லேயோன் மன்னன் கள்ளக் கடிதம் வரைந்து இயத்து மன்னனின் மந்திரியாகிய அருளப்பரின் கரத்தைத் தறிக்கின்றான். அருளப்பரின் உயர்ந்த விசுவாசத்தின்பொருட்டு வெட்டுண்ட கரம் மீண்டும் வளர்கிறது. இதை அறிந்த மன்னர்களின் மனங்களில் பயமும் திகிலும் உண்டாகிறது. அருளப்பரின் வெட்டுண்ட கரத்தை வளர்த்த கன்னியைப் போற்ற மன்னவனாம் லேயோன் மனம் மாறுகின்றான். கன்னிமரியாவின் புதுமையைக்கண்டு மதம் மாறுகின்றான்.

உண்மையில் மாவிலங்கேணி மற்றும் ஏனைய கிராமங்களைச் சேர்ந்த மறவர் சமூகத்தவர்கள் இந்தப் புலவரிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இவர் புனித அருளப்பர் கதையை வாசகப்பாவாக (ஒரு இரவுக்கதையாக) எழுதிக் கொடுத்துள்ளார். இந்நாடகக் கதையில் வரும் படைப்போர் என்ற பகுதியையும் இந்நாடகத்தின் பொது மங்களத்தையும் எழுதாத நிலையில், பிறகு எழுதித் தருவதாகக் கூறி இவர்களிடம் புலவர் இந்நாடகத்தைக் கொடுத்துள்ளார். ஆனால் இவற்றை எழுதிக்கொடுக்காமலேயே மரியாம்பிள்ளைப் புலவர் இறந்துவிட்டார்.

எனவே இந்த மக்கள் முருங்கன் சுண்டிக்குளி கபிரிகேற் புலவரிடம் சென்று மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிக்கொடுத்த முற்றுப்பெறாத தமது நாடகத்திற்கு படைப்போரையும், மங்களத்தையும் எழுதித்தரும்படி கேட்டுள்ளனர். தமது ஒரு இராக்கதையை இரண்டு இராவாக நீட்டித் தரும்படியும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இசைந்த சுண்டிக்குளிக் கபிரிகேற் புலவர், படைப்போரையும், மங்களத்தையும் எழுதிக் கொடுத்ததுடன் தம்மிடம் **'சவின கன்னி'**[12] என்ற ஒரு இரவுக்கதை வாசாப்பு இருப்பதாகவும் மரியாம்பிள்ளைப் புலவரின் வாசாப்போடு தன்னுடைய வாசாப்பையும் சேர்த்து இரண்டு இரவாகப் படிக்கும்படி கூறி தமது வாசாப்பைக் கொடுத்துள்ளார். **எனவே மாவிலங்கேணியில் மறவர் சமூகத்தவர்களின் சாதி நாடகமாகப் பாடப்படும் இரண்டு இராக் கதையான அர்ச். அடைக்கலமாதா நாடகத்தின் முதல் இரவுக் கதை முருங்கன் சுண்டிக்குழி கபிரிகேற் புலவர் எழுதிய சவின கன்னி வாசாப்பாகவும், இரண்டாம் இரவுக் கதை நாவாந்துறை மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிய புனித அருளப்பர் வாசாப்பாகவும் உள்ளது**[13]

இந்த இரண்டு நாடகமும் ஒன்றிணைந்த கொப்பி 'அர்ச். அடைக்கலமாதா நாடகம்' என்ற பெயரில் தற்போது (2018) இசைமாலைத்தாழ்வைச் சேர்ந்த திரு. சிங்கராசா அவர்களிடம் உள்ளது. இந்தக் கொப்பியின் எழுத்து நடையை நோக்கும்போது இது 1950களுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த சந்திபிரிக்காமல் எழுதும் முறையில் எழுதப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. திரு. சிங்கராசா அவர்களின் கூற்றுப்படி நாவாந்துறை மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிக்கொடுத்த அருளப்பர் வாசாப்பு ஏட்டில் இருந்ததாகவும் அதனைத் தம் சமூகத்தினர் கொண்டுபோய்

சுண்டிக்குளிக் கபிரிகேற் புலவரிடம் கொடுத்தபோது ஏட்டில் இருந்த வாசாப்பாவையும் தன்னுடைய சவுன கன்னி வாசாப்பையும் ஒரே கொப்பியில் அவர் எழுதிக்கொடுத்ததாகக் கூறுகின்றார். அர்ச். அடைக்கலமாதா நாடகத்தின் இரண்டாம் இராக்கதையான மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிய அருளப்பர் நாடகத்தின் பின்னரே சுண்டிக்குளி கபிரிகேற் புலவர் எழுதிய படைப்போர் காட்சி வருவதாகவும் சிங்கராசா குறிப்பிடுகின்றார். ஆனால் இந்த நாடகத்தின் பிரதியில் சுண்டிக்குளி கபிரிகேற் புலவர் எழுதிக்கொடுத்த பொது மங்களம் இடம்பெறவில்லை. அதற்கான காரணத்தைக் கேட்டபோது அந்தப் பொது மங்களம் மாவிலங்கேணியைச் சேர்ந்த திரு. புக்கா அவர்களால் தொலைக்கப்பட்டுவிட்டதாக சிங்கராசா தெரிவித்தார். அர்ச். அடைக்கலமாதா நாடகம் இதுவரை ஒரு தடவை மட்டுமே அதாவது 1969 இல் மேடையேற்றப்பட்டதாக அறியமுடிகிறது.

முருங்கன் மக்கள் இந்தப் புலவரிடம் நாடகம் எழுதிப் பெற்ற காலத்திலேயே மறவர் சமூக மக்களும் இவரை அணுகி இந்த நாடகத்தை எழுதிப் பெற்றருக்க வேண்டும் என சிங்கராசா தெரிவிக்கின்றார். அப்படியென்றால் 1940 அளவில்தான் இந்த நாடகம் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்தால் ஏன் இதனை அவர்கள் 1969இல் அதாவது 29 வருடங்களுக்குப் பிறகு படித்திருக்க வேண்டும் என்பது கேள்வியாக எழுந்து நிற்கின்றது.

## வரப்பிரகாசர் நாடகம்

முத்தரிப்புத்துறை மக்களுக்காக மரியாம்பிள்ளைப் புலவர் **வரப்பிரகாசர்** என்ற பெயரில் ஒரு நாடகத்தை எழுதிக்கொடுத்துள்ளார். இந்நாடகம் முத்தரிப்புத்துறை மக்களால் தொடர்ந்து பாடப்படவில்லை எனச் **சிப்பிக்குள் முத்து** என்ற தலைப்பில் முத்தரிப்புத்துறையின் வரலாறு தொடர்பாக முத்துச் சிப்பியன் என்பவர் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார்.[14]

## அம்மானைகள்

இவர் ஐந்து அம்மானைகள் எழுதியதாக அறியப்படுகின்றது.

1. மருதமடு அர்ச். செபமாலை மாதா அம்மானை
2. மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை
3. சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை
4. புனித கயித்தார் சரித்திரம்
5. யேசுநாதர் அம்மானை

இவற்றைவிட வேறு அம்மானைகளையும் இப்புலவர் எழுதியிருக்கக்கூடும். ஆயினும் அவை பற்றிய நம்பகரமான தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

முதல் மூன்று அம்மானைகளில் மருதமடு அர்ச். செபமாலை மாதா அம்மான இப்போது அச்சில் கிடைத்துள்ளது. இந்த அம்மானை முதன் முதலாக 1927ஆம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது. பின்னர் 1990ஆம் ஆண்டு யாழ் கத்தோலிக்க இலக்கியக் கழகத்தால் யாழ்ப்பாணம் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது. அன்றைய யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் இந்த நூலை அச்சிடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த இரண்டாவது பதிப்பு மூலமாகத்தான் முதல் பதிப்பு பற்றிய தகவல்களைப் பெறமுடிகிறது. முதல் பதிப்பு இதுவரை கிடைக்கவில்லை. அதைப் பெறுவதற்கான தேடல் தொடர்கிறது.

அடுத்த இரண்டு அம்மானைகளான மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை மற்றும் சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை பற்றிய தகவலை இந்தியாவைச் சேர்ந்த அம்மானைகள் பற்றிய ஆய்வாளர் டாக்டர் ஆ.பி. அந்தோனிராசு என்பவர் மூலமாகவே அறிந்துகொள்ள முடிகிறது. இவர் எழுதிய **'கிறிஸ்தவ அம்மானைச் சிந்தனைகள்'** [15] என்ற நூலின் (1988)

பின்னிணைப்பில் அவர் பட்டியலிட்டுள்ள 61 கிறிஸ்தவ அம்மானைகள் பட்டியலில் இந்த மூன்று அம்மானைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் முத்தரிப்புத்துறையில் வாழ்ந்த மரியாம்பிள்ளைப் புலவரின் இந்த அம்மானைகள் பற்றிய தகவல்களை அதிலும் குறிப்பாக நூலுருப்பெறாத 'மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை' மற்றும் 'சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை' பற்றிய தகவலை இந்தியாவில் உள்ள இந்த ஆய்வாளர் எப்படிப் பெற்றுக்கொண்டார் என்பது இங்கு ஆய்வுக்குரியது.

முத்தரிப்புத்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட திருக்குடும்ப துறவற சபை அருட்சகோதரி பூவதி அவர்கள் தரும் தகவல் இது தொடர்பான வெளிச்சத்தைத் தருவதாக உள்ளது. அருட்சகோதரி அவர்களின் தகவலின்படி முன்னாள் யாழ்ப்பாண ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் வேண்டுகோளின்பேரில் தான் அரிப்புக்குச் சென்று மரியாம்பிள்ளைப் புலவரின் படைப்புக்களைப் பெற்று ஆயரிடம் ஒப்படைத்தாகவும் அதிலே என்ன இருந்தது என்பதுபற்றித் தனக்கு தெரியாது எனவும் குறிப்பிடுகின்றார்.

மரியாம்பிள்ளைப் புலவரின் படைப்புக்கள் குறித்தும் குறிப்பாக 1927இல் அச்சிடப்பட்ட மருதமடு செபமாலை மாதா அம்மானை குறித்தும் ஆயர் தியோகுப்பிள்ளை அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. அம்மானைகளில் பரீட்சியம் உள்ளவரான ஆயர் தியோகுப்பிள்ளையிடம் இந்தியாவைச் சேர்ந்த ஆய்வாளர் தன் ஆய்வு நோக்கத்திற்காக இலங்கையில் எழுதப்பட்ட அம்மானைகள் தொடர்பான தகவல்களைக் கோரியிருக்கலாம். எனவே ஆயர் அவர்கள் அருட்சகோதரி ஊடாக மரியாம்பிள்ளைப் புலவரிடம் இருந்து அவருடைய படைப்புக்களைப் பெற்று அவை தொடர்பான தகவல்களை அந்த ஆய்வாளருக்கு வழங்கியிருக்க வாய்ப்பு இருக்கின்றது.

'மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் அம்மானை' மற்றும் 'சந்நீக்கிலாவின் நவசந்த அம்மானை' ஆகியவை அச்சில் வந்தனவா அல்லது கையெழுத்துப் பிரதியாக இருந்த நிலையில் இந்த அம்மானைகளின் பெயரை ஆய்வாளர் அந்தோனி இராசு பெற்றுக்கொண்டாரா என்பது தெளிவாகவில்லை.

புனித கயித்தார் சரித்திரம் மற்றும் யேசுநாதர் அம்மானை ஆகியவை தொடர்பான தகவல்கள் மடுமாதா அம்மானையின் முதல் பதிப்பில் இடம்பெற்றுள்ளதாக அந்த முதல் பதிப்பை அச்சிட்ட மாரீசன்கூடலைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை எசேக்கியேல் அவர்களின் பேரன் திரு. வசீகரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[16] இந்த அம்மானைகள் அச்சில் வந்தனவா என்பதை நிச்சயமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

## ஏனைய இலக்கியங்கள்

### ஞானசவுந்தரி நாடகத்திற்கான 'சாற்று கவி'

முள்ளிக்குளம் மக்கள் பாடி ஆடிவரும் ஞானசவுந்தரி என்னும் நாடகத்திற்கு மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் சாற்று கவி பாடியுள்ளதை அறியமுடிகிறது.

முள்ளிக்குளம் பெரியவர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் ஞானசவுந்தரி நாடகத்தை குப்பைப்புலவர் என அறியப்பட்ட கபிரிகேற் புலவர் ஏட்டில் எழுதிக்கொடுத்ததாகவும், அதனை முள்ளிக்குளத்தைச் சேர்ந்த **அந்தோனி லேனை மற்றும் அந்தோனி யோசேப்பு குரூஸ்** ஆகிய இருவரும் கொப்பியில் எழுதியதாகவும் பின்னர் தாம் கொப்பியில் எழுதியதை அரிப்பில் வாழ்ந்தவரான நாவாந்துறை மரியாம்பிள்ளைப் புலவர் அவர்களிடம் காட்டி சரிபார்த்து அத்தாட்சிப்படுத்தியதாகவும் அதனைப் பார்வையிட்ட அவர் அந்நாடகத்திற்கு சாற்றுகவி எழுதிக்கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்தச் சாற்றுகவி "மங்காத ஒளிபரவு லங்காபுரத்திலே - வாடை மாகாணமதிலே..." என ஆரம்பிக்கின்றது.

**நிறைவாக**

மரியாம்பிள்ளைப் புலவர் பற்றிய இந்த ஆய்வு ஒரு முழுமையான - நிறைவான ஆய்வு என்று சொல்ல முடியாது. இவருடைய வாழ்வு மற்றும் இவருடைய படைப்புக்கள் பற்றிய பல தகவல்களை இன்னும் தேடிப் பெறவேண்டி உள்ளது. தற்போது பெறக்கூடிய தகவல்களை அடிப்படையாக வைத்தே இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

புலவர் பிறந்த இறந்த ஆண்டு மாதம் திகதியை அறிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய படைப்புக்களின் முழுமையான பட்டியலை உறுதிசெய்ய முடியவில்லை. தற்போது கிடைக்கக்கூடியதாக இருந்து படைப்புக்களைத் தேடிப்பெற்று இந்நூலில் சேர்த்துள்ளோம். மறைபொருளாக உள்ள பல விடயங்கள் காலவோட்டத்தில் வெளிச்சத்திற்கு வரலாம். அப்போது இப்புலவர் பற்றிய இன்னும் பல அரிய தகவல்களை அறியமுடியும்.

மரியாம்பிள்ளைப் புலவர் அவர்கள் எனது சொந்தக் கிராமமான முருங்கன் மக்களின் உள்ளத்தில் நீங்கா இடம்பிடித்துள்ளவர். அவர் எழுதிக்கொடுத்த நாடகத்தை எனது ஊர் மக்கள் மிகவும் பவித்திரமாகப் போற்றி அதனை மேடையேற்றி வருகின்றார்கள். எனது தந்தையார் புலவர் சந்தான் பாவிலு அவர்கள் இப்புலவர்பற்றி அடிக்கடி எமது வீட்டில் பேசுவதை எனது சிறு வயதில் நான் கேட்டிருக்கின்றேன். எனவே இப்புலவருக்கு எனது முருங்கன் ஊர் மக்கள் சார்பான நன்றிக்கடனாக எனது இந்தக் கட்டுரையும் இப்புலவர் பற்றிய எனது ஆய்வும் அமையும் எனக் கருதுகின்றேன்.

மரியாம்பிள்ளைப் புலவரின் பரம்பரையில் வந்த, தற்போது கனடாவில் வசிக்கும் திரு. வென்சிலாஸ் அனுரா அவர்கள் இந்நூலை வெளிக்கொணர எடுத்த முயற்சி அபரீதமானது. பல்வேறு தரப்பினருடனும் அவர் தொடர்பாடலை ஏற்படுத்தி இந்நூலுக்கான தகவல்களைச் சேகரித்தார். அவருடைய முழுமையான முயற்சியினாலேயே இந்நூல் வெளிவருகின்றது.

**நன்றிக்கு உரியவர்கள்**

மரியாம்பிள்ளைப் புலவர் தொடர்பான இந்த ஆய்வை மேற்கொள்ள என்னைத் தூண்டியவர் யாழ். பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்ப் பேராசிரியரும் எனது ஆசானுமாகிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் ஆவர். உண்மையில் பேராசிரியர் அவர்களே இந்த ஆய்வை மேற்கொள்ள இருந்தார். அவருடைய உடல்நலக்குறைவு காரணமாக அவர் என்னிடம் இந்தப் பணியை ஒப்படைத்தார். பேராசிரியர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இந்த நாடகத்தின் மரியாம்பிள்ளைப் புலவர் எழுதிய வாசாப்பின் பிரதியை மன்னார் மண்ணின் மகனும் மன்னார் நாட்டுக்கூத்து ஆய்வாளரும், தற்போது மட்டக்களப்பில் வசிப்பவருமான திரு. சுந்தரம் பாண்டியனிடம் அனுப்பினேன். அவர் கூத்து நாடகத்தின் பல்வேறு பா வடிவங்களுக்கு அமைவாக இந்நாடகப் பாடல்களைப் பிரித்து ஒழுங்கமைத்துத் தந்தார். இந்தப் உதவியைச் செய்துதந்த திரு. சுந்தரம் பாண்டியன் அவர்கள் எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த கலையார்வன் (திரு. கு. இராயப்பு) அவர்கள் எனது வேண்டுகோளுக்கு ஏற்ப இந்நூலை அச்சிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சிறப்பாக அதனைச் செய்துமுடித்தார். நூல் அச்சாக்கத் துறையில் நிறைந்த அனுபவமுள்ள அவருடைய உதவியும் ஒத்துழைப்பும் இந்நூலின் வெற்றிக்கு ஒரு காரணமாகும். ■

## அடிக்குறிப்புகள்

1. இவர் நாவாந்துறையில் உள்ள புனித மரியாள் ஆலய சமூகத்தைச் சேர்ந்தவர்.
2. புலவரின் ஒரே மகனான அன்ரனி திரேசியான் 02.06.1925இல் பிறந்துள்ளார். இவர் திருகோணமலையில் உள்ள துறைமுகத்தில் வேலை செய்தவர்.

[3] புலவர் இறந்தபிறகு அவருடைய மனைவி திருமதி மாசில்லா அவர்கள் முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த மரிசால் குட்டி என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு முறையே திரேசம்மா, சூசையப்பு, ஆபேல் ஆகிய மூன்று பிள்ளைகள் உண்டு. திரேசம்மா மற்றும் ஆபேல் ஆகியோர் இன்றும் (2018) முத்தரிப்புத்துறையில் வசிக்கின்றனர். சூசையப்பு செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள நேரியகுளம் என்ற கிராமத்தில் வாழ்ந்து இறந்துவிட்டார்.

[4] முருங்கனைச் சேர்ந்தவர்கள் புலவருக்கு அன்பளிப்பாகக் காணிகொடுத்த விடயத்தை அவருடைய மனைவியின் இரண்டாம் தாரத்துப் பிள்ளைகள் உறுதிப்படுத்தினர்.

[5] இந்நாடகப் பிரதி இக்கட்டுரையாசிரியருக்குக் கிடைக்காத காரணத்தால் இந்நாடகம் தொடர்பான விரிவான குறிப்புக்கள் இங்கு இடம்பெறவில்லை.

[6] மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம் நூலை எழுதிய பெஞ்சமின் செல்வம் அவர்கள் தமது நூலில் இந்தப் புலவர் பற்றிய குறிப்பைத் தந்துள்ளார். "இவர் வயிரமுடிகாத்த வச்சிர நாட்டுத் தேவன் மரபில் நானாட்டான் கிழக்குச் சுண்டிக்குழிக்கிராமத்தில் 18ஆம் நூற்றாண்டில் அந்தோனிப்புலவரென்னும் பெரிய சமரருக்கு சிரேட்ட புதல்வனாகப் பிறந்தவர். தகப்பன் சமரரென்று அழைக்கப்பட்டதால் இவர் சின்னச்சமரர் என பலராலும் அழைக்கக்ப்பட்டவர். 1840 வரையில் இவர் காலமாகியுள்ளார்

" காண்க : பெஞ்சமின் செல்வம், மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம், நானாட்டான், 1978, ப.23, 24, 25.

[7] பெஞ்சமின் செல்வம், மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம், நானாட்டான், 1978, ப.23,24.

[8] யேசுதாசன் ச., 'சற்பிரசாத வாசாப்பு - உள்ளக நோக்கும் அரங்கேற்ற மரபுகளும்', **சற்பிரசாத வாசாப்பு ஒரு வரலாற்றுப் பார்வை,** புனித சூசையப்பர் ஆலய மேய்ப்புப்பணிச் சபை, கற்கடந்தகுளம், 2009, பக்.6.

[9] கலைஞர் குழந்தை, "முருங்கன் புனித இயாகப்பர் ஆலய வரலாறு" **முருங்கன் புனித இயாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா மலர்.,** ப.32

[10] முள்ளிக்கண்டல் என்ற இந்தக் கிராமம் மாந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ளது. இக்கிராமம் 'தேனுடையான்' என்ற பெயராலும் முன்னர் அழைக்கப்பட்டது. தற்போது இந்தக் கிராமம் மக்கள் குடியிருப்பு இல்லாத இடமாக மாறிவிட்டது.

[11] இங்கு குறிப்பிடப்படும் அருளப்பர் யார் என்று சரியாக அறியமுடியவில்லை. நிச்சயமாக இயேசுவிற்கு வழியை ஆயத்தம் செய்ய வந்த திருமுழுக்கு அருளப்பரோ அல்லது இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒரவரான நற்செய்தி அருளப்பரோ இல்லை. மாறாக திருச்சபை வரலாற்றில் வருகின்ற அருளப்பர் என்ற பெயரைக்கொண்ட பல புனிதர்களில் ஒருவராக இவர் இருக்கக்கூடும்.


[12] சவுன கன்னி என்பவர் ஒரு தாய். இவருக்கு ஒரு சிறுவயது மகன் இருந்தான். இவன் மாதா பக்திமிக்கவனாக மாதாவின் புகழைப் பாடிக்கொண்டிந்தபோது யூதர்கள் இவன்மேல் கோபம்கொண்டு இவனைக் கொலை செய்து புதைத்துவிடுகின்றனர். மாதாவின் அருளால் அவன் கல்லறையில் இருந்து உயிர் பெற்று எழுகின்றான். இதுதான் இந்நாடகத்தின் கதை. இந்த நாடகத்தின் கதையைக்கொண்டுதான் முருங்கன் செபமாலை குழந்தை அவர்கள் பரதேசி மகன் என்ற அரை மணித்தியால வசன நாடகத்தை எழுதியுள்ளதாக சிங்கராசா குறிப்பிடுகின்றார்.

[13] இசைமாலைத்தாழ்வு சிங்கராசா அவர்கள் வழங்கிய தகவல்.

[14] சிப்பிக்குள் முத்து, முத்தூர் சிப்பியன், முத்தரிப்புத்துறை (ஆண்டு குறிப்பிடப்படவில்லை).ப.46

[15] அந்தோனி இராசு, ஆ. பி., கிறித்துவ அம்மானைச் சிந்தனைகள், ஆரோக்கியம் பதிப்பகம், திருச்சி, இந்தியா, 1988.

[16] திரு. வசீகரன் அவர்கள் தற்போது ஜேர்மனியில் வசிக்கின்றார். இவர் இத்தகவல்களை உறுதிப்படுத்தி திரு. அனுரா அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நினைவில் நனையும் சொல்

மாரீசன் கூடல் வசீகரன்
(வ.கயித்தாம்பிள்ளை)

நமது தொன்மங்களில் மிகப் பழமையுடைய இலக்கியங்களில் பாடல் பெற்ற தொல்குடியினர் நெய்தல் நிலமக்கள். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வரும்பொழுது கப்பல்களும் மரக்கலங்களும் மாலுமிகளும் கடற்படை வீரர்களும் கொண்ட கடற்பயணங்களின் ஒரு பரிவர்த்தனையாக நாவாந்துறையும் விளங்கியது. இத்தகைய வரலாற்று புகழ்மிக்க கடலோர துறைமுக கிராமத்தில் பிறந்து மன்னார் அரிப்பில் வாழ்ந்து, பல பாக்களை இயற்றிய சொல்லாழி மரியாம்பிள்ளை புலவரின் நண்பரான பதிப்பாளி மாரீசன்கூடல் நீக்கிலாப்பிள்ளை எசக்கியேல் மறைந்து கிட்டத்தட்ட நாற்பத்தைந்து வருடங்களுக்கு பின்பு ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளின் நடுப்பகுதியில் ஒரு பகல் பொழுதில் அவரின் நினைவுப் பொருட்களாக மீதமிருந்த ஒரு பாதம் முறிந்துபோன கும்பா என அழைக்கப்படும் செப்பு உலோகத்தினாலான கைகழுவும் பாத்திரம், அரிசி - நெல்லு அளக்கும் அளவுகோலான உலோகத்திலும் மரத்தினாலுமான 'நீ எசேக்கியேல்' என்று பொறித்த அழகான கொத்து ஒன்றும், கறையான் அரிசிக்கு சிதிலமடைந்துபோன தமிழில் இரண்டாவது நாவலான ராஜம் அய்யரின் கமலாம்பாள் சரித்திரம், தமிழில் மூன்றாவது நாவலான மாதவய்யரின் பத்மாவதி சரித்திரம் மற்றும் நைந்துபோன கிட்டத்தட்ட அழிந்துபோன ஓரிரு புத்தகங்களும், விலை உயர்ந்த வெள்ளைத்தாளில் *Bastian* அச்சகத்தில் பதிப்பித்த சிவப்பு வர்ணத்தில் தடித்த மட்டையினாலான (*Hard Cover*) கறையான் அரித்தும் நூலின் கலை மெருகு குறையாத மருதமடு மாதா அம்மானையும் எனது தந்தை தனது பெரிய தந்தையிடமிருந்து எமது வீட்டிற்கு கொண்டு வந்திருந்தார். ஏற்கெனவே எமது வீட்டில் மருதமடு மாதா அம்மானையின் சில பிரதிகள் இருந்தன. தமிழில் முதலாவது நாவலான மாயூரம், வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமும் இருந்தது.

மரியாம்பிள்ளை புலவருக்கு அறிமுகமானவராகவும் எசக்கியேலுக்கும் ஒருவேளை நண்பராகவும் இருந்த கரம்பன் - இளவாலையைச் சேர்ந்த பெரியவர் றோக்கு மூலம் புலவர் மரியாம்பிள்ளையும் பதிப்பாளர் எசக்கியேலும் நல்ல நண்பர்கள் என்றும் அவர்கள் ஒருநாள் நன்கு உரையாடிக் கொண்டிருந்தபொழுது மரியாம்பிள்ளை புலவர் அம்மானைகள் எழுதி வைத்திருக்கின்றேன். வெளியிட ஒருவரும் இல்லை என்று கவலைப்பட்டபொழுது எசக்கியேல் தான் வெளியிடுகின்றேன் என்று கூறி மரியாம்பிள்ளை புலவரின் யேசுநாதர் அம்மானை, மருதமடு அம்மானை, அர்ச். கயித்தார் சரித்திரம்,

போன்றவற்றை வெளியீடு செய்ததாக அறிந்தேன். இது பற்றிய முழு விபரங்களும் மருதமடு மாதா அம்மானையின் முதல் பதிப்பில் உள்ளன. யேசுநாதர் அம்மானையும், மருதமடு மாதா அம்மானையும் நூல்களாக வெளியில் வந்தன. அர்ச். கயித்தார் சரித்திரம் அச்சில் உள்ளது என எசக்கியேல் வெளியீடு செய்த மருதமடு மாதா அம்மானையின் முதல் பதிப்பில் உள்ளது.


மாரீசன்கூடல் வாசர், வங்காலை வர்த்தகர் தர்மவள்ளல் என வெளியீட்டாளரை வாழ்த்தி எழுதப்பட்ட பாவாயிரம் என்பனவும் முதல்பதிப்பில் உள்ளது.

தமிழ் மக்களின் பெருந்துயரில் பெரும் நெருப்பில் என்னிடமிருந்த விலைமதிப்பற்ற தீவிர, நவீன, கலை, இலக்கிய சஞ்சிகைகள், புத்தகங்கள், செய்தித்தாள்கள் குறிப்பாக இந்தியாவில் அரசியல் சாதி, சமூக கொடுமைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடியவர்களால் ஆரம்பகாலங்களில் வெளியிடப்பட்ட The Rally, The Warrior, The Fier மற்றும் சென்னை லொயலாக் கல்லூரியின் விரிவுரையாளரும் ஆன்மீக பணிப்பாளருமாய் இருந்த அல்போன்ஸ் அடிகளார் எனக்கு அன்பளிப்பாக தந்த ‘கிறிஸ்தவமும் மார்க்சீயமும்’ முதன்முதலாக தமிழ் மக்களுக்கு தனிநாடு கோரிய புரட்சிகர சமசமாஜ கட்சியின் தலைவர்களில் ஒருவரான சிங்களப் பெருமகன் எட்மன் சமரக் கொடியின் தமிழ், ஆங்கிலம், சிங்களத்தினாலான தேர்தல் விஞ்ஞாபனம். தமிழ் மக்களின் அரசியல் வரலாற்று சஞ்சிகைகள் ஆவணங்கள் உட்பட மரியாம்பிள்ளை புலவரின் மருதமடு மாதா அம்மானையும் அழிந்து போயின.

நூறு வருடங்களுக்கு முன்பு மாரீசன் கூடலில் ஒரு கலாச்சார அவகாசியாக வாழ்ந்து தனது இலக்கிய தேடலில் தடம் பதித்த எசக்கியேல் வெளியீடு செய்த மரியாம்பிள்ளை புலவரின் ‘மருதமடு மாதா அம்மானை’யை மறுபதிப்புக்குள்ளாக்குவது பற்றி ஈழத்தின் மிகப்பெரிய சினிமா விமர்சகரும் ஒரு பாரிய கலை இலக்கிய ஆளுமையுமான அ.யேசுராசாவின் இல்லத்தில் மூன்று வருடங்களுக்கு முன்பு உரையாடிய பொழுது *Bastian* அச்சகத்தில் கேட்கும்படி கூறப்பட்டது. ஆனால் அவ்அச்சகம் தற்பொழுது இல்லை.எனது எண்ணமும் ஆரம்ப நிலையிலே அற்றுப்போனது.

மரியாம்பிள்ளை புலவரின் பீட்டனும் கவிஞர் நாவாயூரனுமான திரு. வென்சிலாஸ் அனுரா எமது முன்னோர்களின் கலை இலக்கியச் செல்வங்களை மீண்டும் தேடி எடுத்து அவற்றை நூலுருவில் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டுள்ளார். எனது பேரனும் மாரீசன் கூடல் ‘மணியர்வளவின்’ வழித்தோன்றலும் மகத்தான பணியைச் செய்தவரும், மகத்தான மனிதனுமாகிய எசக்கியேலின் நினைவில் வாழ்தலை நிதர்சனமாக்கிய கவிஞர் வென்சிலாஸ் அனுராவுக்கு எனது வணக்கமும் வாழ்த்தும் நன்றியும் உரித்தாகட்டும். ■

Langobarden Street -4
42277 Wuppertal
Germany



அணிந்துரை

# இந்த நூலுக்கு வரலாற்று முக்கியத்துவம் ஒன்று உளது

**பேராசிரியர்**
**எஸ். சிவலிங்கராஜா**

ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றிலே கிறிஸ்தவப் புலவர்கள் ஆற்றிய பணிகள் பற்றிய ஆய்வு பெருமளவுக்கு வெளிவரவில்லை என்றே கூறவேண்டும். காலத்திற்குக் காலம் சமயங்கள் தமிழை வளர்த்துள்ளன என்பதை இலகுவாக மறுத்துவிட முடியாது. சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்கள் தமிழை வளர்த்துள்ளன. தமிழால் வளர்ந்துள்ளன.

சைவத் தமிழ் இலக்கியங்களை எவ்வளவு ஆர்வத்துடன் படித்தேனோ, அவ்வளவு ஆர்வத்துடன் மற்றைய சமய இலக்கியங் களையும் படித்திருக்கிறேன். குறிப்பாகக் கிறிஸ்தவ இலக்கியங்களைச் சற்று விரிவாகப் படிக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. பல்கலைக்கழகப் பணியில் இருந்தகாலை கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களைப் பல வருடங்களாக மாணவர்களுக்குக் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்தப் பணியைப் பேராசிரியர் க. கைலாசபதி எனது தலையிலே தூக்கி வைத்தார். அந்தச் சுமையை சுவையாகச் சுமப்பதற்கு அக்காலக் கிறிஸ்தவ நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் வண. சந்திரகாந்தன் அடிகளார் தோள் கொடுத்தார். அடிகளார் தோள் கொடுத்த துணிவினாலே கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்திலே, சிறப்பாக ஈழத்துக் கிறிஸ்தவ தமிழ் இலக்கியத்திலே இறங்கி நீச்சலடித்தேன். மேனாள் பேராயர் அதி வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் தொடர்பையும் ஏற்படுத்தித் தந்தார். ஈழத்துக் கிறிஸ்தவ தமிழ் இலக்கியக் களஞ்சியம் ஒன்றினுள் நுழைந்த திருப்தி எனக்கு ஏற்பட்டது. அம்மானை, காவியம், பள்ளு முதலானவற்றை அவர் இசையோடு இசைத்துக் காட்டுவதே இன்பகரமானது. அர்ச். யாகப்பர் அம்மானை, ஞானப்பள்ளு, திருச்செல்வர் காவியம் முதலானவற்றின் வரிசையிலே மடுமாதா அம்மானையும் என் கைக்குக் கிடைத்தது.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்திலேயே யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்தை நன்கு பயன்படுத்தினேன். அக்காலத்திலே அங்கு ஆசிரியப் பணியில் அமர்ந்திருந்த, பின்நாளில் அதிபர் பேராயராகப் பணியாற்றிய அதி வண. கலாநிதி எஸ். ஜெபநேசனின் தொடர்பு ஏற்பட்டது. நூலறிவும், நுண்ணறிவும், மானுடநேயமும், கற்றலிற் கரிசனையும், கற்பவர்மேற் காதலும் கொண்ட பேராயர் எஸ் ஜெபநேசனின் 'அருள் நோக்கால் 19 ஆம் நூற்றாண்டு' எனும் தங்கச் சுரங்கத்தின் தாள்பாள்களைத் திறந்து உட்சென்றேன். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தினுள்ளே துணிவுடன் உலாவர அந்தத் 'தங்கச் சுரங்கம்' உதவியது.

கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களிலே ஈடுபாட்டுடன் இருக்கும் என்னிடம் வண. சந்திரகாந்தன் அடிகளார் பரிசுத்த வேதாகமம் ஒன்றை அன்பளிப்பாகத் தந்து படிக்கச் சொன்னார். அவ்வப்போது படிப்பேன். அது மிகச் சிறந்த இலக்கியமாக எனக்குத் தெரிந்தது. அதன் பொருளும், சொல்லும் முறைமையும் என்னை ஈர்ந்தன. இன்றும் பேசும்போதும் எழுதும்போதும் பைபிள் வாசகங்களை மேற்கோள் காட்டுவது வழக்கம்.

கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களைக் கற்பித்துக்கொண்டிருந்தமையாலே அத்துறைக்குப் பொருத்தமானவர்கள் இல்லாமையாற் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (பீடாதிபதியாகவும் துணைவேந்தராகவும் பணியாற்றியவர்.) என்னைக் கிறிஸ்தவ இஸ்லாமியத் துறைக்குத் தலைவராக நியமித்தார். ஒரு வருடத்திற்கு மேலாக வருகைதரு விரிவுரையாளர்களை வைத்துக்கொண்டு அத்துறையை வெற்றிகரமாக நடத்தினேன். இதனாலே பல கிறிஸ்தவ மாணவர்களினதும், அருட்சகோதரர்களினதும், போதகர்களினதும் நட்புறவு கிட்டியது. அவை எனது பலத்தை பன்மடங்காக்கியது. அத்துடன் திருமறைக் கலாமன்றத்தின் தொடர்பு எனது இரசனைக்கும், ஈடுபாட்டுக்கும், அறிவுக்கும் தீனிபோட்டு வளர்த்தெடுத்தது.

நான் சுவிற்சலாந்து சென்றிருந்தவேளை, அங்கு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் மத்தியிலே ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்னும் பொருளிலே உரையாற்றினேன். அந்த உரையிலே ஈழத்துக் கிறிஸ்தவத் தமிழ் இலக்கியம் பற்றியும் திருமறைக் கலாமன்றத்தின் கலை இலக்கியப் பணிகள் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டேன். அப்பொழுது அந்த அவையிலே இருந்த கயல்விழியும் (திருமறைக் கலாமன்றத்தின் ஞானசௌந்தரியில் நடித்தவர்) அவரது கணவனும் விழா முடிய வந்து என்னுடன் உரையாடினார்கள். எனது உரையைப் பாராட்டித் தமது வீட்டிற்கு அழைத்து விருந்தளித்தார்கள். அப்போது நடந்த உரையாடலினூடு மரியாம்பிள்ளைப் புலவரின் மடுமாதா அம்மானை பற்றியும் பேச்செழுந்தது. கயல்விழியின் கணவன் வென்சிலாஸ் அன்ரனி டண்சன் (செல்வா) தான் மரியாம்பிள்ளைப் பலவரின் பீட்டன் என்றும் அவருடைய நூல்களை அச்சிடவேண்டுமென்றும், கனடாவில் இருக்கும் தமது தம்பி என்னுடன் தொடர்புகொள்வார் என்றும் கூறினார்.

நான் இலங்கை திரும்பியதும் கனடாவில் இருந்து என்னுடன் தொடர்பு கொண்டார். அவரின் ஊக்கமும் உற்சாகமும் எனக்கு மகிழ்ச்சியளித்தது. இதனை இதனால் இவன் முடிக்கும் என எண்ணி எனது அன்புக்குரியவரும் பிரியமான மாணவருமான தமிழ்நேசன் அடிகளாருடன் தொடர்புகொண்டேன். அடிகளார் மிகுந்த உற்சாகத்துடன் அந்த வேலையைச் செய்துகொடுப்பதாக உறுதியளித்து உழைத்தார். அவரின் ஊக்கமும் உழைப்பும் இந்த நூல் வெளிவரப் பேருதவியாயிற்று.

தமிழ் இலக்கியப்பரப்பிலே குறிப்பாக ஈழத்து இலக்கியப்பரப்பிலே அறியப்படாது மறைந்திருக்கும் புலமையாளர்களை அறியப்படுத்துவதும் அவர்களது படைப்புக்களை அச்சிட்டு வெளிப்படுத்துவதும் அறிஞராயுள்ளோர் கடமையாகும். பிரதேசநிலைப்பட்ட, கிராமநிலைப்பட்ட, குடும்பநிலைப்பட்ட விதத்திலே புலமையாளர்களை, அவர்களது படைப்புக்களை வெளிக்கொணர்ந்தால் அம்முயற்சி ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய முழுமையான ஆய்வுக்கு வழிவகுக்கும் என நம்பகிறோம். இந்த வகையிலே மரியாம்பிள்ளை புலவரின் படைப்புக்களையும் அவரது புலமைநிலைப்பட்ட உறவுகளையும் பற்றி வெளிவருகின்ற இந்த நூலுக்கு வரலாற்று முக்கியத்துவம் ஒன்று உளது.

இந்த நூலைத் தொடர்ந்து இத்தகைய புலமை பெருமக்களையும் அவர்களது படைப்புகளையும் வெளியுலகுக்குக் கொண்டுவரவேண்டும். இந்தப் பணியை இளைய தலைமுறை செய்யவேண்டும் என்று அவாவுறுகிறோம். அவர்களது முயற்சி என்றும் பாராட்டுக்கு உரியதாக இருக்கும். ■




கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரின் படைப்புக்கள் காலவோட்டதில் சிதைவுற்றும் அழிவுற்றும் போய்விட்டன. கையில் கிடைத்தவற்றில் உயரிய படைப்பாக 'மடுமாதா அம்மானை' இலக்கியம் விளங்குவதால், முதலாம் இரண்டாம் பதிப்பின் முகவுரைகள் மற்றும் மருதமடு திருப்பதியின் சரித்திரச் சுருக்கத்துடன் அம்மானை முழுமையாக தரப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தால், மடுத் திருத்தலம் புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் இவை பயனுள்ள ஒன்றாக இருக்கும் என நம்புகிறோம்.

# மடுமாதா அம்மானை
# முதலாம் பதிப்பின் முகவுரை

**கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரால் எழுதப்பட்ட**
**மருதமடு திருப்பதியில் எழுந்தருளியிருக்கும்**
**பரிசுத்த செபமாலை மாதாவின் அம்மானை.**


**நூலின் முதலாம் பதிப்பு 1927 இல் மருதமடுத் திருப்பதியில்**
**அரங்கேற்றம் பெற்றது.**
**அவ்வேளை மரியாம்பிள்ளைப் புலவரால்**
**எழுதப்பட்ட முகவுரை.**

*இவ்வுலகின் கண்ணுள்ள மானிடர்களே, இவ்விலங்காபுரியின் வடமாகாணத்தைச் சார்ந்த மன்னார் டிஸ்திறிக்கைச் சுட்டிய மாதோட்டப் பகுதியையடுத்த திருமருதமடு வென்று சொல்லப்பட்ட தலத்தில் எழுந்தருளிக் கணக்கில்லாத நன்மைகளை அடியவர்க்கருளிவரும் அர்ச்சியசிஷ்ட செபமாலை மாதாவின் பரிசுத்த நாமத்தைக் கொண்டதாகிய இவ்வம்மானையைச் சிறியேனாகிய யான், ஏறக்குறைய ஐந்தாறு வருஷங்களின் முன் இயற்றி அச்சிற் பதிப்பிக்க அவகாசமற்றவனாய் என்னசெய்வதென்று துயரப்படும்வேளை, செபமாலைத் தாயாரின் தொண்டனும், யாழ்ப்பாணம் மாரிசன்கூடல் வாசகரும், வங்காலையில் கடை வைத்திருப்பவருமாகிய வியாபாரியார் ஸ்ரீ நீக்கிலாப்பிள்ளை எசெக்கியெல் என்பவர் தாம் அச்சிற் பதிப்பிப்பதாகக் கேட்டுக்கொண்டபடியால் செபமாலை மாதா செய்த நன்மையென்றெண்ணி அவர்வசத்தில் இவ்வம்மானையை ஒப்படைத்துவிட்டேன்.*

*இதில் தேவதாயார் பிறப்பு, வளர்ப்பு, திருமன்றல், தேவகுமாரன் இரட்சணியம், மாதா பரலோகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மோட்ச முடி சூட்டப்படல், செபமாலையால் நடந்த அற்புதங்கள், திருமருதமடு வைபவம் முதலியனவும் அடங்கியிருக்கின்றன. ஏதும் குற்றங்குறைகள் இவ்வம்மானையிற் காணப்படுமாயின் கற்றுணர்ந்த பெரியோர்கள் அடியேனிற் குறைகூறாது செபமாலைத் தாயாரின் திருநாமத்தைக் கொண்டதாயிருப்பதால் பொறுத்து அங்கீகரித்துக் கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.*

**ஆக்கியோன் கி.ம.**
***1927***

# மடுமாதா அம்மானை
# இரண்டாம் பதிப்பின் முகவுரை




**கிறிஸ்தோ மரியாம்பிள்ளைப் புலவரால் எழுதப்பட்ட**
**மருதமடு திருப்பதியில் எழுந்தருளியிருக்கும்**
**பரிசுத்த செபமாலை மாதாவின் அம்மானை.**

**திருத்திய இரண்டாம் பதிப்பு 1990 ஆம் ஆண்டு**
**யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டது.**
**அவ்வேளை யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகத்தால்**
**எழுதப்பட்ட முகவுரை**

**செ**ன்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் ‘அம்மானை’ எனப்படும் கவிதை இலக்கியம் பெருமளவில் யாக்கப்பட்டும், பதிப்பிக்கப்பட்டும், மக்களால் இசையுடன் படிக்கப்பட்டும் வந்தது. கத்தோலிக்க கவிஞர்களும், பதிப்பகங்களும் இதில் அதிக அக்கறை காட்டினர். புனிதர்கள் பலரின் கதைகள் அம்மானையாக ஆக்கப்பட்டு வெளியிடப்பட்டமையால் பொதுமக்கள் அவற்றை இசையுடன் படித்துப் பயனடைந்தனர்.

கடந்த சில தசாப்தங்களாக அம்மானை படித்தல் ஓரளவு கைவிடப்பட்ட விடயமாயிற்று எனலாம். இதற்கு சினிமா, வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றின் செல்வாக்குப் பெருகியமையும், மக்களின் கல்வி - தொழில் - சமூக அந்தஸ்து முதலியவற்றில் உண்டான நோக்கும் போக்கும் வேறுபட்டமையும் காரணிகள் ஆகலாம்.

ஆயினும் கடந்த அண்மை ஆண்டுகளில் அம்மானை இலக்கியம் தமிழ் ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் புத்துயிர்பெற பல வாய்ப்புகள் ஏற்பட்டன. பல்கலைக்கழக மட்டத்தில் பட்டப் பின்படிப்புக்கான ஆராய்ச்சித் துறையாகவும், கலாநிதிப் பட்டம் பெறுவதற்கான ஆய்வுக் கட்டுரையின் கருப்பொருளாகவும் அம்மானை இலக்கியம் சிலரால் தெரிந்துகொள்ளப்பட்டமையும், கல்விமான்களும் சான்றோர் சிலரும் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறை காட்டியமையும் அந்த வாய்ப்புக்களாகும்.

தமிழ் நாட்டில் பேராசிரியர் ஆ.பி.அந்தோனி இராசு அவர்கள் தமது கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வு நூலுக்கு அம்மானை இலக்கியத்தினைப் பொருளாகக் கொண்டது மட்டுமன்றி, தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் முன்னர் இயற்றி வெளியிடப்பட்டிருந்த அம்மானைகள் சிலவற்றை சென்ற சில ஆண்டுகளில் மறுபதிப்புச் செய்வித்துள்ளார். அர்ச். லூர்துமாதா அம்மானை (1987), அர்ச். அருளானந்தர் அம்மானை - அர்ச். இசிதோர் அம்மானை (1987), அர்ச். செபஸ்தியார் அம்மானை (1988), அர்ச். சவேரியார் அம்மானை (1989) என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

யாழ்ப்பாணம் புவிமன்னசிங்க முதலியார் யோசேப்பு அவர்களால் 1893 இல் இயற்றி வெளியிடப்பட்ட ‘இஸ்நாபக சஞ்சுவாம் அம்மானை 1989 இல் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய நூற்றாண்டு விழா ஞாபகார்த்த நிகழ்வுகளில் ஒன்றாக ‘யாழ் கத்தோலிக்க இலக்கியக் கழகத்’தால் மறுபதிப்பாக வெளியிடப்பட்டது. அதே ஆண்டிலேயே யாழ். ஆயர் அவர்களின் கோரிக்கைக்கிணங்க ‘அமுதகவி யாழ். ஜெயம்’ அவர்களால் ‘புனித சூசையப்பர் அம்மானை புதிதாக ஆக்கப்பெற்று, அதுவும் யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகத்தால் வெளியிடப்பட்டது.

யாழ். நாவந்துறையைச் சேர்ந்தவரும் மன். அரிப்பில் வாழ்ந்தவருமாகிய கி.மரியாம்பிள்ளை புலவரால் இயற்றப்பட்டு 1927இல் வெளியிடப்பட்ட ‘மருதமடு பரிசுத்த செபமாலை மாதாவின் அம்மானை’ இப்போது திருத்திய இரண்டாம் பதிப்பாக மீண்டும் யாழ். கத்தோலிக்க இலக்கியக்

கழகத்தாலேயே வெளியிடப்படுகிறது. இந்தவகையில் தமிழ்கூறு நல்லுலகம், குறிப்பாக ஈழத்துத் தமிழ் மக்கள், சிறப்பாக கிறிஸ்தவ பெருமக்கள் யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகத்திற்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்கள்.

மாதா பக்தராகிய மரியாம்பிள்ளைப் புலவர் அவரது தந்தையும், புகழ்பெற்ற மரபுவழிப் புலவருமாகிய கிறிஸ்தோப்பு புலவரின் வழிகாட்டுதலிலும் ஊக்குவிப்பிலும், பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர் என்று அறியக்கிடக்கிறது. இவர், தந்தை கிறிஸ்தோப்பு புலவரால் எழுதி முற்றுப் பெறாதிருந்த ஊசோன் பாலந்தை நாடகத்தை எழுதி முடித்ததுமன்றி, புனித செபஸ்தியார் வசன வாசாப்பும் வேறு சில அம்மானைகளும் இயற்றியுள்ளார் எனக் கூறுவர். கடைசியாக அவர் யாத்து, மாரிசன்கூடல் ஊரவரும் வங்காலை பிரபல வியாபாரியுமாக விளங்கிய நீ.எசக்கியேல் என்பவரிடம் அச்சிடுமாறு கையளித்ததுதான் இந்த மருதமடுச் செபமாலை மாதா அம்மானையாகும். மேலும் இந்த அம்மானை மரியாம்பிள்ளைப் புலவரால் மருதமடுத் திருப்பதியிலேயே அரங்கேற்றம் பெற்றதென்பது சிறப்பு அம்சமாகும்.

1ஆம் பதிப்பு முகவுரையில் குறிப்பிட்டிருப்பதுபோல இந்த நூலில் தேவதாயாரின் பரிசுத்த வாழ்க்கை வரலாறு, செபமாலையால் நடந்த அற்புதங்கள், மருதமடுத் திருப்பதி வரலாறு என்பன அடங்கியுள்ளன.

காலத்துக்கேற்ற வகையான சில சொற்பிரயோக மாற்றங்களும், வரலாற்று அடிப்படையிலான சில திருத்தங்களும் இத்திருத்திய இரண்டாம் பதிப்பில் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்மக்கள், குறிப்பாக தமிழ் கத்தோலிக்க மக்கள், இந்நூலினை இசையுடன் படித்துப் பயனடைய வேண்டுமென்பது இந்நூலை வெளியிடுவோரின் கருத்தாகும். ■



# மடுமாதா அம்மானை மருதமடுத் திருப்பதியின் சரித்திரச் சுருக்கமும் ஞான வளர்ச்சியும்

## 1. மடுப்பதிச் சரித்திரம்

### மடுத்தாயாரின் முதல் இருப்பிடம்:

சத்திய வேதத்தை நமது ஸ்ரீலங்காவுக்குக் கொண்டு வந்தவர்கள் தேவதாயாரின் மேல் பக்தியையும் எம்மிடையே நாட்டிவிட்டனர். 16ஆம் நூற்றாண்டில் இலங்கையின் வடபாகத்தில் இருந்த குடாநாடும் அதனருகேயிருந்த பிரதேசத்தில் ஒரு பாகமும், கரையோரமாய் மன்னார் தீவுவரையுமுள்ள நாடுகளும் யாழ்ப்பாண இராச்சியமுமாய் விளங்கின. இந்தியாவின் தென்கரை யோரங்களில் வசித்த புதுக்கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்துக்குள் சேர்ந்த மக்களுக்கு கிறிஸ்து வேதத்தினால் சுபசெய்தியை முதல் அறிவிக்கலானார்கள். அர்ச். பிரான்சிஸ்கு சவேரியாரின் அரும் போதனைகளையும், புதுமைகளையும் கேள்விப்பட்ட மன்னார் விசுவாசிகள் 1544இல் அவ்வர்ச்சியசிட்டர் வந்து தங்களுக்குப் போதிக்கும்படி தூதனுப்பினர். சவேரியார் திருவாங்கூரில் வேத போதக அலுவலாயிருந்தபடியால் அவர்களுக்கு நற்செய்தியைப் போதித்து ஞானதீட்சை கொடுக்க தமது நாமம் பூண்ட ஓர் குருவானவரை அனுப்பினார். அறுநூற்றுக்கதிகமான ஆண், பெண் பாலர் சத்தியவேதத்தைத் தழுவியது மாத்திரமல்ல, அவர்களில் அதிகப்பற்றானோர் கிறீஸ்துநாதரில் உள்ள விசுவாசத்திற்குத் தமது இரத்தத்தினால் முத்திரையிட்டார்கள். யாழ்ப்பாண அரசனான சங்கிலியன் கட்டளைப்படி புதுக்கிறிஸ்தவர்கள் சங்காரஞ் செய்யப்பட்டனர்.

மன்னாரிலும் அதன் அண்மையிலிருந்த நாட்டிலும் விதைக்கப்பட்ட புதுவேத வித்து அழிந்து போகவில்லை, 1583இல் 26 கோவிற்பற்றுக்குச் சேர்ந்த 43,000 கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். இக்கோவில்களில் ஒன்று மன்னார்த் தீவிலிருந்து 6 கட்டைகளுக்கப்பால் மாந்தையென்னும் இடத்திலிருந்தது. செபமாலை மாதாவென்று இந்நாட்களிலறியப்படும் மடுமாதா சுருபத்தின் ஆதி இருப்பிடம் இக்கோவில்தான்.

### மாதாவின் திருச்சுருபம் மடுவிற்கு வருதல்:

இலங்கைத் தீவை ஒல்லாந்தர் கைப்பற்றினதும் கிறிஸ்தவர்களுக்கெதிராக கொடூரமான வேதகலாபனை தொடங்கியது. இதைக் கண்ணுற்ற மாந்தைக் கிறிஸ்தவர்கள் மாதாவின் திருச்ரூபத்தைப் பாதுகாப்புள்ள ஒரு புகலிடத்திற்குக் கொண்டு போவதைப் பற்றித் தீர்க்காலோசனை செய்தார்கள். அந்நாட்களில் திருச்சபைக்கு ஞானப்பால் கொடுத்து அவர்களைத் திடப்படுத்த குருமார் இருக்கவில்லை. தங்களை வேதகலாபனையினின்று காத்துக்கொள்ளவும், மாதாவின்

திருச்சுரூபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும், சனங்களின் சம்மதத்துடன் இருபது பக்தியுள்ள குடும்பங்கள் 1670இல் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு சுரூபத்துடன் கண்டி ராச்சியத்தில் பிரவேசித்தன. அந்த சிறு கூட்டம் தேவமாதாவின் பாதுகாவலில் ஒல்லாந்த சத்துருக்களுக்கு பயந்து அடர்ந்த அவ் வன்னிக்காட்டில் அங்குமிங்குமலைந்து திரிந்தது. இராமேஸ்வரத்திலிருந்து கண்டிக்குச் செல்லலும் இராசபாதையில் கண்டியரசனின் சுங்காவெளியென்னும் புராதனக் குளத்தருகே குக்கிராமமொன்றிலிருந்த இடத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அக்கிராமத்தின் பெயர் மருதமடு அங்கு மாந்தை கத்தோலிக்கர் முதல் முறையாக திருச்சபையை நாட்டி வேதவித்தை விதைத்தனர். யாழ்ப்பாணப் பட்டணத்தில் வேதகலாபனை காட்டுத்தீ போன்று பரவிக் கொண்டிருக்க அமைதியும் சமாதானமும் நிறைந்த மருதமடுவில் மாதாவின் பாதுகாவலில் விதைக்கப்பட்ட விதை முளைத்துச் சுபீட்சமாய் வளர்ந்துகொண்டிருந்தது.

அக்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மடுவை நோக்கி இன்னொரு கூட்டம் வந்துகொண்டிருந்தது. ஒல்லாந்தருடைய வேதகலாபனையினின்று விலகிக்கொள்ளுமாறு எழுநூறு கிறிஸ்தவர்கள் பூநகரியைக் கடந்து, வன்னிக் காட்டில் அலைந்து திரிந்த பிற்பாடு அவர்களும் ஆச்சரியமான விதமாக மருதமடுவுக்கு வழிநடத்தப்பட்டார்கள். ஆ! கானகத்தில் என்ன ஆனந்த சந்திப்பு யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த கிறிஸ்தவர்களுள் ஒரு போர்த்துக்கேய தளகர்த்தனின் மகளான ‘எலேனா’ என்பவளும் இருந்தாள். அவளுடைய காந்தலான பக்தியும் முன்மாதிரிகையான சீவியமும் அவர்களுக்கு ‘அர்ச்சியசிட்டள்’ என்ற புகழ் நாமத்தைத் தந்தது. சனங்கள் அவளைச் “சந்தலேனா” அதாவது அர்ச்சிஸ்சிட்டலேனா என்று அழைத்து வந்தார்கள். காலகதியில் மடுவிலிருந்த சுங்க அதிகாரியை அவள் மணம் புரிந்தாள். மாதாவின் பேரால் அங்கு கட்டப்பட்ட கோவிலும் இப்பதிவிரதா கிரோன்மணியினாலேயே கட்டப்பட்டது. இந்த நற்செய்கைகாக கிறிஸ்தவர்கள் அவளுடைய நாமத்தை நிலைநாட்டி அவ்விடத்தைச் சிலேனமருதமடு என்று அழைத்து வந்தார்கள். அது இந்நாள் வரைக்கும் இப்புனிதத்தலத்துக்குரிய ஒரு பெயராய் விளங்குகின்றது.

**தியான சம்பிரதாய குருக்களும் மடுவும்:**

டச்சுக்காரர் இலங்கையில் தாங்கள் கைப்பற்றிக்கொண்ட பிரதேசங்களிலிருந்து கத்தோலிக்க குருமாரை துரத்திவிட்டபடியால் இலங்கையில் 1656 தொடக்கம் 1686 வரையும் குருமாரில்லா தொழிந்தனர். கோவையிலிருந்து ஆசா. யோசேவாஸ் முனிவரும் அவருக்குப் பின் தியான சம்பிரதாயக் குருக்களும் வரத் தொடங்க கிறிஸ்து வேதம் திரும்பவும் தழைத்தது. பல்வேறு இடங்களில் மீசாம்கள் தொடக்கப்பட்டன. மாதோட்டப் பகுதியில் 1706இல் இருந்தே சிலேன மருதமடு தலைமீசாமாக விருந்ததென்றும் அம்மீசாமிற்குப் பொறுப்பாளியாக தவமுனிவராக விளங்கிய பேதுறு பெறாவோ சுவாமியார் இருந்தாரென்றும் சரித்திரம் கூறுகின்றது. இவர் இலங்கைக்கு வந்த காலத்திலிருந்தே அதாவது 1695ஆம் ஆண்டிலிருந்து இவ்விடத்திலிருந்தார் என்பதற்கு சான்றுகளுண்டு. அவருடைய காலத்தில் தேவ அன்னையார் தம் மக்களுக்கு இகபர நன்மைகளை வரையின்றி வழங்கலானார். குறிப்பாக காட்டிலுள்ள விஷ சர்ப்பங்களின் கடியைக் கண்டித்துப் பாதுகாத்து வருவராயினர். தொடக்கத்தில் கோயில் வளவிற்குள் எவ் விஷக்கடியும் வினையற்றுப் போகும். அதன்பின் மடுமாதாவின் தலத்து மண்ணை மக்கள் கொண்டுபோன இடமெங்கும் அது புதுமையான மருந்தாக விளங்கிற்று.

ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததும் வேதகலாபனை இருள் ஒளிந்து இலங்கை கத்தோலிக்களுக்கு ஒரு புதுயுகம் விடித்தது. கோவைக் குருமார் காலாந்தொட்டு மன்னாரிலும் அதன் அண்மையிலிருந்த கிராமங்களிலுமுள்ள கிறிஸ்தவர்கள் மடுவுக்கு யாத்திரையாய் சென்று வந்திருக்கின்றார்கள். கோயில் விசாலமற்றிருந்தபடியால் மன்னார் கோட்டில் சங்கிடுத்தாராயிருந்த பறங்கியரான ஸ்ரீமோயிஸ் விசுவாசிகளின் உபயோகத்திற்காக 1823இல் ஒரு சிறு குடிசைக்கோயிலை

களிமண்ணால் கட்டுவித்தார். குதிரை லாடன் போன்ற தோற்றத்தில் 3 சுவர்கள் 8 அடி உயரத்தில் அரைகுறையாக கட்டப்பட்டிருந்தன. அதன் நடுவில் பீடத்திற்காக ஒரு மேசை இருந்தது. கோயிலுக்குப் பின்புறத்தில் குருமாருக்கென ஒரு சிறு அறையும் இருந்தது. கோவைக் குருமாரின் கண்காணிப்பில் மடுக்கோவில் வளர்ந்துகொண்டு வருங்காவை அவர்களுடைய சபை குலைக்கப்பட வளர்ச்சியும் குன்றியது.

## மடுவும் அமலோற்பவசபைக் குருக்களும்

தியான சம்பிரதாயச் சபை குலைக்கப்பட உரோமை அதிகாரிகள் வேறு ஒழுங்குகளைச் செய்தனர். 1846இல் வடபாகம் ஒரு அப்போஸ்தல பதில் விசாரனை பிரிவாக அமைக்கப்பட்டு, அதிபூசித பெற்றக்கீனி ஆண்டவர் அப்போஸ்தலிக்க பதிலாயராக நியமனம் பெற்றார். இவர் தமக்கு உதவியாக அமலோற்பவ மரியநாயகி சபையாரை அழைத்திருந்தார். பெற்றகீனி ஆண்டவரிடமாக வந்த செமேரியா மேற்றுராணியரால் மடுக்கோவிலுக்கு அதிக திருத்தங்கள் செய்யமுடியவில்லை.

1868இல் பொஞ்ஜீன் ஆண்டாவர் நியமனம் பெற்றார். ஆடித் திங்கள் 2இல் வருடாந்த திருநாள் மடுவில் கொண்டாடப்பட 1870இல் பொஞ்ஜீன் ஆண்டவர் ஏற்பாடு செய்தார். அந்நாட்களிலிருந்து வருடந்தோறும் மடுச்சேத்திரம் பதினாயிரக்கணக்கான பக்தர்களை கவர்ந்து கொண்டே வருகின்றது. பொஞ்ஜீன் மேற்றுராணியர் 1872இல் மடுக்கோயிலை முதன்முறையாகத் தரிசித்தார். அத்தலத்தின் அழிவுற்ற நிலவரத்தை கண்ணுற்றார். பரிசுத்த கன்னிகையின் பெயரால் அக்கானகத்தில் விசித்திரமான ஆலயமொன்று அமைப்பதென்று உடனேயே தீர்மானித்தார். தற்போது தாம் கண் குளிரக்காணும் கோயிலைக்கட்ட மேற்றுராணியர் உடனே கன்னிக்காலை நாட்டினார் இது 1872 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 8இல் நிகழ்ந்தது.

பொஞ்ஜின் மேற்றுராணியார் தொடங்கிவிட்ட மடு ஆலயத்தின் நிர்மானம் மெலிசன் மேற்றுராணியர் காலத்தில தொடர்ந்து நடத்தப்பெற்று யூலன் ஆண்டவர் காலத்தில் முற்றுப்பெற்றது. திறமையான கோயில் முகப்பும் விசாலமான குருமனையும் பக்தி நிறைந்த நற்கருணை சிற்றாலயமும் மனதைக்கவரும் லூர்து கெபியும் ஒன்றன் பின் ஒன்றாக கட்டப்பட்டு இத் திருச்சேத்திரத்தை அலங்கரித்து நிற்கின்றன. மருதமடுத் திருத்தாயாரின் பாதுகாவலில் அநேக ஆயிரவர் வந்து சேருவதைக் கண்ட யூலன் மோற்றுராணியார் ஆனந்தங்கொண்டு தமது தோத்திரத்தை கூறி விண்ணுலகெய்தினார்.

புறோ மேற்றுராணியார் மருதமடுச் செபமாலை மாதாவின் தலத்தை யாத்திரைத் தலமாகப் பரிசுத்த ஸ்தானம் அங்கீகரிக்கச் செய்தார். தாயாரின் திருச்சுருபத்திற்குப் பாப்பாண்டவரின் பிரதிநிதியைக் கொண்டு முடிசூட்டுவிக்க புறோ மேற்றுராணியர் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் வேளை மரணத்திரைக்குள் மறைந்தார். அவருக்குப் பின் வந்த மாதாவின் அன்பரான கியோமார் ஆண்டவர்க்கே அப்பாக்கியம் கிட்டுவதாயிற்று. இவர்கள் தம் மேற்றிராசன ஆளுமையை மடுமாதாவின் முடிசூட்டு வைபவத்துடன் ஆரம்பித்தார். திருச்சேத்திரத்தைப் பெருப்பித்து, நிரைப்படுத்தி, தற்போது அங்கு நாம் காணும் சோபிதம் பெறச் செய்தவரும் இவரே. இவர் செய்த பலவித வேலைகளில் விசேஷம் பெற்றது. கோயில் முகப்பிற்கு முன்னிருக்கும் சித்திரக் கூடம் அமைத்ததாகும். இதில் நடந்தேறும் தேவ ஆராதனைகளில் கோயில் முற்றவெளியிலிருக்கும் பதினாராயிரக் கணக்கான விசுவாசிகள் பங்கு பற்றக்கூடியவராகிறார்கள்.

## மடுமாதாவுக்கு முடிசூட்டல்:

மடுத்தாயாரின் திருச்சுரூபத்திற்கு நிரந்தரமானதோர் நிலை கிடைத்து நூற்றாண்டுகளுக்குப் பின் அதாவது 1914ஆம் ஆண்டு பரிசுத்த பாப்பரசரின் பேரால் வந்த பிரதிநிதி ஆடம்பர வைபவங்களுடன் அச்சுரூபத்திற்கு முடி சூட்டினார்.

பரிசுத்த பாப்பாண்டவர் பதினொராம் பத்திநாதரின் பிரதிநிதியான கொழும்பு அதிமேற்றிராணியார் ஆசா. குடேற் ஆண்டகை 1914ஆம் ஆண்டு ஆடித் திங்கள் ஒன்றில் மடுவில் வந்திறங்கினார். குருமாரும் விசுவாசிகளும் அணிவகுத்துநின்று அவரை வரவேற்றனர். பாப்பரசரையே கௌரவப்படுத்த எண்ணிய விசுவாசிகள் அவரது பிரதிநிதியை இதற்கு என்று அமைத்து பல்லக்கில் ஏற்றி மேல்நாட்டு, கீழ்நாட்டு வாத்திய இசைகளுடன் கோவிலுக்கு கொண்டு வந்தார்கள்.

பிரதான பீடத்தில் மாதாவின் சிரசிலும் திருமகனாரின் சிரசிலும் சூடவேண்டும் என்ற சித்தஞ் செய்யப்பட்ட சித்திரவேலைப் பாடுகளுடன் வைரக்கற்கள் பதித்த இரு தங்க முடிகள் மந்திரித்தார். திருநாட் தினத்தன்று யாழ்ப்பாண மேற்றுராணியாரான கியோமர் ஆண்டவர் அவர்கள் ஆடம்பர பாடற்பூசை நிறைவேற்றினார்கள். அச்சமையம் தூத்துக்குடி மேற்றுராணியரான வந். றோச் ஆண்டவரவர்கள் முச்சுவைகளுமமைந்த அமிர்த மரியாளின் பிரசங்கஞ் செய்தார்கள். பாப்பரசரின் பிரதிநிதி கூடிநின்ற பக்த கோடிகளுக்கு இச்சுபதினத்தின் கருமத்தை விளக்கிய பின் மகுடாபிசேகத்தை ஆரம்பித்தார். சனத்திரளிடையே செப ஓசைகள் எழுந்தன. பின்பு அமைதி நிலவியது. இலங்கையின் நான்கு பக்கத்திலும் இருந்து வந்த 150,000 சனங்கள் இமைக்கொட்டாமற் பார்த்து நிற்க சகல மேற்றுராசனங்களிலும் இருந்து வந்த 50 குருமார்கள் புடைசூழ 4 மேற்று ராணிமார் துணை புரிய செப வேண்டுதல் செய்து பதினொராம் பத்திநாதர் பாப்புவின் பெயரால் அவருடைய பிரதிநிதி மடுமாதாவின் திருச்சுரூபத்திற்கு முடிசூட்டினார்.

**ஆலய அபிசேகம்:**

1944ஆம் ஆண்டு யுத்தகாலமாயிருந்த போதிலும் மடுச்செபமாலை மாதாவின் ஆலய அபிஷேகம் வெகுபந்தி விமரிசையாக நடந்தது. அதற்கு ஆயத்தமாக முன்னிருந்த மரபீடத்திற்குப் பதிலாய் சலவைக்கற்பீடம் அமைத்து பீடத்தளத்திலும் வெள்ளையும் நீலமுமான சலவைக்கற்கள் பதிக்கப்பட்டன. பிரயாண வசதியீனங்கள் பல இருந்தும் கானகத்திலுள்ள இப்புனித தலத்தை நாடித் தங்கள் தாயாரைச் சந்திக்கவும் அவவுடைய ஆலயத்தைத் தேவனுக்குப் பிரதிஷ்டை பண்ணவும் 30,000 க்கும் மேலான சனங்கள் வந்திருந்தார்கள். ஆனி 25இல் முப்பது குருமார்களும் துணைபுரிய வந்திருந்தார்கள். கியோமார் ஆண்டவர் ஆலயத்தையும், பலிப்பீடத்தையும் அபிஷேகம் செய்தார். இப்புனித இடத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் செபமாலைத் தாயார் இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள தமது பிள்ளைகளுக்குச் சகல வரங்களையும் அதிகமாய் வழங்கிக்கொண்டே வருகின்றார்.

**மகாசுற்றுப் பிரகாரம்:**

அலோற்பவ மரியநாயகி சபைக்குருமார் இலங்கைக்கு வந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் நோக்கமாக மடுமாதாவின் திருச்சுருபத்தைத் தபசுற்று பிரகாரமாக யாழ்ப்பாண மேற்றுராசனத்திலுள்ள ஒவ்வொரு விசாரனைப் பங்கிற்கும் கொண்டுசெல்ல வேண்டுமென்ற எண்ணங்கொண்டார். கியோமார் மேற்றுராணியார் இது ஒரு வெற்றி ஊர்வலமாகவல்ல, பூரண கத்தோலிக்க சீவியத்திற்கு ஓர் அழைப்பாகவிருந்தது. இதில் கன்னி மரியாளே பிரசங்கி. ஒவ்வொரு விசாரணைப் பங்கும் இதற்கு மூன்று தினங்களாகச் செப தவங்களை அனுசரிக்க வேண்டியிருந்தது. திருச்சுரூப வகையானது மனந்திரும்புதலுக்கும் ஆழமான ஞானச் சீவியத்திற்கும் தருணமாகியது. இந்தச் சுற்றுப்பிரகாரம் பங்குனி 15ஆம் திகதி தொடக்கம் வைகாசி 5ஆம் திகதிவரையும் நடந்தேறியது. இந்த ஐம்பது நாட்களிலும் மடுமாதா ஆயிரங்காத வழி நடந்து எண்பது பங்குகளைத் தரிசித்தார். ஒவ்வொரு மீசாமிலுமுள்ள அவவுடைய ஆயிரக்கணக்கான பிள்ளைகள் அவவுடைய வரவை எதிர்பார்த்து அரைவாசித் தூரம் முன்சென்று சந்தித்து அழைத்துவந்தார்கள். பிற சமயத்தவர்கள் கிறிஸ்தவர்களுடன் போட்டியிட்டு ஆனந்தம் பொங்க வரவேற்றார்கள். மாதாவின்

மைந்தர் தம் அன்னையரைப் பக்திப் பரவசத்துடனும் குதுகலம் நிறைந்த ஆவலுடனும் வரவேற்றார்கள். இந்தச் சுற்றுப்பிரகாரத்தின்போது காத்திராத விதமாய் நடந்தேறிய மனந்திருப்புதல்கள் அற்புதமானவையே. மாதா தம் மக்களுக்கு மடை திறந்து விட்டதுபோலச் சொரிந்தருளிய ஞானவான்களின் எண்ணிக்கையை ஆத்தும குருக்களே அறிவர். 51,500 பக்தியுள்ள கத்தோலிக்கர் தங்களைத் தேவதாயாருக்குக் காணிக்கையாக்கினார்கள். அக்காணிக்கைப் பத்திரங்கள் மடுமாதாவின் பாதத்திலேயே சேமிக்கப்பட்டிருக்கின்றன.

கியோமார் மேற்றுராணியார் ஐயைந்து ஆண்டுகளுக்கு மேலாக அரிய சேவை திறம்படப் புரிந்த பின் யாழ்ப்பாண மேற்றிராசனப் பொறுப்பையும் எமிலியானுஸ்பிள்ளை மேற்றுராணியாரிடம் ஒப்படைத்தார். இவருடைய முன்னேற்றமான தலைமையில் இலங்கையின் நாற்றிசையிலும் மடுமாதா அதிகமதிகமறியப்பட்டும், நேசிக்கப்பட்டும் வந்ததென்பதற்கும் மடுப்பதி ஸ்ரீலங்காவின் ஞானச் சூரியனாய்த் திகழ்ந்ததென்பதற்கும் ஐயமில்லை. 1973ஆம் ஆண்டு தைத் திங்கள் அதி. வந். வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ். மேற்றுராணியராகவும் மடுத்திருப்பதியின் பொறுப்பாளராகவும் நியமனம் பெற்றார். 1981இல் மன்னார் மேற்றுராசனம் யாழ்மேற்றுராசனத்திலிருந்து பிரிக்கப்பட்டபோது அதி.வந். தோமஸ் சவுந்தரநாயகம் மன்னாரின் முதல் ஆயராக நியமிக்கப்பெற்றார். இதன்பின் மருதமடுத் திருப்பதி மன்னார் ஆயரின் மேற்பார்வையின் கீழ் உள்ளது. ■



# 2. ஓயாத பிரசாத மாரி

**சத்தியத்தைத் தேடுவோர்க்கு வெளிச்சம்:**

மடுவைத் தரிசித்த திருச்சபைப் பிரபுக்கள் சிலர் சருவேசுரன் மடுத்திருப்பதியை ஒரு விசேஷித்த தலமாக ஏற்படுத்தியிருக்கின்றார் என்றும், இலங்கை முழுவதையும் சத்திய மறையாகிய பட்டிக்குள் கொண்டுவருவதற்கு மடுமாதா காரணராகின்றார் என்றும் கருதுகின்றார்கள். வருடாந்த மகோற்சவங்களின் போது கத்தோலிக்க யாத்திரைகளுடன் அநேக பிறசமய யாத்திரிகளும் வருகின்றனர்.

**பாவிகளின் தஞ்சம்:**

கத்தோலிக்கர் ஆயிரக்கணக்கில் மடுத் திருப்பதிக்கு வந்து கூடுவதற்கு ஒரு முக்கிய காரணம் யாதெனில் இவ்விடத்தில் தாயார் அதிகமாகப் 'பாவிகளுக்கு அடைக்கலமும்' 'கிறிஸ்தவர் களுக்குத் தஞ்சமுமாய்' தம்மை காண்பிப்பதனாலேயாம் எனின் மிகையாகாது. தேவதாயாரின் வல்லமையுள்ள மன்றாட்டினால் பக்தியுள்ள யாத்திரியானவன் தன் ஆத்துமத்தின் உண்மையான நிலபரத்தை அறியவும், அறிந்து தன் சீவியத்தை மாற்றிக்கொள்ளவும், தேவையான வரங்களை யடைந்து கொள்கிறான். பாவசங்கீர்த்தனம் செய்யும் பொழுதே தேவதாயார் இச்சகாயங்களை அருளுகிறார். அநேகக் காலமாகத் தம்முடைய ஊரிலுள்ள விசாரனைப் பங்கிலே பாவசங்கீர்த்தனஞ் செய்யாதவர்கள்கூட மடுத்தாயாரின் திருப்பதியிலே மனம்மாறி, நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்து நல்லொழுக்கமுள்ள சீவியத்தை தொடங்குகிறார்கள்.

**கஸ்திப்படுவோருக்கு தேற்றுதல்:**

மடுப்பதியில் சத்தியவேத வெளிச்சத்தை அடைந்தவர்கள் நூற்றுக்கணக்கென்றும், வேத ஒழுக்கத்தைத் திரும்பவும் கைக்கொள்ளத் தொடங்கும் ஊதாரிகள் ஆயிரக்கணக்கென்றும் சொன்னால், குணமடைந்து ஆறுதல் பெற்றுத் திரும்பும் வியாதியஸ்தரும் துன்பப்படுவோரும், விதவைகளும், அனாதைகளும் மூகையர், அந்தகர், மலடரும் பதினாயிரக்காம். மடுத்தாயார் 'வியாதிக்காரருக்கு ஆரோக்கியமும் கஸ்திப்படுவோருக்கு தேற்றரவுமாயிருக்கிறார்.' கவலை நிறைந்த மக்கள் தேற்றரவு தரும் மாதாவின் பாதத்தில் நெடுநேரமாக இருந்து செபிப்பார்கள். தங்கள் கவலையை உரத்தச் சத்தமாய் எடுத்துரைப்பர். ஒரு சிலர் கரங்களை நீட்டிக் கனிவு நிறைந்த பார்வையுள்ள திருச்சுருபத்தின் முகத்தை இமைக்கொட்டாமல் நோக்கிய வண்ணம் அலையும் கணவனோ அன்றேல் கெட்டுப்போன குமாரனோ திரும்பிவர வேண்டுமென்று ஆவல் காட்டி நிற்பர். வேறு சிலர் விவாகமாகி அநேக ஆண்டுகள் சென்றும் வீட்டுக்கு அழகுகொடுக்கும் புத்திரரில்லாததால் அதை இரப்பவரும் உளர். தங்கள் மனதில் நிறைந்திருக்கும் கவலைகளின் பாரத்தை எடுத்துரைக்க நாவெழாமல் இரக்கத்தைக் கொஞ்சும் பாவனையாய் மாதாவின் முகத்தையே காணுவதுபோல சுருபத்தைப் பார்த்துக்கொண்டிருப்பர் சிலர். அவர்கள் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீர்த்தாரைகள் உரைக்கும் கவலைகள் வேறு. தாயை தஞ்சமென்றடைந்தோர் தம் கவலைகள் தராமற் போனதுமுண்டோ மாதா பீடத்தின் முன்னெரியும் ஆயிரக்கணக்கான மெழுகுவர்த்திகளினதும், பொன் அல்லது வெள்ளியில் செய்து கோவிலில் காணிக்கை வைக்கப்படும் தொட்டிலும், பாலனும், கண்மடல், காது முதலிய அவயவங்களினதும், நெற்கதிர் தென்னம் பிள்ளை, ஆதியாம் பொருட்களினதும் கருத்தென்ன? இரக்கும் கைகளும், கெஞ்சும் கண்களும் தாம் கேட்டதை மடுத்தாயார் தவறாது அனுகூலமாக்குகின்றார் என்பதன்றோ.

**கிறிஸ்தவ ஜீவியத்தின் சக்தி நிலையம்:**

கண்பெற்ற முகம் போல் அடர்ந்த கானகத்தின் மத்தியில் நந்தவனம் போன்றமைந்திருக்கும்

மடுப்பதியின் பசும் புற்றுரையிலும் தன் நிழல் கொடுக்கும் வானளாவிய விருட்சங்களின் கீழும் திருவிழாக் காலங்களில் திரளான மக்கள் தங்குவர். இவர்கள் இங்கு வருவது உல்லாசப் பொழுபோக்குவதற்காக அல்ல, ஏனெனில் மடுத் திருப்பதியில் எங்குத் திரும்பினாலும் செபவோசை ஒலித்துக்கொண்டேயிருக்கும். அல்லும் பகலும் திருநாள் நடந்துகொண்டிருக்கும். நாடோறும் மாதாவின் பீடத்தின் முன்னோ நற்கருணை நாதாரின் சிற்றாலயத்திலோ, விடுதிகளிலோ வேண்டுதல்கள் குறையாது. திருச்சேத்திரத்தில் பிரசங்க போதனைகளைக் கேட்டு மாலையில் செபமாலை, தேவநற்கருணை ஆசீர்வாதத்தில் பங்குபற்றி காலைப் பூசைப்பலிக்குச் சமுகம் கொடுத்து ஆலய முன்றிலில் நடந்தேறும் ஆராதனைகளில் எம் மண்டபமும் அடக்க முடியாத சனத்திரள். கோயிலின் முன்னுள்ள மைதானத்திலிருந்து கலந்துகொண்டு, வரிசையில் நெடுநேரம் காத்திருந்து சற்பிரசாதமுட்கொண்டு வருபவர் யார்? மடுமாதாவிடம் வரம் கேட்க வந்து கூடும் யாத்திரிகளல்லாம் வேறல்லர்.

மடுப்பதியில் உத்தம கிறிஸ்வர்களாய் ஒழுகிச் செபமென்னும் தூய காற்றைச் சுவாசித்த பின்னர் தேவ திரவிய அனுமானங்களைப் பக்திப் பக்குவங்களுடன் கைக்கொண்ட பின்பு வீடு திரும்பும் யாத்திரிகள் மடுத்தாயார் பாதத்தில் தேடியடைந்த விசுவாசத்தையும் வேதப் பற்றுதலையும் தாம் சென்றவிடமெல்லாம் செரியச் செய்தார்கள். இலங்கையில் கத்தோலிக்க பரிமளம் கமழுமிடம் மடுப்பதி, ஞானச்சீவியம் தேங்கி வழியும் தடாகம். மடுப்பதி இப்பதிக்கு வரும் மக்கள் அதனைப் பருகுவது மாத்திரமல்ல இலங்கையின் பல பாகங்களுக்கும் அதனைக்கொண்டு செல்கிறார்கள். ஞான சக்தியாய்த் திகழும் மடுப்பதி தன்னகத்தே வரும் யாத்திரிகள் மூலமாக இச்சக்தியை இலங்கையின் நான்கு பக்கத்திலும் பரப்பி வருகின்றது.

### வருடந்தோறும் நடக்கும் திருநாட்களின் அட்டவணை

தேவதாயாரின் பிரதான திருநாட்கள் மடுத்திருப்பதியில் நவதின ஆராதனைகளுடன் கொண்டாடப்படும்.

| | |
|---|---|
| தை மாதம் | 01ஆம் திகதி |
| மாசி மாதம் | 02ஆம் திகதி |
| பங்குனி மாதம் | 10ஆம் திகதி |
| வைகாசி மாதம் | முதலாம் ஞாயிறு |
| ஆடி மாதம் | 02ஆம் திகதி |
| ஆவணி மாதம் | 15ஆம் திகதி |
| புரட்டாதி மாதம் | 08ஆந் திகதி |
| ஐப்பசி மாதம் | 07ஆம் திகதி மடுக்கோயில் பெயர் கொண்ட திருநாள் |
| மார்கழி மாதம் | 08ஆம் திகதி |

பரிசுத்த வார ஞானோடுக்கம்: பெரிய வியாழன் தொடக்கம் உயிர்த்த ஞாயிறு காலை வரையும் நடைபெறும். ■



# திருமருதமடுவில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சியசிஷ்ட செபமாலை மாதாவின்

# அம்மானை

## காப்பு வெண்பா

பூமேவ தன்மை புரியுஞ் செபமாலை
மாமரித்தா யம்மானை மன்றாட்டை - யானுகந்து
இத்தரையிலேபாட வெப்பொருளுந் தந்ததிருக்
கர்த்தவன் மலர்பதமே காப்பு.

## அம்மானை

சீரிலங்கு வானும் தினகரனும் மீன்மதியும்
பாரிலங்குயாவும் படைத்துநிதம் காத்தபிரான்
ஏகசருவேஸ்பரனின் இருசரணம் சென்னிவைத்து
ஆகமகிழ்வாய்ப்போற்றி அரிய செபமாலை
அம்மாளினம்மானை அடியேனும் பாடுதற்கு
இம்மாநிலத்துதித்த யேசுபதந்துணையே
செப்பரிய ஏழுகொடை செழிக்கவெமக்கேயருளும்
இஸ்பிரீத்துசாந்து வெனுந்தூய தற்பரனே
விண்ணவர்கள் ராக்கினியென் மேலான தாயான
கன்னிசெபமாலைக் காரணியினம்மானை
தொட்ட இந்நூலினுக்குத் தூசியிலுந் தூசிகொண்ட
மட்டில்லாப் பாவியென்முன் வந்துதவி செய்தருள்வீர்
கற்புக்கணிகலமாய் கன்னியர்கரசியராய்
அற்புதத்தி சந்தானா ளரியவுதரமுற்ற
திருப்புதல்வி யென்தாயே செப்புதற்குன்னம்மானை
அருட்தரவே யென்னாவில் அண்டிவந்துநில்லுமம்மா
தேனமரும் லீலிச் செலுமலர்பூங் கொம்புனகரம்
உன்ஞானப் பத்தினியி னுகந்தவம்மானையிதற்
கென்னாவில் நின்றுநல்வாக் கினிதருளிக் காப்பீரே
திவ்விய மெய்வேதக் திருக்குருவதாயுதித்த
ஔவியமில்லாச் சுவக்கீ னாரும்முனியேயன்னம்மாள்
தாயேயுன் தூயமகள் சரிதையுறுமம்மானை
சேயோனுமெயெடுத்துச் செற்புதற் கிப்புவியில்
நல்வாக்கருளி நயந்துணையாகநின்று
புல்லறிவோனைக் காரும் பொற்பதத்தைத் தோத்திரித்தேன்
சத்தியத் திருச்சபைக்குத் தலைவராய்த் தானுதித்த
உத்தமசம்பேதுருவே யுயருமற்ற அப்போஸ்தலரே
உங்களுடன்பாவி யுதவானெனக் கும்முத்திப்
பங்கருளத்தேவ பாலகனை மன்றாடி

அத்திருப் பரகதிக்கு அடியேனைக்கூட்டிச்செல்லும்
உத்தமி செபமாலை யும்பரியினம்மானை
தனக்குத் துணையாகி தாசனிதையேயியற்ற
எனக்குத் துணையாகிநின் றிணியவரந் தந்தருள்வீர்
ஈய்ந்தியவப்போஸ்தலராய் எழுந்திலங்கை மாநகர்க்கும்
காந்திமிகு மெய்வேதக் கதிரோன் பயிர்நாட்டி
எங்கும் பிரபைகொண்டு இலங்கவைத்த அர்ச்சியசிஷ்ட
துங்க சம்பிறன்சீஸ்கு சுகிர்த சவேரிமுனி
அப்பரே முப்புவனத் தரசி செபமாலை
தப்பிலா நாயகியின் சரிதையுறுமம்மானை
இதற்கு துணையாக இவ்வேளை வந்துநின்று
அந்தக் கொடிய பாவியெனக் கருளுதவி செய்தருளும்
கன்னியர்கள் மூவருக்கு களிக்கமணஞ் செய்துவைக்க
அந்நாளிற் சொர்ணம் அருளியசந்நீக்குலாசு
உத்தமமேற் ராணியரே யுய்வதற்கெனக்குநன்மை
மெத்தவளித்த மேலான வன்னையெனும்
சந்த செபமாலைத் தாயாரி னம்மானைக்
கிந்தநேரந்துணையா யென்முன்பு வந்தருள்வீர்
அற்புத பிரகாச அருள்வரத்தி னாற்பொலிந்து
பொற்பிரபை வீசும் புனிதசந்தந்தோனியாரே
இப்புவியின் மானிடரை யீடேற்றமாண்டவளென
செப்பரிய தாயார் செபமாலை யம்மாவின்
அம்மானையானவிதற் காவலுடனேயிரங்கி
உம்முதவிநின்று நல்வாக்குகந்தெனக் கருள்வீரே
அன்பான எம்பெருமான் அரியத்திருத் தொண்டுசெய்யும்
ஒன்பதுவிலாசசபை யுற்யசம்மனசோரே
உங்கள்திரு ராக்கினியிவ் வுலகரசி தேவ அன்னை
மங்காச் சரிதை வளர்த்திடுமம்மானையிலே
சொற்பிழைகள் வராமற் றுணையாயடியனுக்கு
நற்பரிவாய் வந்துதவி நண்ணிநின்று செய்வீரே
ஏகபரன் ஆஞ்ஞையினாஸ் இடர்நீக்கி நிற்குமெந்தன்
காவலான தூய கருதரிய சம்மனசே
உமதரிய ராசாத்தி உத்தம செபமாலை
எமதரிய நாயகிபோல் இயற்றுமிந்த அம்மானை
தன்னி லொருபழுது சாராம லெப்போதும்
என்னுடனே நின்றுதவி இனிதருளிக் காப்பீரே
அம்பாலே செம்பா லதுவொழுகக் கன்னியிலே
வம்பர்களாற் கட்டுண்டு வாதையுற்ற வீரியஞ்சேர்
இன்ப செபஸ்தியார் முனியே ஏற்றவர்ச்சிய சிஷ்டர்களே
கண்பாயாடியேனும் பாடுமிந்த வம்மானை
தனக்குத் துணையாகத் தயவுடனே முன்புவந்து
இணைக்கமுடன் நல்வாக் கினிளிதருளிக் காப்பீரே.

# நாட்டுச் சிறப்பு

## விருத்தம்

தீதில்லாச் செல்வத்தாலே செழிப்பது மிகவுமுற்று
பூதலந்தனிற் பேர்பெற்ற புலவர்கள் பலரினாலே
ஓதேலாச் சிறப்புவாய்ந்த உகப்புறும் நாடதன
யூதேயாநாட்டின் கீர்த்தி யுரைத்திடக்கேளீர்மாதோ.

## அம்மானை

பொன்னோங்கி யென்றும் புகழோங்கியேபொலிந்த
நன்மைதிகழ் யூதேய நாட்டின் சிறப்புக்களை
செப்பிடுவேனிந்தச் செகமீதிலுள்ளவரே
இப்பொழுது நானும் இனிதாயறிந்துகொள்ளும்
தோற்றிவிண்தின் றேபுவிக்கு சுடரொளியினைக்கொடுக்கும்
ஏற்ற இரவிவெப்பம் இழுத்தேசமுத்திரத்தின்
நீராவியெல்லாம் நிறையவிண்ணெங் குங்கிளம்பி
சீரான வெண்மை செறிந்தநிறமாய்ப்பரந்து
அங்குமிங்குமோடி ஆகாயத்தின் குளிரால்
சங்குநிறமாகவந்து தாமேயொன்றாய்த்திரண்டு
அடவியின் மதயானை யச்சாயலாவுரு
சடுதியு டேயெடுத்துச் சட்டெனக் கீழேயிறங்கி
போற்பகைவர் தம்மிடையிற் போட்டிருக்கும் வேலொளிபோல்
ஏற்றமுடன் மின்னி யெழுஞ்சமர்க்களப்பறையின்
தொனியோசை போல்முழங்கித் தொடுத்தவெள்ளிக்கம்பிகள்
அணிகொண்டு தாரைவிட்டு அதிர்ந்துமழையைப்பொழிந்து
புல்லரிவோர் தங்கள்மனம் போனபோக்கின்படியே
செல்லவிடல்போலவந்தீர் சிதறியோடமறித்து
துறவறத்தோர் தம்மனதைச் சொயநிலைக்குப்போக்காமல்
அறமடக்கதாட்சியினா லதைநிறுத்திக் கட்டுதல்போல்
மள்ளர்களும் மந்நீரை வரிசையுடனே பழனத்
துள்விடுத்துப்போகாமல் உயர்வாய் வரம்புகட்டி
தணியாத சந்தோஷம் தாம்கொண்டு அவ்வேளை
மணிபோலும் கோதுமைகள் வாரிக்கைகளாலெடுத்து
தொனியோசை பாடித் தூவியெறிந்ததற்பின்
இனிதாய்க் கமங்கடமை ஏர்கொண்டுழுதுசெல்ல
குன்றாக் குருவிதிபோற் கோதுமையின் தானியங்கள்
ஒன்று பலகோடி யுற்றநல்விளைவுகளைக்
கொடுத்துச் சிறுத்தியோகம் கொண்ட ஆங்காரர்குணம்
எடுத்துத் தலைநிமிர்ந்து இறுமாப்புக்காட்டியபின்
பேரறத்தோர் தங்கள்புண்யப் பெரும்பாரந்தாட்சியினால்
பாருலகிற் றாழ்ந்து பணிந்து வணக்கம்புரியும்

அவ்வாறு போற்யிர்கள் அத்தானியக்கனியின்
செவ்வையுறு பாரமதைத் சுமந்துநிற்க ஏலாமல்
காய்ந்துதலைகீழ்வளைக்கக் கடைச்சியர்கள் கண்டோடி
வேய்ந்தமணிக் கோதுமையின் விளைவுப்பவனுரைக்க
கேட்டுமன்னர்களெழுந்து கிஞ்சுகச்சொல்லாளர்களுடன்
ஓட்டமாயோடிவந்து உற்றவப்பயிர்களையே
அறுத்துப் பெரும்போராய் அடுக்குவதல்லாமல்
மறுத்தபோரொன்றுமக்கு வழங்காத நாடதுவே
ஒருத்த ரொரத்தர்மனத் துள்ள பிறர்நேசம்
துருத்திமெழு காயுருகி சொல்லிய முற்றனியத்தின்
அருட்தரும் நற்கொடைகள் அவரவர் வழங்குவதால்
இரப்போரொருவருமங் கில்லாத நாடதுவே
கரும்பு பேரீஞ்சு முந் திரிக்கனியினிரசமதை
அருந்துவார் தெண்ணீராய் அந்நாட்டின் மானிடர்கள்
பசுக்கள் துருவைகளின் பாலாறு தேனாறாய்ச்
செழித்துக் களிக்கும் சிறப்புறுமந் நாடதுவே
சொர்ணநிறப் பீங்கான்கள் துலங்மொளிக்கண்ணாடியவை
எண்ணளவில்லாம விருக்கின்ற நாடதுவே
பட்டு பருத்தி பலபல வகையாக
மட்டில்லாதங்கு வழங்குகின்ற நாடதுவே
கருங்கூந்தல் வேல்விழியார் கடைந்ததயிர் மோராகி
பெரும்மாரியாப்பொழியும் பேசரிய நாடதுவே
கொம்புகளில் வைத்தமுது குடித்துவண்டுகள்வெறியால்
இம்புவியுள் ளோர்களிக்க இனியராகம் பாடல்
கண்டு அந்தநாட்டார் களிப்பாகி யவ்விடத்திற்
சென்றெடுக்குந் தேன்சுதையாற் செழித்தசெல்வ நாடதுவே
இப்படி வளம்பொலிந்து இலங்கு யூதேயவிதற்
கொப்பான நாடிவ் வுலகிற் கிடையாது
ஆதலால் யானும் அறிந்தளவு இந்நாட்டின்
நீதமிகுஞ்சிறப்பை நிகழ்த்தினே னம்மானை.

# நகரங்களின் சிறப்பு

## அம்மானை

செப்பரியநன்மைச் செல்வந்தளைத்தோங்கி
இப்புவிக்கோர் திலக மெனவேசெழித்து நிற்கும்
        எருசலேமாநகாரின் ஏற்ற சிறப்புக்களைப்
        பெருநிதிப் பேலேயெடுத்துப் பேசிடுவேன் கேட்டருளும்
சேணளாவிச்சிறந்த தேவாலய நிரையும்
ஞானக்குருக்கள் செய்யும் நயந்த பலிபூசைகளும்
        அந்தியுஞ் சந்தியுமே அழகுறுசெபமணித்தார்
        வந்தனையாய்க் கையேந்தி மாதாவிற்கொண்டவன்பு
நேசப்பெருக்கால் நிரைநிரையாண்பெண்பாலர்
ஓசையெழும்ப உசிதபயபக்தியுடன்
        செபமாலைசொல்லியருந் தேவதாயைப்போற்றிப்
        பவமாலையின்றிப் பரிந்திருக்கும்மாநகரம்
இதற்கடுக்க ஆறுமையி லெனுந்தூரமானதிலே
அதக்கொடியமானிடர்சொய் அகங்காரபாவவிருள்
        தீர்பதற்குத் தேவசுதன் சிறந்துதித்தபெத்தலேக
        ஊர்பதியினைத்தாங்கி யுயர்வுற்றிடும்நகரம்
இன்னும்மீர்பத்திரண்டு ஏற்றமைல்தூரமதில்
இன்னலில்லா ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு
        ஆனமுற்பிதாக்கடமை யடக்கமதுவேபுரிந்த
        மானமிருங்ஹெபிறோன் வல்லசெல்வவூரதனை
ஏந்தியெண்டிசைப்பதிக்கு எறிச்சுடர்போலேவிளக்கிக்
காந்தியொளிகொடுக்கும் கருதரியமாநகரம்
        ஐந்தப்பங்கையேந்தி ஐயாயிரம்பேர்க்கு
        முந்தப்பசிக்குணவாய் முகமலர்ந்துயேசுபரன்
பங்கிட்டதில்மீதி பார்த்தோரதிசயிக்கத்
தங்கமதுபோலநின்ற தகமைத்திருநகரம்
        அப்போஸ்தலபேதுர்பிலீப் பருளப்பரந்திரேயு
        செப்பரும்யாக்கோப்பவர்கள் ஜெனனவூராகவுற்ற
பெத்சாயிதாவதனைப் பேணமுடனேதாங்கி
நித்தஞ்செழித்துநன்றாய் நிலைக்குந்திருநகரம்
        திசையெட்டும்போற்றும் திருக்குடும்பமும்வசித்த
        நசரேத்துவான நல்லூர்தனையேந்தி
இப்போதுமெப்போதும் ஏற்றபெருமாட்சிகொண்டு
தற்பரன்பாதச்சுடராற் றளைக்குந்திருநகரம்
        அலைகைகளைவாட்டி அழல்நரகுக்குள்வீழ்த்தும்
        சிலுவைப்படையெழுச்சி செய்துசத்தியவேதமன்னர்
மாற்றார்தமைச்செயித்த வல்லத்திருவாகை
தோற்றியன்றுமின்றுந் துலங்கிற்கும் மாநகரம்
        இந்தத்திருநகரில் ஏற்கவேபூருவத்தில்
        சந்ததமும்நன்றாய்த் தளைத்துச் சனரிக்க

வேற்படைகளாயிரரும் வற்படைகளாயிரரும்
காற்படைகளாயிரரும் கட்டுயர்களாயிரரும்
மந்திரிமாராயிரரும் மதிதெரிந்தோராயிரரும்
தந்திரிமாராயிரரும் தளகர்த்தர்களாயிரரும்
ஏற்றிப் படைசூழ எறிசுடர்பொன்கோலேந்தி
நாற்றிசையுள்ளோர் வாழ்த்த நவரெத்தின ஆசனத்தில்
சவுலெனும்வேதத்தரசன் தானிருந்து ஆளுமப்போ
கொலியாத்தெனுமொருவன் கொடியமனமுடையோன்
பிலீஸ்தியர்களுட்தலைவன் பெரியநெடும்படையன்
உலக்கைத்தடிகரத்தோன் ஒன்பதுமுழக்காலன்
தேய்ந்தநெடும்பல்லன் சிவந்தநெருப்புக்கண்ணன்
பாய்ந்தபுலிபோற்குணத்தன் பருத்தநெடுமூஞ்சியுள்ளோன்
ஆட்சதுரமெட்டுநெஞ்சு அகலப்பருமனுள்ள
இராட்சதப்பிறப்புமெத்த இறுமாப்பு கொண்டபயல்
நானென்ற ஆங்காரி நானிலத்திலேயெனக்கு
தானெவரினையெனவே தற்பெருமைகொண்டநெஞ்சு
இடையிற்பெரும்வாளொன் றெடுத்துறையிலேபோட்டு
நடையில்வந்தெபிரேயர் நாட்டெல்லைக்குள் நுழைந்து
மெய்யானதேவனையே மிகத்தூஷணித்தவனும்
வெய்யசினமாக வீரங்கள் பேசிநின்று
இசுறாயேல்சாதிகட்குள் எவனாகிலுந்தனித்து
அமர்பொரவென்னோடுவந்து அவன்வெற்றிதானெடுத்தால்
நானுமென்மரபினரும் நாங்களவனுக்கடிமை
தானாகுவோமன்றேல் சமரைநான்வென்றிடுகில்
எனக்கவனுமங்கவனின் இணக்கமுறுஞ் சாதியரும்
தனித்தடிமையாவரென்று சாற்றிநின்றுஏசுமப்போ
சவுலரசனுங்கேட்டுச் சஞ்சலம்மிகவுமுற்று
இவனுடனெதிர்த்துவெற்றி யெடுப்போனாருக்குமெந்தன்
மகளாம் மிக்கேலாளை வதுவைசெய்து வைப்பதுடன்
நகரசாளுந்திறமை நானுங்கொடுப்பனென்று
சொல்லப் பயந்தொருவர் தொடர்ந்தவனுடன்சமர்க்கு
செல்லாமலஞ்சித் திகைத்துநிற்கும்வேளையிலே
தனதண்ணர்மூவர்சவுல் தராதிபன் படைதனிலே
மனமொத்துமுன்சேர்ந்து வந்தவரைப்பார்க்க
தாவீதிளைஞனும்போக சண்டாள ராட்சதனின்
கோபமிகும்போர்ச்செயலைக் கூறஅவருங்கேட்டு
ஆண்டவரைத் தூஷணிக்கும் அக்கொடினைச்செயிக்க
வேண்டுமோசேனைப்படை மெத்தவேனஞ்சுகிறீர்
அத்திருபரனருளா லவன்றனையேநான்தனித்து
இத்தினஞ்சென்றேசெயிப்பே னென்றுரைத்துராசனிடம்
அனுமதிகேட்டேயெழுந்து ஆயுதங்களில்லாமற்
தனியாயொருகவணும் தனைாந்துகற்களையும்
எடுத்துநடந்தேயேக எல்லோருமேபரனைத்
தொடுத்துமுழந்தாழ்மடித்து தொழுதவர்க்காய்மன்றாட

தாவீதவரைக் கண்டவுடன் தானத்தராட்சதனாம்
கொலியாத்தவனும் குறித்துச்சிறுசிரிப்பு
காட்டிநகைத்தென்னடா கருமலையுடன்மோத
தாட்டிகமாயோர்சிறுமண் தானெதிர்த்துவந்திடுமோ
என்னையொரு நாயாய்நீ எண்ணிவளைதடிகை
தன்னிலேகொண்டுவரத் தானுந்துணிவாச்சோ
சினத்துநானோர்மூச்சுத் திடிரென்றுவிட்டால்
சணந்தனிலிப்போர்க்களத்திற் றானெழும் நுண்டுசியாப்ப
பறந்துடுவாயென்றுமெத்தப் பரிகாசமாயுரைக்க
அறந்திகழ்தவீதுமப்போ ஆண்டவரைத்தோத்தரித்து
என்தேவன் வல்லமையை இப்போது பார்த்திடடா
என்றுஒருகல்லை எடுத்துக்கவண்மீதேற்றி
கழற்றிவீசியெறியத் துரிதமுடன்சென்று அக்கல்
அழற்சிகொண்ட ஆங்காரி ஆன அந்தராட்சதனின்
நெற்றியிற்பட்டவுடனே நெட்டுயிர்ப்ப்புக்கொண்டவனும்
உற்றபெரியமலை உச்சியுடனேபெயர்ந்து
வீழ்வாறாய்க்கோடை மிகுந்தொனிமுழக்கமொப்ப
பாழுடையோன் நெஞ்சம் படபடக்கவேகவிழ்ந்து
அகங்கலங்கியஞ்சியஞ்சி யவன்சேனைகளோட
முகங்குப்பறவிழுந்தான் மூர்ச்சையுற்றுக்கோலியாத்தால்
அந்தட்சணமோடி அங்கேதவிதவரும்
நிந்தைசொன்னோன்தன்னிடையில் நேராகத்தூங்கவிட்ட
அவ்வாளைத்தானுருவி யவன்றலைவெட்டிக்காட்ட
கொய்யோவென்றங்குநின்றோர் கூச்சலிட்டுச்சந்தோஷ
வாருதிக்குள்மூழ்கி மகிமைத்தயாபரனும்
சீருடனேதங்களுக்குச் செய்ததைப்புரியவைத்த
இந்தநன்றிக்காய்ப்பரப்பரற்கிஸ் தோத்திரமிகப்புரிந்து
அந்தச்சவுல்வழியாய் அரசனாசித்தவிது
சிங்காசனமேறிச் செழிக்கஇருந்தேயரசு
மங்காதுசெய்துவந்த மகிமையுள்ளமாநகரம்
இவ்விதசெயலடைந்த ஏற்றதாவிதரசன்
செவ்வையுறுஞ் சந்ததியிற் செழிக்கவேவந்துதித்த
செபமாலைநாயகியின் செய்திகளைநானெடுத்துத்
தவமாலையாப்புளைந்து சாற்றிடுவேனம்மானை.

# அர்ச்சியஸ்ட சுவிக்கீன் அன்னம்மாளின் திருவாக வரலாற்றுக்காதை

## கட்டளைக்கலிப்பா

எப்பொருளும்படைத் தாதியின்சுதன்
ஏற்ற தாயரின் தந்தை யன்னையென
இப் புவியுளர் தாமு மடிபணிந்
தெந்த நாளிலும் வாழ்த்திப் புகழ்ந்திடும்
செப்பருஞ் காலந்கி னன்னம்மாலுமே
தேவகட்டளை யாம்படி மன்றலை
ஒப்புடன்புரிந் திட்டநற் காதையை
ஒதுவேனிவ் வுலகிலுள்ளோர்களே,

## அம்மானை

உன்னத பரமண்டலத்துகர்ந்திருக்கு மேகபரன்
தன்திருவுரைப்படியே தற்பரனவர் தூதன்
கபிரிகேல்சம்மனசு கனமதில்நின்றிறங்கி
தவவிரத்தி சந்தானாள் தனதுமுன்பு வந்துநின்று
அன்னம்மாளே நீயில் வாதரையின் மீதினிலே
உன்னருந் துணைவானா யுகந்துசுவக்கீனவரை
வதுவைசெய்துகொள்ளெனவே வழுத்தியிந்தவாக்கதுபோல்
இதமுறுஞ் சுவங்கீனு இடத்திலுமேகி
சுவக்கீனே நீயுமுந்தன் துணைவியாயன்னம்மாள்
நவத்தாளை மன்றலது நயந்துபுரியென்றுரைத்துச்
செல்ல அவர்மொழிபோற் றிருக்கலியாணமிருவர்
நல்லமறையாசார நாட்டமுடனேபுரிந்து
இருந்துவருமக்காலம் இருநிலத்திற் பிள்ளையற்று
அரும்பெரும் மலடரென ஆதரையுள்ளோர்நகைக்க
வருந்தினாளன்னம்மாள் மாதாவுக் கிஸ்தரிகட்
கிருந்துவரும்விலக்க லில்லாத காலமுற்று
நாற்பதுநாள்வயது நடக்குமந்த நாளையிலே
ஏற்றகமுன்னாள் யூதருக்குள் இருந்தஒழுங்குப்படியே
பிள்ளையிலார் தங்களுக்குப் பெரியநிந்தையானதுண்டு
வள்ளல் சுவக்கீனும் வான்பரனுக்கேபூசை
செய்குருவாய்த் தானிருந்தார் சிசுவில்லாவாற்றாலே
ஐயமுற்று தேசிகர்க ளனைவருமொன்றாய்கூடி
ஆலயத்தால் விட்டவரை யப்புறம்வெளிபோக்கி
சீலமிகும் பூசைப்பலி செய்யாமலே தடுக்க
அழுது சுவக்கீனும் அன்னம்மாள் தன்னிடத்தில்
விழுமியிகந்தச் செய்திகளை விளம்ப அவளுங்கேட்டு
செப்பரிய துக்கமுற்றுத் தேவாவுன் சித்தமென்று

இப்புவியிலே தங்கட் கிருந்திட்ட ஆஸ்திப்பொருள்
எல்லாம் விற்றேமூன்றா யெடுத்தவர்கள் கூறுசெய்து
நல்லதெய்வ கோயிலுக்கு நாட்டமுடனோர்கூறும்
இல்லா ரிரப்போ ரெளியவர்க்கு மோர்கூறும்
சொல்லரிய சந்தோஷத் துடனேமனமொருவி
ஈந்தவர்கள் தங்கள்செல வினுக்காயோர் பங்குவைத்து
சாந்த தயாபரனார் தன்பதத்தை யெப்போதும்
போற்றியெமக் கோர்சேயைப் புகழுடனே நீரருளி
மாற்றியுலகவடுவை மகிழ்வோடு காருமென்று
கையெடுத்துவந்தார் கருணைத் தயாபரனும்
உய்ய அவர் தம்செபத்தை யுகப்புடனே கேட்டிரங்கி
அன்னம்மாள் தம்முதரக் தாண்டவனின் தாயாரும்
சென்மபவ மற்றினித்தாய்ச் சென்மிக்கவேபுரிந்தார்
இத்திருநற்றாயாரை ஏந்தியநவசூழால்
மெத்தப்பரவசமாய் மேன்மைபெற்று ஆனாளின்
முகக்காந்தி மோட்ச ஒளி மொய்தத்தகதிர் வீசலுற்று
அகத்திற் செபதபநல் லடக்கவோடுக்கத்துடனே
உற்றுவருதல்பார்த்து ஓங்காரரீங்கார
சத்துருப் பிசாசெரிச்சல் தானே மிகவுமுற்று
இவள்வயிற்றி லெங்கள்தலை யினைநசுக்குமிஸ்திரியும்
நவமாயுதித்தனள்போல் நம்பிக்கையாகுதென்று
எண்ணியன்னம்மாள்தாய்க் கெதுவிதமாய்த் தந்திரங்கள்
மண்ணைகள்செய்தேபார்த்தும் வாய்க்காமற் போனதினால்
அத்தாயார் வீடிடிக்க ஆவேசங்கொண்டு அந்தச்
சத்துருப் பிசாசுகளுந் தாம்வரவே சம்மனசோர்
குத்திக் கலைக்கக் கூவென்று கூச்சலிட்டு
நித்தவாய்க்காரிகளாய் நின்றதுஷ்ட பெண்களையே
ஏவியன்னம்மாள்மீது ஏற்காத தூஷணங்கள்
பாவியந்தத் தாடகைகள் பழுதாகச்சொல்லிடவே
செய்வித்தாலும்பேய்கள் தேவதாயன்னையெனும்
துய்யசந்தானாள்தானும் சோராமலேபுவியில்
அசையாப் பருவதம்போல் அலங்காரத்தால்மிகுந்து
திசையுள்ளோர் வாழ்த்தநின்றாள் திட்டமுடனம்மானை

# தேவதாயாரின் பிறப்பும் திருநாமஞ் சூட்டியதுமான காதை

## கலித்துறை

*அரசவைநசித்தவ ராதவன்போர்த்தவ ரம்புவியி*
*னிரவை விளக்கொளிச் சோமனின்மீதி லெழுந்துநின்று*
*பரவையுடுத்த புவிநரர் தீவினைப்பற்றறுக்கும்*
*திருமரியாள் பிறப்பும் பெயர்மாட்சியுஞ் செப்புவனே.*

## அம்மானை

இவ்விதமா யன்னம்மாள் ஏகனின் தாயைக்கருத்தப்பத்
தவ்வியமின்றித்தாங்கி யானந்த வாருதியில்
　　மூழ்கி முகமலர்ந்து முதலோனைப்போற்றிசெய்யப்
　　பால்வினை யலகைசிகரம் பதித்தால் நசித்திடவே
உற்றபிள்ளை யன்னமாள் உதரத்துளேயிருந்து
தற்பரன் தனைவணங்கித் தாட்சி பொறுமையுடன்
　　அனாதியுள்ள வெம்பெருமா னவர்சேவை செய்வதற்காய்
　　தனாதிகாரங்கொண்டு சத்துவத்துடன்படைத்த
சம்மனசோரிற்சிலது தங்களாங்காரமதால்
செம்மையின்றிக் கெட்டுத் தீயபிசாசனதுவும்
　　ஆதிநரனானபிதா ஆதாம் விழுந்ததும்
　　தீதினாலேயவர்குச் சேர்ந்ததுக்கசாகரமும்
பாதாளத் தலங்களெனப் பரனாரமைத்துவிட்ட
நீதியுள்ளவுந்தரிப்பு நிறைதலம் பிதாபிதாக்கள்
　　இஸ்தலமதனோடும் ஏற்காதப் பாவிகளைச்
　　சுட்டெரித் துபாதைசெய்யும் சூளைநெருப்புடைய
நரகத்தலமதையும் நண்ணியவை மீதடங்கும்
நரர்களின் நிலைபரமும் நாயகியுந் தானறிந்தாள்
　　அன்றியும் நல்லாஞ்சுகளும் அவையவஞ்சேர் மானிடர்கள்
　　குன்றாச் சமஸ்தலத்தின் குணாகுணங்கள் யாவினையும்
அவர்களின் பூர்வோத்திரங்கள் அருந்தருசியோர்கள்கொண்ட
தவவரங்கள் யாவினையுந் தாமவளறிந்திருந்தார்
　　முதல்மனுஷனாமாதாம் முதல்வனுக்கோரதபவ
　　அதம்புரிந்து கெட்டசெய லானதையவறினைந்து
மனங்கலங்கியேசொரிந்த மழைபோலுங் கண்ணீரை
அனந்த தயாபரனு மன்பாகவேயேற்றார்
　　திருக்குழந்தை கர்ப்பமதிற் றெளிவடைந்து அன்னைதந்தை
　　யருக்காவேயிரத்து ஆண்டவரைப் போற்றிடுவார்
வயிற்றிலிருக்கும்போது வல்லபரனின்பரம
திரித்துவ ரகசியத்தைத் தெளிவாகவேவிளங்க

ஆற்றும சிருஷ்டிப்பி னப்போது ஓர்விசையும்
சாற்றுமொன்பதாம்மாசந் தன்னிலொருவிசையும்
பிறக்கமுந்திய தினமும் பேரின்பவாரிபொங்க
அறத்தியாந் தேவசிசு வானவருங் கண்டனர்காண்
தப்பிதமில்லாதவிந்தத் தகுந்தநவ காட்சிகளை
செப்பரியவன்னம்மாள் திருவுதரத்துள்ளிருந்து
அறிந்த அன்னை திங்னளொன்ப தாகியதின் பின்னாலே
செறிந்தபுரட்டாசி எட்டாந் திகதிநடுச் சாமமதில்
இந்நிலமுற்றஞ்செழிக்க இடர்பவங்கள் விட்டோட
சென்பவபமுற்றுலக தேவதாய்தாய்பிறந்தார்
இப்படிப் பிறந்ததிரு ஏந்திழையாள் பாலகியை
பொற்கரத்திலேயேந்திப் போற்றியே சந்தானாள்
ஆண்டவரே யெங்க ளருமைத் திருக்கடலே
தோன்றுவிண்புவியனைத்துந் துலங்கப்படைத்தவரே
அடியாள்நான் கொண்டகர்ப்பத் தாய்ந்தகனியாமிவரை
முடிவில்லானேயுமக்கு முழுச் சம்மதமாக
ஒப்புக்கொடுத்தேனென்று உள்ளங்கொள்தாழ்ச்சியொடு
இப்பாலகியாகு மிவர்மட்டில் நான் புரியும்
கடமையெப்படியெனவே கர்த்தனே நீரெனக்குத்
திடமனமுறவிரங்கித் திருவுளமுரைத்தருளும்
என்று அன்னம்மாள்வேண்ட ஏகன் திருவாக்காய்
அன்று அவளைநோக்கி அன்பான இக்குழந்தை
தளைவெளிக்குன் பிள்ளையைபோற் றுன்நடத்து னுள்ளத்திலே
இணையில்லாச்சங்கைகொண்டு இவள்மட்டிலேயிருப்பாய்
எனவுரைத்த வச்சணமே ஏந்துமானாள்கரத்தின்
கனகரெத்தினப்பாலகியைக் களிப்போடு சம்மனசோர்
வந்துபரலோகமதில் மகிழ்வோடு தூக்கியெம
தெந்தை பிதாவின்சமுகத் திணில்விடுக்க வக்குழந்தை
தேவன் தனைத்துதிக்க திருப்பரன் சிம்மாசனத்தின்
மேவுமருகாக விளங்கு சகலபடைப்பு
ஆனவர்க்கிராக்கினியாய் அங்கேயுட்காரவைத்து
ஞானதயாபரன்றன் நற்சுதன்தாயாராயும்
எல்லோர்க் கிராக்கினியு மெனவிருக்குமச்செயலைச்
சொல்லாமலேமறைத்தார் தூயசிறுபாலகிக்கு
இச்சிறுமிக்கன்பா யிடப்பெயரை வேண்டுமென்று
அச்சணந் தெய்வந்தானு மங்மே நிருபிக்கவே
தேவசிம்மாசனத்தி லிருந்தோர் தொனியும்வெளி
யாகவந்து சொன்னதுநா மன்பாய்த் தெரிந்துகொண்ட
பெயர்மரியாளின்நாமம் பெருமற்புதமாட்சி
யுயர்வாயுடைடையதின்னு முத்தமத்திருப்பெயரை
குறித்துப் பயபத்தியாக் கும்பிடுவோர்யாவருமே
எறிச்சுடர்போல் நல்வரங்கள் ஏராளமாயடைவார்
இன்னுமித் திருநாமம் எரிதீநரகினுக்கும்
இன்னல் வருத்துவித்து ஏய்தபேயானசர்ப்பந்

தனது தலையை நகருக்கும் தவத்தியன்னம்மாளிடத்தில்
எனதுரையிப்போரிடுவ தென்றேகிச் சொல்லுமென்று
சம்மனசோரினிடத்திற் சாற்றச் சர்வேஸ்பரனும்
செம்மையுள்ளவின்நாமந் தீட்டியெழுத்தாயிருந்த
ஒளியுள்ள கேடகங்கள் உகந்தாஞ்சுக்கள்பிடித்து
அழிவில்லா கன்னிகையாமத்தேவபாலகியை
கொண்டுவந்து சந்தானாள் குளிர்ந்தகரமீதினிலே
யன்றுகொடுப்பட்டதிதோ னமிர்தரகசியமே
பாலகியை யான்சகளம் பரத்தேகொண் டெகுமப்போ
சீலசந்தவன்னம்மாள் தேவபரவசத்தில்
இருந்தாளவள்கரத்தி லேற்றவொரு சம்மனசு
அருங்குழந்தையாகவந்து அமைந்தார்பின் தேவசிசு
வந்தவள் கரமீதில் மறுவிசை கொடுத்தவுடன்
அந்தப்பரவசம்விட் டவள்தெளிந்து பாலகியை
கண்டாளப்பிள்ளை கருணையம்பரத்தெடுத்த
தொன்றுமன்னம்மாள்தனக்கு உற்றுத்தெரிந்ததில்லை
செப்பியதிரப்பரனின் திருவாக்கதாம்படியே
அப்போசுவக்கீனும் ஆனாளுமேமகிழ்ந்து
மரியென்னுந்தெய்வீக மங்காத்திருநாமம்
அரியக்குழந்தைக் கவர்களுமிட்டநசரேத்
தென்னுமூரிற்தமது ஏற்றசெல்வமாமனையிற்
புண்ணியராய்வாழ்ந்திருந்தார் போற்றிடவேயம்மானை.

# திருப்பாலகியைக் கோவிலிற் காணிக்கைகொடுத்த காதை

## விருத்தம்

ஆணிப்பொன்னானதேவ அன்னையாம்மரியம்மாள்நன்
மாணிக்கப் புதல்விதன்னை மத ஒழுங்காக முன்னாட்
பேணித் தேவாலயத்திற் பேசருந் திருப்பரற்குக்
காணிக்கை கொடுத்ததூய கதையினைப் பகருவேனே

## அம்மானை

தானான தற்பரனின் தகுந்தசெல்வப்புத்திரியாய்
மானிலத்தி லன்னம்மாள் வயிற்றிலுதித்தமுத்தை
காணிக்கைவைக்கக் கருத்திலெண்ணமுற்றுதவ
மாணிக்கப்பாலகியை மகிழ்வாகவேயேந்தி
நசரேத்தூரிலிருந்து நடந்தெருசேல்மாநகரத்
திசைநாடியேநடந்து தேவாலயத்தையண்டி
நின்றார்பிரமித்து நீத அந்த ஆலயத்தில்
ஒன்றல்ல மூவைந் துயரப்படியுள்ளதாய்
இருந்ததாற் பாலகியை யிதுகளாற் கொண்டேறல்
அரும்பிரயாசையெனவே ஆனாள்சுவக்கீனும்
எண்ணிச் சிறு புத்திரியை யிறக்கியே கீழ்விடுத்து
அன்னைதந்தையர் குருவை யழைத்துவர மேலெறிச்
செல்ல அவர்க்கு முந்திச் சிறுமியவள் சிற்றடியை
மெல்ல எடுத்துவைத்து விரைந்தப்படிகளினால்
ஏறியே சென்றதையங் கிருந்தோரெல்லாம்பார்த்து
தேறி யதிசயித்துச் செழித்த நவமுடைய
பேறான பாலகியைப் பெரும்புகழாய்ப் பாராட்டி
ஆறுலட்சணக்கடவுட் கனந்தவணக்கம் புரிந்தார்
பின்னாற் சிமியோனாம் பேரருட் குருட்சமுகம்
அன்னை தந்தையரதிக ஆசாரத்தோடணுகி
பாலகித் தமைவிடுத்துப் பரனாரினாலயத்திற்
சீலநற்காணிக்கையென்று தேவனுக்கொப்புக்கொடுத்து
ஆசாரியரிடத்தில் லன்பாயிரந்துநின்று
தேசுறுஞ் கிறுமிதனைச் செழித்தகன்னியர்மடத்தில்
சேர்ந்திடும்படிகேட்கச் சிமியோனெனுங்குருவும்
பார்த்திபர்கள் கோஸ்திரியை பரிந்தேற்றுக்கொண்டனர்காண
அதன்பின் சுவக்கீனும் ஆனாளுமேகுருவின்
இதம்பெறுமாசீர்வாதம் இணையில்லா ஆவலுடன்
பெற்றுநசரேத்தெனுந்தம் பிரபலியவூர்ப்பதிக்குத்
புத்திரிவிடைகேட்டுப் போய்வாழ்ந்தார் அம்மானை.

# மரியம்மாளின் சுகிர்த ஒழுக்கக் காதை

## கட்டளைக் கலித்துறை

அகிலஞ் சிறக்க அழகிய கன்னியரார் மடத்தில்
பகிரங்கமா யரும் பண்ணவர் போற்றும் பரமசெல்வி
மகிதலம் வாழ்த்து மரியாள் புரிந்த மதியொளிசால்
சுகிர்தவொழுக்கத்தை யாதெனவேயிங்கு சொல்லுவனே

## அம்மானை

செங்கதிரினார்பிரபை தேங்குகன்னியர்மடத்தில்
அங்குமரியம்மாளு மடைந்தவுடனேசெழித்த
சுகிர்தவளப்பூங்கொடியிற் றுலங்கம்பரத்தேனும்
தகைமைசெறியாறாகத் தான்பாய்ந்தேஓடிடவே
மரியென்னும் மாதரசி மங்காதகற்பரசி
சருவேசுரன்பாதந் தன்னைச் சிரத்திருத்தி
அடக்கவொடுக்கப்பத்தி யன்புநேசத்துடனே
திடத்தடுனே மன்றாடித் தேவத்திருத்தொண்டுசெய்து
நட்சத்திரக்கூட்டநடுவிலங்குஞ் சந்திரன்போல்
அக்கன்னியர் நடுவில் அம்மாள்பிரகாசம்
கொண்டுவிளங்குவதைக் குலவுமடத்தினிலே
அன்றிருந்தகன்னியர்கள் அதியசயமதாய்ப்பார்த்து
ஒருவரொருவருக்குள் உத்தமியிவளாரோ
திருஞான ஓவியமோ செல்வமடந்தையரோ
கற்புக்களஞ்சியமோ கானமருந்தேன்மலரோ
அற்புதத்தினூறணியோ அமிர்ததிருமனையோ
பரலோகவாசலோ பக்திச்சுடர்முடியோ
நரலோகர் பாக்கியமோ நறைகமழும் பூங்காவோ
விடியநட்சேஸ்திரமோ விண்ணவர்கள் ராக்கினியோ
அடியரெங்கள் தேற்றரவோ ஆனந்தவாருதியோ
வியாதிஸ்தரின்மருந்தோ மேலான உத்தமியோ
தயாதிக்கமெம்மனதிற் றந்தருளுந்தாபரமோ
தவீதரசனுப்பரியோ தங்கமயஆலயமோ
பவவாளர தேற்றரவோ பாக்கிசம் பூர்ணியோ
கன்யாசர்போதகமோ தவத்தோர்க்கு நற்பொறையோ
சன்னியர்களின்திடமோ கற்புக்கரசியரோ
தரிசியோரின்வாக்கோ தகுந்தநன்மைப்பொக்கிஷமோ
அரிதரிதுஇங்கிவளை ஆண்டவரெங்கள்மடத்தில்
வரவருளச்செய்ததெங்கள் மாதவத்தின்நற்பலனோ
திருவருளைப்பெய்கின்ற தேன்கொடியிவள்தானோ
என்றுசொல்லிஎம்பெருமான் இணையடியைத்தோத்தரித்து
அன்றுமரியம்மாளும் அனுசரித்தபுண்ணியங்கள்
கண்டுப்பாவித்தமற்றக் கன்னியர்க ளம்மடத்தில்
நன்றாக வீற்றிருந்து நாதனுக்குத்தொண்டுசெய்தார்.

# திருமணம் முடித்த காதை

## விருத்தம்

கருணையம்பரத்தியிந்தக் காசினிமாதர்க்குள்ளே
பெருமைசேர்ஞானநன்மைப் பேறுற்றுப்பிசகில்லாது
அருணலமடியோருக்கு அளிக்கின்ற மரியம்மாளும்
திருமணம் முடித்தகாதை செகத்தினிலுரைசெய்வேனே

## அம்மானை

நிரைமலையடுத்தெருசேல் சேதிமத்தைச் சேர்ந்திலங்கும்
வரையறுக்கக்கூடாத வல்லகன்னியர்மடத்தில்
பிரகாசஞானவொளி பெருக்குமரியம்மாளின்
அருளாசியோங்கி அதிகரிக்குமக்காலம்
விரத்தையாய்மன்றலின்றி வேதபரநாதனுக்குச்
சிரத்தையோடுழியத்தைச் செய்வேனென்றேவாக்கு
பண்ணியிருந்தாள் பரிசுத்தமாமரியாள்
எண்ணமதற்கேமாறாய் ஏற்றபரன்சித்தமதால்
வந்தசெயலை வழுத்திடுவேனன்புடனே
இத்தரையிலுள்ளோரே இனிதாககேட்டருளும்
சுத்தவிரத்தி சுகுணதயாபரத்தி
உத்தமிமரியாளுக் கோர்பன்னீ ராம்வயது
பொருந்தநிகழ் வேளையிலே புனிதகுருவாஞ்சிமியோன்
பெருங்கருணையால்விளங்கும் பேசரும்மரியாளை
அழைத்தேநீயெங்கள் அரியமறையின்படியே
தழைக்கமணஞ்செய்யுமென்று தானப்போ கூறலுற்றார்
அந்தமொழிகேட்டு அகத்திலிடிவீழ்ந்தாற்போல்
சிந்தைகலங்கிச் சிறந்தமரியம்மாளும்
என்னசெய்வேனீஸ்பரனே ஏற்றஅடியாள்பேதை
நுன்னுமணந்தன்னைபிந்தத் தொல்புவியிலேநானும்
செய்யேனெனவாக்குச் செய்திருந்தேன் தேசிகரும்
ஐயையோ இந்தமொழி யறையவே யென்மனமும்
தண்ணீரின் றாமரைமேற் றங்கிய நீராய்த்தளம்பும்
வண்ணமுற வுன்செயலோ வானவனே நான்பாவி
மணம்பரிதல் நல்லதோ மானிலத்திலேதுறவை
இணங்கியனுசரித்தல் ஏற்றபெரும் பாக்கியமே
அப்பா பெருஞ்சுடரே ஆறுலட்சணப்பொருளே
இப்போது என்கவலை யிடாநீக்கமாட்டாயோ
நெறியில்லாப் பாவியென்மேல் நீரிரங்குமென்றுமரி
சிறகிழந்த பட்சியைப்போற் றியங்கியே யேதுசெய்வேன்
குருமொழிக் கெதிர்மொழியுங் கூறிடவே கூடாதே
சருவெசுரன் சிந்தத் தனைப்போல்நடப்பதென்று
சிரங்குனிந்து மாமரியாள் சிமியோனெனுங்குருவைக்
கரங்குவித்து மன்றாடிக் கண்ணியநற்பத்தியுடன்
தேவரீர் வாக்கின் திருவுள மாதாம்படியே
ஆகக்கடவதென்று அப்போ துரைபகர்ந்தான்

அவ்வித நற்சம்மதியை அன்று சிமியோன்கேட்டு
செவ்வையும் யூதா சிறந்தவமிசத்திலுள்ள
ஆடவர்கள் கைக்கோ லதனோடே வாருமென்று
போடுவித்தார் பறையாற் புகன்றிட்டார் கட்டளையும்
அப்பறையி னோசையது அந்த யூதேயாவெங்கும்
சுற்றிமுழங்கிடவே யூதேய ஆடவர்கள்
புற்றீசல்போலே புறம்படச் சகோப்பளித்த
புத்திரனாஞ் சூசையப்பர் புலம்பி மிகவருந்தி
என்னசெய்வே னேதுசெய்வேன் இப்பறையின் கட்டளைக்கு
முன்மணஞ் செய்யேனெனவே முழுதாய் மனதிலுள்ளி
வாக்குறுதி பண்ணிவிட்டேன் வானபரனார்தனக்கு
கேட்க மனமஞ்சுகுதே கிளர்ந்து முரசின்தொனியை
என்று மனங்கலங்கி இட்டகட்டளைப்படிக்கு
சென்றிடாவிட்டாற் சிமியோனெனுங்குருவின்
மொழிக்கிடராகுமல்லோ முத்தருக்குமேற்காதே
வெளிப்படுவேனென்று வேதபரன் பாதமதை
மனத்திலுன்னி யவ்வேளை மாதவனாஞ் சூசையப்பர்
சனத்திரளோடவ்விடத்திற் றானுமேவந் தடைந்தார்
அப்போ தவத்தி யழகுமரியாள் தனக்கு
செப்பருமணக்கோலம் தீட்டினார் கன்னியர்கள்
ஞானமே காதணியாய் நல்லபத்தி மாலையதாய்
மோனமிகுமறியே முத்துமயிர் மாட்டியதாய்
விமரிசையே கைவளையாய் மேவுதிடமேபாதத்
தமர்சரமாய்பப்த்தி யரையொட்டியானமதாய்
தெய்வபயம்பட்டச் சிறந்தசொர்ண ஆடையதாய்
வையகத்தோர் வாழ்ந்த மங்காது பூட்டியபின்
கன்னியர் புடைசூழ கதிரொளியெங்குமெறிக்க
எண்ணிலாச் சம்மனசோர் ஏந்தியே பூவாரி
மழைபோலவே சொரிய வாழ்வுமணங்காணவென்று
இழைமாதர் ஆடவர்கள் எல்லோருங் கூடுசபை
அழைத்துவந்து தூய அன்னம்மா ளீன்றமுத்தை
இழைத்த மணப்பந்தரிலே இட்டதிரைக்குள் விடுத்தார்
அப்போதிலே சிமியோ னானகுரு வானவரும்
செப்பரும் மணத்தினுக்காய் சேர்ந்துவந்த ஆடவர்கள்
சகலர்க்கு மன்பாய்த் தக்கசுர ஆசியதை
சுகிர்தமுடனே யீர்ந்து தோத்தரித்து எம்பரனை
ஆதி தயாபரனே ஆறுலெட்சனப் பொருளே
நீதியா யெங்கும் நிறைந்தபரஞ்சுடரே
மரியம்மாளுக்கேற்ற மணவாளனாரெனவே
தெரிவுசெய்ய வேண்டுமென்று செங்கரங்குவித்து நின்றார்
அந்தட்சணமுடனே யங்குவந்து கூடினருட்
சுந்தரவானாஞ்சூசை சுகிர்தகரத்தண்டதுவும்
தளிர்த்துக் கிளையைவிட்டு தங்குநறும் வாசமலர்
செழிப்புறவே பூக்கத்திரளாயிருந்த சனர்
கண்டேயதிசயித்தார் கன்னிமரியாள் தனக்கு
அனபாகவேயேற்ற அரியமணவாளனிவர்

தானோவென்றேயவர்கள் தங்கள் மனத்துள்நினைந்து
வானபரன்பாதமதை வணங்கிநிற்கும் வேளையிலே
ஆகாப்பெனுமொருவன் அப்பேதெரிச்சல்கொண்டு
வாகாகவேபடித்த மந்திரத்தினாற் றனது
தண்டுக்கோல் பூக்கச் செய்தானதுடனே
கண்டிடவே யெல்லாருங் கருகியேபோனதுவே
அப்போ திரீத்துவத்தி னரிய மூன்றமாளாம்
தற்பரனாம் இஸ்பிரித்துச் சாந்துபுறாவடிவாய்
இறங்கிவந்து சூசையப்பர் இனியகரத் தண்டுமலர்
அரும்புங்கிளை மேலே ஆதரவாயிருந்தார்
இந்தவதியத்தை இருந்தோர்களட பார்த்ததாதி
சுந்தரதயாபரனைத் தோத்தரித்து வீழ்ந்திரைஞ்ச
சஞ்சூசையப்பர்மனந் தானே கலக்கமுற்று
நெஞ்சம் படபடத்து நீங்காத் துயரமதாய்
மன்றல் புரிபேனெனமுன் வாக்களித்து நானிருந்தேன்
இன்று மின்னாதபடி இடிவிழுந்ததன்மையொப்ப
வந்து விழுந்ததுவே மாலையென் மீதினலே
எந்தை தயாபரனே ஈதுமுறையாமோ
அந்தரித்த ஏழை அடியான் கலியாணம்
இத்தரையிற் செய்யா திருந்தால் மகாபாக்கியம்
என்று நினைத்தேனே என்நினைவுக்கே யெதிராய்
இன்றுவரவு மிருந்ததோ என்கொடுமை
ஐயையோ ஆண்டவனே அடியே னிதையிலக்கச்
செய்யவும்மா லாகாதோ சேவையுமிக்கே புரிந்து
துறவறத்தைப் பேணுவது சொற்பமோ இப்புவியின்
அறமில் லறமாமோ ஆ கொடிய கஷ்டமதே
என்று பலவாறுக எண்ணியபின் தேறியுள்ளம்
இன்றுமது சித்தமது எப்படியோ தற்பரனே
அன்றதற்கு நானும் அமைந்தே னென்றேசூசை
நன்றான தற்பரனின் நற்பதத்தைத் தோத்தரித்தார்
பின்னாற் சிமியொனாம் பேரருட்குரு அவரும்
தன் செபத்தையேற்று தவத்திமரியான் தனக்கு
ஏற்றிடுங் காதலனை ஏகநாதன் தெரிந்த
சாற்றரிய அற்புதத்தை தான்வியந்து தோத்தரித்து
ஆவலாய்ச் சூசைதனை யன்பாகவே நோக்கி
வாவென் றழைக்க வந்தவர் குருபாதம்
தெண்டனிட்டு நிற்கச் சிறந்த மரியம்மாளை
அன்றழைத் திருவரையும் ஆலயத்திலே விடுத்து
வரிவேத நன்முறையின் வழக்க பயபக்தியுடன்
திருமணத்தைக்கைப்பிடித்து தேவனுங்களுக்கு நன்மை
சொரிவாரென ஆசிசுதிர்தமுடனீந்து உங்கள்
அருமனைக்குப் போங்களென்று அன்பாயனுப்பிவிட்டார்
காவலனாஞ் சூசையரும் கன்னிமரியம்மாளும்
தேவாலயத்தைவிட்டுச் சிறந்த பயபக்தியுடன்
நசரேத்தென்னும்பதியை நண்ணியன்னை மாதாவின்
வாசமாஞ் சிறுமனையில் வாழ்ந்திருந்தார் அம்மானை

# ஈரறம்பொருத்த காதை

## விருத்தம்

சீரறம் பொருத்துஞானச் செல்வியாம் மரியம்மாளும்
பாரறத்தோர்கள்போற்றும் பரிசுத்த சூசைதானும்
பேரறமென்றுமிக்கோர் பேணாமாய்க் கைகொள்கின்ற
ஈரறம் பொருத்துகாதை இயம்பிடக் கேளீர்மாதோ

## அம்மானை

ஆயிரம் பருதியொளி யதுசிறக்கு மாட்சியைப்போல்
தூயமரியம்மாளும் சுகிர்தவரன் சூசையரும்
விளங்குநாசரேத்தூரில் மேவிய பின்னாலரிய
களங்கமறு மில்லறத்தாற் கவலையிருபேருமுற்று
மரியென்னும் மாதரசி மனதில் வருத்தமுற்றுப்
பரிவாக மன்றல்தனைப் பாவியான் செய்யாது
திடவாக் களிந்திருந்துந் தேவசித்த மிப்படியாய்
மடைபுடை குழும்பூவில் வந்து முடிந்ததுவே
கன்னிமை யழியாமற் கற்பதனைப் பேணிடவே
எண்ணி யிருந்தேனே என்னுடைய காதலனின்
மனவிருப்ப மெப்படியோ வானவனே நானறியேன்
உனதுதயை யேழையென்மெல் உற்றுச்சொரியுமென்று
சிரங்குனிந்து மன்றாடி மரியாயும் தானிருக்க
அருந்தவனாஞ் சூசையப்பர் அப்போ மனத்துயராய்
ஆறுலெட்சனக்கடலே அளவில்லா நாயகனே
தேறுதல்நீ யென்தனக்குச் சிறியோன் துறவறத்தை
அனுசரிப்பே னென்றுமுன்னே அகத்தில்நினைத்தேனெனது
மனைவிமன மெப்படியோ வானபராவுன்கிருபை
அருளைச் சொரிந்தருளும் அடியோரி லென்றிரந்து
ஒருவரொருவர்மனத் துள்ளத்தில் வாட்டரவு
கொண்டபின் மரியாயி கூறரிய பத்தாவை
தெண்டனிட்டு என்துணைாய் தெரிந்தேற்றுக் கொண்டவரே
அடியாள் துறவறத்தை யன்பாகவேபேணி
படியிலில்லறம்வெறுத்துப் பண்பாயிருப்பனென்று
ஆண்டவர்க்கு வாக்கு அளித்தேன் சிறுவயதில்
ஈண்டுமது சித்தமது எப்படியோ செப்பிடுவீர்
என்று மரியம்மா ளியம்பிடவச் சொற்கேட்டு
அன்றுதேவா மிர்த்தத்தை யருஞ்செவியு ளூற்றுதல்போல்
மாதவனாஞ் சூசையப்பர் மனது மிகமகிழ்ந்து
கோதில்லாப் பத்தினியைக் கும்பிட் டுடன்பார்த்து
அன்பான காதலியே யடியேனு மப்படியே
மன்பூவிலே நினைத்தேன் மனமிருவர்க்கொத்ததுவே

இன்று துவக்கியே யிருபேர் சகோதரராய்
நன்றாகவேபரற்கு நாமினிய தொண்டுகளைச்
செய்துவருவோமெனவே தீர்மானந் தான்முடித்து
துய்யதுறவுடனே தூயவர்கள் வாழ்நாளில்
மணமடித்தீராதிங்கள் வளர்கின்ற பங்குனியத்
தினமிருபத் தைந்தாகுந் திகதியாமன்றிரவு
நடுசாமமானதிற்பின் நல்லகன்னி மாமரியாள்
படுக்கையாலே யெழுந்து பரன்பாதந் தெண்டனிட்டு
செபிக்குமறைக்கேயேகி சிந்தைபயபக்தியுடன்
அருட்கரங்களைக்குவித்து அங்குமுழந்தாழையிட்டு
எந்தை தயாபரனை இதயத்திலேயிருத்தி
வந்தனை செய்து மன்றாடி முற்காலம்
தீர்க்கதரிசிகளாற் செப்புகின்ற ரெட்சகரும்
பார்க்கரச னாயுதிக்கும் பான்மைதனையேநினைத்து
எப்போ வரவீர் ஈடேற்ற மானிடரை
தற்பரா எங்கும் தானாக நிற்பவரே
உம்பரத்தை விட்டு உலகமதில் நீருதிக்குஞ்
செம்பவளத் தாய்தனக்குச் சிறியாளுங் கீழ்ப்பணிந்து
அடிமைவேலைபுரிய ஆளாகினானெனக்கு
மிடிமையெல்லாம் நீங்கும் மேலான பாக்கியமே
பாவியென் மனநினைவின் படியுறுமோ வென்றிரக்க
தேவுலகத்தையொப்பச் சிற்றறை பிரகாசக்
காந்திகொண்டு தானிலங்கக் கபிரியேலெங்கள்பர
வேந்தர்கோன்சம்மனசு விண்ணிருந்துடனிறங்கி
பிரியதத்தத்தாலே பூரண மரிவாழ்க
சருவேச னும்முடனே தாரணியிற் பெண்மகளே
உம்வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப்பெற் றிடுவீர்
அவருக்கு யேசுஎன்னும் பெயரிடுவீரவரும்
மேன்மை பெற்றவரென்க பேரின்பராக்கினியும்
அப்போ மனம்பதறி ஆஞ்சுதனையே நோக்கி
புருஷனையறியாத பெண்கொடியாள் பிள்ளைதனை
அருநிலத்திலெபெறுவ தாகுமோ வென்றிடவே
கர்த்தனாலுமேலாக் காரியமுமொன்றுள்ளதோ
இஸ்திரிய இஸ்பிரீத்து சாந்தின் திருநிழலால்
தேவசுத னுன்வயிற்றிற் சிறந்தகர்ப்பமாகிடுவார்
ஆவலுடன் நம்பெனவே அறைத்திடக்கபிரியேலும்
அடிமைநானுன்சித்த மாம்படியே யாவதென்று
முடிகுனிந் துரைத்துநின்றான் மோட்சதிரு ராக்கினியும்
அவ்வார்த்தையாம்படியே யம்பரன்சுதன்மரியின்
திவ்விய வுதரமதிற் சிறந்தகர்ப்பமாக்கினர்காண்.

# ஐயந்தோற்றி நீக்கிய காதை

## கட்டளைக் கலிப்பா

துய்ய மாமரி யாளுதரத்திலே
        சோதிநாதனும் கர்ப்பமதுற்றுமே
செய்ய சூலும் வளர்ந்து வரவர
        தேன்மலக்கொடி யோன்வளன் றானுமே
வையமீதினிற் கண்டு மனத்திலே
        வாட்டாவதுகொண்டு வருந்தியே
ஐயந்தோற்றியே நீங்கிய காதையை
        அறைகுவேனிந்த அம்புவியோர்களே.

## அம்மானை

மெய்ஞ்ஞான வூறனியாள் மெய்த்தவத்தி னுற்பனத்தி
அஞ்ஞானப் பேய்மாய்கை யகற்றுமரி யம்மாளின்
        உதரத்திற் றேவசுதன் உற்பவித்த நன்மகிழ்வால்
        நிதமுமே மாமரியாள் நேசபய பக்தியுடன்
அரிய தயாபரனை அன்புடனே மன்றாடி
வரவரவே கர்ப்பமது வளர்ந்து வரும் நாளையிலே
        மாதவனாஞ் சூசை மனையாளின் சூலதனை
        தானே கண்ணாற் பார்த்துத் தக்க மனமதனிற்
சந்தேகமுற்றார் தயங்கினார் மெய்வருந்தி
அந்தந்தோ ஆண்டவரே அன்புடைய காதலியும்
        கருப்பத்தின் கோலமதாய் காணுகுதே தூய்மையுறும்
        அருட்பிரசாதத்தி யப்படி யோர்மாறும்
செய்யத் துணையாள் செய்தாளென் றேநானும்
ஐயையோ எண்ணுகிலும் ஆகொடுமை ஆகிடுமே
        கற்பு விரத்தி கருணைத் தயாபரத்தி
        நற்சுகுண சீலி நாதனுக் குகந்தநங்கை
குற்றஞ்செய்வாளெனவே கொண்டால் மனநினைவு
அற்புதத்திக் கேராத அநியாயமாகுமல்லோ
        மனமே என்னைப்போட்டு வாட்டுதலுமாகிடுமோ
        கனிமாது அற்பமெனுங் களங்கமில்லாக் கன்னிகையே
என்று பலவாறாக எண்ணிநெஞ்சம் புண்ணாகி
கண்டவுடன் மாமரியைக் கண்ணீர்விட்டேயழுது
        முகத்தைத் திருப்பிக்கொண்டு முத்தனாஞ் சூசையரும்
        அகத்தில் வருத்தமுற்று அப்பாலே சொல்லுதலை
கன்னிமரி மாதாவுங் கண்டே மனங்கரைந்து
என்னருந் துணைவனையோ ஏற்றிடுமிச் சூலறிந்து
        சந்தேகத்தாற்கலங்கித் தத்தளிக்கிறார் போலும்
        எந்தை தயாபரனே ஈறுமுதில்லோனே
சிந்தைத் துயரமெல்லாந் தீரவே யிங்கிவர்க்கு
உந்தனனுக்கிரகம் உதவியே சந்தோஷ

மனத்திடனை ஈய்ந்தருளும் மங்கா மறைவிளக்கே
எனக்குறுதி நீயெனவே இரந்து செபித்தேமரியாள்
வெளியா லறையைவிட்டு வெளிக்கிடவே சூசையப்பர்
அழிவில்லாக் கன்னிகையை அங்கேறிட்டேப்பார்த்து
கண்ணீர் ததும்பக் கலக்கமிக வுண்டாக
என்செய்வே னீஸ்பரனே இந்தத் தவவிரத்தி
கற்புக்கழிவில்லாத காரண தயாபரியே
பொற்பிட்ட தூண்போற் பிரகாசமுள்ள நங்கை
கர்ப்பமெனதுடைய கண்ணுக்கு எட்டிடவே
இப்படி வருத்துகுதே என்னசெய்வே னீஸ்பரனே
இருந்தாலுலகோர்கள் ஏசிடவழியாகும்
அருங்காதலியைவிட்டு அடியேன் வனந்தனிலே
சென்றிடுதல் நல்லதெனத்தேறி மனந்தனிலே
அன்றே சயனமது அவர்கொள்ளும் வேளையிலே
பாற்கரனையொப்பப் பசுலோனெனவிருது
ஏற்றெ பிரகாச எம்பெருமான் றன்னரிய
தூதனொருவர்வந்து சூசையப்பரையெழுப்பி
பேதலிப்பேன் கொள்ளுகிறீர் பிரியவுன் மனையாளின்
உதரத்தி லாதசுதன் உற்பவித்திருக்கின்றனர்
இதுமெய் யறியுமென்று இயம்பியே சென்ற பின்பு
சட்டென விழித்தெழுந்து சற்குணவான் சூசையப்பர்
பட்சமுள்ள காதலியாள் பதத்திலே போய்விழுந்து
அழுதார் தொழுதார் அறியாமல் நான் நினைத்த
பிழையைப் பொறுத்தருளும் பேரின்ப வூறணியே
கற்புக் கணிகலமே கானமரும் பூந்தாரே
அற்பமாசில்லாத அருணோதயமொழியே
உன்மீது சந்தேகம் ஒருவாய்ப்பட அடியேன்
எண்ணியது என்குறைவு இனிய மறைவளக்கே
உமக்கடிமை நித்தமும்நான் உதரத்திலேயுதித்த
எமக்கரிய ஆண்டரே யென்பிழைகளைப்பொறுப்பீர்
என்றுமனஸ்தாபமுற்று ஏற்றிடுநற் காதலியர்க்
கன்றுநல்ல ஏவல்களையன்புடனே சூசையப்பர்
செய்து திருச்சுதனும் செகமீதிலேயுதிக்கும்
துய்யத்தினங் காணவென்று தோத்திரம் புரிந்துவந்தார்.

# எலிசபேத்தம்மாளை மினவுதலும் இரட்சகர் பிறப்புமடங்கியதுமான காதை

## விருத்தம்

நவமிகு மரியைகன்னி நற்றவ எலிசபேத்தை
யிலகிய மாடத்துக்கு ஏகியே மினவி மீண்டும்
உலகினை யிரட்சைசெய்யு மொப்பிலான்றனைப்பெத்திலேமா
தலமதி லீன்றகாதை சாற்றிடக் கேட்பீர் மாதோ.

## அம்மானை

தேனவிழும் பூங்கரத்தோன் சிறந்திடுநற் சூசையப்பர்
ஞானமரியாளுடனே நவிலரிய பக்தியுடன்
ஆண்டவரைத் தோத்தரித்து அரிய தபசுப்பண்ணி
வேண்டுதல்செய்தேவருமவ் விளங்குநல்ல நாளையிலே
பந்துமுறையாயிருந்த பக்திமிகு முத்தமத்தி
அந்த எலிசபேத்து அம்மாள் பிரசபிக்கும்
நாள்நெருங்கக் கேள்வியுற்று நடந்தேயவர்மனைக்கு
தாழ்வில்லாச் சூசையரும் தக்கமரியம்மாளும்
கிட்டுமந்தவேளையிலே கிஞ்சுகச்சொல் மாதரசி
மட்டவிழும் பூங்குழலா மந்தரு மெலிசபெத்து
கண்டுடனே யோடிவந்து கட்டிமினவி முத்தம்
அன்றுமரியம்மாளுக் கவளிடுமன்னேரமதில்
எலிசபேத்தம்மாளின் இனியவதரமதில்
நலமுறவுதித்திருந்த நச்சிறு குழந்தையதும்
அக்களிப்பாற் றுள்ளி யவள்வயிற்றி னுள்ளாக
தக்ககரங்குவித்து தாயாகும் மரியாயின்
திருவுதரத்துள்ளிருந்த தேவசுதனைத் துதிக்க
அருள்பெருக அங்கவரும் அரிய தீரக்கரத்தால்
ஆசீர்வாதமளித்து அன்னேரமீது சென்ம
மாசையகற்றிவிட்டார் வல்ல அருளப்பருக்கு
அன்னைமரியம்மாளும் அறத்தனாஞ் சூசையரும்
மின்னாளெலிசபெத்து வீட்டினிலே தானிருந்து
அவள்சிசுப் பரிகரிப்பை அன்னைகன்னி தான்பார்த்து
தவமுடையோன் சூசையப்பர் தன்னொடு நசரேத்து
என்னுந்தமதரிய இளமாட மீதுவந்து
மன்னர்பிரானைப்பணிந்து வாழ்த்தி வணங்கிவரும்
அன்னாளெரிசேலா மந்தநகராண்டிருந்த
மன்னனாஞ் சேசார் மகிடமுடியைத்தாங்கி
கோலியலுஞ் சீரியலுங் கொண்டபகைவோர்நடுங்கும்
வேலியலு மொப்பிலதாய் வீற்றிருந்தானக்கோமான்

அந்த நராதிபனும் அவரவர்கள் தான்பிறந்த
சொந்தவூர் தன்னில்வந்து தொடர்ந்துஅதிகாரி
இடமாகத் தங்கள்பெயர் இட்டேகவேணுமென்று
திடமாய்த்தன்னாளுகையின் தேச எல்லை முற்றாக
விளம்பரத்தைச் சாம்புவதனால் விட்டா னதுகேட்டு
உளம்பயந்தவரவர்கள் ஓடியே தங்களரும்
சென்மாநாட்டையடைந்து திட்டமுடன் கையெழுத்து
மன்னவனின் கட்டளைக்கு வரைந்தேகும் நாளையிலே
சூசையப்பர் தான்பிறந்த சொந்த இடமதுவும்
தேசிலங்கு பெத்திலமா சிறந்தநகரானதினால்
அரசனிட்ட கட்டளைக்கு அங்கேகியேவரும்
சிரமுடிபன் முன்பாகச் சேர்ந்துகை யெழுத்திடவே
வேணுமென்று பத்தினியாம் மெய்த்தவத்தி மாமரியாள்
ஆனவருடன்பேசி யவர்களிரு பேர்களுமாய்
நடந்து பெத்திலேநகரை நண்ணி அதிகாரி
இடங்கிட்டிக் கையெழுத்து இட்டதன்பின் பூவுலகர்
பாவ வினைநீக்கப் பண்பாயவதரித்த
தேவசுதன் பூவிற் சிறந்துதிக்கும் நாள்நெருங்கி
மரியம்மாள் சோர்ந்துமெத்த வருத்தமுறும் வேளையிலே
பிரசவநாளென்று எண்ணிப் பேசரிய சூசையப்பர்
தனதினத்தாரின்மனைக்குத் தான்சென்றிடங்கேட்க
சினமுடனே யோடிவந்து திட்டிவெளியால்விடுத்து
போடாவென்றேயவரைப் பிடித்துத் தூத்திடவே
வாடிக்கலக்கமுற்று விழிநீள மாறாக
கண்ணீர் சொரியக் கலங்கியழுதழுது
என்செய்வே னீஸ்பரனே இருபேருந் தங்குதற்கு
ஓரிடமுங் காணேனே உற்றாருங் கையைவிட்டார்
ஆருதவி யெங்களுக்கு ஆண்டவனே தஞ்சமென்று
அழுதுமுன் வரும்வழியில் அவர்கள்கண்ட வெல்லைமலை
விழுமியசாரளடுக்க மிருகங்கள் தானொடுங்கும்
குடிசையதையேதேடி கோதணுகாக கன்னிகையாம்
அடியர்க்கருள்புரியும் அன்னைமரியாளுடனே
சென்றுதங்கும் வேளையிலே தேவகன்னி மாதாவும்
அன்றுமுழந்தாழ்மடித்து ஆண்டவரைத்தோத்தரிக்க
படிகத்தினுள் வெளிச்சம் பரந்துவெளியிற்றோற்றும்
கடிகையதுவாறாக கர்த்தன் திருச்சுதனும்
அற்பனுங் கன்னிமைக்கு அங்கோர் பழுதுமின்றி
அற்புதமாகவங்கே அன்னையுதரத்தில்நின்று
பிறந்தார் பிறந்தவுடன் பிரமிக்க எல்லாரும்
துறந்த சிறுகுடிலிற் றொடர்ந்தே படுத்துறங்கும்
ஆடுடனே மாடுகளு மப்போது சத்தமிட
கேடுறு மலகையெல்லாம் கிடுகிடென் றுருண்டுடனே
நரகத்தின் மீதுவிழ நவவிலாச சபையில்
உரமுற்ற சம்மனசோர் ஒன்றாகவேகூடி

வரிசையுடனேயிறங்கி வந்தார்கள் சங்கீதம்
பரிவாகப் பாடிப் பரலோக மீதினிலே
இருபேரகம்மகிழ இவ்வுலகிற் சுத்தமனக்
கருத்துடையவர்களுமே கருதருஞ் சமாதானம்
உண்டாகுவதெனவே ஒப்பற்ற சந்தோஷ
நன்றான மங்களத்தால் நமஸ்கரிக்க அக்குடிசை
ஆயிரஞ் செங்கதிரோ னழகா யொளிவீச
பாயொளிக்குருவுடைய பண்புறுவானோனொருவன்
சென்றுபடுத்துறக்கம் செய்துடுமிடையர்களை
அன்றேகித்தீவிரமாய் அருட்டியவர்களுக்குச்
சொன்னார் பரன்சுதனார் தூயமனுவாக இந்த
மண்ணிலே யுங்களரும் மாடாடுறைகுடிலிற்
பிறந்தாருடனேகிப் பேரின்ப வீடளிக்கும்
அரும்பரனைத்தோத்தரிப்பீர் ஆயரென அவ்வேளை
அம்மொழியைக் கேட்டவுடன் அயர்ந்துறக்கமாயிருந்த
செம்மையுறுங் கோபாலர் திடுககிட்டுடனெழுந்து
பால்தயிரைக் கொண்டோடி பாலகனின் பாதமதிற்
சீலமுடன்கா ணிக்கையாய் தெண்டனிட்டுவைத்தனர்காண்
பின்னாலெட்டாம்நாளிற் பேசருந்திருவேத
நன்முறையதாம்படியே நற்குழந்தையானவர்க்கு
யேசுவென்ற நாமமதை யிட்டே கன்னிமரியும்
மாசில்லாச் சூசையுமே வாழ்ந்திருந்தாரம்மானை

# மூவரசர் ஆராதனைக் காதை

## விருத்தம்

கரவுறு கடியினத்தாற் காசினி மனுடர் தம்மை
நரகினால் மீட்பதற்கு நானிலத் துதித்த தேவை
உரமுறு புதுமீன்காட்டு முகந்தநல் வழியாய் மூன்று
அரசர் சந்தித்தகாதை யறைந்திடத் துணிந்திட்டேனே.

## அம்மானை

பேரின்ப வீடளிக்கும் பெருமான் றிருயேசு
இராச திருக்குழந்தைக் கினிய அமுதூட்டி
கன்னிமரிமாதாவும் காவலன் சூசையரும்
மின்னுபழங் கதையினால் மேனி தனைமூடி
அப்பனே யெங்க ளருமைத் திருமகனே
எப்பொருட்குங் கர்த்தாவே இகலோகர் சீமானே
பொற்சிங்கனைமீது பொருந்துமுமக் கிவ்வேளை
வைக்கோலோ மெத்தையது வாகினது கண்மணியே
ஆயிரங்கிரணவொளி யதுபோற் பிரபையது
பாய நிலவெறிக்கும் பட்டுப்பீ தாம்பரத்தைத்
தந்தவுகத்துத் தலமீது லிவ்வேளை
கந்தைத் நுணியோ கலையாக மேவினது
வடிவாரும் மோட்ச மனைக்குவதலாய் மாட்டுக்
குடிசையதுவோ உமக்குக் குளிர்ந்தமலையாகினது
செல்லச் சிறுசிரிப்புச் சேயேநீர் செய்ய இந்த
வெல்லைமலைத்தானோ விளங்குமிடமாகினது
என்றுபலவாறுசொல்லி ஏந்தியெடுத்தணைத்துக்
குன்றாப் பரஞ்சுடரைக் கொஞ்சிக் குலாவிமுத்தம்
இட்டுமகிழ்ந் தன்பாக ஏற்றியே போற்றிசெய்து
மடடில்லாப் பாலனையே வாழ்த்தி வணங்குகின்றார்
எப்பொருட்கு மீஸ்பரனாம் இகலோகர் தாதாவும்
இப்பதியிலேயுதிக்க இலங்குங் கதிர்வீசும்
பொற்பிரபை வெள்ளியொன்று புதிதாகவேதோன்றி
நற்பிரபையானதினை நானிலத்திலேநாட்டும்
என்றுமுன் தரிசியர்கள் இயம்புமந்த வாக்கதுபோல்
அன்று அந்நவமீனும் அற்புதமதாயுதிக்க
கண்டார்கள் மூவரசர் கண்டு உடனேயெழுந்து
தெண்டணிடத் தேவ திருப்பாலகன்றனையே
நால்வகைச் சயினியங்கள் நண்ணியே சூழ்ந்துவர
ஏவலர்கள் பாவலர்கள் இனிதாகவேநெருங்க
தேசுறு சபாநாட்டைச் சிறந்தரசியற்றுகின்ற
இராசன் வெலிச்சோரும் எழுந்தான் பரிமீது
செந்நெல் மலிந்திலங்குஞ் செழிப்புறு மிந்தியாவின்
மன்னவனாங் கஸ்பாறு மமர்ந்தான் ரதமீது

சாந்தம் மிகவாகித் தளைப்புறுந் தராசுநகர்
ஏந்தல் வலந்திசார் எழுந்தான் கரிமீது
இவ்விதமாய் பூவரசர் ஏற்ற படைசூழத்
திவ்விய குழந்தைதனைத் தேடியே தெண்டனிட்டு
சென்றார் புதுமீனுஞ் சிறந்தவழி காட்டிவர
அன்று எருசேல்நகரும் அடுக்க நெருங்கிடவே
அந்நகரை மேவினார் அரசர்கள்மூபேருடனே
துன்னும் புதியவெள்ளி தோற்றாதுடன்மறைய
திகிலடைந்து மன்னவர்கள் திக்கொண்றுமேயறிய
அகமதில் வெருவிநிற்க அந்நகரையாளுகின்ற
அரசனாமேரோது அவர்களிடமேயணுகிக்
கரவுகொண்டு எந்நகரைக் கள்ளமாய்க் கொள்ளைகொள்ள
வந்திடுங் கபடரென்று வலுவாய்ச் சினம்மிகுந்து
அந்தரசர் மூவர்களை யவனுமதட்டிடவே
வேந்தர்களுமேபகாந்தார் வினையரல்ல மேதினியில்
ஏந்தலாய் யூதருக் கிராசாவெனவொருவர்
பிறந்தவிடந்தேடிப் பிறப்பட்டோமன்னறிமன்னா
மறந்திகழும் வஞ்சாமுள்ள மாற்றார் நாமல்லவென்று
கூற அவர் ஏரோது கோபத்தை நெஞ்சிருத்தி
வேறொருவ னென்னையன்றி விளங்கு மெரிசேலான்
யூதர்க்கிராசனென உதித்திடவு மாகிடுமோ
ஆதலாலெல்லாம் ஆராய்ந்து பின்பார்ப்போம்
என்றுமனத்துளெண்ணி இறைவராம் மூவர்தமை
அன்னவனும் நோக்கிஅகமீது வஞ்சகத்தை
வைத்துச் சுத்தனைப்போலே வாய்ச்சாலமாகிநின்று
இத்தினத்தில் நீரேகி யேற்றசிறுகுழந்தை
தன்னையே கண்டதன்பின் தராதிபனா மென்றனக்கு
அன்னவன் பிறந்த இடம் அறிவிப்பீர் போயவரை
நானுமே கண்டிடுவேன் நற்றுத்தியம் புரிவேன்
தாணிவை ளுண்மையென்று சாற்றிவிடையளிக்கச்
சென்றார்கள் மூவரசர் எருசேலினெல்லை
அன்றுகடந் தப்பா லவரேகும்வேளையிலே
முந்தி மறைந்தவெள்ளி முன்னாகத் தோற்றிடவே
அந்தவழியாய் நடந்து அரியபெத்திலேநகரை
அடைந்து திருக்குழந்தை அற்புதமாகப்பிறந்த
இடங்கிட்டி மூவரசர் ஏறியரதங்கள்விட்டு
ஆசாரத்தோடிறங்கி யன்பாண பாலகனைப்
பூசனையதாயிரந்து போற்றிப் புகழ்ந்துபதந்
தன்னிற்பொன்தூபந் தகும்மீறை யானதுவும்
மன்னவர்கள் காணிக்கையாய் வைத்துப் பணிந்துபின்பு
செல்ல ஏரோதிடத்திற் சிந்தைதனி லெண்ணிடவே
வல்லவொரு சம்மானசு வந்து தடைப்படுத்தி
வேறுவழியாய்ப்போக விழும்பவே மூவரசர்
தேறுதல்கொண் டவ்வாக்காய்த் திரும்பியே தங்கள்பதி
சென்றே தளைத்துச் செழித்தோங்கியேயரசு
நன்றாய்ப் புரிந்துவந்தார் நாட்டமுடனம்மானை

# மாசில்லாக் குழந்தைகளைக் கொலைப்படுத்திய காதை

## கட்டளைக் கலித்துறை

நிலையது பெற்றிடும் யூதேயநாட்டினை நேர்மையின்றித்
தலையதுநானென ஆண்டவேரோதவன் றான்சினந்து
உலைமெழுகாயொப்ப உள்ளம்வருந்திட வுற்றரிய
கொலைசிறுவோரைப் புரிந்திடுகாதையைக் கூறுவேனே

## அம்மானை

கருணையங்கடலான கர்த்தனார் தன்சுதனைத்
தரிசனைப் புரியவந்த தராதிபர்கள் மூவருமே
மீண்டு வராதசெய்தி வேந்தனேரோதுமனத்
தூன்றிச் சினம்படர உக்கிரம கோபமதாய்
மந்திரிமார் தந்திரிமார் மற்றும் மதிதெளிந்த
முந்துப்பெரியோர்களையும் முறையாகவேயழைத்து
நானாண்டா வென்கோலை நண்ணிப் பிறனொருவன்
தானாளவே கொடுப்பல் தகுவதோ என் முடியும்
பெயர்ந்தவன் சிரமீது பேணமுடனேசூட
நயந்துநான் பார்திருத்தல் நன்றானதோ யூதர்
இராசனென நானிருக்க எனக்குமிஞ்சி இன்னொருவன்
பாராள லாகிடுமோ பாத்திபராம் மூவர்களும்
வாறமென்று போனார் வரவின்னும் காணவில்லை
மாறாய்ப் பிறந்தவனும் மன்னுமெந்த ஊரினிலே
உதித்திருப்பானோவறியே னுரைப்பீ ரெனக்குவந்த
விதத்தினையெல்லாமுணர்ந்து மேலோரேயென்றியம்பும்
அங்கவருட் பற்பலரும் அரசனகத்திணங்கத்
துங்கமிலா வீண்மொழிகள் சொன்னாரவர்களுக்குள்
ஏலியனென்றேயொருவன் இனியநன் மதியுடையோன்
வேலேந்தும் மன்னவனை விளித்தன்புடன் நோக்கி
அரசனே யூதருக்கு அதிபனெனவேயுதித்து
வருபவராம் மேசியா வல்லபெத்திலேமூரில்
வந்துபிறப்பாரெனவே வழுத்துந் தரிசியர்கள்
முந்துமொழி மாறமல் முன்னவனாம் மன்னவரும்
பிறந்ததற்கடையாளம் பேசருமிடையர்களும்
சிறந்திடும் மூவரசர் தெரிசனமும் வான்மீது
புதியநவ மீன்வரவும் புரவலனே கேள்வியுற்றீர்
அதிசய தயாபரானா ரப்புதல்வ னுன்னரசு

---

இம்மூன்று இராசாக்களில் ஒருவர் சந்தொம்மை அப்போஸ்தலர் கையால் ஞானஸ்தானம் பெற்றாரெனச் சரித்திரசாரியர்கள் கூறுகின்றனர். இன்னும் இவர் ஞானஸ்தானம் பெற்றபின் மேற்றிராணித்துவ பதவியடைந்து வேதம்போதித்து வேதசாட்சி மகிடம் பெற்றாரென்றுஞ் சாதிக்கின்றனர்.

பறிக்கவே வந்ததல்லப் பாரோரை ரெட்சைசெய்ய
எறிசுடராயுதித்தார் இறைஞ்சியவரைமனதில்
இருந்தினால் நன்மைவாம் எந்நாளுமே தருவார்
துருத்தீயி னுலைபோலே தூறுடையோர் பேச்சைநம்பி
வீணா யலையாதீர் வேந்தனேயென்றிடவே
கோனான் ஏரோது கோபந் தணியாமல்
முகத்தைத் திருப்பிடவே முன்னுரைத்த வீண்மொழியோர்
அகத்தைச் சமன்படுத்த அரசன் சினத்தினுக்கு
ஒத்தவண்ணமாக உரைத்திடவே வேந்தனுமே
மெத்த மனமகிழ்ந்து மேவுமென் முடிபெயர்க்கப்
பெத்திலலேக வூரிடத்துப் பிறந்தவனும் மங்கிலையாம்
இத்தினத்திற் றேடியந்த இளையோன் றனைப்பிடிக்க
ஏதுசெய்வ தென்றிடவே இழித்துத்தம் வாய்திறந்தச்
சூதுவஞ்சகர்மீண்டும் சொன்னாரிறையவனே
அரிவுன்னரசாட்சிக் கடங்குங் குடிசனர்க்குள்
இருவயதின் ஆண்குழந்தை யெல்லா மொருப்படவே
மிகக்கொடிதாய் வாளாவே வெட்டிக் கொலைப்புரிந்தால்
அகப்படுவான் வந்தபுது அரசனாம் பாலகனும்
என்றியம்ப மன்னன் எழுந்தே கொலுவில்நின்று
அன்றுகொலைச் சேவுகரை அச்சணத்திலேகூவி
உரைத்தான் முழங்கொலிபோல் ஊரெங்குமேயோடி
இரைக்காக வாளினுக்க இருவயதுக் குள்ளான
ஆண்குழந்தை முற்றினையும் அதிவிரைவிறி கொல்லுமென்று
வீண்சினம் மிகுந்த அந்த வேந்தன் மொழிப்படிக்கு
சென்றார்கள் தேடியெங்குஞ் சேவுக்குத் தீவிரமாய்
அன்று ஒரு தூதன் அதிவிரைவிலே தோன்றி
சூசை முனிவருக்குச் சொன்னார் குழந்தைதனை
இராசனேரோதை இடராய்க் கொலைப்படுத்த
தேடுகிறான் நீங்கள்கொண்டு தீவிரமாதயெசித்து
நாடியங்கே போங்களென நற்றவத்தனாம்சூசை
திடுக்கிட் டுடல்பதறித் தேவகன்னித் தாயாருடன்
எடுத்துத் திருக்குழந்தை யேசுவையுங்கொண்டிருவா்
எசித்துதேசஞ்சேர்ந்தார் இராசனின் கொலைவீரர்
சிசுக்களை வதைக்கவென்று தேடியூர் வந்தசெய்தி
அந்தயூதேயவெனும் அரும்நாடறிந்து துக்க
சந்தாபத்தாலே தாய்மாரெல்லாம்புலம்பி
ஓடுவார் கொண்டுகொண்டு ஒளிப்பார்க ளங்குமிங்கும்
தேடுங் கொலையாளர் செயல்தனைத் தெரியாமல்
அழும்பாலர் சத்தமது அங்குற்றிடுந்திசைக்கு
எழும்வேங்கை யின்சினமாய் ஏங்கியேசேவுகர்கள்
வெட்டவா ளோங்கிடவே விரைந்துதாய்மார்சிசுவைக்
கட்டிப் பிடிக்கக் கடியகொடும்மனத்தோர்
ஓங்கியவாளைத்தணியா துக்கிரமோடுவெட்ட
ஆங்குசிறு பாலகரின் அரும்மெல்லிய உடல்கள்

தரம்வேறு கால்வேறு தாய்மார் முலைகுடித்த
சிரம்வேறாய் உண்டிடும்பாற் சிந்தவாயால்வீழ
ஒருபா லிளஞ்சிசுவை ஓர்கூட்டம் கொய்துவர
மறுபாலக் குழந்தைகளை மார்போடிறுகணைத்து
கொண்டோடத் தாய்மார் கொடியர்பின்னாலோடி
அன்று பிடித்தேயிழுக்க அனையருமேதடுக்க
கண்டு சினந்தணியாக் கடிய கொலையாளர்
துன்னுங் குழந்தைகள்மேற் துட்டவர்வாளோங்கிடவே
தனையரையப்பால்விலத்தத் தாய்மார் பயோதரங்கள்
கனியுதிர்ந்தவாறாய்க் கடியாட்கேயிரையாய்
வெட்டுண்டு வீழ்ந்திடவே விதனமதைப் பாராமல்
கட்டியணைத்துக் கடிதாய்க்கொண்டோலமிட்டு
ஓடவே பின்தொடர்ந்து ஒவ்வோர் சிறுவுயிரைச்
சாடவே கொய்தெறித்தார் சண்டாளச் சேவுகர்கள்
இவ்வித கொடுங்கொலையால் பெத்திலேம் நகரமெங்கும்
செவ்விய தாமரையின் சிறந்த மலர்வாடும்
பாவனையாய்ப் பெற்றெடுத்த பாலகரையேயிழந்த
தாய்மார்கண்ணீராறாய்த் தானோடவேபுலம்பி
விழுந்தா ரழுதுருண்டு மேலெங்குமே புழுதி
அழுந்தவே வாரியெறிந் தையையோ கண்மணிகாள்
பத்துமாசஞ்சுமந்து பாருலக மீதினிலே
பெற்று அமுதீந்து பேணமுடனேவளர்த்து
முத்துவெயில் சாராமல் மோதுபணியுங்காற்றும்
சற்றேயணுகாது தாளமணிமாடமுறும்
மெத்தையின்மே லேவளர்த்தும் மெல்லிய உடல்கள்தமை
சத்துருக்கள் வாட்கிரையாய்த் தான்கொய்தெறிந்தாரோ
தித்திக்குந் தேன்கனிகாள் செல்வமுத வாயாலே
முத்து முறுவல்தமை மொழிவதினி யெக்காலம்
அழகு சவுந்தரங்கள் அன்பான புத்திரர்காள்
மழலைமொழிகேட்டு உள்ளம் மகிழ்வதினியெக்காலம்
என்று பலவாறாக ஏங்கியழுதுநொந்து
கன்றைப் பிரியவிட்ட கறவையொப்பவேகதறி
தாங்காப் பயாதிக்கத் தாலொருவி வாடிநிற்க
ஆங்கு கொலையாள ரவர்களின்வாட்கேயிரையாய்
ஏறக்குறையபப்பாலர் ஏற்க ஆறாயிரவர்
பேறான மோட்சமுடி பெற்றாருடனிறந்து
கொடுங்கோலன் மாசில்லாக் குழந்தைகளைக் கொல்லுவித்த
அடங்காத ஏரோது ஆனவனுமேமரித்த
பின்னா லெகிப்துவுக்குப் பேணமுடன் போயிருந்த
அன்னை மரியாவும் அருஞ்சூசை மாமுனியும்
தவதூதனுரைக்குத் திரும்பி நசேரேத்தூரில்
தவகுமாரனுடன் சேர்ந்தே தமதரிய
சிறியமனைமீதினிலே தேவதுத்தியம்புரிந்து
பிரியமுடன் வாழ்ந்துவந்தார் பேணமுடன் அம்மானை.

# திருகுமாரனைக் காணாது தேடிக் கண்டடைந்த காதை

## விருத்தம்

அற்புத சுகத்தியான அருத்தவ மரியம்மாளும்
பொற்புறுஞ் சூசைதானும் புதல்வனாம் யேசுதேவை
கற்பகம் வருந்தநொந்து காணுது தேடிக்கண்ட
நற்கதையதனையிங்கு நானெடுத்தோதுவேனே.

## அம்மானை

கன்னிமரி மாதாவும் காவலனாஞ் சூசையரும்
விண்ணாள் பரன்சுதனாம் விளங்குதிருப் பாலகனும்
நசரேத்தூரிற் சுகுண நற்படிப்பினைகாட்டி
திசையெட்டு மானிடர்க்குத் தெய்வீக மோட்சவழிக்
கானவொளியாயிருந்து அரிய திருக்குடும்பம்
தான்வாழு மக்காலம் தக்கதிருப் பாலனுக்குப்
பன்னீரதாம் வயதுப் பருவமது தான்நடக்கும்
அன்னாளிற் றேவா லயத்தினுக்கு அம்பரனைத்
தோத்தரிக்கச் சென்று தூயதிருக்குடும்பம்
பாத்திரமதான பய பக்தியுடன் மன்றாடித்
திரும்பினார் கோயில்விட்டுத் தமது இல்லமதற்கு
விரும்பியே செல்வதற்கு வெவ்வேறதாகவங்கு
ஆடவர்க்கும் பெண்களுக்கு மாகப் புறம்பாக
நாடத் தனித்தனியாய் நண்ணுமிரு வாயிலுண்டு
அந்த ஒழுங்குமுறை யாயிருபாலார்வகுத்த
அந்தந்த வாயில்களால் அவர்கள்வெளியாகவந்து
சென்றார்கள் முன்பின்னாய்த் திருச்சூசை மாமுனிவர்
அன்றுகன்னி மாதாவோ டரியதிருக்குழந்தை
வருவாரென்றே நினைத்து மாளிகைக்குச் சென்றிடவே
கருணைமரியம்மாளும் காவலன் சஞ்சூசையொடு
போயிருப்பாரென்று எண்ணிப் புனித பயபக்தியுடன்
ஆயதங்களின் மனையை யண்டியே பார்க்குமப்போ
தேவதிருப்பாலகனாந் தெள்ளமுதைக்காணாமல்
ஆவைமரி மாதாவும் அறத்தியாஞ் சூசையரும்
கண்ணீராறாயோடக் கலங்கியே மூன்றுதினம்
அந்நகர வீதிகளும் அடுத்தடுத்த ஊர்மனைகள்
எங்கெங்குந் தேடி இருவிழியும் நீர்சொரிய
அங்கம் பதறிடவே அழுதழுது தேடுமப்போ
மன்பதையை மீட்கவந்த வானபரனார் சுதனும்
அன்பிருக்கு மூறணியாம் அமிர்த தேவாலயத்தில்
வித்தியா பாரகரின் விளங்குஞ் சபைநடுவில்
உத்தரமாய்க் கேள்விகளுக் குகந்த வுரைகள்சொல்லி

சம்பாஷிந்தேயிருக்கத் தாயாருஞ் சூசையரும்
எப்பெருமான் ரட்சகரை ஏகியே கண்டழைத்து
தங்களில்லம் வந்தபின்பு தச்சுவேலைத் தொழிலை
துங்கமிகும் பாலகனுந் தூயதிருச் சூசையுடன்
செய்தார் கன்னிமரியுந் தேர்த்துப்பஞ்சு நூற்று தொழில்
வையமதிலேபுரிந்து வானபரனைத் துதித்து
வருமந்த நாளைபிலே மாமுனி சஞ்சூசையரும்
அருநிலத்திலே பிணியுற் றன்பபரன் மீதுவைத்து
பொறுமையுடன் செபிக்க பூரணமரியாளும்
மறுவகற்ற வந்ததிரு வானபரனார் சுதனும்
அருகினி லமர்ந்திருந்த ஆறுதலாய் வார்த்தைசொல்லி
இருவர்தம் மிடைநடுவே யெழுந்திருந்து சாய்ந்தவண்ணம்
மக்கள் செழிக்க வல்வினைகள் தாமொழிக்க
பாக்கிய மரணத்தை பரிபாகவேயடைந்து
இவ்வுலகுக்கே யொளியாய் ஏற்ற திருச்சூசையப்பர்
செவ்வையுறு நற்வரத்தாற் செழித்தனர்காண் அம்மானை.

# திருக்குமாரனின் இரட்சணியமும் மரியம்மாளின் திருமணமும் அடக்கமுமான காதை

## கட்டளைக் கலிப்பா

மண்ணுலாவு மனுடர் பவத்தினை
　　மாற்ற யேசு மகிமைத் தயாபரன்
எண்ணில்லாவிடர் பட்டு மரித்துயிர்
　　தேற்ற ரெட்சண்யமானதை யீந்ததும்
அன்னைமாமரியாள் மரணித்ததும்
　　அடக்கமே திருக்காயத்தைச் செய்ததும்
இன்னாவாறெனவே யுலகோர்களுக்
　　கேற்க யானு மியம்பிடுவேனிதோ

## அம்மானை

அற்புத தயாபரியாம் அன்னைமரி மாதாவும்
தற்பரனும் யேசுநாதர் தாமுஞ் சுகிர்ந்தநெறிப்
　　படிப்பினையை மானிடர்க்குப் பயிற்றிவரு மந்நாளில்
　　கடிக்குல வினையில்நின்று காசினியை ரெட்சைசெய்ய
ஏற்ற முப்பதாம்வயதில் யேசுபெருமானும்
சாற்றரிய பன்னிரண்டு தக்கநல்ல சீஷர்களைத்
　　தெரிந்து திருவேதமதைச் செகத்துள்ளோர்கேயோதி
　　பெரும்பிணியோர்பேய்பிடித்தோர் பெரும்பாடுடன் திமிரால்
வருந்துவோர் சப்பாணர் வாய்பேசார் குஷ்டர்விழி
யரும் பார்வையற்றவர்க ளானோர் பிணிதவிர்த்து
　　இறந்தவரையு மெழுப்பி யிவ்வுலக மீதினிலே
　　அறவோங்குந்தேவசுத னாமெனவே யொப்புவித்து
ஈனகொடு யூதரினால் எமக்காகவே மரித்து
மானிலத்தில் மூன்றாம்நாள் மரித்தோரில் நின்றுயிர்த்து
　　நாற்பதுநாள் சீஷருக்கு நற்றாயாரானவர்க்கும்
　　ஏற்ற தரிசனைகள் இனிதாகவே கொடுத்துப்
பரலோகத்துக்கேறிப் பத்தாம்நாள் இஸ்பிரித்து
சருவேசுரன் றனையே தரணியுளர்க்கே திடமாய்
　　அனுப்பிக் கொடும்பவத்தால் ஆதரையை மீட்டிரட்சை
　　மனுக்குலத்தோர்க்கீந்து மங்காத் திருமோஷ
வாழ்வுதமையளித்தார் வல்லபரனார் யேசும்
தாழ்வில்லாதங்கவர்பொற் றாழ்துதிப்பீர் மானிடரே
　　இவ்வித நன்மைபுரிந்த ஏசு சுதன்தாயான
　　திவ்வியமரியாயி செகத்திலே சீஷருக்கும்
மற்றுஞ் சகலருக்கும் மாதாவொப்ப விருந்து
உற்றிடுந்துன்பதுயர்கட் கோரரிய ஆறுதலாய்

நல்லவழிகாட்டி நற்சுதனிடம்போக
அல்லும் பகலும் அழுதேமன்றாடிடுவார்
இந்த மன்றாட்டினையே இனியமகனார்கேட்டு
அந்தமுள்ள தூதனையே அரியதிருத் தாயான
கன்னிமரியம்மாள்முன் கடிதாகவேயனுப்பி
தன்னிடம் வரவேற்ற சந்தோஷ வார்த்தைகளை
சொல்லுவித்தாரங்கதற்பின் தூயமரியம்மாளும்
அல்லலில்லாதவய தறுபத்தாறானதிலே
ஆஞ்சுகள் புடைசூழ அரிய மகனார்கரத்தில்
வாஞ்சைகொண்டு மாதாவும் மதிக்கருந் தம்மாத்துமத்தை
ஒப்புவித்துப் பாக்கியமாய் உசிதமுறு நன்மரணம்
முப்புவனமுந்துதிக்க முறையாயடைந்ததற்பின்
திருத்தேக மாசந்தியிற் சீஷர்கள் வைத்தேயழுது
அருட்பிரசாதத்தினை யடக்கமது செய்யவென்று
கொண்டேகுமவ்வேளை கொடியவொரு யூதன்
கண்டுவந்து ஆசந்தியிற் கைப்போட்டுப் போகாமல்
மறித்தானாசந்தியொடு வஞ்சனவன் கையுமொட்ட
குறித்தமனமீது துக்கங் கொண்டழுது பேதுருவை
மன்றாட ஓட்டுகர மானது விடுக்கநவம்
அன்று அவர்புரிய வதன்பின் னாசந்தியவன்
தன்தோள் கொடுத்து தயவாகவே சுமந்து
நன்றோடவன் தோட்டமதில் நாடிமுன்பு கட்டவைத்து
புதியகல்லறையதனிற் பொன்னுலக வீஸ்பரியாள்
அதிசய கிர்பாகரத்தி அனைவருக்கும் தஞ்சமுள்ள
ஆவைமரித்தாய்தேகம் அதிக பயபக்தியுடன்
பூமதானம் புரிந்தார் போற்றிடவே அம்மானை.

# மரியம்மாள் மோட்ஷத்துக்கேடுபடலும் பரலோக பூலோக இராச ஈஸ்வரியாக முடிசூட்டப்படுதலுமாகிய காதை

## விருத்தம்

நறை கமழ் கற்புநாரி நாயகி மரியம்மாளின்
அறைவதற் கருநற்றேகம் அடக்கமே செய்த பின்னால்
இறைவியாற்றுமதேகத்தோ டெழுந்துபோய்ப்பரலொகத்தில்
உறை திருமுடியையேற்ற வுயர்கதை யுரைசெல்வேனே

## அம்மானை

கருணைக் கடலாகுங் கர்த்தனார் தாயான
திருமரியாள் தேகமதைச் சிறப்பாயடக்கமது
செய்துவிட்டகன்றபின்னாற் றேவன்னைபூவைவிட்டு
தூய்யான்ம தேகமொடு சுகிர்தநற் பரலோகத்
தம்மருவாதியாக அவரேறும் வேளையிலே
சம்மனசோர் விணையிசைச் சங்கீதம் பாடிவர
சந்திரன்பாதச்செருப்பாய்த் தாழில்வந்து தான்சேர
அந்தமிகுஞ் சூரியனும் ஆடையாய் மேலிலுற
ஈராறு மீன்முடியா யிலங்குசிரம் வந்தணைய
நேராருந் தாய்மரியாள் நித்தியநன் மோட்ஷதலம்
உற்றிடப் பிதாச்சுதனோ டுகந்திஸ்பிரித்துசாந்து
தற்பரர் பத்திராசனத்திற் றாமே திருமரியை
பரிவாகவேயிருத்திப் பரலோக பூலோக
அரசியென மோட்ஷமுடி அப்போது சூட்டினார்காண்
இகலோகர்களுக்காகவென்றும் இனிய தமதரிய
மகனாரிடமிரந்து மன்றாடி யெங்களையே
மோட்சகரை சேர்ப்பதற்கு முழுநேச ஆவலுடன்
தாட்சியுறுந் தாயாருந் தான்வேண்டியேவருவார்
இத்தகுங் கன்னிமரியாள் இனியதிருப் பாதமதைப்
பக்தியுடன் வேண்டிடுவோர் பாழ்நகரகில் வீழாமல்
துன்பமிடிமையற்றுச் சுகிர்தமுறும் மோட்சமதை
எம்பெருமாட்டியவர் ஏற்றநற்சகாயமதால்
அடைவார்கள் உண்மைமொழி யம்பரியவர்தனக்கு
திடமான காரணப்பேர் சிலதையிங்கு செப்பிடுவேன்
அத்தாயடைக்கலத்தை யண்டினரைத் தேற்றினதால்
இத்தலத் தடைக்கலத்தா யென்றநாமத்தாலும்
இதமாக அற்புதங்கள் இகத்தில் புரிதல்பற்றிப்
புதுமைமாதாவெனவே பொருந்துநாமத்தாலும்
பத்திமையா யுத்தரியம் படியோர்க் கருளியதால்
உத்தரிய மாதாவென் றுகந்தநாமத்தாலும்

தீராத நோயுள்ளவர்க்குத் தேற்றிச் சுகங்கொடுத்து
பாருலகில் நல்வாழ்வு பாலிக்க என்றுமென்றும்
நேராகவைத்ததினால் நேசபயபக்திகொண்டு
ஆரோக்கியமாதா ஆனநாமமதாலும்
ஓடுகின்ற கப்பல் உருக்கல்கடல் மீது அக்கப்
பாடுபடும்நேரம் பக்திமையாய்க் கைதூக்கி
சாந்தமாய் விட்டதினால் தாரணியின் மீதுகப்பல்
ஏந்தியமாதாவென்ற இனிய நாமத்தாலும்
லூர்துமலைக்கெபியி லுகந்த தரிசனத்தைச்
சீராரும் பெர்னதெத்து சிறிய ஒரு பெண்மணிக்கு
ஆதரவாயீய்ந்ததினால் அன்பாகிய லூர்து
மாதாவென்ற இனிய வல்ல நாமத்தாலும்
பரலோகத் தேகான்மா சுடரொழியாய்ச் சென்றதினால்
பரலோகத் தாயெனவே பகருநாமத்தாலும்
இன்னுமின்னுமத்தாயார் இயற்றுகின்ற காரணத்தால்
மண்ணுலகோ ர்.துபற்றி வணங்கிவருவர்நிதம்
எல்லா நன்மைப்பெயரால் ஏற்றித் துதிப்பவர்க்கும்
நல்லூறணிசொரிவார் நாயகிபுவிக்களித்த
செபமாலை கையேந்திச் செபமாலைத் தாயெனவே
தவமுடையாளத்துதிக்கில் நானிலத்தின் மீதினிலே
அவலமொன்றுஞ் சாராமல் அழல்நரகில் வீழாமல்
தவமுடையாள் காப்பாற்றிச் சடுதிமரணமின்றி
நன்மரணமேயளித்து நற்கரத்தாற் கைதூக்கிப்
பொன்னுலகஞ் சேர்ந்திடுவாள் பூரணியறிந்துகொள்ளும்
இப்படியாய் நன்மைசெய்ய ஏற்றவரமடைந்த
செப்பரியதாயின் செபமாலையால்நடந்த
அற்புதங்களிற்சிலதை யறிந்துமடியோர்துதிக்கச்
செப்பிடுவேன் கேட்டருளுஞ் செகமீதில் அம்மானை.

# பதினாயிரஞ் செபமாலைகளைப் பறிபித்த ஒருவன்மீது பதினையாயிரம் பிசாசுக்கள் ஏறிய அற்புதக் காதை

## விருத்தம்

கதியுறு ஞானசோதித் காருண்ய செபமாலைத்தாய்
நீதியென ஓதத்தந்த நீள்சோதித்தார்கள் தம்மைப்
பதியினிற் பறிப்பித்தோன்மேற் பதினையாயிரம்பே யுற்ற
அதிசய காதைதன்னை அறைக்குவேனறியத்தானே.

## அம்மானை

நற்றயாளகுணத்தி நாயகி மரியாயி
பொற்புலவு மிப்புவியோர் போற்றித் தமைத்துதிக்க
சாமிநாதரெனவே சாற்றும் முனிவழியாய்
பூமீதி லுள்ளவர்க்குப் புனித செபமாலைப்
பக்தியுறுஞ்சபையைப் பரிவாகவேற்படுத்தி
அத்தகுமுனிவரதை யாரம்பஞ் செய்நாளிற்
கற்கசோனென்று களறுகின்ற ஓர்நகரில்
அற்புதச் செபமாலை யம்மாளின் பேராலோர்
தேவாலயமியற்றித் திருநாளைக் கொண்டாடிப்
பூவாசிகள்குழப் பொன்னுலக ஈஸ்பரியை
அரிய ரதத்தேற்றி யந்நகர வீதிசுற்றி
வருமந்த வேளையிலே மகாதுஷ்ட ஓர்ப்பதிதன்
இந்திரசாலன் இடருடைய பொல்லாத
மந்திரிவாதியவன் வர்மம்மிகவுமுற்று
தன்தூதரையனுப்பித் தானச் சபைக்குடையோர்
அன்புடன் செபித்துவந்த அரியநற் செபமாலை
எல்லாம் பறித்துடனே யென்முன்பு வாருமென்று
சொல்லியனுப்பிவிடத் தூதுவருமங்கேகி
விசுவாசிகள் செபித்த விளங்குசெபமாலைகளை
உசிதமின்றி வல்வந்தமா யுடனே பறித்தோடி
செபமாலைத் தாயாரைச் சிறப்பாக வைத்திருந்த
நவமிகு ரதத்தின்கிட்ட நண்ணவே வீழ்ந்தெழுந்து
பறித்தசெபமாலைகளும் பகிடியாய்க் கொண்டேகி
நெறிக்குணமில்லாத அந்தநெட்டூர வஞ்சகனாம்
இந்திரசாலனிடம் ஏகிக் கொடுத்திடவே
மந்திரவாதியவன் மகாமகிட்சிட்சியாயிருந்தான்
இச்செய்தி முற்றினையும் ஏகிக் கிறீஸ்தவர்கள்
உச்சித திமிங்குமுன்னா யுரைத்திடவே யங்கவரும்
இந்திரசாலனிடம் ஏகியே புத்திமதி
நந்தயவதாயியம்ப நச்சரவம் போற்சீறி

அவர்மொழியைக் கேளாது அச்சபையினையழிக்கத்
தவமிலா வப்பதிதன் றானே முயன்றெழுந்து
மடையொன்று தான்பரவி வன்னிநகரப்பேய்கள்
தடையற்றுவந்துதவி தனக்குச்செய்யவேயழைக்க
அதியுக்கிராமமுடன் அலகைகள் வெறிநாய்போல்
இதமில்லாக் கூச்சல்வைத் தெழுந்தோடியேவிரைவாய்
வந்தவர் மேலிற்புகவே வஞ்சநெஞ்சனான அந்த
மந்திரவாதியவன் மகாகடும் விசராகி
கைகால்களைக்கடிக்கக் கண்டவனின் தூதுவர்கள்
செய்யங்கரங் கால்களுக்குச் சிக்கெனத்துலங்கையிட்டு
சாமிநாதரெனவே சாற்றும் பெயருடைய
மாமுனி திமீங்கிடமாய் வல்வந்தாயிழுத்துக்
கொண்டுபோய் விட்டிடவே கூளிகளெல்லாமலறி
அன்றவரை மன்றாட அம்முனிவர் தான்பார்த்து
இந்திராசா னெனு மிவனிடத்தில் நீங்களுமே
வந்தவிதமேதெனவே வழுத்தினாற் போவதற்கு
விடுவேனென்றேயியம்ப வேகமுட னங்கவன்மேற்
றொடுகூனிகள்தமக்குள் துட்ட முதன்மையுள்ள
பூதநாதன்றானும் புங்குமன வேகமுடன்
ஓதலுற்றா னவ்வேளை யுசிதமுள்ள மாமுனிக்கு
என்பெயரே சுக்கிரேந்திரன் என்னுடனிடருடைய
அன்பிலா வஞ்சகுண ஆசீமூதேவியனும்
ஊத்தைகுடியன் உதிரமா காளியனும்
ஆற்றுமக்கேடுவிழைக்கு மடங்காச் சனியனின்னும்
ஐந்துகரமுடையோன் ஆட்டுத்தலையுடையோன்
சந்துக் கொழுப்புடையோன் சடைகள்விரித்தானும்
ஐயனார் காடேறி ஆகூகருமுலக்கைக்
கையனார் பொம்மனெரி காத்தவிராயனுடன்
பண்டித் தலையானும் பனைப்பருமக் காலானும்
குண்டிக்கொழுப்பானும் கொள்ளிவாய்ப்பேயானும்
கந்தையைத் தூக்கியனும் கருவாட்டு மூஞ்சியனும்
பந்துமுழியானும் பத்துமுழப் பல்லானும்
அடலை வயிரவனும் சுணங்கன் நிறத்தானும்
கடலைப்பொரி வாயானுங் கள்ளுமட்டிக்காத்தானும்
ஆல்புவி யடியானும் அடுத்துக்கெடுப்பானும்
சாலுமுனியாண்டியனும் சாராயத் தொந்தியனும்
அந்திப்பே யாயிரமும் அடுவல்பேயாயிரமும்
குந்திப்பேய் ஆயிரமும் கூத்தாடியாயிரமும்
கட்டைப்பேயாயிரமும் கழுதைப்பேயாயிரமும்
மொட்டைப்பேயாயிரமும் மூளிப்பேயாயிரமும்
ஊமைப்பேயாயிரமும் உழுந்துப்பேயாயிரமும்
சாமப்பேயாயிரமும் சகலவித பேய்களுமாய்
பதினையாயிரம்வரையிற் பறித்திவனதம்புரிந்த
இதமிகுஞ் செபமாலைக்கேற்ற கணக்கான

அத்தொகைப் பிசாசுகள்நாம் ஆண்டவன்றிருவுரைக்கு
துட்டனிவனிற்புகுந்தோம் சுகிர்தமுறும் மாமுனியே
நீரே விடையளிக்கில் நிட்டூரனாமிவனைப்
பாரிலே கொன்றிடுவோம் பார்த்திபனேயென்றியம்ப
அப்போ திமீங்குமுனி யருளினார் கூளிகட்கு
இப்போதிவனுக்கொரு இடரும்நீர் செய்யாதீர்
என்றே யனலெரிதீ யீனமுள்ள கூனிகளும்
அன்றவன் றணைவிட்டு அகலச் செபமாலை
அம்மாளை மன்றாட அத்தாயார் சம்மனசோர்
செம்மையுறும்படையிற் சேர்ந்துறவே விண்ணிருந்து
இறங்கவே கூளியெல்லா மேங்கியே சத்தமிட
அறம்பொருந்து மாமுனிவர் அப்போசெபமாலை
மந்திரத்தையோதி வழுத்தோர் பிரியதத்த
அந்தந்த வார்த்தைகட்கு அக்கினிப் பொறியாக
கண்காது வாய்மூக்காற் கடிதாகவேயகன்று
மண்பூவின் மீதிலந்த மந்திரவானாம்பதிதன்
நற்சுகத்தினையடைந்து நாயகிபாதந்தொழுதித்
தற்பரி மகன்வேதந் தன்னிலே சேர்ந்தனன்காண்
இந்ததிசயந்தனையே இகந்துள்ளளோர் தாம்கேட்டு
அந்தச் செபமாலை யரியசபையானதிலே
மென்மேலும்சேர்த்து மேலாக வேரூன்றி
இந்நிலத்திலே யசையா ஏற்ற பெருவிருட்சம்
ஆகித்தளைத்தோங்கி அலகைகளையேவதைக்கும்
வாகுற்ற ஆயுதமாய் வளருகின்ற தம்மானை.

# இரு வறிய குமர்களுக்குப் பூமுடி சூட்டியகாதை

## கட்டளைக் கலித்துறை

நெறிதிகழ்கற் செபமாலையை யன்புடன் நீணிலத்திற்
பிறியத்துடன்செபித் திட்டகைம்பெண்ணொரு பேதைமக்கள்
எறிசுடர்க் கற்பினைக் காத்திடப் பூமுடி செண்டுதலை
செறிவுற மாமரி செய்திட்ட காதையைச் செப்புவனே

## அம்மானை

செயசீல யேசுபரன் திருவேதமே செழிக்கும்
ஐரோப்பா வக்கரையி லதிக எளிமைகொண்ட
கைம்பெண்ணொருபேதை காசினியி லீன்றவிரு
பெண்மக்கள் தம்முடனே பெரிய மிடிமையுற்று
உண்ண உடுக்கவழிக் கொருகெதியுமில்லாமல்
அன்னையவள் கூலிக்கு அங்கிங்கு வேலைசெய்து
கொண்டுவருந் தானியத்தாற் குவலையத்திலோர்நேரம்
தெண்டிமையாய்த் தங்கள்பசி தீருதற்குப் பற்றாமல்
கங்சியாய்ச் சோறாய்க் காய்ச்சியே யுண்டவர்கள்
சஞ்சலமாகிச்சிலநாட் தாங்காத பட்டினியும்
கிடந்தென்புந் தோலாகி கிட்டாததாலசனம்
உலர்ந்தொட்டித் தேகமிக ஒறுத்தல்கொண்டு வாடிவரும்
நாளையிலே யவ்விதவை நாரியிரு மக்களுடன்
ஏழையோர் தங்களுக்கு ஏற்ற அடைக்கலமாய்
உள்ளமரித் தாயாரின் உசிததிருக் கோவில்சென்று
பிள்ளைகள் தம்முடனே பேரின்ப நன்மையுள்ளாள்
சுரூபத்தை முட்டிட்டுத் தோத்தரித்து மன்றாடி
ஆருதவி ஆண்டவனே அடியாள் பரதேசி
என்குமர்களுக்கும் எனக்கும் நீர் தஞ்சமல்லாமல்
மண்புவியில் வேறுதவி மாதாவே காணவில்லை
என்றிரந் தழுது கொண்டு எடுத்துச்செபமாலைகரம்
அன்றுபிடித்தேயோதி அவளுமவள் மக்களுமாய்
வருவது வழக்கமன்னை மாமரியாள்முன்தினமும்
திருவிழி திருப்பியிவர் செய்செபத்தைக்கேட்டிரங்கி
அன்னைசெபமாலையம்மாள் அருளாலோர் வர்த்தகனும்
மண்ணிலவ் வெளியவர்கள் மனையினுக்கு வந்துண்டு
உங்கள் தகப்பனிடத் துற்றுமுன்நாள் பட்டகடன்
தங்கவிராகன் நூறு தாமிதோ ஏருமென்று
கொடுத்தவனும் போனபின்னால் கோதையிவ்விதவையதை
எடுத்துத் தன் மக்களுக்கு ஏற்ற நல்ல பூஷணங்கள்
தம்முடனுடுப்புகளுந் தாம்செய்து போடல்கண்டு
அம்மானிலப்பெண்கள் அதிக பொறாமை கொண்டு
பரஇஸ்திரித்தொழிலாற் பாவையவ்விருகுருமர்கள்
திரவியங்கள் பெற்றிவைகள் செய்தாரென்றேசிரித்து

ஆவலாதியுரைத்து அக்குமர்களையேச
பூவையவ்விருவர்நொந்து புலம்பியழுதுகொண்டு
சென்மபவமில்லாமற் தேவதாய் உற்பவித்த
நன்மையுந்திருநாள் நடக்குமன்றையதினத்தில்
கோயிலுக்குச் சென்றழுது கும்பிட்டு மன்றாடித்
தாயேயுன்சன்னிதியிற் றமியோர் செபமாலை
ஓதிவந்ததற்காய்நீர் உள்ளத்திரங்கியெங்கள்
தாதையிடம் பட்டகடன் தானொருவர் கொண்டுவந்து
தந்திடநீர் செய்த இந்தச் சட்டையுடுபுடவை
அந்தரித்த நாம்வாங்கி யணிந்தன்றன்றோசீவனம்
தின்றுவரக் கண்டு எமைத்தீட்டியே வேசித்தொழில்
கண்டகண்ட பேருடனே கடுகிப் புரிபணத்தால்
இப்படியே வந்ததென்று இவ்வூருப் பெண்களெல்லாம்
செப்பருந்தாயேயெமக்குத் தீராதமானபங்கஞ்
செய்யுறா ரெம்மாலித் தீதுடைய நிந்தைகளை
ஐயையோ சற்றும்நாம் ஆதரையிற் தாங்குதற்கு
ஏலுதில்லை நீரிங்கி எளிய குமரெங்களுக்கு
சீலதுணைசெய்தருளுஞ் செபமாலைத் தாயெனவே
இரந்தவர்களுங்கேட்க எல்லாரும் பார்த்திருக்க
வரந்தருங்கிருபையுள்ள மாதா அருளாலே
அந்தரத்திருந்திறங்கி அணியணியாய் ரெண்டுமூடி
சுந்தரதக் குமர்கள்தலை சூழ்ந்துவந்து நின்றிடவே
அவ்வேளையோர்சத்தம் ஆகாயமிதிருந்து
செவ்வையுறுமிக் குமர்கள் சிறந்த கற்புறுநெறிக்காய்
இப்பூமுடி புனைந்த தென்று தொனித்திடவே
அப்போதக் கோயிலுற்றோர் அஞ்சியதிசயித்து
தாங்களறியாதுசெய்த தவறுகளையே பொறுக்க
மாங்குயிலா ரக்குமர்கள் மலர்பதத்தில் வந்துநின்று
மன்னிப்புக்கேட்டு மாதா செபமாலைக்
கன்னிசெய்த அற்புதத்தைக் காசினியெங்குமறிய
வெளிப்படுத்தி அத்தாயில் மேலானபக்தி வைத்து
ஒழுக்கமுடன் வாழ்ந்து வந்தாருசிதமுறவ் வீர்குமர்கள்
தம்மையன்நகர்த் தலைவன் தானழைத்தக்கொண்டேகி
செம்மையுறுங் கன்னியர்கள் சிறந்த மடத்துட்படுத்தி
அதிலிருந்து அன்புதர்ம அடக்க பயபக்தியுடன்
நிதமும் நடந்தொழுகி நேராக நன்மரணம்
அடைந்தார்களென்றன்னை அற்புத வரலாற்றின்
திடம்பெறாசாரியருந் தீட்டிவைத்தார் அம்மானை.

# தற்கொலை செய்திறந்த
# ஒரு துரையின் மனைவியை உயிர்ப்பித்த காதை

## விருத்தம்

அற்புதச் செப மாலைகை யேந்திய
நற்துரை யொரு வன்மனை யாளுமே
தற்கொலை செய்திறந்து மவளுயிர்
பெற்ற காதையைப் பேசிடு வேனிதோ

## அம்மானை

நித்திலந் தவளுசிப்பி நிறைந்தகடல் சுற்றுபெரும்
உத்திராதி ராட்சியத்தில் ஓர் துரைமகன்தானும்
செபமாலைத் தாய்பேரில் தீராதபக்திகொண்டு
தவமாலையாலேயத் தாயாரைத் தோத்தரித்து
தன்னுடை யரண்மனைக்குச் சற்றுப்பிறம்பாயோர்
சின்னக் குடிசையது செய்து அந்தத் தாயார்திருச்
சுருபமொன் றதனைவைத்தது சுகுணபயபக்தியுடன்
நேராகத்தினந்தினமும் நேசகன்னித் தாயார் முன்பு
செபமாலையாலே செபம் புரிந்து அத்துரையும்
தவமரியாள் பாதமதை நம்பிப் பணிந்துவந்தான்
இப்படியாய்த் துரையும் இராமாறுவேளையிலும்
அப்பரம கன்னியரின் அடைக்கலத்தையே வேண்ட
அச்சிறிய கோயிலுக்கு அவன்போய்ச் செபமாலை
உச்சித நற்பத்தியுடன் ஓதிவருவதுண்டு
இந்த வழக்கமதாய் ஏகுவதை அங்கவனின்
சொந்த மனையாள் சுகிர்தமென்று பாராமல்
பரஇஸ்திரிச் சோரம் பண்ணுகிற னென்றவளும்
வரவு மனதில்வைத்துக் காதலனும் வந்தவுடன்
என்நேசமல்லாமல் இன்னுமொரு ஸ்திரியின்
தன்நேசபாசமது தானுமக்கு உண்டிலையோ
சொல்லுமென்று கேட்டிடவே துரைமனைவியைப்பார்த்து
எல்லா உலகபெண்கட் கேமகிமை மேலாகப்
பூண்டவொரு கன்னியிலே பொருந்துநேசம்வைத்தல்
வாண்டவளிடம்போற தறியுமிது உண்மையென்று
கூறத்துரை கேட்டு அந்தக் கோதை விளங்காமல்
மாறுசெய்கிறானெனவே மனதிற் கரவுவைத்து
வருமந்த நாளொருநாள் மனைவியுந் துரைதானும்
இரவிற் சயனமுற்று இருக்குந்நேரத்தில்நடுச்
சாமமதன் பின்னாகச் சட்டென எழுந்துதுரை
தாமதங்களில்லாமற் றக்கதிருத் தாயாரைத்

தோத்திரிக்கக் கோவிலுக்குத் துரிதமுடன் போகிடவே
ஆத்திரமுற் றங்கவளும் அச்சணத்திலேயெழும்பி
முன்புகொண்ட வீண்நினைவால் மொய்குழல் கணவனிலே
அன்புடைய கோபமுற்று மாதெனையே விட்டவனும்
வேற்றுமுகம்பார்க்க வெளிப்பட்டா னிங்குமனம்
ஆறியிருப்பேனோ அல்லாதானோடுறவு
என்னத்துக்கென்று எந்திழையுங் கத்திக்கொண்டு
தன்கழுத்தைக் குத்தித் தற்கொலைசெய்தேயிறந்தாள்
இவ்விதம் மனைவியவ ளிறந்தசெய்தி தானறியா
தவ்விராவிற்றேவ அன்னைமுன் செபமாலை
ஒதவே சென்றதுரை உசிதமுடனே செபத்தை
மாதாயவுடன்முடித்து வந்துதனதறையின்
கட்டிலின்மேற் கையைவைக்க கசிந்தீரமாய்த்தோற்ற
சட்னெவே விளக்கைத் தானவன் கொளுத்திவந்து
பார்க்குமந்த வேளையிற்றன் பாரியும் பிணமாக
ஊற்றுண்டிரத்தவெள்ளம் ஓடிக்கிடக்கல்கண்டு
அத்தனமவனறையை யங்கொருவர் போகாமல்
மெத்தப்பெலனாய்ப்பூட்டி விரைவாகக் கோவில்சென்று
அழுதான் விழுதான் ஆண்டவனின் பாதமலர்
தொழுதான் தொழுதுகண்ணீர் தோய ஆறாய்த்தரையில்
ஐயையோ தாயாரே அணியாயமாய்மனைவி
வெய்ய கரவுவைத்து வினைமோசஞ் செய்தாளே
உய்வதினியேது உன்துணையதல்லாமல்
வையகத்திற்றப்ப வழியெனக்கு ஒன்றுமில்லை
அரசாட்சியாரறிந்தால் அக்கொலைதனைப்புரிந்த
கரவுடையோனென்றெனக்கே கடும்வதைகள் செய்வார்கள்
உம்மைநான் தோத்தரிக்க ஒவ்வோரிரவினிலும்
அம்மணியே வாறதினால் ஐயோ என்பெண்சாதி
சந்தேகமுற்றுத் தற்கொலைபுரிந்தாளே
இந்தக் கொலையால் ஏந்திழையாள் ஆத்துமமும்
நரகத்தில் வீழாமல் நாயகியுமதுதிருக்
கரமுற்ற பாலகனைக் கையெடுத்து மன்றாடி
அந்தரித்த இவ்வேளை யடியானுக்கேயுதவி
தந்தருளுமென்று தயவாயிரக்குமப்போ
அந்தத் துரையின் அரியமனையாள் தானும்
எந்தை செபமாலை இராக்கினி புதுமையதால்
உயிர்த்தெழுந்தறைக்குள்நின்று உரத்தசத்தமாய்த்தனது
நயசுகுண காதலனை நட்பாகக் கூப்பிடவே
ஊழியக்காரிகேட்டு உடனோடி வந்திந்த
வேளையென்ன வேண்டுமென்று வினவத் துரைசாணி
சொன்னாள் கணவனோடு தூயசெபமே புரிய
அன்னைமரி கோயிலுக்கு அடியாள்தான் வாறதற்கு
கதவினைவந்தேதிறக்க காதலனுக்கோதுமென
நிதஊழியக்காரி நிமிஷத்திலேயோடி

இந்தவர லாறதனை யியம்பத் துரையவனும்
அந்தப்பணிவிடையா ளானவளையேநோக்கி
மீண்டுமே நீயேகி மெல்லியவளென்மனைவி
தன்தானோ என்னைவரச் சாற்றினதென்று நல்லாய்ப்
பார்த்துவாவென்றுசொல்லப் பணிவிடைக்காரியேகி
சாற்றினாள் வந்துமது தையலவளாமெனவே
கேட்டுத் துரையெழுந்து கிருபையுள்ள ராக்கினியின்
நாட்கமலம் நெஞ்சிருத்தித் தனதறைக்குட் போய்கதவை
திறக்கமனையாளவளுந் திடிரெனவே யோடிவந்து
சிறப்புடைய காதலன்முன் தெண்டனிட்டறியாமல்
புரிந்தபிழையைப்பொறுக்கப் போற்றியபின்னாலிருவர்
அருந்தேவ தாயாரின் ஆலயத்திலேயேகி
இந்தநன்றி செய்த இனியசெபமாலையம்மாள்
சுந்தரப்பதமலரைத் தோத்தரித்து வாழும் மட்டும்
அத்தேவதாயார்க்கு அரியதொண்டு தாம்புரிந்து
உத்தமமாகவிருந் தொழுகிவரும் நாளையிலே
நடந்தஇப்புதுமைதனை நானிளத்துள்ளோரறிந்து
அடங்காத் தயையுடைய அம்பரி செபமாலைப்
பத்தியது மேலோங்கிப் பசாசைச் செயம்புரிய
முத்திவழிகாட்டிநின்றவர் மூதுலகில் னம்மானை.

# இறந்த மூவரை உயிர்ப்பித்த காதை

## விருத்தம்

நீழ்புவியி லாடறுத்து இறைச்சி விற்போன்
நேசமைந்தர் தமிலமூத்தோ னிளையோன்றென்னை
பாழ்கொடுமை யெனத்தெரியாய் புத்தியாலே
பதைத்திடவே வெட்டரெத்தம் வரப்பயந்து
தாழ்வரிய போறணைக்கு ளொளிக்கவந்து
தாயறியா னெருப்புவைக்கத் தனையன்மாழச்
சூழ்கொலைக்காய்த் தாயினையே கணவன்கொல்லத்
தூயமரியுயிர்கொடுத்த தொகைசொல்வேனே.

## அம்மானை

இன்னும் பொலோஞ் தேசத் திலகுலுபிளின்னெனச்சொல்
அன்ன ஒரு ஊரில் ஆடறுத்து இறைச்சிவிற்கும்
மர்த்தீனெனுமொருவன் மனையாளுடன் தாமும்
பெற்றவிரு புத்திரரும் பேணமுடனேயிருந்து
சீவியமானதினைச் செய்துவரு மன்னாளில்
ஆவிநிகர்த்த இளம் அருஞ்சேயைத் தொட்டிலிட்டு
தந்தையருந் தாயாருந் தானோ ரலுவலுக்காய்
அந்தமனை விட்டகன்று அவர்வெளியாற் போனதின்பின்
அவ்வேளை மூத்தமைந்தன் ஆடு தந்தைதானறுக்கும்
செவ்வையுறும் பாவனையாய்த் தீட்டியவோர் கத்தியினால்
சிறியமைந்தன் றனைவெட்டச் சிக்கென்றிரத்தவெள்ளம்
மறுகிடாதேயோட மன்மிகப் பயந்தோடி
அப்பமது சுட்டெடுக்கும் அரியபெரும் போறணைக்குள்
செப்பமுட னேபுகுந்த சீக்கிரமதாக அதன்
வாசலையே கஞ்சல்களால் மறைவாகவேமூடி
மோசம்வராதபடி மூத்தோ னொளிந்திருந்தான்
அதன்பின்னாற் றயவளும் அங்குவரும் போதினிலே
விதம்விதமாய்க் கஞ்சல்களால் மிக்கப்பெரும் போறணையின்
வாசல்மறை பட்டிருக்க மாதவளுங் கண்டு அந்தத்
தூசுகள்மேலேநெருப்பைத் துரிதமுடனே கொமுத்தி
சென்றபின்னாற் றீயெரியச் சிறுவனனல் பட்டவுடன்
அன்றுவெளியால்வரவே ஆரம்பித்தாலுந்தந்தை
ஆய்க்கினைசெய்வாரெனவே யஞ்சி யகங்கலங்கி
கூப்பிடவுமேபயந்து குடங்கியிருக்கையிலே
அத்தீயளாவியவன் அங்கமதிலேமோதப்
புத்திரனுமேயிறந்து போறணைக்குள்ளே கிடந்தான்
அங்கேயதன்பின்னால் அப்போறணையருகே
நங்கையவன்தாயும் நடந்துவரும்வேளையிலே
மனிததேகம்பொசுங்கி வாடைநாற்றம்வீச
வனிதையோர் கோலெடுத்து வன்னிநெருப்பைத்தணித்து

ஆத்திரத்துடன்பார்க்க அன்பாகத் தானீறை
மூத்தமைந்தன் போறணைக்குள் முடங்கிக்குடங்கியுயிர்
நீத்திறந்து தான்கிடக்க நெஞ்சம் படபடத்து
வேர்த்தாறாய் வேர்வைசிந்த விழுந்து நிலத்தினிலே
ஐயையோ என்மகனே ஆரமுதே தீங்கனியே
துய்யசந்திரோதயமே தூண்டாமணிவிளக்கே
தித்திப்பே தெள்ளமுதே தீங்கனியே மாங்குயிலே
புத்தமுதே நீருமிந்தப் போறணைக்குள்ளேபுகுந்த
விதமறிந்தால் தான்நெருப்பு மேலிலிடுவேனோ
பதறுதிப்போ அங்கம் படபடத்து உம்மாலே
என்னசெய்வே னதுசெய்வேன் என்னுடைய கண்மணியே
உன்னைவிட்டுநானில் வுலகத் திருப்பேனோ
என்று பலவாறாக ஏங்கியேங்கிப் புலம்பி
அன்று இளம்பாலகனை அவளுமே போய்ப்பார்க்க
கத்தியினால் வெட்டுண்டு கடல்போலிரத்தவெள்ளம்
தொட்டிலுக்குள்ளேபரந்துதோன்றலிறந்திருக்கக்
கண்டவலுந் தன்தலைமேற் கைகளைவைத்தேபுலம்பி
அன்று அலைகடலின் அதிர்முழக்க மொப்பநொந்து
அழுதாள் விழுந்துநிலத் தங்கமெங்கும் மண்புரள
விழிநீராய்சொரிய விம்மிவிம்மி யேமொழிவாள்
என்மகனே பொன்மகனே இளங்கனியே தீந்தேனே
உன்னைக் கொலைபுரிந்த ஒன்னலராரோவறியேன்
பசியசிறு மேனிதனைப் பார்க்க அனலாய்வயிறு
எரியுதே பெற்றெடுத்த என்னிளைய பாலகனே
கத்தியினா லங்கமதைக் கண்டதுண்டமாய் கீறிக்
குத்தி வதைத்த கொடியவராரோவறியேன்
கற்கண்டே கான்முளையே கானிருக்குந் தேன்கதையே
விற்கொண்ட மென்நுதலே மேதினியிலேநிதமும்
தாராட்டிப் பாராட்டித் தந்தமுதை நான்வளர்த்த
சீரான கண்மணியே செகத்திலிறந்தனையோ
கன்னல்மதலைமொழியே காசினியின்மீதுமது
புன்சிரிப்பைக் கேட்டுமனம் பூரிப்ப தெக்காலம்
எனவே யிருந்திருந்து ஏங்கிமனம் புண்ணாகி
அனையவள் மனம்பதறி ஐயையோ ஆண்டவனே
என்கணவன் வந்தால் என்னையல்லோ கொன்றதென்று
வன்பழியெடுப்பாரே மாதாவேயென்றுநொந்து
சோகமுற்றவளிருக்க துரிதமுடனேகணவன்
வேகமுடன் போனலுவல் விரைந்துமுடித்துடனே
வந்தான் மனைதனக்கு மைந்தரிருபேர்களுமே
அந்தநேரத்திறந்து அங்கே அசையாத
கட்டையைப்போலவே கிடக்கக் கண்டு மனம் பதறிக்
கிட்டநின்ற காதலியைக் கேட்க அவளுற்றதெல்லாம்
சொல்லவே நம்பாமற் தூறாகக் கோபமுற்றோர்
பொல்லுத் தடியெடுத்துப் போட்டானடியவளும்

பட்டேக் கதறப் பாதகனவள்தனது
கட்டிக் கனிகளையே கபடாகக் கொன்றதென்று
மீண்டு மடித்திடவே மெல்லியவள் மண்டையின்மேல்
தண்டாதக்கோல்மோதித் தையலவளும்மரித்தான்
பின்னாற் சினந்தெளிந்து பேசருந்திகில் மனது
தன்னிலே கொண்டவனும் சலிப்புடனே கூறிடுவான்
அரசாட்சி யாரறிந்தால் ஐயையோ என்னையல்வோ
கரவாயக் கொலைபுரிந்த கபடனென்றுடன்பிடித்து
விலங்கிட்டுப்போவாரே மேதனியிலேயெனக்கு
நலங்கிட்டும் வாறேது நாயகிசெபமாலை
அம்மாள் துணைபாவி யடியேனுக்கென்றெவனும்
விம்மிவிம்மி நொந்தழுது விரைவாகவேமரித்த
அந்தப் பிணம்மூன்றை அவனெடுத்து வண்டியின்மேற்
சிந்தப் பிரலாபம் சீக்கிரமதாகவைத்து
வையத்துள்ளோரறியா மறைவாயிராவடுத்தக
மையிருளாம் வேளைகொண்டு மனமிகத் திகிலாகி
கிளரெம்பே ரம்மலையின் கீர்த்திசெறி யாலயத்தில்
வளமாக வைத்திருக்கும் மங்காச் சுவிசேஷ
லூக்காவின் கையா லுசிதமாய்ச் சித்திரித்த
பாக்கியசெபமாலைதந்த பரிசுத்த தாயர்படத்
திடங்கிட்டி வண்டியைவிட் டிறங்கிஅந்த அன்னைமுன்னே
அடங்காப் பிரலாப மாகவே வந்தவனும்
கைகுவித்து வீழ்ந்து கருணையங்கடலான
துய்யகன்னிமாதாவைத் தோத்தரித்துச் சொல்லலுற்றான்
ஆண்டவளே தாயாரே அடியானெனதுமைந்தர்
மாண்டே கிடத்தல்கண்டு மனைவிகொன்றதென்றவளை
அறியாது நான்கொலையை ஐயையோ செய்துவிட்டேன்
பொறியிலெலி போலானேன் புவியிலரசாட்சி
என்னைப் பிடிப்பாரே இடர்வினைகள் செய்வாரே
அன்னையே யும்மையன்றி யாதரவதொன்றுமில்லை
பாவிக்கடைக்கலமே பாக்கிய சந்ரோதயமே
சீவியத்தினூறணியே செல்வமுள்ள தாயாரே
உம்மருஞ் சலுகைதனை யோடியேதேடினர்கள்
இம்மையி லடையாதா ரெவருமில்லை நாயகியே
பிள்ளைபிழை செய்திடினும் பேரமுதத்தாயாரும்
தள்ளுவது முண்டாமோ தாசனென்றெனக்குதவி
அந்தரித்த இவ்வேளை ஆச்சியே நீர்புரிந்து
மைந்தனையிரந்து என்மேல் மனவிரக்கம் வைத்தருளும்
என்று அழுகையுடன் இரந்துமர்த்தீன்வேண்டிநிற்க
அன்று வண்டிமீதிருந்த அப்பிணங்கள் மூன்றுமுடன்
உயிரடைந்ததிசயமா யுடனெழுந்தாரங்கவர்க்குள்
நயமுடைய தாயவளும் தண்ணியிழையோயையனயெக்கல்
தனிலெடுக்கி மூத்தமைந்தன் றன்னையே கைப்பிடித்து
வனிதையவள் வந்துதிரு மாதா படத்தின்முன்னாய்

சாஷ்டாங்கதெண்டனமாய் தான்விழுந் தழுதிரக்கும்
மாட்சிமைசேர் காதலனை மாதவள் கையாற்பிடித்து
எழுந்திருமென்றேயுரைக்க இனிய குரல்கேட்டவுடன்
அழுந்தமேல்நோக்கியே யவன்பார்க்கும் வேளையிலே
தனது மனைவியையும் தனையரையுங்கண்டவுடன்
மனமடங்காச் சந்தோஷ வாருதியில் மூழ்கியுடன்
கட்டிப்பிடித்துக் கண்மணிகள் தமைமுத்தம்
இட்டேயரவணைத்து ஏந்திமடிமேலிருத்தி
இந்தப்புதுமைசெய்த இனியதிரு நாயகிபின்
அந்தப் படத்தின்முன்னா யடிபரவியெல்லோரும்
தாயார் தமைப்போற்றி தாரணியிலே தமது
காயமிருக்குமிட்டுங் கைவிடாதேயவர்க்குத்
தொண்டுபுரிந்து தூயவளையே வாழ்த்தி
நன்றாக வாழ்ந்துவந்தார் தானிலத்தில் அம்மானை

## செபமாலைப் பக்தியால் ஒரு குருவானவரைச் சத்தூராதிகள் கையில் நின்று காப்பாற்றின காதை

### விருத்தம்

அருளது மிகமலிந்த அன்னையின் செபமணித்தார்
கருணையாயோதிநின்ற கதித்தவோர் குருவினுக்கு
பெருமிடர் செய்யவந்தோர் பின்னிட்டு ஓடுதற்குத்
திருமரி நவம்புரிந்த செய்தியைப்பகருவேனே

### அம்மானை

செல்வந்தளைத்துச் செழித்தோங்கியேவிளங்கும்
வல்ல பிரான்சுவெனும் மாதேசமானதையே
அண்டுமபிதாளுவென்னு மந்நகரிலே யொருவன்
நன்றாய்க் குரப்பட்டம் நாடியடைந்தேயவனும்
முதற்பூசை செய்வதற்கு முக்கியமாய்க் கோவிலிற்போய்
இதத்துட னுடுப்புகளை யெடுத்தணிந்து கொள்வேளை
வேத விரோதிகளும் வேகமாய் வந்து அந்த
நீதருகுருவானவரை நெருங்கி வளைந்தார்கள்
அச்செயலைக்கண்டு அந்த ஆலயத்திலுற்றவர்கள்
அச்சமிகக் கொண்டெழுந்து அவ்விடத்தைவிட்டோட
அவ்வேளையக்குருவ தானோருந் தப்புதற்கு
எவ்வழியுமில்லாமல் எடுத்துச்செபமாலைதன்னை
கையிலே தான்பிடிக்கக் கண்டு அந்தச் சத்துருக்கள்
வெய்யசினமாய்பறித்து வேகும் நெருப்பினிலே

போட்டபின்பு அக்குருமுன் புகன்றார்நீ யெவ்வேதம்
தாட்டிகமா யெங்களுக்குச் சாற்றெனவே சந்யாசி
சொன்னார் கிறிஸ்தவன்தான் தூயசெபமாலையெனும்
அன்னையர்க்குந் தொண்டுசெய்யும் அவர்பிள்ளையென்றிடவே
கேட்டப் பகைவரெல்லாம் கெற்சிதங்கொள்ளும்வேளை
மாட்சிமை யுள்ள மாதா அதிசயத்தால்
அனைவர்க்குங் கண்கெட்டு அங்கிங்கு கைகளினால்
வினைசெய்ய மாதவற்கு விரோதிகள் தடவியந்தக்
குருட்டாட்டம் மேலாக கோவென்றழுதலறி
இருடகண்ண ராயெழுந்து எல்லோருமோடியபின்
சந்தோஷமுற்று அந்தச் சத்தியவேதக்குருவும்
வந்துமற்றநாட்பூசை மகிழ்வாக வைத்தபின்பு
சத்துருக்களும்பறித்துத் தாம்நெருப்பிலே போட்ட
சுத்தசெபமாலைதன்னை தூயோனும் போய்ப்பார்க்க
அத்திருச்செபமாலை யற்பனுங் கருகாமல்
உத்தமியருளாலே யொளிகொண்டு வீசல்கண்டு
பக்தியுடனேயதனைப் பதனமாய்க் கையாலே
அத்தினத்திலே யெடுத்து அந்தக் குருவுடனே
எல்லாருங் கோயில்சென்று இந்தப் புதுமைசெய்த
வல்லசெபமாலையம்மாள் மதிப்பதத்திலேவீழ்ந்து
அன்னையரே எங்களரும் ஆதரவே தாயாரே
இன்னலுறுஞ்சத்துருக்க ளிடத்தில்நின்றெம்மைக்காத்த
உன்பேரிரக்கமதை யுலகில் மறப்போமோ
அன்பேயெம் மாதாவே ஆச்சியென்றிரந்து
அஞ்சல் செய்து சென்றாரில் வன்னைசெபமாலை திருத்
தஞ்சம்விஷேக்குமிடம் தாமேயிலங்கையிலே
மருதமடு சின்னமடு வரமெனவி ரிஸ்தலங்கள்
பிரதான யாத்திரைக்குப் பேர்போன தாகினது
இந்தத் தலங்களிலே எண்ணிலா ரோகமுறும்
அந்நகர் பேய்ப்பிடித்தோர் ஆண்பெண் வகுப்புடைய
நொண்டிமுடஞ் சப்பாணர் நுவலுமரும் பார்வையற்ற
கண்குருட ருமர் கடியகுஷ்ட ரோகமுள்ளோர்
இன்னும் பலபிணிக ளேற்றவர்கட்கும்
அன்னைசெபமாலையம்மாள் ஆரோக்கியங்கொடுத்து
பாவப் பிணிகனாற் படர்ந்தாற்றுமஞ்சிதைத்தோர்
யாவர்க்கு மித்தாயார் ஏற்ற உச்சாரணத்தைச்
செய்யமனமீதுநல்ல தேவேவுதல்கொடுத்து
துய்யசுதனாரமருஞ் சுகிர்த சற்பிரசாத
விருந்துமருளித் திவ்விய மேலோக பொக்கிஷத்தை
பெருந்தொகையதாயருள்வார் பேரின்ப ராக்கினியும்
இத்திருத்தாயின்தூய இலங்குசெப மாலையினால்
உற்ற புதுமைமெத்த உண்டு அவையெடுத்து
சிறியேன்னானுமெழுதில் சிறந்த இந்த அம்மானை
பெரிதாய் விரியுமெனப் பேதலிப்புக்கொண்டு அஞ்சி

சுருக்கமாய்புல்லறிவோன் தொடர்ந்தறிந்தமட்டுமெந்தன்
அருட்தாய் செபமாலை அம்மாள் துணையாலே
இயற்றினே னித்தாயார் இலங்குசெபமாலைகரம்
நயத்துடனே தான்பிடித்து நாளுமந்திசந்தியிலும்
செபித்துவரும் மானிடர்கள் தீதாகிப் போகாமல்
தவத்தாயாரின்தூய சலுகையருளாலே
இவ்வுலகிற் சத்துருக்களிடத்தில்நின்று ஈடேற்றித்
திவ்விய மோட்சஞ்சேர்ப்பார் திட்டமுடன் நம்பிடவீர்
அரியதிருத்தாயாரே ஆனந்தவாருதியே
மரியாம்பிள்ளைப்புலவன் வரைந்துமது அம்மானை
இப்புவிக்கு நன்மையென இனிதாய் வெளியில்விட்டேன்
தப்புடைய பாவியான் தாயேயென் மீதினிலே
திரு இரக்கம் வைத்தெனது தேவியோடுசேயருந்தன்
அரியபெயரைப்பூண்ட அன்பான சோதரியும்
மருகர்மைத்துனர்பேரர் மானிலத்தின்மீது சத்திய
திருமறைக் கிறீஸதவநற் செனர்கள்யாவர்க்குமன்பாய்ச்
செழிக்கவுன் றிரு ஆசி திருமகனாரைவேண்டிக்
களிப்பாக வீந்தவர்கள் காசினியில் வாழவைத்து
பாவியடியேனெனக்கும் பரிந்துமது ஆசிதந்து
சாவுவரும்நேரம் தாயேநீர் முன்புவந்து
வஞ்சகப் பிசாசிடரால் மயங்கிச்சோராதவண்ணம்
தஞ்சமாய் நின்றுதவி தமியேனெனக்கருளி
நல்லமரணந் தந்து நாயகியெனக்கூட்டிச்
செல்ல மோட்சதலத்திற் சோத்தருள்வீர் தாயாரே

# மருதமடுத் திருப்பதி வைபவம்

## கலித்துறை

அருட்பிரசாதி செபமாலைத்தாய ரனேகநன்மை
இருட்பவம் நீக்கி யெமக்கருள்வா ரவரின்புதுமை
மருக்கடலிந்த உலகெங்கும் பாயும் மருதமடுத்
திருப்பதி வைபவ மானதை யானிங்கு செப்புவனே.

## அம்மானை

எல்லோனுடையு மீராறு மீன்முடியும்
வல்ல மதிப்பதமும் வடிவலங்கா ரந்துவங்கத்
திருமருத மாமடுவிற் சேயரெமக்கேநிதமும்
அருண்மாரியைப்பொழிய அற்புதமாய்வந்தெழுந்த
செபமாலைத் தாயாரின் திருப்பதியின் வைபவத்தை
உவமானமாயெடுத்து ஓதிடுவேன் கேட்டருளும்
ஓராயிரத்தைஞ்நூற் றொருபதினெட்டாண்டுதொட்டு
ஓராயிரத்தறுநூற் றோரைம்பத் தெட்டாண்டு
ஈறுமட்டுமிந்த இலங்கா துவீபமதில்
தேறவரசாட்சி செலுத்திய போர்த்துக்கீசர்
தமதுடைய காலமட்டிந் தளைத்தசத்தியவேதமதை
இமன்போலழித்துவிட எழுந்து நின்ற ஒல்லாந்தர்
தம்மாற் கிறீஸ்தவர்கள் தமக்குவந்த விக்கினங்கள்
இம்மாத்திரமதென் றெடுத்துரைகுந் தன்மையல்ல
கல்வீன் மதத்தைக் கருதிநின்ற ஒல்லாந்தன்
பொல்லாத துஷ்டன் புழுங்குமன வேகமுடன்
அன்னாட் கிறீஸ்தவர்களானார்கள் பிள்ளைகளை
தன்னாள்கைக்குட்பட்ட தப்பறை யும்பதித
பாடசாலைக்கனுப்பப் படல்வேண்டு மென்றுமின்னும்
வாடாத சுத்தசத்திய மறையின் விசுவாசர்
தம்முடைய வேதகொள்கை சகலதையுமேவிடுத்துச்
செம்மையாய்த் தன்மறையிற் சேர்ந்தெல்லோருமொருங்கு
வாழ்ந்திடவே வேணுமென்றும் வன்கொடிய கட்டளையை
தேர்ந்தவனுமேவிடுத்துச் செப ஆலயங்களையும்
இடித்துத் தகர்த்தெறிந்து ஏற்ற சுருபங்களையும்
அடித்துடைத் தெறிந்துமிக அனாசாரஞ் செய்துவந்தான்
இன்னுந்தன் கட்டளைக்கு ஏற்காமலே நடக்கும்
நன்மைக் கிறிஸ்தவர்க்கு நவிலரிய வாகைசெய்து
கொலைத்தீர்வை செய்துங் கொடுஞ்சிறையிலேடைத்தும்
நலத்தோடிருந்தபதி நாடுகள் தமைவிடுத்தும்
துரத்திக் கொடுங்கோண்மைத் துரைத்தனத்தையேபுரிந்து
இரக்கமின்றி யாளுகையை யியற்றிவருமக்காலம்
இக்கொடுமைக்காற்றா தெழுந்துமன்னார் தீவினொடு
மிக்கவரும் மாதோட்ட மீதுறுங் கிறீஸ்தவர்கள்

சண்டாள ஒல்லாந்தன் றனது நெருங்கிடைக்கு
அன்றஞ்சி மாந்தை யப்பதித்தேவாலயத்தில்
உள்ளசெபமாலையம்மாள் உசித சுருபமதை
விள்ளரிய பக்தி வேகமுடனேயெடுத்துக்
கொண்டு மறைவிடத்திற் குடிபுகுதவெண்ணமுற்று
அன்றுகண்டி ராசனுக் கடங்கிய மருதமடுக்
காட்டுப் பூமிதனையே கருதியடைந்தேவசித்துத்
காட்சி மேலோங்கத் தளைத்துவருமப்போது
யாழ்ப்பாண மீதிருந்த எல்லாக் கிறீஸ்தவரும்
ஏற்றகுருமார்களுமா யேகோபித்தேகூடி
பூநகரி மார்க்கம் புறப்பட்டிருளடர்த்த
கானகங்கள் தாண்டிக் கடைசியா யங்கவரும்
மருத மடுப்பதியை வந்தடைந் தெல்லாரும்
ஒருமனமாகக்கூடி உத்தமசர்வேசனுக்குத்
தோத்திரம் புரிந்து சுகமாக வாழ்ந்தார்கள்
பாத்திப னொலாந்தன் பழுதிடர்களுக்கஞ்சி
இங்கிது நிகழ்ந்த தேற்றவோ ராயிரத்துத்
தங்குமறு நூற்றெழுப தாண்டலவிலாமெனவே
கன்ன பாரம்பரிங் களறுகின்ற தன்னாளில்
வன்னி மருதமடு வாம்பதியில் வந்தொருங்கும்
குடியேறியசனர்க்குக் குளிரச்சியந்தக் காடுதர
அடியவர்க்கமுதான அன்னைசெப மாலையம்மாள்
அடைக்கலத்திற் தங்களையே யவர்கள்தா மொப்படைத்து
திடத்துடன்வா ளன்னாளிற் செழித்த யாழ்ப்பாணநகர்
இருந்துவந்தோர் தங்களுக்குள் எலேனா ளெனும்நாமம்
பொருந்துமோ ருத்தமியாள் போர்த்துகீசர்மரபிற்
சேர்ந்தவளுந் தெய்வபத்தி சிறந்தவளுமானவளால்
வேந்தர்க்கு வேந்தன் விண்ணாள் பரன்சுதனைப்
பெற்ற செபமாலையம்மாள் பெயராலோராலயமும்
உத்தமி பொறுப்பி லுகர்ந்துகட்டுப் பட்டதுவே
இக்காரணத்தையிட்டு எலேனா மருதமடு
அப்பகுதிக்குப் பூண்டதுவு மதுவும்நாள் வட்டமதிற்
திரிடைந் திக்காலஞ் சிலேனா மருதமடு
அரிய பதியென் றமையவே பெற்றதுவே
ஒருபொருளா மெம்பரனு முகப்பாயடியருக்குத்
திருவுளமுற்றேயளித்த திருமறைக் கலாபனையின்
அருட்சி மும்முரந்தனியே வங்குகுடி யேறினவர்
ஒருத்தர் பலராக வொன்றுகூடிசேர்ந்து
பையமெல்லவாயப் பதியைவிட்டு ஊர்களுக்கு
ஐயமீன்றிச் சென்றா ரதன்பின் தேவாலயமும்
இடிகரையதாகிவிட ஏற்றவந்தச் சேதிமத்தின்
அடிநிலையந் தன்னையங் கமைக்கவே பெற்றிருந்த
மரக்குருசொன்றேகாட்டி வந்ததெனுந்திவ்ய
அருட்செப மயலயம்மா ளரிய திருப்பதியை

மறந்துபோகமலின்னும் வானபரன் தாயாரின்
சிறந்த திருப்பதத்தைத் தேடியே தெண்டனிட்டு
வந்தார் விசுவாசர் மாதாவுமங்கவர்க்குச்
சந்தோஷமாகவே தமதருள்களைப்பொழிந்து
காப்பாற்றிவந்தா கருணைத் தயாபரியின்
ஏற்றகோவில்மருந்தா லினியநற்சுகங்களையும்
அருளிவந்தா விந்நவங்க ளறிந்தறிந் தித்தாயின்
திருமருதமடுவைத் தேடிவிசுவாசிகளும்
கணக்கின்றிப்போவதையேகண்டுமன்னார்பட்டணத்தில்
இணக்கமாய் நீதிஸ்தல ஏற்றஉத்தியோகமது
வகித்திருத்த மோயிஸ் வளர்ப்பத்திமானறிந்து
இகத்துளோரும்போற்ற வெழுந்தவேராயிரத்து
எண்ணூற்றீர்பத்திமூன் றெனுமாண்டிலப்பதியில்
மண்ணாலோர் கோயில் வடிவாகவேயியற்றி
அப்பதியில் முன்னிருந்த அழகுசெபமாலையெனும்
கற்பாரணி சுரூபம் கள்ளியக்கட்டைக்காடு
என்னுங்கிராமத்தி விருப்பதாய்க்கேள்வியுற்று
தன்மர் மோயீஸ்துரையுந் தாமேயெடுப்பித்தை
இஸ்தாபித்துவிடவே யெறிசுடர்ரொப்பவிளங்கி
உத்தம மருதமடு உலகோர் இடர்தீர்க்க
மோட்ச விருந்தாகி முதல்வி திருப்பதியும்
காட்சிநவத்தால் மேலுங் கதித்துவரலாகினதே
மண்ணாலியற்றியுள்ள மாதாவின்கோவிலதை
இன்னுமொராயிரத்தெண் ணூற்றுமுப்பதாண்டதன்பின்
இடித்துப் பெருப்பித்து ஏற்க மரத்தாலமைத்தோர்
படிக்கு நன்மைசெய்துவந்த பகரருங் கோவைக்குருவாம்
பிரான்சீஸ்கோயுவாமென் றுரைக்குஞ் சுவாமியவ
ராமெனவறிந்துகொள்ளு மவனிதனிலுள்ளோரே
வருஷம்முன்னூறுமட்டு மாகவே கொச்சிநகர்
அதிகமேற்றிராசணத்து ளடங்குமிலங்கைத் தீவை
வேதவிருத்தியதை மேவியெம்திருச்சபையின்
ஆதிபர் பதினாறாம் அமிர்த கிறகோரி
பாப்பரசர் தாமும் பகருமோ ராயிரத்து
எண்ணூற்று முப்பத்திநா லெனும்வருஷ மீதுகொச்சி
அதிமேற்றிராசனத்தா லதைப்பிரித்து நன்மைதிகழ்
விதமான வோர்புறம்பு விக்காரியமாக்கி
விட்போதேயெழுந்து விளைந்தசில மாற்றங்களை
யிட்டபிரிவினையி னேராவலைதனிலே
சிக்குண்டு பேதலித்த சிலகமண்டலக்குடிகள்
தக்க மருதமடுத் தாயார் திருப்பதியைத்
தமது செந்தமென்றுநின்று தாமவர்வாதாடினதால்
எமதுதந்தை பெற்றகினி யெனுமாண்டவர்காலம்
திருச்சபையுத்தியானமதிற் சிறந்தவிலங்காபுரியி
லுதித்த அமலோற்பவிநல் லுசிததிருமரியை

நாயகிசபைக்குக்கள் நன்முறைப்பிரகாரம்
தூயமருதமடுச் சுகிர்த செபமாலையம்மாள்
ஆலயத்தமக்கெனவே யவர்களுரித்தாடிவர
சீலமிகு பெற்றக்கினி திரு ஆண்டவர்தாதமும்
இவ்வுலகைவிட்டு எம்பரனாரின் பாதஞ்
செவ்வையுடனேயடையச் செழிக்குமவரின்பதவிக்
காயிரத்தியெண்ணூற்றி யைம்பத்தேழாமாண்டி
லேயுயர்த்தப்பெற்ற விரக்க தயாளமிகும்
ஆசாரத்துக்குரிய ஆண்டவர் சமேரியா
தேசிக மேற்றுராணியருஞ் செங்கோல் கரம்பிடித்து
விசுவாசர் ஆளுகையை விளக்கிவருமக்காலம்
திசையுள்ளோருமறியத் திருமருதமாமடுவை
இட்டவிவாதங்களு மெழுந்தோர்வியாச்சியமாய்
பட்டணமெங்குந்தெரியப் பகிரங்கமாய்நீதி
இஸ்தலத்துக் கேயேறி யேற்றாண்டோ ராயிரத்தோ
டுற்றவெண்ணூறோ டெழுபத் தோரைந்திலே தீர்ந்து
அக்காலம் யாழ்பாணத் திருமேற்றுராணியரும்
மிக்கன்னிமானுமென வெங்கும் புகழடைந்த
தோன்றல்விசுவாசிகளைத் துயரமின்றிக் காத்துவந்த
ஆண்டவர் பொஞ்சீனவரி னாட்சிக்குட்பட்டதுவே
இக்குரவர் நற்பெருமா னெனும்பொஞ்சினாண்டவரும்
தக்க மருதமடுத் தாயார் திருப்பதியின்
சிறுக்கோயிலைப்பெரிதாய்ச் செய்யவே ஆசைகொண்டு
மறுவற்ப மில்லாத மாதா உதவியினால்
ஆயிரத்தி யெண்ணூறோ டமைந்தெழுபத் தீராண்
லேயுதித்த ஆவணியி னெட்டாந் திகதியன்று
அஸ்திபாரக்கல்லை யருந்திருக் கரத்தாலே
வைத்தவரும் பின்பு மரியைசெப மாலையம்மாள்
திருச்சுருபமதற்குச் சிங்கார வேலைசெய்த
அருட்தங்க மாமுடியை யலங்காரமாய்ச்சூட்டி
விட்டவரும் நன்மை மேவுதிருத் தாயாரின்
உத்தம திருநாளின் உசிதமுறுந்தினத்தை
ஆடிமதி ரெண்டினிலே யமைந்தவரு மிகப்பெரிய
நாதனாம் பொஞ்சினெங்கள் நல்லாண்டவர்தாமே
இவருங் கொழும்புநகர்க் கேற்றதிமெற்றாணியராய்
நியமனமடைந்துசெல்ல நேராக வப்பதவிக்
குயர்த்தவேபட்டார் உகந்த மெலிசனென்னுந்
தவத்திமேற் றாணியருந் தாமே யாழ்ப்பாணத்துக்கு
இத்தகு சுகுணமுள்ள வினியமேற்றாணியரும்
உத்தம மிகுங்கொழும்புக் குகந்ததிமேற்றாணியராய்
சென்றிடவே யாழ்ப்பாணச் சிறந்தவிசுப்பாக
அன்றுதிரு யூலனெனு மாண்டவருதித்தனரே
இவர்க்காலந் தன்னில்மடு வேற்ற திருப்பதியில்
நலமாக வேலைகளும் நன்றாய் நடந்தேறி

அப்பதித் தலைவரெனும் அந்தோனிச் சுவாமியரின்
உத்தம பொறுப்பி லுகந்துமுற்றுப் பெற்றதுவே
இக்காலம் முற்கூறி யிருந்த பிரிவினைகள்
சற்றுக்குச் சற்றுத் தலைநிமிர்ந்து தள்ளாடி
பையமெள்ள விட்டுப் பறந்தவிதம் யாழ்ப்பாணத்
தெய்தியவஞ்ஞானிகளா லெழுந்தவிடையூறுகளை
அடக்கித் திருச்சபையி லஞ்ஞானிகள் தமையே
திடத்துடனே சேர்த்துவருந் தேவதொண்டரான நல்ல
ஞானபிரகாசரெனும் நற்குருவுக் கொப்பாக
ஈன பிரிவினையா லிடறல்கொண்டோர் தங்களையே
நல்ல வழிதிருப்பி நாட்டிவைத்த உத்தமராம்
துல்லிப சந்தியாகுச் சுவாமி யவரெனவே
இன்னாள்மட்டும்புகழ்ந் தியம்பிவாறார்களித்த
மன்னார் மாதோட்டத்தில் வாழுஞ் செனர்தாமும்
இன்னுந் திருயூல னென்னும் விசுப்பவர்பின்
நன்மைப் புறோதூய நற்றரும மேற்றிராணி
ஆண்டவரும் யாழ்ப்பாண மானதைவிட்டேபரிவாய்
மாண்டு பரலோகமுற மதிக்குமவரின்பதவி
தனக்குக் கியோமாரெனும் தக்கவிசுப்பாண்டவரும்
அனைத்திற்கு மாதிகத்த னருடதயவால் வந்தபின்னால்
செபமாலைத் தாயார்க்குத் திரியுபிலியும்நிகழ
நவரெத்தினத்தாலே நன்றாகவேயிழைத்த
அலங்கார மாமுடியை ஆயிரத்தொள்ளாயிரத்து
இலங்குமிரு பத்தெனுநா லெனுமாண்டிலே ஆடி
ஓரிரண்டாந் திகதி யுகந்த கொழும்புநகர்ச்
சீரதிப மேற்றிராணி செழிக்குமந் தோனிகுடேர்
ஆண்டவரு மெங்க ளரியபரிசுத்தபிதா
தோன்றலற்ப மாசுமின்றித் துலங்கு திருச்சபையின்
பதிலதிபரான நல்ல பதினொராம் பாப்பரசர்
இதமுடனருளிநின்ற ஏற்றவுத்தாரப்படியே
பலமேற்றி ராணியர்கள் பத்திமிகு நற்குருக்கள்
நலமிகும் விசுவாசர் நவிலருங்கணக்காக
கூடியே போற்றிசெய்யக் குழல்பாண்டுவாத்தியங்கள்
நாடித் தொனிமுழங்க நறைகமழ்பூங் கானகத்தில்
உள்ள மிருகபட்சி யோசைகொண்டு பாடியெங்கள்
தெள்ளமிர்தத் தாயாரின் திருயுபிலி மாட்சிமையை
போற்றிப் புகழப் பரணி திருச்சிரசில்
ஏற்க மௌலிதனை யினிதுறவே சூட்டிவிட்டார்
இந்த யூபிலிவருஷ மெழுந்தரிய வற்புதங்கள்
சந்தசெப மாலையம்மாள் தன்பதியில் மேவினதே
இத்தாயார் தன்யூபிலி யேற்றதினங் காணவென்று
அத்தகு கொழும்பிஸ்பெச லானறெயில்வண்டியிலே
வந்தவரு ளோர்சிறிய மதலைக்குழந்தையொன்று
அந்தநேரந்தவறி றெயிலால் விழுந்திட்டதே


இதற்கிடையிலேயடுத்த வேற்றடேசன்றனக்கு
மிகத்தீவிரமாக விரைந்துரெயில் சென்றிட்டதே
ஐயோ பரிதாபம் அக்குழந்தை தாயார் தந்தை
மெய் மனந் தடுமாறி விதனமுற்று விம்மியழ
புகையிரதத்தில் வந்தவரும் போந்த விச்செய்தியறிந்து
விதனமுற்று நொந்தார்கள் மெல்லிய குழந்தையதும்
வீழ்ந்த விடந்தேடி விரைந்தாட்களுமேக
ஆழ்ந்தநன்மைகள்புரியும் அற்புதச் செபமாலை
அம்மாளதிசயத்தா லனைவரும் வியப்புறவே
தின்மையின்றி யக்குழந்தை சிரித்துவிளையாடியொரு
தண்ணீர் நிலத்தரிகிற் றானிருக்கக் கண்டெடுத்து
அன்ன செபமாலையம்மா ளரும்பதிக்கு வந்தனரே
இச்சிறு குழந்தைகளை யெனதுகண்ணாலேயானும்
உச்சிததாயின்பதியி லுகப்பாகவே பார்த்தேன்
இன்னுமிலபுதுமை யெண்ணளவிலாமலுண்டு
அன்னதை யெடுத்தடியே னறைகிலிந்த அம்மானை
விரியுமென்று தான்சுருக்கி விட்டேனித் தாயார்பதம்
கரிசனையுடன்போற்றிக் கையெடுப்போர் தங்களுக்கு
ஓர்தீங்கும் வாராம லுத்தமிகாப் பாற்றிடுவார்
சீராக நம்பிடுவீர் செகத்திலுள்ள மானிடரே

# வாழி

## அம்மானை

வாழி திருச்சபையும் மங்காத பாப்பரசர்
தாழ்வறுமேற் றாணியர்கள் தக்கநற்சந் யாசர்களும்
குருக்கள் துறவோர்கள் கோதிலாக் கன்னியர்கள்
அருட்பிரசாதமலிந்த அருமைக் கிறீஸ்தவர்கள்
எல்லோருமேசெழிக்க இடர்பிணியெல்லாமொழிக்க
நல்ல மழைபொழிய நாடெங்குஞ் செல்வமுற
பஞ்சம் படையகலப் பத்தியெங்குமேபலுக
அஞ்சுகாயன்சலுகை அனைவர்மேலும்நீட
செய்முயற்சிகளோங்க தீயமிடி வட்டகல
தய்யமரித் தாயாரின் துலங்கு செபமாலை
செபிப்போர்மேலேயோங்கச் செனர்கள்வரீத்தித்தேபலுக
அருட்சத்தியவேதமெங்கும் அணியாகவேபடர
அன்னைசெபமாலையம்மாள் அருளிரக்கந் தங்கியெம்மில்
என்னாளுமே வாழ்க வாழியவே ஆமென்.

**நிறைவு**



## அர்ச் அருளப்பர் வாசாப்பு

*அர்ச் அருளப்பரின் வெட்டப்பட்ட கையை மாதா ஒட்டுகின்ற கதையாக அமைந்துள்ள இந்த வாசாப்பினை புலவர் கிறிஸ்தோ மரியாம்பிள்ளை எழுதியுள்ளார்.*

*மாவிலங்கேணி வாழ் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அர்ச். அடைக்கலமாதா நாடகத்தின் இரண்டாவது இரவு வாசாப்பாக இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது.*

# அர்ச் அருளப்பர் வாசாப்பு

**இயெத்துராயனின் கட்டியன்வரவு**
**சபை-கவி**

வனசநற்றடஞ் சூழ்ந்தோங்கும் வளமலி தமாஸ்கு நாட்டை
அனைதந்தை போலே காத்து ஆதரித் தன்பாயாளும்
இனிய நற்றயவுபூண்ட வியெத்தெனு மிறைவன் மேவும்
கனகநற்கொலுவின் வாசற் கட்டியன் வருகின்றானே (சபை-தரு)
தந்தேனாளத்.....

**சிந் து**

சூழ்புவ னந்தனிற் புகழ் சேருந் தமாஸ்காளும் மலர்
கந்தமாலை புயந்திகழண்ணல் கட்யகாரனுந் தோற்றினான் (தந்)
செங்கை வங்கப்பிரம்பு துன்னச் சிலம்பு காலிற்புலம்பவே விறல்
துங்கனாமியத் திங்கிதத்திட சூரதீரனுந் தோற்றினான் (தந்)
கண்டை நேர்மொழிக்கெண்டை வாள்விழிக் கன்னியர்மத னென்னவே மையல்
கொண்டிட வெழிலொன்று மாகதன் கூவுமிச்சபை மேவினான் (தந்)

**கட் டியன் -தரு**

நன்னநன்னநானநன்னட

இத்தெருவின் மானிடரே கொற்றவனி யெத்துசபைவாறார்
நீங்கள் இந்தத்தெருவெங்கு மந்தத்தோடே நல்ல
பந்தற்கால் நாட்டியே சந்திடவருவீரே (நன்)

முத்து நகைமயிலாரே மத்தகய
மொத்ததுரைவாறார் நீங்கள்
மோசமற்றேயெங்கள் ராசன்முன்னே சென்று
நேசமாய்ச் சாய்மரை வீசமனந் துணிவீரே (நன்)

அல்லை வென்றகாரளக அரிவையரே
துரையரசன் வாறார் நீங்களத்தெரு
இத்தெருக் குப்பைகள் கூட்டியே
தப்பிதமற்றள்ளி யப்பா லெறிந்திடுவீரே (நன்)

பாய்ந்தகொக்கின் சாய்ந்ததிறல்
காய்ந்த புயவீரர்களே நீங்கள் எங்கும்
பன்னிறப் பந்தல்கள் மின்னவலங்கரித்
தின்னேர மன்னவன் பொன்னடி போற்றிடவாரும் (நன்)

மதுரகவி யினிலதிக வல்லகவி வல்லவரே நீங்கள்
இப்போ வாருங்கோ மன்னன் முன் சேருங்கோ

பண்ணிசை பாடுங்கோ பாடிப்பரிசு பெறவருவீரே (நன்)

**கட்டியன்-கூறல்**

படபடென வெடிகள் திடு திடு வெனவதிர்ந்திடப்
பாரட்டதிசையாளுவோன் பரியிரதகரிசேனை புடையது நெருங்கிடப்
பவனிதனிலேறி வருவோன் திடமுடைய
அடையலர்க ளடிதொழுது திறையதைச் செலுத்திடு மகத்வமுடையோன்
சேணர்கவி வாணர் புகழ் காணவரு மாணவச்
செங்கோன்மை தங்குகையோன் குடை கொடிகள் தொனிமுரசு
திடுதிடென்றதிரிடக் கோகனக மாலை புனைவோன்
கோதுறுந்துட்டரையடக்கியே ஜெயவாகை கொண்டம அலிச்சிரத்தோன்
மடையது புனைந்திடுக மாஸ்குவெனு மாநகரை மனுநீதி கொண்டுகாப்போன்
மகராசராசன் செகமாளுபோசன் இயெத்து மகராசன்
கொலுவுக்கு வருகிறார் சமூகமெச்சரிக்கை சாமி வெகுபராக்கு…..

## இயெத்துராயன்வரவு
### சபை-கவி

கொம்புகுழல் வெடிதிடிமனதிர மேளங்கொட்டு
பறைமத்தாளங் குமிறியார்ப்பப் பம்பைதவில்
கெம்பிட நாட்டிய மின்னார்கள் பரிந்து
நடம்புரிந்திடப் பாவலர் பண்பாடத்
தும்பி துரகதவீரர் சூழ நீளத் துலங்கு
கொடிகுடை விருதுதொனிக்க நாளும்
வம்பகல் தாமாஸ் கெனுநாடதையாள் வேந்தன்
வயத்திலுய ரியெத்து சபைமகிழ்ந்துற்றானெ

**சபை-தரு**

இயெத்து மகாராசனும் வந்தான் சபைதனிலே
இயெத்து மகாராசனும் வந்தான்
இயத்து மகாராசன் வந்தான்
கெலித்து மறுதுட்டரஞ்சச் செயத்துடனே யெந்த நாளும்
நயத்துடனரசு செய்யும்

**இயெ**

சித்திரக்கிரீட மின்னவே மாற்றலரஞ்சிச் செம்பதத்தை
வந்து போற்றவே உச்சித முடனேகரி யைச்சரிவைத்தே நிகர்த்த
உத்தம மிகுத்தவீர தத்துவனெனமதிக்கும் (இயெ)

தம்புரு தவில்கள் பேசவே இருபிறமுஞ் சாய்மரை கவரி வீசவே
கொம்புகுழல் மேளதாளந் தொம்தொம்மெனவே முளங்க
இம்பரிற் தாமாஸ்கு நாட்டையன் புடனரசியற்றும் (இயெத்)

**ராயன்-தரு**

தந்தனந்தனந்தேதன
மந்தரங் கதிர்மதியோ டந்தரமகில மற்றும்
மானர்பல்லுயிர் பொருள் கடானும் மன மங்கள

முற்றேயமைத்தி டுங் கடவுள் செங்கமல
மாமலர்ப் பொற்றாள் பணிகுவாமால் (தந்)
மாலை கந்தரஞ்சூழ்மகி பாலரெல்லோரும் புகழ்
மாவளந்திகழ் தமாஸ்கு நாட்டைச்
செம்பொன் வைத்தழுத்து முத்துநவ ரெத்தினக் கிரீடமுடி
மத்தகத்தணிந்து மகிழ்வாக (தந்)

ஆகமகிழக் குடிகட் கோர்குறை யணுகிடாது
அண்டமதி துன்றுதிறிசோனை பெய்து
ஆளுமென்னர சியற்கை நாளினுஞ் செழிக்கவர
சாளியெத்திராய னென்பேராமே (தந்)

மேதினியி லெண்டிசைந ராதிபரு மென் திறைகள்
மெய்ப் புடனளப்பரென் சொல்மீறிப் பூவில்
மிண்டு செய்யும் மேவலரைக் கண்ட துண்ட
மாயரிந்து வீசிடுவேன் காசினில் நானே (தந்)

நால்விதப்படைபதாதி சூழ்வரமத் தாளமேளம்
நல்லிசைக் கருவி தொனியார்ப்ப இன்ப
நாவலர் புகழ்ந்து பாட மேவலர் பணிந்துதேட
நற்கனகப் பொற்கொலுவிற் செல்வேன் (தந்)

**கட்டியன்-கவி**

மங்காத பூதலநற் பெருமையோங்க
மானிலத்துக்கோர் குறையும் வந்திடாது
செங்கோன்மை தவருநந்நீதி ஞாயஞ்
செலுத்து முயரியெத்தர சேசெயமேயோங்கப்
பொங்காழி சூழுகில் மனுடரோங்கப்
பூபதியே நாமெடுத்துப் புகலொண்ணாத
சிங்காரமான சிம்மாசனமு முந்தன்
செங்கோலு மரசிருப்புஞ் சிறக்குந்தானே

**ராயன்-கவி**

சரணமென்று அடிதொழுது பணிந்துநிற்குந்
தத்துவஞ் சேர்மாகதனே சாற்றக்கேளும்
பொருண மொடுசமர்புரிய வருமொன்னாரைப்
புறங்காட்ட வகைபல நற்புத்திதேர்ந்து
கிரண மணியணியெனது கொலு முன்நின்று
கிளற்று மதிமந்திரியைக் கீர்த்தியோடித்
தருணமதிலே நொடிக்குளழைத்துக் கொண்டென்
சமுகமதில் வந்திடுவாய் சாற்றினேனே

**ராயன் வச**

கேளாய் கட்டியமேயதி சீக்கிரஞ் சென்று நமது மதியூகியை யழைத்து வருவாயாக

**கட்-தகு**

தந்தானத்தந்தாரு

மன்னவனாமியெத்து இன்னேரத்தில் மதித்து
மந்திரியைத் தானழைக்க விந்தையாய்ச் சொன்னாரே
தென்னவனு மெனக்குச் சொன்னவுரை ப்படிக்குச்
சீக்கிரத்தில் மந்திரியைப் பார்த்தழைத்து வருவேன் (தந்)
இத்தரையின் மீது அத்திரம் போலேகி
ஏந்தல் மதிமந்திரியைத் தோர்ந்தழைப்பேன் நானே
மெத்த விரைவாக வத்திநடை நடந்து விள்ளு
மதிமந்திரியை யுள்ளன்புட னழைப்பேன் (தந்)

## மந்திரிவரவு
## சபை-கவி

சென்னியிற்றலைப் பாச்சூட்டிச் சிறந்த ஆபரணமாட்டி
மின்னுபட்டாடையோடு விரலிற்கல்லாளி பூட்டித்
தன்னிகரில்லாச் சூட்ச சகலபுத்திகளுந் தேர்ந்த
மன்னவனி யெத்துநேச மந்திரி வருகின்றானெ

### சபை-தரு

மந்திரி வந்தானே சபைதனில் மந்திரி வந்தானே
மந்திரி வந்தானே தந்தரயூகிர்த
முந்திறல்வல்லப விந்தையதாகவே (மந்)

சென்னியிலேகிருட மணிந்திடு
மன்னவரே வெருவ இன்னிலமாள்கை செய்யேந் தலியத்துவின்
நன்னயமேவிய சொன்னய வாசலில் (மந்)

**மந்திரி-தரு**

தனனத்தானினதந்தே

திடல்பெற்றிடு புவியை யடலுற்றரசுபுரி
செம்மலாமி யெத்துசீர்பெறும் வாசல்
கடலுற்றிடு தானைகளென வுற்றிடுமகுவார்
கலங்கப் புத்திபுகட்டுங்கலை வல்லோன் நானே (தன)

அடல்பெற்றிடு வயவர் கெடிபட்டெனது பெயர்க் கஞ்சியேபின்னிட்டு
அகலுவாரென்றும் அந்த மதியில் வல்ல மந்திரேசனைப் பந்துபோல்
ஆட்டுந்திறல்மிகுத்த அதிபதி நானே (தன)

இன்னுமெனைப் போலிந்த மண்ணில் மதிதெரிந்தோ ரிருப்பாரோ
இனிவந்து பிறப்பாரோபூவில்
கன்னன் கொடைக்கிணையோ வென்னை மதிப்போரெல்லாம்
கையில் வெள்ளிகொள்ளை பெய்வேன் மழையைப்போலே (தன)

கன்னல் வயலிற்பொய்கை துன்னுமருவி பாய்ந்து
செந்நெல்வளம் பெருக்குஞ் சிறந்ததமாஸ்கு

மன்னனியத்திராசன் சொர்னக் கொலுவின் வாசல்
தன்னில் மகிழ்வோடிப்போ சடுதிசெல்வேனே (தன)

**மந் -வாழிக் கவி**

வாழிபொன்மவுலி வாழி வயங்கு செங்கோன்மை வாழி
வாழிநந்நீதி வாழிவயபுயமகிமை வாழி
வாழியுன்சகல செல்வவரிசையும் வாழிவாழி
வாழிநீடுழியாய் நீர் வாழ்ந்திட வாழிதானே

**வசனம்**

அரசநெறியும் பிரசைகள் நீட்சியும் என்றென்றும் வாழ்ந்திருக்க வேண்டியது ராசனே

## ராயனும் மந்திரியும்
## நாட்டுவளமைத்தரு

**ராயன்**

வாரும் வாரும் விசையபராக்கிரம மந்திரியெந்தன் தந்திரியேநீ
சீர்பெறுமென் தமாஸ்கு நகர்வளஞ் செப்புவாயெனக் கொப்புடனோர்ந்தே

**மந்திரி**

கார்முகில துமின்னிச் சொலித்து உன்
போரின்வாத்தியம் போலே முளங்கி மாரிபெய்து
பழனங்களெங்கும் வளம்பெருகு துளங்களிப்பாக (நன்)

**ராயன்**

முக்காலந்தொறு மெங்கள் சமய முறைப்படி மனு வோர்களொழுகிப்
பத்தியாகவே வாழ்ந்துவாறாரா பகருவாய் வெகு பண்போடெனக்கே

**மந்திரி**

இச்செகமதையாளு மகிபனே யெப்பொழுதுமுனது குடிகள்
உச்சித கட்டளைப்படி மார்க்க ஒழுக்கமீறா ரிழுக்கறத்தானே (நன்)

**ராயன்**

வண்டலருங் கருங்குழல்வேல் விழி மாதர் கற்பிற்பழுதுகளேதும்
உண்டதோவதையின் றெனக்குநீயும் ஓதுவாயிந்தப் பூதலமீது

**மந்திரி**

எண்டிசை மன்னர் போற்றுந் தமாஸ்கிவ்வூ ரேந்தலேகாந்த னோடொத்து மாதர்
கண்டும்பாலும் போல்வாழுகிறாரிந்தக் காசினிதனில் நேசமதாக (நன்)

**ராயன்**

எந்தனாணைக் கடங்கியசிற்றர செல்ல வருமெனதுடை கப்பம்
வந்துதந்து எனதுடைபாத மலரைப் போற்றுவரா மகிழ்ந்தோதும்

**மந்திரி**

சுந்தரஞ்செறி யெங்கள்மகிபனே வந்து ராசருமதுதிறையை
நந்தயவுடனீந்து பதமலர் நாளும் போற்றியே வாறார்கள் மன்னா (நன்)

**மந்திரி வசனம்**

இதுதானுமது நாடுநகரின் வளமையறிந்து கொள்ளுமரசே.

**ராயன் கவி**

நாட்டினில் வளமைகேட்டு நன்மனப் பிரியமானேன்
வாட்டிறல் புரியுந்துட்ட மறுமன்னரெதிர்த்திடாமல்

சூட்டியபுத்தி ஞாயசூட்சமாராய்ந்து தேர்ந்து
தாட்டிக முடனேநாமித் தரைதனையாளுவோமே

**ராயன்வசனம்**

கேளுமந்திரியே நாடுநகரத்தின் வளமைகேட்டு மிகுதியுஞ் சந்தோஷமானேன் என்றும் போலெனது வாசலுக்கு மந்திரியாயிருப்பாயாக.

## லேயோனின் கட்டியன்வரவு
### சபை-கவி

துட்டர்கள் தம்மை வாட்டித் துரைத்தனம் புரிந்து கீர்த்தி
மட்டில்லா வாகைசூடும்ம மகிபனாமிசோரி தேசம்
கிட்டியே யரசாள்கின்ற கீர்த்திசேர்லேயோன் வாசற்
கட்டியகாரன் வந்துகளரியிற் தோற்றினானே

**சபை-தரு**

கட்டயகாரனும் வந்தான் களரிமீதிற் கட்டியகாரனும் வந்தான்....

கட்டியகாரன் வந்தான் காவலன்லேயோனதிபன்
பட்டினந்தன்னில் வாற பான்மையை யெடுத்துக்கூற (கட்)

கையிற்பிரம்பு பிடித்து இருகழலிற் கட்டிய சிலம்பை யொலித்து
மெய்யினிற் சுகந்தநறை வீசுபன்னிர் வாசம் பூசி
வையகத்தை யாளுகின்ற மன்னவன் லேயோனின் வாசற். (கட்)

**கட்டியன்தரு**

சீருற்ற இந்நகர் மானரே யெங்கள்
பேர்பெற்றலேயோன் மன்னர்வாறார் காண் நீங்கள்
நேருற்றெல்லோருமாய் வாருங்கோ வந்து
ஏருற்றவர்பதஞ் சேருங்கோ (நன்)

வாகுற்ற கூந்தல் மின்னார்களே முடி மன்னன்லே
யோனிதோவாறார் காண் நீங்கள்
சீருற்றொன்றாகவே கூடுங்கோ
வேந்தன் பாதத்திற்சாய்மரை போடுங்கோ (நன்)

சித்திரவேலைகள் செய்யுங்கோ நல்ல
செண்டுவிளக்குகள் வையுங்கோ
பத்திரமாய்ப்பந்தல் போடுங்கோ போட்டுப்
பாரிலுள்ளோரெல்லாங் கூடுங்கோ (நன்)

வேலைக்கு வேலையாய்ச் செய்யுங்கோ
காவின் மெல்லி தட்பூக்களைக் கொய்யுங்கோ
மாலைக்கு மாலை யுண்டாக்குங்கோ
ஆக்கி வர்ன்ன நற்பந்தலிற்தூக்குங்கோ (நன்)

சேலையொத்த விழிமாதரே ஊன வேலைவைத்தாள்
மன்னன் வாறார்காண் நீங்கள்
பாலையொத்த மனதாகவே யவர்
காலையர்ச்சித்திடுவீர்களே (நன்)

கோலக்குலக்குணவீரரே யெங்கள்
நேர்மைக்கதிபதி வாறார்காண் நீங்கள்
சீலத்துடன் வந்துதோற்றுங்கோ எங்கள்
தென்னவன்தன்னடி போற்றுங்கோ (நன்)

**கட்டியன்-வசனம்**

மகத்துவகெம்பீரசக்கராதிபதியாகிய இசோரிநாடாள்லேயோன் மன்னன்கொலுவுக்கு வருகிறார் சமூகமெச்சரிக்கை சாமிவெகுபராக்கு

## லேயோன் ராயன் வரவு
## சபை கவி

சீருலாவு செம்பொனினாற் செய்கிரீட மின்னவே
செப்புமார்பில் முத்துமாலை சேரவாரத்துன்னவே
ஏருலாவுவதன சந்திர எழில்முகமிலங்கவே
ஏகவாகதேசராச ரிணையடி வணங்கவே
பேருலாவு மந்ரவாள்கை பேணியே பிடிக்கவே
பேசருங்கலைஞர்ராக பேரிசைபடிக்கவே
வாருலாவுபூவையார்கள் வந்தடப்பமேந்தவே
மன்னனா மிசோரிலேயோன்வயங்கு சபையிற்தோற்றினான்

### சபை-தரு

நன்ன நன்ன

செம்பொன்னாற் கிரீடமின்னச் சித்திரச்செங் கோல்கைதுன்னப்
பைம்பொன்னாரிசோரிலேயோன் பார்த்திபன் சபைவந்தானே (நன்)

கொம்புகுழல் பம்பைதம்பூர் கொண்டிசை பாடப்பொய்கை
சூழ் மண்டலத்தையாளுகின்ற மன்னன்லேயோன் தோற்றினானே (நன்)

**ராயன் தரு** (ககனம் புவி எ. மெ.)

சீருற்றிடு புவியோர் பதமலர் சூடிச்சிரம்பணிய இசோரியென் றேருற்றிடுநகர்
நேருற்றரசு செய் ராசற்கதிவித ராசனும் நானே (தன)

காருற்றிடுமதமே பொழிகரி சேனைத்திரள்சூழ மனுமுறை
காண விதிமுறை பேண இருந்திடு காசுற்றிடுமக ராசனும் நானே (தன)

மலையுற்றிடு புயமே வியதிறல் மதிமந்திரிமார்கள் இருபிறம் வரவுங்
குடை கொடியுறவும்புவனியை மகிழ்வோடரசுசெய்மகிபதி நானே (தன)

உலைசுற்றிடுரெத்ன நவமணி நலமாயிலகியொளி காலிக்கு
முதையாதிபனென வதியுமெதைருங் கொலுவுக் கதிவித பரிவிற்செல்வேனே
செங்கோல் செலுத்தியரசாளுவேன் (தன)

**கட்டியன் கவி**

வட்டவாரிதி சூழிந்தவையகமொரு குடைக்கீள்த்
திட்டமாயாள்கை செய்யுஞ் சிறந்த நல்லரசேயுந்தன்
பட்டினமொடு நாடெங்கும் பலன்பெற்று நன்மைசேர்ந்து
சட்டமாயோங்கவுந்தன் சரணிணை போற்றி தானே

**கட்டியன் வச.**

அரசிருப்பும் அஸ்தானக் கொலுஞ் சரணமே சரணம் மகாராசனே

**ராயன் கவி**

போற்றியிங் கென்னை வாழ்த்திப்புகழு கட்டியனேகேளாய்
காற்றெனவிரைந்து சென்று கருதரும்யூக புத்தி
சாற்றிடுமுபாய சூட்ச சகல தந்திர முந்தேர்ந்த
சூத்திரமதி வல்லோனைச் சுறுக்கினி லழைத்திடாயே

**ராயன் கவி**

அகோகேளுங் கட்டியமெ அதிசீக்கிரஞ் சென்று நமது மந்திரியை வரச்செய்வாயாக

**கட்டியன் வச.**

அப்படியே

**கட்டியன் தரு** (தேனாரரி எ-மெ)

தேனார் மலர்மாலை புனைந்திடு செம்மல்லேயோனுரை போல் இன்று
நானே செல்லு வேனமைச்சன்றன்னை நட்புடனேயழைக்க (தனா)

கானார்தடஞ் சூழுமிசோரிமன் கட்டளையாம் படியே செல்லு வேனேயிந்த
நேரமமைச்சனைத் தீவுரமாயழைக்க (தானா)

நடையி லெனைப்போலேசமர்த்தர்கள் நாட்டில் வேறாருமுண்டோ
அரை நொடிசெல்வழியான தோர்நாளில்யா னோடிநடந்திடுவேன் (தனா)

மடைசூழுமிசோரி மகிபன்வழுத்திய சொற்படியே அவர்
திடம்நீள் மதிவல்லபயூகியைச் சென்றழைப்பேன் நானே (தானா)

### லேயோனின் மந்திரி வரவு

#### சபை-கவி

சுந்தரப்பாகை சூட்டித் துலங்கு பட்டுடைகள்கள் மாட்டிக்
கந்தரத்தினிற் பூமாலைகமழ முத்தாரமின்னத்
தந்தரவுபாய சூட்ச சகலபுத்திகளுந் தோர்ந்த
மந்திரிசபையின் மீது வளம்பெறத் தோற்றினானே

#### சபை-தரு

தனத்தேதானா
அழகொத்துலாவு வளமொத்த மாலை
அழகத்தினூடு புளகத்தோடாடக்

களபத்தின் வாசந் தலமுற்றும் வீசக்
கலைகற்ற மதிமந்திரி களரியுற்றனனே (தன)

தரைமுற்று மாளுந் திறைபெற்று வாழும்
தயைபெற்ற போசன் வயமுற்றராசன்
வரையுற்றமார்பன் திருவுற்ற வாசல்
வலிமைசேர் மதிவல்லோன் மகிழ்வோடுற்றானே (தன)

**மந்திரி தரு** (கூனற்ற வள எ.மெ.)
தேசுற்றிடுதவிசி லேறித்தகுபவுள்சோ டாசற்றரசு செய்யும் அதிபன்லேயோனின்
வாசற்கதி மகிமை பேசுற்றிடு தகமை மதியூக மந்திர அதியூகி நானே (தான)

வாசத்திறல் மதிப்புப் பேசுற்றிடுகதிப்பு வீசுற்றிதீராதி விறலவன் நானே
மோசத்தவரை வெல்ல யோசித்ததிக வல்ல முறைசொற்றதிக சூட்சம்
நிறையூகி நானே (தான)

அந்தமதியில் வல்ல மந்திரேசனையே வெல்ல
இந்தத்தரையில் வல்லோ ரெவரிருப்பாரோ
முந்திப்பிடிப்பேன் தீயா யிந்தப்பதியிசோரி
மந்திரியெனக்கினை வருவரோஆரும் (தான)

இந்தத்தரையைப்பந்தா யந்தத்துடனே யொன்றாய்
வந்தித்துடன் புரட்டவல்லவன் நானே
சிந்தைத்துணிவன ˙வீர முந்துற்றதிபன்லேயோ
வந்தக்கொலுவதன் முன்னாகச் செல்வேனே (தான)

**மந் -கவி**
சங்களை தடங்கள் சூழுந் தரணியையோர் குடைக்கீள்
மங்கள சுகத்தோடாளும் மன்னவர் மன்னா வாழி
துங்கமுற்றிடு முன் செங்கோல் துலங்கிட வாழி வாழி
இங்கெனை யழைத்த செய்தியியம்பு வீரிறைவர் கோவே

**மந்திரி வச.**
அரசுநெறியும் நீடிய ஆள்கையும் என்றென்றுந்தழைத்து வாழ்ந்திருக்கக் கடவது ராசனே

## ராயனும் மந்திரியும் தரு

**ராயன்**
தந்தானந் தனந்தனந் தானத்தானிரு
வாரும் வாரும் விசைய மந்திரி வளப்புஞ் செழிப்பும்
மருவுமென்தேச நகரின் வளஞ் சொல்வாய் எனது மந்திரி

**மந்திரி**
கார்முகில துமின்னிமுளங்கியே செந்நெல்துன்னிக்
களிக்கச்செழிக்கப் பொழியும் மாரியாய் எனது ராசனே (தந்)

**ராயன்**
எங்கள்சமய முறையின் படிசென ரொழுகியுலகி
லென்றும் நடந்து வருகின்றார்களா எனது மந்திரி

**மந்திரி**

துங்கலங்கிர்தலேயோன் மகிபனே சமைய முறையாய்த்
தொடர்ந்து குடிகள் நடந்துவருகிறார் எனது ராசனே (தந்)

**ராயன்**

அன்ன நடைசேரனங்குமார்களின் தமதலங்கிர்த
அரியகற்பினிற் குறைமற்றெது முண்டோ எனதுமந்திரி

**மந்திரி**

இன்னிலத்தினையாளும் மகிபனே ஏந்திழையார்கற்
பினிலேயாதொருபழுது மில்லையே எனதுராசனே (தந்)

**மந்திரி வசனம்**

இதுதான் உமது நாடுநகரத்திலுள்ள வளமை களறிந்துகொள்ளு மரசே

**ராயன்கவி**

நகரொடு நாட்டிலுள்ள நல்வளமனைத்துங் கேட்டு
அகமிக மகிட்சியானே னமைச்சனேயறையக் கேளாய்
சுகமிகு மரியநீதி துலங்குநற்கொலு முன்நின்று
வகைபெற என்றும் போலே மந்திரித்தனஞ் செய்வீரே

**மந்திரி வசனம்**

நல்லது மகாராசனே

### தரும சொரூபியும் மரியையடைக்கலமும் வரவு
### சபை-கவி

அற்புத வேதநாதனடியிணை மனத்திலுன்னிப்
பொற்புறுறவுக்கை பூட்டிப் பொன்னினாபாணம் மாட்டி
நற்புகழாயிசோரி நகரினில் வாழுகின்ற
விற்பனச்சத்ய வேத மெல்லியர் வருகின்றாரே

### சபை-தரு

நன்னயஞ்சேர் பொன்னின் வேலை நவரெத்ன முத்துமாலை
தன்னையணிந்திடுநற் றையலர்வருகின்றாரே (நன்)

மங்கள சங்கீர்தம் பாடி மாமரிதுணையைநாடிச்
சங்கைசேர் சபையின்மீது தார்குழலார் தோற்றினரே (நன்)

### பெண்களிருவருந் தரு

**தரும சொரூபி** (விண்ணும் புவியும் எ.மெ.)

அஞ்சுகமொத்தரஞ்சித மொழி யரியமரியையடைக் கலத்தாளே
நெஞ்சிலே தேவதாயைப் போற்றி நிதமும் வாழுவோம்
அவர்சந்திர பதமேதாழுவோம்

**மரியையடைக்கலம்**

வஞ்சிவண்டின மிஞ்சுதேன்குழல் மாதேதரும சொரூபிநேசியே
சஞ்சலங்களை மாற்றுவாள்தேவ தாயார் போற்றுவோம்
எமையெந்த நாளுந்தேற்றுவார் (நன்)

**தரும சொரூபி**

உடுக்குல நற்பூஷணியாளி னுபயபதத்தையு கந்துதொழுது
திடத்தோடெழியோர்க் கன்னமிடுதல் சிறந்த நன்மையே
அனுகாதிங் குறைந்து புன்மையே

**மரியையடைக்கலம்**

கொடுக்குங் கொடையே யொன்றுநூறாகும் கோதையேயிந்தப் பூதலத்திலே
அடைக்கலத் தாயார் நம்மைக்கைவிடார்
அவரின் தஞ்சமே யகற்றுவார் புவியின் பஞ்சமே (நன்)

**தரும சொரூபி**

இந்துநாயகி யெங்களுக்கவ ளிரக்கமுள்ள தாயுருக்க நாயகி
பைந்தொடியேநாம்மறக்கலாகாதிப் படியோர்போதுமே
அனுகாதோர் கொடியதீதுமே

**மரியையடைக்கலம்**

சுந்தரியவள்சுரூப வணக்கம் துட்டலேயோன் கெட்டமகிபன்
வந்தனை செய்யக்கூடாதென்றுமே மறுக்கப்பார்க்கிறான்
அவன்கொண்ட கெறுக்கைப் போக்குவார் (நன்)

**பெண்கள் கொச்சகம்**

வெள்ளைமதியும் மீன்முடியும் வெய்யோனுடையும் வெயிலெறிக்க
உள்ளன்பாய் மாவிலங்கேணி யுதித்த தேவராக்கினியே
வள்ளலுனது திருமகனார் மறைக்கோரிடரும் வாராமல்
பிள்ளைப்பவுள்சை நீழவைப்பாய்பிஞ்சுமதிச் செஞ்சரண் துணையே

**பெண்கள் வசனம்**

அர்ச்சியசிட்ட அடைக்கலமாதாவே அடியோருக்கோர் தீங்கும் வராமற் காப்பாற்றியருளுந் தாயே

## லேயோனும் மந்திரியுந் தரு

**லேயோன்** (சொல்லக்கேளு மென் எ.மெ.)

பேசரும்புத்தி ஞாயவு பாயம் பிரித்தெனக்கு விரித்துரைக்கின்ற
வாசமாலை யணிந்திடு மாமதி வல்லவா ஒன்று சொல்லிடக்கேளும்

**மந்திரி**

போசவாச வுல்லாவிலாசநற் பொங்கமேவியலேயோன் நரேந்திரா
தேசமீதினில் நேசமோடேநீர் திடத்துடனே யெடுத்துரைப்பீரே (நன்)

**லேயோன்**

துய்யவென்ன ரசாட்சிக்குள்ளேயோர் சுரூபத்தின் வணக்கந்தன்னைமானோர்
செய்யக்கூடா தென்றேயொரு கட்டளை திட்டமாய்ச் செய்யவுற்று நினைத்தேன்

**மந்திரி**

வையமீதினிலேயுன் மொழிக்கு மறுப்பு நானு முரைத்திடலாமோ
செய்வதென்வதற் கென்றுநீரிங்கு திட்டமாயென் முன் செப்பிடுவீரே (நன்)

**லேயோன்**

இன்று தொட்டுச் சுரூப வணக்க மெவருஞ் செய்யப்படா தென்று நானும்
கண்டிப்பாகப் பறைவிட்டுக் கட்டளை காட்டவெண்ணினே தாட்டிகமாக

**மந்திரி**

மிண்டர்தங்கள் மதங்களுடக்கிடு வேந்தனேயும் முரையது போலே
இன்று செய்திடல் நல்லது வாகிடும் எங்களை யரசாளுமிறையே (நன்)

**லேயோன் கவி**

குறையில்லா தெனது வாசல் குணமுடன் காத்துநிற்கும்
நிறைமதி கட்யகாரா நிகட்திடும் வார்த்தை கேளாய்
விரைவுடன் நடந்து சென்றுவிளம்பரஞ் செய்யவல்ல
பறையனை யழைத்துக் கொண்டு பரிவுடன் வருகுவாயே

**கட்டியன் வசனம்**

அப்படியே செய்கிறே னரசே

**கட்டியன் தரு**

தேடியழைத் தோடிவருவேன் விரைவுடனே தேடி...

தேடியழைத்தே வருவேன் தீவுரமாய் மன்னன் சொற்குச்
சாடியே முரசொலிக்கும் சாம்புவனையிப் பொழுது (தேடி)

கந்தப்பனை முந்தி யழைத்தேன் இன்றைக்கு அந்தக்
கண்ணப்பனைத் தானழைத்திடில்
எந்தனக்கு நாலுபண மேற்றமுடனே கிடைக்கும்
இப்பொழுதினிலே நானும் எட்டிவிரைந்தோடிச் சென்று (தேடி)

பைங்குவளைத் தாரணியும் பார்த்திபன் நகருக்குள்ளே
பத்தியாய்ச் சுரூபங்களை முத்தி செய்து போற்றிடாமல்
எங்கள் ராசன் கட்டளையொன் றிங்குசெய்யப் போகிறாராம்
ஏந்தலுரைக்கேவிரை வாயிப் பொழுது நானுஞ் சென்று (தேடி)

**பறையன் வரவு**
**சபை-கவி**

கடினமாய்க் குடிக்குங் கஞ்சாக்கள்ளின் மேலரக்குத் தானும்
துடினமாய் சிரமட்டாகச் சோபனமுறவே யூட்டிப்
பிடிமுளத்தடியு மேந்திப் பெரும்பறை தோள்மேற் போட்டு
வடிவுறு சபையின் மீது வள்ளுவன் வருகின்றானே.

**சபை-தரு**

வள்ளுவன் வந்தானே சபைதனில் வள்ளுவன் வந்தானே
வள்ளுவன் வந்தானே துள்ளிய வெறியொடு
மெள்ள வெண்ணுரை வாயாற் றள்ளவேதரை தனில் (வள்)

கால்நடை தள்ளாடி யவனிரு கண்ணும் பூஞ்சலாடி
கோலங் கெட்டடிக்கடி குளறியே விழுந்தெழுந்
தாலமுண்டவரைப் போலறிவது குன்றியே (வள்)

செத்திடு மாடதனைத் திடனாய்ச்சிமக்குங் காவுதடியும்
பத்திரமாயெடுத்துப் பலத்ததோள் மீது வைத்துக்
கத்திகடகமொடு கயிறுதனையுங் கொண்டு (வள்)

**பறையன் தரு**

தெந்தின தின தினனா

ஆண்டே யென்னாண்டேய்மாரே நாங்கள்
ஆதியிற் பறையர்கள் தானாண்டைமாரே
பார்ப்பானுக்கு மூப்பனாண்டே எங்கள்
பறைச்சாதி முதற்சாதியறியீரோ
ஆண்டே கேட்பாரில்லாததினாலே எம்மைக்
கீட்குலமாகவே சாற்றிறீராண்டே (தெந்)

பூணூலையவர் கொண்டாராண்டே நாங்கள்
பானூலைக்கைக் கொண்டோம்பா ருங்களாண்டே (தெந்)

பொறிக்கிடங்கவர்க் குண்டாண்டே
சீலைத் தறிக்கிடங்கெமக்குண்டு தானறியாண்டே மான்
தோலையவர்கொண்டாராண்டே நாங்கள் மாட்டுத்
தோலைக்கைக் கொண்டு வாழுரோமாண்டே
வேம்பெடிப் பனங்கள்ளு ஆண்டே தலையை
மிகவாகச் சுளற்றியே வருகுது ஆண்டே (தெந்)

**கட்டியன் கவி**

செத்திடு மாடு தன்னைத் தேடியேசென்று கண்டு
கத்தி வைத்தறுத் தெடுக்குங் கருதரும் பறையனே கேள்
இத்தரையாளுகின்ற இயல்வுறுலேயோன் ராசன்
வித்தகமுட னழைத்தார் விரைவினில் வருகுவாயே

**கட்டியன் வசனம்**

கேளடாபறையா உன்னை ராசன்வரும்படி சொன்னார் வருவாயாக

**பறை வச**

அப்படியே வருகிறேன் நயிந்தே

**பறையன் கவி**

கொத்தனின் வளவுக்குள்ளே கொடிச்சிவாலியென்றோர் மாடு
செத்துப்போய்க் கிடக்கக்கண்டு சேதனும் நானுஞ்சென்று
கத்திவைத்தறுக்கும் போது கட்டியகாரன் வந்து
உத்தரவுரைத்தார் வந்தேனோ துமென்னென்று தானே

**கட்டியன் வசனம்**

மகாராசனே யென்னையழைத்த விபரமறியச் சொல்லுவீராக

**லேயோன் கவி**

காவலர்கள் போற்றுமெந்தன் நகர மீது
கருதியுறுங்குடி சென்களெவ ரென்றாலும்
மாபரிவாயெவ்வித சுரூபத்துக்கும் வணக்கமது
செய்திடவே கூடாதென்றும்
மேவுமெந்தனுரைமீறிச் செய்வோருக்க
வெகுவிதவாதைகள் புரிவேனென்று
நீயும் தாவுமுந்தன் பறையாலே சாற்றியிங்கு
தான்வருவாய் சலாருனக்குத் தருகுவேனே

**பறை வசனம்**

அப்படியே செய்கிறேனரசே

**பறையன் அகவல்**

சீர்செறியிவ் வூர்ச் சென்களே கேளும்
தார் செறிலேயோன் தராபதி நாட்டில்
வாழ்பவர் சுரூப வணக்கமே செய்தல்
ஆள்கைசேர் மகிபன் ஆகாதென் றுரைத்தார்
அம்மொழிமீறி யவனியில் நடக்கில் இம்மையில் மெத்த இடரதுழரிவார்
என்றவர் மொழிந்தார்
இதுமுழு துண்மை நன்றென மதித்து நடந்து கொள்வீரே
அதுசரி திட்டம் அரசருக்கிட்டம் இது ஒரு சட்டம் எனக்கென்ன நட்டம்

## தரும சுரூபியும் மரியையடைக்கலமும் தரு

**தரும சுரூபி** (செந்திருவர்ன்ன எ.மெ.)

அன்னமே மானேயென் நேசியருங் குயிலாளே முடி
மன்னன் சுரூப வணக்கம் மறுக்கச் சொன்னானே

**மரியையடைக்கலம்**

இன்னில வாழ்வு நிலையுள்ள தல்லவென் நேசி நமக்
கென்ன வந்தாலுஞ் சுரூபத்துக் கேதுதி செய்வோம் (நன்)

**தரும சுரூபி**

அன்னை யெமது அன்பான அடைக்கல மாதா நமக்
கின்னல் வராமற் காப்பாற்றுவாரென்று மென்தோழி

**மரியையடைக்கலம்**

மின்மினிப்பூச்சிக் கிருளுமகலுவ துண்டோ
அந்த அந்நீதனாலே யழிக்கவுமாகாது நேசி (நன்)

**தரும சுரூபி**

எத்தனை மன்னர் திருச்சபைக் கெயெதிராகத் தங்கள்
தத்துவங்காட்டிக் கீழானார்கள் தானறி நேசி

**மரியையடைக்கலம்**

முத்துமொழியே பொல்லாதவச் சத்துரு மன்னன் சும்மா
கத்தினா லென்னவரா தொன்றுங்கை தொழுவோம் நாம் (நன்)

**பெண்களிருவரும் கொச்சகம்**

இருப்பது பொய் போவது மெய்யேந்தலெமையே பிடித்து
வருத்துகினுமே சுரூப வணக்கமதை மீறோம் நாம்
வரைத்தடஞ் சூழ்மானிடரே மாதாவையா தரையில்
உருக்கமுடன் போற்றி வந்தால் உய்திடுவோம் நாங்களுமே

**வசனம்**

இந்த உலகவாழ்வு அநித்தியம் இந்த அநித்திய வாழ்வுக்காக அரசன் அநீதியாக விடுத்த கட்டளைகளுக்கு அமைந்து நித்திய வாழ்வை யிழக்கலாகாது என்னவாதை செய்தாலும் சுரூப வணக்கத்தை யொருபோதுங் கைவிடாமல் நடந்து கொள்வோமாக

## லேயோனும் மந்திரியும் தரு

**லேயோன்**

தந்தனத்தந்தானதானின...

தந்தரஞ்சேர் மந்திரியே விந்தையாயென் கட்டளைக்குத்
தானமைந்து மானிடர்கள் வாழ்கிறாரா கூறும்

**மந்திரி**

சிந்துரத்தை நேர்வலிமை முந்துரத மன்னவனே
சிற்சிலர் நடக்கிறார்கள் மற்றோர் மீறிவாறார் (தந்)

**லேயோன்**

இங்கெனது கட்டளைக் கடங்கிட வசடர்தமக்
கென்னபங்கஞ் செய்திடலாம் இன்னிலத்தின் மீது

**மந்திரி**

தங்க மகுடம் புனையு மெங்களையாள் பூபதியே
இங்கழைத்ததை விடுமென்றேந்தலே நீர்கூறும் (தந்)

**லேயோன்**

திட்டமாய் நானிங்கழைத்துச் செப்பு மொழி மீறிடுகில்
செய்வ தென்னவென்றெ னக்குத் தேர்ந்துரை செய்வீரே

**மந்திரி**

கட்டியடித் தாக்கினை செய் தேகடுஞ் சிறையதனில்க்
காவலனே நீரிடுவீர் கோப்முற்றங் கவரை (தந்)

**லேயோன் கவி**

தண்டெடுத்துச் சமர்புரிய வருமொன்னாரைச்
சமர்க்களத்திற் பிறங்காட்டத் தகமையோடு
நின்றெனக்குயூக புத்திபுகட்டும் வல்ல
நேசமிகு மந்திரியே நிகட்தக் கேளாய்
வண்டுறையும் பூந்தடஞ் சூழெனது நாட்டில்

வாழ்ந்திடுமானோர் சுரப வணக்கஞ் செய்யக்
கண்டிடுகிலேவலர் விட்டழைத்தே மிக்க
கடிதுடனென் சுமுகமதில் வருகுவாயே

**மந்திரி கவி**

திட்டமா யரசன் வாசல் செழிப்புறக் காவல் செய்யுங்
கட்டியகாரா நீயுங்கடு நடையாகச் சென்று
மட்டடாச் சுரூபங்கட்கு வணக்கஞ் செய்வோரைக் கண்டாற்
சட்டெனப் பிடித்துக் கொண்டு சடுதியாய் வருகுவாயே

**மந்திரி வசனம்**

கேளடா கட்டியமெ சுரூப வணக்கஞ் செய்பவரைக் கண்டாற் பிடித்து வருவாயாக

**கட்டியன் தரு**

கடகரி புயவாமன் எங்கள் துரை காவலன் மதிமந்திரி மேவியென்னையே
திடமுடன் சுரூபத்துக்கு வணக்கமே செய்திடுவோர்
தமைக்கண்டால் வெய்ய சினமாய் (தந்)

விரைவுடன் பிடித்துக்கொண்டு வரும்படி விட்டமொழி போலே நானுந்
திட்டமாய் வந்தேன் தரையினிலெனைப் போலே
நடந்திடச் சமர்த்தர் மற்றெவருண்டோ சகசமதாய் (தந்)

ஒருதின வழியதனை மூன்றுநாளி லோடியோடியே சுறுக்கில்நாடி நடப்பேன்
அரைநாளிற் செய்யும் வேலை ஒருநாளில்
ஆயிரந்தரஞ் செய்வேன் நானதி சுறுக்காய் (தந்)

சத்தியமாமறையின் சுரூபங்களைத் தான் வணங்குவோரைக்
கண்டால் நான் துணிந்து போய்ச் சுற்றியே பிடித்திழுத்து எங்களையாள் துரைராசன்
சமூகத்தில் விரைவாய்ச் செல்வேன் (தந்)

**தரும சொரூபி கொச்சகம்**

இடுக்கணணு காதுலகுக் கேந்தல்விடு கட்டளையால்
ஒடுக்கமின்றியே தேவ உத்தமதயா பரியும்
திடத்துடனே காப்பாற்றத் தேகன்னியைப்பணிய
அடைக்கலமாதா கோயிற் காயிளை நாம் செல்வோமே

## தரும சொரூபி மரியையடைக்கலம் தரு

(முத்திரைக்கட்டு எ. மெ)

**தரும சொரூபி**

செல்வோஞ் செல்வோமே இப்போது நாம் செல்வோஞ் செல்வோமே
செல்லுவோ மெங்கட்கடைக்கல நாயகி தீர்த்திடுவாள் துயர் மாற்றிடுவாரீ நாளும்
பொல்லா மகிபனும் வீணாயிருந்து புரியுங்கருமம் புகை போலொழிறமே (செல்)

**மரியையடைக்கலம்**

அன்பிருக்கும் நல்ல முதவூற்றாகிய அன்னை சுரூப வணக்கமதற்காக
மன்னவன் வாதை செய்தாலும் நாம் விட்டிடோ
ம்மாதாவின் பாதத்தைத் தேடித் தேடியிப்போ (செல்)

**தரும சொரூபி**

கன்னி பகலையுடையா யுடுத்தவள் கைவிடா நம்பினோர்
காசினி மீதிலே இன்னலடையாது காப்பாற்றிக் கொள்ளுவா
இந்து பதஞான சுந்தரி கோவிற்கு (செல்)

**மரியையடைக்கலம்**

விண்ணையளாவு மதிளாற் பொலிந்திடும்
வேத நல்ராக்கினி யாலயந் தோற்றுது அன்னையடைக்கலத் தாய் சுரூபம் முன்போய்
ஆண்டவள் தன்னையே வேண்டுதல் செய்குவோம் (செல்)

## பெண்களிருவரும் தேவாரம்

இடுக்கணுற்றடைவோர்க் கென்று மினிய தேற்றரவையீந்து
திடத்துடன் காக்கும் ஞான
தேவயீஸ் பரியே தூய அடைக்கல மாதாவேயூ ரரசனின்
தீங்கில்நின்று கடைக்கண்ணால் நோக்கி
யெம்மைக் கைதூக்கியாள் வாய்போற்றி

**இருவரும் வசனம்**

அர்ச்சியசிட்ட அடைக்கல மாதாவே உமது சுரூபத்துக்கு வணக்கஞ் செய்யக்கூடா தென்று அரசன் கட்டளை விடுத்தான் அவன் என்ன செய்வானோ தெரியவில்லை அந்த ஆபத்தில் நின்று அடியோரைக் காப்பாற்றி யருளுந்தாயே

**கட்டியன் கவி**

கன்னிமாதர்களே யெங்கள் காவலன்லே யோன்சொல்லுத்
தன்னையே மறுத்து நீங்கள் தாமுமே சுரூபத்துக்கு
இன்னிதோ வணக்கஞ் செய்தீ ரிறையறை மொழியின் வண்ணம்
மன்னவன் சமூகஞ் செல்ல வருகுவீர் வருகுவீரே

**கட்டியன் வசனம்**

கேளும் பெண்காள் எங்களரசன் சுரூப வணக்கஞ் செய்பவர்களைப் பிடித்துவரச் சொன்னார் வருவீர்களாக

**பெண்கள் கொச்**

தாலமதையாளுகின்ற தார்பதியாம்லேயோவக்
கோலமன்னனெம்மைக் குறிக்கழைக்குங் கருத்தினுக்கு
ஆலமதைத்தாள் மிதித்த அன்னை கன்னியாள் பயந்த
பாலகனை முன்னடத்திப் பரிவொடு நாம் வாறோமே

## பெண்கள்-தரு

**தரும**

அன்னை கன்னி மாமரியே யெம்மை யாளுந்தயாபரியே
மன்னனெம்மை வரவழைத்த தென்ன வாறதென்று தேறோமே

**மரிய**

முன்னமும்மை வாழ்த்தி வந்த கன்னி மூவருக்கு மோர் பொழுது
பொன்னின்முடி சூட்டுதல் போல் எங்கள் பொற்பிலகுங் கற்பினைக்கார்

**தரும**

கடலில் விழுந்தேயமிழ்த ஒரு காளை தன்னைக் காத்தது போல்
திடமுடனே யெங்கள் கற்பைத் திருத் தேவ தாயேநீர் காரும்

**மரிய**

காவலனாம் எம்பரதோர் தோகை கற்பினையே காத்தது போல்ப்ப
பூவிலெங்கள் கற்பினைக்கார் பரி பூரணியே மாமரியே

**தரும**

ஆதரையை யாளுகின்ற லேயோ னாகிய மன்னவனு மெம்மை
வாதை செய்து வருத்துகினும் உம்மை மறவோ மெம்மாதாவே

**மரிய**

தீதனுகாத் தாயாரே உந்தன் திருச்சுரூபங்களுக்காக
வேதனை செய் தாலுமெம்மை உந்தன் மெல்லடியையே துதிப்போம்

**பெண்கள்-கொச்சகம்**

தரியலர்கள் பணிலேயோன் தானெமையிப்போ தழைத்தான்
அரிவையர்க ளெங்கள் மனமஞ்சுகுதே யஞ்சுகுதே
பரிவுடனுன்றன திருகண் பார்த்தெழியோர் மீதிரங்கி
மரியனையே யடைக்கலநன் மாதாவே காத்தருளே

**பெண்கள் வசனம்**

அர்ச்சியசிட்ட அடைக்கல மாதாவே எங்கள் பேரிலுமது திருக்கண் திருப்பிக் காப்பாற்றியருளுந் தாயே

**கட்டியன்வசனம்**

கேளும்பிரதானியே சுரூபங்களை வணங்கிய இப்பெண்களை யழைத்து வந்தேன் இதோ நிற்கிறார்களறிந்து கொள்வீராக

**மந்திரி கவி**

வீராணக் களத்தினிடையமர் செய்வோரை
வெட்டியெறிந்தே விருதுவெற்றி சூடிச்
சூரனென விருந்தரசு செய்யுமெங்கள்
தொல்வேந்தேயு மதுடைய சொல்லை மீறி
வாரமொடு தாமே சுரூத்துக்கு வணக்கமது புரிந்த இந்த மாதர் தம்மைத்
தீரமொடு அழைத்து வந்து நிற்கிறாரிச் செய்திதனை யறிந்திடுவீர் செருநரேறே

**வசனம்**

கேளும் ராசனே யுமது கட்டளையை மீறிச் சுரூபங்களை வணங்கிய மாதர்களைப் பிடித்து வந்து நிற்கிறார் களறிந்து கொள்வீராக

**லேயோன்**

கொற்றவனாகிப் பூமியையடக்கிக் கொண்டு வந்திதுவரையாய் நான்
குணமுடன் வணங்கி மணமுடன் தீபங்
கொழுத்தியே யர்ச்சனை செய்து நற்றயவாகத்

தொழுதவென் தேவர் நலமுள்ள திருவிழாப் பூசை
நாட்டியமாடி மேட்டிமைமாதை
நாடியேதுதித் தழகாக போற்றயவாக நாகவீகர்க்குப்
பொங்கலும் வேள்வியும் படைத்துப்
போற்றிடுசனர்கள் நாற்றிசை முழுதும்
புகழ்பெறப் பரப்பியேயிருக்கா மாற்றருஞ் சத்தியமறையுறு சுரூபம்
வணங்கவும் முறமையோ அரனின் மலர்ப்பதந் துதிப்பீரலர்க் குழலாரே
மகிமை பெற்றினிதுடன் வாழ்வீர்

**வசனம்**

கேளுங்கள் பெண்காள் எனது கட்டளைப் பிரகாரம் சுரூப வணக்கங்களை விட்டு எனது சமயத்தைப் பேணி வாழ்ந்து கொள்வீர்களாகா

**பெண்கள் தாழிசை**

வாச மாலை யணிராசனே யுமது வார்த்தையானது யேற்றிடோம்
மங்கை யெங்களை யேசங்கையீனமொடு வாட்டினுங்கை தொழமாட்டமே
நீசரானவர்கள் நேசமோடுசிவ லிங்கமானதுவை நம்பிடோம்
நிந்தையான நரகலகை தம்மையகம் நினைத்து நாமுமடி கும்பிடோம்
வேசை மாதர்களை யாசையோடணையும் விறும விட்டுணுவையுந் தொழோம்
வெட்டுமாடுபெலி வேள்வி தம்மையுமே
வினவியேற்றிடவும் நாமெழோம்
பூசை பொங்கல் புரிமோசமுங் கொடிய பூத்பேதமிது நாட்டமே
புத்தியீனர்கள்கு ளித்த சேற்றிலொரு போதும் நாம்புகுத மாட்டமே

**வசனம்**

கேளும் ராசனே அஞ்ஞானக் குருடருக்கு வழிகாட்டியாகிய சத்தியமறைச் சுரூப வணக்கத்தை விட்டு உமது பேய்ச் சமயத்தைக் கையேற்று நடக்கமாட்டோ மறிந்து கொள்வீராக

## லேயோனும் பெண்களும் தற்கத் தரு

**லேயோன்** (அன்ன நடைமாதே எ. மெ.)

மண்டலந் தன்னிலிப்போ தென்தேவை வசைமொழிந்தேயி கழ்ந்தீர்
துண்டம் பிறைநுதலோ ருங்களுடல் கண்டம்விள அரிவேன்

**தரும**

விண்டலத் தேயிருந்து மனுடரை மீட்டிரட்சிக்க வந்த
அண்டர்பர னருளுண் டுன் வார்த்தை கட்கஞ்சிடோம் நாமரசே (நன்)

**லேயோன்**

பாம்பணிவோன் மறையை ஆராதனை பண்ணிச் சுரூபங்களைத் தாம்
பணியாது விட்டாற் பிழைத்திடீர் தார்தல மீதினிலோ

**மரிய**

வீம்புடனெங்கள் தமைப் பிடித்து வெகுவதை செய்திடினும்
நாம் பிடித்த பிடியை ஓர்போதும் நழுவவிடோ மரசே (நன்)

**லேயோன்**

மைசேர்குழலாரே என் பேச்சை மறுத்து எதிர்த்துரைக்கில்
வெய்ய நரிநாய்கட் குமையும் விருந்தாயரிந்தெறிவேன்

**தரும**

துய்யமுடியரசே யெங்கள்தலை கொய்துருத்துகினும்
துய்ய சுரூபங்களின் வணக்கத்தைத் தொல்புவி மீதுவிடோம் (நன்)

**லேயோன்**

விட்டிடோமென் றெனக்கு எதிர்மொழி திட்டமுடனுரைத்தீர்
இட்டுங்களைச் சிறையில் வருத்துவே னேந்திழைமாரே (நன்)

**மரிய**

கட்டழகியுஸ்தீனாள் தனைச்சிறை காத்திட்ட வாறதுபோல்ச்
சிட்ட அடைக்கலத்தாய் சிறையில் வந்தெங்கள் துயர்தீர்ப்பார் (நன்)

**லேயோன்**

அன்ன நடையாளே யென்பேச்சுக் கடாத்து மொழியுரைத்தால்
இன்னிலமீதிலுங்கள் கற்புக்கு இடறுகள் செய்திடுவேன்

**தரும**

கண்ணியின்னேசி கற்புக் கிடரின்றிக் காத்திட்டவாறது போல்
அன்னைமரி காப்பாருன் சொல்லுக்கமைந்திடோம் நாமரசே (நன்)

**லேயோன்**

அமையோ மென்றேயின்மும் எதிர்மொழி யானது கூறிடவோ
உமை வெட்டுவேன் பெண் பழிக்கஞ்சுகிறே னொன்றொடிமாரே (நன்)

**மரிய**

எமை நீர் சினந்தாலும் வெட்டிநரிக் கேயிரையிட்டாலும் அமைவோம்
மெய்யேகனுக்கு அல்லாதுன்சொற் கஞ்சிடோம் நாமறிவீர்

**லேயோன் ஆசிரியம்**

அறியு மென்றேயுரை யடுத்ததோதி றீரதிகமாய் வசைபேசிறீர்
அப்படிய கங்காரமாச்சுதோ வெனையுமொரு அரசனென மதியாமலே
பிறிய முறுமெனதுமத தேவர்களனைத்தையும் பேய்களென்றே
மறுத்துப் பேசிடும்நாக்கைப் பிடித்தறுத்திப் போது பேய்களுண்ணக் கொடுப்பேன்
பொறியினிலகப்பட்ட எலியுமேதப்பியும் போகவே முடியுமோ தான்
பொங்குதே கோபமது இங்கெனது வாசற்பொருந்து கட்டியகாரனே
கறியினைக் கறிபிடித்திடு வாறதாகவிக் கன்னியர் தமைப்பிடித்துக்
கடுவேகமாகவே சிறை மீதிருத்யே காவலது புரிகுவாயே

**லேயோன் வசனம்**

கேளுங்கட்டிமே யென்னோடு ஆங்கார மொழி பேசிய இந்தப் பெண்களைச் சிறைச்சாலையிலிட்டு வருத்துவாயாக

**கட்டியன் கவி**

மலரணி குழல்மின்னாரே மங்கைகாளுங்கள் தம்மைப்
பலவந்தமாய்ப் பிடித்துப்பதைக்கவே யிழுத்துக் கொண்டு
தலமதிற் சிறையின்மீது தானடைத்திடவேயிப்போ
உலகையான் மன்னன் கொன்ன வுரைப்படி வருகுவீரே

**கட். வசனம்**

கேளும் பெண்காள் ராசன் சொற்படியுங்களைச் சிறையிலடைக்கப் போகிறேன் செல்வீர்களாக

## பெண்கள் தேவாரத் தரு

**தரும சொரூபி தேவாரம்**

பொன்னுல கிருந்து தேவன் புவியில் வந்தெமக்குயீந்த
நன்மறைச் சுரூபம்யாதும் நமஸ்கரிக்கா தீரென்று
(தரு)
மன்னன்லே யோவெங்கள் முன்னே சொல்ல நாங்கள் மறுத்ததாலே
சிறையினி லிருத்து மென்றான் என்ன வாதையிடர்கள் பண்ணினாலுந் தாயே
எமக்கு நீரே நல்ல திடத்தைத்தாரும்

**மரியை தேவாரம்**

கடுவினைக் கொலியாத்தின் முன்
காவலன் தவிது சென்று திடமுடன் செயித்தவாறாய்த்
தீயனைச் செயிக்கச் செய்யும்
(தரு)
வடிவுசேருஞ்சத்ய மறையினுக்காய்
மன்னன் வருத்தினாலுந் துயரது பொருத்தினாலும் கடியை நம்பிச்சத்திய மறைவிடாது
எம்மைக் காருந்தாயே திடமது தாருந்தாயே

**தரும தேவாரம்**

அலகையின் மயக்கினாலே அவனியில் முழைத்த வேதம்
தலமதில் வனங்கி மன்னன் சத்திய மறையைத் தள்ளி
(தரு)
உலைகிறானே மதி குலையிறானேயவ னுக்கிதாமோ கடவுள ருட்கிதாமோ
மலையில் வந்து தருமன் பிலகுவே தந்தன்னை மறந்திடாது
திடமது தந்து காரும்

**மரியை தேவாரம்**

கழுவினிலிருத்தினாலுங் கடுந்துயர் பொருத்தினாலும்
பழுதுறு சடத்தைத் துண்டாய்ப் பட்சி கட்கறுத்திட்டாலும்
(தரு)
வழுவுவோ மோசத்திய மறையிழந்து குணுங்கை வணங்குவோமோ
ஓர் போதும்நா மிணங்குவோமோ
அழுது வாடிநரகி லமிழ்ந்திடாதுன் திரு
ஆசிதாருந் தந்தெம்மை நீரேகாரும் (நன்)

**பெண்கள் வசனம்**

அர்ச்சியசிட்ட அடைக்கல மாதாவே அரசனெங்களுக்கு எவ்வித ஆக்கினை செய்த போதிலும் உமது சுரூபவணக்கத்தைக் கைவிடாத பலம் அடியோருக்குத் தந்தருள்வீராக

**கட்டியன் கவி**

இட்டமாயெங்கள் ராச னியம்பு கட்டளையை மீறித்
திட்டமாய்ச் சுரூபத்துக்குச் செய்திரோ வணக்கம் நீங்கள்
பட்டண மகிபன் சொன்ன படிக்கிந்தச் சிறைக் கூடத்தில்

இட்டேனிங் கொன்றும் பேசா திருந்திடீரிருந் திடீரே

**கட். வசனம்**

கேளும் பெண்காள் இந்தச்சிறைக் கூடத்திலொன்றும் பேசாதிருப்பீர்களாக

**பெண்கள் கொச்சகம்**

துட்டமுறு மன்னவனின் சொற்படிக்கு நாங்களுமே
கெட்ட சிறைச்சாலை தன்னிற் கீர்த்திபெற வேயிருக்கில்
நட்டமொன்றும் வாராது நானிலத்தி லெங்களுக்குக்
கிட்டவந்து நல்லருள் செய் கிருபை நிறை மாமரியே

**வசனம்**

பரிசுத்த கன்னியாய் திரியான தேவதாயே அந்நீதராசன் சொற்படி சிறைக்கூடத்தி லிருந்தாலும் வேத உண்மை தவறா திருக்கக்கிருபை செய்தருளுந் தாயே

**சபை கவி**

பூவையரும் மறிப்பிருந்து புலம்பும் வேளை புனிதனருளப்பர் நித்திரை போகவன்று
தேவமரிகனா வதனில் வந்து நின்று செம்மலந்த மங்கையர்க்குச் செய்வாறெல்லாம்
ஆவலுடன்சொன்னதின்பின்னின்னும் நீபோய ரிவையர்க்குப் புத்தியெடுத் தறையு மென்று
ஏவவவர் விழித்தெழுந்து கலக்க முற்று எழுந்து மரிபத்தினை யேயிறஞ் சுவாரே

## இயெந்து மந்திரி - அருளப்பர் பரணி

**இயெந்து மந்திரி**

கருணை நிறையருப சொருபமு மொன்றான
கர்த்தனையீன் றருளு பரிசுத்த தாயே
பெருமையின்றிலே யோனும் மறிப்பில் வைத்த
பேதையர் முன்போ வெனவே பிறித்தாய் போற்றி
தருண மெந்தன் முன்பு வந்து தனுரைக்கத் தமியேன் நான்
பேறு பெற்றேனோ தான் போற்றி
பொருனரஞ் சுதவிதரசர் மரபுதித்த
புனித வடைக்கலத் தாய் நின் பொற்றாள் போற்றி

**அருளப்பர் தரு**

பரிசுத்தம தாய்த் திறிதத்துவமாய் உயர்
பரமப் பொருளாய் வருசுத்தருளே அரவத்துரையாற்
புரிசத்துருவாம் பவம் அறுத்தாண்டருளும் பெருத்தாதரவே (நன்)

பைம்பொன் முடி சேர்லேயோன் மன்னன் அந்தப்
பாவையரைக் கோபமுடன் தம்பமிகுவம்பு
பண்ணிச் சிறைச்சாலை வைக்கக்கோல மென்ன (நன்)

என்னையந்தக் கன்னியர்க்குப் புத்தி யேதமற்று ஓதுமென்று
கன்னி மரிசொற்பனத்தில் வந்து களறுஞ் சொற்போல்
விரைவிற் செல்வேன் (நன்)

**அருளப்பர் கொச்சகம்**

எந்தன் சகோதரரே யிங்கேநீர்வாரு முங்கட்கிந்தவினை

சேச்மறிப்பிலிருக்க வந்தகாரணமேன்
கந்தமலர் மாலையனி காவல்துரை லேயோனால்
வந்தவிடரேனோ வழுத்திடுவீர் மாதர்களே

## பெண்களும் அருளப்பருந்தரு

**தரும**

சிறப்போடெங்களுடன் பிறந்த பிறப்பினு மன்பான அண்ணே கேளும்
நாங்கள் தேவபரன்சத்ய வேதமதைத் தொழு தேதமற்றே
நாமெப் போது மிருந்தோ மென்னண்ணே

**அருளப்பர்**

மறைப்பொருளை நீங்களென்றும்
வணங்கிமன மிணங்கிடுமன்னாளில் கற்பு
மங்கையரேயும்மைச் சங்கைகேடாகவே
பங்கமுறச்சிறை யிங்கடைத்த விதமேதோ (நன்)

**மரியை**

நாடியெங்கள் தம்மை மன்னன் நற்சுரூபவணக்கம் விடுமென்று சொல்ல
நாட்டமுடன் விட மாட்டோமென்றோ மதைக் கேட்டவன் கோபமாய்ப்
போட்டனனே சிறைமீதில்

**அருளப்பர்**

நீடிய பொற்கிரீட முடிசூடியலேயோ னரசனும்மைச்
சுரூப நீதவணக்கத்தைப் பூதலத்தே விட
வாதிக்கினுமனம் பேதிப்பீரோ சொல்லுவீரே

**தரும**

சத்தியசுரூப வணக்கந் தனக்காக அடித்து வதைத்தாலும்
அந்தச் சத்துரு வேந்தன் சொற் கொத்து இணங்கிடோம்
மெத்து தவத்தரு மத்துரையேயறிவீரே

**அருளப்பர்**

சுத்தவடைக்கலத் தாயைத் தோகையரே யோகையா யெப்போதும் நீங்கள்
தோத்திரமே செய்யிற் காத்திடு வாள்வினை தீர்த்திடுவாள்
மோட்சஞ் சேர்த்திடுவாள் திடன்தானே

**மரியை**

சருவ சீவதயாபரியே தாயேய டைக்கல மாதாவே யெங்கள்
தம்மையே மன்னவனென்ன செய்தாலுமே யும்மை மறவாது
நின்னருள் செய்குவாய் நீயே

**அருளப்பர்**

மறுவகலு மொழிமிகுத்த மதியதனைச் சரணணி யுந்தாயே
திவ்ய மன்னர் குலமேயிக் கன்னியர் தங்கள்மீ துன்னருள் செய்துநீ
யென்னாளுங் காத்திடுவாயே (நன்)

**அருளப்பர் - கவி**

குஞ்சரம் நிகர்த்தராசன் கோபமாயுமைப் பிடித்து
வஞ்சகமாகவே தான் வருத்தியாக்கினை செய்தாலும்
அஞ்சுகமட மின்னாரே யடைக்கலத்தாயைப் போற்றில்
தஞ்சமென்ற வரைக்காப்பாள் தானுண்மை யறிகுவீரே

**அருளப்பர் வசனம்**

கேளும் பெண்காள் அடைக்கல மாதாவைப் போற்றியிடும் உங்களுக்கோரிடரு மணுகாமற் காப்பாற்றிக் கொள்வார் நானெனது ஊருக்குப் போய் வருகிறேன் சகோதரிகளே

**பெண்கள் வசனம்**

நல்லது சென்று வாரு மண்ணா

**சபை-கவி**

கன்னியர் சிறையின் மீது கலங்கிடா திருப்பதற்கு
உன்னியே புத்திசொல்லி யுகந்தருளப்பரேக
வன்னி போல்லேயோன் ராசன் வாசலிற் கட்யகாரன்
தன்னிகரமைச்சனோடு தான்சென்றீதுரைத் திட்டானே

**கட் கவி**

விறல் மிகுலேயோன் ராசன் விளங்கு நற்சமுக மேவித்
திறல்புத்தி ஞாயமோதுஞ் செய்ய மந்திரியே கேளும்
மறமுற்ற மறியல் வீட்டில் வைத்த மாதர்க்குப் புத்தி
நிறையியத் தரசன் மந்திரி நிகட்தியே கினனிப்போதே

**வசனம்**

கேளுமையா பிரதானியே மறியலிலடைத்திருந்த பெண்களுக்கு சுரூப வணக்கத்தைக் கைவிடாதபடி இயேந்து ராசனுடைய மந்திரிவந்து புத்தி சொல்லிப் போகிறானறிவீராக

**லேயோனின் மந்திரி களிநடில்**

செங்கிரணத்தை நிகர் முடியரசே சிறியேன் நானுரைத்திடக் கேளும்
திடமுடனு மது மறியலி லிருக்குஞ் சேயிளையா மவர்களுக்கு
அங்கருளப் பனாமியத் தரசனமைச் சன்வந்தேசத்ய வேத மானதையோதி
ஞானமாநீதி யரிவையர் மனமிளகாது
இங்கிருமரச னென்ன செய்திடுவா னென்னவுஞ் சொன்னதல்லாமல்
எங்கள் மாமறையைச் சங்கைகேடாக எரிநரகலகை யென்றவனும்
பங்கமாயுரைத்துப் போனதாமசனைப் பதைத்திட வதைக்க வேயுபாயம்
பண்ணுவீரல்லாற் படிறுகள் புரிவான் பரிந்துள மறிந்திடுமரசே

**லேயோன் ராயன்தரு**

நீடுற்றே யுலகமனைத்தையும் நானுற்றே யாண்டு வரத்திறல்
கேடுற்றே யருளனிங் கேவரக் கெறுவமது தானோ (தான)

கோடுற்றே வளர்மதகரிமிசை யேறுற்றே வருமரசர்கள் திறை
போடுற்றே யெனதடிபரவுமிப் புன்மை யறியானோ (தான)

ககனந்தானிடியினுங் கதிர்மதி மிகவுந்தானொடி யினுமவனுடல்
செகமுன்னாய் நரியொடு கழுகுகள் தின்னவே செய்வேனே (தான)

அகமுந்தான வளவுதிடமொடு அவனுந்தா னடறனோவெனதொடு
சுகமுந்தா னுற்றிடவேயுடல் துண்டிடச் செய்வேனே (தான)

**லேயோன் ஆசரியம்**

காருற்ற காராழிசூழுலக மெண்டிசையுங்
கைகட்டி நின்றிடாரோ காவலர்களோடு மற்றேவலரு மென்சொற்கடங்கியே மடங்கிடாரோ
பேருற்ற வென்னகர்த் தலமதிற் சத்யமறை பேசவுந் துணிவதாமோ
பிரதான மோவவன் கெறுவான தோவீரல்
பேய்நரிகள் நாய்களுண்ண நேருற்ற வென்னெடிய வாளுற்று அவனுடல் நெரிந்திட
அரிந்திடேனோ நின்றிடுகிலென் முன்பு துண்டு துண்டாகவே
நிலத்திடை விழுத்திவிடுவேன் சீர்பெற்றவென்மதியமைச்சனேயக்கொடிய
தீயனையியத்திராசன் சிதைத்திடவதைத்திடவுபாயமொன்றிப்பொழுது
தேர்ந்தெடுத்தோ துவாயே

## லேயோனும் மந்திரியுந்தரு

**லேயோ** (சந்திரநேர் எ.மெ.)

தந்து திரைகடல் சூழும்பூவிற் தந்தரஞ்சேர் மந்திரியேயிந்தத்
தரைதனிலருளப்பன் றனைவதைத்திடவொரு
தந்தர முகந்து சொல்லேன்

**மந்**

மெத்துதிறல் சேரரசேயந்து மேதினியாளியத்தரசனுக்கு
விதமொடுநீரொரு கடிதமதெழுதியவ் வினையனைக்கொல்லுமையா (தந்)

**லேயோ**

சீட்டெழுதுமென்றுரைத்தாயுந்தன்
சிந்தையிலு கந்தபடியென்ன திறமொடுஎழுதுவோம்
விறல் செறியமைச்சனே செப்பிடுவீரெனக்கே

**மந்**

நாட்டையுமுன் கோட்டையையு முந்தன்
நல்லமைச்ச னீந்திடுவேனென்றும்
நாடியேயெனையுமங் கோடியே வரச்சொன்னான் ராசனேயென்றெழுதும் (தந்)

**லேயோ**

சுந்தரஞ்சேர் மந்திரியேநீரும் சொன்னபுத்தி நல்லதுதானந்தத்
துரையியத்தரசனும் விரைவொடுமெய்யெனத்
தொகுத்தறிவானோசொல்லும்

**மந்**

கந்தசுகந்தங்களணியெங்கள் கருதருலேயோவரசேயவன்
கையொப்பம்போலவே மெய்யொப்பமிருந்திடில்
கூற்றைக் காவலன் நம்பிடுவான் (தந்)

**லேயோன்-கவி**

சீட்டெழுதும்விபரமதையுரைத்தீரெந்தன்
செய்யுபுகழ்மந்திரியேசெப்பக்கேளும்
வாட்டமிலாவியத்தரசனமைச்சன்றானும்
மறுபடியுமெழுந்திங்கேவந்திடாது
கோட்டைதனையதிகபெலத்துடனே காக்கக்
குன்றதனைவென்றபுயங்குலுங்குவீரர்

காட்டியநால்வகைச்சேனைக்கதிபனான
கப்பித்தான்றனையழைக்கக்களறுவீரே

**மந்திரி கவி**

செப்பருமெங்கள்ராசன் சிறந்தவூளியங்கள்தம்மை
ஒப்புடன்புரிந்துவாழு முகந்தகட்டியனேகேளாய்
இப்பொழுதினிலேநீயுமேகியேவிரைவதாகக்
கப்பித்தான்ற னையேகூட்டிக் கடிதினில்வருகுவாயே

**கட் வச**

அப்படியே செய்கிறேன் பிரதானியே

**கட் தரு**

தங்கமாமகுடம்புனையெங்களரசன் மந்திரி
தானுரைத்த சொற்படிக்கிப் போதினிற்செல்வே்
சங்கைமேவு சங்கசதுரங்கசேனைகட் குயர்
தளபதியைச் சென்றழைக்கத் தானிப்போசெல்வேன் (நன்)

மாதினர்தங்கட்குப்புத்திவந்து ஓதி ஒரு
மந்திரியருளன்சென்றான்சொந்தவூர்க்குத்
தீதனிங்கேயணுகிடாதபடிக்குத்
காவல்செய்யப்போறாரெங்கள் மன்னன்வெய்யகோட்டையை (நன்)

வீரனென்றிங்கவன் மீண்டும் வந்திடுவானே
வந்தால் வெய்யசேனை வீரனவர்கையிற்சிக்குவான்
காரியத்திற்தீரவதி காரனாம்வல்ல திறற்
கப்பித்தானைச்சென்றழைப்பேனிப்போ விரைவாய் (நன்)

**கப்பித்தான்வரவு**

**சபை-கவி**

ஒப்பரும்பதாதி சூழ ஒன்னலர்வெருவியோட
மைப்பொலிவரைதோள்மின்ன வாளயில் காத்திற்துன்ன
இப்புவியரசாள்லே யோனிறைவன்சொற்கேட்டுவீர
கப்பித்தான்பரிமீதேறிக்களரியில் வருகின்றானே

**சபை-தரு**

(சந்திரவட்ட எ மெ)

வீரதுரந்தர தீரவொய்யார விதறண
சூரனென்னுங் கப்பித்தான்
பாரமுறும்படைச்சேனைகள்சூழப்
பரிமீதுவந்தனனேசபையில் (தந்)

வெஞ்சமர்மீதுறு வஞ்சர்களாஞ்ச
விரைந்துசமர்புரியுங்கப்பித்தான்

குஞ்சரவேகமுறுந்திறல்மேவுங்
குதிரையில்வந்தனனே கப்பித்தான் (தந்)

**கப்பித்தான் தரு**

தானத்தானினதந்தேட

தரளக்கிரீடலேயோ வரசற்கதிகபுகழ்
தரையிற்படைத்தவீர தளகத்தன்நானே
அரசற்கெதிர்செய்மரு வலரைச்செயஞ்செய்வீர
அதிகத்தானையின் சேனா பதிகத்தன்நானே (தான)

கரிகள்பரிகள்ரத முறியத்திரள்வல்லமை
காட்டிச்சமர்செய்வீர கப்பித்தான் நானே
அரியப்பெலமுற்றிடும் அதிபதிநானே (தான)

வேழத்திரளினுறுயாளிக்கிணையாயொப்ப
வேகத்தோடமர்செய்யும்விறல் வீரன்நானே
நீளப்படையினொடு சூழப்பொருதிவென்று
நிகரற்றிடுவல்லமை நிறைந்தவன்நானே (தான)

மத்தகயமதனை யொத்தவரசனென்னை
மகிழ்ந்து அழைத்தவிதம்பு கழ்ந்துநானறிய
மெத்தவிரைவினிலு ரத்தநடைநடந்து
வேந்தன் சமுகமதிற்சேர்ந்தறிவேனே (தான)

**கப்பித்தான் சரணக்கவி**

மரகதமணிமுடி சிரமதிலணிதிறல்மகிபா செயசரணம்
மண்டொலிகொண்டமர்வென்றிடுவென்றிகொள்
மன்னாசெயசரணம் புரவலருமொடு இருசரணடிதொழு போராசேசரணம்
பொங்கமிகுந்து விளங்குமலங்கிர்த புகழுடையோய் சரணம்
இரவியை நிகர்கிரீடரசர்கள்திறை தருமிறையே செயசரணம்
இந்நகர்மன்னுயிர் தம்மையும்முயிரென எண்ணிடுவாய் சரணம்
உரமுறுகடகரி மிசைவருமரசே யுன்சமுகந்தனிலே உத்தம வித்தக மொத்து
அழைத்ததை யுரைபகர்வாய் சரணம்

**வசனம்**

சரணஞ் சரணம் மகாராசனே யென்னையழைத்த காரியமறியச் சொல்வீராக

## ராயன் கப்பித்தான் தரு

**லேயோ** (கொந்தாரும் எ.மெ.)

ஒன்னார்களைவென்றுரணம்புரி யுரத்தனேபுக ழியத்தன்மந்திரி
என்னன்புறுகோட்டையிலே சிறைஇருந்த கோதையர் திருந்தஇறிவுகள்
ஈட்டியுரைத்தானெனக் கேட்டேனவனுமிங்கு
மீட்டுவராதபடி கோட்டையைக் காப்பாய்

**கப்பித்தான்**

பொன்னார்முடி புனைமலையனையதே
திண் புயத்தை நேர்செறிவயத்தினானே நீர்
சொன்னவுரையாம்படியேயுமர்
துலங்குகோட்டையையிலங்கவேகு
துரிதபரிகளொடு கரிகள் நிரைநிரையாய்த்
துன்னியதிக் காவல் பண்ணிடுவேனே

**லேயோ**

மின்னாரெனாமுமையவள் பாகனை வெறுத்து வாதைகள் பொறுத்த யேசுவை
நன்னாட்டினிலே துதி செய்திடு
நங்கைமாரிடமிங்கு வேறொரு
நரர்களணாகிடாது விரைவிலதிக பலமுறையும் வீரர்களை முறையொடு வைப்பாய்

**கப்**

மன்னாலேயேந்திரனேயுன் மறிப்பில்மங்கைய ரிருக்கவேறொரு
ஒன்னார்கள் வராது திறத்தொடு உகந்த வீரரை மகிழ்ந்து நேருற
ஓகையுறைவேயும் தாகமகிழ வெகு வாகவேகமொடு காவல் செய்வேனே

**லேயோ**

சிங்கம் நிகரென் பெயர் கேட்டாற்
சினத்த அரவிரையெடுத்திடாதொரு கங்கமுறை கூண்டதனிற் கிளி
கதித்து வந்ததையெதிர்த்தவாறு போல்
கண்டேன் வெகுபீரங்கி குண்டு அணி நிரையாய்க்கொண்டு காவலது நின்றுநீபுரிவாய்

**கப்**

பொங்காளி சூழுலகமதிற்புகழ் பொருத்து கோட்டையை நிருத்தமாகவே
தங்காமலே பொங்கியயிங்கிர்த தானைபடை மகிழ்சேனையோடு பல
தண்டுதளமுடனே யண்டுதமிறு தவில் கொண்டு முரசறைய வின்றுசெல்வேனே

**லேயோ**

கொங்கம் வங்காளம்மறாடர்கள் குறித்த மன்னவர் துதிப்பரென்னையே
இங்கேகெறுவோடருளப்பனும் எதிர்த்து வந்திடு விதத்தையறிகிறேன்
ஏங்கவவனுயிரை வாங்கிடுவேனினி
ஓங்குபுகளே நீ பாங்குறவாழ்வாய்

**கப்**

ஏங்கோனேயுன்னன்புறு கோட்டையில் இருக்கிறேனினியெதிர்த்த பேர்களை
சிங்கேறென மான்திரள்மழுதெ திறத்தவல்லிய மெனத்துணிந்தெதிர்
சென்றுசெருனர்களை வென்று எனது புகழ் இன்று மறியுமினி நன்று செல்வேனே (தந்)

**லேயோ கவி**

திட்டமொடுமட்டடங்காவதிக வீரர் செறிந்திடுகப்பித்தாமே செப்பக்கேளாய்
துட்டனாமியத்தரசனமைச்சன் மீண்டு தொடர்ந்து வந்து புத்தியது சொல்லிடாமல்
எட்டுணை வாள் வீரர்களையறிக்கையாக எப்புறமும் விழிப்பாக இருத்திநீயும்
சட்டவட்டமாய்க் காவல் புரிவாயேன் சொற்
தட்டாது திட்டமுடன்சடுதி தானே

**வசனம்**

கேளுங்கப்பித்தாமே இயத்திராசனுடைய மந்திரியாகிய அருளப்பன் சிறையிலிருக்கும்

பெண்களுக்கு மீண்டும் வந்து புத்திசொல்லாத படி கோட்டையை எச்சரிக்கையான காவல் செய்திருப்பீராக

**கப்பித்தான் தரு** (விண்ணும் புவியும் எ.மெ.)

தேண்டிரைபுனை மண்டலத்தினிற்
தென்னவனென் முன் சொன்ன படிக்கு இன்று சடுதி கோட்டைகாக்க
எழுந்து செல்லுவேன் மாற்றார்களை விரைந்து வெல்லுவேன் (நன்)

தண்டுமிண்டுகள் கொண்டு குறும்பர் தானே திரினிற் காண அஞ்சுவார்
அண்டுபீரங்கி குண்டு மருந்து அணியாய்மாட்டுவேன்
வந்தோர்கெறுத் தணியவாட்டுவேன் (நன்)

சிந்தைக்கெறுவோ வந்து அருளன் சிறையில் மாதர்க்கு அறையப்புத்திகள்
வந்திடிவினிக்கந்தரம் விழ வதைத்து வீழ்த்துவேன்
பதைக்கவே உதைத்து ஓட்டுவேன் (நன்)

இந்த நேரம் பிந்திடாமலே லேயோனிறைவனியம்பு சொற்படி
சிந்துரமெனக்காவல் கோட்டையைச் சீருடன் செய்வேன்
சேனையுடன் பாரில் நானுய்வேன் (நன்)

**லேயோராயன் கவி**

துய்யமுருகையனுக்கு முன்னே வந்த தும்பி முகந்தோன்றனது துணையினாலே
வையகத்தீற்கீர்ரிதி மதி பெற்ற வேந்தென் மந்திரியேயுந்தனக்கு வழுத்தக்கேளாய்
செய்யபுகழியத்தரசன்றனக்கு நாமுந் தெரிந்தெழுதுமோலையின் வாசகத்தை நீயும்
ஐயமறப்ப கருவைநானேழுதியந்த அரனுக்கு அனுப்பிடுதற்கன் பாய்த்தானே

**மந்திரி கடிதவாசக விருத்தம்**

சிரமதில் மணிமுடியுரமொடு அணிதிறல்
செயவயமிகுமரசன் சிந்தனை செறிதிகழுந்தயவுறுநற் செய்திலேயோனரசன்
விரைவோடு தருமிது நிருபம் நீர்தரணியில் மேவிவாசித்தறியும்
மெய்ப்பொடுநானருளப்பனுரைப் படி வேந்தே நீர் விரைவாய்
வரைவெகுதண்டொடு திறமொடு நீரும் வந்து வளைந்திடுகில்
மானகரத்தொடுனேயியத்தர சானவனரசையுமே
தரவெகுதந்தரகபட சமர்த்தொடு சதியிலே வருவீர்
தரைபுகழரசேதமாஸ்கிறை மந்திரி தகுமருளெழுதினனே

**மந்திரி வசனம்**

இந்தச் சிட்டை இயத்துராசனுக்குக் கொடுத்தனுப்பு வீராக

**லேயோன் கவி**

கட்டியகாராநீயுங்கடு நடையாகச் சென்று
திட்டமாயிந்தச் சீட்டைச் செம்மல்லேயோன் தந்தாரென்
றிட்டமாயியத்துமன்னனிடத்தினிற் கொடுத்து நீயும்
சட்டவட்டத்தோடேயிச் சணத்தினில் வருகுவாயே

**கட். வசனம்**

அப்படியே.

**கட். தரு**

நன்னநன்ன...
பூவுலகாள்லேயோனும் புகன்றமொழிப்படிக்கு
புகையது போலே சுறுக்கில் வகையுடன் செல்வேன்
தாவுமெங்கள்தென்னவனுஞ் சாற்று முரைப்படிக்குத்
தடையறவேயியத்து நர பதிவசமேகிடுவேன் (நன்)

கானகத்தில் கரடி புலி கத்தியுறுமுகுதே
கட்கமதையேயெடுத்தென்கையிற் பிடித்திடுவேன்
நானகத்திற் துணிவு கொண்டு நடக்க எழுந்தாலும்
நாட்டமுடன்கால்களுந்தள்ளாட்டமெழும்புகுதே (நன்)

நானிலத்தில் என்னைவெல்ல நடையிலுண்டோ ஆரும்
நாடியரை நாள் வழியோர் நாளில் நடப்பேனே
கூனிகர்த்தவேலனிந்த கொற்றவன் முன்சீட்டைக் கொடுத்து விட்டென்னூர்
தனக்குத் திடத்துடன் சென்றிடுவேன் (நன்)

**கட். கவி**

வயவரைவதைத்து வீர வாகைசேரர சேகேளும்
புயபலவுமதமைச்சன் புகலருளப்பன்றானும்
நயமொடெம்மரசர்க்கீந்த நவையுறுகடிதந்தன்னைத்
தயவுடனாமக்குத் தந்தார் தானீர்பார்த்தறிகுவீரே

**கட். வச.**

கேளுமரசேயெங்கள்லெயோவரசர்க்கு உமது மந்திரியெழுதின கடிதத்தை உமக்குக் கொடுக்கச் சொன்னார் வாசித்தறிந்து கொள்வீராக

**இயெத்துராயன் சீட்டு வாசித்தல்**

சிரமதில் மணி முடியுரமொடு அணிதிறல் செயவயமிகுபோசன்
சிந்தனை செறி திகளுந்தயவுறு நற்செயலேயோனரசன்
விரைவொடு அறிய வேதருநிருபத்தை நீர் மேவிவாசித்தருளும்
மெய்ப்பொடு நானருளப்பனுரைப் படி வேந்தேநீர் விரைவாய்
வரவெகுதண்டொடு தளமொடுதிறமொடு வந்து
வளைந்திடுகில் மாநகரத்தொடு தானேயியத்தர சானவனரசையுமே
தரவெகு தந்தரகபட சமாசாரத்தோடு நானுதவி
தருவேனியத்து மந்திரியருளப்பெழுததி வித கடிதமிதே

**இயெத்துராயன் ஆசிரியம்**

வானத்துறுஞ் சோதி மதியோடு இரவியுடு
வானவைகள் தானா திரினும். மகமேரு இடியினாங்கடலோடி
வடியினும் மந்தரம் பொடிபொடியினும்
கானத்துறுங்கூளிகழுகோடு நரியரிகள் கதறியே பதறிவிழினுங்
கார் பகல தாகினும் பகலிரவதாகினுங் கனலிமறுபிறமாறினும்
பானொத்தமுடிமகிபர் தாமொத்துவந்தெனது பாதத்திலேபணிகுவார்
பழியற்றவென்னகர்க் கிழிவுற்றவன் வலிமை பார்த்தறிந்தேகபடமாய்

யீனத்தனத்தோடு இது நிருபமெழுதிடவு மிப்படியகந்தையாமோ
என் திறங்கொண்டவன் தன்கபடு நீங்கவே இடறனைத்தடிகுவேனே

**இயெத்திராயன் தரு பல்லவி**

இப்படியுஞ் செய்யலாமோ மனந்துணிந்தவனிப் படியுஞ்செய்யலாமோ

இப்படியுஞ் செய்யலாமோ அப்படிக்குந் திறந்தானோ
தப்பவிடுவேனோவினிக்கைப் பிடியாய்ப் பிடியேனோ (இப்)

மச்சமகுமங்குகுதங் கொச்சிவடதம்நிடதம் குச்சலம்
மருடதேச மெச்செகத்துமன்னர்களும்
திறைதந்து பணியாரோ எனது பதம் சிரசினிலணியாரோ
அவனும் மதங் கொண்டு இந்த மண்டலத்திற்சய்டை செய்யலேயொனிடம்
இன்றெழுதுஞ் சீட்டதனைக் கண்டவுடனேயென் மனம் கோபமிகவாகவெழுதே
செந்தளலைப் போல் வெகமிகவாகமுழுதே
பார்பாராட்டுக் குட்டியைப் போலேயவனைக் கட்டியிழுத்தோடு காணர்ந்து
தொட்டவன் புரிந்தபழி விட்டகலச் செய்திடுவேன் (இப்)

பேர்பெரியயாளியுடன் போர்புரியுமோகலையும்
சீர்பெறுமென்னார் பிடித்துலேயோனுக்கு தாறேனென்று
சீட்டெழுதத் துணிவாமோயெனது மந்திர வாட்டிறமையறியானோ
அடடாகெட்டி சிந்திடச்சில்லிரத் தங்களந்தரத்தெழுந்துதலை பந்தெனப்பறந்துரள
இந்த நேரந்தன்னிற் கொய்வேன் (இப்)

செய்யநறும் பொய்கைசூழும் வையமீதெனக்கடங்கா
திட்டமுடனே கடிதம் விட்டதூறனைப் பிடித்துச் சீட்டதனைக்காட்டேனோ
வாய்மொழியினைக் கேட்டவனைவாட்டேனோ…
இன்னாடுடனெத் தேசமெல்லாமோர் குடைக்கீழ் நேசமுடனேயடக்கித்
திட்டவட்டத்தோடு ஆன்டேன் கெட்டிகெட்டியிந்தக்கேலி (இப்)

**இயேத்துராயன் ஆசிரியம்**

கருடன் குளிக்கவுதிரங்கொப்பளிக்க வெங் கழுதுடனே
கழுகு நரி நாய் கவர்ந்தங்குவேழ்வியாய்க் கருதுகுடவீரலைக் கவ்விப் பிடித்து தறவே
கெருடன் பறந்துலாவித்தசையருந்திடக் கெடிநெடியகரவசியினாற்
கெட்ட சீட்டெழுதவனை வெட்டாமல் விடுவனோ கெறுவங்கள் போக்கிடேனோ
வருடங்கடோறுமென்னுடைய பொருள் வாங்கியே வலிமைகள் மிகுத்ததோ தான்
வண்டனவனுடல மது முற்றுமே கண்டிட வருத்தியாக்கினைகள் செய்வேன்
தெருடம் பெருத்த கட்டியகாரனே யெனது செங்கிரணகொலு வாசலிற் தீர வீரக்கொலைச்
சேவகரைநீயிச் செணத்தினிலழைத்திடாயே

**இயே. வசனம்**

கேளாய் கட்டியமே அதிசீக்கிரஞ் சென்று கொலைச் சேவகரையழைத்து வருவாயாக

**கட்டியன் வச.**

அப்படியே செய்கிறேனரசே

**கட்டியன் தரு**

பொன்முடி புனையரசன் கொன்ன படிக்கு இப்போ
போயழைப்பேன் ரேவகரைத்தீவுரமுடன்
அந்நீதமுடனே கள்ளச்சீட்டையெழுதும்
அருளப்பனைப் பிடிக்கப்போருரிப் போமன்னவன் (நன்)

என்னைப் போலேயேவல் செய்யும் வல்லவருண்டோ எங்களேந்தலியத்
தென்னுமகாவேந்து தனக்கே
முன்னொரு நாட்பற்றைக்குள்ளிருந்த முயலைக் கண்டு
மூன்று கட்டைக்கோடிப்போன சாந்த வீரன் நான் (நன்)

ஆறுபணச்சம் பளமெனக்கோர் நாளைக்கு நாலு
ஐந்தெழுத்தெழுது வோர்க்கு ஆயிரம் ரூபாய்
தேறுதல் சேர்மன்னவனியத்து மொழிக்கு இன்று
சேவகர்தமையமைப்பேன் சீக்கிரஞ்சென்றே (நன்)

**சேவகர்வரவு கவி**

சிரத்தினில் வரத்திசூட்டிச் சிறந்த குண்டலங்கள் மாட்டிக்
கரத்தில் வாள்பளபளென்னக் கரிநிகர் வலிமைதுன்ன
உரத்தனாமியத்துராசனாகப் புடனழைத்ததாலே
திறத்தினிற் கதித்தோரான சேவகரிவருகின்றாரே

**சபை தரு**

மணியணிப்பணியிலங்க இடையினில் மாட்டுக் கட்டாரிப்பட்டாத்துலங்கத்
துணிவுளரகமொடுங்கச் சேவகர் துலுக்கிக் குலுக்கிவெகு சுறுக்கில் வந்தார் (தந்)

ஒன்னலரகமொடுங்க வெகுதிறமுடைய வீரர்கள் கண்டு நடுநடுங்க
மன்னவனைமியத்து அரசனின் வாசலிற்சேவகர்மேவினரே (தந்)

**சேவகர் தரு**

(1)
அரக்குணவெறி பெருக்கும்லேகிய மபின்கஞ்சாநித மருந்தியே தோளா
ஆவினிறைச்சி மேவியுண்டிடுஞ் சேவகர் நாமே யென்தோளா
(2)
நெருக்குநற்துட்டவீணர் தங்களைச் சிதைத்துவதைத்து வாட்டுவோந்தோளா
சினந்தசிங்கமு மெமக்கிணையெனச் செகத்திலிருக்க ஏலுமோதோளா (தன)
(1)
அரியெனப்பொருந் தரியலர்சிர மறுத்துக் களத்தில் விழுத்துவோந்தோளா
அகத்துணிவுறுஞ்சமர்த்தரெங்கள்போல் ஆருமில்லையிப்பாரிலேதோளா
(2)
இரு கரத்தினிற்பெருவரை தனையெடுத்துப்பந்தென எறிகுவோந்தோளா
இகதலத்தெமை நிகருரத்தர் மற்றெவருமிருக்கவியலுமோதோளா (தன)
(1)
சமர்க்களத்தினில் மிகத்துணிந்தமர் தருமாற்றலர்களெவரையும் தோளா
சதைக்கப்பதைக்கச் சிதைக்க உதைத்து வதைக்குஞ் சேவகர் நாங்களே தோளா

(2)

வலிமைத் திறமை பொலிந்திடுமெங்கள் மன்னனியத்தோடெதிர்த்துமே... தோளா
வருபவருடன் வெருவவேயமர் பொருதுஞ் சேவகர் நாங்களே தோளா (தன)

(1)

தலமே புகழும் மன்னவனெம்மைத் தமது கொலுவின் சமுகமே தோளா
தானழைத்திடு விபரமேதெனச் சடுதியேகிநா மறிகுவோந்தோளா (தன)

**சேவகர் கவி**

கன்னடமீளம்மருடங்கலியாணங்கோவைகொல்லம்
கொன்னுடமச்சமாள் மகுடச்சரிலர்மிடுக்குத்
தன்னிடமிருக்கும்ராசர் தருதிறை குவித்துப் போற்றும்
மன்னவா வெமையழைத்த வகையுரை செய்குவீரே

**வசனம்**

சரணஞ்சரணம் மகாராசனே எங்களையழைத்த செய்தி இன்னதென்று சொல்லுவீராக

**இயத்திராயன் கவி**

வந்து நின்று எந்தனக்குச்சரணஞ் செய்யும் வல்லமை கொள்சேவகரேவழுத்தக்கேளும்
தந்தரஞ்சேர் சீட்டெழுதிலேயோன்ராசன் தனக்கெனதுநகர் கொடுக்கத் தவறு செய்யும்....
எந்தனுடை மந்திரியாமருளன்றன்னை இப்பொழுது தானழைத்து என் முன்கொண்டு
சொந்தமுடன் வந்திடுவீரல்லாதுங்கள் சுந்தரஞ்சேர்கந்தரத்தைத் துணிவிப்பேனே

**வசனம்**

கேளுஞ்சேவகர்களேயெனது மந்திரியாகிய அருளப்பனைப் பிடித்திழுத்துக் கொண்டு வருவீர்களாள

**சேவகர் வசனம்**

அப்படியே செய்கிறோமரசே

**சேவகர் தரு பல்லவி**

இப்பொழுதெழுந்து வாரும் எனது தோளா இப்பொழுதெந்து வாரும்

(1)

இப்பொழுதெழுதுவாருந் தப்பிதமில்லாமலரு
ளப்பனைக் கண்டேணழைத்து ஓப்புடன் நடப்பதற்கு (இப்)

(2)

இந்த வழியாலே செல்லுவோ மெவரும் வந்தெ தீர்த்திடிலவரைக் கொல்லுவோம்
விந்தை சேருமெங்களைப் போல் வீரர்களுண்டோவுலகில்ச்
சொற்தமுறுமெங்கள் ராசன் மந்திரிமனைக்குச்செல்ல (இப்)

(1)

பையப்பையவாகச் செல்லுவோம் செல்லுகிலெங்கள் பார்த்திபன் மிகவுங்கோபிப்பார்
துய்யமுடி மன்னவனுஞ் சொன்ன படியே நடந்து
ஐயமதில்லாமலரு ளப்பனையழைப்பதற்கு (இப்)

**சேவகர் கவி**

தேசமாளெங்கள் வேந்தன் செய்ய பொன் மணியழுத்தும்
வாசல் மந்திரியேயும்மை மகாசினங்கொண்டு வேந்தன்

மாசுறுக்குடனழைத்து வரும் படியெம்மை விட்டார்
நீசற்றுஞ்சுணங்கா வண்ணம் நிமிஷத்தில் வருகுவாயே

**வசனம்**

கேட்பாயாக அருளப்பனே உன்னையெங்கள் ராசன் வரும்படி சொன்னார் வருவாயாக.

**அருளப்பர் தரு** (வண்டு எ மெ)

இன்னிலங்காத்திடு மன்னவனென்னையங்கே
தான் வரவிப்போதழைத்தது எப்படியென்றறியேனே
என்னவிடரொன்றும் மன்னனுக்கே செய்து அறியேன்
இப்போ இந்துபதத்தாயே வந்து துணையருள்வாயே (நன்)

வல்லியம் போலவே சேவகரென்மேலே சீறி இங்கு
வாவென்றழைக்கமாகிய காலமீதாமோ
எல்லோர்க்குந் தாபரி யென்னுமடைக்கலத்தாயே....
மன் முன்னேதுமிடர் வந்து சாராதெனைக் காத்தாள்வாயே (நன்)

அன்னாளிற் பூ முடி கள்ளியற்கீய்ந்ததாய் நீயே
எனக் காதார முன் திருப்பாதாரதஞ்சமீவாயே.... மின்னாடு சூடிய அன்னையரேயிந்த வேளை எனை வேந்தன்
முன்னே தீமை சேர்ந்திடா வண்ணங்காத்தாளே

**வசனம்**

அர்ச்யசிட்ட அடைக்கல மாதாவே என்னை அரசழைத்த காரியம் ஏதென்றறியேன் யாதொரு தீங்கும் நேராதபடி காத்தருளுந்தாயே

**சேவகர் கவி**

கோட்டுமதகரி மீது இருந்து வெள்ளைக் குடை பிடிக்கமடமடந்த கொடிகளாடப்
பாட்டிசைக்கும் வாணர்கள் பண்பாடநீடப் பாரில் வலம் வந்தரசு பண்ணும் வேந்தே
தாட்டிகமாய்க் கள்ளச்சீட்டெழுதுமிந்தத் தவறுடைய அருளப்பன் தன்னையிப்போ
கூட்டி வந்துநிற்கிறானறிந்து கொள்ளுங் கொற்றவர்கள் கொற்றவனே குறிப்பாய்த்தானே

**வசனம்**

கேளுமரசே உமது மந்திரியாகிய அருளப்பளையழைத்து வந்தோமறிவீராக

**அருள் கொச்சகம்**

தாது மலர் நிகர்த்தமுகத் தாதிபனேயுன் மொழிக்குக்...
கேதுநிகரானவிக்கெறுவமுறுஞ் சேவகர்
ஏதமறவுன்கொலுமுன்னிங்கழைத்து வந்தார்கள்
ஓதுமெனக்கின்னதென்று உண்மை செறிமன்னவனே

**வசனம்**

மகாராசனே என்னையழைத்த விபரமின்னதென்று சொல்லுவீராக

**இயெத்துராயன் கவி**

வட்டவாரிதிழென் தேசமுற்றும் மன்னவனாம்லேயோனும் வந்து சேர்ந்து...

திட்டமுடன் கைமாய்ப் பிடித்துக்கொள்ளச் சீட்டெழுவிட்டாயச் சீட்டுத் தன்னை...
இட்டமுடனெனக் கவனமனுப்பினான் நானிங்கதனை வாசித்துன்னெழுத்தாய்க் கண்டேன்...
வெட்டியெறிவேன் பொய்யையுரைத்தாயானால் மெய்யதுவோண்மை முற்றும் விளம்புவாயே

அருள் தாழிசை
கனகரெத்னமணிமகுட மன்னவனே கடகரியின் நடைகொள்புரவலா
கருதருமுழுதுகமல பாதமலர் காட்சியோடிறைஞ்சி வாழ்த்தினேன்....
மனதுவேகமொடுசத்யவேதமுறு மாதர்தங்களைலேயோனுமே...
வாட்டியே மறியல் வீட்டில் வைத்திடும் வகையறிந்து வெகுபகையிலா....
துனது தேசமதை விட்டிசோரியெனு மூர்மகிபனுறு நாடுசேர்ந்
துன சத்யமறைதனையே மங்கையர்கட் கோதினேது மெய்யாதலால்...
இன விதமதையறிந்து மக்கவனுமீன நிருபமதையெழுதினான்
இரு நிலம் பரவுமகிபனேயுமக்கு இடறுசெய்யவில்லை நம்புவீர்
வசனம்
இது காரியம் நானொன்றுமறியேனரசே

## இயெத்துராயனும் அருளப்பருந்தரு

இயெத்
சித்தத்தினிலுகந்துமெத்தத் துணிவு கொண்டு
புத்திதனை மறந்து கத்தியெடுத்தணிந்து
பொரவும்லேயோனிங்குவரவும்
பூவுலகெங்கும் உரமிஞ்சுமுனதுடை திறமிங்கீதே
அருள்
சுத்தக் கருணைதோனுஞ் சத்யமறையை நானும்
புத்தித்திறமோடுபோ தித்துக்கனிகையர்க்குப்
பொறையுற்றவ் வழி நிற்கத் திறமுற்ற மொழி
தன்னைப் புகன்றதல்லாதொன்று மொழி
மன்னைப்புகன்றதல்லாதொன்று வரைந்தறியேனே
இயெத்
எந்தன் நகரில்லேயோன் வந்து சமர்புரியவுந்தன்
திறமாய்நிரு பந்தானெழுதி நின்றாய்
உரங்கொண்டு கரந்தன்னைத் திறங்கொண்டென் கரவாளால்
மறங்கொண்டு இரிவேனென்வசனம்மெய்தானே
அருள்
இந்தப்புவியையாளும் எமது அரசே நானும்
இகத்திலுமக்கு மாறாயகத்தில் நினைவுகூர்ந்து
எழுதவில்லைக் கடிதம் முழுதுமிதுவுண்மையே
ஏற்றேயறிந்து கொள்ளுந்தேற்றமாய் நீரும்
இயெத்
கானக்கருங் கழுகுயீன நரி நாய்களும்
தானுக்கிரமோடுந்தன் காயத்தினையருந்தக்
கடிதாயென்கரவாளாற் படிமீதுன்னுடல்வேறு
படவேயரிந்தெறிவேன் பார்பாரிப் போது

**அருள்**

ஈனத்தனமோடென்னைத் தானித்தரைமீதின்னம்
மானத்தினையிழக்கவே நித்திரை மீதின்னம்
மானத்தினையிழக்கவே நித்திய மடித்து
இடறினும்வீண்துயர் தொடரினுமீயங்கள்
அடரினுமுன்சித்த மதிலொத்ததாமே
தானத்தானினதந்தே....

**இயெத்திராயன் சந்ததவிருத்தம்**

நீடுறுமமரதிலேதிறமறமுறு நேருறுசேவகரே
நிந்தனையாக வுகந்தெனதோடெதிர் வந்திடவே பேசும்
கேடுறுமிவனுடல் பாடுறவேயடி கேடயத்தாலடித்துக் கேளுமினும் மொழி
நாளுமெனக்கு மெய்பேசி விடும் வரையும்
போடு முரம்பெறுசோடுபிரம்பாற் பொய்யை விடுவரையும்
புத்தி வரும் படி மெத்தவதைத்துடல் பொங்கியெழக்குருதி
தேடுறுமென்கொலுமீதினிலே பின்
திடமொடுகொடு வருவீர் தீரவீரத்துறுசேவகரேயிச் செய்தியையறிவீரே

**வசனம்**

கேளுஞ்சேவகரே இவனுடல்பொங்கும்படிணடித்து உண்மை கேட்டு எனது சமுகத்திற் கொண்டு வருவீர்களாக

**அருள் கொச்சகம்**

மின்னிமுளங்காமலிந்த மேதினியில் வீழ்ந்தவிடி
என்ன வந்த தீவினையீதென்ன வகையென்றறியேன்
அன்னையடைக்கலத் தாயம்மணியேயுன் கிருபை
பண்ணியிந்த வேளையென்னைப் பாதுகார்த்தாள்வாயே

**வசனம்**

அர்ச்சியசிட்டஅடைக்கலமாதாவே அடியேனைப்பாது காத்தருளுந்தாயே

**சேவகர் கவி**

கள்ளனேயியத்தி ராசன் காசினி தன்னைலேயோன்
மெள்ளவேபிடிக்கச்சீட்டு விட்டவுன்றன்னை நாங்கள்
பள்ளநீரருவிசூழும்பார்மனுவோர்கள் காணத்
துள்ளவேயடிக்கிறோம் பார் துடிதுடித்திடவிப்போதே

**சேவகர் தரு**

(1)

அடல்வயவீரா அவிநிகர்சூரா அரசன் சொற்போலிவனுக்கடியடாதோளா....
இடருடனிவன் தோல் எழும்படி கசையால் எட்டிப்பிடித்தே தலையிற்குட்டடாவென்தோளா

(2)

மன்னவன்பகைக்க வகை செய்தாய் திகைக்க
வஞ்சப்பயலேயுன் மனங் கெஞ்சக்கெஞ்ச அடிப்போம்...
இன்னிலம்புரக்குமிறைவனோடெதிர்த் தான் இப்போழுது தப்பிடா தடித்திடு வாய்தோளா...

(1)

தீட்டு கதிர்கரத்திற் பூட்டு மன்னன் நறக்குத்
தீது செய்தானேயிவனை வாதை செய்வோந்தோளா

நாட்டிலுள்ளோரிதனைக் கேட்கில்நகைப்பார்கள்
நாய் நரிகளுண்ணவதைப் பாயேடாவென்தோளா (தந்தானத்தந்தானா)

**அருள் சொச்சகத்தரு**

(கொச்)
துடிகெட்டலகை செய்வினையைத் தொலைத்தேமோட்சஞ் சேர்ப்பதற்குப்
படி கிட்டிடுமாவுறை குடிலிற் பசும்புல்லணையில் வந்துதித்துக்
கெடிபட்டிடவேயும்துடலங் கெலிக்கவெனக் காய்ச்சில் வான
அடிபட்டிழைத்துக்கழைத்தால் நானடிபட்டிடலிங்கதிசயமோ
(தரு)
பரிசுத்ததற்பரனேவரனெ பரம்ப் பொருளருவே குருவே
திரிதத்துவ தேவாகோவா சிறியேன்வினையைத் தீர்ப்பாய் காப்பாய் (தனனந்)

(கொச்)
தீர்க்காயுசுள்ளமோட்சதலத்திருந்துமனுவாய் வந்துதித்துப்
பார்க்காதரவாய்வளர்ந்தே முப் பத்து மூன்று மாண்டதனில்.....
வாக்காலுரைக் கொண்ணாக்கொடியர் வருத்தியடித்த பின்பு
மர நாற்காலியின் மீதிருந்தெமையாள் நன்றியானும்மறவேனே
(தரு)
எனையிப்படி யிறையேகுறையே இடர் செய்திடவிதியோசதியோ
கனவுக்கிரமதனமோ மனமோ கருணைப்பராபரனே
(கொச்)
துள்ளும் பசாசுவினையறுத்துத் தோலைக்கயூதர்க்கொப்புவித்துத்
தெள்ளுமுமதுசடமடரத்தீயர்கசையாலேயடித்து
எள்ளும் படியேயுமதுயேயுமதுசிரத் திருத்தியேழுபத்திரண்டு
முள்ளின்முடிதைத்திடப் பொறுத்த முதல்வாவுனையான் மறவேனே
(தரு)
நவையற்றிடுநாதாவேதா நறைபொற்பாத மேதாபோதா
சுவையுற்றிடு மெனையேவினையே தொடராதென் முன் வருவா யருள்வாய் (தனனந்)

**சேவகர் கொச்சகம்**

பாரும்பாருமிவன் பேச்சைப் பாடாமாடா மதிகேடா..
சோரும்படியேயிவன்முதுகிற்சோரிசொரியவடிக்கிறேன்பார் ஆருமமுதால் விடுவோமோவடுவா கொடியபடுபாவி

**அருள் தரு**

காருஞ்சிறியேனிடரைத்தீருங் கதிரையுடுத்தபுதுமைமரியே
ஆரிங்கொருவரெனக்குத்தஞ்சம் ஆளும்வந்துன்னடைக்கரமெ (நன்)

**சேவகர் கொச்**

மாய்மாலங்கள் புரிந்துமெத்த வருந்தித் துயரம் பொருந்துகிறான்
பாய்மாவேறுமரசனுக்குப் பழுதுபுரிந்துகிறான்
வாயாலுண்மை சொலும் வரைக்கும் வதைத்துப்பதைக்கவுதை தோளா

**அருள் தரு**

தாயேயொன்றும்றியேன் நானே சடலம்நோகத்திடமாய்க்கோபம்
மேவ அடித்து வருத்திறாரே விதனம் நீக்கும் எனைக் கண்நோக்கும் (நன்)

**சேவ கொச்**

சண்டித்தனமோ உனக்குயிது சமர்த்தோமிகுத்த மனத்துணிவோ பண்டிப்பயலேன்ன வின்னும் பாசாங்கோ நீ பண்ணுகிறாய்
கண்டிப்பானவுரையை விட்டுக் கள்ளாகுள்ளாவுள்ளது சொல்

**அருள் தரு**

ஒன்றுமறியேனண்ணன்மாரே உதைக்கிறீரேபதைக்கு தங்கம்
கண்டார் மொழியார்தமக்குப்புத்தி கருதிச்சொன்னேனெழுத வில்லை (நன்)

**சேவ கொச்**

இகத்திலுழைக்கமதியில்லாதிருந்தவிவனையெம்தரசன்
மிகுத்த உத்தியோகமதில் விரும்பிச்சேர்த்து வைத்ததினால்
புழுககையொழுக்கமறியாமற் புரிந்தாயோடாவிப்படிறு

**அருள் தரு**

செகத்தோர்பரவு மடைக்கலத்தாய் சிறியேன்புரிதல்தெரிவாரறிவார்
அகத்திலெண்ணிக் கடிதந்தன்னை யண்ணர்களேயானெழுதவில்லை (நன்)

**அருள் கொச்**

தற்பரன்றன்தாயேதயா பரியேமாமரியே
அற்புதசலாக்கியமேயன்னம்மாளின்சேயே
பொற்செருப்பீந்தோன்வினையம் போக்குகின்ற வாறது போல்
நற்கருணைத்தாளும் நாயகியேயிவ் வேளை

**வசனம்**

அதிபரிசுத்த அடைக்கலமாதாவே அடியேன் யாதொன்று மறியேன் உமது தயவை என்மேற்சொரிந்தருளுந்தாயோ

**சேவகர் கவி**

பரிதியொளிநிகர்த்த முடியரசே நீரும் பகர்ந்த படிநாங்களிந்தபகைஞன்றன்னைக்
குருதிசிந்த வடித்துதைத்துக் கேட்கக்கேட்கக் கொற்றவனேயிவன் மனதுகூசிடாமல்
ஒருதிசுதனறிவர்நானறியேனென்று உலைமெழுகாமெனவுருகியழுதுநொந்து
சுருதியரும்பரப் பொருளை வேண்டினானித் தொகையதனையறிந்திடுவீர் துரைகளேறே

**இயெத்துராயன் தரு பல்லவி**

இப்படிப் பொய் பேசலாமோ
அறியேனென்றுநீ யிப்படிப்பொய்பேசலாமோ
இப்படிப் பொய் பேசலாமோ
என் சினங்கள் மிஞ்சுதற்கு இடறனேயுனதுடல் பதறிடக்குருதிகள்
சிதறிடவாளினால்வெகுவதைபுரிவேன் (இப்)

புத்தியெங்கே போச்சிதோடர் உனது கெறு மெத்தியேபாழாச்சுதோடா
சத்தியமுனதுடலைக்கத்தியாலரிவேனடா
சதறிட வுடலது சிதறிடமிகவும்நீ
கதறிடவுனைவெகு விதவதைபுரிவேன் (இப்)

என்வலிமையெண்ணினாயோ எண்ணினாலுந்தன்
தன் வலிமை பண்ணுவாயோ
விண்ணுலகந்தானிடிந்து மண்ணுலகத்தேவிழினும்
விளலொடுஉனதிரு கழல்கரமேவரிந் துளசெவிநாசியில் மிளகதையிடுவேன் (இப்)

சாரையைத்தேரையெதிர்க்குமோ
புலியைப்பசுத் தானுமேபயமுறுத்துமோ
ஏராதகடிதந்தன்னை யெழுதியில்லையென்கிறாய்
இச்செணமீதுனை யச்சமேகொள்ளவே சக்கரமீதிலிருத்தியே கொல்லுவேன் (இப்)

**இயெத்திராயன் வசனம்**

அடேயருளப்பாஎனது மந்திரவாளைப்பார்த்துக் கொண்டு
நீயெழுதிய இக்கடிதத்துக்கு உண்மையைத் தெரிவிப்பாயாக....

**அருள் அகவல்**

வளமதுபொலிந்து மன்னளேயுமது உளமறிந்திட நானுரைத்திடக்கேளும்...
தவமிகுசத்யவே தத்தினையழிக்கப் பவமிகுகொடூரப்பாவிமரசன்
கன்னியர்தங்களைக் கடுஞ்சிறையிருத்தித் துள்ளியதுயருறு தோகையர்தமக்கு
அன்பொடுயான்போய் அருமறைதனைவிடா தின்பமாயிருமென்றியம்பி நான் வந்தேன் அது
செய்திதன்னை யறிந்ததோலேயோன் இது செய்தி தன்னை யெனதுளமறியேன்
பழிபெறு வினையம் பகர்ந்த விந்நிருபம் ஒளிபெறுமெனது கையொப்பமாம் போலே
இருக்குது நானும் எழுதலேயில்லை மருக்கமழ்மன்னா மனதுகந்தறிவீர்

**இயெத்திராயன் ஆசிரியம்**

பேருற்றவென் மொழி தனக்கு மறுமொழியெதிர்கள்
பேசிருனவனாமீதிற் பித்தமோநஞ்சு மத்தையைத்தின்றதோ பேய்பிடித்துற்றதோ தான்
நேருற்றவிவன்மனமிரும் பதோமலைதோ நெஞ்சங்கருங்கல்லதோ
நெருடனோ பேர் பெரிய திருடனோ கள்ளமாய் நிருபமது எழுதுமிவனைச்
சோர்வற்றிடும் படிக் கேயடியடித்துத் துலங்கொடுவிலங்குபூட்டித் துயருறவருத்தியே
மறியவிலிருத்தியே சுறுக்காய் நடந்து நீங்கள்
சேருற்றகாற்றெனச்சென்றதிக வேகமாய்த் திகழ்கலைகள் மிகவறியுமென்
தேசுலவுநேசவா லோசனைக்காரரைச் சீக்கிரமழைத்து வருவீர்

**வசனம்**

கேளுஞ்சேவகரே இவனைச் சிறையிலிட்டு அதிசீக்கிரஞ்சென்று எனது ஆலோசனைக் காரரையழைத்து வருவீர்களாக

**சேவகர் கவி**

நீயடா திருடாவிந்த நிலத்தையாளிறைவரூரு
பாயமாய்ப் பிடிக்கச்சீட்டு உகப்புடன் விடுத்ததாலே
தேயமாள்மன்னன் சொற்போற் சிறையினாலடைக்கப்போறோம்
தீயனேயிங்கேவாடா சீக்கிரமதனாற்தானே

**சேவகர் தரு**

கன்னல் எ மெ சீக்கிரம் போடாபகைகொண்டதீயனேமாடா உன்னை
ஆக்கிரமமோடு சிறையிரஷலடைப்போமிப்போதே
ஆக்கமிடுக்கோவல்லாதுன்னகத்தின் செருக்கோ இப்போ
பார்க்கவுன்னையேசினமும் பற்றுதெமக்கே (நன்)

எத்தனை பொன்னைத்தந்தானுனக்குயீனன்லேயோனும் பொல்லாச்
சத்துருநீயுங்கள்ளச் சீட்டுத் தான் விடலாமோ

இத்தினமிவன் கை கால்கட் கிடும்விலங்கையே தோளா
மெத்துமிருளார் சிறைக்குள் விடுவோமிவளை (நன்)

அருள் திருவாசகம்

நிலங்காத்திடுமாதிபனுரைக்கு நீசரிவர்களெனைப் பிடித்துப்
பலங்காட்டிப்பார்தனில் வருத்தப்பானேயிது வென் பளவினையோ
தலங்காத்திடுமிவ்வீரர்தனஞ் சலிக்காவெகத்தொடுகாலில்
விலங்கானதுபூணுதற்குவந்த வினையேதறியேன்வேவதாவே....

## அருள் பரணித் தரு

(பரணி)
முதலாகிச்சுதனாகித்திடமுமாகி மூன்றுமொன்றாய்த்திறியேக முதன்மையாகி
இதமாகியெமக் கருமாதரவதாகிளிரற்கியிந்தவுலகில்வந்த யேசுநாதா
(தரு)
இது போதுசேவக ரெனையிழுத்தேகிறார் யேசுநாதா நானென்னசெய்வேன்
மாசில்லாதா உந்தன்
பதுமநற்பதந்தந்து பாதுகாத்தாளாயோ பாவியென்னைத் துனையாக மேவிமுன்னே
(பரணி)
பொய்யாத் தொபியசென்போனிடரைத்தீர்த்துப் புண்ணியனேயவன் கணொளி
தனைக் கொடுத்தீர்
செய்யாததீங்குதனைச் செய்தேனென்று தேர்வேந்தன் சிறையிலிடச் செப்பினானே
(தரு)
ஐயாவெமக்குகந்த ஆதரவேதிரு யேசுநாதா இரக்கங்கூரும் மாசில்லாதா இப்போ
வெய்யசிறையடைக்க வீர்கொண்டேகிறார் வேதபோதா வந்தேயெனைக் காருந்தாதா
(பரணி)
மங்களசோபனமுறு மோர் கலியாணத்தில்மதுராசங் குறைந்த அந்தவகையைக் கண்டு
அங்கு மதுமகன்றனக்கு உரைத்து நீரும் ஆறு குடம் நீரைரசமாகச் செய்தீர்
(தரு)
இங்கெனக்கேவந்த இடர்தவிர்த்தாளாயோ மரியம்மாளே தாயே ராசேஸ்ப்
பரியம்மாளெ பொல்லாப்
பங்கலேயோன் செய்த பழுதாலிறைவனென்னைப் பகைத்திட்டானே சிறையில்வைக்க
வுரைத்திட்டானே
(பரணி)
உடுக்குலபூஷணியும்பர் போற்றி செய்யும் உத்தமி யேசுத்தவன்னையுக மீது
திடத்துடனேயிருந்திடவேயடியேன் நானித் தீங்குபடவென்பவத்தின் தீமையாமோ
(தரு)
அடைக்கலமரியேயென்னிடுக் கண்கள் நீக்கியே ஆளிடாயோ இத்துயரினால்
மீளிடாயோ நிதம்
படைக்கும்புவரைசி பாவியென்மேல் முகம் பாருமம்மா வந்த இடரைத் தீருமம்மா (நன்)

அருள் கொச்சகம்

மறைமுறைக்காய்நானெழுந்து மங்கையர்க்குப் புத்தி சொல்ல
இறைவன்லேயோனுமிந்த இடரெனக்குச் செய்தானே

சிறை காக்கவென்னை மன்னன் செய்வதற்கு ஆகாது
பிறைமிதித்ததாய்மரியே பேரருள்செய்தாள்வாயே

**வசனம்**

அடைக்கலமாதாவே என்னைச் சிறையிலடைக்காது உமது கிருபைக் கண்றோக்கிக் காத்தருளுந்தாயே

**சேவகர் கவி**

கடம்பிளந்தொன்னலர் சிரசைக்கழைந்து வீழ்த்துங்
காவலற்கெதிர் செயவிடுத்த கள்ளச்சீட்டால்
உடம்புழைந்த கழுதையுப்புக்களத்திற்சென்ற
உவமையைப் போலிவ்விடர்களுனக்குண்டாச்சு
சடம் பிளந்துஎறிந்திடவேவேணு முன்னைத்
தயவு கொண்டு மறிப்பில்வைக்கச்சாற்றி விட்டார்
திடம் பெறுஅமம்மகிபனுரைப் படியேநீயிச்
சிறைச்சாலைதளிலிருப்பாய் செப்பினோமே

**வசனம்**

கேளடாதீயனே நீயிந்தச்சிறைக் கூடத்திலொன்றும் பேசாமலிருப்பாயாக

**சேவகர் தரு**

**பல்லவி**

வீரதீரன்நானே அதிவித சூரதீரன்நானே

(1)

பாருமொருநாளங்கோ ரூருக்கேகும் போது
படுத்துக்கிடந்தமுயல் திடுக்கிட்டெழும்பக்கண்டு
ஆருமறியாமலே ஓடிவிரைவினொடு அடுக்கவொருபற்றைக்குள்
மிடுக்காயொளித்திருந்த (வீர)

(2)

பளிங்குமாடந்தன்னிற் செழுந்தேனாளும் நானும்
படுத்து நித்திரை செய்ய எடுத்த அவள் காற்சத்தம் இழுந்தக்கதவிற்கேட்டு
எழுந்துசுவராலேறி அச்சத்துடனே வீழ்ந்து மெச்சியோடிப்போன (வீர)

(1)

எனதுமாமியென்னைத் தனது அரண்தனைக்கு எங்கள் வீட்டில் நின்று
அங்கே கூட்டிச்சென்றாள்
மனதுக்கு கந்தநல்லகறிசோறுண்ணச் சொல்ல
மச்சாள்வரவே கண்டு வெட்கித்தோடிப்போன (வீர)

(2)

சீலமிகுத்த எங்கள் ராசனுரைப்படியே சென்றுநாங்களதி தீவுரத்துடனே
ஆலோசனைக்கதிபர்தம்மையழைத்து கொண்டு அதிகசுறுக்கிலெங்க
ளதிபன்சமுகஞ்செல்வோம் (வீர)

**ஆலோசனைத்துரைமார் வரவுகவி**

வச்சிரக்கிரீடஞ்சூட்டி மரகதமாலைசூட்டி
உச்சிதக்கவசமாட்டி யுகந்தகைப்பிரம்பையாட்டி

மெச்சவேவளக்குத்தீர்க்கும் மேவாலோசனையின்காரர்
இச்செகத்தரசன்சொற்கேட் டிலங்குமிச்சபைவந்தாரே

**சபை தரு** (வனசமலர்ந்து எ மெ)

சிரமதில் வச்சிரமுறுநவரெத்தின திலமிகுவயிரமாமுடிராசன்
செயமிகுமாலோசனையில்மிகுத்திடு தீரவீரர்சபைவந்தனரே (தன)

பரவை சூழ்பூவினிலரசர் புகழ்ந்திடு பலபல புத்தி மகிழ்ந்தோதும் உரமுறுசத்தியில்
வரமதுமெத்தாலோ சனையுள்ளோர்சபையில்வந்துற்றனரே (தன)

**ஆலோசனைக்காரர் தரு**
(பெண்ணரசே எ.மெ.)

முத்தாரம்பூண்டிடியத்தாதிபன் எம்மை முன்னாய் வரவழைத்ததென்னேவையா
இத்தாரணியில் மன்னன்சித்தமதில் என்ன என்னினாரோஅறியோம் திண்ணமதாய்
சோரமருந்துண்டுசிசு வழித்தோர் இந்த ரிலெவருமுண்டோ உற்றறியோம்
தாரங்களையே அவ தூறுசெய்த சக சண்டிகளாருமங்கேயுண்டதுவோ (நன்)

**(1)**
துட்டமுறுபோர்செய்யவிட்டிடவோ வெகு
சூத்திரமாய்வளக்குத்தீர்த்திடவோ
இட்டமுடனரசன்கட்டளையை மீறி
எற்காமலே நடந்த ஆட்களுண்டோ (நன்)

**(2)**
நாட்டைப் பிடிக்கக்கள்ளச்சீட்டெழுதி விட்ட
நட்டமுற்றோருண்டோவிப்பட்டினத்தில்
தீட்டுங்கதிர்கரத்திற் பூட்டும்மன்ன னிடஞ்
சென்றேயறிகுவோம் நாமின்றேவாரும் (நன்)

**ஆலோசனை கவி**
அறிலொயிலுங்கானமதில்மயில்களாட
அரவிந்தமாம்பல் மலர்ந்தழகதாகக்
கயலினங்கள்கங்கைதனிற்குதித்துலாவிக்
கதித்து வளர்தமாய்குநகரதிபாபோற்றி
சொயநயசோபனமுடனே செங்கோலாள்கை
துலங்குமுந்தன்கொலுவின் முன்பு சுறுக்கதாக
வாயவ்பயமுறு வீர்தமைவிட்டெம்மை
வரவழைத்த செய்தியை நீர் வழுத்துவீரே

**வசனம்**
மகாராசனே எங்களையழைத்த கருமறியச் சொல்வீராக

**இயெத்திராயன் கவி**
பகுத்தறிதலாராய்தல்புத்திசூட்சம் படித்தறிந்துவெகுர்கழாய்ப்பவனியோங்க
மிகுத்தவென்னா லோசனைக்காரர்களேநானும் விளம்புமொழியானதை நீர்வினவிக்கேளும்

தொகுத்தவெந்தன்நகரிலொரு போதுமில்லாத் துட்டமொன்று இருக்குதுநீர் தொகையதாக வகுத்தகருத்துடன் விளங்கித்தீர்வைசொல்ல வரவழைத்தேனும்மையிங்கு வகையாய்த்தானே

**வசனம்**

துரைகளே இங்கேயொரு விளக்கமிருக்கிறது அதற்காக உங்களையழைத்தேன்றிவீர்களாக

**ஆலோசனைகளும் ராயனுந் தரு**

**ஆலோ**

வேலைசுற்றிடுதாலமுற்றரசாளுதுரையே எம்மை
மெய்ப்போட்டிங்களைத்திட்ட சங்கதிசெப்புவீரையா

**ராயன்**

கோலமுற்றா லோசனைப்பரி பாலரே கேளும் நல்ல
கோர்வையாகவிளங்கியேயொருதீர்வை செய்குவீர்
(தானதந்த தனாதனந்த)

**ஆலோ 2**

சேர்தலத்தினிலேயுமக்கினை யார்பலத்தினிலே அந்தத்
தீதுறும்வளக்கானதையெமக்கோதுவீரையா

**ராயன்**

சீர்பலத்தலேயோனுமிங்கென தூர்வலத்தினிலே வந்து
சிந்தையாயம ராடவெந்தனின்மந்திரி செய்தான் (தான)

**ஆலோ 1**

இப்படிக்குமர் மந்திரிசெய்த தப்பிதத்தையே நீரும்
ஏற்றமாகவென்னென்றறிந்ததுசாற்றுவீரையா

**ராயன்**

கொப்பிசேர்த்துலேயோனுக்கனுப்பி வைத்தனன் அவன்
கொண்டறைந்தசீட்டையென்முன் னின்றனுப்பினான் (தான)

**ஆலோ 2**

சேர்த்தெழுதும் வாசகத்தைப் பார்த்தறிந்தீரோ அது செப்பமாயுமர்
மந்திரிகை யொப்பமோ சொல்லும்

**ராயன்**

ஏர்த்தவுடன்சீட்டவிழ்த்துப்பார்த்தறிந்தேனே அது
இட்டமாயென்மந்திரிகைப்பட்டவெழுத்தே (தான)

**ஆலோ 1**

சீட்டையவன் முன்னவிழ்த்துக்காட்டிய தோநீர் இது
செய்தவன்றனைவதைத்துச்செய்திகேட்டீரோ

**ராயன்**

நாட்டமுடனேயவன் முன்காட்டினேனே அவனின்
நன்றியீனத்தால்வருத்தியின்றுவைதேனே (தான)

**(ஆலோ)**

தேசதேசர் போற்றுமெங்கள் ராசனேநீரும் இப்போ தீயனவனை
விளங்கவேயழைப்பீரே (தான)

**இயெத்திராயன் கவி**

மலையினைநிகர்த்தவெந்தன் வல்லசேவகரேகேளும்
நிலைநன்றிமறந்துகள்ள நிருமதெழுதுகின்ற

புலையனைமறியல்வீட்டாற்போய்ப்பிடித்திழுத்துக்கொண்டு
கலைசெறிகொலுவின் முன்புகடிதினில் வருகுவீரே

**வசனம்**

கேளுஞ்சேவகர்களே மறியலிருக்கும் அருளப்பனையழைத்து வருவீர்களாக

**சேவகர் தரு**

**(1ம்)**

வன்னநற்றோளா மன்னனிப்போ சொன்னது போலே
மந்திரி தன்னை யழைத்திட முந்தியேசெல்வோம்

**(2ம்)**

இன்னிலமதனையிறைலேயோன் தன்னிடங்கொடுக்க
நிருபமது எழுதிடுவோனை நாமுமிப்போ விரைவினிலழைப்போம்

**(1ம்)**

வேலணிதுணைவா விளம்புசிறைச் சாலையில்நினைவாய்ச் சென்றேமுடி
வேந்தன்மந்திரியை மறியலாற் தேர்ந்தழைத்திடுவோம்

**(2ம்)**

கோலனி மன்னர் மன்னன்சொன்ன தாலினியென்ன பயமில்லைக்
கோறணிசெய்தே நாமுங்கொண்டு வாறதுமெய்யே (நன்)

**சேவகர் கவி**

சொல்லவாகள்ளாவுன்னைத் துரையெங்களியத்துராயன்
மெல்லவாயழைக்கச்சொன்னார் விதனமுற்றாவதென்ன
அல்லவாஉனைப்போலிந்த அவனியிலுண்டோபொயில்
வல்லவாவெங்கள்கூட வருகுவாய் வருகுவாயே

**வசனம்**

கேளடாதிருடா உன்னையெங்கள்ராசனழைக்கிறார் வருவாயாக

**அருள் கொச்சகம்**

தாட்டிமைகொள்லேயோனுந்தான்விடுத்தகாகிதத்தை
நாட்டிமெய்யென்றேயியத்து நரபதியுமேவருத்தி
நீட்டியகாவற்சிறையால் நீக்கியெனையேனழைத்தான்
ஆட்டிடையர்வீட்டில்வந்த அம்பரனேயுன்துணையே

**அருள் தரு**

மரியைபாலா வெனக் குரியநூலா என்முன்வந்துநீரும்
அருளது தந்து காரும் பெரியவாதை மன்னன்
புரிகிறாரே திவ்ய பெருமைசேரும் எந்தன் சிறுமைதீரும் (நன்)

மார்களியில் மலைச் சாரல்தன்னில் வந்த
மாசில்லாதா எங்கள்யேசுநாதா
வார்கசையாலங்கஞ் சோர்வசையத் துயர்
வருத்தலாமோ கோபம் பொருத்தலாமோ (நன்)

முன்பெனக்குச் செய்த பண்பு போலே
இன்றென் முன்னேவாரும் மரியன்னையாரே

அன்புசேருமெனக் கின்பதாயே உந்தன்
அடிமைநானே தீரென் மீடிமைதானே (நன்)

**அருள் கொச்**

தனஞ்செறிலேயோன்மகிபன் தன்நகர்க்குநானேகிக்
கனஞ்செறியும் வேதமதைக் கன்னியர்க்குஓதிவந்தேன்
சினஞ்செறியுஞ்சீட்டுவிட்டித் தீதுபுரிந்தார்களுன்றன்
மனஞ்செறியும்நல்லருள்செய் மரியகன்னி மாதாவே

**வசனம்**

அர்ச்யதிட்டமரியாயியே அடியேன்யாதொருதிமையும் அரசனுக்குச் செய்தறியேன் உமது இரக்கக்கடைக்கண்சாற்றி என்னைக் காத்துத்கொள்ளுந்தாயே

**சேவகர் கவி**

பாக்கிய அரசேயுந்தன் பதிதனக்கிழிவுசெய்து
ஆக்கினையடைந்து காவலதிலடைபட்டோன்றன்னைச்
சீக்கிரமுமது சொற்குசிறையினால் நீக்கிநின் பொன்
வாக்கியச்சமுகம் வந்தோம் மகிபனேயறிகுவீரே

**ராயன் கவி**

யூகிர்தமிகுத்தவென்னா லோசனைக்காறர்கேளீர்
மாகிர்தமுறு மென் செங்கோல் மகிமையைக் கெடுக்கச் செய்த
போகிசேர்துட்டன்றன்னைப்புகழொடுங்களின்முன் விட்டேன்
பாகிதத்துடன்விளங்கிப்பகருவீர்தீர்ப்பைத்தானே

**வசனம்**

ஆனாற்கேளும் ஆலோசனைக்காறரே இவன் தான் இந்தக்கள்ளன் விளங்கித் தீர்வை சொல்வீர்களாக

**விளக்கம் அகவல்**

**ஆலோ 1ம்**

நீயிங்கேவாடா நிருபமதெதினை யோவிங்கேயுண்மையா யுரைத்திடுவாயே

**அருள்**

வேயினைநிகர்த்த தோள்வீரரே நான்மெய் யாயிதோர்போதும்
அறிகிலேனென்று அறைகிறானிவனும் செறிவிறல்மன்னா செப்பிடுவீரே

**ராயன்**

நெறிமுறைவறா நிருபமதெழுதினான்
அறிவொடுலேயோ னனுப்பினானெனக்கு

**ஆலோ 1ம்**

லேயோனுக்கேநீ தீட்டனுப்பினையாம்
ஏயவக்கடிதம் இவர்க்கனுப்பினனாம்

**அருள்**

தாயெனுமரியாள் தானுமேபயின்ற
சேயறிவாரிச் செய்தி நானறியேன்

**ஆலோ 2ம்**

ஒன்னலர்பணியும் உகப்புறுலேயோன்
தன்நகர்க்கேநீ தான் போன தோசொல்

**அருள்**

மன்னவர் புகழும் மகிபரேலேயோன்
தன்நகர்சிறையுறுந் தையலர்தமக்குச்
சத்யமாமறையிற் தவறிடாதிருக்கப்
புத்திசொன்னதுவலாற் புவியில்வேறறியேன்

**ஆலோ 1ம்**

இசோரிதேசத்துக்கேகியதுண்மையாம்
இசேதியாய்நிருப மெழுதவேயில்லையாம்

**ராயன்**

வந்தவிக் கடிதம் வகைபெறவிவன்கைச்
சொந்தநல்லெழுத் தோணுதுமெயயே

**ஆலோ 2ம்**

சினமுறுந்துரோகஞ் செறிந்தவிக்கடிதம்
உனதுகையெழுத்தா யுற்றவாதோ

**அருள்**

உகப்பொடுஎன்கை யொப்பமாம்போலே
திகைப்புடனிருக்குதிச் சீட்டைநானறியேன்

**ஆலோ 1ம்**

நீயெழுதாமல் நிருபமுன்கையெழுத்
தாமெனவந்து அடுத்தவாறேதோ

**அருள்**

தூயநல்லடைக்கலத் தூறிலாமரியெனும்
தாயறிவார்நான் தானொன்றுமறியேன்

**ஆலோ 2**

மணிமுடிமகிபா மன்னர்மன்னவனே
துணிவொடு இதற்கு நாம் சொல்வதென்னையா

**ராயன்**

அணிபெற நீங்கள் அறிந்தவாறதுபோல்
நனிவறத்தீர்ப்பீர் ஞாயமுய்த்துணர்ந்தே

**ஆலோ 1ம்**

இவனின்கையொப்பமிருப்பதாலிவனே
அவனுக்குக் கடிதம் அனுப்பியதாகும்
உண்மையென்றே நாமுகப்புடனறிந்தோம்
அந்நீதமெழுதும் அருள்வலக்கரத்தை

**ஆலோ 2ம்**

வெட்டிடவென்றுவிளம்பிறோம்தீர்வை
திட்டமாயறியும் செகதலத்தரசே

**ஆலோ கவி**

கருதரியசந்திர வட்டக்கவிகைநீடக் கட்டாரியுடை வாட்கை கங்கைபத்திரம்
வருபெரியதமிறுதவில்தம் பூரோ
வாத்தியங்கள் தொனிக்கவெகுவரிசை யாக
வரலேயோனூர்பிடித்துக்கொடுக்கவிந்த
வஞ்சனெழுதிடுமிவனின் வலக்கை தன்னை கரவசியாய்தறித்திடவேவேணும் ஞாயம்
கண்டுதீர்த்தோம்தீர்வைகருதித்தானே

**வசனம்**

கேளுமரசே இவன் கடிதமெழுதினது உண்மையாகையால் இவனெழுதின வலக்கரத்தை வெட்டியெறியத் தீர்வைதீர்த்தோமறிவீராக

**ராயன் வசனம்**

மெத்தவுஞ்சந்தோஷஞ்சென்றுவருவீர்களாக

**ஆலோசனைமார் தரு**

(நந்துடன் எ.மெ.)

(1)

சீர்செறியுமுலகோரே ஞாயந் தீர்ப்பதிலேயெங்களைப்போல்வல்ல
தீரர்களாருமிப்பூதலமீதினிற்தானுமிருப்பர்களோ

(2)

பார்பிடிக்கக்கள்ளநிருபமே பரிந்தெழுதுவோனுக்குத்தீர்வையே
பகுத்தெடுத்துநல்ல இதத்துடனோதினோம் பார்த்திபனேற்றிடவே

(1)

காரெருமைபசுருவைகளும் கதித்துநன்றாய் மதிக்கவேபலுகியே
கமவிளைவாசை மிகவுமேயோங்கிடக் கர்த்தன்தாள்துத்தியமே

(2)

மாரிதிங்கள் மூன்று பொழியவம் மகிவிளைவு மிகவுமேநீடவும்
மங்கிடாத்திருசுகம் பொங்கிட யேசுவின் மலர்ப்பதம் போற்றிக்கொள்வோம்

(1)

துன்பமிடி விட்டகன்றோடவும்சுகநலங்க ளென்றுமேநீடவும்
தோகையர்கற்பினிற் பேதமற்றன் பொடு துலங்கிடச்சோபனமே

(2)

வன்புடைய எதிரியிடரின்றி மாவிலங்கேணியில்மறவர்குலம்
வாழ்கவே செல்லமாய் நீள்கவேயடைக்கல மாதாவைப் போற்றிச்செல்வோம்
(தந்தனத்....)

**இயெத்துராயன் கவி**

குளுதிறல்விலிமையொத்த குறித்தசேவகரேகேளும்
வெளுநிறமெனதுவாசல் மீதினில்நின்றெப்போதும்
எழுமறமிகுத்ததுட்டரினைக்கொலைபுரியுமெந்தன்
மழுவரையழைத்துக்கொண்டு வகையுடன்வருகுவீரே

**வசனம்**

கேளுங்கள் சேவகரே எனதுவாசலில்மழுவரையழைத்துக்கொண்டுவருவீர்களாக

**சேவ**

அப்படியே

**சேவகர் தரு**

(1)

வாரும்வாருமெந்தன்தோளனே இயத்தவென்னும்
மன்னவனின் சொற்படியே இன்னேரஞ்சென்று
வீரதீரமேவுமழுவர் தமையழைத்து வேந்தன் முன்பில்விட்டிடுவோஞ்சாந்தமுடனே (நன்)

(2)

ஆரெனைப்போல்வீரரிருப்பார் ஒருநாளெந்தன்
அன்புறுமனைவியென்னைமுன்புஏசவே
வீரமாயடிக்கவருவா ளெனப்பயந்து மெத்தத்தூர மோடிப்போன சுத்தவீரன் நான் (நன்)

(1)

இராசனலுவற்காயொருநாள்ச் செல்லும்போதொரு
யானையடியைக்கண்டுபின் னோடியோடிப்போய்ப் பேர்பெருமரமொன்றினிலே ஏறியொழித்த
பிள்ளையென்னைப்போலவேயாண் பிள்ளைகளுண்டோ

(2)

தார்குழலாளெந்தன்ச் பெண் சாதிமரக்கொப்பொன்றைத் தானேதறித்துவாவென்ன
ஏகிநானுடன் வீரமாகஏறிநுனியில் இருந்தடியை வெட்டவே
பொத்தென்று வீழ்ந்தகெட்டிக்காரன்யான் (நன்)

(1)

மாதம் மூன்றுமாரிபெய்யவும் சிசுப்பேறுற்று வந்திடா திடர்சந்ததி நிந்தம் பலுகித்
தீதெதுமடரிடாமலே செழித்து வாழ்கத் திவ்வியபரன்பதத்தைக் கைதொழுவோம்நாம் (நன்)

(2)

வேதமெங்குமோங்கி வாழ்கவும் கமம்புலங்கள் மெத்தவேவிளைவதுற்று நித்தம்மலிந்து
தீதின்றிமாவிலங்கேணி!ர் தழைவுறவே
தேவதாயைப் போற்றிச்செல்வோம் மாமனைக்குகாம் (நன்)

## மழுவர் வரவு கவி

சல்லடமானது அரையிற்பூட்டிமெய்யிற்சட்டையிட்டுக்கரத்தில்மழுத்தானொன்நேற்திக்
கல்லெனவேபுடைத்தெழுந்த அகத்தினோடு கள்ளுவெட்டிமாறியுண்டு களித்துத்துள்ளி
எல்லவருங்கண்டு மதிமயங்கியேங்க யிருவிழியும்பொறிபறக்கயாளியொத்த
சொல்லரியவியத்தரசன் வாசல்மேவுஞ் சூரமழுவர்கள் சபையிற்தோற்றினாரே

## சபை தரு

தானாதனத்தந்....
சீராரும்புகழ்பேராருந்திகழ் தென்னனியத்துவாசலில்
நேராய்க்காவல்செய் சூராட்கள்மழு வாளாட்கள்சபை தோற்றிறார்
கண்ணாற்தீப்பொறி மின்னார்த்தெழுந்து ஒன்னார்கள்மதிமயங்கவோ
இன்னாட்டதிபன்தன்னாட்டு மொழியேதென்றறியத்தோற்றினார்
(தானாதனத்தம்)

மழுவர் தரு

தனுவதனைக்கர மணிமன்மதனையொத்ததோளா
தானைமன்னனெமையழைத்ததேனோ அறியோமே
மறைகுன்றாதவியத்துவென்னுமிறையவனினூரில்
மாற்றலர்கள் வந்து கண்டைதோற்றினதோளா (நன்)

கள்ளமருந்துண்டுசோரப்பிள்ளைவிழுத்தாட்டுங்
காரிகைமாரெவர்களுமிப்பாரிலுண்டோதோளா
மெள்ளவிருளிற்புகுந்து கொள்ளைகொண்டோருண்டோ
வினையுறுநஞ்சிட்டு உயிர் தனைவதைத்தோருண்டோ (நன்)

தலைவனுரைதனைமறுத்துக் கொலையுலகிற்செய்து
தவறிநடந்தோர்களிங்கே யெவருமுண்டோதோளா
நிலைபெறுமாதிபனாசைத் தொலைவுசெய்யப்பண்ணும்
நீசரெவ ராகிலுமித்தேசமதிலுண்டோ (நன்)

தருவளஞ்சூழ் மறுநகரூர் சாருமன்னரோடு
சண்டைசெய்யவிடவோ வென் னென்றறியோந்தோளா
இருவருமிப்போதிலதி விரைவில்நடந்தேகி
ஏந்தலென்னமின்னநெனச் சேர்ந்தறிவோம்வாரும் (நன்)

**மழுவர் கவி**

கடகரட விகடதடத்தானையோடு
காவலர்களுடனெதிர்த்துக்களரிமீதிற்
புடைபுயவீரர்கள்சிரசையரிந்துவீழ்த்தும்
புரவலர்கள்பரவலனேபோற்றிபோற்றி

(2)

மடமயிலார்கவரிகள்சாமரையிரட்டுடி
வாசமொடுவீசுமுந்தன்கொலுமுன்பாகப்
படபடெனவெங்களையிங்கழைத்த செய்தி
பருத்தறிய இன்னதென்று பகருவீரே

**வசனம்**

சரனஞ்சரணம்மகாராசனேயெங்களையழைத்தகருமமின்னதென்று சொல்லுவீராக

**இயத்திராயன் கவி**

மஞ்சஞ்சமுயர்செருக்காயிருந்துவாழும்
மழுவர்களேயுங்களுக்குவழுத்தக்கேளும்
கஞ்சஞ்சஞ்செறிந்திடுமென்னுரைலேயோன்
காவலனுக்கிநினைந்தகசடன்றன்னை
நெஞ்சஞ்சப்பிடித்திழுத்துக்கொண்டுசென்று
நீசனிவன்வலக்கரத்தைத்தறித்துஎந்தன்
வெஞ்சினவீரர்களுறையுஞ்சமுகந்தன்னில்
விரைவுடனேகொடுவருவீர்விளம்பினேனே

**வசனம்**

கேளும்மழுவர்களே இவனுடையவலக் கரத்தைத்தறித்து எனது சமுகத்திற்கொண்டு வந்துகாட்டுவீர்களாக

**மழுவர் கவி**

கிட்டெடாதேபளாவிந்தக்கெறுவுளோன்றனைப்பிடித்துக்
கட்டெடா கயிற்றினாலே காவலனுரையின்வண்ணம்
இட்டெடாஇழுத்துச்சென்று இருகரந்தன்னிலொன்றை
வெட்டியேமன்னன்முன்பு விரைவுடன்வருகுவோமே

**அருளப்பர் தாழிசைத் தரு**

**தாழிசை**

யூதர்வேதபரநாத்தைச் சிலுவை யோடெடுத்துடலலைவுற
உள்ளமஞ்சவிருள்ளரூடுதலை யோட்டும்லையதனில்நாட்டிடப்

பாதிமதிசரணியேயும்மன்புமிகு பாலனுற்றதுயராலேநீர்
பட்டமாதுயர்கள் தொட்டதெந்தனது பாவமோகொடியசாபமோ

**தரு**

ஆதிபன்சிறையினி லடைத்தமாதர்க்கறி
வோதிவந்தது வல்லால் ஒன்றும்நானறிகிலேன்
உத்தமப்பரி சுத்தநற்ப்ரிய தத்தமேவுவி ரத்தியாகிய
உன்னுபன்னிரு மன்னர்குலமேயென் னின்னல்தீர்த்திடுவர்யே

**தாழிசை**

நரவதாரமுறுபரமனார்சிலுவை
மரமதானதில்மரித்திட வரைகள்திரைகளுயர் வான்கள்மீன்கள்கதிர்
மதியோடனையபொருள்சகலதும்
உரமதானதுயர்பெருகவுன்சுதனின்
உயிரினோடுமதுஉயிரதும்
ஒன்றிவிட்டதென நின்றகன்னியேநீ ரும்மருட்கிருபைபண்ணுவீர்

**தரு**

பரலோகர்தொழும்ராசேஸ்ப் பரியேமாமரியேயுன்
வரமருட்கிருபைசெய் வதுவுமக்கரிதாமோ
மாசிலாமணி யேசலாமும தாசிலாச்சுதன்
யேசுவோடிரந் தடியனுக்கருள் படியிவீயுமின் முடிபுனைந்திடுதாயே

**மழுவர் தரு**

**பல்லவி**

கொண்டுசெல்வோந்தோளா இப்போதியே
கொண்டுசெல்வோந்தோளா
கொண்டுசெல்லுவோமிவனைக்குண்டிட அடித்தடித்து
ரெண்டுகையிலொன்றைவெட்டி யின்றுமன்னன்முன்றில்வர (கொண்)

போர்பெறுமியத்துராச னூரதனைலேயோனுமே
நேர்பெறப்பிடிப்பதற்கு ஏதுஞ்சீட்டையெழுதும்
பெண்ணிலுங்குறைந்தபுத்தி பண்ணிடுமிவனைநாங்கள்
பின்னுமுன்னுமாயிழுத்துத்துன்னுகரமேதறிக்க (கொண்)

துங்கமுறுமெங்கள்ராசன் செங்கோலுக்கிழிவுசெய்து
பங்கமுறுலேயோன்மன்னனிங்குவந்து போர்புரிய
சுந்தரமுடனேகள்ளத் தந்தரமதய்ச்சீட்டெழுதும்
மந்திரியிவனுடைக ரந்தனைத்தறிப்பதற்கு (கொண்)

**மழுவர் கவி**

(1)

கன்னல்வளஞ்சூழுமிந்தநகரையாளுங்
காவலன்கட்டளைப்படிக்குக்கசடன்றன்னை
இன்னமும்நாம்பார்த்திருக்கலாமோவிப்போ
திழுத்து வந்துமரத்திலடுத்திடுவாய்தோளா

(2)

உன்னரியகடவுளுக்கேராதபாவி
யுடலமதுநடுநடுங்கவொருகைதன்னை
திண்ணமுடன்வெட்டிவிட்டோமடாத்துச்செய்த
தீயனுக்குநல்புத்திதெழியந்தானே

**அருளப்பர் தரு** (அனுதினமுற்பத எ.மெ.)

அத்தமுழைந்துகளைபோடுதேயண்ணே
ரெத்தம்பெருகியாருயோடுதேயென்னை
அடித்துத்தள்ளிக்கரத்தைத் தறித்துச்சினமதனை
முடிந்துப்போட்டீரேயென்னைப் பிடித்துத்தள்ளாதீரன்னே (தனதன)

மெத்தவதிககடுப்பாகுதேயெந்தன்
சித்தத்திளிற்துயரம்பூணுதே மண்ணில்
இழுத்துவிழுத்திச்சிய மழுத்திச்சலிப்பதனைக்
கொழுத்தித்துன்பஞ்செய்தீரே முழுத்தீதல்லோ வென்னன்னே (தனதன)

நேசமில்லாமலே வீசிறீர்நெஞ்சில்
ரோசமெழும்படிக்குப்
பேசிறீரண்ணே நிலத்திலுமதுவஞ்சப் பலத்திலெனையே அஞ்சத்
தலத்திற்செய்தீர்தயவு நலத்தோடு தாருமண்ணே (தனதன)

இராசனுரையைக்குறிக்கிறீரெந்தன்
நேசகரந்தன்னைத்தறித்தீரேயண்ணே
பாரில் நடுக்கத்துடனேகெடுத்தீர்வெண்டுண்டகரத்தைக் கொடுப்பதல்லாதே
மீண்டும் அடிக்கப்போறீரோ அண்ணே (தனதன)

**மழுவர் கவி**

கொடுத்திடுங்கரத்தையென்று கூவியேகேட்கிறாய் நீ
திடத்துடனரனுக்குச் சென்றுநாம்காட்டவேணும்
கடக்கரும்புவியையாள்வோன் களறினாற்கரத்தைக்காட்டி
எடுத்துவந்துனக்கு மீண்டும் இவ்விடந்தருவோ நாமே

**வசனம்**

கேளடா அருளப்பா நீ வெட்டி கையைக்கேட்கிறாய் அரசன்கோவிப்பார் இவரிடங்காட்டிச் சம்மதியுண்டானால் உன்னிடங்கொண்டு வந்துதருவோமறிவாயாக

**மழுவர் கவி**

உலகத்தையாளும் வேந்தேயுமதுசொற்படிக்குநாங்கள்
கலகமாய்நிருபம்விட்டோன் கரமதைவெட்டிவந்தோம்
தலமிதிலனுமத்தைத் தரும்படிகேட்கிறானுன்
நலமிகுவிருப்பந்தன்னை நவிற்றுவீரெமக்குத்தானே

**வசனம்**

கேளும்ராசனே அருளப்பனுடைகரத்தை வெட்டி வந்தோம் அவனும்மிடங்கேட்டு அக்கரத்தைத் தரும்படி கெஞ்சுகிறான் விருப்பம்யாதென்று சொல்லுவீராக

**இயெத்துராயன் கவி**

வெஞ்சினமமர்ந்துபோச்சுவெட்டவுங்கரத்தைநீங்கள்
கெஞ்சியேகேட்டதாலங் கேகியேநீங்கள் சென்று
வஞ்சகனிடங்கொடுத்துமகிழ்வுடனுங்கள்மாடம்
தஞ்சமாய்நானிருப்பேன்தான்சென்று வாழுவீரே

**வசனம்**

கேளும்மழுவர்களே எனது கோபந்தணிந்தது வெட்டியகரத்தையவன ̇கேட்டபடியால் அவனிடங்கொடுத்துச் செல்வீர்களாள

**மழுவர் கவி**

தந்தரக்கபடனேநீதானிரந்தேகரத்தைத்
தந்திடக்கேட்டதாலேதரா திபனிளகிவிட்டார்
இந்தாவுன்கரத்தையேரு இதுசெய்தகொடுமைக்காக
வந்ததுவென்றுபார்த்து மனதினிலுனருவாயே

**வசனம்**

கேளடாநீசனேநீயிரந்து கேட்டபடியால் இராசன் வெட்டியகரத்தைக்கொடுக்கச்சொன்னார் ஏற்றக்கொள்வாயாக

**மமுவர்தரு பல்லவி**

கெட்டிக்காரன்நானே வீரசூரக் கெட்டிக்காரன்நானே

கெட்டிக்காரனென்னை மட்டியெனவேபெண்டில்
சட்டியாலடிக்கக் கிட்டியொங் கும்போது
கட்டிக் கொடுக்கிழுத்துக் காலிரண்டையுந்தூக்கிக்
கடுகவுதைத்துத்தள்ளி முடுகவிழுந்து போன (கெட்)

சட்டமாயிருந்ததண்ணீர்க்கிணற்றினுள்ளே
தன்னைப்போலொருவன்சன்னை பண்ணக்கண்டு
வெட்டவென்றுவாளையெட்டியெடுத்துக்கொண்டு
வீரத்துடன்குதித்து ஆழத்தினுள்விழுந்த (கெட்)

முன்னேயொருநாள்வீட்டுத் திண்ணைதனிலிருந்து
முடிக்கராசசேவைக்கணக்குப்பார்க்கும் போது
மின்னிமுளங்கிடநா னென்னோவெனப்பயந்து
வீட்டுட்போய்க்கதவைப்பூட்டி மாட்டிநின்ற (கெட்)

சென்னெற்பழனங்களிற்தேங்கிவிளைந்திடவுந்
தீர்ந்துமிடிமைபிணி செல்வஞ்செழிப்புறவும்
நன்மைத்திருமகளேநாடியுறைந்திடவும்
நாதன்பாதந்தன்னை நாளும்பணிந்துகொள்வோம் (கெட்)

சந்ததிமிகவேதழைத்துப்பலுகிடவும்
சத்தியஞானமறை தரையிற்பரவிடவும்

இந்தமாவிலங்கேணி யென்றுஞ்செழிப்புறவும்
ஏற்றஅடைக்கலத்தா யிருசரண்போற்றிச்செல்வோம் (கெட்)

**அருளப்பர் கொச்சகம்**

அன்னீதலேயோனவத்தகடிதத்தாலே
மன்னவனியத்துவென்வலக்கரத்தைவெட்டினனே
இந்நேரமக்கரங்கொண் டேகியடைக்கலத்தாய்
தன்கோவில்மீதுசெபந்தான்புரியச்செல்வேனே

**அருளப்பர்தரு** (கனகமுடி எ.மெ.)

செல்லுவேனிப்போநடந்துநானே திருத்
தேவதயாபரி யானவடைக்கல மாமரியினாலயத்தைத்தேடி
அல்லல்நீக்குந்தாயத்தாயார்தாமே வேந்தன்னறுத்திடுகையையே
பொருத்திடவென்றுநா னடிபணிந்துவேண்டிக்கொள்ளுவேனே (தன)

தீயனாம்லேயோன்மகிபன்தானும் விட்ட
சீட்டினாலென்னையும் வாட்டியே கையினைச் செம்மலாமியத்துவெட்டினானே
தாயவலினாலயந்தோனுகுதே சென்று சந்திரபாதமே
வந்தனைசெய்குவேன் சஞ்சலத்தைநீக்கிவிடுமென்று (நன)

**அருள் கொச்சகம்**

உடுவார்சிரத்தியம்பரத்தி யுலகின்பவத்தைத்தீர்ப்பதற்காய்
வடிவார் பெத்தலேகமதில் மனுவாய்ச்சுதனைத்தந்தவளே
கடியநரகக்கதவடைத்த கன்னியும்மைநான்மறவேன்
அடியனெனக்குத்துணைவாராய் அடைக்கலமாமரியாளே

(தரு)

அடைக்தலமாதாவேதாயே உந்தன் அடைக்கலமன்றியாதோ
ரடைக்கலம் வேறுமில்லை ஆளுமிந்தவேளைவந்து
திடத்துடனேலேயோன்வேந்தன் தானும் சிறையிலடைத்திட்ட
தெரிவையர்களுக்குநான் சென்றுன்சுரூபம்வணக்கம் (நன்)

தன்னைமீறிடாதிருக்கப் புத்தி சாற்றியேவந்ததற்காய்
மாற்றமுறுங்கடிதம் தான்வரைந்தியத்துவுக்கு
என்றுடைய கையொப்பம்போல் வைத்து
எனதுடைராசன்நாட்டை யவனுக்குப்பிடித்தீயநா னெழுதினேனென்றனுப்ப (நன்)

மன்னவனுஞ் சீட்டைப்பார்த்து அது வரைந்தது
நானென்றெண்ணி யுரம்பெறுமாக்கினையே வருத்தியெந்தன்வலக்கரத்தை
இன்னலுறவெட்டிப்பின்பு கரத்தை யென்கையிலேகொடுத்தார்
உன்துனையன்றிவேறு எவர்துணையுமெனக்கு இல்லை (நன்)

கன்னியர்தமக்கரசேயுந்தன் கருணைவிழிதிரும்பி
யடியேன் கரமொட்டவே காரணிகிருபைசெய்யும் (நன்)

**வசனம்**

அர்ச்சியசிட்டஅடைக்கலமாதாவே அடியேன்மேற்கருணைகூர்ந்து எனதுகரத்தை ஒட்டச்செய்தருளுந்தாயே

**சம்மனசுவரவு தரு**

ஆனந்தம்நல்லானந்தங் கொள்ளு அருளப்பனேநீயும் சற்றும்
அஞ்சாதேயடைக்கலத்தாயுமக் காறுதல்செய்துவிட்டார்
வானந்தயாபரிபாதம் மறவாதுபோற்றிக்கெள்ளும்
இப்போ வாறேனுளந்தேறக்கர மத்தைமகிழ்வாகஒட்டிடுவேன்
மூவுலகராக் கினியெல்லோர்க்கும்
முத்தமதாயவவே மிக ஆவலுற்றுமசெபத்துக்ககத்திலிரங்கினரே
தேவசுதன்தானு முறைந்திட்டதிவ்விய ஆலயத்தை
நிதந் தேடுவோர்க்குப் பீடைகள்யாவையும் தீர்ப்பாரேகாப்பாரே
ஏவைபவந்தீர்த்திட ஏகனினியசுதனைத்தந்த
ஈஸ்பரியைநம்பினாயுந்த னிடர்தீர்க்கவிட்டாரே

**சம்மனசு அகவல்**

அம்பரம்புவனம் அடங்கலும்படைத்த
எம்பரன்சுதனினியநற்றாயார் உனதுமன்றாட்டை யுகப்புடன்கேட்டு
எனையிங்கனுப்பினாரியம்பிடக்கேளும்
கன்னியர்க்கரசியைக் கைவிடாதென்றும்
இன்னல்கள்நீங்கும் இப்போதுன்கரத்தை ஒட்டினேன்நானும் உத்தமிசொற்போல்
திட்டமாயென்றுந் திருஅடைக்கலத்தாய்
பாதத்தைப்பேணுவாய் பரிவொடுவிண்ணில் ஏதமற்றேநா னின்றுசெல்வேனே

**சம்மனசு தரு** (அஞ்சுகமே எ.மெ.)

அன்னையேயடைக்கலமாதாவே யுந்த னம்புயப்பொற்பாதந்தந்து
ஆதரிப்பாய்போற்றி இன்னல்களகற்றுந்தாய்நீரல்லோ உற்ற
இடர்பிணிமுற்றும் நீக்கும் இருசரய்போற்றி (நன்)

பாலமதியைமிதித்ததாயே எம்மைப்பாதுகாத்து எந்தநாளும்
ஆதரிப்பாய்போற்றி சீலத்தவி தின்குலச்செல்வியதே
ஒரு சிறுமையணுகாமலாளுந் திருப்பதமேபோற்றி (நன்)

தீதிலாதுசந்ததியேபெருகி யென்றுஞ்
செழிப்புறப்புரிந்தருள்வாய்திருச்சரணம் போற்றி
மாதமூன்றுமாரிபெய்து செந்நெல் இந்த
மாவிலங்கேணியில்நீட வரமருள்வாய் போற்றி (நன்)

**அருளப்பர் கொச்சகம்**

துட்டஅரகைசிரசைத்துய்யபதத்தால்நசித்த
இட்டமுறுசுந்தரியே யெம்மடைக்கலத்தாயே
ஒட்டவென்கரத்தைநவம் உகப்புறச்செய்யுன்பாதம்
திட்டமுடன்சென்னிவைத்துத்தினமும்மறவேனே

**வசனம்**

அர்ச்சிட்டஅடைக்கலமாதாவே அடியேனின்கரத்தையொட்ட நீர்செய்ததயவை ஒருபோதும் மறக்கமாட்டேன்தாயே

**சபை கவி**

மன்னவனாமியத்துமந்திரிகரந்தறித்து இன்னல்செய்துற்ற
செய்தி யிசோரிமன்லேயோன்கேட்டு
மண்ணிலேமிகுசந்தோஷமாக மாற்றலரைவெல்லும்
தன்னிகரமைச்சனோடு சங்கதிசாற்றுவானே

**லேயோனும் தந்திரியுந்தரு**

**லேயோ** (தேனாராஷ எ.மெ.)

கற்றாய்புகழ்மந்திரியேவெகு காதலுடனேதான் இந்த
நற்றாரணிமீதிலோர்செய்தி நவிற்றிடக்கேட்டருளும்

**மந்திரி**

பொற்றாமரைமாமலற்றாரணி பூபதியேநீரும் என்ன
உற்றசெய்தியானதெனக்கிப்போ ஓதிடுவீராசே

**லேயோ**

கன்னி யற்குப்புத்திசொன்னஅரு ளப்பன்கரமதனை
மன்னனின்னலுற வெட்டினானென்றுமே யானுமறிந்தேனே

**மந்திரி**

மன்னா விந்தத் தேசமதா ளும் மகத்துவபூபதியே அது
உண்மையெனநானுமுரைக்க உகப்பொடுகெட்டேனே

**லேயோ**

பெண்ணாரையினிச்சிறைவைப்பதாலென்னபயன்நமக்கு அவன்
தன்னிற்பழிவாங்கச்செய்தோமினித் தான்சிறையால்விடுவோம்

**மந்திரி**

இன்னிலம்புரப்பவரேயும தெண்ணமதாம்படியே
அந்த மின்னாரைவிடுதலெனக்கும்விருப்பமதாகுதையா (தானா)

**லேயோன்ராயன் கவி**

கட்டியகாறாநானுங் களறிடும்வார்த்தை கேளாய்
திட்டமாய்ச்சிறையில்வைத்தசெய்யிளைமாரைநீயும்
சட்டெனநடந்துசென்று சடுதியாய்மறியல்வீட்டால்
விட்டெந்தன்சமூகமீதுவிரைவினில் வருகுவாயே

**வசனம்**

கேளாய்கட்டியமெ அதிசீக்கிரஞ்சென்றுமறியலிலிருக்கும் பெண்களை விடுதலை செய்துவருவாயாக

**கட்டியன் வசனம்**

அப்படியேசெய்கிறேனையா

**கட்டியன் தரு** (நல்வபுத்தி எ.மெ.)

தென்னவனுதின்னேரத்திற்சொன்னபடிக்கு நானுந்
தீவிரமதாகவிப்போசெல்லுவேனே
கன்னல்மொழியாரைச்சிறை தன்னால்விடவேஇப்போ
தின்னமதாகவே போவேன்தீவிரமுடன் (நன்)

ஆரெனைப்போல்வீரியர்களுண்டுநடையில்
அரை நாளின்வழிதன்னையாறு நாளில்நடப்பேன்
சீருடையசெம்மலினுரைப்படிக்குநான் இப்போ
சென்றுசிறையால்விடுவேன்சேயிளையாரை (நன்)

**கட்டியன் கவி**

இறையவனுரைமீறி யெதிரிடைபுரிந்ததற்காய்ச்
சிறையினிலிருந்துவாடும் சேயிழைமாரேயும்மைக்
குறையிலாதுலகையாளுங்கொற்றவன் தானுமிப்போ
மறியலால்லிடவேசொன்னார்மகிழ்ந்துநீர்செல்லுவீரே

**வசனம்**

கேளும் பெண்காள் ராசனுங்களைச் சிறையால்விடச் சொன்னார் செல்வீர்களாக தருமசொரூபியும் மரியடைக்கலமுந்தரு

**தரும** (கனகமுடி எ.மெ.)

அன்னங்களேவர்ன்னமயிலினமே அரு ளப்பரின்நகரது
எப்பதியென்றுறுநீர் செப்பிடுவீரெங்களுக்குத்தானே

**மரியை**

வர்ன்னமானவரிக்குயிலே புள்ளிமானினமேவளர்
கானினமேயெங்கள் மந்திரியைக்கண்டாற்சொல்லுவீரே (நன்)

**தரும**

கண்டதேனையுண்டவரி வண்டே வர்ன்னக்
காடைகளேயரும் பேடைகளே யுயர்
காசினிதமாஸ்கெங்கேசொல்வீரே

**மரியை**

மண்டலத்துயர்சொர்ன்னப்பட்சிகளே இரு வாட்சிகளே வெகு
மாட்சிமையாகிய மாதவன்றன்னூரெதுசொல்வீரே (நற்)

**தரும**

அஞ்சுபஞ்சமிஞ்சுவர்ன்னக்கிளியேஎம தன்புறுமுத்தம னின்புறுமருளப்ப
ரானவரினூரெதுசொல்வீரே

**மரியை**

கிஞ்சுகவஞ்சிமொழிமாதர்களே யெங்கட்
கிருட்சிறைச்சாலைவந் தருட்பலபுத்திசொல்
இன்பவான்மனையெங்கேசொல்வீரே (நன்)

**சபை கவி**

அன்றுகன்னியர்துயரமிகுதியாக அழுதழுதுஇருவிழிநீராறாயோடச்
சென்றுதமாஸ்கெனுநகரமெங்குந்தேடிச்
சிறந்தஅவர்மாளிகையையடைந்து பார்த்து
நன்றானவமைச்சனைக்கானைக்கானாததாலேநாடியடைக்கலமாதா டீகாவிற்குள்ளே
கண்டவரின்கவலைதளையறிந்துநின்று
கலங்குவா ரழுதழுபுலம்புவாரே

**பெண்களும் அருளப்பருந்தரு**

**தரும** (வர்ன்னமடமாமயிலே எ.மெ)

மன்னர்மகிழ்மந்திரியே யுமக்கு வந்தவிந்தத்
மொந்தமென்ன சிந்தைமிக வருந்துதண்ணே

**அருள்**

அன்னநடைமாதர்களே இந்த அம்புவியி
லெம்பரனார் தன் செயல்தான் நம்புமம்மா

**மரியை**

புத்திசெறிமந்திரியே யுமக்குப்பூதலத்தில்
வாதைசெய்யப் பேதமென்னோ வோதுமையா

**அருள்**

சத்யமறையுங்களுக்கு வந்து சாற்றினதா
லேற்றமுடன் தோற்றினதிம் மாற்றமம்மா

**தரும**

கர்த்தன்மறை யோதினதால் உமக்குக்
காசினியில் நீசர்செய்த மோசமென்ன பேசுமையா

**அருள்**

மெத்துதிறல்லேயோனும் எழுதி விட்டகள்ளச்
சட்டமதால்த் தொட்டஅவதூறிதமம்மா

**மரியை**

தாதுமலர்முகத்தானே சீட்டுத் தன்னைநம்பி மன்னவன்செய் அன்னிதமென் னறையுமையா

**அருள்**

மோதிபகைச்சீட்டைநம்பிக் கரமுற்றறுத்தா னித்தாயாரு மொட்டிவிட்டார் திட்டமம்மா

**அருள் கொச்சகம்**

கஞ்சமலர்வேய்ந்தமுகக் கார்குழலாரேகவலை
மிஞ்சாதுவிட்டுஇந்த வேதபரன்தாயார்க்கு
அஞ்சலிசெய்தேயுமதகத்தினுக்குஏகிடுவீர்
கொஞ்சுசொர்னமாளிகைக்குக் கோதையரேபோய்வாறேன்

**வசனம்**

கேளுஞ்சகோதரிகளே எல்லாம்தேவசித்தம் துக்கத்தையாற்றி எனக்கு இந்தநன்மைசெய்த அடைக்கலமாதாவைப் போற்றி உங்கள் மாளிகை செல்லுற்கள் நானும் எனது மாளிகைசென்று வருகிறேன் சகோதரிகளே

**பெண்கள் வசனம்**

அப்படியேபோய்வாருமன்னா

## பெண்கள்தரு

**தரும**

அடைக்கலநன்மாமரியே போற்றியும் தருளுறுகருணைநன்
மழையடியவரின்மே லன்புறச்சொலித்தருள்வாய்போற்றி

**மரியை**

இடுக்கங்களைநீக்கிவிட்டாய்போற்றி உம திந்துபொற்பாதமே தந்து
எப்போதுமே யெங்களைக் காப்பாற்றிக்கொள்வீர்போற்றி

**தரும**

தாரகைமுடிச்சிரத்திபோற்றி திருத் தஞ்சமேயுதவியூர் பஞ்சமில்லாமலே
தாபரித்துக்கொள்ளுமம்மாபோற்றி

**மரியை**

பாருளோர்தமக்கரசிபோற்றி இடர் படவுருறா பிடிபிணியடருறாகெமைநிமே
பாதுகாத்துமீளுந்தாயேபோற்றி

**தரும**

இரவியையுடுத்தவளேபோற்றி வந்து இலங்கியேதிருமகள்
துலங்கவே மனைகளில் இன்று மென்றுமேயகுள்கூர்போற்றி

**மரியை**

அரவுசிரம்நைத்தவரேபோற்றி எங்கட்காதர வுள்றிருப் பாதரவிந்தமே
ஆதரித்துக்கொள்ளுமென்றும் போற்றி (நன்)

**சபை கவி**

இவ்விதமாயடைக்கலத்தாய்தனக் தோஸ்திர மியம்பியந்தமாதர்தமதிடத்திற்கேகச்
செவ்வையுறுமருளப்பர்தமதுமாடஞ் சென்றுபரன்தாய்க்கூழ்யஞ்செய்தேவைக
அவ்வேளையியத்துமன்னனவரிடத்தில் அனுகிவந்துதான்புரிந்த அசடுதன்னைத்
திவ்வியதயாபரன்றன்னிடமிரந்து செம்மையுறப்பொறுத்திடென்றுசெப்பினானே

**இயத்துராயன் கொச்**

ஐயமற்ற மந்திரியே அனியாயமாகவுந்தன்
கையினைத்தறிக்கச்செய்த கசடனுமாய்ப்போனேனே
வையமதிலேகரமும் வந்து ஒட்டுகின்றநவச்
செய்தியிவ்வதிசயத்தாற் சிந்தைமிகவஞ்சுகுதே

**ராயனும் அருளுந் தரு**

**ராயன்**

அதிசயமீததிசயம்நானறியேன் எந்தன்
அமைச்சனேநான்செய்தகுற்றம் பொறுப்பீர்

**அருள்**

பதியிலிதுதே வசித்தமாகும் ஒட்டும்
பரமதாயின்பதத்தைப் போற்றிக்கொள்ளும் (நன்)

**ராயன்**

தெரியாமற்கள்ளச்சீட்டைநம்பி
உமக்குத் தீமைசெய்தபாதகனானேனே

**அருள்**

பெரியவாதைநீர்புரிந்தத்ல்ல ஏகன்
பெருங்கருணையருளிதுவே மன்னா (நன்)

**ராயன்**

இந்தவிதஞ்செய்வானென்று அறிந்ததால் நானும்
ஏகியமர்தொடுப்பேன்முன்னே கண்டாய்

**அருள்**

சந்தமரியாள்துணையைநம்பும் அர சாட்சிக்கிடரின்றிக்காப் பாரென்றும்

**ராயன் வசனம்**

கேளும்மந்திரியே நான் செய்த குற்றத்தைபொறுக்கும்படியாக ஆண்டவரிடமிரந்துகொள்வீராக

**அருள் கவி**

எனக்கிந்தவகையாய்வந்ததேகனின் சித்தமன்றி
மனக்கருத்துறவும் மாயேவந்ததென்றெண்ண வேண்டாம்...

கனக்குமிப் வில்நன்மை கன்னிமாமரித்தாயீவார்
உமக்கொரு குறையும் வாராதுளத்தினினுல றிகுவீரே

**வசனம்**

கேளும் ராசனே நீரெனக்கிந்தக் குற்றங்கள் செய்ததென்று நினைக்க வேண்டாம் தேவதாயார் பொறுத்துக் கொள்வாரறிந்து கொள்வீராக

**ராயன் கவி**

அறங்குலாவெனது நேச வமைச்சனுக்கெதிரதாக
மறங்குலாவியகள் ளோலை வாசகமெழுதிவிட்ட
கறங்குலாவியதுர்லேயோன் காவலனுடன் போர்செய்யத்
திறங்குலாவியவென்சேனைத் தீரனைவரச்செய்வாயே

**வசனம்**

கேட்பாயாகக் கட்டிய மேலேயோனோடு சண்டை செய்யப்போவதற்கு எனது சேனாபதியையுஞ்சேனைகளையும் வரும்படிசெய்வாயாக

**கட் வச**

அப்படியே செய்கிறேனரசே

**கப்பித்தான் வரவு கவி**

தரியலர்கேடிபட்டோடத் தானை சேனைகள் சுற்றாட
விரிசுடர்க்கிரணபின்ன விளங்குவேலிடையிற்றுள்ளக்
கவிநிகர்வலிமையென்னக் காவலனழைத்ததாலே
பரிபிசையேறிச்சேனா பதிசபைவருகின்றானே

**சபை தரு**

பொன்னணிமவுலி புனையியத்தரசன் தன்னகுந்தானைத்தலைவன் வந்தனனே
அணியணிபடைமுன்னணியதுபரவ அதிவிதசேனாபதியும் வந்தனனே

**கப்பித்தான் தரு**

மரகதமாணிக்கவசரக்கிரீடமணியும் எங்கள் மகிபனென்னை வரவழைத்தகருமமென்னவோ
தரளவெண்டரள முடிமகிபர்களாரும் வந்து
சண்டைதொடுத்தாரோவென்ன வென்றறியேனே
கரிபரித்திரனுலரிக்கினை யெனச்செல்வேன் சென்று
காற்றினிற் பஞ்சாயடித்துத் தூற்றிவிடுவேன்...
எரியெனச்சினமுடையதரியலர்களை
என்கை யீட்டியெறிவேலினாலே வாட்டிவெல்லுவேன்...
நாட்டிலென் பெயர்கேட்டாற்பின் காட்டிடார்களோ
இரு நான்குதிக்குமுள்ளோர் தாமும் ஏங்கிடார்களோ..
தீட்டிய கதிர்கரத்திற் பூட்டுமியத்து மன்முன்
சென்றறிந்திடவிரைவிலின்று நடப்பேன்

**கப்பித்தான் கழிநெடில்**

சிங்களர்வங்கர்தெலிங்கர்களடிதொழு திறமுடையாய் சரணம்
சீனர்மறாடர்க எானவர்முடிபணி செகபதியே சரணம்

மங்கலசங்கிர்த லங்கிர்தலோல
மகிபா செயசரணம் மத்தகயத்தினை யொத்த புயத்திறல் மன்னாசெயசரணம்
தங்கமணிக்கிரீடஞ்சிரசினிலணி தலைவாசெயசரணம்
சத்தய வாசகமெத்திய உத்தம தயவுடையாய் சரணம்
துங்கமிகுந்து நலங்கொளுமதிவித சூரரோடெந்தனையும்
துரிதிறத்தொடு வரவேயழைத்தது சொல்லிடுவீர்சரணம்

**வசனம்**

சரணஞ்சரணமியத்துமகாராசனே என்னையுஞ் சேனைதானைகளையும் அழைத்த செய்தியின்ன தென்று அறியச்சொல்வீராக

**ராயன் கவி**

அரும் பொருளைவிரும்பு மெந்தனமைச்சன்மீது
அந்நீதச்சீட்டெழுதியவத்தஞ் செய்த...
பெருங் கொடியதீயனெனும்லேயோன்ராசன்
பேர்புவியிலிப்பொழுது பெலமாய்ச்சென்று
கரும்பத னைக்கரிமுறித்து எறியும்வாறாய்க்
கருதரியசமர் பொருதக்கவனமானேன்
தரும்புகழ் சேரெண்தானைசேனையான
தளங்களொடுபுறப்படுவாய் சமர்வல்லோனே

வேதநிலைதவறாத அமைச்சனே நாள்...
விளம்பு மொழியானதைநீர் விருப்பாய்க்கேளும்...
காதகனாம் லேயோனின் நகரிற்சென்று
கருதரிய சமர்பொருதக்கவனமானேன்...
சீதமதிதனைப்பதத்தால் மிதித்தெழுந்த
தேவதாய்திருச்சரணஞ் சென்னிவைத்து...
மாதயவதாயெனது கூடநீரும்
வாவேணுமதிககலை மதிவல்லோனே

**வசனம்**

கேளுமமைச்சே கள்ளக் கடிதம்விட்டலேயோனோடு சமர்பொருத ஆய்த்தமானேன் நீரும் நான்செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு என் கூடவருவீராக

**அருள் வசனம்**

அப்படியேவருகிறேனரசே

## ராயனுங் கப்பித்தானுந்தரு

**ராயன்** (சிறுகுமதி எ. மெ.)

திறமுறு மொருத்தலி னுரமுறு மதிவிதச் சேனைவீரா
அந்தச் செம்லேயோன் நகர்க் கின்னேரம் விரை வொடுசெல்லுவோமே

**கப்பி**

அறமதுகற்றிடு மதிவிதத்துணிவுறு மரசரேறே நீரும்
அருளியமொழிபோலே மருவிய சேனையோடன் பாய்வாறேன்

**ராயன்**

தேவனுக்கேராததீங்கு செய்தோனூரிற்செல்லுவோமே
அந்தத் தீய னையவ்விடம் மேவியே போரினில் வெல்லுவோமே

**கப்பி**

மாமரியாள் தரு பாலகனார்துணை போற்றுவேனே
அந்த மாற்றலர்களுமதிற் கூற்றுவன் போல் முன்னே தோற்றுவேனே

**ராயன்**

சீருறுலேயோனினூரது தெரியுதுவாரும் பாரும்
அந்தத் தீய னைநரிகழுகானது உனச்செய்வோம் சேருஞ்சேரும்

**கப்பி**

கோரமற்றவன் முன்பு வீரமோடேசென்று கிட்டுவேனே
இந்தப் போரினிற் செயமுமக்கேதரு வேன்பல முற்றுநானே

**ராயன் கவி**

வீரரணக்களத்திலடையலர்கள் சென்னி விரைந்தரிந்து பருந்தருந்தப் போடுகின்ற
சூரனெனப்புகழ்படைத்த எனதுநேசத் துல்லிபகப்பித்தானே சொல்லக்கேளாய்
ஆரபரி வாரமொடுலேயோனென்னும் அரசனவன் நகரிதில்வந்தனுகினோம் நாம்
தீரமுறு சேனைபடைகளை நிறுத்திச் செருணசெய்தி தூதரினாற்றெரிவிப்பாயே

**வசனம்**

கேளுங்கப்பித்தாமே லேயோன் ராசனினிடமாகிய இசோரிதேசத்தில்வந்தோம் சண்டையின் செய்தியைத் தூதராலவனுக்குத் தெரிவிப்பீராக

**கப்பித்தான் கவி**

வீராதிவீரனான விறலுறுதூதனே நீ...
சூராதி சூரனென்னச் சுறுக்கினில் நடந்துசென்று
பாராளும்லே யோன் முன்புபடைக்கு நாமெழுந்து இங்கு
காராழிபோலே சூழ்ந்த கதை சொல்லிவருவாயே

**கப். வச**

கேட்பாயாகத்தூதனே லேயோன்ராசனிடஞ் சென்று நாங்கள் சண்டைக்குவந்த செய்தியைத் தெரிவித்து வருவாயாக

**தூதன் வசனம்**

அப்படியே போய்வருகிறேன் துரையே

**தூதன் கவி**

காவலர்கள் போற்று மெங்களியத்திராசன்
கருதரியசேனை படைகளையுங்கொண்டு
ஆவலுடனமர்புரியமனதிலெண்ணி
யரசேயிங்கு மதுபதியதில்வந்தாரால்
தாவுமவரோடே போர்க்கோலஞ் செய்யச் சம்மதமோ
அல்லதும் மூர்தனைத் தாரீரோ
மேவு முமதிதையமதிலெண்ணந்தன்னை விளம்பு மெங்கள்
வேந்தனுக்கு விள்ளத்தானே

**வசனம்**

கேளுமரசே எங்களியத்துராசன் உம்முடன் சண்டைசெய்ய வந்திருக்கிறார் அதற்கு விருப்பமோ அல்லது உமது ஊரைத்தருவீரோ என்றதைப்பற்றித் தெரிவிப்பீராக

**லேயோ ஆசிரியம்**

அண்டத்துறுஞ்சோதிதாரகையினோடுமதி யதிர்ந்தேயுதிர்ந்து விழினும்
அல்பகல தாகினும் பகலிரவதாகினும். அருணனது திசைமாறினும்...

வண்டத்தனங் கொண்ட மதகரியுமரிகளும் வாய்விண்டு உளறிவிழனும்
வரைகளது இடியினுந் திரைகளது சுவறினும் மண்டலம் பொடிபொடியினும்...
சண்டைத் திறங்கொண்டதங்கமுடி மகிபரென் தாற்பணிந்திடாரோ சற்று
மெளைமதியாமலுற்றவன் கெறுவுடன் சமர்க்கிங்கெழுந்துவரவோ...
கண்டத்தனக்கயவனைப்பிடித்தென்னுடைய கரவசியினாற்கழைந்து
கங்கமொடுகழுகுகா கங்கள் நாய்நரிகள்பங் காக்குவேன்சீக்கிரமிதே

**லேயோன் தரு**

ஆணுவமிகுந்துபோச்சோ எனையுமொரு வீணனென்று மெண்ணவாச்சோ
ஆணுவமிகுந்துபோச்சோ அத்தனைக்குங் கெறுவாச்சோ
அண்டர்கள் சேனைகள் மண்டியே வருகினும்
இன்றவனுடலது துண்டென அரிகுவேன் (ஆணு)

குக்கனென்றெ னைநினைந்தானோ துரத்தொருகோ
லைக்கரத்திலே கொணர்ந்தானோ
மற்கடம் போறபல்லிழித்து வந்து கும்பிடச்செய்யேனோ
வஞ்சகனஞ்சவே மிஞ்சவிடாமலே இஞ்சகமீதினிற் பஞ்செனத்தூற்றுவேன் (ஆணு)

நீரினிற்பம்பரமாடுமோ புழுநெருப்பை நேருடனரிக்கக்கூடுமோ
கீரி பாம்புக்கஞ்சிடுமோ கிளிபருந்தை மிஞ்சிடுமோ
கெட்டியோ திட்டமாய் விட்டுவிடாமலே
சட்டெனவேகியத் துட்டனைப்பிடிப்பேன் (ஆணு)

## லேயோனும் மந்திரியுந்தரு

**லேயோன்** (வாரும் வாருமதி எ.மெ)

வாரும் வாருமதி வல்லவா சமர் வந்துதிப்போததிநல்லவா
இந்தப் போரிற் செயங்கொள்ள மெல்லவாய் உந்தன்
புத்தியென்னென்று நீ சொல்லுவாய்

**மந்**

ஆருக்குமன்புறு சூரனே சமர்க் கஞ்சாதநெஞ்சுறுவீரனே
இந்த வூருக்கு நல்லுபகாரனே சண்டைக் குற்றணி செய்திடுந்தீரனே

**லேயோன்**

இயத்துமன்னனை வெல்லல்வல்லையோ
சமர்க் கேற்றவணியென்னிலில்லையோ
மத்த கயத்தினைப்போலங்கு செல்லுவேன்.
அந்தக் காவலன்தன்னையே கொல்லுவேன்

**மந்**

மிகுத்தபீரங்கி மருந்தொடு குண்டு மேவுந்தானை படைதம்மொடு
அணி வகுத்தவனஞ்சிடச்செய்குவீர் வந்த வம்பன் சிரத்தையே கொய்யுவீர்

**லேயோ**

கத்தியெடுத்துப்பிடிக்கிறேன் வீர கண்டாமணியையடிக்கிறேன்
போரிற் பத்தியாய்ச்சென்று நடிக்கிறேன் வயப் போத்தைப் போறபாய்ந்து மடிக்கிறேன்

மந்

சுத்தப்படைத்தளகத்தனை மிகத் துல்லிபவீராதியுத்தனை யன்பு
மெத்தியழையும ' மனத்திலே சண்டை வென்று தருவார்சணத்திலே (நன்)

**லேயோன் கவி**

தண்டெடுத்துச்சமர்புரிய வருமொன்னார்கள்
தங்களுடல் பங்கமுறத்தடிந்து வீழ்த்தித்
துண்டெடுத்துக் கழுகுகங்கமருந்தப்போடும்
துல்லிபவல்லபசேனைச் சூரன்றன்னை
மண்டெடுத்த தொனியறையும் முரசமார்ப்ப
மந்திரியே வரவழையும் மகிழ்வினோடு
இன்றடுத்து நின்று இயத்தவனை வெல்வோம்
இடைக்குலத்தோனடைக்கலத்தை யெண்ணித்தானே

**வசனம்**

கேளும் மந்திரி மகாவிட்டுணுவினுதவியால் இயத்துராசனோடு சண்டை செய்யப்போவதற்கு. எனது சேனாபதியையுஞ் சேனைகளையும் வரும்படி செய்வாயாக.

**மந் வச**

அப்படியே செய்கிறேனரசே

**கப்பித்தான் வரவு கவி**

ஒப்பரும்பதாதி சூழ ஒன்னலர் நடுங்கித்தாழ
மற்பொலிபுயமிலங்க வாள்வில்வேல்வ சமாய்த்துன்ன
இப்புவியரசாள் லேயோனிறைவன் சொற்கேட்டுவீர
கப்பித்தான்பரிமீதேறிக் களரியில்வருகின்றானே

**சபை தரு**

பொன்னுறு முடிதுன்னி மின்னப்
புவனசேனைகள் சூழவே
நன்னயத்திறலதனில் மிகுத்த
நலங்கொள்ள திபன்தோற்றினான் (தந்)

வஞ்சநெஞ்சர் கெஞ்சியொஞ்சி
மலங்கிக்கலங்கியோடவே
அஞ்சிடார்மதக்கெறுவையொடுக்கு
மதிசேனாபதிதோற்றினான் (தந்)

**கப்பித்தான் தரு** (துணிவோடே எ.மெ)

நந்தாரும் வாவிவளந்திகழ் நலத்திசோரியித் தலத்தையாண்டிடு
பைந்தார்மென்மாலை புயத்தணி படைக்கு உத்தம மிகுத்ததத்துவ...
படைகள் குடைகொடிக ளுடையதிடமகிப னிடமேயழைத்தவித மெதுவறியேனே (தந்)

அந்தாரஞ்சிந்திடுகந்துக மதைத் தொகுத்து மேபடைக்குமாற்றலர்...
வந்தாருஞ்சயினிய வணியொடு வளைந்தரோமிக நுளைந்து அவ்விடம்.. அவர்கள் சிகரமுட, லிரண களமுதிரத் திரணபரணம துபுரிகுவேன் நானே (தந்)

எங்கோனுக்கேயெதிராகவே யெழுந்துகூடியே வளைந்துபிரசைகள்...
அங்கேதும் நூதன சட்டம் அடுக்க வேமொழிவிடுத்தரோவிதற்...
கானகரும செயல் தானேபுரியவெனைக் கோனுமழைத்ததோவக் குறிப்பறியேனே (தந்)

சிங்கமுடனே கரிபோர்பொரத் திறத்ததத்துவ மிருப்பதபகுமோ
சங்க சங்கங்கள் பொருந்திய தானைபடையொடுநானேயடையலர்
தக்கபதம்பரவு மிக்கலேயோவரசன் பொற்கொலுவனுகியிப் போதறிவேனே (தந்)

**கப்பித்தான் கழிநெடில்**

சீனர்துக்கர்மருடர்களடிதொழு திறமுடையாய் சரணம்
செங்கிரணத்தொளிர் தங்கியமணிமுடி சிரமணிவோய்சரணம்
பானை நிகர்த்தலர்மாலைபுயத்தணி பார்த்திபனே சரணம்
பார்முழுதும் பணிவீரதுந்தர பண்புடை போய் சரணம்
ஊன சமர்க்களமான தினிற்றிற முடையாய் செயசரணம்
உத்தமவித்தக மத்தகயத்திற முற்றதிபா சரணம்
யீனமகற்று நிதான கொலுச்சபை யானதிலிச்செணமே
இன்புறுசேனையோ டென்னையழைத்த தியம்டுவீர் சரணம்...

**வசனம்**

சரணஞ்சரணம் மகாராசனே யென்னையழைத்தகருமமறியச் சொல்வீராக

## லேயோனும் கப்பித்தானும் தரு

**ராயன்** (கன்னியிவள்தன் எ. மெ.)

வீரத்திறத்தனே பொல்லாமன்னியத்துவந்து
போரைத்தொடுத்ததாலிப் போதுன்னை யழைத்தேன்

**கப்பி**

தாரைப்புனை மன்னாவிச் சணத்திலியத்தவனைப்
போரிற்செயித்துமக்குப் புகழ்தாறேனிறையே (நன்)

**ராயன்**

மருமன்னவனென்றென்னை மதித்திடாதமர்க்கு
வருமன்னவனையென்கை வாட்கிரைகொடுப்பேன்

**கப்பி**

தருமந்தழைக்குமெந்தன் தலைவனேயவனின்
மருமமகற்றி வென்று தருகிறேன்வாரும் (நன்)

**ராயன்**

பேரும்பெருகும்வல்ல பெலமென்னிடமிருக்க
ஆருமதிக்கவந்த அவன்றன்னைக்கொல்வேன்

**கப்பி**

காருங்காருமென்றென் காலில்விழுந்திட்டாலும்
சேரும்படை முற்றாகச்சிதைத் தோடச்செய்வேன் (நன்)

## இருவரும் மறுதரு

**ராயன்** (தங்கமுடி எ. மெ)
கொஞ்சமும்பயமில்லாமலே இயத்துமன்னன்
கோபமுடன் சண்டைசெய்யவே கமாய்வந்தான்
செஞ்சினங்கள்மிஞ்சு தென்செய்வேன்
லேயோனென்றேயெத் தேசமுற்றும் பேசுமென்திறமறியானோ

**கப்பி**
குஞ்சரத்துக்கஞ்சுமோ சிங்கம் தினைக்குருவி
கூடுகின்றாலும் பருந்தைநாடிவெல்லுமோ
மிஞ்சுசூறைபோலடிக்கிறேன் சமர் செய்கள
மீதினிலியமன்போல வேயே திர்க்கிறேன் (நன்)

**ராயன்**
சிற்றரவுடனே தேரையும் எதிர்த்து அமர்
செய்திடவுமாகு மோவிங் கெய்துமியத்தன் கூட்டமான
சேனைகளெல்லாம் எமதுபதம்
கும்பிட்டோ டக்கெம்பீதமா யங்கமர்செய்வேன்

**கப்பி**
போர்க்களத்திற் போயெதிர்க்கிறேன் இலவம்
பஞ்சு போலேமரு வாரைவெற்றி பூன்டுதருவேன்
சாற்றரியதந்தி முகத்த னுதவியுண்டு
தங்கமுடி மன்னனேதளத்துடன் செல்வோம் (நன்)

**சபை கவி**

குதித்தெழுந்து சேனைபதாதிகளுஞ் சூழக்
கொடிவெடிதம் பூர்தொனிக்கக் குழல்கொம்பார
கதித்தெழுந்து இருமருங்குமணிவகுத்துக்
கரிநிரைசூழ்ந்திட லேயோனரசன் செனை
கொதித்தெழுந்து இயத்துமன்னனிருக்குமந்தக்
கூறரிய பதியதனிற் குறிப்பாய்ச்சென்று
எதிர்த்தெழுந்தீர் மன்னருஞ் சேனைகளுங்கூடி
யெதிர்த்திட்டார்சண்டைசெய்யத்தொடுத்திட்டாரே

**சண்டைத் தரு**

**இயெத்துராயன்**
தனதனதத்தேதன
மனுநெறிதப்பிக்கடதாசி தனையெனதிற் குப்பிசகாக
வரைகொடுதுட்டா வுனையேன்கர வாட்கொடரிவேனே...

**லேயோ**
எனையொரு சற்றும்மதியாமல் முனைவோடமர்க்குவருமூடா
இது செணமதிலுன்சிகரமறுத் தெறிகுவேன்திட்டாந்தம்

**இயெ கப்பி**
அரவுடனெவியங் கடல்புரியக் கருதியேவருமக்கதைபோலே
அமர்பொரவருதுட்டனேயுன்சிர மரிகுவேனிப்போதே

**லேயோ கப்பி**
அரியொடு கரிவந்தெதிர்த்ததுபோ
லடுதுணிவொடுவந்தனை யோவுன்
னதிதளமரசுந்தெறி கெடச்செய் வேனறிகுவாயே (தன)

**இயெ மந்**

மெத்தவும் வீரம்பேசுகின்றீர் அத்தனைதத்துவ மோவுமக்கு
வெட்டிடுவேனுமர்சிரமுருள வீரவசியாலே

**லேயோ மந்**

பித்தனேயேன்வீண் பேசுகின்றாய் கர்த்தபமதுகத்துதல்போலே
பேயனேயுனை நரிநாயருந்தப் பிடித்தரிகுவேன்பார்

**இயெ கட்**

மட்டிகளென்றெமை நினைந்தீரோ கெட்டியோவுங்களின் கெறுவிதமோ
வண்டரேமிண்டரே யுமதுடலைத் துண்டமிடுவேனே

**லேயோ கட்**

எட்டிகளேமதியீனர்களே விட்டுவிடோமுமைமேதினியில்
எத்தரேமத்தரேயுமதுதலை தத்திவிழச்செய்வேனே (தன)

## மறு தரு

**இயெத்துராயன்** (மனத்தில்மா எ.மெ.)

மனத்துணிவுறக்கள்ளச்சீட் டெழுதியெந்தன்
மந்திரிக்கிடர் செய்ததந்திரனே உனைக்கொடிகழுகருந்த
எனது செங்கை யுறுவசிகொடுதறித்தெறி குவேன்பார்

**லேயோ**

எனைக்கொடிகழுகருந்த அரிந்தெறிவே னென்று வாய்மதம் பேசுகின்றவனே...
உனக்கதிவலிமையோடா நரிநாயுண்ணவுனதுடல் பொடிபடத்தடிவேன்டா (தன)

**இயெ கப்**

தடிவேனென்றிடுமடையா நகுலனையோர் சர்ப்பம்வென்றிடப் போமோவிப்புவியில்
பிடிபடப்போகிறாய் நீ யெமதுகைக்குட் பிசகனெதடி வேன்கைவசியாலுன்னை

**லே கப்**

சுடுநெருப்பினைப்புழுவும் அரித்தேயுண்ணத் துணிவுண்டோ வுனையின்றேயிருதுண்டமாய்க்
கடிகொடிகெருடனுண்ண எனதுவெய்ய கரவசியதனைக் கொண்டரிகுவேன்பார் (தன)

**இயெ மந்**

பாரில்மண்டுகமது அமர்புரியப் பன்னகத்துடன் முயல்தன்மையைப் போல்
வீரியம் பேசுகிறாய் அசடாவுன்னை விரைந்து நாய்நரியுண்ண அரிந்தெறிவேன்

**லே மந்**

ஓர்மையுண்டோவுனக்கு எமதரச னுடைவிறற்படையை வென்றிடவுலகில்
பார்நரிபருந்து கங்கம் கழுகருந்தும் படியுன்னைத்தடிகு வேன்திடமுறவே (தன)

**இய கட்**

திடமுறத் தடிவேனென்றாய் அடடாகெட்டி சீக்கிர முன்கெறுப்போக்கிடுவேன்...
அடலது பொரவோவந்தாய் உங்களரசன் அணிபடைத்தளமெல்லாம் முறியடிப்பேன்

**லே கட்**

கடகரியுடன் முயலும் பூசலதாடக் கருதியகதை போலே தெரியுதிப்போ
மடைய ரேயெமதரசன் றனையிகழ வாச்சுதோ வலிமைகள் போச்சுதோடா (தன)

## மறுதரு

(சித்திரமணியொளிர் எ.மெ.)

**இயெத்**

சத்துசித்தானந்தபரி சுத்தகர்த்தனுக்கேராத தப்பிதாவிசோரிநாடாள்ராசனே உந்தன்
மத்தக மெழுந்து ஆகாயத்தினில் விழுந்துருளக் கத்தரித்தெறி வேன்பாரர்ங்காரனே

**லேயோ**

கத்தரித்தெறியவைய கத்தொருவருடையோநான்
அத்தனை துணிவதுனக்காச்சுதோ பார்பார்
பித்தனேயுன தீரலைக் கொத்தியே கொடியுதறச்
சித்திரயிலாற்சரிப் பேன்திரமாய் (தத்)

**இய கப்**

தீரமாயெமதரச னீரல் குடரைச்சரிக்கச்
சிந்தையிற்றுணிந் தவஞ்சத் தீயனே.... உந்தன்
வீரமுங்கேறு வமு முதாரமு மறிவேன்சென்னி விண்டுருளத்துண்டமிடுவேனடா

**லே கப்**

ஓர்மையுற வெங்கள்சொந்தச்
சீர்மைதன்னில்வந்து நின்று உன்னு சமர்பண்ணிவெற்றிகொள்ளவோ வுங்க
ளார்பமுமகத்துணிவு மோர்நொடியினிற்பறக்க அங்கையயில் கொண்டெறிகுவேனடா (தத்)

**இய மந்**

அங்கையயில் கொண்டெறிந்து இங்கெமைச் செயிக்கவும்மா
லாங்கருமமல்லவப்பால் நீங்குவீர் உங்கள் துங்கனோடுரைப்பிடித்து
எங்களின் செயக்கொடியைச் சோபனமாய் நாட்டிவிருதூதுவோம்

**லே மந்**

மங்குலிருள்தன்னை நீக்கவங்கு மின்மினிதுணிந்த
வாறதெனக் கூறுமதியீனனே உன தங்கமதைப் பங்குபங்காய்க்
கங்கமுங்கழுகுமுண்ண அட்டியின்றி வெட்டியெறிவேனடா (தத்)

**இய கட்**

வெட்டியெறிவேனெனச்சொல் மட்டியேமகியிலுங்கள்
கொட்டம தெல்லாமடக்கிக்கோறலே செய்து
பட்டினத்தையும் பிடித்துக் கட்டிடுவோமெங்கள் கொடி பாமரரே தாமதியாதோடுங்கோ

**லே கட்**

விட்டுணுவை நம்பிவேகு சட்ட முறவேசமர்க்கு வென்றிடலாமென்று
வந்தோம்வீரரே மகா கட்டியுடை யோர்தமாஸ்கு
பட்டினத்தரசர்படை எட்டியோடிவாருந்தப்பி யேகுவோம் (தத்)

**இயத்துராயன் கவி**

தத்துவச்சேனாபதியேயிசோரி வேந்தன்தனது பரிவாரமொடு சமர்க்காற்றாமல்த்
தத்தளித்துப்புறங்காட்டியோடுகின்றார் தப்பிதரைப்பிடித்து முடிகொடிகள் மற்றும்
யுத்தகருவிகடமையும் பறித்தேயிந்த ஊரில்நமதரசுவெற்றிக்கொடியை நாட்டி
மத்தமுறுலேயோனென்னடியைத்தாழ வகைபுரிவோம்பகைதவிரமகியிற்தானே

**சபை கவி**

இயத்துமன்னவனி சோரியிறைவனைச் சமரில்வென்று
வயத்துடனவனைத்தன் கீழ் வரியளந்தரசதோச்சச்
செயத்திறற் கொடியைநாட்டிச் செம்மல்தன் சேனைசூழ
நயத்துட னவனைவைத்துநன்மணிமனைசெல்வானே

**லேயோன் கொச்சகம்**

ஒற்றைமதிவெண்குடைக்கீ ழுரெணுந்தாமாஸ்புரக்கும்

வெற்றிமகுடாதிபனே மேதினியில்யான்புரிந்த...
குற்றமதனைப் பொறுத்துக்கோமானேயென்பேரில்
நற்றயைகூர்ந்தேமீண்டும் நல்கிடுமிண்றாடரசை

### இருமண்ணருந் தரு

**இயெ** (பொன்னின்முடி எ.மெ.)
நல்கிடுமென்றெல்கைதனிலே எனதிட முன்
நாடரசைக்கேட்கும் மதிகேடனேநீயும்
துல்லிபஞ்சேர்கள்ளநிருபம் எனக்கெதற்காய்த்
தொல்லுலகிலே விடுத்தாயுள்ளதைவிள்ளு

**லேயோ**
உள்ளது வைவிள்ளுவேன்கேளும் மகிபதியே
ஒப்பருமுமதினரு ளப்பமைச்சனும்
குள்ளமுறமெள்ளவேவந்து மறிப்பிலிட்ட
கோதையர்க்கதிகதிடமோதியதாலே (நன்)

**இயெ**
தாலமதிலே மடவாரையிருட்புரையிற்
தானெதற்காய்நீயடைத்தா யோவென்னமைச்சன்
வேல்விழியார்க் கேயிங்குவந்து புகட்டுபுத்தி
மேதினியில்நானறிய ஓதுவாயிப்போ

**லேயோ**
ஓதுஉசத்யவேதசுரூப வணக்கமெந்த னூரிலாகாதென்று
பறை யானறைவித்தேன்
கோதையிருபேரதைமீறி நடந்ததினாற்
கூரிருட்புரையில் வைத்தேன் காரிளையாரை (நன்)

**இயெ**
ஆரழகத்தார்குழலார்க்கு வந்தேயென்னரு
ளப்பமைச்சுரைத்ததென்னதப்பிதமாக
ஓரணுவுமேபிசகாது எனக்கதனையொல்லைதனிற்
சொல்லிடுவாய்வல்லமையாக

**லேயோ**
வல்லசத்யவேதசுரூப வணக்கமதை
வாதைமன்னன்செய்கிலுமோர் போதும்விடாதீர்...
நல்லபயபத்தியாய் நீங்கள் வணங்குமத
னாலதிகநன்மைவரும் தாலமீதென்றே (நன்)

**இயெ**
என்றருளுரைத்ததைநீயும் அறிந்ததெவ்வா
றேனதுகூடாதோசத்யவேத முலகில்
வெள்றியுறு மோட்சகதியைத் தருமெஞ்ஞான
வேதமது வென்றுளத்தெப்போதும் நம்புவாய்

**லேயோ**
நம்புதற்குச் சிம்புதலில்லையுமதமைச்ச
னானவருளப்பரிங் குதானொருபோது...
விம்பவிதளாற்கறிவோதிச் சென்றதென்வீரன்
விண்டிடக்கேட்டேனுளத்திற் கண்டுணர்வீரே (நன்)

இயெ

கண்டுணர்ந்தேன்மண்டலமீது அதனாலென்றன்
காதலுறுமந்திரிக்குத் தீதிளைத்தாயோ...
வண்டனேமெய்யென்றுநிருப மதனால்மதி
மந்திரி கரந்தடிந்தே னிந்தரைமீதே...

லேயோ

இந்தரையில் மந்திரிகையைத் தடிந்தால்மீண்டும்
இக்கரத்தை யொட்டியதார்விக்கின மின்றிச்
சிந்தனையுகந்தறியவே உரைபகருஞ்
செம்மலரே யிம்மகியில் வெம்மையறவே (நன்)

இயெ

வெம்மைதவிர்த்தெம்மைரெட்சிக்கும் சருவவல்ல
வேதபரன் தாய்கருணை மேவியருள்கை
உண்மையுறவேபொருந்திடப் புதுமைசெய்தாள்
உத்தமிதனது சுரூ பத்தைவணங்க

லேயோ

உத்தமிசுரூபவணக்கம் புரிவதினா
லுண்டுபல னென்றதைநானின்றேயறிந்தேன்
மத்தமுறவேயறியாமல் அடியேன்செய்த
வண்டெவைகளுஞ்சகிப்பீர் திண்டிறல்மன்னா (நன்)

இயெத்து கவி

மன்னவன் நான்மனம் பொறுத்தேன்லேயோனேயென்
மந்திரிதாள்மிசைவீழ்ந்து வருடிநீயும்
புன்மையறவே பொறுதி கேட்பாயானாற்
புவிதருவேன்வரியெனக்கெப் போதுமீந்து
நன்மையுறப் புரந்து சத்யவேதமுந்தன்
நாடனைத்து மேவிளங்காவையுறாது
இன்னலறவாழ்ந்திருநின் முடிசெங்கோலும்
என்றும் நிலைநின்றிலங்க எழிலாய்த்தானே

லேயோன் இன்னிசை

அறியாமலேயானு மம்புவியிற்செய்பிழையை
நெறிசேரியத்தரசன் நேர்மையுறும்மந்திரரே
வெறிசேருமது கஞ்சமென்மலற்றாள்போற்றுகின்றேன்
பொறுமையுடனே சகித்திப் போதெனையாசீர்வதிப்பீர்

இயெத்து கவி

தேமருமலர்க்காவெரி செநெல்புலஞ்சேழிக்குமிந்த
வாம நீளிசோரிவேந்தேவருடமைநூறு கோடி
ஏமமேபகுதிதப்பாதெனக்கினிதுறவேயீந்து
தாமிது நாட்டையாளச் சம்மதியோ சொல்வாயெ

லேயோன் வசனம்

அப்படியே செய்கிறேனரசே

**இயெத்து வசனம்**

மிகவும் நல்லது அப்படியானாலுன்ப விவாரங்களுடன் அரண்மனைக்கேகி யாட்சி புரிந்திப்பாயாக

**லேயோன் வசனம்**

மியவுஞ்சந்தோஷஞ் சென்றுவருகிறோமரசே

**லேயோன் கவி**

எந்தனது மந்திரியேயியத்துவேந்தனெ மதுபிழமபொறுத்து விடையீந்தாரேகத்
துந்துமிமேளங் குழல்கொம்பொலியெக்காளத்
தொனிகுமிறவிருதணிகள் சூழ்ந்தேமேவ
அந்தரமம்புவிபடைத் தபரமசோதி
ஆண்டவனைவேண்டி நமஸ்காரஞ்செய்து...
சிந்தையுகந்தெமது மணிமனைக்குநாலா
சேனைதளஞ்சூழ மகிழ்ந்தேகுவோமே...

**லேயோன் கூட்டம் மங்களத்தரு**

(சென்னியிற் குன்னல் எ.மெ.)

**ராயன்**

பொன்னுற்ற மகிபரம்பொருள்கள் யாவும்
பொருந்தமுவிருதினந்தருந்தெய்வீகன்
தண்ணுற்றசலசபூஞ்சரணம் போற்றித்
தழைத்துய்யமணிமனை தனிற்செல்வோமே

**கப்**

செல்வமுப்பொருள் சுகஞ் செழித்தென்னாளுஞ்
சீர்கொள் மாவிலங்கேணியூரில்வாழும்...
நல்மறவரின் குறைதவிரயேசு நாதனே
துணைச்செய்நின்பாதம் போற்றி (நன்)

**மந்**

போற்றருந்தாவீது குலத்தில்ஞானப்
புலரிநட்சேஸ்திரமெனவர்துற்ற
சாற்றரு மடைக்கலமரியம்மாளே
தரையிலெம்புரை மிடி தவிரிஸ்தோஸ்திரம்

**கட்**

தோஸ்திரம்புரியடியார்க் கென்னாளுந்
துணைபுரிந்துலகி லென்றினுந்தற்காக்கும்
பாத்திரமெனுங் கன்னிமரியேபூவிற்
பலநிதிசுக மெமக்கருள் சாட்டாங்கம் (நன்)

**ராய**

சாட்டாங்க முமக்கென்றுந் தருமநீலி
தழைவுயர் மாவிலங்கேணியில்வூர்க்
கோட்டமீதிருக்கு மென்தாயே தூயே
குறைதவிர்த்தெனை யாளிக்குவலைமீதே

**கப்**

குவலைமீதினிலிங் கென்கவலை நீங்கக்
குலவு முப்பவுள் சுமெய்ச் சுகசீரோங்க...

அவலமற்றிடமனைமக்களோடு
அகமகிழ்ந்திருக்கச் செய்யமலாபோற்றி (நன்)

**மந்திரி**

அமலனே விமலனே யருளுள்ளோனே
அடியேனென்மிடிபிணியசடுநீங்கிக்...
கம விளைவொடுமுப்பால் கனிநீடெண்சீர்
கதித்துவாழ்ந்திடச்செய்நின் கழலேதஞ்சம்

**கட்**

தஞ்சமென்றவரைக் காத்தருளுந்தேவா
தாய்மரியாயேயித் தரையிவ்வூரிற்...
பஞ்சமா படைகொள்ளை நோய்வராமற்
பாதுகாத்தாள்வீரெப்போதும் போற்றி (நன்)

**ராயன்**

போதமெய் வேத தெய்வீகநாதன்
புணரிமேற்திரு நடம்புரிந்தபாதன்
மாதிருசுக மெமக்கருள்வார் செம் பொன் மணி
மனைதனிற் செல்வோம் மகிட்சிகூர்ந்தே (நன்)

**இயெத்துவின் மந்திரிகவி**

தேமருப்பூமாலை மருமத்தில்மேவுந்
தென்னவனே மன்னவனே செகத்தின்மீது
நாமமரில்லேயோனாதி பனைவென்றோம்
நமையாளுந் தேவனருள் நன்மையாலே
தாமதியாதினிவிருது குழல்கொம்பாரத்
தம்பூருதுடிவெடிகள்தானேதீரப்
பூமகள் சேர்நமது மணி நகர்க்கிப்போது
பொங்குமனமங்களமாய்ப் போண்வாழ்வோமே

**இயெ வசனம்**

நல்லதுமமைச்சே

## இயெத்துராயன் கூட்டம் மங்களத்தரு

**ராயன்** (சுந்தரஞ்செறி எ.மெ.)

பூவும்யாவு மமைத்தமலாவிவ்வூர்
பொங்கமுந்திருச் சங்கமுமோங்கி
மேவுமானர் மிடியிடர்நீங்கச்செய்
மென்பதாம் புயம்மங்களமாமே

**கப்பி**

மங்களந்தேவதூதன் கபிரிகேல்
வந்தியம்பமனங்களிகூர்ந்த
எங்கள் தூய அடைக்கலத்தாய்
மரிக்கென்றும்மங்களம் நன்றுறநாளும் (நன்)

**மந்**

நாளுமெங்களையாளுந்தயாபரி
நன்மணமன்றற்கன்னாளிசைந்த
சூழ்வளன் மலற் றார்கரனானசஞ்
சூசைமங்களங் காசினிமீதே

கட்

காசினிபுகழாஞ்சு நவசபை
கர்த்தர்சீடரப் போஸ்த்தலர்ஞானத்
தேசுறும்பரி சுத்தரனைவர்க்குஞ்
சிந்தை கூர்செயமங்களமாமே (நன்)

ராய

மேன்மை சேர்சத்ய வேதத்திருச்சபை
மேய்ப்பராம் சந்தப்பாப்புவிஷப்பு ஞானதேசிகர்
கன்னிமை குன்றிடா நங்கைமார்
கட்கும்மங்களமாமே

கப்

நங்கைகற்பு நராதிபர்நீதி
நவிற்று சற்குரவோர்நெறிநீடித்
திங்கள் மும்மழைபெய்து செஞ்சாலி
செழிமைசேர்மங் களமெழில்நீட (நன்)

மந்

நீடுவான்பயிரோடு மாடாடு
நிதந்தழைத்து நிறைபலன்கூட
நாடுமிந் நகர்பீடுறமாந்தர்
நலங்கொள் சீர்மங்களம்புவி மீதே

கட்

மங்களமிந்தவூர்மனு மக்கள்
மகிட்சி செல்வம் புகட்சியோர்பொங்கிச்
சங்கையாய் நித பிங்கினி வாழ்ந்திடத்
தங்குசோபன மங்களமாமே (நன்)

பொது

மங்கலசுப சங்கீதமேகவி வாணர்பாடிட வாத்தியமோத
எங்கணும் நிறைதேவனைப் போற்றியிலங்குமாமனைக் கேகிவாழ்வோமே (நன்)

**பறையன் மங்களத்தரு**

தானானே
வானாருஞ் சந்திரனைச்சடை வாகுறவேபுனை சேதிசிவன்...
கானாரும் பங்கயப்பூம்பதங் கைகுவித் தேற்றிக்கவலையற...
நானேபறை தொனித்தேனிந்த நாட்டையாள் மன்னவன் தீட்டுசொற்போல்த்...
தானே சகல செனர்களுந்தாட்டிமையாகவே கேட்டுக் கொள்ளும் (தானானே)

கேட்டுச் சுரூபவனக்கத்தைக் கிஞ்சித்துமெண்ணாது நெஞ்சத்திலே...
தீட்டு நமசிவாய குருதேசிகன்பூசை தினந்தினமும் நாட்டமுறப்புரிந்தெங்கள் நரபதிசிந்தை மகிழ்வுறவே...
வாட்ட மறவுலகானதில் வாழ்ந்திருப்பீர்களி கூர்ந்திருப்பீர் (தானா)

கூர்ந்தெம்மையாளும் லேயோனென்னுங்
கொற்றவனாகங்குளிர்ந் துமக்குத்...

தேர்ந்தே பலவித நன்மைகள் செய்குவார் மெய்யிதுதேனுலகில்...
ஆர்ந்தே நிதிசுகபாக்கியமானதெம க்கிங்கதிகதிகம்
சேர்ந்தேமனைவி மகவொடு சீர்பெற நாளுஞ் செழித்திருக்க (தானா)

செழித்தேவறு மையணுகிடா தென்னகத்தென்றுந்திருமாது...
தழைத்தேதிரு நடன்ஞ் செய்துதங்கியே நிற்கச்சகசமதாய்க் கிளைத்தே யென்சந்ததிபந்தினர் கேத்திரமீததி நேர்த்தியாகாய் உளத்தே மகிழ்ந்துவாழ்கப்பைம்பொன் ஓங்குமனை செல்வேன்பாங்குறவே (தானா)

## பெண்கள் தரு

**தரும** (மனமகிழ் மன்னவனே எ.மெ.)
அன்ன நடைச்சின்ன இடைமானே மரியடைக்கலமேயென்பனுவல்
திடத்துடன்கேள்தேனே

**மரிய**
சொர்ன்னமதிவர்ன்ன முகத்தோகாய் தன்ம சொரூபியேயதை யெனக்கிங்
கறிய வுரைவாகாய் (நன்)

**தரும**
சுரூபவணக்கஞ் செய்யாதீரென்று பொல்லாத் தோன்றல்லேயோனும் பறையாலீன்றறிவித்தானே

**மரிய**
அரூபரூபமானவனையீன்ற எங்க ளடைக்கலமாதா
வெமைக்கை விடுக்குமோ சொல்தேனே (நன்)

**தரும**
தேமலர்ச்சிகைமட மின்னாரே எங்கள்
தேவ கன்னித்தாயெமையெப் போதினுங்காப்பாரே

**மரிய**
மாமதிவதனியே யென்தோளி எம்மை...
மாதரசிகைவிடாளானாலுமொன்றுகேளீர் (நன்)

**தரும**
கேளுமென்றீர் வாழ்விழியேநீரும் அத்தைக்
கிளற்றிடுவீ ' கேட்கிலென துளத்தினிலின்பாரும்

**மரிய**
சூழ்கொடுங்கோலாளிறை நாட்டினிலும் வரிவாழ்ந்
துறுமடவிநன்றெனப்பண்டறிஞர்சொற்கண்டறியும் (நன்)

**தரும**
அறியுமென்ற நெறியுறென்சோதரியே பொல்லா
அரசனின்மதமொடுங்கப் புரிகுவார்மாமரியே

**மரிய**
சரியெழிலார்வரிவிழியேமாதே வாருந் தாய்
மரிதாள்போய்ப்பணிவோம் நாமினிதிப்போதே (நன்)

## பெண்கள் மறுதரு

அன்னைதன்னில் எ.மெ.

**தரும**
பன்னிருமன் கோஸ்திரமே பாவிகள் நட்சேஸ்திரமே...

தன்மநிறை பாத்திரமே தாதாசரைப்பார்நேத்திமைமே

மரிய

நேத்திரந் திரும்பிப்பாரும் நேயமரியாயேநீரும்
பார்த்திபன் செய்தீதுதீரும் பாவையரிங்கெம்மைக்காரும் (நன்)

தரும

காரும்நின் சுரூபவணக்கம் புரியலாகாதென...
ஆருமேயறியமன னறைபறைகறங்கினனே

மரிய

நேர்நெறியில்லாத மன்னனெம்மை யென்னபண்ணினாலும் பாரில்நாமுன்பாதம்விடோம்
பரமேஸ்பரி நின்றுணையிஸ்துதியே (நன்)

அருள் கவி

ஆசியருள்வீரெனச் சொல்லேயோனென்னு மாதிபனே நீருமுமதணிகொள் தானை...
மாசணுகாச்சேணை மதிவிதிகர் தானும் வாழ்வுறவே நெடியமுளந்தாளில் நில்லும்...
ஏசுபரன் மறை ஞானஸ்னானமிப்போதீந்திடுவேன் மனதுகளிகூர்ந்தெஞ்ஞான்றுங்...
காசினியில்வாழ்ந்திருக்கக்கவலை நீங்கிக் கழுதுமதத்தினை விலக்கிக்களிப்பாய்த்தானே

அருள்வசனம்

அகொகேளுமிசோரி வேர்தே நீரும் உமது மந்திரிபிரதானிகள் சகலரும் முளந்தாளில்
நிற்பீர்களாக நானுங்களுக்கு எங்கள் சத்திமறைத்தீட்சையீந்து ஆசீர்வதிப்பேனரசே

லேயோன் வசனம்

மிகவும்நல்லது அப்படியேயாகட்டுமையா

அருள் வசனக்கவி

அருளுறையும் பிதாச்சுதனிஸ்பிரீத்துச்சாந்து வானவர் நாமத்தாலே ஞானஸ்தானங்
குருமுறையாய் நானுமக்குத்தந்தேனிப்போ கோனுயர் பேரலக்சாந்தர்குலவுங்கீர்த்தி
பெருகுமதியூகி பெயர்வெலிச்சோராகும் பேணுதளவாயவரும்பிள்ளைசூரன் மருவுபெயர்
கஸ்பாறேயாகுஞ்சோதிமலர்க் கரத்தாசீர்வாதம் மகிழ்ந்துய்வீரே

லேயோன் இன்னிசை

உய்ய மறைத்தீட்சைதந்த உயர் ஞானம் நிறைபெரியோய்
துய்ய நின்னம் போருகத்தாள் தோஸ்திரித்தேன் சுகம்நீள்க

மந்திரி இன்னிசை

ஐயமற்ற சத்யமறை யருள்ஞானமேயெமக்கு
வையகத்திற் தந்தவர் பொன்மலரடிக்குச்சாட்டாங்கம்

சேனாபதி இன்னிசை

சாட்டாங்கம் மெஞ்ஞானச் சத்யமறைத்தீட்சையெமக்
கீட்ட முறத்தந்தவர்பொன்னினையடிக்கிஸ் தோஸ்திரமே

கட்டியன் இன்னிசை

கோட்டியறக்கூளிமதங் கூவில் நிலையாதகலத்
தீட்டுசத்ய வேதமருள் தேசிகர்க்குத்தெண்டனதே

அருள் வசனக்கவி

தெண்டனிடு மன்பர்களேயினி மேல்நீங்கள் தீங்குடைய கூளிமதத்தினைப் போற்றாமல்
என்றுமழியாத திறிசுடரொன்றான ஏசுமறைமுறை யொழுகியிறைஞ்சி நாளுங்
குன்றாத செல்வ சுகபாக்யமோங்கிக்குவலயத் தில்வாழ்ந்திருப்பீர் குலவுமுங்கள்
வென்றியுறு மாளிகைக்கெம்மிறையைப் போற்றிமேன்மையுறச் சென்றிடுமிகையில்லாதே

லேயோன்வசனம்

நல்லது அப்படிசெய்கிறோமையா

**லேயோன் கவி**

போரிலிங்கெமையேவென்று பொறுதியீந்தெனை மீண்டிந்த...
ஊரையாண்டிருக்கச் செய்த ஒளிர்மணிமகுடவேந்தே...
நீருரைத்திட்டவண்ணம் நீதமெய்வேதம் பெற்றோம்...
சீர்திகழ்மனைக்குச் செல்லச்செப்பு முத்தாரந்தேர்ந்தே

## லேயோன் கூட்டம் முளந்தாளில் நின்று

**ராயன் தேவாரம்**

சொல்லொணாத்திரி சுடரொன்றானசுயஞ் சோதி யேசருவ நீதிசேர் தூயனே
தமியர்நேயனேயுமது சுருதியாமடைந் தோம்பிரியமாய்
வெல்லொணாக்கழுது வல்வினையெதுவும் மேவியெம்மையுலைக்காமலே வெட்கியோடிடவு
மிக்குவலயில்யாம் வேதவுண்மைவழுவாமலும்
நல்ல தேவபயபத்தியுள்ளவராய் நாடுமெத்தொழிலும் நன்மையாய் நாட்டையாண்டிடவுந்தேட்ட
மாநிதிசீர் நாளுமிங்கெமர்கைசேர்கவும்
தொல்லையற்றதிக சொஞ்சுகங் கதித்துச் சூழுமின்ன கரில்வாழ்நரர் சுகபெலத்தினோ
டொற்றுமை நிலைத்துயவுந் துணைச் செய்வீருமக்கிஸ் தோஸ்திரம்

## லேயோன்கூட்டம் மங்களத்தரு

**இயெத்துராசா தரு** (வனத்தில் நின்று எ.மெ)

மந்திரியருளவனைத்தானே காண வாகுடனவன்றனது மாளிகைசெல்வேனே
தந்தரஞ்சேர் சீட்டனுப்பினானே லேயோன் தார் பதிக்கதையவனிங் கேவிடுத்துற்றானே(தந்)

அந்தாதியற்கனி மூவர் கன்னியன்னைமரியீன்றெடுத்த அரிய தவப்பாலா
சிந்தாழி மேல் நடந்தகாலா விதிதன் செய்தசடகாறியாண்ட திவ்விய கிரி பாலா
என்தேசமானதைலேயோனுத்கென்னு மேந்தலும் புடிப்பத்கு எனதமச்சன்ருனும்
வன்போடெழுதிய தால் யானும் சீட்டு வரைந்தவனின் கரந்தடிய வகைபுரிந்தேனும் (தந்)

முன்கோபமாறியதிப் போதே மழுவர் முரனுரவே தானரிந்த கரமவனிமீதே
பின் பேதுவானதோதப்பாதே அருளனன் பேரிலன்ப தாகுதேயோர்பிழையுமனுகாதே
பிழைத்துயிருடனிருக்கின்றானேயான்செய் பேதமையா லாதரையின் மீது மரித்தானோ
ஒழித்திசோரியூரினிற்சென்றானோ என்னை யுலகமதிற் கொடிவனென்றோதித்திரிவானோ(தந்)

அடைக்கலமாதா கருணையாலே யானு மன்றரிவித்திட்டபாணி யானதுமுன்போலே
திடத்துடனொட்டியது வோபின்னாலே அருளன் செய்தியேதென்றேயறியச்
செல்லுவேன்முன்னாலே (தந்)

## நிறைவு




**புனித சந்தியோகுமையோர் நாடகம்**

(வாசாப்பு - வடமோடி)

*இந்நாடகம் இரண்டு புலவர்களின் கலப்பாக இருக்கிறது.*

*புனித யாகப்பரின் போதனையிலிருந்து அவருடைய இறப்பு வரையுள்ள பகுதியை நாவாந்துறையைச் சேர்ந்த புலவர் கிறிஸ்தோ மரியாம்பிள்ளையும்,*

*தொம் பிலிப்பு வத்தகன் வருகையிலிருந்து தொம் பிலிப்பு வத்தகன் மகன் கழுவேற்றி இறக்கப்பட்டது வரையானபகுதியை முருங்கனைச் சேர்ந்த புலவர் மரியான் சந்தானும்,*

*றெம்மிகேல் அரசன் வருகை தொடக்கம் படைப்போர் முடியும்வரை உள்ள பகுதியை மீண்டும் புலவர் கிறிஸ்தோ மரியாம்பிள்ளை புலவரும் எழுதியுளள்ளனர். இத்தொகுப்பில் புலவர் கிறிஸ்தோ மரியாம்பிள்ளை எழுதிய பகுதிகளே இணைக்கப்பட்டுள்ளன.*

# புனித சந்தியோகுமையோர் நாடகம்

**(வாசாப்பு - வடமோடி)**

## பகுதி 1

**நாவாந்துறை புலவர் கிறிஸ்தோ மரியாம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட, கூத்தின் ஆரம்பத்துக்குரிய கடவுள் வணக்கத்தை மையமாகக்கொண்ட காப்பு விருத்தங்களுடன் புனித யாகப்பரின் போதனையிலிருந்து அவருடைய இறப்புவரை உள்ள 1 முதல் 49 வரையான முதலாம் இரவுக் காட்சிகள்.**

### காப்பு விருத்தம் - 1

**இடம்** *: பொது அரங்கு*
**இராகம்** *: சங்கராபரணம்*

சீரோங்கு கலிலேய தேசமீதில்
திருவோங்கும் செபதேயின் திகழ்தவத்தால்
நேரோங்க வந்துதித்த யக்கோ வென்னும்
நீத அப்போஸ் தலுசரிதை நெறியதாகப்
பாரோங்கு மானிடர்கள் அறிவதற்குப்
பாடவே நாடகப் பாவாக நானும்
கார்ரோங்கு வெல்லை வெற்பில் உதித்தயேசு
கத்தனிரு நற்சரணங் காப்புத் தானே.

### காப்பு விருத்தம் - 2

எஸ்ப்பாஞ்ஞா தேசமீதில் எரிமோஸ்சென்னும்
இடருடைய மாயவித் தைக்காறன் தன்னை
செப்பரிய சத்தியமறை சேர்த்தல் கண்டு
சினமுறைந்த யூதர் பிடித்தேரோ தென்னும்
தப்புடைய அரசனிடம் விடுக்க வாதை
தனையேற்று மோட்ச முடிதனை யடைந்த
அற்புதவான் சந்தியோகு சரிதை பாட
அன்னை மரிபாத மலரதுகாப் பாமே.

### காப்பு விருத்தம் - 3

தொன் னாளில் தொன்றெம்மி கேல்அரச னோடும்
தொன் பறுனாந் தவரோடும் தொடர்ந்து சண்டை
தன்னையே செய்யவந்த துலுக்கர் தன்னைத்
தக்க வெள்ளைப் புரவியதில் தானே யேறி

சின்னபின்ன மாகவந்து பொருதி வல்ல
செயமடைந்த யக்கோவின் செயலைப் பாடக்
கன்னிமரி பத்தா வாயிலங்குந் தூய
காவலன் சஞ்சூசை யப்பர் களல் காப் பாமே.

### காப்பு விருத்தம் - 4

முல்லை நிகர் வாவிவளை சோலை சூழும்
முருங்கனொடு தேனுடையான் ஆவணத்தின்
துல்லிபஞ்சேர் தும்பை மலர் சூடுங் கொண்டை
துலங்குமெங்கள் குலமரபு தோன்றி என்றும்
வல்லமைசேர் செந்தமிழ் நாடகப் பாவித்தை
மானிலத்தில் பாடியென்றும் செழித்து வாழ
நல்லதிருக் குடும்பமவர் துணையை முன்னால்
நாட்டினேன் ஏட்டினுக்கு நன்றாய்த் தானே.

### காப்பு விருத்தம் - 5

பொடிப் பொடியாய்த் தகர்த்தெறிந்தேன்
முன்பின்னுள்ள புலவர் செய்த தடையறங்கள் பேயின் மாய்கை
கடிதகண்டு இன்று சந்தியோகுமையோர்
கருணைவளர் நாடகப் பாவானதாலே
கொடிகொடியாய் எங்கள் குலம் விளங்கிக்
கும்பு கும்பாய் வேரூன்றித் தழைத்து ஓங்கி,
அடிஅடியாய் யக்கோவேல் காப்பினாலே,
அனுதினமும் செழித்து வாழ்ந்தருள்வர் தாமே.

## காட்சி – 01

***பாத்திரங்கள் :*** *புலசந்தோர் (கதை சொல்பவர் 1,2)*
***இடம் :*** தெரு

### புலசந்தோர் வரவு கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

கலகந்த மாலையிட்டுக் கரத்தினிற் சிலுவை தொட்டு
பலவந்த செபங்கள் எல்லாம் படித்தினி துணர்ந்து தேர்ந்து
இலகும் யக்கோ அப்போஸ்தல் லினியநற் சரிதை கூறப்
புலசந்தோர் அழகு வாய்ந்த புகழ் சபை வருகின்றாரே.

### அவை தரு

***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *ஆதி*
***மெட்டு :*** *வண்ணமயில்யளாரோ*

சிரத்திற்பொற் பூமுடி சேரவே – அருங்
கரத்திற் பொத்த கங்குரு சாரவே
வரத்துற்ற சந்தியோகின் காதையை இங்கு
வளுத்திடப் புலசந்தோர் தோற்றினார்.

பரப்பிரும சொருப தெய்வீகனாம் - ஆதி
தனைத்தினம் தொழுதிடும் யோகனாம்
வரப்பிரகா சன்யக் கோ திருக் - காதை
வழுதிடப் புலசந்தோர் தோற்றினாரே.

### புலசந்தோர் தரு

***இராகம் :*** *காம்போதி* ***தாளம் :*** *ஏகம் திஸ்ரநடை*

1ம் :
சீர் பெருகு மேகாதி யம்பரா போற்றி போற்றி
செகத்தை மீட்டிடும் சுயம்பர போற்றி போற்றி.
2ம் :
நேர் பெருகும் இஸ்ப்பிரீத்து சாந்துவே போற்றி போற்றி
நிகரும் திரித்துவமொ ருவரான நீ போற்றி போற்றி.
1ம் :
விண்மதிதனை மிதித்த காலியே போற்றி போற்றி
விளங்குமன் னவமரபின் சீலியே போற்றி போற்றி.
2ம் :
அன்னைமரியே அருளன்பாலியே போற்றி போற்றி
ஆதரித் தென்றும்காரும் மூலியே போற்றி போற்றி

## புலசந்தோர் பாயிரம்

***இராகம் : ஆனந்த பைரவி***

1ம் :

அம்பரம் புவனம் அடங்கலும் படைத்த
எம்பரன் பாத மிறைஞ் சிடுவோமே.

2ம் :

வம்பிலா மரியாள் மாமலர்தூய
செம்பதம் சென்னி சேர்த்திடு வோமே

1ம் :

தெண்டிரை யுடுத்த சிறத்திடுங் கலிவே
யென்ற வம்பதியில் லேற்றிடு செபமே

2ம் :

மைந்தனாம் யக்கோ வரும் கதையதனை
இந்நேரத் திலியம் புவோம் கேளும்

1ம் :

யூதே யாவை உவப்புடன் ஆளும்
ஏரோ தரசன் இனியநற் கொலுவில்

2ம் :

வாறதும் மவரின் மந்திரி தானும்
தேறவே அவரின் செய்திகள் உரைப்பதும்

1ம் :

சந்தியோகு மையோர் தனதருஞ் சீடனோ
டந்தமாய் சபையில் அன்புடன் வருவதும்

2ம் :

கரியபேய் வித்தைக் காரனாய் இருக்கும்
எரிமோசென் போனிடம் யூதர் செல்ல

1ம் :

அவனுமே பிலேத்து வான சீடனையே
தவமுனி யக்கோ விடத்தினில் விட்டு

2ம் :

தர்க்கமே செய்து தன்னுயிரை விட்டு
அப்புறப் படுத்தென அவனுமே சென்று

1ம் :

சந்தியோ கவரின் தக்க நற்கரத்தால்
அந்தநாள் ஞானஸ்த் தானமே பெற்றிட

2ம் :

கேட்டெரி மோசு கருவமே கொண்டு
தாட்டில் மானதன தேவற் பேய்களை

1ம் :

அழைத்து யக்கோவா டவன் சீடன் தன்னை
திடத்துடன் கட்டித் தீருவம் வாரும்

2ம் :

எண்டவன் அனுப்ப யேகிட அலகைகள்
அன்று சம்மனசோர் அணியாய் யிறங்கி

1ம் :

பசாசுகள் தன்னைப் பதைத்திட உதைத்து
தூசணுகாத தூய யக்கோவின்

2ம் :

இடத்தினில் போக்கிட இயம்பினார் யக்கோ
திடத்துடன் சென்று தீயனாம் எரிமோஸ்

1ம் :

அவனையே கட்டி அதிவிரைவாயென்
நவமுறு சமுகம் நாடுவீர் ரென்று

2ம் :

கூறிய மொழிப்படி கூழிகள் சென்று
பேறில்லான் தன்னைப் பிடித்துடன் கட்டி

1ம் :

கொடுவந்து விடவே குருயக்கோ கையால்
எரிமோசு ஞானஸ்த் நானமே பெற்றிட

2ம் :

செய்தியை அறிந்து செம்மல் ஏரோது
துய்யனைக் கொலைக்குத் துரிதமாய்த் தீர்த்து

1ம் :

கொலைச்சேவ கரிடம் கொடுக்கவே அவர்கள்
தலத்துள்ளோர் துதிக்கும் சந்தியோ கவரை

2ம் :

கொண்டு செல்போதங் கோர் முட வன் தனை
நன்றுட னெ ழுந்து நடக்கவே நவத்தை

1ம் :

செய்தது கண்டு சேவகன் கொலியேஸ்
அண்டவர் கையால் அருள்ஞானஸ் நானம்

2ம் :

பெற்றதை யறிந்து பேருல காள்வோன்
சற்குரு வுடனே தான்கொலி யேசையும்

1ம் :

சிரச்சேதம் செய்ய சிறந்தனன் மோட்ச
அருட்பிர காச அருள்முடி யடைந்தார்

2ம் :

அதன்பின் யக்கோ அப்போஸ்தல் சீடர்
இடம்பெறு மவருடல் எடுத்தொரு ஓடம்

1ம் :

தன்னிலே வைக்க தானந்த நாவாய்
பண்பா யில்லாமல் பக்கென ஓடி

2ம் :

கொம்மேஸ்த்த கரையில் குணமுடன் சேர
இம்பரம் காக்கும் ஏற்ற மாசுத்தன்

1ம் :

காயத்தை எடுத்தோர் கல்லிலே வைத்து
தேசத்தை ஆளும் செல்வி லோப்பாளின்

2ம் :

நாட்டிலே யடக்கினார் நவிலு முத்தாரம்
தாட்டிக மாகவே தானவர் கேட்டு

1ம் :

தோலேச நகரைத் துரைத்தனம் புரியும்
மாலோக மன்னன் மசேசியா னென்போன்

2ம் :

தனதருங் கொலுவில் தானைகள் சூழவே
நன்நகர் வளப்பம் நலமுடன் கேட்டு

1ம் :

இருக்கு மன்னாளில் எழில்பெறு குடிசனர்
விருப்புறு மன்ன னிடம்முறைப் பாடதாய்

2ம் :

காவுறு விலங்கினம் கதித்து நம் நகரில்
மேவுபைங் கூழை மேய்ந்தன வென்று

1ம் :

அரச னிடத்தில் அவருமே சொற்றிட
வரைதனி லரசன் வன வேட்டை யாடி

2ம் :

கெடியுறு விலங்கினம் பொடிப்பொடி யாகவே
படிமிசை யரிந்தார் பாருல கறியவே.

1ம் :

சேனைகள் சூழச் செருவதை நடத்தியே
தானையோ டரண்மனை தனிலிறை சென்றார்.

2ம் :

அன்றுதொம் பிலிப்பெனும் அழகொளிர் வர்த்தகன்
ஒன்றொடி யாளுடன் உயருநற் சபையில்

1ம் :

ஆதியை யிரந்துவந் தவர்கள் மன்றாடிடச்
சோதியின் னருளால் சுதனுரு வாகி

2ம் :

பெற்ற நற்குமாரனைப் பேருல கறியவே
உற்ற சற் குருவிடம் உயர் ஞானஸ் நானம்

1ம் :

அளித்தவர் மகிழ்ந்து அழகுயர் பாலனை
களிப்புறக் கல்வி கற்கவென னுப்பினார்

2ம் :

அத்தரு ணத்தினில் அமெரிக்க வர்த்தகன்
அத்திர விழியாள் ளவன்தேவி தன்னுடன்

1ம் :

மதுக்கடை வைக்கவே மாநில மதனில்
கதித்த நற்சபையில் கருதியே வந்தாள்

2ம் :

அன்புநீள் தொம்பிலிப் பருள்பெறு சுதனுடன்
நன்புறக் கலிலே நகர்தனக் கேகினார்.

## இரண்டாம் இரவு

1ம் :

ஏகிடும் வழியில் லெனுமுயர் கதிரோன்
பாகுடன் பரவையில் பற்றியாழ்ந் ததினால்

2ம் :

தங்கியே யேகிடத் தனையனும் தந்தையும்
பொங்கு சாராயன் புகழ்மனை புக்கினார்

1ம் :

கண்டு சாராயன் கருதியே அவர்களைக்
கொண்டுபோய் மதுவைக் குறையறப் பருக்கினான்

2ம் :

குடித்திட அவர்கள் கொடும் வெறியாகிப்
படுத்ததின் பின்பு பகரரும் நேத்தியை

1ம் :

எடுத்தவன் மறைத்து இவர்கள் தன் பைதனில்
மடுத்தவன் கிண்ணியை மறைவாகக் கட்டி

2ம் :

வைத்திட அவர்கள் மகனுட னிருவரும்
நித்திரை நீங்கி நிகழ்செபம் முடித்து

1ம் :

பத்தியதாகப் பகலவன் னுதிக்குமுன்
புத்திர னோடே புகழ்பெற எழுந்தே

2ம் :

போனதின் பின்பு புரவ லனிடத்தில்
தானவ னேகி தரையிலென் கிண்ணியை

1ம் :

கள்வர்கள் வந்து கருதியே எடுத்து
மெள்ளெனச் சென்றார் மிகுபுகழரசே

2ம் :

என்றவனுரைக்க எழில் பெறுமரசன்
நன்றெனச் சீறி நரபதி யவர்களை

1ம் :

பிடித்துமே கொடுபோய் பேசரும் பையை
திடத்துடன் சோதித் திருந்தொரு கிண்ணம்

2ம் :

எடுத்துமன் விளங்கி இனிதுறு குமாரனை
துடுக்கெனக் கழுவில் துகடற வைத்தான்

1ம் :

வைத்திட ஆதி வானவன் னருளால்
புத்திர னுயிற்ற புதுமையை யறிந்து

2ம் :

கழுவா லிறக்கிக் கசடறு குமாரனை
பழுதுற நினைத்த பாவிசா ராயனை

1ம் :

பிடித்திறை விளங்கி பேசருங் கழுவில்
இருந்தன வுரைக்க எழில்பெறு குமாரன்

2ம் :

மடுத்துமன் றாடிமன் மலரடி தொழுது
விடுத்திடு மென்று வேந்தனுக் குரைத்தான்.

1ம் :

உரைத்திட அரச னுளங் களிப் புற்று
வரத்தினில் மிகுந்த வரப்பிர காசனின்

2ம் :

சொற்படி அரக்கு தொடர்ந்து விற்பவனை
நற்புற வாழென நவிற்றி விட்டதன்பின்

1ம் :

பொன்னினோ வியமும் பொருந்துநல் விளக்கும்
அன்றவர்க் களித்து அன்புசேர் மொழிகள்

2ம் :

தென்னவ னுரைத்து சென்று வாழ்வீரென
மின்னு வத்தகனும் மிகுமனை புதல்வனும்

1ம் :

கலிலேயா வாழும் காரணன் பதியில்
மலிவுறு நேத்தி மகிழ்வுட னீந்தார்.

2ம் :

கண்டக மகிழ்ந்தார் காசினி மீதினில்
ஒண்டொடி மகவுடன் னொளிர்மனை சென்றார்.

1ம் :

எஸ்ப்பாஞ்ஞா வாழும் இறைவனாம் றெம்மிகேல்
அப்போது பெண்திறை அளிக்கா ததாலே

2ம் :

துலுக்கர்கள் திரண்டு தொடர்ந்திட அமரை
தலத்திலே அரசன் தானுமே தோற்று

1ம் :

ஒழித்தோடி ஆதியை உவப்புடன் வேண்ட
களிப்புடன் யக்கோ கருணையோன் வெள்ளை

2ம் :

குதிரையில் வந்து கொடுஞ்சோனர் தன்னை
பதியினை வென்று பாரினை யாழ

1ம் :

நலத்தினை செய்தார் நரபதி றெம்மிகேல்
தலத்தினை யாண்டு தான்செழிப் புற்றான்

2ம் :

இக்கதை யனைத்தையும் மின்பமாய் எடுத்து
மிக்கநற் பாவால் விளக்கினோம் நாங்கள்

1ம் :

கவியினில் சிறந்த கலைஞரே அடியோர்
புவியி லாசித்து புகன்ற நாடகத்தில்

2ம் :

சொற்பிழை வரிப்பிழை தொகுத்திடு மிலக்கணத்
திற்பிழை தனைப்பொறுத் தேற்றிடு வீரே.

## புலசந்தோர் மங்கலம்

***இராகம் : பைரவி*** — ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

1ம் :

திருமேவு மருள்ஞானக் குருவான
திருத்தேவா போற்றிபோற்றி
உந்தன் செகசோதி மலராதி அடியினை
நிதம்நிதம் போற்றிபோற்றி

2ம் :

அருளாருந் திருவாருங் கனிமாது
மரியாயே போற்றிபோற்றி
சென்னல் லது நீடித் துயரோடிக்
கழனிகள் ஓங்கச்செய் போற்றிபோற்றி

1ம் :

மருவாரும் மலர்வாகை விருதுறுஞ்
சூசையே போற்றிபோற்றி
பஞ்ச மதுவோட மிடிவாட நலம் நீடப்
புரிகுவாய் போற்றிபோற்றி

2ம் :

திருயேசு தனையேந்தும் அருளார் சந்
தந்தோனி போற்றிபோற்றி
எங்கள்செ னரோங்கியெதிர் நலமோங்கி
வாழகச்செய் போற்றிபோற்றி

1ம் :

தகைமை சேர் திறங்கீலின் தருதூய
செவ்வசுதி போற்றிபோற்றி
என்றுந்தழைத் திட மறிமூ ரிசெழித்தா
வினம் சேரப் போற்றிபோற்றி

2ம் :

சுகவாழ்வு நிதம்நீடி மகிழ்வாகி
யெமது வங்கிசமோங்கி
வாழத்துணை தந் தருள்யக்கோ பெருந்திடச்
சந்ததி போற்றிபோற்றி.

## காட்சி – 02

**பாத்திரம்** : கட்டியகாரன்
**இடம்** : தெரு

ஏரோது கட்டியன் வரவு கவி

***இராகம்** : சங்கராபரணம்*

தீரனாம் யூதேயாவைச் சிறப்புட னொருகோலோச்சி
வீரமாய் அரசுசெய்யும் வேந்தனாம் ஏரோதென்போன்
பாரினில் கொலுவில் வாற பான்மையை எடுத்துக்கூற
சூரர்போல் கட்டியகாறன் துலங்குமிச் சபை வந்தாரே.

அவை தரு

***இராகம்** : ஹம்ஸத்வனி* **தாளம்** : ஆதி

அழகொத்து லாவு வளமொத்துமேவில்
லருகிய சாந்திபெரு கியகாந்தி
ஒளிகொள்ளே ரோது களி கொள்ளும் வாசல்
உவப்புறுமா சுதன் விப்போ டுற்றானே

கரத்தினில் வன்னப் பிரம்பது துன்னக்
காசினியாளும் ராசனாம் நாளும்
உரத்துவ வீரசிறப்பா கையாரஒளிர்கொளும்
கட்டியனும் உவப்போ டுற்றானே.

கட்டியன் - தரு

***இராகம்** : நீலாம்பரி* **தாளம்** : ரூபகம்

மருப்பொலிபூந் தடத்தலர்ந்த
திருப்பொலியும் யூதேயா வூரோரே எங்கள் மன்னனே
ரோதெனும் தென்னன்கொலுவிற்கு
இந்னேரம் வாறார்காண் பொன்மலர் போற்றிட வாரும்

தெருக்களெங்கு மொருப்படவே
சிறப்புடனீர் ரங் கெங்குமே பந்தல் நன்றாய்த்
தீட்டியே தோரணம் பூட்டியேமன்னவன்
தாட்கமலத்தயை சூட்டிடுவீர் சிரம்மீதே

அஞ்சுகரஞ்சித மொழிசேர்
வஞ்சியரே யேந்தலுமே வாறார் - நீங்கள்
அத்தெரு இத்தெரு குப்பைகள் கூட்டியே
தப்பிதமாய்த் தள்ளி அப்பாலெறிந்திடுவீரே.

வசியாரும் செயவீர மன்னவனுங்
கொலுவினுக்கு வாறார் நீங்கள்
வாழையொடு பசுந்தாழைகள் மெத்தவாய்
வீதியெங்கும் நாட்டித் தோரணம் கட்டிடுவீரே.

வேய்த அல்லி ஆய்ந்த கரக்
கூந்தலளகார்மட மின்னாரே நீங்கள்
வீசுநறுமலர் சாய்மரை மன்னவன்
நேசச் சமுகத்தில் மேவிப் பரிசடை வீரே.

கவியில் வல்லப்புலவர்களே
காவலனாம்மேரோது வாறார் நீங்கள்
கண்டாருஞ் சொற்சுவை கொண்ட நற்பாவிசை
யிண்டிறைவன்மேலே நன்றாகப் பாடிடுவீரே.

கூறல்

***இராகம் : கேதாரகௌளை***

கடகர தடமுடைய படை புடைசூழ்
கடகரி நிகர்த்த இராசன்

கசடர் கச டறவிலகு தவிசிலுறை
கடாகிடம் மிகுந்த இராசன்

கொடி குடைகள் திடுதிடென வெடி பளீர்
பளீரெனக் குமுறொலி குடைந்த இராசன்

கொம்புகுழல் தம்பூரும் பெண்ட லம்பக்
குடைத் தொனி படைத்த இராசன்

திடமுடைய அடையவர்கள் அடிதொழுது
திறையது செலுத்துமகத் துவஇராசன்

சேணர்கவி வாணர்புகழ் காணவருமா
னுச்செம்மல், செம்மல்கள் இராசன்

மடைபுடை சூழ் றோமையெனும் மானகரை
யாள்கிற மா நிதி பொலிந்த இராசன்

பராக்கு

சமூகமெச் சரிக்கை சாமி வெகுபராக்கு.

## காட்சி – 03

***பாத்திரங்கள் :*** *ஏரோது, அரசன், கட்டியன்*
***இடம் :*** *அரண்மனை*

ஏரோது இராயன் முதலாம் வரவு
வரவு கவி

***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *ஏகம்*

எங்கும் நலந்திகழ் துங்கபலச் சதுரங்க பதாதிகள்
ஏனைய சேனைகள் யாவருமே பிடை எட்டியே முன்சூழ
மங்கையரங்கையிலங்கிடலங்கிர்த வளர்சாய் மரைவீச
மட்டறு துட்டர் மனத்தர் கைகட்டியே விட்டு மனங்கூச
செங்கை குவிந்ததி துங்கர் மிகுத்திடு திறலாதிபர் பணிய
திக்குறு தக்கமிகுத்திடு குடிசெனர் திகளடி சிரசணிய
சிங்கமெனத் திறல் தங்கிய ரோமைத் தேசமதாளுகை செய்
தீரவீராதிப சூரனேரோதெனும் ராசனும் வந்தனனே.

அவை தரு

***இராகம் :*** *மாயாமாளவகௌளை* ***தாளம் :*** *ஏகம்*

தீரவீர சூரனும் வந்தானே ரோது வென்னும்
தீரவீர சூரனும் வந்தானே
தீரவீரன் யூதேயா வையோர் குடைக்குள்ளே யடக்கி
பாருள்ளோர் பரவ அதி சீருடன் அரசியற்றும்

எத்திசை மனுவோர் போற்றவே - இசைநிகழும்
தித்திமத் தாளங்கள் சாற்றவே
முத்துரெத்தி னக் குடை கோடி உற்றதான பிடையிடை
நற்பரிவாய் யுற்றிட நரபதி யதாய் விளங்கும்

கண்டவர் வெருவியஞ்சவே
மாற்றார்களெல்லாம் கையெடுத்து வந்திறஞ்சவே
கொண்டரும் பூங்குழல் மாதர் அண்டியே சாய்மரை வீச
மண்டலத்தையாளுகின்ற மன்னவ மன்னவராமே.

ஏரோது வண்ணம்

***இராகம் :*** *கீரவாணி* ***தாளம் :*** *சதுஸ்ரஏகம்*

திசையெண் டிசை மனுவோர் பதமலர் ரிசையுண்ட டிபணிய – மகத்துவ
தீரவீராதிபசூரனேரோதெனும் ராசனெனக் கிணையா ரிங்குதானே.
சதுரங்கச் சேனைபடை சூழவே

வனசமுக மடவார் சாய்மரையதனை யிதமனதாய் - அன்பொடு
அதிகப்புகழொடு பதியையிகளில்லா தரசு புரிசெய அதிபதி நானே

நவரெட்ணமணிமவுலி சூடியே

கெறுவுற்றெளுமிதய வஞ்சகர் மறுகிப்பதம்பணிய – அதிவித
கீதபதாதிகள் சூழ யூதேயாவின் ஆதிபன் நாளென அறிந்திடுவீரே
தங்கரெட்ணச் செங்கோல் கையேந்தியே

உறுதத்துவமதியில் அதிநலம் பெறுமுத்தம அமைச்சர் - அருகுற
ஒளிரும் நவமணி பளிரும் பிளகிர்த அளிதங்கிய கொலுவதனிற் செல்வேனே
செங்கோல் செலுத்தியரசாளுவேன்.

**கட்டியன் - கவி**

***இராகம் : சங்கராபரணம்***

மின்னாரும் மணிமௌலி சிறந்து வாழும்
மேதினிக்கோர் தீங்குமற்பன் மேவிடாது
தன்னாரும் செங்கோலேந்தி அரசுசெய்யும்
தராதிபா உமது செம்பொற்தாளே யோங்க
என்னாளும் எங்களரும் பழைய வேதத்தியல்புடனே நீதி
மறையினிதாய் நீட
மன்னாதி மன்னவனே யின்றுமென்றும்
மதிப்புடனே வாழ்ந்திட நீர் வாழிதானே.

**கட்டியன் வசனம்**

அரசுநெறியும் மாணையால்ச் சக்கரமும் தீரவீரச் செல்வச் செழிமையும் என்றென்றும் வாழ்ந்திருக்க வேண்டியது ராசனே.

**ஏரோது கவி**

***இராகம் : சங்கராபரணம்***

வாழியென்று தாளிணைகள் பணிந்து நிற்கும்
மாகதனே உந்தனுக்கு வழுத்தக்கேளாய்!
மேழிபிடித்துழுபளனம் சூழ்ளென்தேசம்!
மேவுகின்ற மிடிமைகளை மாற்று செம்பொன்
நாழியெனப்பரவு திறல் அமைச்சன் தன்னை
நவரெத்தின மணிபதித்து நலமாய்யேறி!
ஆழுகைசெய்யெனதரிய கொலுமுன்பாக!
அழைத்திடுவீர் களிப்புறயான் அருளினேனே!

**ஏரோது வசனம்**

கேளும் கட்டியனே எனது வாசல் மந்திரியை அழைத்து வருவாயாக.

**கட்டியன் வசனம்**

அப்படியே செய்கிறேன் இராசனே.

## காட்சி – 04

**பாத்திரங்கள்** : கட்டியன்
**இடம்** : தெரு

கட்டியன் - தரு

**இராகம்** : *சங்கராபரணம்* **தாளம்** : *சதுஸ்ரஏகம்*

இத்தரையை யாளும் தத்துவனே ரோது
ராசனுரைக்கிப்பொழுது தீவிரம் செல்வேனே
புத்தியிலே தீரன் உத்தம ஒய்யாரன்
போந்தமதி மந்திரியைச் சேர்ந்தழைத்து வருவேன்

எட்டுத்திசையோரும் கிட்டிப்பணிவார்கள்
என்னைமிஞ்சு மாகதனும் மண்ணிலிருப்போனோ
பட்டிக்காட்டு நரிக்கு எட்டிப்போமோ பரியும்
பத்து நாளின் வழியை யிருபத்தேழ்நாளில் நடப்பேன்

தத்துதிரை சூழும் மித்தரையை யாளும்
சண்டப் பிரசண்டராசன் தொண்டுக்குரியோனான்
இத்தினத்திலோடி உத்தமநன்நீதிக்
கேற்ற மதி மந்திரியைத் தேற்றமாக அழைப்பேன்.

## காட்சி – 05

**பாத்திரங்கள்** : *எரிமோன், ஊழியன்*
**இடம்** : தெரு

மந்திரி வரவு - கவி

**இராகம்** : *சங்கராபரணம்*

சுந்தரத் தலைப்பா சூடித் துலங்கிடு மா டைமாட்டி
விந்தைசேர் விறலிற் செம்பொன் மேவிய ஆளிபூட்டி
நந்துலாவிடும் யூதேயா நகராளேரோது வாசல்
மந்திரி சபையின்மீது வளம்பெற வருகின்றானே.

சபை தரு

**இராகம்** : *ஹம்சத்வானி* **தாளம்** : *ஆதி திஸ்ரநடை*

கிரணப் பொன்வேலை அருள்பொற்பூமாலை
விரைவுற்றதம் மேலே உரமுற்றுலாவ
அரசனேரோது கிரமநன்னீதிக்
கதிபதி மந்திரி அழகோடுற்றானே

செங்கையிலாளி தங்கிடவாளி
எங்குள்ளோர் கூற அங்ககம் தேற

மங்கையோராட சங்கையோர் பாட
மந்திரி சபைதனில் மகிழ்வோடுற்றானே

மந்திரி – சிந்து

***தாளம் : ஆதி***

இலங்கும் செம்பசும்பொன் னொளிர்முடி மன்னிடஞ் செல்லுவேனே
இலங்குஞ் செம்பசும் பொன் வெண்டரளந் தங்கிய துங்கன்
னதி சிங்கனெனும் தங்கமுடிமன் சொற்படி பொங்கும்

ஆதிதற்பரனே அளவில்லாத நீதியற்புதனே
வாது புரியதிபர் வழங்குந் திறைமறுத்துத்
தீது புரியவெண்ணித் திறத் தோடெதிர்த்தனரோ

விருப்பமுற்றறிய விபுலையிலென் கருத்துகந்தறிய
திருப்பொலி மகிடத்தைத் தரிக்கும் மன்னவ
னன் புற்றுளத்தில் நினைத்தவிதம் முலகில் செண்டறிவதற்

பின்முன்னெண்ணாமல் பிழைவருமெண்டுன்னியேகாமல்
கன்னிதனது கற்புக் கவமெதும் வந்ததோ
அண்ணலிடத்தினிற் செண்டறிந்து தந்தரஞ்சொல்ல

காவுயர் வனத்தில் கருதிவிலங்கானதித் தினத்தில்
தாவு பளனமதில்த் தடையற நுழைந்ததோ
கோவுற்றகந்து வேட்டை குறித்தாட நினைத்ததோ

உரைமதி பகரும் மந்திரி நானெண்டுலகினில் லெவரும்
வரை திரை சூழுலகதினில் மன் நினைத்ததால்
விரைவிற் செண்டறிகுவேன் வேந்தனுரைப்படிக்கு.

## காட்சி – 06

***பாத்திரங்கள் : மந்திரி, ராசன், கட்டியன்***
***இடம் : அரண்மனை***

மந்திரி – கவி

***இராகம் : சங்கராபரணம்***

வாழிபொன் மவுலி வாழி வயங்கு செங்கோன்மை வாழி
வாழி நன்னீதி வாழி வயபுய மகிமைவாழி
வாழியுன் சகல செல்வம் மகிமையும் வாழி வாழி
வாழி நீடூழியாய் நீர் வாழ்ந்திட வாழிதானே

மந்திரி – வசனம்

அரசுநெறியும் மாணையால்சக்கரமும் செல்வச்செழிமையும் என்னென்றும் வாழ்ந்திருக்க வேண்டியது ராசனே.

## இராயன் மந்திரி - நாட்டுவளம்

***இராகம் : நவரோஜ்*** ***தாளம் : ஆதி திஸ்ரநடை***

**ராயன்** :

தீரவீர சூர மந்திரி யெனது தேசச்
செழிப்பின் வளப்பம் விளப்பமாகச் சொல் எனது மந்திரி

**மந்திரி** :

கார்முகில்லது மின்னிமுழங்கியே கன்னல் துன்னி
களிக்கச் செழிக்கப் பொழியும் மாரியாய் எனது ராசனே

**ராயன்** :

எங்கள் பழையவேத முறைப்படி பூசைப்பலியை
இயற்றிவாறாரா குருக்களோதுவாய் எனது மந்திரி

**மந்திரி** :

துங்கலங்கிர்த துரைகள் பூபனே குருக்கள் விருப்பாய்
தொடர்ந்து பலியைத் திடம்பெறப்புரிவார் எனது ராசனே

**ராயன்** :

அஞ்சுகமொழி ரஞ்சிதமின்னார் தமதலங்கிர்த
அரியகற்பிலே பிரிவதேதுமுண்டா எனது மந்திரி

**மந்திரி** :

அஞ்சித் தொடையல் ரஞ்சித இடையார் மாதர் கற்பிலே
வழுவில்லாமலே ஒழுகிறார்களே எனது ராசனே

**ராயன்** :

தேசதேசத்தையாளும் ராசர்கள் எனது கப்பமே
திட்டமாகவே யிட்டுவாறாரா எனது மந்திரி

**மந்திரி** :

வாசபோசவுல்காச மன்னனே வேற்று அரசர்
மகிழ்ந்துன் திறைகள் பணிந்து வருகிறார் எனது ராசனே.

**வசனம்** :

இதுதான் உமது நாட்டின் வளமைகள் அறிந்துகொள்வீராக.

## ராயன் கவி

***இரகாம் : சங்கராபரணம்***

நாடுநகர் மீதிலுள்ள வழமையாவும்
        நவின்றிடக் கேட்டுள்ளமது நன்மையாகப்
பீடுடைய சந்தோஷமானேன் நேசம்
        பெருகுமதி மந்திரியே பேசக்கேளாய்
சூடுமருள் புத்தியது ஓதியென்றும்
        துலங்கு நவமணியழுத்தென்கொலு முன்பாக
தேடுமதியமைச்சனாய் யிருப்பீர் நன்மை
        செய்குவேனென்னாளும் செழிக்கத்தானே!

**வசனம்** :

மந்திரியெனது நாட்டின் வளமைகள் கேட்டு மிகுதியும் சந்தோஷமானேன் என்றும்போல் எனது வாசலுக்கு மந்திரியாய் யிருப்பாயாக.

இராயன் மங்கலம்

ஏரோது முதலாம் ஆம் வரவு

**இராகம் :** தோடி **தாளம் :** ஆதி

தரளம் வெண்டரளம் பொன்முடிபுனை அமைச்சர்கள் கூடநாட
யூதே தரை தன்னை அரசுசெய் அதிவிதக் குடிபடை அரசன்நானே

மருவலர் மறுகிட வல்லபம் பெருகிட மகியின்மீது என்றும்
திருமகள் செழிப்புறச் சுகநலம் களிப்புறச் செல்லுவேனே.

படைபஞ்சம் மிடியஞ்சிப் பிணியொஞ்சியேயிந்தப் பாரின்மீது
இடர் அடையாது வாழவே அருள் செவ்வாய்யம்பரா போற்றி போற்றி

கொடிகொம்பு வெடிபம்பை துடிகொண்ட சேனைகள் சூழ நானும் யிந்தப்
படி யென்றும்துயரின்றி நிதம் நிதம் வாழச்செய் பரனே போற்றி.

## காட்சி 07

**பாத்திரங்கள் :** *சந்தியோகுமையோர், சீடன்*
**இடம் :** தெரு

1ஆம் வரவு சந்தியோகுமையோரும் சீடனும்

வரவு கவி

**இராகம் :** *சங்கராபரணம்*

நல்ல விசுவாசமென்னும் மெருவைப்போட்டு
நம்பிக்கையெனும் விதையை நட்டித்தூவி
வல்ல பத்தியெனும் பயிரை வளர்த்து மோட்ச
வாழ்வருந்து ஞானமெனும் வரம்புநாட்டி
வெல்லை மலை மேல்துதித்த பரனைப்போற்றி
வேதபத்தி மிகக் கதித்து விளங்குகின்ற
அல்லலற்ற சநற்தியோகு மையோர் தானும்
அருள்முந்து சபையதனில் வருகின்றாரே

சபை – தரு

**இராகம்** - *சிந்துபைரவி* **தாளம் :** ஆதி

சீர்மலியுமே காதி பரனையே
சிந்தை மீதினில் வந்தனை செய்து
தேர்மலியும் யக்கோவு அப்போஸ்தலு
நீதன் நற்சபை மீதில் வந்தாரே

ஆதிநாதனருஞ்சீடனாகி
அன்பருக்கன்பராகிய வேத

போதனாம் சந்தியோகு மையோர் திருப்
பொற்புறு சபைமீதில்லுற்றாரே

சந்தியோகுமையோரும் சீடனும் தரு

***இராகம் :*** *சிந்துபைரவி* ***தாளம் :*** *மிஸ்ரசாயு*

**சந்தி** :

திருவுற்றிடுநேய அருள்பெற்றிலகுங்காய
மரியுத்தம சேய நெனவுற்றருள் தூய
வரனே அம்பரனே நற்கரனே யுன்னிருபதம்
மதிக்கத்தரை துதிக்கச்செனர் செழிக்க அருள்வாயே.

**சீடன்** :

அருளூற்றிடு போதம் மிருளற்றிட நீதம்
அடையும்படியாக இடையும் வழுவாது
அளித்தே மிகக் களித்தே துயர் ஒழித்தோடவே விளிப்பாயருள்
அமலா தயைவிமலா அருள் கமலா எமையாளும்.

**சந்தி** :

ஒருமாமறையதைத் திருமாமறையுடன்
ஓதத்தரும் தவ நீதத்துடன் பூவில்
இனியாக நல்வழியாகவே களிகொண்டிரு பளியொண்டிலா
உலகத்தவர் தலமைத்தல நிலமைச் சருவேசா.

**சீடன்** :

எரிவஞ்சகப் பேய்கள் புரிசஞ்சலமாய்கை
இடரே தொடராது அடரே படராது
இகத்தோர்களை மிகுத்தாதரை அகத்தன்பொடு சுகத்தம்பரம்
ஏற்றி அடிபோற்றி நிதம் தேற்றல் தருவாயே

மாதயவதாய் யேசுதவ நாதனே.

**சந்தியோகு இன்னிசை**

***இராகம் :*** நடபைரவி

முள்ளின்முடி பொறுத்தீர் மூங்கிற்கரமேயேற்றீர்
கள்ளனென்று நிந்தையுற்றீர் காறுமெச்சில் தானேற்றீர்
என்னன்பிலாதெனக்காய் இத்துயர் நீர்பட்ட
நன்றி உள்ளன்பிருத்தி ஒருநாளும் மறவேனே.

**சந்தியோகு வசனம்**

கிருபாகர யேசுவே தேவரீர் எங்களுக்காகயிந்த உலகில் வந்து கொடிய யூதர்களால் பட்டநிந்தை வாதைகளையெனது நெஞ்சிலிருத்தி ஒருபோதும் மறக்கமாட்டேன் மறக்கமாட்டேன் சுவாமி.

## காட்சி – 08

***பாத்திரங்கள் :*** *எரிமோன், ஊழியன்*
***இடம் :*** *வீடு*

எரிமோஸ் முதலாம் வரவு – வரவுக் கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

தந்தமர சூட்ச்சம் மிக்க தலத்தில் நேரில்லாக்கீர்த்தி
மந்தரமே தனதம்பனுமோடுச் சாரணத்தை
யித்தரை யேவிப்பேய்கள் இடருறு வித்தைக்காறன்
மந்திரன் எரிமோசென்போன் வளம்பெறுசபை வந்தானே.

அவை – தரு

*மெட்டு : பண்டரும் தவமண்டலேஸ்வரன்...*
***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *ஆதி*

நுதலிற் புழுதியளுந்தப்பூசி நொடித்து விடுத்துக் கதைகள் பேசி
இதயமிஞ்சிடும் வித்தைக்காறன் எரிமோன்சபை தோற்றினான்

எட்டுமுழத்திலுயரக் கிளம்பி என்னை மிஞ்சுவாராரெண்டுனம்பி
விட்டுப் பேய்களை ஆட்டும் எரிமோஸ் வீரனும் சபை தோற்றினான்

பில்லி சூனியம் வல்லவாதி பேய்வித்தையிலே மந்திரவாதி
எல்லையிலெனக்கிணையா ரென்றும் எரிமோசன் சபை தோற்றினார்

துண்டமெனக்குச் சுண்டக்கா யெண்டகந்தை கொண்டிடு மிகுந்த மனத்தன்
சண்டித்தனத்தன் மிண்டன் எரிமோ சானவன் சபை தோற்றினான்.

எரிமோசு – வண்ணம்

***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *சதுஸ்ரஏகம்*

மட்டாரும் மலரணிமார்பன் மகத்துவத்திறல் மிகுத்த எரிமோசென்
திட்டமுறு பெயரது கேட்டிடிற் சினத்த சிங்கமும் மனத்தொடுங்கிடும்
தீயமாயகரும் பேயின் வித்தையினு பாய தந்திரனுவ்வுலகினில் நானே.

அட்டெட்டுத் திசையுறு மானிடர் அடங்குவாரெனக் கொடுங்குவார் நிதம்
எட்டெட்டுத் தொழிலுமறிந்தவன் எனக்கு மிஞ்சியே இகத்தில் வருவனோ
இளியன் சளியனொடு முளியன் நெளியனெல்லாம்
மொழியும் படியுரைக்க முன்னெறிப் போவார்.

கட்டெண்டுடன் கட்டிடுவார் கருங்காளி கூழியும் நீளுசடையனும்
விட்டெண்டுடன் கூறிடவிடுவார் வெறித்த மாடனும் கறுத்த இருளனும்
வீரதீர அதிகார மந்திர உதாரகாரியு விவேகியும் நானே.

மொட்டையன் கட்டையன் அனுமன் மொழிந்த சொற்படி யழுந்துயேவலை
திட்டமுடனே புரிவாரிச் செகத்திலே புகழ் மிகுத்த என்னிடம்
தேடிவருவாரொரு கோடி கோடி செனர்
நாடியரசனைப்போல் நானிருந் தாள்வேன்.

வசனம்

கேளுங்கள் சபையோர்களே, எரிமோசென்னும் மந்திரவாதி நான். என்னிடத்திலே கட்டுமந்திரம், பிட்டுமந்திரம், கண்கட்டி வித்தை, செகசால வித்தை, அட்டத்தொழில், எட்டுத்தொழில். கட்டைத்தொழில், முட்டைத்தொழில், ஆட்டுந்தொழில், காட்டுந்தொழில், அண்டத்தொழில், பிண்டத்தொழில் எல்லாம் தயாராயிருக்கின்றது. கண்கட்டிவித்தையொன்றுக்கு ஒன்றரையில் அரையும் செகசாலவித்தை ஒன்றுக்கு இரண்டரையிலிரண்டும் ஆட்டுந்தொழிலொன்றுக்கு மூண்டரையிலரையும் முழுப்பவுணாகத் தந்தாலிலகுவில் பெற்றுக் கொள்வீர்கள் இச்சமயத்தை இழந்து போகாதீர்கள்.

எரிமோசு - கவி

***இராகம் : சங்கராபரணம்***

ஆழி சூழு லகந்தன்னில் அதிகபேர் படைத்த எந்தன்
ஊழியக்கா ராநானும் உரைத்திடும் வார்த்தை கேளாய்
நாளுமென்னிடமே கற்கும் நவிலருஞ் சிடனான
நீளுமன்புறு பிலேத்தை நீயிப்போ வரச்செய்வாயே.

எரிமோசு – வசனம்

ஊழியனே எனது சீஷன் பிலேத்தை வரும்படி செய்வாயாக.

## காட்சி – 09

***பாத்திரங்கள் :*** *பிலேத்து*

**இடம் :** தெரு

பிலேத்து வரவு - கவி

***இராகம் : சங்கராபரணம்***

நலத்திடமில்லாப்பேயின் நாணுறும் வித்தை கற்ற
பலத்திடனெரிமோசென்போன் படிப்பிக்கும் வித்தை தன்னை
தலத்தினில கற்றுத் தேர்ந்த தகமைசேர் பிலேத்து வென்னும்
வலத்துறு சீஷன்தானும் மகிழ்வுறுஞ் சபை வந்தாரே.

பிலேத்து – தரு

இந்நேர மேனழைத்தாரோ வரவெனையே
மந்திரவாதி எரிமோசந்தவீரனும்

அந்தரத்தைப் பந்தாயுருட்டும் பிலேத்தெனைப்போல்
ஆருலகிலே யவற்குச் சீடனாகுவார்

தந்தரக் கூழிகளஞ்சியே பின்னிட்டோடவே
தக்கமதி மந்திரங்கள் கற்றேனவரால்

மாடனிருளன் வெறியனும் எனதுடைய மந்திரத்தால்
பின்னிட்டோடத் தந்திரஞ் செய்வேன்

ஆடாத கூழிகள் தன்னையே ஆட்டுவிக்கவே
அற்பமாயவித்தை நன்றாய்க் கற்றேனவரால்

போட ஆரும் தர்க்கமவற்குக் மிஞ்சிப் படித்தோர்
புக்கினரோ இச்சணமே அக்குருமுன்பு

நாடுமுற்றும் கீர்த்தியடைந்த அவரை வெல்ல
நானிலத்திலாருமுண்டோ ஈனப்பயல்கள்

ஓடஓட நானும் கலைப்பேன் ஒரு கேள்விக்கு
உத்தரமும் சொல்லுவாரோ தத்துவரைப்போல்

நீடுமெரிமோசென் குருவின் னிடத்திணுகி
நிட்ச்சயமாய் யுற்ற செய்தி யிப்போதறிவேன்.

## காட்சி – 10

***பாத்திரங்கள் :*** எரிமோஸ் வீடு
***இடம் :*** தெரு

**பிலேத்து விருத்தம்**
***இராகம்*** - *சங்கராபரணம்*

உத்தம மெத்திய தத்துவலங்கிர்த முடையதிபா சரணம்
உந்திடு மந்திர தந்திரவித்தையின் நொளிர்ருடையாய சரணம்
எத்தரையும் பணுவுற்று அடங்கிடும் மியலோனே சரணம்
எட்டெட்டுத்தொழில் அட்டட்டத்தொழில் ஏற்றவனே சரணம்
அத்திரமென்னவே விட்டுமே வெறிகளை ஆட்டுவிப்பாய் சரணம்
அஞ்சிடா நெஞ்ச வெறிகளை ஆட்டுவிப்பாய் சரணம்
அஞ்சிடா நெஞ்ச மெழுந் துணிவுற்றிரும் அன்பாய் செயசரணம்
இத்தினமென்னை அழைத்திடு செய்தியை யேதெனவே பகரும்
எரிமோசாகிய துரையே உன்ம லரிணையடியே சரணம். .

**பிலேத்து - வசனம்**
சரணம் சரணம் எரிமோஸ்த் துரையே, அடியேனை அழைத்த கருமம் யாதென்ற சொல்லுவீராக.

**எரிமோசும் பிலேத்தும் - தரு**

***மெட்டு :*** *சென்னிதன்னில் பொன்னின் முடி*
***இராகம் :*** *ஹிந்தோளம்* ***தாளம் :*** ஆதி

எரி :

சரணமென்று கிரணஅடி நின்று
சாற்றுமெந்தன் சீடன் பிலேத்துவே

தந்தர மந்திர சுந்தர விந்தைகள்
தவறாது படிக்கின்றாயா?

பிலே:

இரணகளப் புலியெனவே யொத்த
எரிமோ சென்னும் என்குருவே நானும்
எட்டெட்டு நாளுக்கோர் சட்ட மந்திர முற்றாய்
கற்றுக்கொண்டே வாறேன்.

எரி :

ஆட்டுந்தொழில் காட்டும் தொழிலுடன்
அண்டத்தொழில் பிண்டத் தொழிலெல்லாம்
அவதானமாகவே மிகுதிறமாய் படித்
தண்டண்டு வருகின்றாயா

பிலே :

ஒட்டுந்தொழில், ஆட்டுந்தொழிலிலே
எட்டு முழச்சட்ட வளமொன்றை
எடுத்து நான் வீசியே திடத்துடன் மீதியை
இனிதாகப்படித்து வாறேன்.

எரி :

விஞ்சையிலே மிஞ்சிய மந்திர
வீரவாதி ஆரெனுமென் பெயர்
மேவிடக் கேட்கிலெப்போதுடன் அஞ்சியென்
பாதத்தைப் பணிவாரா.

பிலே:

அஞ்சுவர்ணப்பஞ்சவர்ணக் கிளி
யானது முன்பேரினைச் சொன்னாலும்
அஞ்சியே ஓடுவார். நெஞ்சம் படபடத்து
மந்திரவாதியெல்லாம்.

எரிமோசு – கவி

**இராகம்** : *சங்கராபரணம்*

சீஷனே இன்று நீயும் செப்பியமொழியைக்கேட்டு
நேசமே மனதிற்கொண்டேன் நிகருமெஸ்ப்பானி யாவில்
தேசமானிடர்களெல்லாம் திகள்ளடி பரவ என்றும்
இராசனைப் போலிருந்து நாமரசாளுவோமே.

எரிமோசு – வசனம்

கேளும் சீஷனே எஸ்ப்பாஞ்ஞ தேசமெங்கும் மந்திரவித்தையில் லெனது கொடி துலங்கும்படிக்கு இருந்து வாழுவோமாக.

## காட்சி – 11

***பாத்திரங்கள் :*** *சந்தியோகு, சீடன்*
***இடம் : வீடு***

சந்தியோகும் சீடனும் - தரு

***இராகம் :*** *ஹரிகாம்போதி* தாளம் : சதுஸ்ரஏகம்

சந் :
எந்தனரும் சீடனே நீர் கேளும் - ஆதி
யேக சருவேசுரன் பொற்பாதம் மறவீரே
சீட :
சுந்தர யக்கோவே யெங்கள் குருவே – ஏக
சோதி திருப்பாதமெந்தன் நாளும் மறவோமே
சந் :
அன்புறு திருச்சத்திய வேத போதம்
அருளிட யூதேயாவென்னும் நகருக்கேக நினைத்தேன்

சீட : இன்பெழும் தவக்குருவே நாங்கள் உம்மோ
டேற்றமுடனே வரவோ சாற்றிடுவீரங்கு
சந் :
இந்த இடத்துள்ளவர்க்குப் புத்தி சொல்லி
இருந்திடுவீர் நானங்குபோய் விரைந்து மீண்டு வருவேன்
சீட :
சுந்தரயக்கோவே எந்தன் குருவே நீரும்
சொல்லுமுரையாம்படியே வல்லவரே செய்வோம்
சந் :
நீதவேதபத்திமுறை வழுவா தன்பாய்
நீங்களே செனரையன்பு ஓங்கவேயாதரிப்பீர்
சீட :
போதகரே உம்முரை தப்பாது செய்வோம்
போய்வருவீரன்புடனே தூயபதம் துதித்தோம்

சந்தியோகு கொச்சகம்
***இராகம் :*** *பைரவி*

இந்தேறும் வானகத்தி ஈன்ற சுதனார் மறையை
அந்தமிகும் யூதேயா அப்பதியிற் போதுவிக்க
இந்தநேரம் யானும் மேகி வருமட்டாக
சுந்தரி பதம்போற்றி தூய்மையுடன் வாழ்வீரே

**வசனம்**
கேளும் சீஷனே நான் யூதேயாவுக்குப் போய் வரும் வரைக்கும் கிறிஸ்தவர்களுக்கப் போதகம் சொல்லி வாழ்ந்து கொள்வீராக

**சீடன் - வசனம்**
தேவரீர் கூறிய திருவாக்கின்படி நடப்போம் சென்று வாரும் சுவாமி.

## காட்சி – 12

**பாத்திரம் :** சந்தியோகு
**இடம் :** தெரு

சந்தியோகு தாழிசை - தரு

**தாழிசை**

ஏதேனென்ற தருமீதிருந்த ஆதமேவையைக் கடி அணாப்பிய
ஈனபாவமதிலே விழுத்திட ஏகநாதனுமவ் வேளை வந்
தோதினாரவர்கள் சாகவெண்டலகை உச்சி தன்னையே நசுக்குவோர்
ஒண்டொடி வருவாள்ளென்ற சொற்படியே உதித்து அலகையை நசித்திடும்

**தரு**

நீதமாத்தியவேத நிமலநாயகன்டன்னை
மாதயவுடன் வெல்லை மலையிலீண்டருளிய
தித்தசுத்த விரத்தியேயும் துத்தமபத மொத்திறஞ்சினேன்
நேசமுற்றுமதாசீர் பாதமே தாயே தா மரியாயே.

**தாழிசை**

பன்னிரண்டு வயதாகிடும்பொழுது பரமகுருவும் உமை அயர்வுற
பாத்திராததினால் ஆத்திரத்தொடு பதறி அழுது அழுது மூன்றுநாள்
உன்னரும் மணியளுத்து ரெத்தினமுதித்த சேதிமானதில்
ஓதரும் மகிழ்வினோடு கண்டிலகு உத்தம பிரியதத்தியே.

**தரு**

உன்துணை நம்பியே அன்புகொண் டடியெனும்
ஓதவே திருமறை யூதேயா தேசத்தில்
உதவியாக நின் றடியனோடுவுன் மகனின்வேதமே பலுகவே
நவ ஒளியை யெங்குமே விழியெனப்பொழி கிருபை வாருதி நீயே.

**தாழிசை**

நரவ தாரமுறு பரமனார் சிலுவை மரமதானதில் மரித்திட
வரைகள் திரைகளொடு வான் மீன்கள் கதிர்
மதியோடுறு பொருள்கள் அனையதும்
இருளதாகி யுமதரிய முளைதுயரை எங்குள்ளோர்களும் அறிந்திட
ஈட்டவே கவலை ஆற்றிடாதனுத
இந்து சுந்தர பதத்தியே

**தரு**

அருள்ளலங்காரியே அமலசிங்காரியே
ஆதாரம் நீதிருப்பாதாரம் தந்துமே
ஆளுவாய்யெனை நாளுமே சுகவாழ்வதாக மெய்வேத நல்லொளி
அகில மெங்குமே பலுகவுன் மகனிட மிரந்தருள் கூரும்.

**கொச்சகம்**

செப்பரிய வன்னமணித் தேர்போன்ற கோபுரமும்
மெய்பரிய சித்திரத்தின் வேலைகள் கொள்சாலைகளும்
ஒப்பரும் யூதேயா வுற்றே நிம் மானகரில்
தற்பரனின் சத்தியமறை தான் யோதுவிப்பேனே.

**வசனம்**

கிருபாகர கத்தாவின் தயவருளால் யூதேயாவில் வந்து சேர்ந்தேன் மெய்வேதத்தை அவ்வூர்ச் சனங்களுக்குப் போதிப்பேனாக.

**சந்தியோகு – தரு**

***இராகம் :*** *சகானா* ***தாளம் :*** *மிஸ்ரபாபு*

புவிமானரே கேளுங்கோ சத்தியவேதம்
புகுத்தன்பொடு வாழுங்கோ பரமண்டல
தலமானதிற் செல்லவே வாழுங்கோ இதுபோல் வேறு
சமயமெதுமில்லையே

இறக்கும் மனுடரில் யாம் முலகிலென்றும்
இருப்பதுவுமே பொய்தான் சத்தியவேதம்
உரைக்கும்படி நடந்தால் பரலோக
வாழ்வுறுவீர் பெறுவீரே

எமக்காகவேயுதித்தார் யூதரால் மரித்
தெமை யேசுவால் இரட்சித்தார் இதைமறந்து
அவப்பேய் பவமிச்சித்தால் நரகில் புகுந்தே
அழுவீர் அழுவீரே

கருணாகர நித்தியன் கற்பிலங்கிடும்
கனிமாமரிநற்சுதன் யேசுநாயக
அருள் நாயகன் பொற்பதம் போற்றிடில் மோட்சம்
அடைவீர் அடைவீரே.

**சந்தியோகு கொச்சகம்**

மூவா தொன்றா கியவிறைவன்
மூவுலகத் துக்கும் முதல்வன்
ஏவாள் புரிந்த பவத்தினுக்காய்
இகத்தில் மரியாள் வயிற்றுதித்துக்
கோவாள் குடிலிற் பிறந்து
மரக் குருசில் மரித்துயிர்த் தெழுந்து
பூவாளொடு பொன்னுல காளப்
போந்தவே கனைப்போற் றிடுவீரே.

**வசனம்**

கேளும் செனர்களே திரித்துவமொன்றாகி திரிலோகங்களுக்கும் முதல்வனாகிய சருவேஸ்பரனின் பாதாரவிந்தம் மன்றாடி மோட்சமடையப் பிரயாசப்படுவீராக.

## காட்சி – 13

***பாத்திரங்கள்*** *: யூதர் 1, 2*
**இடம்** *:* தெரு

யூதர் வரவு – கவி

**இராகம்** *: சங்கராபரணம்*

நீதமில் பழையவேத நெறிதனை அநுசரித்து
ஆதரவான் யேசு அம்பரன்டனை வதைத்த
கோதுறு குலத்தெழுந்த கொடூர பாதகர்களான
யூதர்கள் சபையின் மீது உவப்புடன் வந்துற்றாரே.

சபை – தரு

சிரத்திற்பாகை தரித்துத் திகரி கரத்தில்பிடித்துல்காசமாய்
உரத்துவீர திறத்திலங்கிய யூதர் சபையில் தோற்றினார்

கோட்டுச்சட்டை சேட்டுக்கமிசை பூட்டி வீரங்காட்டியே
சாட்டுக்கதைகள் மூட்ட நல்ல நாட்டுயூதர் தோற்றினார்.

யூதர் - தரு

*மெட்டு* : ஐயையோ இந்த ஊரில்
**இராகம்** : கேதாரகௌளை **தாளம்** : ஆதி

1ஆம்

மின்னார் சிரங் கொஞ்சு மவுலி விறல்மிகுமென் தோளா யேசு
தன்னார் மறைப்போதனை வந்திங்கு சாற்றுகிறானொருவன்

2ஆம்

தன்னாரும் மோசேசு எங்கள் பிதா தந்த பழமறையை மேலாய்
எண்ணாதவன் நேற்றில் வந்தவேதம் இங்குமே போதிக்கவோ

1ஆம்

மந்தையுறையுங் குடில்மீதினில் வந்தோனை நிந்தை பண்ணி எங்கள்
சந்ததியுள்ளோர் குருசில்முன்பு தானறைந்தார்களல்லோ

2ஆம்

எந்தவிதமந்த எழியனையேகனெண்டேயவனும் மிங்கு
வந்துமேபோதிக்கவும் மாச்சுதோ வாய்க்கெறுவை யெடுப்போம்

1ஆம்

எட்டடி வேங்கைக்கிணையாய் முயல்க்குட்டியும் துள்ளிடுமோ இப்போ
சட்டென அவனைத்துரத்தவே தான் வழி பார்ப்போமே

2ஆம்

திட்டமுடனெங்கள் குருவாம் மெரிமோசவரிடமே இப்போ
கிட்டியிது செய்திகள் முற்றையும் சட்டெனவே உரைப்போம்.

## காட்சி – 14

***பாத்திரங்கள் :*** *யூதர் 1,2, எரிமோஸ்*
***இடம் :*** *வீடு*

**1ஆம் யூதன் - கொச்சகம்**

கந்தமலர் வாவிவளை கருதரு மெசுப்பாஞ்ஞ தேசம்
மந்திரநேர் சுந்தரனே வல்ல எரிமோசுத் துரையே
எந்தவிதம் நாமுரைப்போம் யேசுவென்போன் தன்மறையை
வந்தொருவன் யோதுவித்து வருகிறான் இப்பதியே.

**வசனம்**

கேளும் எரிமோசுத்துரையே யக்கோவென்றொருவன் வந்து கிறிஸ்துமறையைப் யோதுவிக்கிறான் அறிந்து கொள்வீராக.

**எரிமோசு ஆசிரியம்**

***இராகம் :*** *அடானா*

காருற்ற காராளி சூழுலகமெண்டிசையும் கைகட்டி நின்றிடாரோ
கழியனும் சழியனும் முழியனும் நெளியனும்கட்டெனக் கட்டிடுகுவார்
பேருற்ற என்னகர்த்தலமதில் சத்தியமறை பெருமையாகவே எடுத்து
பேதமொன்றி ன்றியே போதனைகள் செய்யவும் பெருத்திடுமனத்துணிவதோ
நேருற்ற எரிமோசு என்தென் பேரினை நிலத்து ளோர் தான் கேட்கினும்
நெஞ்சமது அஞ்சுவார் மிஞ்சுதுணிவோ அவன் நேர்ந்திடவும் மெனது நகரில்
போரிட்டு அவனோடு வந்த புதுவேதமே போக்கியே நீக்கியிந்தப்
புவிமீது எனதரிய கொடிதன்னை நாட்டுவேன் புகழு பழமறை யோங்கவே

**எரிமோசு தரு**

**மெட்டு** *: தாரகை உதித்தது மெய்தான்*
***இராகம் :*** *கீரவாணி* ***தாளம் :*** *ஏகம்*

அத்தனைக்கும் துணிவோமோ யக்கோ அவனும்
மிப்பதிக்கும் வரப்போமோ
அத்தனைக்கும் துணிவாச்சோ ஆணவமெழுந்து போச்சோ
அந்தரசூரிய சந்திரரிந்தரை நொந்து படிந்து
விழுந்திடினும் விடேன்.

எட்டு எட்டுத் திக்குமுள்ள பட்டணத்தவர்கள் கரம்
கட்டியே எரிமோசென்னும் திட்டமெந்தன் பேரைக் கேட்டால்
கலங்கியே மலங்காரோ அவருமெந்தன் பதந்தனை வணங்காரோ
பார் பார் மனம் சற்றுமே
அஞ்சாது வந்து எற்றா மந்தையுறை குடிலீலுற்றவன்
வேதமதனை நற்பரிவுடன் போதிக்க

பேர்பெரிய யாளியுடன் போர்புரியுமோ உளுவை
சீர்பெறு மோசே எங்கள் நேர்பெருகும் தந்தை தந்த
வேதமும் பழுதாமோ அதனை அவன் பேதமெண்டிகழ்வானோ
அடடா கெட்டி நேற்றினில் முளைத்த வேதக் கூற்றினைமுற்றாயெடுத்து
நாட்டினால் விடுத்தவனை ஓட்டமாய்க் கலைப்பேன் யானும்.

எந்தனிடம் வந்தவர்கள் இந்த நாள்வரையும் வென்று
மந்திரத்தில் பேரெடுத்தோர் ரிந்த நாட்டில் யாருமில்லை
வரவாச்சோ அவனொருவன் குருசின்மீது அறைபட்டோன்
பரனெனவே போதனை மெத்தை இட்ட அவன் கெட்டித்தன
மெட்டுகள்ளடங்கிடவே சட்டெனப் புரியாவிட்டால்
பட்டணத்திருப்பேனோ நான்

குஞ்சரத் துக்கஞ்சியரி சஞ்சலமாய் ஓஞ்சிடுமோ மிஞ்சுவானோ எஞ்சியவன்
பஞ்செனக் காற்றிற் பறக்கும் வாறெனப் புரியேனோ அவ
னென் னகர்க் கேறவும் துணிவாமோ
பார் பார் எந்தன் சீஷனாம் பிலேத்தை விட்டு வேதபோதனோடு தர்க்கம்
மாடியிந்த ஆரை விட்டு ஓடவே செய்வித்திடுவேன்.

எரிமோசு - **ஆசிரியம்**
***இராகம் : அடானா***

வட்டவாருதியேழுமுட்டவே பொடிபட்டு பற்றியே சுவறிவரினும்
வானமது பூமியாய் மாறினும் இரவியுடு வானவைகள் தானுதிரினும்
எட்டாருமெட்டெட்டுத் திசையுள்ள யாவரும் என்னோடு
எதிர்முட்டிவரினும்
இந்திரன் வந்தாலும் மிந்தரையிலே வந்த யினனாம் மவனோடுமே
விட்டிடாதே தர்க்கமிட்டப்புறம் போக்க எனது சீஷன் போதுமே!
வெகுவீரியங்களோ என்னிலும் நின்றவன் மெத்தப் படித்தவனுமோ
இட்டவுங்கள் மனத்துயரை விட்டே செல்லும் எதுவிதமும் மவனை நானும்!
இந்தவூர் தன்னை விட்டகல வழிசெய்குவேன் இது உண்மை யறிகுவீரே.

வசனம்

எபிரேயர்களே நானவனை எதுவிதமும் இவ்வூரை விட்டுத் துரத்துவேன் மனத்துயரை விட்டுச் செல்வீர்களாக.

## காட்சி – 15

**பாத்திரங்கள்** : *யூதர் 1,2*
**இடம்** : தெரு

யூதர் - தரு (உரையாடற் பாங்கில்)

**மெட்டு:** இணக்கிக்கொண்டேனே..
**இராகம்** : புன்னாகரவாளி **தாளம்** : ஏகம்

1ஆம் **யூதன்** :
ஆப்பிட்டுக்கொள்வானே மதபோதகன் ஆப்பிட்டுக் கொள்வானே
ஆப்பிட்டுக்கொள்வானே கூப்பிட்டு விட்டெங்கள்
அந்த எரிமோசு மந்திரவாதியும் கேட்குங் கேள்விக்குப்
பதுங்கியே பூனைபோல் ஓட்ட மெடுப்பானே
நாட்டை விட்டே உண்மையாய்

2ஆம் **யூதன்**
இந்திரனெங்களுக்கந்த எரிமோசு
எத்தனை மந்திர வித்தைகள் கற்றவர்
வந்தவரத்தனும் முந்திட ஏலுமோ
தந்தி முன் மந்திபோல் நின்று முழிந்தவன்

1ஆம் **யூதன்** :
கத்தனாம் ஏசொரு சுத்தனென்றேயவன்
கத்துறான் நித்தமும் சுற்றிச் சுற்றியங்கு
பித்தன் முளையை யிழுத்து நசுக்கியே
அக்கோலமாகவே சிக்கியவரிடம்.

## காட்சி – 16

**பாத்திரங்கள்** : *எரிமோஸ், பிலேத்து*
**இடம்** : வீடு

எரிமோசும் பிலேத்தும் தரு
(உரையாடற் பாங்கில்)

**இராகம்** : செஞ்சுருட்டி

எரி:
தத்துதிரைகடல் சூழும் பூவில் தக்கமதியுத்தம சீடனே
தரையிலோர் புதுமறையது வந்து பரம்புது தானிதற்
கென்ன செய்வேன்.

பிலே :
மெத்துமதி மந்திர வல்லப வித்தகரை யிந்தரை மீதந்த
வேதத்தைப் போதிக்கும் பேதத்தோனாரென்ற
விள்ளிடுவீர் எனக்கே.

எரி :

துட்டனென்று யூதர் கையால் மரத்திட்டறையப்பட்டவன்
வேதமே சொல்லுறானாம் யக்கோ வல்லபனெண்டொரு
துல்லிபன் தானும் வந்து

பிலே :

விட்டுவிடலாகிடுமோ அந்த வீணனவன் தன்னையிவ்வூர்
விட்டு விரைவுடன் துரத்துவததி நலமானது எரிமோசு
என் குருவே.

எரி :

கிட்டவர ஏலிடுமோ அவன் கெறுவமது தன்னையிப்போ சென்று
கிட்டியேநீ தர்க்கம்மிட்டுயிவ்வூரை விட்
டப்புறப்படுத்துவாயே.

பிலே :

எட்டடி வேங்கைக்கிணையாய் முயற்குட்டி வந்து துள்ளிட
ஏலுமோ இப்போது நீருமே செப்பு சொற்படி
சென்று தர்க்கமிட்டே கலைப்பேன்.

எரிமோசு வசனம்

பிலேத்து நீ சென்று யக்கோவென்பவனோடு தர்க்கஞ் செய்து இவ்வூரை விட்டுக் கலைத்து வருவாயாக.

## காட்சி – 17

***பாத்திரம் :*** *பிலேத்து*
***இடம் :*** *தெரு*

பிலேத்து – தரு

***இராகம் :*** *ஆனந்தபைரவி* ***தாளம் :*** *ஆதி*

கொடியலர்ந்த பொழில் சூழ் எஸ்ப்பான்
தலமிகுந்த துணிவாய் ஏசு
குருவரும் பரம சருவ ஈசனென
ஒருவன் வந்து மறை ஓதிடவாச்சே

அடிகள் கொடிய யூதரால் பட்டமிடிமையுடைய அவனை ஈச
னவனெனப் பரவ மனமதிற் கரவனென மிகத்
துணிவானதோ பூவில்

அதிகவிரைவிலணுகி இந்தப்பதியிலவனை வினவித் தர்க்க
மதனை விட்டுயெதுவிதமோ தொட்டு நக
ரதனை விட்டுடனங் கணுகியே கலைப்பேன்

நதியையுடுத்த புவியில் சூட்சமதிகள் தொடுத்தே கெதியில் இந்த
நாட்டை விட்டவனை ஓட்டமுற்றிடவே*தாட்டி கத்துடனே
தான் கலைப்பேனே. யக்கோ வென்றவனிடத்தில் செல்லுவேன்.

## காட்சி – 18

***பாத்திரங்கள் :*** *சந்தியோகு, பிலேத்து*
***இடம் :*** *வீடு*

பிலேத்து – கவி
***இராகம் :*** *சங்கராபரணம்*

மரிமகவைத் தொழுமெனவே வழுத்துகின்ற மாதவனே எங்கள் குருமோசேசென்போன்
தருகின்ற பழையமுறை பொய்யதாமோ தப்பறையாய் நேற்றினிலே முளைத்த வேதம்
சரியென்று நீயொற்று மொழியவாச்சோ சண்டாள யூதர்களால் மரித்த யேசு
வருமரிய பரனோ நீ வீணாய் நின்று வளுத்தாதே அகன்றிடுவாய் வசனித்தேனே.

பிலேத்து – வசனம்
நீசனே எங்கள் குருமோசேசு வேதத்தைத் தப்பறையென்று நீ போதிக்கும் ஞாயம் எதென்று சொல்லுவாயாக.

சந்தியோகு – கவி
***இராகம் :*** *சங்கராபரணம்*

சொல்லுவேன் கேளாய் யிப்போ சுகிர்தவான் மோசேசீட்டும்
நல்மறை பழுததல்ல நாதனார் சிலதைத் தள்ளி
இவ்வுலகினில் வணங்க இயற்றிய மறையே உண்மை
நல்மகிழ்வாகப் போற்றில் நற்கெதி பெறுகுவீரே.

சந்தியோகு – வசனம்
சகோதரனே மோசேசின் பிரமாணம் பழுதல்ல அதில் சிலதை மாற்றி அருளியவேதம் மெய்மறை அதைக்கொண்டு ஒழுகுவாயாக.

சந்தியோகுவும் பிலேத்தும் தரு (உரையாடல்)

***இராகம் :*** *சுருட்டி* ***தாளம் :*** *மிஸ்ரபாபு*

பிலே :
ஏனுனக்கிதடா மடையா திடமாய்மொழி தானுரைத்திடவோ
விடடா அது வீண்போதம் யேசு அம்பரநாதனோ பெரு
நீசனென்றுமே யூதரல்லறை இட்ட அவனொரு கத்தனோ
மறை விட்டு நீ அகல்வாயே.

சந் :
ஞானமற்றவனே எதிராய் விழல்மொழி நீயுரைத்திடவோ
பரனாரவரேசு எம்பரனருள் அம்பரநாதனால் அருள் தம்பிரானையே நம்பி நீருமே
என்றுமென்றுமே தென்றனம் புரி நன்றொடுய்திடுவாயே.

பிலே :
வேதபோதகனே வெறுவாய்மொழியோத நீதமதோ பகர்வாய்
இதுபோதெங்கள் தேவர்செப்பிடுமேவல் செய்குவார் பூவுள்ளோர்களை ரெட்சை செய்யவோ
யேசு அவனொரு நீசமனுசனாலாகுமோ பகர்வாயே.

சந் :

நாதரிங்கவரே நரக எரி கூளியுன் தேவரிண்டறியே
வெறிபோயிது வீண்மொழி நாவினாலிது போதுரைப்பது பேதமானது நீ தவிர்த்திடு
நம்பியேசுவைத்தம்பியுன் கெதி அம்பரமருள் வாரே.

பிலே :

நிந்தனையுறவே அவரே புரி நொந்தரைதனையே
தன்னால்விலத்தேலா நீதனாரொரு போதனோ அருள்வேதனோ இதுபோல் மடைத்தனம்
எங்குமுன்றுநீ அம்பரனென இங்கு சொல்லிடலாமோ.

சந் :

எந்தையம்பரனே எங்கள் பாவஇடர் தொந்தமற்றிடவே
மனுவாய்யிங்கு வந்துஇடரதுற்றனர் திடமதுற்று நாம்
அடைய மோட்ச்சமே கடவுளாகிய
ஏது அங்கவர் மாசில்லாப் பரயோகனே பணிவாயே.

வசனம்

சகோதரனே பசாசுகளால் யாதொரு சகாயமுமில்லை. மெய் மார்க்கமாகிய
கிறிஸ்துமறையைக் கைக்கொண்டு ழுகுவீர்களாக.

பிலேத்து - கொச்சகம்

குருட்டடுக்கும் வஞ்சநெஞ்சக் கூழிகளைத் தெய்வமென்று
திருட்டடுக்கா தேயினிநான் சேர்ந்துதொழமாட்டேனே
மருட்டடுக்கா மாமுனியே வளர் ஞானஸ்நானமது
பொருட்டடுகா தெனக்கீந்துன் புகழ்மறையில் சேர்ப்பீரே.

வசனம்

குருவே! நீர் போதிக்கும் சமயம் மெய்மார்க்கமென்று ஏற்றுக் கொண்டேன். அடியேனுக்கு
ஞானஸ்நானம் தந்து உமது மறையில் சேர்த்துக்கொள்வீராக.

சந்தியோகு கொச்சகம்

சீர்செறி பிதாச்சுதன் இஸ்பிரீத்துவின் நாமத்தாலே
நேர்செறி ஞானஸ்நானம் நிட்ச்சயமாகயீந்தேன்
பேரது என்றும் புகழப் பிரான்சிஸ்க் கென்றே தரித்தேன்
ஏர்பெறப்பரன் பதத்தை நீ பணிந்து உய்வாயே.

வசனம்

சகோதரனே! பிதாச்சுதன் இஸ்பிரீத்துசாந்து நாமத்தாலே ஞானஸ்நானம் தந்து
பிரான்சிஸ்கென்று நாமம் சூட்டினேன். பத்துக்கற்பனைகளை அனுசரித்து மோட்சமடையப்
பிரயாசப்படுவாயாக.

பிலேத்து - மங்களம்

***இராகம் :*** *மோகனம்* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

விட்டுப் பிரியாதே மனமே நீ விட்டுப்பிரியாதே
விட்டுப்பிரியாதே துட்டப்பசாசு விழுத்தியெமைக்
கட்டளுத்து கயிற்றினை விட்டு ஞானஸ்த்தான
ஏணியைத் தந்து விண்காணிக்கு வாவென்ற மாணிக்கச் சோதியை

அட்டெட்டு முட்டை அரிசி ஆடு பொலி
ஆம்படிதா வென்ற

வீம்பான கூழியை கிட்ட அடுக்காதே தொட்டாலும் பாவமே
நட்டாரே ஞானத்தின் சிட்டப்பயிர் நெஞ்சில்

கண்கட்டி வித்தை செகசால வித்தை
காசுவாங்கும் வித்தை மோசமாக அத்தை
என்பட்டுச் சிக்கியே கண்வைத்துத் தம்பிரான்
இப்போது நீக்கினார் எப்போதும் போற்றியே.

கந்தப்பன்னந்தப்பன் தந்திரமாடனும்
காத்தானும் மூத்தானும் ஊத்தைக்குடியனும்
வெந்தனற் பேய்களே மந்திர தந்திர
மெல்லாம் விளல்நீக்கி வல்லோன் பதமென்றும்

பஞ்சம்படை இடர் துன்பங்கள் நீங்கியே
பாரில் நன்றாய்ச் செழிப்புற்று வாழ்கவே
ஐந்து காயந்துணை நெஞ்சத் திருத்தியே
அஞ்சல்புரிகுவேன் சஞ்சலமோடுமே.

## காட்சி – 19

***பாத்திரங்கள் :*** *யூதர் 1, 2*
**இடம்** *:* தெரு

யூதர் - தரு (உரையாடல்)
***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

1ஆம் :
வாரும் வாரும் தோழா எரிமோசின் சீடனை யக்கோ வந்த சீசன்
தன்மறையிற் சொந்தமாய்ச் சேர்த்தான்
2ஆம் :
பாரும் பாரும் மாயப்பொடிதூவும் வல்லோனே இந்தப்பாரிலவன்
தன்னை விட்டால்லாகாது தோழா
1ஆம் :
ஏதுசெய்வோம் கோபமிகவாகவெழுதே அத்தை எண்ண
எண்ண என் மனமும் புண்ணாய் நோகுதே.
2ஆம் :
பேதை மரியாளிடத்திலே பிறந்தவன் ஒருவேதமிங்கு
தங்கிடவும் மாகுமோ தோழா
1ஆம் :
மங்கிடாத துங்கவானாம் சங்கைப்பிலேத்தை அவள்
மாட்டிட மனத்துணிவோ நாட்டிலே வந்து
2ஆம் :
எங்களின் குரு எரிமோ செண்டவர் முன்பு நாங்கள்
ஏகியிப்போ யிக்கதையைக் கூறுவோம் தோழா.

## காட்சி – 20

***பாத்திரங்கள் : யூதர் 1, 2***
***இடம் : எரிமோஸ் வீடு***

1ஆம் யூதர் - **கொச்சகம்**

என்னென்று சொல்லிடுவோம் எங்கள்ளெரிமோஸ்த் துரையே
உன்னுடைய நற்சீடன் உவப்புறு பிலேத்தவனை
இன்னேரம் யக்கோவெனுமவனும் மெத்தாகத்தன்
மறையிலே சேர்த்தான் தான் இதை அறிவீரே.

வசனம்

துரையே உமது சீஷனாகிய பிலேத்தை யக்கோவென்பவன் தனது மறையிற் சேர்த்தான் அறிவீராக.

2ஆம் வரவு எரிமோசு – ஆசிரியம்

***இராகம் : அடானா***

ஓராளியாதவன் உருண்டோடி வருகினும் உலகமெங்குமுள்ள
ஒளியுற்ற வழிபெற்ற நவரத்தினமுடிபெற்ற உரமிக்க துரைமக்களில்
பேராளியானவர்கள் எந்நாளுமென்னுடைய பேர் சொல்ல வாய்கூசுவார்
பிரதானமோ அவன் கெறுவானதோ நற்பிலேத் தெனது சீஷனவனை
காராளி சுற்றுலக மீதினிலணாப்பியே கசடவனுடைய மறையினைக்
கைக்கொள்ளிடும் படிக்கப்படிச்செய்யவும் காலமிது வந்துபோச்சோ
நீராளி சுவறினும்/வரை தரைகள் அசையினும் நீசனவனோடு கிட்டி
நிஸ்டூரவாதை செய்திப்பதியை விட்டுடன் சட்டெனத்துரத்திடுவேனே.

சிந்து

***இராகம் : பைரவி*** ***தாளம் : ஏகம்***

1.
நீடுற்ற உலகமடங்கலும் பேர்பெற்ற மந்திரவாதி யென்
சீருற்ற சீஷனையங்கவன் வேதத்தில்லெத்தியே சேர்த்திட
சிந்தைத் துணிவதோ அந்தக் கபடனை
இந்தக் கணமதில் இடரது புரிவேன்.

2.
கோடுற்றே வளர்மதகரிமிசை யேறுற்றே வருமரசர் களுமென்
தாளுற்றே அடியது பரவிடு தன்மை யறியானோ
தலமத்திய பலமதில் மெத்தியவனோ
உலகத்தவனை நான் ஒரு நொடி கலைப்பேன்!

3.
எட்டெட்டுத்திசையுறு மந்திர வித்தைக்கு வல்லவர் யாவரும்
கிட்டெட்ட என் பெயர் கூறினும ட்டெட்டி பின்னிடுவாரவர்
கெறுவோ அவனென தருமாசீஷனை மறைமீதிருத்திட ஆணவமாச்சோ

4.
விட்டிப்போ கூளிகள் தம்மையும் சட்டென என்னிட மீதினில்
இட்டிட மடைபெலியானது திட்டமாய்ப் பரவியே தேவதை

இப்போ முன்விரையொப்பாய் வந்திட
நட்பாய் கனிவகை நானுமே படைப்பேன்.

### எரிமோசு - சிந்து

***இராகம் : பைரவி***

பத்திரமாகவே சட்டெனவே மடையேர்க்கவே நல்ல
சுட்ட கருவாடும் புட்டுமிப்போது படைக்கிறேன்
ஆவலித்தேவரும் கள்ளப்பசாசுகள் சூழவே கரும்
சேவலும் கோழியும் சோடாக இப்போ படைக்கிறேன்

தொட்டணி காழியும் மொட்டையனும் மடையேர்க்கவே கோழி
முட்டை வடை யொன்று திட்டமதாகப் படைக்கிறேன்
காடேறிவைரவன் மாடேறியும் மடையேர்க்கவே பரும்
ஆட்டுக்கிடாயொன்று சீக்கிரமாகப் படைக்கிறேன்

வலுமிக்க காழியும் நலமிக்கவாய் மடையேர்க்கவே பரும்
எலுமிச்சம் பழமெட்டு பலமிக்கவாகப் படைக்கிறேன்
சத்திசாமுண்டியும் சுற்றிவர மடைவைத்துமே மாற்று
வெத்திலைக்கட்டுமே திட்டமதாகப் படைக்கிறேன்.

பற்பலப் பூதப் பசாசுகளும் மடையேர்க்கவே நல்ல
கற்பூரம் சாம்பிறாணி இப்போது நானும் கொழுத்தினேன்.

### எரிமோசு மடை போடுதல்

***இராகம் : புன்னாகரவராளி*** ***தாளம் : ஆதி திஸ்ரநடை***

மடையை ஒப்புக்கொள்ள ஓடிஓடி வாரும் வாருமிப்போ
வல்லபனே வெல்லுசடை துல்லிப சங்கரனெ

குடைவயிறை உடையவனே வடையவலும் படைத்தேன்
சடசடவென ஓடிவாரும் தாமதித்திடாமல்

நாறு மூஞ்சி விரித்தசடை சூல வயிரவனே
நடத காளி நிடத கூளி சடசடென்று வாரும்

ஆறுமுழக்கீறு பல்லா மாறு முள்ளு வடுகா
ஆட்டுக்கிடாய் படைத்துவிட்டேன் ஓட்டமாக வாவா

இரங்கிடாத கருங்கரியா குரங்கு மூஞ்சியானே
இரண்டு முட்டிக் கள்ளிருக்குஇந்தா ஓடிவாடா.

**பேய்கள் வரவு – கவி**

***இராகம் : சங்கராபரணம்***

அட்டமந்திரத்தைக்கற்ற அந்தெரிமோசு தானும்
இட்டிட மடைக்கழைக்க எரிநரகத்திலாழ்ந்த
மொட்டைகள் சட்டைகள் நாறும் மூஞ்சிகள் சுளித்துக் கொண்டு
சட்டெனப் பேய்கள்தானும் சபைதனில் தோற்றினாரே.

**பேய்கள் - தரு**
**(உரையாடல்)**

***மெட்டு : பண்டரும் தவமண்டலேசுவரன்***
***இராகம் : கேதாரம்*** ***தாளம் : ஆதி திஸ்ரநடை***

1ஆம் :
நாமே கூளி நாமே மூளி நமக்குமெஞ்சிய தேவனார்
பூமிதன்னைப் புரட்டி மருட்டும்
பொல்லா அலகை நாங்களே.

2ஆம்:
குண்டி பெருத்து வண்டி சிறுத்துக் குயவன் வனையும் சாடிபோல்
விண்டெழுமெரி நரகிலாழ்ந்த வெறிப்
பசாசுகள் நாங்களே.

1ஆம் :
நெடிய சடையும் கரியமேனியும் நீண்டு தூங்கிய மூக்குமாய்
கொடிய பாதகம் படியிற் செய்யும்
குறளிப்பேய்கள் நாங்களே.

2ஆம் :
கறுத்த வால்களும் சிறுத்த கால்களும் பெருத்து உரத்த ரோமமாய்
முறுக்குச்சடையும் பறக்கச்
சிறகும் முழிப்பசாசுகள் நாங்களே.

1ஆம் :
தேம்பல் வண்டியும் சூம்பல்க் குண்டியும் தேரைக்
கால்களும் எடுப்போம் நாம்
பாம்புப்படத்தை எடுத்த லூசி அதிபன் குட்டிகள் நாங்களே

2ஆம் :
ஆம்படி பெரும் வேள்வி போட்டு அழைத்தான் எரிமோஸ் எங்களை
வீம்புடனவனிடத்தில் நாங்கள் மேவியதென அறிகுவோம்.

**2ஆம் பேய் - கவி**
ஆரெடா எம்மையிங்கு அழைத்திடும் மெரிமோசே நீ
ஆரெடா என்ன செய்தி அறிவிப்பாய் யிந்தநேரம்
ஆரெடா முறிப்போம் சென்று அவர்களைச் சணத்திற்குள்ளாய்
ஆரெடா தடைசெய்யாமல் அறிவிப்பாய் சுறுக்குத்தானே.

**வசனம்**
அடேய் எரிமோஸ் எங்களை அழைத்த செய்தி இன்னதென்று சொல்லுவாயாக.

எரிமோசு கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

எனதுடைய் தேவராக என்றுமாசரித்து வந்தேன்
மனமிடுக்காய் யெதித்த மாதவன் யக்கோ தன்னைச்
சினமுடன் நீங்கள் சென்று சீக்கிரம் பிலேத்தினோடுத்
தினமதிற் பிடித்துக் கட்டிச் சீக்கிரம் வருகுவீரே.

**வசனம்**

கேளுங்கள் தேவதைகளே! யக்கோவுடன் எனது சீஷன் பிலேத்துவையும் கட்டியெனது சமூகத்தில் கொண்டு வருவீர்களாக.

**பேய்கள் வசனம்**

அப்படியே செய்கிறோம் அறிவீராக.

## காட்சி – 21

***பாத்திரங்கள் :*** *பேய்கள் 1, 2, சம்மனசு, சந்தியோகு*
***இடம் :*** தெரு

பேய்கள் - தரு (உரையாடல்)

***இராகம் :*** *சிந்துபைரவி* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

1ஆம் :
எட்டி நடந்திப்பொழுது சட்டெனவே தொடர்ந்து
ஏகிடுவோம் தீவிரமாய் தாமதித்திடாமல்
2ஆம் :
அட்டியென்ன ஆலடியில் வேள்வியொன்று விடிய
அதற்குமுந்தி நடந்திடுவோம் சுறுக்குடனே வாரும்
1ஆம் :
மொட்டையனும் கட்டையனும் எட்டிமுன்னே போங்கோ
சட்டெனவே கட்டிக்கொண்டு சடுதியுடன் வருவோம்
2ஆம் :
எத்தனை கோழிகளாடு பலி நமக்குத் தந்தான்
எரிமோசு அவன் பெரிய குருவல்லவோ வாரும்
1ஆம் :
விட்டுவிட லாகிடுமோ திட்டமுடனோடி
விரைந்தவனின் ஏவல் தன்னை பரிந்துநாங்கள் புரிவோம்
2ஆம் :
கட்டிக்கொண்டு யக்கோவோடு பிலேத்து அவன் தன்னைக்
கடிதுடனே எரிமோசனிடமதிலே வருவோம்.

**சம்மனசு வரவு - கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

மந்திரவானெரிமோசவனுமன்று மடைபெலிகளிட்டுடனேமகிழ்வதாக
தந்தரக் கூழிகள் தனையனுப்பும்வேளை சட்டெனவே அலகைளங் கேகும்போது

அந்தரத்தில்லிருந்து எங்கள் ஆதிநாதன் னனுப்புகின்ற சம்மனசோர் கூட்டந்தானும்
வந்து வஞ்சக்கூழியெல்லாம் நடுங்கியஞ்ச வதைத்திட்டார் பதைபதைக்க உதைத்திட்டாரே.

**சம்மனசும் பேய்களும் - தரு**

**(உரையாடல்)**

**இராகம் :** கேதாரம் **தாளம் :** ஆதி

**சம் :**

ஆரெடா பொல்லாத வஞ்சக் கூளிகாளிப்போ உள்ள
அகந்தைகொண்டு இங்குவர மிகுந்ததுணிவோ
ஏதுகெறு யக்கோமுனிதன்னைக் கட்டவோ வர
ஏலிடுமோ பார் பாரிப்போ வீழ உதைப்போம்

**1ஆம் :**

அடிக்கவேண்டாம் இடிக்கவேண்டாம் ஐயோ தூதரே நாங்கள்
அகலுகிறோம் விட்டுவிடும் ஆஞ்சுமார்களே.

**சம் :**

பல்லினை யொடிப்போமிப்போ பொல்லா வெறிகாள்
வரப்பயமில்லையோ சொல்லு சொல்லு அல்லால் மண்ணைகாள்

**2ஆம் :**

வல்லர்களே வானோர்களே உம்மைக் கும்பிட்டோம் நாங்கள்
வந்தவழி மீண்டு போறோம் அந்தோ விடுவீர்

**சம் :**

அத்தனைக்கும் தத்துவமோ குத்துவோம் வேலால் யக்கோ
ஆதிபன்முன் வந்திடத் துணிவுமாச்சுதோ

**1ஆம் :**

உத்தமரே தூதர்களே சற்றே நீங்களும் எம்மை
உதைக்க வேண்டாம் உங்கள் சொல்லைக் கேட்போம் விட்டிடும்

**சம் :**

இத்தினத்தில் யக்கோமுன்போய்யங்கவர் சொல்லும் சொல்லை
யேற்று நடப்பீருமக்கு சாற்றினோமிப்போ.

**சம்மனசு வசனம்**

கூழிகளே யக்கோவு அப்போஸ்தலுமுன்போய் அவர் சொல்லுவதைக் கேட்டு நடப்பீர்களாக.

**கொச்சகம்**

**1ஆம் பேய்**

அய்யோ குருவே எரிமோசவனும் உம்மை
வெய்யசினமோடு கட்டிவர விடுக்கச்செல்வேளை
துய்ய வானோரடித்துத் தொந்தரைப்படுத்தி உந்தன்
செய்யமொழி கேட்க விட்டார் திரும்பியிங்கு வந்தோமே.

**வசனம்**

ஐயோ குருவே எரிமோசு உம்மைக்கட்டி வரும்படி எங்களை விடுக்க நாங்கள் வரும் வழியில் சம்மனசு அடித்து உமது சொல்லைக் கேட்கும்படி விட்டார். எங்களுக்கு விடை தந்தருளவேணும் சுவாமி.

சந்தியோகு – கவி

***இராகம் : சங்கராபரணம்***

தந்தரக் கூளிகாள் நான் சாற்றிடும் வார்த்தை கேளும்
கிந்த நேரத்தில் ஏகியே நீங்கள் எரிமோசென்னும்
அந்த வீணனையே கட்டி அதிவிரைவாகஎன்முன்
வந்திடுவீர் இப்பொழுது வழுத்தினேன் அறியத்தானே.

வசனம்

கூழிகளே நீங்கள் சென்று எரிமோசைக்கட்டி எனதுமுன் கொண்டு வருவீர்களாக.

## காட்சி – 22

***பாத்திரங்கள் :*** பேய்கள்
***இடம் :*** தெரு

பேய்கள் - தரு
(உரையாடல்)

***இராகம் : சிந்துபைரவி*** ***தாளம் :*** ஆதி திஸ்ரநடை

1ஆம் :

செல்லிடுவோம் மிப்பொழுது தீவிரமாய் நாமே
சினத்த னெரிமோசவனை இழுத்துக்கொண்டு வரவே

2ஆம் :

நல்லகாலம் தப்பிவந்தோம் வானவரால் நாங்கள்
நடுநடுங்குதே நினைக்கத் திடுதிடெனச் செல்வோம்.

1ஆம் :

பொல்லாதாள் எரிமோசு சொல்லையல்லோ கேட்டு
பொறியிலகப்பட்டெலிபோல் திறுதிறென்று முழிந்தோம்

2ஆம் :

பல்லைப்பல்லையிளித்தோம் வானவரும் முதைய
பழியதெல்லாம் அவனிடத்தில் விரைவுடன் போய்யெடுப்போம்

1ஆம் :

நல்லவனாமவனூரில் நாட்டுமந்திரவித்தை
நாங்கள் துணை செய்யாவிடிற் பாங்குடனே அமரும்

2ஆம் :

வல்லவராம் யக்கோவின் னுரைப்படியே சென்று
அரிந்தவனைக்கட்டிக்கொண்டு விரைந்து யிப்போ வருவோம்.

## காட்சி – 23

***பாத்திரங்கள் :*** *பேய்கள் 1, 2, எரிமோஸ், சந்தியோகு*
***இடம் :*** *எரிமோஸ் வீடு*

**2ஆம் பேய் - கவி**
***இராகம் :*** *சங்கராபரணம்*

துட்டனே எரிமோசென்னும் தூறனே உன்னை யக்கோ
கட்டியே கொண்டுதன்முன் கடிதினில் வரவே சொன்னார்
திட்டமாய் யவர்மொழிக்குச் சீக்கிரம் பின்னிடாமல்
சட்டென நடப்பாய் நாங்கள் சாற்றியமொழிக்குத்தானே.

**எரிமோஸ் சிந்து**
***இராகம் :*** *சிந்துபைரவி* ***தாளம் :*** *ஆதி*

என்னசெய்குவேன் ஏதுநான் செய்குவேன்
எந்தையா பிர காமவர் தந்தையே
வன்னிபோல்க்கூழி கட்டிக் கொண்டேகுதே
வந்தெனையாழ்வாயே.

பஞ்சுபோலவே நெஞ்சமதாகி
பதைக்கிறேன் பாவி யெனக்கு யிவ்வேளை வந்
தஞ்சமே வந்து ஆளுவாய் யேக
தற்பரமெய்ப் பொருளே

மந்திரத்திலே பேர்பெற்று நானே
மாநி லத்தினில் வாழ்ந்திருந்தேனே
பந்து போலவே முழியவோ சோகுகள்
பற்றிக்கொண்டே கிறதே

ஐயையோ என்ன செய்குவேன் நெஞ்சம்
அடிக்குதே மிகத் துடிக்குதே தஞ்சம்
உய்யவே எனக்கருள் செய்வாய் யேசு
ஒப்பற்ற மெய்ப்பொருளே.

**2ஆம் பேய் - கவி**
***இராகம் :*** *சங்கராபரணம்*

அய்யனே யக்கோவே நீர் அருளிய மொழிப் படிக்கு
இப்புவிதன்னிலேகி இடறனாம் எரிமோசென்னும்
தப்பிலியிவனைக் கட்டிச் சடுதியாய் வந்துவிட்டோம்
செப்புமுன் விடை எமக்குச் செல்லிட நாங்கள்தானே.

**வசனம்**

குருவே உமது சொற்படி எரிமோசைக்கட்டி இழுத்து வந்தோம் அறிவீராக.

**சந்தியோகு – கவி**

***இராகம் : சங்கராபரணம்***

வானிளந் தெரிதி வீழ்ந்த வஞ்சக் கூழிகளே நீங்கள்
ஈனம் செய்திடவே வேண்டாம் எரிமோசுயிவனுக்கிப்போ
மானிலந்தனிலென் சொல்லை மதித்துமே விரைவதாக
தானிப்போ விட்டுச் செல்வீர் சட்டெனஉரை செய்தேனே.

**வசனம்**

கூழிகளே இவனைவிட்டு அப்பால் செல்லுவீராக.

**எரிமோசு இன்னிசை**

புன்மையில்லாப் போதகரே புவியிலடியேனுமது
தன்மையறியாது செய்த தவறுகளையே பொறுத்து
இன்னேரம் மெய்த்தீட்ச்சை இனிதீய்ந்துன் தாசனென
என்னையுமாட் கொண்டருளும் இருசரணம் போற்றிசெய்தேன்.

**வசனம்**

குருவே அடியேனுமது தன்மையை அறியாமல் செய்த குற்றங்களைப் பொறுத்து எனக்கு ஞானஸ்நானம் தந்து உமது சமயத்திற் சேர்ப்பீராக.

**சந்தியோகு – கொச்சகம்**

பாவம் புரியாதே பார்மனுவதாகிய பரம தேவன்
பத்துக் கற்பனைகள் தேர்ந்து கற்றுக்கொண்டே நடக்க பூபன்
பிதாச் சுதன் இஸ்பிரீத்துவின் நாமத்தாலே
நாமமிக்கேலெனஸ்நானமளித்தேன் அறிவாயே.

**வசனம்**

சகோதரனே பிதாச்சுதன் இஸ்ப்பிரீத்து சாந்துவின் நாமத்தாலே ஞானஸ்நானம் தந்து நீ அறியாமல் அனுசரித்த பசாசுகளை எல்லாம் குத்தி நரகத்தில் வீழ்த்தும் வல்லபனாகிய மிக்கேலென்பவருடைய நாமத்தைச் சூட்டினேன். பத்துக் கற்பனைகளை அனுசரித்து மோட்ச்சமடையப் பிரயாசப்படுவாயாக.

## காட்சி – 24

***பாத்திரம் :*** *சந்தியோகு*
***இடம் :*** தெரு

சந்தியோகுமையோர் முதலாம் வரவு

**மங்கலம்**

பொன்மலியம்புவி மதிவிண்யாவும் தரு
பரனின் பூம்பதும பாதமலர் துதித்து
சொன்மலி யின்னகர் மெய்மறை கதித்து
துலங்கயென்றும் துணைபுரி அம்பரி யெனக்கன் அருளே.

மன்னவனே ரோதையின் தீதகற்றி மரிமகவின்
மானவ மெங் கெங் கெனுமே பயிற்றி
நன்னலஞ்சேர்வரிமறை யகற்றி புவியிதனில்
நல்வளம் பொங்கிட அருள்மா மரியே.

செந்நெல் விளைந்தெனது நகர் செழித்துச் சிறுமையற்று
செஞ்சோல் மனைமாது மனம்களித்து சொர்ன்ன
மலிந்தே தனையர் தழைத்துச் சுகமுறச்செய்
சுத்தசந்தி யோகெனு மற்புதனே.

முன்னமிரு கள்வர்பவம் பொறுத்தீர்
முழுநரகில் மூழ்கிய துற் கூழிகளை வெறுத்தீர்
இன்னிலத்திலெமது கசடறுத்து இவ்வூர்
செழிக்க இன்றுமென்றுமருள் சொரியம்பரனே.

கன்னல் கமுகரம் பைரசம் தாங்கும்
கனகசெல்வக் கஞ்சமலர் மாதென்கம் தேங்கும்
துன்னு முப்பால் பெருகி நிதியோங்கும் என
செம்பொற் தூயமணி மாளிகைக்கேகிடுவேன்.

## காட்சி – 25

***பாத்திரங்கள்** : எரிமோஸ்*
***இடம்** : தெரு*

எரிமோசு இரண்டாம் வரவு
மங்கலம்

***இராகம்** : சிந்துபைரவி* ***தாளம்** : சதுஸ்ரஏகம் திஸ்ரநடை*

வந்தது மாணிக்கம் சந்தோஷம் மாதிக்கம் மனமே அஞ்சாதே
சொன்னேன் சொன்னேன் மனமேயஞ்சாதே
தந்தரப்பேய் மாய்கை நீக்கும் மருந்திது
தலத்தின் முத்திக் கேற்ற ஞான மருந்திது
எந்தனாளும் மனச்சந்தோசம் கொள்ளுவாய்
சுந்தரவான் யக்கோவென்றார் நன்மையால்
வாடும் பயிர்க்கு மழை பெய்தவாறுபோல்
மக்களில்லாத வற்குற்ற முளைகள் போல்
வீடொன்று பேரின்பவாழ் வொன்று கேடயமாய்
யொண்டிலேயிது போதுந்தன் கையிலே
குன்றாத பேரின்ப நல்வாழ்வு நீடிக்கொடிபோல்த்
தழைத்து மிடியிடரின்றியே எண்டென்றம்
சந்தியோ குமையோர் துணையால் யீன்று தனையரைச்
சான்றாக வாழ்கவே.

## காட்சி – 26

பாத்திரங்கள் : யூதர் 1,2
இடம் : தெரு

யூதர்கள் - தரு

***இராகம் : பிலஹரி*** ***தாளம் : ஆதி***

1ஆம் :

என்னனாம் செய்குவோம் தோழனே எரி
மோசுவை யக்கோவுங் கேளுமே
தன்னுடைய வேதத்திற் சேர்த்தனள் மனம்
தான் சினமாகுதிப்போதிலே

2ஆம் :

மண்ணிலிது காலமட்டுமே காணா
நன்நவம் போலேயிருக்குதே
திண்ணமாய் விட்டால் லவனையும் யேசு
தன்மறையெங்கும் பலுகுமே.

1ஆம் :

தீட்டிய வித்தையில் வல்லவன் யிந்த
நாட்டில்லிவனுக்குத் தோற்றது
தாட்டிமையாக நினைக்கவே மனம்
தான் சினமாகுது தோழனே.

2ஆம் :

காட்டானைக் கஞ்சியே சிங்குமம் பயந்
தோட்ட மெடுக்குமோ சொல்லுவாய்
மேட்டிமையாயவன் செய்தியை மன்னன்
வாட்ட வழிவகை செய்குவோம்.

## காட்சி – 27

***பாத்திரங்கள் :*** *யூதர் 1, 2, எரிமோஸ்*
***இடம் :*** *எரிமோஸ் வீடு*

யூதன் - கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

இறைவனே இறைவர்க்கோவே எரிமோசுப் பிரபு தன்னை
குறையில்லா யக்கோவென்போன் குவலயத் தேசுதந்த
மறையினிற் சேர்த்துயின்று அம்மறை போதிக்கிறான்
கறையதோ எங்கள்வேதம் காவலா அறிகுவீரே.

வசனம்

அரசனே யக்கோவெண்டொருவன் வந்து கிறிஸ்து சமயத்தைப் போதித்து எரிமோசென்னும் மந்திரவாதியையும் தனது சமயத்திற் சேர்த்தான் அறிந்து கொள்வீராக.

## ஏரோது இரண்டாம் வரவு

### ஆசிரியம்

***இராகம் : அடானா***

கங்கங்கரும் பேய் கழுகோடு நரிஅரிகள் கதறியே பதறிடாதோ
கத்திரமீதினில் எடுக்கிலுவை சுற்றியே கத்திடும் வாய்கள் பொத்தும்
வங்கங்கலிங்கமொடு எங்குள்ள மன்னவர்கள் வந்துதிறைதந்து போவார்
மதியாது என்னகர்ப்பதிமீது ஏசுமறை வழுத்திட மனத்துணிவதோ
இங்கங்கு குருதியீனங்கங்கங்கு வீழவே பங்கங்கள் புரிகிடேனோ
எரிமோசு தன்னையும் பரிவோடணாப்பும் எத்தனாம் அந்த யக்கோ
எங்கெங்கு முள்ளவர்கள் அங்கங்கு அச்சமதெடுத்தே கலங்கிவாட
ஈனவனுடல் கண்டதுண்டமாய் வீழவே இப்போது வீசுவேனே!

தரு

***இராகம் : கீரவாணி*** ***தாளம் : சதுஸ்ரஏகம்***

கெட்டிகெட்டியிந்தக்கெலிதான் புதுவேதமெண்
டெட்டி வந்து போதிக்கவேதான்
கெட்டிசிங்கக்குட்டியை நாய்க்குட்டி வந்ததட்டிடுமோ
வெட்டியவன் சென்னியை உருட்டுவேன் தேங்காயதுபோல்

மச்சமது தங்குகுதம் கொச்சிவடதம் நிடதம்,
குச்சலர் மருடர் தேசளச் செகத்து மன்னர்களும்,
திறை தந்து பணியாரோ எனதுபதம் சிரசிலணியாரோ,
அடடா கெட்டி வந்து புதுவேதமறை எந்தானுர்க்குள்ளங்கவனும்
சிந்தையிற் பயமேயின்றி நிந்தனையாய்ப் போதுவிக்க

அன்றுதொட்டு யின்றுமட்டும் மண்டலத்தில் வந்தொருவன்
குன்றாதெங்கள் மோசேசென்னும் நண்டுறும் தந்தை வழியாய்க்
கொடுத்திடும் பழவேதத்தை வீணெண்டுமே பழித்துமே புதுவேதத்தைப் பரப்புதற்கு
மெத்தவும் மகத்துவமோ இத்தரையிலேயவனை
எத்திசையுள் ளோருமஞ்ச சக்கரத்திருத்திக் கொல்வேன்.

ராயன் கவி

***இராகம் : சங்கராபரணம்***

மனமதிற் கவலைதானும் வைத்திடவேண்டாம் நீங்கள்
எனது நெஞ்சதனிற் கோபம் மெழுகுதே எரிமோஸ்தன்னைத்
தனதரும் மறையிற் சேர்த்த சத்துரு யக்கோவுக்கு
களவிதவாதை செய்வேன் கருத்துரைத்தேகுவீரே.

வசனம்

கேளும் எபிரேயர்களே எரிமோசைக் கிறிஸ்து மறையிற் சேர்த்த யக்கோவென்பவனுக்கு மிகுந்த ஆக்கினை செய்வேன் மனக்கவலையின்றிச் செல்வீராக.

## காட்சி – 28

***பாத்திரங்கள் :*** *யூதர் 1, 2*
**இடம் :** தெரு

யூதர் - தரு
**இராகம் :** ஹரிகாம்போதி **தாளம் :** ஆதி

1ஆம் :
சிக்கிக்கொள்ளுவான் தோழா யக்கோவரசனிடம்
தீட்டிவிட்டோம் வெகுமூட்டாகக் தைகள்
2ஆம் :
அப்பனெமக்கு மோசேஸ் அவரின் மறைமறுத்து
இப்போ புதுவேதத்தை இயற்றவும் துணிவோ
1ஆம் :
வந்த வரத்தவன் மந்திரவாதியை தந்தரமாய்
யெற்றித் தானணைத்திடவோ
2ஆம் :
சிந்தக் குருதிவேந்தன் திட்டமாய் வதை செய்வார்
இந்த மொழி நிசமே இருந்து நீர் பாரும்
1ஆம் :
மாதம்மூன்று மழை வருஷித்துச் செஞ்சாலி மேதிசுரபி மறி விளங்கியே ஓங்கி
கோதையான் னிருபால் குவலயம் பெருகி
வாழப் பரன்பதத்தை வணங்கியே செல்வோம்.

## காட்சி – 29

***பாத்திரங்கள் :*** *அரசன், மந்திரி*
***இடம் :*** *அரண்மனை*

ஏரோதையும் மந்திரியும் - தரு (உரை)
**இராகம் :** ஹிந்தோளம் **தாளம் :** மிஸ்ரபாபு

ஏரோ :
தந்தரத்தில் மிக்கமதி மந்திரத்தலைவனே கேள்
விந்தை சத்தியவேதமிங்கு வந்ததென்ன செய்வோம்
மந் :
விந்த அரவிந்த மலர்க்கந்த தொடையல்லணியும்
எந்தனதிபா உமது சிந்தையென்ன சொல்லும்
ஏரோ :
மேய்ப்பனாம் மொருவன்னேசு தாட்ச்சரணம் போற்றுதற்கு
விள்ளுகிறானாம் மொருவன் கள்ளமாக நின்று
மந்தி :
வாய்ப்புடன் முன்னேபிடுங்கிச் சாப்பிடததால்க் கிழங்கு
ஆப்பினால் கிழிக்கும் பனையானதறியீரோ

ஏரோ :

சுத்த மந்திரவித்தையிலே தத்துவனெரிமோசையும்
இத்தலத்தவன் மறையில் லுட்படுத்தினானாம்

மந்திரி :

நத்துதயிர் மீதினில் நெய்மத்தினால் எடுப்பதுபோல்
மெத்தவாதை செய்துடலை வெட்டியெறிவீரே.

மந்திரி – வசனம்

ராசாதிராசனே எங்கள் பேர்பெற்ற மந்திரவாதியை
அணாப்பித் தனது மறையிற் சேர்த்த எத்தனாகிய
யக்கோவென்பவனை உடனே மழுவரை அழைத்துப்
பிடித்துக் கொலை செய்ய வேண்டியது அறிந்து கொள்வீராக.

ஏரோது – கவி

***இராகம் : சங்கராபரணம்***

அழகொளிர் எனது வாசல் அண்டியே காத்து நிற்கும்
வளமெழு கட்டியகாறாய் வழுத்துமென் வார்த்தை கேளாய்
உளமகிழ் கொலியேசோடு உகப்புறு சமத்தனென்னும்
மழுவர்கள் இருவர் தம்மை வரும்படி அழைத்திடாயே.

வசனம்

கேளும் கட்டியனே எனது வாசல் மழுவர்களை அழைத்து வருவாயாக.

## காட்சி – 30

***பாத்திரங்கள் : கட்டியன்***
***இடம் :*** தெரு

ஏரோது கட்டியன் - தரு

***இராகம் :*** *எதுகுலகாம்போதி* ***தாளம் :*** ஆதி

வாசனறும் பூம்பொழில் சூழும் யூதேயா வாழும்
மன்னவனே ரோதரசன் சொன்னபடிக்கு
மாசுறுக்கி லேகினானுமே மழுவர் தம்மை
வந்திடும்படி அழைப்பேன் இந்தநேரமே

வீசனறும் வாசப்பொடியாள் ளெனக்கு மிஞ்சி
வீரியரும் ஆருமுண்டோ பாருலகிலே
ஏசஒருநாள் ளென் மனைவி பயந்து தூர
எட்டி எட்டிப் போய்க் கொடுக்கைக்கட்டி நிண்டேன்யான்

விட்ட ஒருநாளின் வேலைக்காய் செல்லும்போதொரு
பற்றைக்குள்ளிருந்த முயுயல்க் குட்டியைக்கண்டு
எட்டியெட்டி வந்த வழியாய்ப் பயந்தோடின
கெட்டிக்காறன் என்னோடெதிர் நிற்பாரோ ஆரும்

திட்டமாகயெங்கள் அரசன் ஏரோ தவரும் செப்பு
மொழியாப்படி சென் யிப்போது சென்று
சட்டென மழுவர் தம்மையே
அழைத்து எங்கள் தார்வேந்தன் சமூகமதில் தீவிரம் செல்வேன்.

**மழுவர் வரவு – கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

சல்லடமானது அரையிற்பூட்டி மெய்யிற் சட்டையிட்டுக் கரத்தில் மழுதானொண்டேந்தி
கல்லெனவே புடைத்தெழுந்த அகத்தினோடு கள்ளுவெட்டி மாறியுண்டு களித்துத்துள்ளி
எல்லவரும் கண்டு மதிமயங்கியேங்கு இருவிழியும் பொறிபறக்க யாளியொத்த
சொல்லரிய ஏரோதுவாசல்மேவும் சூரனிருபேர் மழுவர் தோற்றினாரே.

**சபை – தரு**

***இராகம் :*** கேதாரகௌளை ***தாளம் :*** ஆதி

சீராரும் புகழ் பேராருந்திறல் செம்மல்லேரோதவன்பணி
நேராய் செய்திடும் சூராட்கள் மழுவாள்ளாட்கள்
சபைதோற்றினார் கஞ்சாக்கள்ளவினும் சாராயமும்
மிஞ்சக்குடித்து மீறியே வஞ்சயாதகர் அஞ்சிக்கலங்கும்
வல்ல மழுவர் தோற்றினார்.

**மழுவர் - தரு**
**(உரையாடல்)**

***இராகம் :*** கேதாரகௌளை ***தாளம் :*** ஆதி

1ஆம் :
அரக்குடன்வெறி பெருக்கிலேகியம்
அவின்கஞ்சா நிதம் அருந்தியே தோழா
ஆவின்னிறைச்சி மேவியுண்டிடும்
சூரமழுவர் நாங்களே.

2ஆம் :
செருக்குறும் துட்டவீணர் தங்களைச்
சிதைத்து வதைத்து வாட்டுவோம் தோழா
சிங்கமும் திறமாமதுக்களும்
எங்களுக்கிணையாகுமோ தோழா

1ஆம் :
அரியெனப் பொருந்தரியலர் சிரம்
அறுத்துக் களத்தில் விழுத்துவோம் தோழா
அகத்துணிவுறும் சமத்தரெங்கள் போல்
லிகத்திலாருமுண்டோயென் தோழா

2ஆம் :
எரியெனத் தழல்விழி சிவந்திட
எதிர்த்த பேர்களை வாட்டுவோம் தோழா

இகத்தை ஒன்றாகச் சுருட்டியெறியும்
திறத்த மழுவர் நாங்களே.

1ஆம் :

அடுத்துக்கெடுத்த மனத்தரொடுங்கத்
திறத்த வல்லமை காட்டுவோம் நாங்கள்
அரியும் எமக்குளதிராய் வருமோ
அடல்செய் மழுவர் நாங்களே.

2ஆம் :

தடத்த புயத்த திடத்த நேரோது
சமூகமதனிலழைத்த செய்தியை
இடத்திலேகியே திடத்தோடெதென
இப்போதறிவோம் வாரும் தோழனே.

## காட்சி – 31

***பாத்திரங்கள் :*** *அரசன், மழு 1, 2*
***இடம் :*** *அரண்மனை*

முதலாம் மழுவர் - கவி
**இராகம்** - *சங்கராபரணம்*

கடகரட விகடதட தானையோடு காவலர்களுடளே திறத்துக் களரிமீதில்
புடபுயவீரர்கள் சிரசை அரிந்து வீழ்த்தும் புரவலர்கள் புரவலனே போற்றி போற்றி
மடமயிலார் கவரிகள் சாய்மரையிரட்ட வாசமோடு வீசுமுந்தன் கொலுமுன்பாகப்
படபடென எங்களையிங் கழைத்த செய்தி பகுத்தறியயின்னதென்று பகருவீரே.

வசனம்

சரணம் சரணம் ஏரோது மகாராசனே எங்களை அழைத்த கருமமின்னதென்று சொல்லுவீர்களாக.

ஏரோது – கவி
**இராகம்** : *சங்கராபரணம்*

சரணமென்று எனதடியைச் சிரசிற்சூடும் தக்கமதி மழுவர்களே சாற்றக்கேளும்
பொருணரஞ்சுமெனதரிய நாட்டில் வந்தோர் புதுமறையைப் போதுவித்து புகழே பெற்ற
எரிமோசையம்மறையிற் சேர்த்த பொல்லாஇடறனாம் யக்கோ வென்பவனை நீங்கள்
விரைவுடன் செண்டே தேடிப்பிடித்துக்கட்டி விளங்கு கொலுமுன் வருவீர் விளம்பினேனே.

வசனம்

கேளும் மழுவர்களே கிறிஸ்து மறையைப் போதுவிக்கும் யக்கோவென்பவனைத்
தேடிப்பிடித்துக் கட்டி இழுத்துவருவீராக.

மழுவர் வசனம்
அப்படியே செய்கிறேன் ராசனே.

## காட்சி – 32

***பாத்திரங்கள் :*** *மழுவர 1, 2*
**இடம் :** தெரு

மழுவர் - தரு (உரையாடல்)

***இராகம் :*** *ஹம்ஸத்வனி* ***தாளம் :*** *ஆதி*

1ஆம் :
துல்லிபதோழா துலங்குகண்ணாளா வல்ல மன்னன்
சொல்லதுபோல் செல்லுவோம் நீ வாடா.
2ஆம் :
எல்லவரும் போற்றும் வல்ல பழமறையை
கல்லை பண்ணுவோரை மன்னன் அல்லல் செய்யப் போறார்
1ஆம் :
ஆனையடிகண்டு பூனையைப்போல் பதுங்கி
அண்டை வீட்டுக்குள் ஒளித்த சண்டைவீரன் நானே.
2ஆம் :
மானனையென் மனையாள்ளவள் தானெனைப் பேசுகையில்
வந்தடிப்பாள்ளோவெனப் பயந்த வீரன் நானே
1ஆம் :
மின்னிமுழங்கிடநான் யென்னவோ வெண்டேங்கி
வீட்டுக்குள்ளோடிப்போய்க்கதவைப் பூட்டும் வீரன் நானே
2ஆம் :
கன்னல்வயல் சூழும் இன்னிலத்தையாளும் காவலன்
சொற்போற்ப்பிடித்துப் போவோமிப்போ வாரும்.

## காட்சி – 33

***பாத்திரங்கள் :*** *சந்தியோகு, மழுவர் 1. 2*
**இடம் :** தெரு

2ஆம் வரவு சந்தியோகுமையோர் வரவு

கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

இவ்வுலகாள் பாவவினையை அகற்ற ஏகபரன் சுதன் மரியாள் இடமதாக
வெல்லைமலைமீதில் வந்து மனுவதமாக வேதமருள் சத்திய வேதத்தை
நல்லநெறி போதனையாய் யூதேயாவில் நாட்டிவந்த யக்கோ அப்போஸ்தல் தானும்
சொல்லுதற்குப் போதகத்தை மகிழ்வதாக சொற்பெரு நற்சபையில் வந்து தோற்றினாரே.

சந்தியோகு – தரு
சீருலாவிய செகத்துறுவோரே திவ்விய ஆதிபரனொருவோரே
நேருலாவிய தீறீத்துவமொன்றாய் நிறைந்திடும் மொழியவரே
தாருலாவிய மனுவோரின் மவத்தைத் தயவுடன் வந்து மாற்ற ரெண்டாம்மாள்
யேருலாவிய கனி மரியாயின் இடமனுவாய் யுதித்தார்.

அவரருளிய சத்தியவேதமானதே முத்திக்கேறிடும் வழியாய்
பவமயல் வழிவிட்டந்த வேதப்படி நடப்பீர் நரரே
உத்தமசத்திய மறையதைப் பேணி ஒழுகினால் மோட்ச ஆட்சியின்
காணி நித்தமன்பொடு அடைவீர்கள்ளாதி நிமலனைப் போற்றிடுவீர்

**இன்னிசை**

வெய்யபவம் மாற்றுதற்கு விண்ணிருந்திங்கே யுதித்து
செய்யகதியேற்று மரித்திட்டுயிர்த்த நாயகனாம்
துய்யகிறீஸ்து பதம் தொழுவீர் பேரின்பவழி
உய்வீர் உய்வீருலகோர் உண்மையிது நம்பிடுமே.

**வசனம்**

சகோதரர்களே மெய்மார்க்கமாகிய சத்திய சமயத்தைக் கைக்கொண்டொழுகுவீர்களாக.

**மழுவர் - கவி**

***இராகம் : சங்கராபரணம்***

ஆரடா நீதானெங்கள் ஆதிவேதத்தை முற்றும்
பேதமாய் வேறோர் வேதம் பிரித்திங்கு சொல்லவாச் சோ
நீதமாய் உலகையாளும் நிருபனின்னுரைப்படிக்கு
தீதனே இப்போ நீயும் சீக்கிரம் வருகுவாயே.

**வசனம்**

தீதனே ராசனுன்னைக் கட்டியிழுத்து வரச்சொன்னார் வருவாயாக.

**சந்தியோகு – கொச்சகம்**

***இராகம் : சிந்துபைரவி***

வாறேன்காண் வீரர்களே வையகமாள்ளண்ணலுரை
மீறேன்னொருபோதும் மேதினியிலே நானும்
மாறாக மன்னனுக்கு வஞ்சமென்ன செய் தேனோ
பேறான தற்பரனே பேரிரக்கம் செய்வாயே.

கருணைத்திருவே கடலுடுவே கனியின் வினையைக்
களைவதற்கு தருணத்தமலசுதண்டனைத் தந்தருந்
தாயே தமியனையே பொருணச்சமர்செய் புரவலனிப்
போதிலழைத்தாரேனறியேன்.

**தரு**

***இராகம் : சிந்துபைரவி*** ***தாளம் : ஆதி***

அருணப்பிரவை கொள்ளாயே தாயே யென
க்கனிநற்றிடமருள்வாயே நீயே
தூயவர நற்றவுறு மகவின் மறையை மன்னன்
வணங்காதெனை மறிப்பானோ அறியேன்.

**கொச்சகம்**

அரவின் மனமும் மனர் மனமும் ஆனைக்குணமும் அமையுமென
உரமுன்னறி வோருரைத்ததினால் உள்ளம் மெலிந்துவாடுதே
சிரமின் மவுலி புனைந்திலங்கும் திருத்தாயே உன்செயலருள்வாய்.

தரு

நரகம்புகுபேய் நவிலும் வேதம் தன்னை
நம்பினான் மன்னவன் நன்னீதம் பொல்லாக்
கரவம்புரி கூழியை யிணங்கயெனக் கருளுவானோதான் வணங்க.

கொச்சகம்

வஞ்சத்தனமாய் யேரோது வரத்தித்துயரம் பொருத்துகினும்
அஞ்சித்திட மற்றளியுமுடம்பதனைப் பேணி அலைவேனோ
கொஞ்சச் சுகத்தை விருப்பமுற்றுக் குறையாச் சுகத்தை வெறுப்பேனோ.

தரு

அஞ்சாநெஞ்சும் மசையாப்பெலனும் தந்துன்
அனுக்கிரகம் தனைச்செய்துலவும் எங்கள்
எண் சாணுடலமிற்றாலென்ன உமதின்ப துணையெனக்கு நன்மை.

வசனம்

அர்ச்சியஸ்ட மரியாயே அரசன் சமூகத்தில் யாதொரு தீங்குமணுகாமல் காப்பாற்றியருளும் தாயே.

## காட்சி – 34

***பாத்திரங்கள் :*** *ஏரோது, சந்தியோகு, மழுவர்*
***இடம்:*** *ஏரோது அரண்மனை*

மழுவர் - கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

கோட்டுமத கரிமீதிருந்து வெள்ளைக் குடைபிடித்து மடமடெத்த கொடிகளாட
பாட்டிசைப் பாவாணர்கள் பண்ணோடு பாடப்பாரில் வலம் வந்தரசு பண்ணும் வேந்தே
தாட்டிகமாய்ப் பழமறையை மறுத்து யேசு தன்மறையை யோதுவித்த இவனையிப்போ
தீட்டுவசி வேலணியுன் சமூகமீது செம்மலே பிடித்து வந்தோம் திடமாய்த் தானே.

வசனம்

இராசனே உமது சொற்படி கிறிஸ்துமறையைப் போதுவித்த இவனைப் பிடித்து வந்தோம் அறிவீராக.

சந்தியோகு கொச்சகம்

பொங்குதிரை சூழுமிந்தப் பூதலத்தை யாளுகின்ற
இங்கிதம்சேர் மன்னா இலங்குமுன் கொலுச் சமூகமிங்கு
நிற்கும் வீரரை விட்டென்னை வரவேயழைத்த
சங்கதியை யென்னவென்று சாற்றுவீரெந்தனுக்கே.

வசனம்

என்னை அழைத்த செய்தி யின்னதென்று சொல்லுவீராக.

ஏரோது களிநெடில்

***இராகம் :*** *சிவரஞ்சனி* ***தாளம் :*** *ஆதி*

பார்த்திப னாகிப் பூமியை யடக்கி பவுள்சு பெற்றிது வரையாய் நான்
பரிவுடன் வணங்கும் பழைய மாமறையைப் பார்ரடங்கலும் மிகப்பரவி

காத்திரமுடனே பூசைப்பலியதனுடன் கதித்திடு திருவிழா நடத்திக்
காசினி நரர்கள் நேசமாய் வணங்கி கருத்துகந்திருக்குமின்னாளில்
சூத்திரத்தனமாய்ப் பழைய மாமறையைத் தொல்லுலகத்தினில் நீர் மறுத்துத்
தொகைபெறு மரியாள் மகவருள் மறையைத் தொழுது நீயிருக்கவும் முறையோ
ஆத்திரமுடனே வணங்கிடும் சமயமதனை விட்டெம்மதமேற்கில்
அரசனென் கையால் வெகுவரிசைகள் பேறன்புடன் வாழுவாய் அறிவாய்.

**வசனம்**

கத்தோலிக்கனே, நீர் வணங்கிடும் சமயத்தை விட்டு எனது சமயத்தைக் கைக்கொண்டால் உனக்கு வேண்டிய வரிசைகள் தருவேன் அறிவாயாக.

**சந்தியோகு - களிநெடில் (ஆசிரியம்)**

***இராகம் : சிவரஞ்சனி*** ***தாளம் : ஆதி***

ஆதிப னேயிவ் வவனி யோரலகைக் கடிமையாய் யிருந்ததினாலே
அம்பரந்தனை விட்டெந்தையம்பர னார் அனைமரிபாலனாய் உதித்து
வேதனையுடைய பவத்தினால் நரகில் வீழ்ந்திடாவண்ணம் மெங்களுக்
காய் வெஞ்சின யூதர்களால்லிடர் பூண்டு மேதினிதனில் மரித்துயிற்று
நீதியாய் மோஷவாழ் வெமக்கீந்த நேசத்தை மனதினில்லிருத்தி
நித்தியமவரைத் துத்தியம்செய்து நீசப்பேய் புரட்டிய மறையை
வாதித்தாலும் நான் வணங்கிடேன் நீர் செய்யும் வருசைக்கும் ஆசைகள் கொள்ளேன்
மங்கை மாமரியம்பரனடி மறவேன் மதிப்புறு திட னறி மன்னா.

**வசனம் - உரையாடல்**

கேளும் ராசனே பழைய மறையை வணங்கவும் நீர் செய்யும் வருசைகள் ஏற்கவும் எனது உயிர்போனாலும் பிரியப்படமாட்டேன் அறிந்து கொள்வீராக.

ராயனும் சந்தியோகுமையோரும் தரு

**இராசன் :**

***இராகம் : ஹம்சத்வனி*** ***தாளம் : சதுஸ்ரஏகம்***

ஆகத்துணிவோடென் முன்பாகக் கெறுவமொடு
வேகத்தனமதாகச் சாகத்துணிவு கொண்டு
அடுத்தென் சொல் தடுத்திடும் மடைத்தனம் விடுத்திட
அடித்துந்தன் சடலத்தை வெடித்திடச் செய்வேன்.

சந் :

நாகத்திணையாய்ச் சீறி வேகத்துரைகள் கூறி
மாவித்தகமாய் மீறித் தேகத்தினை வருத்தி
நரிநாய்கள்க் கிரையாகக் கரவேலாற் களையினும்
நம்பிக்கூளி யிப்போற்றிக் கும்பியில் வீழேன்.

இராச :

எள்ளத்தனையுமெந்தன் உள்ளப்பயமில்லாது
மெள்ளச்சிவன் மறையைத் தள்ளித்தவறு
சொன்ன ஈனனே உனதீரல் காண ஓரிகள் நாய்கள்
தானருந்திட வெட்டி நானெறிவேனே

சந் :

புள்ளிக்குலத்தில் புலி துள்ளிப்பாய்வது போலே
எள்ளிச்சடத்து திரம் வெள்ளப்பெருக்காய்யோட
பொருத்தினும் துயரங்கள் வருத்தினும் களுவினில்
லிருந்தினும் மரிபாலன் திருத்தாளை மறவேன்

இராச :

பெலிக்குப் போகுமாடு சலிக்கப்போகுமோதான்
குலிக்கிப் பேசி என்னைக் கெலிக்கப்பேகிறீயோ
பெருத்தகால் கரங்களைத் திருத்தமாகவே கட்டித்
தெருத்தோறும் இழுத்துன்னைக் கரத்தீந்து கொல்வேன்.

சந் :

ஒலிக்கும் பலபவுள்சு செழிக்கும் மகிபரமே களிக்கும்
கருணைமழை செழிக்கும் திருவேதத்தை
ஒருபோதும் விடமாட்டேன் நரகத்தில் விழமாட்டேன்
தெருநீள மிளுத்தாலும் கரமெடேன்பேயே
சந்தியவாச மீதறி தலைவனே.

### இராசனும் சந்தியோகுவும் - தரு

**மெட்டு** : *அன்னநடைமானே*

**இராகம்** : *மோகனம்* **தாளம்** : *ஆதி*

இராச :

எத்தனை சொன்னாலும் என்பேச்சை எதிர்த்து மறுத்துரைத்தாய்
பித்தனே உந்தன்சிரம் பந்தைப்போல்த்
தத்திவிழத் தெறிப்பேன்.

சந் :

கத்தனாம் யேசுநாதர் கமலபதத்தை அனுதினமும்
துத்தியம் செய்வதல்லால் நீர்போற்றும் தேவனைத்
தொழனே நானே.

இராச :

எங்கள் முன்னோர் வழியாய் அனுசரித்திட்ட பழமறையை
சங்கையுடன் தொழுதால் வெகுபுகழுந்தனுக்கே
தருவேன்.

சந் :

அம்பு வியோர்களுக்காய் வந்துதுயரம் பொறுத்தாண்ட
வனை நம்பித்தொழுவதல்லால் உன்வேதத்தைக்
கும்பிடேன் நானறிவீர்.

இராயன் - ஆசிரியம்

**இராகம்** : *அடானா*

அறியுமென்றே உரை அடுத்தடுத் தோதுறான் அதிகமாய் வசை பேசிறான்
அப்படியகங்கார மாச்சுதோ எனையுமொரு அரசனென மதியாமலே
பிரியமொடு எங்களின் தேவர்கள் யாவரும் பேய்களென்றே மறுத்துப் பேசிடும்

நாக்கைப் பிடித்திழுத் தறுத்துப்பேய் பிசாசு உண்ணக் கொடுப்பேன்
நெறியுறுமென் நெஞ்சமது நோகுதே வேகுதே நேசமுறு சேவகர்களே
நிந்தையுறுவோன் தலையிழுத்தழைத்துக்கொண்டு நீங்கள் விரைவோடு சென்று
பொறியதனில் எலிபோலவே நரர்கள்ளஞ்சப்பிடுத்தே கொலைப்படுத்தி
பேசரிய எனது நற் சமூகத்தை நாடியிப்
போ வந்துஉரை செய்வீரே.

**வசனம்**

மழுவர்களே இவனைக் கொண்டு போய்க் கொலைப்படுத்தி வருவீர்களாக.

## காட்சி – 35

***பாத்திரங்கள் :*** *சந்தியோகு, மழுவர் 1, 2*
***இடம் :*** *காடு*

மழுவர் - கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

1ஆம்

கடம்பினந் தொன்னலர்கள் சென்னி களைந்து
வீழ்த்தும் காவலனாம் மேரோது களறும் சொல்லை
உடம்புளைந்த கோகு உப்புக்களத்திற் சென்று
உவமையைப்போல் மீறுவதற்குட்பட்டாய் நீ
திடம் மிகுந்த துணிவோடா மறுப்பதற்குத் தேர்
வேந்தன் னுரைப்படிக்கு தய்யாயிப்போ நடந்திடுன்னைக்
கொலைப்படுத்தப் போறோம் நாங்கள் நரபதி யின்னு
ரைப்படிக் கின்னாட்டில்த்தானே.

மழுவர் - தரு

***இராகம்*** - *ஹம்ஸத்வனி* ***தாளம் :*** *ஆதி*

1ஆம் :

வேதபோதா நடநடயிப்போ விரைவாக நீயும் எங்கள்
வேந்தனுரைப்படி சிரசைக் களைவோம் விரைவிலே நாங்கள்

2ஆம் :

ஏதடாயெங்கள் வேதமும் வீணெண்டிகழ்ந்தாயோடா நீஉன்னை
யிச்சணமீது சட்டென வதைப்போம் எட்டிப் போடாநீ

1ஆம் :

மந்திரவாதி எரிமோசையுன் மாயப்பொடியாலே
நீயும் மாட்டினை யோடா வாட்டியே கொல்வொம் சீக்கிரம்
போடா நீ

2ஆம் :

தந்தரம் மெத்தக்காரனியோடா தலத்திலே நீயும் உன்னைச்
சட்டென வதைப்போம் திட்டமதாக எட்டிச்செல்வாய் நீ.

## சந்தியோகு – பரணி தரு

பரணி

ஈராறு மன்னவர்கள் மரவுதித்து ஈராறுமின்மவுலியது யிலங்கச்சூடி
ஈராறு சீடருடன் போதுவித்த ஏசு நசரேனுவைத் தந்திலங்கும் தாயே.

தரு

சூரராம் மழுவர்கள் கோரர்போல்லெமைக் கொலைப்படுத்த வென்று
கொண்டேகிறார்திடத்தோடின்று இங்கு ஆரெனக்குத்துணை நீர்
துணைவந்தாளும் மரியம்மாளே
தாயே ராசேஸ்ப்பரியம்மாளே.

பரணி

அந்நாளில்த் தானியேலைச் சிங்கமேவும் அக்குகையில்
எறிந்திடவே அவத்தமந்த வன்மிருகமதனாலே
சாராவண்ணம் மாற்றுபரன்
சுதன்தாயே மானிலத்தில்.

தரு

தாயே உன்மகன் வேதத்தைத் திண்ணமாயப் போதித்ததாலே
வேந்தன் கடுஞ்சினமாகிச் சாந்தம் இன்றியென்னை மழுவர்
வசம் கொடுத்தாரேயென் செய்வேன் மரியம்மாளே தாயே
ராசேஸ்ப்பரியம்மாளே.

பரணி

நெஞ்சமதிலஞ்சாத துணிவினோடு நெட்டூர மழுவரிங்கு
கிட்டிவந்து சஞ்சலமாய் யில்லாத வசைகள் சொல்லி
தடுக்கிமுர இடிக்கிறார் தமியேன் என்னை.

தரு

தாயே அஞ்சுதலையானே ஆறுதலையெனக்கு அருளிநீயும்
சினம் மிகப் பொருவுதீயர் செய்யும் வஞ்சயிடர் அனைத்தும்
மாற்றியே தேற்றல் செய் மரியம்மாளே தாயே
ராசேஸ்ப்பரியம்மாளே.

சந்தியோகு கொச்சகம்

உடுவார் சிரத்தி அம்பரத்தி உலகின் பவத்தைப் போக்குதற்காய்
வடிவார் பெத்திலேகமதில் மனுவாய்ச் சுதனைத் தந்தவளே
கடியநரகக் கதவடைக்கும் கன்னியுன்னை நான் மறவேன்
அடியேன் னெனக்குத் துணைவாராய் அடைக்கல மாமரியே.

வசனம்

அர்ச். அடைக்கலமாதாவே அடியேனுக்குத் துணையாக வந்தருள வேணும் தாயே.

## முடவன் வரவு

***இராகம் : சங்கராபரணம்***

பழுதில்லா யோகநாதன் பரிசுத்த மறைப்போதத்தை
வழுவில்லாது பதேசித்த மாதவன் யக்கோதன்னை
மழுவர் கொண்டேகும் மந்தவழிப்பாதை மீதிலேயோர்
விழுமிய முடவன்தானும் விதனமாய்ப் புலம்புவானோ.

முடவன் தரு

*மெட்டு : அன்னை தன்னில் அதிகதயவாய்...*

***இராகம் : ஆஹிரி*** ***தாளம் : ஆதி***

என்ன செய்வேன் பரனே பரனே
இப்போதடியேன் எழுந்து நடக்க
உன்னருளே சொரிந்து காரும்
உலகமீது நலமதாக.

மண்ணில்லெனக்குயினிமேல் பீடை
வாராமலே சீராய் முடமும்
திண்ணமாக மாறியெழுந்து செகத்தில்
நடக்கத் திடத்தைத் தாரும்

அடியேன் நானும் கெதியில்லாமல்
அறிந்தும் அறியாமல் செய்குற்றம்
சிறியேன்மீதில் லிரங்கிப்பொறுத்துத்
தீரும் பிணியைத் தேவதேவா

அய்யோ வழியால் போற குருவே
அடியேன் இன்னலற்று எழுந்து வையமீது நடக்கப்புரியுன்
மலந்தாள் தன்னை வணங்கினேனே.

வசனம்

சுவாமியிந்தக் கொலைச் சேவகர் நடுவே நிற்கும் நீர் ஒரு போதகர் போலத் தோற்றுகிறது. அடியேன் மேல் இரக்கம் கூர்ந்தருளவேண்டும் சுவாமி.

சந்தியோகு – கவி

***இராகம் : சங்கராபரணம்***

என்னைநீர் வேண்டி நின்றால் இயலுவதென உனைப்போல்
மன்னுயிரான வென்னால் வளங்குமோ புதுமையேதும்
பின்னமல் பிதாச்சுதன் இஸ்ப்பிரீத்துவின் நாமத்தாலே
இன்னேரம் எழுந்துநீயும் இனிதுடன் நடப்பாய் தானே.

வசனம்

பிதாச்சுதன் இஸ்பிரீத்துவின் நாமத்தாலே முடவனே எழுந்து நடப்பாயாக.

கொலியேசு – சிந்து

*மெட்டு : ஐயையோ என் அருமை மகனாரே*

என்னநவமீது நவஞ்சுவாமி முடவன் எழுந்து நடை
கொள்ள நவம் பரிந்துயிந்தவேளை செய்தீர் சுவாமி
உம்முடைய மகத்துவத்தை அறியாதபடி யேன்னுற்றுச்
செய்த குற்றங்களை இப்பொழுது பொறுத்துக்கொள்ளும்
குருவே என்னவினைவந்தாலும் அஞ்சேன் உமதேற்ற
குறை சேர்த்தெனையும் தீட்சையன் போடளித்தருளுஞ் சுவாமி.

**வசனம்**

அறியாமல் குருவே அடியேன் இகழ்ந்த குறைகளைப் பொறுத்து ஞானஸ்நானம் தந்தருளுவீராக.

**சந்தியோகு – கொச்சகம்**

தந்தை பிதா ச்சுதனிஸ் பிரீத்துவின் நாமத்தாலே
இந்த நேரம் தீட்சை இனிதாகவேயளித்து
சுந்தரனே னோக்கெனவெ துலங்குநாமந்தரித்தேன் எந்தை
கற்பனைப்படியே இன்னிலத்தில் வாழ்வாயே.

**வசனம்**

கேளும் சகோதரனே பிதாச்சுதன் இஸ்ப்பீரீத்து சாந்துவின் நாமத்தாலே ஞானஸ்நானம்
தந்து ஏனோக்கென்ற நாமம் சூட்டினேன் பத்துக் கற்பனையை அனுசரித்து
மோட்சமடையப் பிரயாசைப் படுவாயாக.

**முடவன் - கொச்சகம்**

அற்புத மெஞ்ஞானமறை அடியேன் நடப்பதற்கு
இப்புவியிலே புரிந்தயேற்ற மகாமுனியே
நட்புடன் ஞானஸ்த்தானம் நற்றிடமாய் யீந்து
இப்பொழு தெனைமுந்தன் இனியமறை சேர்ப்பீரே.

**வசனம்**

கேளும் போதகரே அடியேனுக்கு ஞானஸ்நானம் தந்து உமது சமயத்திற் சேர்ப்பீராக.

**சந்தியோகு - கொச்சகம்**

எந்தை பிதாச்சுதன் இஸ்பிரீத்துவின் நாமத்தாலே
இன்னேரம் ஞானஸ்த்தானம் இனிதாகவேயளித்து
சுந்தரனாபிரகாசமெனச் சூட்டினேன்னின்னாமம்
தந்தை பரனுக்கேற்றத் தாரணியில்லுய்வாயே.

**வசனம்**

சகோதரனே பிதாச்சுதன் இஸ்பிரீத்துசாந்துவின் நாமத்தாலே ஞானஸ்நானம் தந்து ஆபிரகாமென்னும் நாமம் சூட்டினேன். பத்தக்கற்பனையின் படியே ஒழுங்காய் நடப்பீராக.

**இரண்டாம் வரவு சந்தியோகுமையோர் மங்கலம்**

***இராகம் : புன்னாகரவாளி*** ***தாளம் : மிஸ்ரபாபு***

பரனே பரிசுத்தனே உலகமூன்றும்
படைத்த வரதத்தனே திருமகிமைக்
கரனே பிணிமிடிகள் அகண்டு நிதி
கதிக்கப்புரிநாதனே.

திருமாமகிபாலனே யேசுவென்தேவா
அருள்மாமறை நூலனே கமவயல்கள்
வருஷாவருஷங்களாய் விளைவுற்றோங்கி
வாழப்புரி போதனே.

மதிபாத சரணியே அடியோர்க்கு நன்
நிதியாகிய கனியே எதிரிகள்செய்

அதமாகிய இடர்கள் அடுத்திடாது
ஆள்வாய் ஆள்வாயே.

பதிமீதினிற் சுரபி துருவைகளும்
பலுகி எம் குலத்தோர் உலகி லென்றும்
நிதியோங்கியே தழைத்து வாழ்கச் செய் தூய
மரியின் பதம் போற்றியே.

கொலியேசும் முடவனும் - தரு

கொலி :
சந்தியோகுமையரேயுன் தாளினை செயம் அடியோர்
கென்னாளும் தா செயம்.

முட :
அந்தரித்த பாலர் நாமே ஆதாரமெமக்கு நீரே எந்த
வேளையும் தற்காரும் இன்பமே செயம். யக்கோ வென்னும்
போதனே செயம்.

கொலி :
சத்துருவினைகள் நீங்கத் தாரணியில் வாழ்கவே ஓங்க
நித்தமும் மெமக்களும் நீதனே செயம் யக்கோவென்னும் போதனே செயம்.

முட :
ஆலறுகுபோல்த் தழைத்துப் பாலெருமை மாடு ஆடு மேலாகப்
பெருகச் செய்யும் வேதனே செயம் சந்தியோகென்னும் போதனே செயம்.

கொலி :
நிந்தமாய் யெமதரிய சந்ததி மிகப்பலுகி உந்தனையே
போற்றச் செய்வாய் உத்தமா செயம் யக்கோ வென்னும்
அற்ப்புதா செயம்.

## காட்சி – 36

***பாத்திரங்கள் :*** *சந்தியோகு, மழுவன் 1*
***இடம் :*** தெரு

மழுவன் - தரு

***இராகம் :*** *புன்னாகரவாளி* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

வீரதீரன் நானே அதிவீர சூரவீரன் நானே
பாருமொரு நாள்ளொரு ஊருக்கேகும்போது
படுத்துக்கிடந்த முயல் திடுக்கிட்டெழும்பக் கண்டு
ஆருமறியாமலே ஓடி மறைவினொடு

அடுக்க ஒரு பற்றைக்குள் மிடுக்காய் ஒளித்த நின்ற
செல்லும் போதொரு நாள் கல்லால் செய்திருந்த
ஆனையதனைக்கண்டு பூனைபோற் பதுங்கி
அடுக்கப் பின்னால்லோட்டம் மெடுத்துப் பயந்தோடின.

அன்று ஒருநாளெந்தன் பெண்டில்லெனையேசிட
அடிக்க வருவாளென்று திடுக்கிட்டெழுந்தோட நின்று
அவள் சிரிக்கக் கண்டோர்ரெனை மதிக்க
நிலத்தில் குதித்து மீசை முறுக்கி உறுக்கி நின்ற...

## காட்சி – 37

***பாத்திரங்கள்** : மழுவர் 1,2, ஏரோது, மந்திரி*
***இடம்** : ஏரோது அரண்காட்சி*

மழுவன் - கவி
***இராகம்** : சங்கராபரணம்*

இட்டமாய் உலகையாளும் ஏந்தலே உமது சொல்லைத்
தட்டியே கிறீத்துவேதம் தனைக்கைக் கொண்டிருந்த அந்தத்
துட்டனாம் யக்கோ சென்னிசொல்லு முன் மொழிப்படி
வெட்டியே எறிந்து வந்தேன் வேந்தனே அறிகுவீரே.

வசனம்
ராயனே உமதுசொற்படி யக்கோவென்பவனைக் கொலைப்படுத்தி வந்தேன் அறிவீராக.

ஏரோது, மந்திரி – தரு

***இராகம்** : ஹரிகாம்போதி* ***தாளம்** : ஆதி*

ஏரோ :
இரத்தினச் சிங்கார மணிமாடம் தன்னில்
இப்பொழுதே கிடுவேன்நற் பரிவாக
எப்பொருளும் தான்படைத்த ஆதி தேவன்
இணையடியை யென்றுமெந்தன் துணையெனவே பணிந்தேன்.

மந்திரி :
மூரி மறிகார் எருமை தழைத்தென்றும்
சீருறவே ஓங்கியன்பாய் பாருலகில் வாழ்வோம்
மங்கிடாத திங்கள் தோறும் மாரி பெய்து
மன்னுமச்சென்னேல் வயல்கள் துள்ளி விளைவோங்கி

ஏரோ :
என்றுமெங்கள் சந்ததி தழைத்துப் பொல்லா
எதிரிகள் தடைகளெல்லாம் பொடிபடவே தகர்ந்து
இத்தரையில் லோரிடர்கள் ளின்றி நாங்கள்
என்றும் நன்றாய் வாழ்ந்திருப்போம் குன்றா விளை வோங்கி.

மந்திரி :
முன்பின்னெங்கள் சந்ததிக்கு இடரே செய்த
அன்னியப் புலவர்றம்மான தெல்லாம் நீங்கித்
துன்னுமாவணம் முருங்கன் முள்ளிக்கண்டல்
துலங்குமெங்கள் குலம் தழைத்து இலங்க யேகன் துணையே.

## காட்சி – 38

***பாத்திரங்கள் :*** *சாம்புவன்*
***இடம் :*** *தெரு*

மசேசியான், சாம்புவன் வரவு – கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

பொன்னலர் வாவிசூழிப் புவிதனையரசியற்றும்
நன்னவ மிலங்கும் ராசதுரை மசேசியான்மன் வாற
வண்மையை எடுத்துக்கூறி வளர்பறை கறங்கச் சாம்பான்
துன்னுமிச் சபையின்மீது துரிதமாய் வருகின்றானே.

சபை – தரு

இராகம் :
வந்தனனே சாம்பான் வனசத்தில்
மாமலர்த் தார்புனைந்தெ சபையில்
தெந்தினத்தினமெனவே சாம்பான்
தேசமெங்கும் பறைதான்போட்டு

கந்தநறைகமழும் காவலன்
காசினி மீதினில் வாறசெய்தி
இந்தரையோர்ரறியப் பறையே
கறங்கச் சாம்பான்னேகி வந்தனளே.

சாம்புவான் - தரு
***இராகம் :*** *சிந்துபைரவி* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

இந்தா தரைமிசை வாழ்கின்ற
ஏந்திழைமாரே நீர் கேட்டருளும்
சந்தோஷமாய்ப் பறை சாற்றிடும்
சொந்த முரசறைவோன் நானே

மந்தரநேர்புயமன்னன்
மசேசியான்னிச்சபை வாறார்காண்
பிந்தா தொழிலுடன் னேகியே
பேசரும் பூமலர் தூவிடுங்கோ

வன்ன நடனமிடும் இளம்
மாதர்கள் அத்தர் பன்னீர்தெளிங்கோ
தென்னைகமுகோடரம்பை
சிறக்கவே பந்தல் நிரைத்திடுங்கோ

மன்னன் வரும் வழியில் நல்ல
மாமணித் தோறணம் நாட்டிடுங்கோ

இன்னேரம் வாற துரையவர்
யேகள் பதம் மறவாதவர் காண்

கன்னங் கருங்குயிலானெந்தன்
காரிகை நேற்றொருபாயம் சொன்னாள்
என்னவெனக் கேட்டேன் அதை
இன்றைக்குச் சொல்லென்னா தெண்டுரைத்தாள்

நாளைக்கறித்திடுவேன் எந்தன்
நாச்சியார் சூத்திரமானதெல்லாம்
வேளைக்கிதை யறிந்து நல்ல
வேடிக்கை பார்ப்போம் இச்சேரியிலே.

சாம்புவான் - கூறல்

***இராகம்:*** *கேதாரகௌளை* ***தாளம்*** *: ஆதி*

செகதலமிசையொரு குடைநிழல் தனில்லரசியல்புரிசெயசீலன்
செப்பிய நற்பவுள்சுற்றிடு நான்மறையுட் பொருள்ளுணர்பாலன்
பகலவன்னொளிர் முகவசீகரதீபன் பரிகரியெழுவாமன்
பார்த்திபரஞ்சி நடுங்கியே திறை பதமலர் சொரிபூபன்
நகர்தனில் லுறுசெனர் களிலொரு குறைகளும் அணுகிடா தரசாள்வோன்
நாகரீகத்தொளிர் மாதர்கள் கற்பதை நாளுமே களிகூர்வோன்
பகைவர் வணங் கரசியல் புரிதீரன் படைகொடி விருதாளன்
பாசம் மிகுத்தோலேச மசேசியான்
னிறை கொலு வாறார்
ராசாதிராசன் ராசராசகெம்பீரன் மசேசியான் என்னும் மகராசன்
கொலுவுக்கு வருகிறார்
சமூகமெச்சரிக்கை சாமிவெகு பராக்கு.

## காட்சி – 39

***பாத்திரங்கள்*** *: மசேசியான் இராசன், கட்டியன்*
***இடம்:*** *அரண்மனை*

முதலாம் வரவு மசேசியான் வரவு – கவி

***இராகம்*** *: சங்கராபரணம்* ***தாளம்*** *: ஆதி*

எண்டிசை யாவுமதிர்ந்திடவே குழல் தம்பூராகாசமுடன்
இன்பமுறுங்கவி வாணர்கள் பாவிசை அன்பொடு பாடிடவே
மண்டலம் முற்றிடும் மானர்கள் யாவரும் மாமலர் தூவிடவே
மாமகிடாதிபர்ரானவரே திறை வந்து வழங்கிடவே
கொம்பொடு குயிலுவர்ரன்பொடு பாடக் குரைகடல்லலைமோதக்
கொந்தலர் முக்கனி பக்கெனதிர்ந்திட மிக்கதேனாறோட

அண்டர் பரண்டர் தம்புயபத மலர்ரஞ்சல் செய்தே மசேசியா
னெனுமன்னுயிர் தானையோடிது சபையானதில் வந்தனரே.

மசேசியான் - தரு

***இராகம் : சிந்துபைரவி*** ***தாளம் : ஆதி***

கதிர்மதி தாரகை வானம்புவி
கருதுபல் பொருளுயிர் யாவையும்
தருமொரு பொருளாகிய தேவனின்
துணைதனை யனுதினமும் நெஞ்சான தெண்ணியே
உலகிலெனது திறையருளா தசடர்
சிரமுருள வகையதுசெய் திடுகுவேன் நானே

பதிதனிலுமறை நீடியேசெனர்
தளைவுற யிருநிதி கூடியே செக
சுகபவுள்சடைய வென்னாளுமே
பரநடியினை தொழுதியல்வாகியே நிதம்

அவனிதனிலே யெது குறைகளணுகிடாது
அரசுபுரிமகிபெனு மிற நானே.
அட்டகிரியெட்டு மரசாளுவேன்
அதிதவமுறு பரதேசியற்குமா
நிதியருளாமல்லென்னாளும் மெய்ப்புற

ருறு கொலைகரவு செய்வோர்கள் பற்பலர்
ரெவர்களுமெனதுரை மீறு துட்டரை
எனது கரவசியால்லவர்கள் சிரமதையிற்
தரையிலரிவேனதி விரைவினிலே தான்
மனதினில் நித்தியமாபுகட்ச்சிசேர்

வனிதையர் கற்பதிலேதமுற்றிடா
தடையலர் கற்பனை யாவுமற்றிட
அருள்வளமுற்றிடன்னாளுமெய்ப்புற
அவனிதனிலெனது அரிவை புதல்வருல
கனையர் மகிழராசன் அதிபனும் நானே

தங்கரெட்ணச் செங்கோல் கையேந்தியே
கருதலையாழ்ந்ததோர் காளையைக்
கரமது கொடு தாங்கியே யீன்றவர்க்
கருள் கருணைமிகுந்த தெய்வீகனின்
சுதனனையெனுமம்பரியாயே யன்போடுன்

கழலே துதிபுரி நின்னடியேனெனதரசு
களிலொர் வழுவுறாது காரும் மாதாவே

படிதனிலடர் மிடியானதஞ்சியே
பகலவனுறுபனிபொலே ஓஞ்சியே
பகைவர்களொடு செருவானதஞ்சவே

அரசியல் புரிகுவேன் ஆகம் மிஞ்சியே
அதிகசினமோ டமர் புரிய வருபவரை
அதமே புகுவேனிந்தரை மிசை நானே.
அழகெழுதோலேசநகர்க்கதிபன் நான்
குடைகொடி விருது மூவேழுமுற்றிட

நடனமதுற்றிடு மாதருற்றிட
படையணி நிரைநிரையாக வுற்றிட
அடர்கொடுவினை கடியாவுமற்றிட
அதிகதளமோடிரு பிறமும் மணியணிசூழ்
பதியை அரசுபுரி பார்த்திபன் நானே

மணமலர் மைக்குழலார் மகிழ்ச்சிசேர்
மடவியர் பற்பலராரும் மெய்ப்புற
கனதனமருளுமென்னாதி தற்பர
னடியினை போற்றியென்னாளும் நட்புறக்
கருதுமெனது நகர்தனிலே குறையுறாது

அரசுபுரிமசேசியானிறை நானே
அழகெழுரெட்ணாசனத்தில் லேகுவேன்

**இராயன் - கவி**

***இராகம்*** *: சங்கராபரணம்*

கருதியென் வாசல் காக்கும் கட்டியகாறாய் கேளாய்
ஒருநொடிதன்னில்லேகி உயர்வுறு மதிவல்லோனை
பருதிபோல் ஒளிவீசும் பார்த்திபன்னெனது முன்றினில்
விரைவினில் அழைத்துவாராய் விபுலையில் லெனக்குத் தானே.

**வசனம்**

கேளடா கட்டியனே எனது வாசல் மந்திரியை அழைத்து வருவாயாக.

**கட்டியன் - வசனம்**

அப்படியே அழைத்து வருகிறேன் அரசே.

## காட்சி – 40

***பாத்திரங்கள் :*** கட்டியன்
***இடம் :*** தெரு

**கட்டியன் - தரு**

***இராகம் :*** *முலையமாருதம்* ***தாளம் :*** *ஆதி*

பூமணி சிறந்த புவியாளிறைவன் சொற்படி
பூரண மதிபகர்மன் யூகிமனைக்கேகியே
கோமகனுரைகருமங் கூசாமலங்கோதவே
ஏகமிகவே அருள்வார் எண்டிசை மதிக்கவே.

தங்கவயிடுரியத் தரளநிதியீகுவார்
தைய லாளென் சொற்க்கமைந்து சங்கையுறப் போற்றுவான்
பொங்கொளிர் வளம் பெருகிப் பூதலத்தில் வாழுவோம்
எங்கள் மிடியற்றிட ஏகாதியை மன்றாடுவோம்.

சங்கையுறு துங்கனுரைக் கங் கொருநாள் செய்கையில்
பங்கமுறவோர் தவளை பாய்ந்துறுமக் கண்டு நான்
எந்தன் மனையாளிடத்தில் யிக்கதையை ஓதவே
வெந்திறல்சேர் வீரனென்று மெச்சினாள் மிகப்பட்ச்சமாய்

கங்குல் லிருளாகு முன்னென் காவலனின் சொற்படி
பொங்கமுறு மந்திரியை பூவில்லழைத் தேகுவேன்.

## காட்சி – 41

***பாத்திரங்கள் :*** கட்டியன், *மந்திரி*
***இடம் :*** தெரு

மந்திரி **வரவு - கவி**

பொன்னொளிர் ராளி மின்னப் புயமதில் லாடைதுன்ன
மின்னுவாள் கரத்தில் வன்ன மிகுமலர் மாலைநன்னச்
சொன்னசொல் லுரைப்படிக்குச் சுறுக்கினில் வீரனோடு
மன்னனின் சமூகங்காண மந்திரிசபை வந்தாரே.

சபை – தரு

***இராகம் :*** *சிந்துபைரவி* ***தாளம் :*** *ஆதி*

கன்னெல் சேருங் கதிரொளி ரென்னவே
வன்னமாமணி மாலைகள் மின்னவே
சொர்ணமேவு முத்தார மிலங்கச்
சொகுசுநீள் சபைமீதில் வந்தாரே

வச்சிரத் தலைப்பாகையே
சூடி வளருகை விரலாளிகள் நீடி
இச்செகந்தன்னை யாளும் மசேசியான்
னீகைசேர் மதியூகிவந்தாரே.

மந்திரி - தரு

**தாளம் : ஆதி**

அலைசுற்றுமுலகத்தில் லதிபுத்தியது சொற்றம் யூகிநானே இந்த
அகிலத்திலெனையெத்தி அசடுற்றவர் சிரம் அரிகுவேனே

கலைகற்ற பாவலர்ரெனை மெத்த மகிழ்வர் காசினியின் மீது தங்க
மிலகுற்ற முடிமன்னன் சமூகத்தில்லெனையழை விதமிதாமோ

அடையலற்குறுகெறு அவனியில் வந்ததோ அறிகிலேனே யிந்தப்
படி தனிலொரு நொடி தனிலோடியவர்க் குரை பகருவேனே

வயவர்கள் சிரமதை அரியயிச்சணமதில் சொல்லுவேனே எங்கள்
வளர்பதி அரசனின் கொலுவதில் மகிழ்வுறச் செல்லுவேனே.

## காட்சி – 42

***பாத்திரங்கள்*** *: மந்திரி, அரசன், கட்டியன்*
***இடம்*** *: அரண்மனை*

மந்திரி விருத்தம்
***இராகம்*** *: சங்கராபரணம்* **தாளம் : ஆதி**

அத்திவளைந்துலகத்தையே அரசியலுற்றிடுவாய் சரணம்
ஆதரைமீதினில் மாதயவாகவே அவனியை ஆள் சரணம்
பத்தியில் மெத்திய உத்தம ஞானப் பார்த்திபனே சரணம்
பார்முழுதும் மரசானது நீடப் பகர் தயைபுரிசரணம்
இத்தினமானதில் நத்தி அழைத்திடு மிறையே செயசரணம்
இன்புறு கொலுவதில் அன்புற வந்தேன் இணையடியே சரணம்

வசனம்
தயாளபூபதியே அடியேனை அழைத்த கருமம் மின்னதென்று சொல்லுவீராக.

இராயன் விருத்தம்
அரசனெண்டிறைஞ்சி நிற்கும் அரிய மந்திரியே கேளாய்
நிருபரென் திறைகள்ளீயா நெருடர்கள் ளாரு முண்டோ
குரவன் நன்னெறியோ கற்புக்கோதையர் விளங்கலுண்டோ
தரையில் நான்னறிய நாட்டின் தகமையைச் சாற்றுவாயே.

வசனம்
மந்திரியெனது நாடுநகரின் வழமைகள் யான் அறியும்படி சொல்லுவீராக.

மந்திரி **வசனம்**

அப்படியே சொல்கிறேன் அறிந்து கொள்ளுவீராக.

### இராயனும் மந்திரியும் நாட்டுவளம்

***இராகம் : காம்போதி*** ***தாளம் : ஆதி***

ராய :

சொல்லுவாய்யெனது நகர்ரெல்லை சுற்றகிலமதில் மந்திரியே வெகு
அல்லலில்லாமற் குருக்கள் நல்மறை பயிற்றுறாரா மந்திரியே.

மந் :

வல்லமைசேர் பூபதியே தொல்லுலகில் மெய் மறையை மன்னவனே வளர்
ரெல்லையுறு சேதிமத்தில் நல்மறை பயிற்றுறாரென் மன்னவனே

ராய :

மங்கையர் கற்பானதிலே பங்கமெதுவும்முளதோமந்திரியே மறு
மன்னவர் திறைதராமல் பின்னமெதும் செய்தனரோ மந்திரியே

மந் :

பங்கயமலர் வதனப் பைம்பொன் மணிதார்புனையும் மன்னவனெ வளர்
சங்கையுற மாதர் கற்பில் பங்கமெதும் மில்லையறி மன்னவனே

ராய :

கார் முகில்லிருண்டு மழை மாரி பெய்கிறதா சொல்லு மந்திரியே கள
மானதினில் வாரிகுவிந்தே செனர்கள் வாழ்கிறாரா மந்திரியே

மந் :

பாருலகிலே மழை பெய் தேரிமடுவே நிறைந்து மன்னவனே மானர்
ஏர்பெருகும் சாலி விளைந்தே செனர்கள் வாழ்கிறாரென் மன்னவனே.

**வசனம்**

இதுதான் உமது நாடுநகரின் வழமைகள் அறிந்துகொள்ளுவீராக.

**இராயன் கவி**

***இராகம் : சங்கராபரணம்***

நாட்டினில் வளமைகேட்டு நற்பவுள்சானேனிப்போ
வாட்டமிலாமலெந்தன் வளர்மதி பகர் வல்லோனே
தேட்டமாம் யேசுநாதர் திகழ்ழடி பணிந்து நாமும்
தாட்டி மையமான பைம்பொற் தவிசினில்லிருந்து வாழ்வோம்.

**வசனம்**

அப்படியே இருந்து அரசியல் புரிவோம் அரசே.

## காட்சி – 43

***பாத்திரங்கள் :*** *குடிகள் 1, 2, ஏரோது*
***இடம் :*** *ஏரோது அரண்மனை*

குடிகள் வரவு
கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

சிரசில் முண்டாசுமென்னச் செங்கையில் பிரம்பு துன்னப்
புரமதில் லாடை வன்னப் பொருந்து கல்லாளி மின்ன
தரைதனில் லரசன் பக்கல் தான்முறை கூறுதற்கு
பருதியின் னொளிர்போல் ரெண்டு பகர்குடி செனர் வந்தாரே.

சபை – தரு
(உரைப்பாங்கில்)

தாலத்தினிலதிகார் காலத்துறுபழன
சாலித்தொகை வகையாய் ஞாலத்தினில் விரைக்கும்
தரைதனிலதி புகழ்மிலகிய குடிசெனர்
சபைதனில் லிருவர் வந்தாரே.

குடிகள் - தரு

***இராகம் :*** *சுருட்டி* ***தாளம் :*** *ஆதி*

1ஆம் :
என்னசெய்வோம் மேதுசெய்வோம் மய்யா
எங்களை யாழ் ஏந்தலரே மெய்யாய்
கன்னங்கரிய ஓனாய் சென்னாய் கரடிபுலி
எண்ணாமல் பெருகுதய்யா.

2ஆம் :
மன்னவனே தென்னவனேயெங்கள்
மாபதியே பூபதியே அய்யா
அன்னவரென்னவே சன்னைகள் பண்ணுதையா
அரசேயெங்களை யாழ்வீர்.

1ஆம் :
கன்னல் நிகர் சென்னெல் வயலெல்லாம்
கருது விலங் களித்திடாமல் அய்யா
காருமே யெமர்முகம் பாருமே
எளியோரைக் கருணைவைத்தாளுமையா

2ஆம் :
உம்மையல்லால் வேறுதுணையுண்டோ
உலகிலெம்மைக் காருமய்யாயின்றே உழவர்
உழவையெல்லாம் அழிமதி செய்யாமலே
உகந்து காப்பாற்றுமையா

**இராயன் - கவி**

என்னருங்குடிகளே நீர் இதுவிதம் அஞ்சவேண்டாம்
அன்னைமாமரியின் சேயின் அருளினால் அடவியேகி
வன்னமா மிருகந்தன்னை வதைத்துயிச்சணத்திற் குள்ளே
திண்ணமாய் வருவேனுங்கள் திகழ்
மணிமனைக்குச் செல்வீர்.

**வசனம்**

குடிகாள் கவலைப்படாதீர்கள் யான் வேட்டையாடி மிருகங்களை அதஞ்செய்து போடுகிறேன். நீங்கள் மனத்துயரின்றி உங்கள் அரண்மனைக்குச் செல்வீராக.

## காட்சி – 44

***பாத்திரங்கள் :*** *குடிகள் 1, 2.*
***இடம்:*** தெரு

குடிகள் - மங்கலம்

***இராகம் :*** *புன்னாகரவாளி* ***தாளம் :*** *ஆதி*

1ஆம் :

திங்கள் திறிமழைபொழிந்து யிந்தத் தேசம தெல்லாம் செழித்து
பொங்கு சென்னல்லே விளைந்து புகழ்
தங்க என்றும் மங்களமே.

2ஆம் :

பங்கமது விட்டகலப் பூமாதெங் கள கமேயிருந்து
தங்கு நிதியேர் பெருகி செனர்
ரிங்கு வாழ்க மங்களமே

1ஆம் :

கங்கைவளைபூவுலகில் லெங்கள் காரிகை சந்தானர் பெற்று
மங்கிடாத பொருள்சேர
யிந்த மானிலத்தில் மங்களமே.

2ஆம் :

சங்கர் செறி துங்கர்மறையிந்தத்
தாரணியெல்லாம் பெருகி
யெங்கள்மிடியெ அருகிவாழ
யேகபரன்தான் துணையே.

## காட்சி – 45

***பாத்திரங்கள் :*** *மசேசியான், கட்டியன், மந்திரி*
***இடம்:*** *அரண்மனை*

**ராயன் - கவி**

அழகெழுமெனதுநேச அமைச்சனே அறையக் கேளாய்
உளமகிழ்வாகவேதான் உலகில் வில்லியர்கள் தன்னை

தளமெழுதானை சூழச் சதுர் படையாவும் கூட்டி
வளமெழுகொலு முன்பு வரச்செய்வாய் வரச்செய்வாயே.

**வசனம்**

கேளும் கட்டியனே வேட்டை விளையாடப் போவதற்கு நமது சேனைகளையும் வேடர் வில்லியர்களையும் அழைப்பிப்பாயாக.

**கட்டியன் வசனம்**

அப்படியே செய்கிறேன் அரசே.

## காட்சி – 4G

***பாத்திரங்கள் :*** *கட்டியன்*
***இடம் :*** தெரு

**கட்டியன் - தரு**

***இராகம்:*** *மாயாமாளவகௌளை* ***தாளம் :*** *ஆதி*

தேடி யழைத்தோடி வருவேன் சேனாபதி வேடரைத்
தேடியழைத்தோடி வருவேன்
தேடியழைத்தோடி வருவேன்னமைச்சன் சொற்படியே
கோடி செம்பொன்னே யருள்வார் கூசிடாதகங் குளிர

முன்னமொரு போதிலொரு நாள் முயன்றமொழிக்
குன்னிதமாய் செல்லும் வழியில்
மன்னவன் மசேசியா னின்டன்னரும் சூரனெண்டஞ்சி
சொர்ணமெனக்கேயளித்தார் பின்னமறவே யுலகில்

வேடர் வீதியானதிற் சென்று விறலரசன்
யூகியுரைத்தகதையின்று
தேடருஞ் சேனாபதியோடே அரசன் சொற்படிக்கு
நாடியழைத்தே வருவேன் நீடுமென்னுளம்புகழ

ஆடகப்பொன் மாலையிலங்க
அரையிலென்பான முத்தாரமே துலங்க
பாடகப்பதம் சொலிக்க பார்த்திபரெனை மதிக்க
நாடரசன் தீரனென்று நாட்டினிலென்பேர் கதிக்க.

## காட்சி – 47

***பாத்திரங்கள் :*** கப்பித்தான், வேடர்
***இடம் :*** கப்பித்தான் வீடு

**கப்பித்தான் வேடர் வரவு – கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *ஆதி*

முத்தொளிர்மரகத இரத்தின மாமுடி மத்தகமீதணியும்
மெத்துசரப்பணி மோகனமாலை யொலித்திசை பாடிடவே
பற்றலரஞ்சி நடுங்கிடவே செருவுற்றிடு தீரனெனும்
பார்முழுது மரசாள் துரைராசனின் நேருரையின்படியே
கொத்தெழுமுல்லை மலர்த்தாள் புனைகாவுற்றிடுவேடருடன்
அத்திரமுறு சேனாபதியிச்சபை நத்தியே வந்தனனே.

**சபை – தரு**

வாத்தியம் முழங்க வாள்கரத்திலங்க
வாசமலர்த்தார் புனையுல்காசனும் வந்தனனே
குடைகொடி நெருங்க வெடிபல முழங்கக்
குண்டு துவக்கீட்டியுடன் கூட்டமாய் வந்தனனே
அடல்புரி அரசன் படிதனில் லழைத்த
ஆங்கருமம் தேர்ந்தறியப் பாங்குடன் வந்தனனே.

**கப்பித்தான் வேடர் - தரு**

***இராகம் :*** *கீரவாணி* ***தாளம் :*** *ஆதி*

கப்பி :

கடலும் புவிமனுவும் கதிரொளிர் மதியும் பலவுயிரும் - இருதிறி
கமழுந் திவசமீதருளுங் கடவுளின்
களல் நித்திய மனதையரதன் நாமும்

படியிற் கெடியறவே அடையலர் வெருவிச்செடி புகவே – கரமுறு
வசியிற் கயவர்கள் சிரமற்றிட ஒரு
நொடியிற் பொருதுவேன் உலகினில் நானே.

எனையித்தினமதிலே மகிபதி மனதிற்றினிதழைத்தார் அறிகிலேன்
அதிவேடுவர்களே விரையில் துரிதமாய்
விரைவில்க் கணைகொடு வேகமாய் வாரும்.
சித்த மகிழ்ந்தரசர் முன்றில் செல்லுவோம்.

1ஆம் வே :

சுட ருற்றிடுமயல் சேர் அதிவிறல் புரியுத்தம அரசே மகிபதி
அடருற்றிடு வனமதனில்ப்புகுவதோ அறியித்தருணமானதில் நாமே

கொடிதுற்றிடு கணையால் அடவியில் அடியற்றிட மரைமான் பொடிபட
நொடியிற் கரிவரி தரமுற்றுருளவே தரையிற் சமர்புரி தத்துவன் நானே.

2ஆம் வே :

கடிதற்றிடு கடிநாய் சென்னாய்யொடு நற்திரள்ளோ னாய் வரிமுயல்
அடருற்றிடுகளு நரியற்றிட வலை யுறுநற் புறரோடுறு வளைவோமே
வெடிகுழலொ லியுடனே வேடுவர்ஏடர்புரியம்புடனே அரசனின்
டியிற் பணிபுரி செனர் மெய்ப்புற மனமகிழத் தவிசில் முன்பாகவே நாமே
அழகொளிரும் மரசர் முன்றில் செல்லுவோம்.

## காட்சி – 48

***பாத்திரங்கள் :*** *கப்பித்தான்*
***இடம்:*** *மசேசியான் அரண்மனை*

**சேனாபதி விருத்தம்**

***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *ஆதி*

சங்கொலி சூழ்புவியெங்குமே அரசியல் தங்குவோனே சரணம்
சற்குண சத்திய முற்றிடுவேதத் தாபதனே சரணம்
பங்கயமென்ன யிலங்கிய வதனப் பார்த்திபனே சரணம்
பார் முழுவதும் ஒருகுடை நிழல்தனில் பவுள் சுடையாய் சரணம்
மங்கையர் நடனமதாடியே பதமலர் மானிலமிசை சொரிய
மற்புய வீரரோடென்னையழைத்ததேன் மகிபதியே சரணம்

**வசனம்**

தயாளகுணம் நிறைந்த பூபதியே என்னையும் வேடர் வில்லியரையும் அழைத்தகருமம் யாதென்று சொல்லுவீராக.

**இராயன் - கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

அறியு மெண்றெனவுரைத்த அகமகிழ் கப்பித்தானே
குறையது புரியாவண்ணம் குலவுநற் தவிசில்வாரும்
பிறிதுவி தன்னிலேகிப் பெருகியமரைமான்பன்றி
துரிதமாய் வேட்டையாடத்துணிவுடன் அழைத்தேன் யானே.

**கப்பித்தான் - கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

அழைத்த தெண்டனவுரைத்த அடல்புரி அரசே கேளும்
உளத்தினில்க் கவலைவேண்டாம் உலகில் வில்லியரோடேகித்
தளத்துடன் நமதுசேனை தானையை நடாத்திச் சென்று
திடத்துடன் வேட்டையாடி சீக்கிரம் வருவோம் வாரும்.

**வசனம்**

அரசே தேவதாயின் உதவியை முன்னிட்டு வேட்டை விளையாடி வருவோம் வருவீராக.

### மசேசியான் அரண்மனைக்குப் போதல்
### சிந்து

**இராகம் :** *கீரவாணி* **தாளம் :** *ஆதி*

மதியம்புவிபல பொருளும் தருதிரு
மரியின் சுதனடி போற்றியென்றுமே
மகிழும்படி குடி செனரன்புற மணி
மனை செண்டுயர் வனமேகியே நானே.

நிதிதங்கிய மகிபதியெங்கெனுமுயர்
ரதிவங்கிசுவிறல் வீரர் சூழவே
சுதிதங்கிய வெடிகுழல் கொம்புகளொடு
பரிகொண்டடவியில் அடல்புரிவேனே

பளனத்துறுகுடிசெனர் மெய்ப்புற உழு
தொழிலுக்கவ மணுகாமலேகியே
தளமுற்றிடு மதகரி நற்திரள் மரை
வுருளச் சமர்புரி அரசனும் நானே.

வில்லம்புயர் கணையல்லும் பகலுமே
வெல்லும் புயபெலவீரர் கூடியே
கல்லுங்கவணொடு செல்லும் படியுரை
விள்ளும் துரைமதி வலரொடு நானே.
வேட்டை வினையாடி மனைக்கேகுவேன்.

## காட்சி – 48

***பாத்திரங்கள் :*** *மசேசியான் ராயன், கப்பித்தான்*
***இடம்:*** காடு

### வேட்டையாட வரல்
### சபை தரு

மானொடு முயலும் பன்றி மரைபல வேட்டையாட
கோனருள் கட்டளைக்குக் கரைகடல்லலைபோல்
நீடிக் கானுறு விலங்கையெல்லாம் கருதியே வெல்வதற்கு
நாணுறும் வில்வாளேந்தி நரபதியுடன் வந்தாரே.

### வேட்டை – தரு

**இராகம் :** *அடானா* **தாளம் :** *ஏகம்*

ராயன் :
சேகணம் சேகணம் தத்திமி தெய்யத்தா செகமதில்
தேவனைப்போற்றியே வெட்டை செய்யத்தான்

வாகனம் வாகனம் மிந்த வழியில்த்தான் சற்றே
போகலாம் போகலாம் வேட்டை புரியத்தான்

கப்பி :

ஓடுது ஓடுது மரைமான்னெல்லாம்
பற்றிப்பாயுதே பாயுதே பன்றி கானெல்லாம்
சாடுது சாடுது கரி நாடெல்லாம் வெட்டிப்
போடுவீர் போடுவீர் புவி மீதெல்லாம்.

ராய :

காவினிற் காவினில்க் குயில் பாடுதே மஞ்ஞை
பாரினில்ப் பாவிசை கற்றே ஆடுதே
பூவினிற் பூவினை மிக நாடுதே வண்டு
பாரினில்ப் பாவிசை ராகம் பாடுதே

கப்பித் :

வீரரே வீரரே காவை வளையுங்கோ வலை
வீசியே வீசியே எட்டிப்பிடியுங்கோ
சாருது சாருது கரி நுழையுங்கோ வரி
பாயுது பாயுது குத்திச் சரியுங்கோ

**வேறு – தரு**
**(உரைப்பாங்கு)**

***இராகம் : கேதாரகௌளை*** ***தாளம் : ஆதி***

ராயன் :

ஆதிக்காதி அமலதெய்வீகச்சோதி தனையே மன்
றாடுவோமே வேட்டை விளையாடுவோமே
அடர்விலங்கினை அடவிதன்னிலே
அவனிமீதினில் அணுகிடாமலே
வாட்டுவீரே வளரிகொண்டோட்டுவீரே.

கப்பி :

மானைப்பாராய் மருண்டிடும் மேனைப்பாராய் ஓனாய்யொடு
கானைப்பாராய் கடுங்கணையாலே நேராய்
கருதருமென தொரு கணையினால்
அரிகுவேனதி விரைவிலேகியே
அன்பதாக அவனியில்லின்பதாக.

ராய :

காவைப்பாராய் கமழ்நறும் பூவைப்பாராய் மதுவுறும்
மாவைப் பாராய் மயில் நடமாடல் பாராய்
மகிழ்வுற கதித்த மந்தி கொக்கதனிலேறியே
உதைத்த முக்கனி உடைந்தருவியாய்
ஓடுதேபார் கயல்குதிபோடுதே பார்

கப்பி :

பாரில்பாவை பரிவுடன் ஆடிப்பாடி செனர் மிக
நீடிக்கூடி குரவர் கொண்டாடித் தேடிக்
குவலயில் குலநவமணியன வருதிருக்

கனிமரியருட்சுதனை யெண்ணியே
யேகுவோமே மனமகிழ்வாக நாமே.

**முதலாம் வேடர் - கவி**

காவினில் வேட்டையாடிக் களிப்புறும்மரசே கேளும்
தாவியமரை மான்பன்றி தனைக்கவண் கல்லினாலே
மேவிய அடவிதன்னில் மிகுவலை கட்டி நாங்கள்
தீவிரமாகச் சென்று திரள் விலங்கினைக் கொல்வோமே.

**வசனம்**

அரசரே நாங்களிந்தக் கானகத்தில் புகுந்து வேட்டையாடி மிருகங்களை அதஞ்செய்து வருகிறோம். நீங்கள் சற்றுநேரம் மிந்த நிழலில் தங்கி ஆறுதலாய் யிருப்பீர்களாக.

**இராயன் வசனம்**

அப்படியே வேட்டையாடி வாருங்கள் வில்லியர்களே.

**வேடர் வேட்டையாடுதல் - உரையாடுதல்**

**மெட்டு** *: மானிலம் புகழ் மரகத...*
***இராகம் : புன்னாகரவாளி*** ***தாளம் : ஏகம்***

1ஆம் :

மாந்தர் பற்பலராரும் மதித்திடவே
அடவியில் பூந்து யித்தரைமானர்கள் நட்புறவே பாய்ந்து பாய்ந்து
பார்மிருகத்திரளே வலையுற்றிடவே சாய்ந்து சாய்ந்து
தீவிரமாகவே ஓடுது மான்மரை நேரெதிராகவே யேகியே யிருவரும்
நாணுறுகணையினால்லே சிரமுருளவே
வீசியே வளரியினால் மரை புரளவே.

2ஆம் :

அந்தரங்க மதுற்றிடு மித்திரனே அரிவரி
மாய்ந்திடப்பல புத்திகளே பகர்வாய்
சரிசரி வேந்தரிப்புவிமீதினில் மெய்ப்புறவே
கரிஅரி மாய்ந்து இத்தரை மீதினில் வீள்குதுபார் வரிமுயல்
பாய்ந்து பதுங்கு தேனாயோடு கடுவாய்
ஓய்ந்து ஒதுங்குது குழுநரியொடு நரி சேர்ந்து மடிந்து செருவினில் வீழ்குது
தாந்ததித் திமி ததிமிசை யெனவெ.

1ஆம் :

காவினிற் குயிலேயிசை பாடுகுதே கண்டுகண்டு
மேவு மஞ்ஞைகளே நடமாடுகுதே மதுவுண்டு வுண்டு
பூவினிற் பலராகமே நீடுகுதேயிசை கொண்டு கொண்டு
கூவி ரட்சகர் பாதமே நாடுதே நின்று நின்று
தாவுதே மந்திகளே குதிகொண்டிட மேவுமுக்கனி யானதகந்திட
தூவியாறென ஓடிடவே மது வானதிற் கயல் பாயுதே பாரும்.

2ஆம் :

பூம்பொலிந்திடு பூவனமிது பாராய் புகழ் வளர்
மாப் பொலிந்திடு மானகர்ரிது நேராய் மகிழ்வுற

நாற்சதுரப்படை வேற்படை யாள்ப்படையும்
அணி அணியாகவே வாள் கிறிசானது நீடவே வேலோடு விறல்புரி
வீரர்கள் சூழவே ஆவுறை குடில்மிசையே வரு
பாலனின்றாள் துணையே பணிந்து மனை செல்வோம்.

**இராயன் - கவி**

வீராதி வீரரான விறல்புரிவேடரே கேள்
போராதி சூரனும்மைப்போல் அடல்புரிவாருமுண்டோ
தீராதி தீரமான தெருவதை நடாத்தியின்று
பாராதிபரனைப் போற்றிப் பவுள்சுடன் மனைக்குச் செல்வோம்.

**வசனம்**

கேளும் வில்லியர்காள் நமது சேனை தளத்துடன் திறியேக சருவேசுரன் உதவியால் நமது அரண்மனைக்குச் செல்லுவோம் வருவீராக.

## காட்சி – 49

***பாத்திரங்கள் :*** *ராயன், கப்பித்தான், வேடர் 1,2.*
**இடம் :** தெரு

**மங்கலம் - உரையாடல்**

***இராகம் :*** *சிந்துபைரவி*

ராயன் :

நந்தாருறை கடல்வளை புவிமிசை
நலங்கொள்சேனையோடி லங்குவேடுவர்
வந்தே வனமதிலுறு மான்மரை வருத்தியே கணைபொருத்தியே ஆடல்
வலிமையுடனெனது நகரிலுறு குடிகள் கவலையற அரசுபுரியிறை நானே.

**கப்பி :**

கந்தங்கமழ்கமகமவெனுமலர் கதித்த காவினில் வசித்த குகையினில்
பந்தந்திகழ் பலவினையகலவே பருப்பதத் தினிலுதித்த யேகனின்
பதமேயெமது சிரமதிலே துணையெனவே
படிறு கொடிதகல அடல் புரிந்தேனே.

**வேடன் 1 :**

திங்கள் திறிமழை பொழிவாகியே
செகத்தில் மானர்கள் தழைத்தென்னாளுமே
யெங்கள்மிடி அருகியே செந்நெல்
விளைத்திலங்கவே செனர் மலங்கிடாமலே
யிதயமகிழ மனைமகவு நிதிமலிய
வரமே அருள்புரியும் வானவனே நின்

**வேடர் 2 :**

துங்கரெமையெங்குமே புகலுவார்
தொகுத்த வேட்டையில் கதித்த வேடரெண்
டிங்கே யெமதிதயமே மகிழவே யிகத்தில்
மானர்கள் தழைத்தென்னாளுமே

யெனது மணிமனையில் சரீரசுகமுறவே
பவுள்சுபெருக யிருந் இதினிதுற வாழ்வேன்

இராச :

கங்குல்லிரு ளாகியே மின்னியே
கதித்தமாரி பெய்யெதிர்த்தே யேரிகள்
பொங்கும் புனலானது தேங்கியே பொலிந்து
சாலிகள் விளைந்தென்னாளுமே
புவியெலெமது மனைமகிழ
வதிகநிதி தருவீர் பரனேயதி புகழதுநீட

கப்பி :

கொம்புகுழல் லொலியிசை நீடவே
குறித்த மந்திகள் பறித்த முக்கனி
நைந்தேரசனதியது பாயவே நலங்கள்
ளோதிமம் மிலங்குமுத்தினை
நளினமுறவேயதின் சினையதென அனைத்துறவில்
அடர்புரிதம் நகர் செல்லுவோமே
செம்பொன் மணிமாளிகைக்குச் செல்லுவோம்.

# புனித சந்தியோகுமையோர் நாடகம்

**(வடமோடி நாட்டுக்கூத்து)**

## பகுதி 2

நாவாந்துறை புலவர் கிறிஸ்தோ மரியாம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட
றெம்மிகேல் அரசன் வருகை தொடக்கம் படைப்போர் முடிவு வரையுள்ள
(காட்சி 36 - காட்சி 66) இரண்டாம் இரவுக் காட்சிகள்.

### காட்சி – 36

***பாத்திரங்கள் :*** *மசேசியான், மந்திரி, சேவகன் 1,2,.*
***இடம் :*** *அரண்மனை*

மசேசியான் மந்திரி – கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

மங்கலக் குயில்கள் பாடும் மாமலர்ச்சோலை சூழும்
சங்கை சுற்றிடு மின்னாடான் தரணியர் வோவேரெத்தினச்
சிங்கணைதனில் நாம் வந்து திகளுமக் கடிகையாச்சு
எங்கள் மணிமாமனைக்குயினி மகிழ்ந்தேகுவோமே.

மசேசியான் மந்திரி சேவகன்
மங்களம்

மெட்டு *: அருணபிரபைகொள்*
**இராகம்** *: கேதாரகௌளை* **தாளம்** *: ஆதி*

ராய :
பூமலிந்தவர் வாவிவளை கலிலேய மானகர்மீதில் லரசுறும்
பாமலிந்தொளிர் செபதேயுவின் தவப்
பாலனே செயசீலனே

மந்தி :
சீர்மலிந்திது சரிதையெனதினர் சேர்ந்தின்னகரினில்
லேந்தல் மகிழ்வுற
பேர்மலிந்திசை பாடி வளமுறப்
பெருநவ மருள் புரிகுவாய்

**சேவகன்** 1 :
ஏர்மலிந்தெளிர் ரிடையர் சேரியில்
ஏதமகல மாடடை நற்குடிலினில்
கார்மலிந்த நல்மணியதென வந்த காரணா பரிபூரணா

ராய :

மாதமும்மழை மாரிபெய்து செஞ்சாலியே விளைவாகியே
செனர் பாவவினையகண்டாயுள் நீடியே பகலுகவே யருள் புரிகுவாய்

மந்தி :

தேசமதிலெம தாகம் மகிழவே தெரிவையொரு
புதல்வர்களும் தழையவே
நேசம் வைத்தெமையாள்கை செய்குவாய்
நீதனே அருள் பிரசாதனே

சேவக 2 :

மானிலந்தெனையாளும் மிறையெனை
மதித்து மாநிதி கதிக்க அருளவே
வைய்யமதிலுந்தன் துய்ய நவமருள்
வானவா தனதானவா

ராயன் :

அவனிதனில் முந்து வணிகனொடு புதல்வனையும் மசடி
யகற்றிய பவம் அகன்று
அரசியல் புரிந்து வாழ்கநம்
அழகு மாளிகைக் கேகுவோம்

## காட்சி – 37

***பாத்திரம் : கட்டியன்***
***இடம் : தெரு***

**துருக்கி கட்டியன் - வரவு – கவி**

**இராகம்** : சங்கராபரணம்

மருக் கமழ் சோலை சூழும் மங்கிடாத்துறுக்கி தேசம்
செருக்குடன் அடக்கியாளும் செம்மலாம் வாகுமீரான்
விருப்புடன் கொலுவில்வாற வியல்பினை எடுத்துக்கூற
கரப்பிரம்பேந்தி வாசல் கட்டியன்சபை வந்தானே.

**சபை – தரு**

***இராகம் : மோகனம்*** ***தாளம் : ஆதி***

கட்டியன் வந்தானே சபைதனில்க் கட்டியன் வந்தானே
கட்டியன் வந்தானே கையில் பிரம்புடன்
பட்டன மாள்மன்னன் பான்மையைக் கூறிடக்

சோமனுடையுடுத்து கரத்தினில்ச் சூரை தனைப்பிடித்து
வாமமுடைய மகிபன் சுலுத்தானும் வாறப
வனியைக் கூறவிரைவொடு.

**கட்டியன் - சிந்து**

***மெட்டு : வண்ணமயிலியலார்களே***
***இராகம் : ஹம்சத்வனி*** ***தாளம் : ஆதி திஸ்ரநடை***

சீராரும் பொற்புவிமானரே இந்த
ஊரான் சுலுத்தானும் வாறார்காண் நீங்கள்
தாராளமாய் வந்து கூடுவீர் நல்ல
தட்டுத் தட்டாய்ப் பந்தல் போடுவீர்

காரார் மலைப்புயவீரியன் துறுக்கி
ராயன் கொலுவுக்கு வருகிறார் நீங்கள்
நேராகத் தோறணம் பூட்டுங்கோ நல்ல
வாழை பசுந்தாழை நாட்டுங்கோ

வில்லார் மதிநுதல் மாதரே எந்தன்
வேந்தன் வெகுமீரான் வாறார்காண வீதி
யெல்லாம் துப்பரவாய்க் கூட்டுவீர் அவர்
வல்ல பதம் சென்னி சூட்டுவீர்.

அல்லார் மதத்தை அடக்குவோன் துருக்கி
அதிபன் கொலுவிற்கு வருகிறார் நீங்கள்
எல்லோரும் அவர்பதம் போற்றுங்கோ போற்றி
வல்லோன்புகழினைச் சாற்றுங்கோ

கொஞ்சு மஞ்சுக மின்னார்களே எங்கள்
கொற்றவன் சுலுத்தானும் வாறார்காண் நீங்கள்
கோலப் பன்னீர் அத்தர்தூற்றுங்கோ நல்ல
வாசப் பரிமளம் சாற்றுங்கோ

விஞ்சைமிகுங் கவிவாணரே எங்கள்
வேந்தன் சுலுத்தானும் வாறார்காண் நீங்கள்
மென்மதுரக்கவி பாடுங்கோ தரு
பொன்னை அன்பாய் ஏற்று வாழுங்கோ.

**வசனம்**

ராசமகாராசன் சுலுத்தான்ராசன் கொலுவிற்கு வருகிறார் சமூகமெச்சரிக்கை சாமி வெகுபராக்கு.

## காட்சி – 38

**பாத்திரங்கள் : சுலுத்தான் ராயன், கட்டியன்**
**இடம் : துருக்கி அரண்மனை**

துருக்கிராயன் முதலாம் வரவு
சபை கவி

***இராகம் : சங்கராபரணம்***      ***தாளம் : ஆதி***

மத்தளதாளம் மிகுத் தொலியானது மடமடவெண்டிடவே
மாபிரதானிகள் யாவருமே பிடைவந்து நெருங்கிடவே

சித்திரவனமென வொற்றிடுமாதர்கள் சென்று மருங்குறவே
கீர்த்தியுறும் பல பார்த்திபர் யாவரும் செப்பியொலித்திடவே
கொத்தலர் மாலைகள் கலகலவென்னக் குடை கொடி நீடிடவே
குஞ்சரவேக முறுந்திறல் வீரர்கள் குதிரையில் மேவிடவே
நத்தெழுநித்தில மார்பகன் துருக்கியின் நகரதையாள் சுலுத்தான்
நரபதியாகிய வாகுமீரானுமே சபைதனில் வந்தனனே.

**சபை – தரு**

***இராகம் : அடானா*** ***தாளம் : ஆதி திஸ்ரநடை***

வருகிறார் சுலுத்தானும் மகராசன் மதிநிகர்சபை மீதே
வருகிறார் மலர்க்கரமதில் வசிமின்ன மத்தகத்தினையொத்த நேர்புய
வித்தகஞ்செறி தத்துவத்தொடு

சிகரத்தின் மீது பொற்கிரீடம் துலங்க சிறந்த மார்பில் முத்தாரம் மிலங்க
சேகுசேகு தணாகுணா
வெனவே சிலம்பு தனாதனாவென

தானைசேனை தனம் நிரை சூழ தண்டரளக் கொடி குடை நீளவே
தத்தாதகு தகுததகுவெனத்
தித்ததிந்திமி திகிர் ததிகுவென.

**சுலுத்தான் இராயன் - தரு**

***இராகம் : கீரவாணி*** ***தாளம் : ஆதி***

அகிலத்தவர் துதிபரவத் திறல்மிகு
அடல்தத்துவ ஜெய வாகையோடுயர்
அளிதங்கிய நிதி பொழியும்துருக்கியன்
அதிபன் சுலுத்தானெண்டரசனும் நானே

கெறுவுற்றெழு மருவலர் பொற்பதமலர்
சொரியத் திறைமுறையாக ஈயவே
கெதிதங்கிய நிதி பதிமம்மது நபி
பதமே துதிபுரி பார்த்திபன் நானே.

மதிநேர் நுதலித மடவார் திடமொடு
வளர்சாய் மரையது வீசநேசமே
மல்லாயெமதிறை அல்லா அவரரும்
வல்லார் பாதமது வாழ்த்திடுவோமே.

சுதிதங்கிய மதி நிதிலங்கிர்த நய
மிகுமாபுலவர்கள் கூட நாடவே

சுகவச்சிர மரகத பொற்கிரணமின்
னிதமுற்றிடு மெந்தன் கொலுவிற் செல்வேனே.
செங்கோல் செலுத்தி அரசாளுவேன்.

**கட்டியன் - தரு**

***இராகம் : சங்கராபரணம்***

எல்லாரும் மணி மவுலி சிறந்து வாழ்க இனிய கரக் கோலெதுவும் மிலங்கிவாழ்க
வெல்லாரும் குடிபடைகள் செழித்து வாழ்க விளங்கி நகர் செழிப்பதனால் மேவி வாழ்க
நல்லாரத் தரளமணித் தவிசேநீடி நானிலத்திலென்று மென்றும் நன்மையாக
அல்லாவின் துணையாலே துறுக்கிதன்னை ஆண்டு நிதம் தழைத்திடவே வாழிதானே.

**வசனம்**

அரசுநெறியும் ஆணையாச் சக்கரமும் செழிப்புற்றோங்க உமது பாதாரவிந்தம் போற்றி செய்தேன் ராசனே.

**சுலுத்தான் - கவி**

***இராகம் : சங்கராபரணம்***

போற்றி செய்தடி வணங்கிப் புகலுகட்டியனே கேளாய்
காற்றென விரைந்து ஓடிக் கருதருமெனது நேச
சாற்றருமுபாய சூட்ச்ச சகல புத்திகளும் தேர்ந்த
சூத்திர மதிவல்லோனைச் சுறுக்குடன் அழைத்திடாயோ.

**வசனம்**

கேளும் கட்டியகாறனே எனது வாசல் மந்திரியை அழைத்து வருவாயாக.

**கட்டியன் - வசனம்**

அப்படியே அழைத்து வருகிறேன் ராசனே.

## காட்சி – 39

***பாத்திரங்கள் :*** கட்டியன்
***இடம் :*** தெரு

**கட்டியன் - சிந்து**

***இராகம் : புன்னாகரவாளி*** ***தாளம் : ஆதி***

கடகரிபுயவாமன் எங்கள் துரை
காவலன் சுலுத்தானும் ஆவலோடென்னைத்
திடமுடன் மந்திரியை அழைத்திடச்
செப்பு மொழியாம் படிக்கு இப்போது செல்வேன்

நடையினிலெனைப்போலே
வல்லோர் இந்த நாட்டினிலே யாருமுண்டோ
தாட்டிகமதாய் திடமுடன்னிரு
நடக்கும் வழி செல்லுவேன் னெட்டரை நாளில் தீவிரத்துடன்

பொன்மணி மகிடாதிபன் சுலுத்தானும்
புகழிடுவாரெந்தன் திறமைகண்டு
தனிவழிசெல்லும்போது ஒருநாள் ஒரு
சாரையைக் கண்டே பயந்த வீரியனும் நான்

திண்ணமதாய்யவரின் மொழிப்படி
சென்றுமிகு தீவிரமாய் இன்று நொடியில்
மன்னவன் மந்திரியை அழைத்துக்கொண்டு
மாவிரைவதாக இதுபோது வருவேன்.

## காட்சி – 40

***பாத்திரங்கள்*** : *சுலுத்தான்*
***இடம்*** : தெரு

சுலுத்தான் மந்திரி வரவு – கவி

***இராகம்*** : *சங்கராபரணம்*

பொன்மணிக் கிரீடஞ் சூட்டிப் புதுமலர் மாலை சூட்டி
மின்னிய ஆடையோடு விரலினில்லாளி பூட்டித்
தன்னிகரில்லாச் சூழ்ச்சி சகல புத்திகளும் தேர்ந்த
மன்னிதி துருக்கிவாசல் மந்திரி வருகின்றானே.

மந்திரி – தரு

***மெட்டு*** : *மன்னித்தல்*
***இராகம்*** - *பைரவி* ***தாளம்*** : ஆதி

தங்கமாமவுலி சிரம்புனை சங்கைசேர் மன்னவனாகிய
இங்கித வீரசவுந்தர துங்கனாகிய சுலுத்தனாவர்
எழிலுற்றிடு நவமணிமொய்த்திடு கொலுவமரும்
யூகித மந்திரி நானே.

சங்கசங்கங்கள் சூழும் எங்கெங்குமாளுமன்னர்
இங்கெந்தன் நாமமது தங்கள்முன் கூறினும்
யெஞ்சிக் கெஞ்சியே அஞ்சியே ஓடுவார்
மிஞ்சிய புத்தியில் வீரியன் நானே.

திண்புய வீரிய மருவலர் சண்டை செய்திடப் பயம் கொள்ளுவர்
துண்டு வல்லப மிகு துருக்கியின் வென்றிசேர் மந்திரியாகவே
திரைசுற்றிடு மதி பதியிற் தரைதனில்
லெவரிங் கெனைக்கிணை யாகிட வருவார்.

வென்றிகொள் நித்தில பவளமே யொன்று மா பகரென மேவிய
நன்றொறு நரபதி சுலுத்தான் நெண்டொரு தனவது கொலுவதில்
இப்போ விரைவொடு நட்பாயோசனை செப்பச்செல்லுவேன் தீவிரம் நானே.

## காட்சி – 40

***பாத்திரங்கள் :** இராயன், கட்டியன், மந்திரி*
***இடம் :** துருக்கி அரண்மனை*

மந்திரி - கவி

***இராகம் :** சங்கராபரணம்*

சங்கழைத்தடங்கள் சூழும் தரணியை ஓர் குடைக்கீழ்
மங்கள சுகத்தாடாளும் மன்னவர் மன்னா வாழி
துங்கமுற்றிடுமென் செங்கோல் துலங்கிட வாழி வாழி
இங்கெனையழைத்த செய்தி இயம்புவீர் வாழிதானே.

வசனம்

அரசுநெறியும் ஆணையாச்சக்கரமும் செல்வச் செழிமையும் என்றென்றும் வாழ்ந்திருக்க வேண்டியது ராசனே.

சுலுத்தானும் மந்திரியும் நாட்டுவளம் - தரு

*மெட்டு : சொல்லக்கேளும் என்...*
***இராகம் :** சிந்துபைரவி* ***தாளம் : ஆதி திஸ்ரநடை***

ராயன் :

வாரும் வாரும் விசய பராக்கிரம
மந்திரி எந்தன் தந்திரியே நீயும்
தேசமேவென் துருக்கிநகர் வளம்
செப்புவாய் இன்று ஒப்புடனே நீ.

மந்திரி :

கார்முகிலது எங்கும் பரந்துன்
போரின் வாத்தியம் போலே முழங்கி
மாரி பெய்துந்தன் நாடுநகர் வளம்
பெருகுதே உளம் களிப்புறவாக.

ராயன் :

உற்றிடும் ஒவ்வோர் வாரத்தின் வெள்ளியிற்
கொத்துவாயில் மௌலானாமார்கள்
பக்தியாய் அல்லா பாதத்தைப் போற்றி
பரிந்து போதகம் சொல்லிடுவாரா.

மந்திரி :

மக்கபள்ளிவாசல்தனில் அல்லாவை மிக்க பத்தியாய்ப்
போற்றிப்போதம் தக்கமாதிரியாய் மௌலானாக்கள் சாற்றி
வருவார்கள் தேற்றமதாக.

ராயன் :

அன்னமின்னிடைக் கன்னல் மொழியுள்ள ஆயிழைமார்கள்
கற்பினிலேதுமின்மையில்லாமல் வாழுகிறார்களா
செப்புவாயெனக்கிப்போது நீரும்.

மந்திரி :

பொன்பொலியும் துருக்கிநகர் ராளும் பூபதியே பெண்ணார்க
ளின் கற்பில் பங்கமின்றியே வாழ்ந்து வாறாரிந்தப் பாரிலே
அதிநேர் மனமாக.

ராசன் :

இஸ்பயின் போர்த்துக்கல் தேசமாளும் இறையவர்
ரெனக்கீந்து வணங்கும் கப்பமானதைச் செப்பமதாகவே
கட்டி வாறாரா திட்டமாயோதும்.

மந்திரி : இப்புவியைப் புரக்கும் நரேந்திரா இசுப்பெயின்
போர்த்துக்கல்
தேசமாளும் சிற்றரசர்களும் திறைதந்து நற்சேவடி
போற்றி வாறார்களென்றும்.

வசனம்

இதுதான் உமது நாடுநகரின் வளமைகள் அறிந்துகொள்ளும் இராசனே.

அரசன் – கவி

***இராகம் : சங்கராபரணம்***

என்னாடு நகரிலுள்ள வழமையாவும்
இயம்பிடக் கேட்டிப்பொழுது ஏற்றுக்கொண்டேன்
ஒன்னார்கள் வந்தெதிர்த்திடாது சூட்சம்
மோதி வெகு நீதியுடன் னுகப்பதாக
தண்ணாரும் துருக்கியெனும்
இந்தத் தேசம் சத்துருக்கள் அணுகாது தழைப்புற்றோங்க
அல்லாவின் பதத்தைப் போற்றி இருந்தரசு செய்திடுவோம்
இனிதாய்த் தானே.

வசனம்

கேளும் மந்திரி நாடுநகரின் வளமைகேட்டு மிகுதியும் சந்தோஷமானேன் என்றும்போல் எனது வாசலுக்கு மந்திரியாய் இருப்பாயாக.

மந்திரி :

அப்படியே செய்கிறேன் இராசனே.

## காட்சி – 41

***பாத்திரங்கள் :*** *றெம்மியேல், கட்டியன்*
***இடம் :*** *தெரு*

இறெம்மியேல் கட்டியன் வரவு – கவி

***இராகம் : சங்கராபரணம்***

சீராரும் எசுப்பாஞ்ஞு தேசம் தன்னைச்
செழிப்புறவே அரசு செய்து செனரை எல்லாம்
நேராரும் தாதையைப் போல் ஆதரிக்கும் நிருபனாம்
பெருமைசெறி சிறெம்மியேல் இராசன்

பாரரும் கொலுவினுக்கு எழுந்து
வாற பான்மைதனைக் குடிசெனர்க்குப் பகருதற்கு
ஏராரும் கட்டியனும் அழகுவாய்ந்திலங்கிய
நற்சபையில் வந்து இனிதுற்றானே.

**சபை – தரு**

***இராகம் :*** *மோகனம்* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

மாகதன் வந்தானே சபைதனில்
மாகதன் வந்தானே மாகதன் வந்தானே மன்னன் றெம்மீல் துரை
ஆவலாய் வீதியில் மேவும் செய்தி கூற

சென்னியிற் பாகை மின்ன கரத்தினில்
சித்திரப் பிரம்பு துன்ன இன்னிலமாண்டிடும் மன்னவன் றெம்மீலும்
இப்போ கொலு வாற நற்செய்தி கூறிட.

**கொச்சக தரு**

***இராகம் :*** *முகாரி*

**கொச்சகம்**

நீதிக்கிவனே இறைவனென நிலத்தோர் நிதம்பரவும்
சாதிப்பெருமை அருமையுறு தரணித்துரை
றெம்மியேல் வாறார்.

**தரு**

வீதிக ளெங்குமே சோதிபோல் பந்தல்கள் தீட்டுங்கோ
வெண்மை பூட்டுங்கோ
மாலை கோதியலங்கிர்த
மாகவே வந்து நீர் சாற்றுங்கோ பதம் போற்றுங்கோ.

**கொச்சகம்**

மிஞ்சுஞ் சுகுண நெறியுடையோன் வேதானந்த
விளக்கொளியோன்
தஞ்சமடைந்தோர்தனைக்
காக்கும் தரணித்துரை றெம்மேியேல் வாறார்.

**தரு**

அஞ்சுகரஞ்சித மிஞ்சுகமாதரே வாருங்கோ வந்து சேருங்கோ
வீதிமிஞ்சவேயுற்றிடு கஞ்சல்கள் முற்றையும்
கூட்டுங்கோ அன்பு காட்டுங்கோ.

**கொச்சகம்**

வணங்கார் வணங்கும் மகிதலத்தோன் மன்னன்
கன்னன் கொடைக்கு நிகர்
இணங்கா நன்மை
மழை பொழியும் ஏந்தலிப்போ கொலு வாறார்.

**தரு**

குணந்திகழ் வீரரே மனங்களி கூரவே வாருங்கோ வந்து சேருங்கோ மலர்

மணந்திகழ் பாதத்தில் இணங்கிட அரசனை வையுங்கோ
நீங்கள் உய்யுங்கோ

**கொச்சகம்**

பத்திக்குகந்தோன் படையதிபன் பாரார் சீரார் பார்த்திபனாய்
எத்திக்குள்ளோர் அடிபரவும் இறைவன் றெம்மீல் கொலுவாறார்

**தரு**

தித்திமித் தாளங்கள் எத்திசையும் கேட்கக் கொட்
டுங்கொ வீணை தட்டுங்கோ பன்னீர்
அத்தர் பரிமளம் இத்தினமே வந்து
தூற்றுங்கோ பதம் போற்றுங்கோ.

**வசனம்**

வீரதீர ஜெய பராக்கிரம றெம்மீல் ராசன் கொலுவுக்கு வருகிறார் சமூகமெச்சரிக்கை சாமி வெகு பராக்கு.

## காட்சி – 42

***பாத்திரங்கள்** : ராயன், கட்டியன்*
***இடம்** : றெம்மீயேல் அரண்மனை*

றெம்மீயேல் ராசன் வரவு – கவி

***இராகம்** : சங்கராபரணம்*

தனராசன் தங்கமணிக் கிரீடராசன் சகலகுணம் சம்பன்ன நிறைந்த ராசன்
செனராசன் செங்கோன் மை தவறாராசன் திகழ்ராசன் வேத உண்மை சிறந்தராசன்
கனகராசன் பூதலத்தோர்க்கிடரில் லாமல் காத்துரட்சை செய்தருளும் ககித்த நேச
மனராசன் பணராசன் றெம்மியேல் என்னும் மகராசன் சபைதனில் வருகின்றாரே.

சபை – தரு

*மெட்டு : அலைதங்கு புவிளங்கும்*

***தாளம்** : ஆதி திஸ்ரநடை*

மணிதங்கு ஒளி பொங்கு மகுடந்தங்கிய
மகராசராசன் எஸ்ப்பான்
மகராசன் அதிபோசன்
மிகுநேசன் றெம்மீலும் வருகின்றானே.

அணிதங்கு குடைகொடி தொனிபம்பை படை
நொடிகூட நாட செய
அதிதங்க மிகுதுங்க புகழ்தங்கு றெம்மீலும் வருகின்றானே.

றெம்மீயேல் - தரு

***இராகம்** : சிந்துபைரவி* ***தாளம்** : ஆதி*

குனகத்தொளிர் பளிரும் பவளவெண்டரளத்தள கொளிரும் மரகத
நிறைவச் சிரமணி உரைபொற்கதிர் மணி
எறிரத்தினக் கதிர் எறித்தெங்கும் வீச

அனைவர்க்கதிபதியாம் மூவுலகதனைத் தருமுடியாம் உந்நத
அரசர்க் குணமுறு நிறைநற் பரனிரு
பதமத்ததுபணி பார்த்திபன் நானே.

கண்டார் மொழிமடவார் சாய்மரை
நிண்டே விதயிதமாய் வீசிட
கனசேனைகள் புடை அணியாய் அருகுற
தனமெத்திய நிதி தலைவனும் நானே.

குன்றாநவமணிகள் நிரைநிரை
நன்றாயிழைத்தி லகும் இரத்தினம்
குலவும் பலமணியிலகும் எனதருங்
கொலுவுக் கதிவித பரிவிற் செல்வேனே.
நீதியாய் இருந்தரசு செய்குவேன்.

**இராசன் - கவி**

***இராகம் : சங்கராபரணம்***

சரணமெனத்தனதடியைச் சிரசிற்சூடும் தத்துவம்சேர்
மாகதனே சாற்றக்கேளும்
இரணகள மருவலர்
பிறமுற்றோட ஏற்றமடன் சூட்சும புத்தி எடுத்தியம்பும்
கருமமனைநேர் தணிபுயத்தும் மதிவல்லோனைக் காணிடவே
ஆவலது களிப்பாய் உற்றேன்
தருணமெந்தன்
கொலுவதன்முன் வரும்படிக்குத் தானழைத்து
வந்திடுவாய் சாற்றினேனே.

**வசனம்**

கேட்பாயாகக் கட்டிய காரனே எனது வாசலில் மதியூகியாகிய மந்திரியை அழைத்து வருவாயாக.

**கட்டியன் - வசனம்**

அப்படியே செய்கிறேன் இராசனே.

**கட்டியன் - சிந்து**

**மெட்டு** *: திருவளர் தண்டலை நககரான்...*

***இராகம் : நாதநாமக்ரியை*** ***தாளம் : ஆதி திஸ்ரநடை***

பூவுலகாள் இறெம்மீலும் புகன்ற மொழிப்படிக்கு
புகையது போலே சுருக்காய் வகையுடனே நடப்பேன்

தாவுமருந்தென்னவனும் சாற்று முரைப் படிக்கு
தந்தரமந்திரி மனைக்குச் சடுதியாகச் செல்வேன்
நடையிலெனைப் போலே யாரும் நானிலத்தில் லுண்டோ
நாலுநாளின் வழியை எட்டு நாளினிலே நடப்பேன்

மடைபுடை சூழ் எசுப்பாஞ்ஞ மகிபனரும் யூக
மந்திரியின் மனைக்கு வந்தேன் இன்றழைத்துப்போவேன்.

## காட்சி – 43

***பாத்திரங்கள்:*** *மந்திரி, கட்டியன்*
***இடம் :*** *தெரு*

மந்திரி வரவு – கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

புதுமலர் மாலை துன்னப் பொன்னினாபரணம் மின்ன
நிதிவளர் செல்வமோங்கி நீதியாய் எங்கும் தேங்க
நதிவளர் எசுப்பாஞ்ஞ தேசம் நராதிபன் இறெம்மீல் வாசல்
மதிதிகழ் அமைச்சன் தானும் வளம்பெற வருகின்றானே.

சபை – தரு

**மெட்டு :** வனசமிலங்குவளர்புகழ்றோமை
**இராகம் :** கேதாரம் **தாளம் :** ஆதி

சென்னியில் மாமுடி மின்னியெறிக்க
செங்கையிலாழி தனையேற்றி
மன்னவன் றெம்மீல் வாசலில் மேவும்
மந்திரி சபையில் தோற்றினனே

ஒன்னார் வெருவிடப் புத்தியே புகட்டும்
உத்தம தத்துவ ஒய்யாரன்
மன்னவன் இறெம்மீல்
வாசலில் மேவும் மந்திரி சபையில் தோற்றினனே.

மந்திரி – சிந்து

**மெட்டு :** திருவளர் தண்டலை நககரான்
***இராகம் :*** *நாதநாமக்ரியை* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

தேனவிழும் மருவலர்ப் பூஞ்சோலைதனைப் புனைந்த
சிறந்த எசுப்பான் அரசனுக்கு உகந்த யூகி நானே

மானிலத்தில் லெனக்கு மிஞ்சி மதிதெரிந்த நிபுண
மந்திரிமார் இருப்பாரோ தந்தரத்தில் மிஞ்சி

மந்திரேசன் தன்னை நானும் பந்தாக ஆட்டிடுவேன்
மன்னரெல்லாம் என்பேர் கேட்டால் பிறகிடுவார் அஞ்சி

இந்தநேரம் எனதரசன் இறெம்மீர் அவர் வாசல்
ஏற்றமதி சாற்றிடவே தேற்றமாய்ச் செல்வேனே.

## காட்சி – 44

***பாத்திரங்கள் :*** *அரசன், மந்திரி, கட்டியன்*
***இடம்:*** *அரண்மனை*

மந்திரி – கவி

**இராகம்** : சங்கராபரணம்

தெண்டிசை உடுத்து மெசுப்பான் தேசத்தை ஓர் குடைக்கீழ்
நன்றுறப் பரிவாய் ஆளும் நராதிபா வாழி வாழி
பொன் பொலி உமது செங்கோல் புவியதில் நீடி அன்பாய்
என்றென்றும் செழித்து வாழ்க இனிதுடன் வாழிதானே.

**வசனம்**

அரசுநெறியும் ஆணையாச் சக்கரமும் செல்வச் செழிமையும் என்றென்றும் வாழ்ந்திருக்க வேண்டியது ராசனே.

றெம்மியேல் - கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

வாழியென்று தாழிணையைப் பணிந்து நிற்கும்
மாகதனே உந்தனுக்கு வளுத்தக்கேளாய்
ஆழிகடல் சூழுமென தாளுகைக்குள்
அமருகின்ற குடிசனரின் ஒழுக்கத்தோடு
நாளுமெங்கள் சத்தியமறையகநாதன்
நன்மறையை மறுத்துணர நரகையாளும்
கூழிகளை வணங்கிடுவாருண்டோ மற்றும்
குறைநிறைகள் விபரமுடன் கூறுவீரே.

**வசனம்** :

கேளும் மந்திரி எனது நாடு நகரின் வளமைகள் நான் அறியும் படி சொல்வீராக.

றெம்மீலும் மந்திரியும் நாட்டுவளம் - தரு

***மெட்டு :*** *சொல்லக்கேளும்*
***இராகம் :*** *தோடி* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

றெம் :

வாரும் வாரும் மதியூகதிறமுள்ள மந்திரி எந்தன்
மானகரின் வளம் யாதெனக் கூறுவாய் தந்திரி.

மந் :

கார்முகிலெங்கும் பரந்து மின்னி மழை பெய்யவே சென்னல்
சீர்பெற ஒன்றிரு நூறாய் விளைந்து செழிக்குதே

றெம் :

சத்திய உத்தம மெத்திய யேகனின் மாமறைப்படி
தாரணி மானிடர் வாழுறாரா சீராய் மந்திரி

மந் :

எப்போதும் கத்தன் மறைமுறை மாறிடாதன்புடன் செனர்
என்றும் அவர்பதம் நன்றாகப் போற்றுவார் ராசனே

றெம் :

அஞ்சுகமென்மொழி மாதர்கள் கற்பில் பழுதின்றி இந்த
ஆதரை மீதிலே வாழ்கிறாரா சொல்லு மந்திரி

மந் :

வஞ்சிக் கொடியிடை கிஞ்சுகமென்மொழி மாதர்கள் கற்பில்
மாறுபாடில்லாமல் வாழ்கிறார் எந்தன் மன்னனே.

வசனம்

இதுதான் உமது நாடுநகரின் வளமைகள் அறிந்து கொள் வீராக.

இராசன் - விருத்தம்

***இராகம் : சங்கராபரணம்***

தேசத்தின் வளமைகேட்டுச் சிந்தையில் மகிழ்ச்சியானேன்
தேசிலங்கிய வென்னேச திறலும் மதிவல்லோனே
தூசணுகாது என்றும் துலங்கிய புத்திகூறி
வாசலில் மதிவல்லோனாய் மகிழ்வுடன் இருந்திடீரே.

வசனம்

கேளும் மந்திரி நாடுநகரின் வளமைகெட்டு மிகுதியும் சந்தோசமானேன் என்றும்போல் எனது வாசலுக்கு மந்திரியாயய் இருப்பாயாக.

## காட்சி – 45

***பாத்திரங்கள் :*** *சுலுத்தான் ராயன், மந்திரி*
***இடம் :*** *சுலுத்தான் அரண்மனை*

சுலுத்தானும் மந்திரியும் - தரு

மெட்டு : கொந்தவிழ் சுந்த அஞ்சல்
***இராகம் : ஹம்ஸத்வனி*** ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

ராயன் :

தந்தரயூகிர்த முந்திறல் வல்லப
விந்தைசேர் மந்திரியே எப்போதும்
இந்தரைமீதிற் குடிகளென் கட்டளை
ஏற்று நடக்கிறாரா நீ சொல்லு

மந்திரி :

சுந்தர விந்தர முந்த துருக்கியென்
துல்லிப வல்லபனே என் மன்னா
எந்தனாளுமுந்தன் குடிசனர் கட்டளை
ஏற்றுநடக்கின்றார்கள் ரின்பாக

ராயன் :

எனது பிரதானி வருசமொமொன்றிலும்
ஈந்து வரும் பெண்கள் திறையை
மனமகிழ்வாகவே எஸ்ப்பான்யா வாழும்
மன்னவன் தாறாரா வழுத்தும்

மந்திரி :

கனதனமேவும் துருக்கியையாண்டிடும்
காவலனே கேளும் றெம்மீலும்
கன்னியர் கப்பமனுப்பவில்லை இன்னும்
திண்ணமென் சொல்லறியும் தேர்வேந்தே.

வசனம்

கேளும் ராசனே எஸ்ப்பான் யாவை ஆளும் றெம்மீல் ராசன் உமக்கு வேண்டிய பெண்திறை இன்னும் அனுப்பவில்லை அறிந்து கொள்வீராக.

சுலுத்தான் - ஆசிரியம்

***இராகம் : அடானா***

கார்கொண்ட சத்தமுகில் பேர்கொண்டேதிர்த்துக்கதித்து வரினும்
கங்குல் பகலாகினும் பகலிரவதாகிலும் காராளி சுவறிவிடினும்
ஏர்கொண்ட புவனமெண்டிசைகளது
அசையினும் இரவியுடுதானுதிருனும் எந்திறம் தன்னை
எண்ணாத அற்பனும் அந்த இடறனாம் றெம்மீலுமே
பேர்கொண்ட எந்தனுக்கவனே அனுப்பிடும் பெண்களின்
திறைகள் தம்மைப்
பேணமோடெந்தனு க்னுப்பாதிருப்பது பெருத்திடு மனத்துணிவதோ
வார்முரசமதிர வெழும் மன்னர் எவர் வருகினும் வண்டவனுடல்
கண்டதுண்டமாய்
வாட்டுவேன் படைகளைக் கூட்டுவேன் கொடுகடிய
வஞ்சன வனஞ்ச நானே.

தரு

***இராகம் : கீரவாணி*** ***தாளம் : சதுஸ்ர ஏகம்***

ஆணவமிகுந்து போச்சோ றெம்மீலெனையும்
வீணனென்று எண்ணவாச்சோ
ஆணவமிகுந்துபோச்சோ அத்தனைக்கும் கெறுவாச்சோ
அட்டிடு பெண்திறை இட்டிடாதங்கவன்
விட்டு இருந்திட மெட்டுகள் வந்திட

பணத்தினில் மிகுத்திட்டானோ அல்லாது படைச்
சனத்தினில் கதித்திட்டானோ
பணத்தினில் மிகுத்திட்டானோ பத்திபுத்தி கெட்டிட்டானோ
பட்டணமெங்கணும் மட்டறு தூதரை
விட்டமர் பொருதிறை சட்டென வாங்குவேன்

துருக்கிதேசம் ஆளும் மன்னவன் சுலுத்தானெந்தன்
மகத்துவத்தைக் கேட்டால் தென்னவர்
வெருட்சி கொண்டு பின்னிடுவார் வரப்புரிந்த பெண்திறையை
மெத்த மனத்துணிவுற்ற தோரங்கவன் இத்தனை நாளுமெனக்
கனுப்பாவிட

நித்திரை செய் சிங்கக்குட்டியை
மான்குட்டி வந்து தட்டியெழுப்புமவ்வாறுபோல்
துட்டனாம் ெறம்மீலும் செய்தான் சட்டெனத் தானாபதியை
விட்டவனிடம் தறை திட்டமாய்க் கேட்டிடில்
உற்றிடு வழிவகை பிற்பாடு புரிகுவேன்.

**சுலுத்தான் - கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

தேனலர் சொலை சூழும் சிறப்புறும் துருக்கி
தேசம் மானலமாக ஆளும் மன்னவர் எனத வாசல்
ஈனமில்லாது செய்யும் இனிய மாகதனே நீயும்
தானாதிபதிகள் தம்மைக் சடதியில் அழைத்திடாயே.

**வசனம்**

கேளும் கட்டியகாறனே எனது வாசல் தானாதிபதிகளை அழைத்து வருவாயாக.

**கட்டியன் - வசனம்**

அப்படியே அழைத்து வருகிறேன் இராசனே.

## காட்சி – 46

***பாத்திரங்கள் :*** *தானாதிபதி*
***இடம் :*** *தெரு*

**தானாதிபதி வரவு – கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

கரனாரும் வாவிசூழும் கருதரும் துருக்கிதேசம்
மேனாளில் ஆண்டிருந்த வேந்தனாம் துருக்கி யென்போன்
தேனாரும் உரைப்படிக்குத் திறத்தினில் மிகுத்திலங்கும்
தானாதிபதிகள் வந்து சபை தனில் தோற்றினாரே.

**சபை – தரு**

தானாபதிகள் வந்தார் சபைதனில்
தானாபதிகள் வந்தார்
தானாபதிகள் வந்தார் கோனான துருக்கியின்
ஈனமில்மொழிகேட்டு ஏற்ற சபை தன்னில்
தானாதிபதிகள் வந்தார்.

**தானாதிபதி – சிந்து**

***இராகம் :*** *சிந்துபைரவி* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

01 :

வாரும் வாரும் தோழாயிது போதில் விரைவாய் நம்மை
மன்னன் வரச்சொன்ன தென்ன சொல்லும் கண்ணாளா

02 :

சீரும்பேரும் கொண்ட ராசராரெண்டாலுமே எந்தன்
பேரைக்கேட்டாலு மஞ்சுவார் பாருலகிலே

01 :

எங்கள் இறைவன்றெனக்கு ஆரும் கப்பமே கொடா
திருக்கிறாரோ நாம் அறிவோம் இப்புவியிலே

02 :

சங்கைநெறி துங்கப்பிரதாப தோழனே வாரும்
சட்டெனப்போய் நாம்மறிவோம் எப்படியென்று

## காட்சி – 47

***பாத்திரங்கள் :*** *சுலுத்தான் மந்திரி, தானாபதி*
***இடம்:*** *சுலுத்தான் மாளிகை*

முதலாம் தானாபதி – கவி
***இராகம் :*** *சங்கராபரணம்*

களித்தலைக் கழனி சூழும் கருதரும் துருக்கிதேசம்
தழைத்திட அரசு செய்யும் தராதிபா போற்றி போற்றி
உழைக்குமென் வேங்கைக் கொத்த உன் பணித்தூத ரெம்மை
அழைத்திடு கருமம் இன்னதென்று சொல்லுவீராக.

வசனம்

சரணம் சரணம் துருக்கிராசனே எங்களை அழைத்த கருமம் இன்னதென்று சொல்லுவீராக.

சுலுத்தான் - கவி
***இராகம் :*** *சங்கராபரணம்*

சரணமெண்டன தடியைப் பணிந்து நிற்கும் தானாபதிகளே
சாற்றக் கேளும்
பொருணரஞ்சுமெனக்குமே றெம்மீல்
தந்த பெண்திறையை அனுப்பாது விட்டதாலே
இத்தருண மதிலேயேகி அந்தத்திறை எனக்குத் தருவதோ
தராவிட்டால் சமரைச் செய்து
இரண களந்தன்னில் உன்னைப் பிடிப்பேனென்று இட்டமுடன்
கேட்டுவந்து இயம்பு வீரே.

வசனம்

கேளும் தானாபதிகளே றெம்மீலிடம் சென்று எனக்கு வரவேண்டிய பெண்திறையைத் தருவதோ வெண்டும் மறுத்தால் சண்டை செய்து ஊரைப் பிடிப்பேனென்றும் அவனிடம் அறிந்து வந்து சொல்வீராக.

தானாபதி – வசனம்

அப்படியே செய்கிறேன் ராசனே.

துருக்கி முதலாம் வரவு – மங்களம்

*மெட்டு : கன்னி இவள் தன்பேச்சும்*
***இராகம்** : புன்னாகரவாளி* ***தாளம்** : ஆதி திஸ்ரநடை*

முத்து நிகழும் பெரும் அத்தி சூழுலக
சிற்றரசர் களுமென் திறத்தினுக்கஞ்சி
வைத்து முறையாய்க் கப்பம் துத்திபுரியும் என்றும்
இத்தரைதனையாண்டு இறைவனாயிருக்க

என்னதுணிவுகொண்டு எனது திறை தராமல்
இன்னாள் வரைக்கும் றெம்மில் இருக்கவும் துணிவோ
பின்னாலவன் மொழியைத் திண்ணமாய் அறிந்து
நண்ணியவன் நகரை நாடியே பிடிப்பேன்

கன்னல் கதலிபூகம் கதித்துச் செழிப்புற் றோங்கி
சென்னல் விளைவுவாரி செழித்தகம் பொங்கி
இன்னல் வறுமைய கண்டெனது மனைமகவோ
டினிய சந்ததிநீட இருந்தரசா ள்வேன்.

## காட்சி – 48

***பாத்திரங்கள்** : தானாபதி 1, 2.*
***இடம்** : தெரு*

தானாபதி – சிந்து

*மெட்டு: கொந்தவிழ் அலங்சல் மார்பா...*
***இராகம்** : எதுகுலகாம்போதி* ***தாளம்** : ஆதி*

01 :

வாரும் வாரும் இப்போ தோழனே
எஸ்ப்பான்யா வாழும் மன்னவனாம் றெம்மீலிடம் இன்னேரம் சென்று
சேருமெங்கள் ஈசனுக்கவன் இட்ட திறையைச்
செப்பமுடன் கேட்டறிவோம் நட்பாய் நாங்களும்.

02 :

ஊரெங்கும் மிகவாய்யஞ்சுவார்
சுலுத்தானென்னும் எங்கள் மகாராசனுக்கு மிக்க ஒடுங்கி
பாருமவன் வீரியம் தன்னை மறுக்கத்திறை
பார்த்திபனாம் விட்டுவிட்டார் காத்திரமுடன்

01 :

என்னமதி எண்ணிவிட்டானோ இருநூறு பெண்
திண்ணமாய் வருசந்தோறும் எண்ணிக் கொடுத்தான்
இன்னாளில் மிடுக்குவந்ததோ அனுப்பாதந்த
ஈனனுமிருப்பதற்கு ஆணுவந்தானோ.

02 :

மன்னனுமே சொன்னபடிக்கு எஸ்ப்பான்யாதேசம்
வந்து சேர்ந்தோம் இந்த நேரம் அந்த றெம்மீல் முன்
திண்ணமதாகத் திறையினைத் தரும்படியே
தீவிரமாய் கேட்டறிந்து போவோமூருக்கு.

## காட்சி – 49

***பாத்திரங்கள் :*** *றெம்மியேல் அரசன், மந்திரி, தானாபதி 1,2, கட்டியன்*
***இடம்:*** *றெம்மியேல் அரண்மனை*

1ம் தானாபதி – கவி

திண்ணமாய் எசுப்பான் ஆளும் செம்மலே துருக்கி இராசன்
பெண்திறை அனுப்பாவிட்ட பிழைக்காக எம்மைவிட்டார்
இந்நேரம் திறையைத் தாரும் இல்லையென்றிடுகிற் சண்டை
தன்னையே தொடுப்பேனென்று சாற்றினார் அறியத்தானே.

வசனம்

கேளும் இராசனே நீர் கொடுத்து வந்த பெண்திறையைத் தரும்படியாகவும் தராவிட்டால் சண்டை தொடுப்பேனென்றும் எங்கள் இராசன் சொல்லச் சொன்னார் அறிவீராக.

றெம்மியேல் ஆசிரியம்

***இராகம் :*** *அடானா*

கெட்டியிது கெட்டியிது இப்படியு மாச்சுதோ
கர்வமது வந்துபோச்சோ
கேசரியுடன் வரியெதிர்த் ததனை வெல்லுமோ
கேட்டவர் நகைத்திடாரோ
மட்டியிது பெண்திறை அளிக்காது விடுகில்
நான் மற்பொருத வருவேனென
வாய்க்கரு வமான கதை சொல்லியே அனுப்பவும்
மனத்துணி விருந்ததாமோ
குட்டியவனு டைய தலை வெட்டியு லகத்தினிலு
ருட்ட வகை அறிகிலேனோ
கொடியவனை வெல்வதிற் படியில் அரிதாகு
மே குருபரா யேசுநாதா
பட்டியாட்டுக்கு இரட்டடி வயப்புலி
பயந்து பின்வாங்குமோதான்
படையிடத் தகலிடத்திடமோடு இது சணம்
பண்ணுவேன் திண்ணமீதே.

றெம்மியேல் - தரு

***இராகம் :*** *கீரவாணி* ***தாளம் :*** *சதுஸ்ரஏகம்*

தாறதில்லையெண்டு சொல்லடா
பெண்திறை நானும் தாறதில்லையெண்டு சொல்லடா
தாறதில்லையெண்டு சொல்லு வாறவன் வரட்டுமிரு
நூறு பொன்திறை யல்லாமல் வேறுஇல்லை எட்டியோடி

மெத்த இடம் கண்டு கொண்டானோ
வருடவிதம் இட்டு வந்த பெண்திறை ஏற்று

எட்டுணைப்பயமுமில்லை ஏசுநாதர் தாளையல்லால்
முற்றையுமகற்றிவிடும் சட்டெனவே ஓடிச்சென்று

குஞ்சரத்துக்கஞ்சுமோ சிங்கம்
தினைக்குருவி கூடினும் பருந்தை வெல்லுமோ
அஞ்சிடேனினியோர்போதும் அங்கவனுடன் பொருத
சஞ்சலங்கள் நீக்கியாள்வார் சாமியேகன் பூமிமீது

தேரில் வரும் மன்னவர்களும்
றெம்மீலெனும் மென் பேரினக்குயஞ்சி ஓடுவார்
கீரிபாம்புக்கஞ்சிடுமோ கெட்டி கெட்டியவன் துள்ளு
பாரினில்லொடுக் கிடுவேன் தீரமுடன் ஓடிச்சென்று

சாரையொண்டிரையதற்றியே தவிக்கும் நேரம்
தேரையொண்டெதிர்த்தவாறுபோல்
பாரடா அவனென்னுடன் போருக்கு வந்தாலவனை
வீரமுடனே அரிந்து ஊரினைப் பிடிப்பேன் சென்று

வெள்ளைத் தொப்பியெல்லாம் பறக்க
அவனுடைய கள்ளப்புத்தியாவும் தெறிக்க துள்ளுதுள்ளு
மீசைக்காறன் என்னத்தனர் சோனர்படை
அல்லா அல்லா என்று வீழக் கொல்லுவேன்கைவேலினாலே.

**றெம்மியேல் கவி**
***இராகம் : சங்கராபரணம்***

இந்தவித மறுமொழியனுப்பினானோ ஈனனாம்
சுலுத்தானுக்கினிமேல் நானும்
தந்திடேன் பெண்திறையைப் பொன்னால் கப்பம் தருவ
தென்றால் வரச்சொல்லு சடுதியாக
அந்தரமும் அகிலமுமே அசைகிண்டாலும் அமர்க்கவனும்
வந்தாலும் அஞ்சேன் நானும்
கந்தமலர்மாலை அணிவாரோ நீங்கள் கடுகினிற் சென்றே
யுரைப்பீர் களறினேனே.

**வசனம்**

கேளும் தானாபதிகளே பொன்திறை அல்லாமல் பெண்திறை தரமாட்டேனென்று உனது ராசனுக்குப் போய்ச் சொல்லுவீராக.

## காட்சி – 50

***பாத்திரங்கள்** : தானாபதிகள் 1, 2.*
**இடம்** : தெரு

தானாபதி – சிந்து

**இராகம்** : *சாமா*

01 :

அதிசுறுக்கெழுந்து வாரும் தோழா
அதிசுறுக்கெழுந்து வாரும் பதிதனைப்புரக்கும் எங்கள்
ஆதிபன் சுலுத்தானுக்கிப்போதிலே சென்றுரைத்திட

02 :

உறுக்கினான் மிகவும் கெம்பி முறுக்கினான்
றெம்மீலும் தம்பி கெறுக்களெல்லாம் மெங்கள் ராசன்
சுறுக்கிலே ஒடுக்கிடுவார்

01 :

தண்டு மிண்டு கொண்டெழுந்தான் அண்ட கண்டு சாரைக்கஞ்சி
நிண்டுதேரை முழித்தால் போல் இண்டு நாங்களும் முழித்தோம்

02 :

கத்திகட்டிச் சுற்றும் சக்கரத்துள்ளகப்பட்டமுயல்க்
குட்டிபோல் நடுநடுங்கி எட்டி எட்டிஓடிவந்தோம்.

## காட்சி – 51

***பாத்திரங்கள்** : றெம்மியேல் அரசன், மந்திரி, கட்டியன்*
***இடம் : றெம்மியேல் அரண்மனை***

றெம்மியேல் முதலாம் வரவு – மங்களம்

**இராகம்** : *அடானா* **தாளம்** : ஆதி

சிந்துவெண் நந்தருவி உய்ந்து நிதம்புனைந்து
இந்த எஸ்ப்பாஞ்ஞ நகர் சொந்தமாய் ஆள்கைசெய்து
சீருற்றநவமணி முடியது நேருற்றே புனையதிபதியெனப்
பேர்பெற்றே வாழும் றெம்மீல் என தாருற்ற நாமமே கேட்டிடில்
திக்கெங்கெணுமுளர் பக்கிட்டஞ்சுவார்
மிக்கத் திறலுறு வேந்தனும் நானே.

இந்தெந்தத் திசையுறு மன்னவர் எந்தனுக்கஞ்சி ஒடுங்குவார்
சிந்தையிற் கெறுவோடு பெண்திறை
தந்திடச் சோனக வேந்தனும்
திறமுற்றே தூதையனுப்பிட
கெறுமிக்க வுற்றதுவாகுமோ
பறவைக்கு அங்கவனுடல் தசை
இரையொப்ப வெட்டியே வீசியே

படை குண்டொடு அணிதள தண்டுகளோடு அவனின்நகர்
பிடித்தாளுகை செய்வேன்

எந்தனின் நாடுநகர் சிந்து நன்மாரி பெய்து
சுந்தர மேவுசென்னல் ஒண்டுபல்கோடியாகி தேங்கியே
கொடிமிடி பிணிகளும் நீங்கியே சந்ததி வரவர
ஓங்கியே செல்வ அலங்காரம் தாங்கியே
பாங்குடன் நன்மையும் தழைவுற்றெண்டுமே
இழைபொற்பூவையர் பிழையற்றன்போடு பெருகியே வாழ்க.

கண்டொடு காலிகளும் எண்டெண்டும் சாலிகமம்
நண்டொண்டி வாழ்வு பொங்கி
இண்டெண்டும் தாழ்வு மங்கி
கானற்ற மருமலர் தும்பையும் தானுற்றிலங்கவே சங்கையும்
மேனுற்ற எம்குலச்சந்ததிதேனுற்ற மொழியொடு கல்வியும்
தரையிற் பரிவொடு
பெருகித்திடமொடு வளரச் சந்தியோகுமையோர் தான் துணையே.

## காட்சி – 52

***பாத்திரங்கள் :*** *சுலுத்தான்*
***இடம் :*** *சுலுத்தான் அரசன் மாளிகை*

முதலாம் தானாபதி – கவி
***இராகம் :*** *சங்கராபரணம்*

என்னெண்டு சொல்வேன் மன்னா ஏந்தலாம் றெம்மீல் என்போன்
வன்னிபோல்க் கோபம் கொண்டு மாதர்கள் நிறைதராமல்
பொன்திறை தருவேனெண்டு போயுமக்குரைக்கச் சொன்னார்
இண்டிதை அறிந்து கொள்ளும் இறைவனே இயம்பினோமே.

வசனம்

கேளும் ராசனே றெம்மீல் ராசன் பெண் திறை தரமாட்டேனென்றும் பொன்திறை என்றால் தருவேனென்றும் உமக்குச் சொல்லச் சொன்னார் அறிவீராக.

இரண்டாம் வரவு சுலுத்தான் - ஆசரியம்
***இராகம் :*** *அடானா*

வானத்துறும் சோதிமதியோடு இரவியுடு வானவர்கள்தானதிரினும்
மகமேரு இடியினும் கடலோடி
வடியினும் மந்தரம் பொடிப்பொடியினும்
கானத்துறும் கூழி கழுகோடு நரி அரிகள் கதறியே பதறி விழினும்
கார்பகல தாகினும் பகல் இரவதாகினும் கதிர் மறுபுறம் மாறினும்
பாணொத்த முடிபகிபர் தானொத்து வந்தெனது பாதத்திலே பணிகுவார்
பயமின்றி என்னையொரு அரசனென மதியாது பழிப்பாகவே நகைத்து

ஈனத்தனத்தொடு எதிர்மொழி மறுத்திடவும் இப்படி அகந்தையாமோ
என்வலிமை போகுமோ தன்வலிமையாகுமோ இடறுபுரிவேன்
அவனையே.

சுலுத்தான் – தரு

**இராகம்** : *கீரவாணி* **தாளம்** : *சதுஸ்ரஏகம்*

பெண்திறை இல்லையெண்டானோ றெம்மீலவனும்
பொன்திறை தருவேனெண்டானோ
பெண்திறை இல்லையெண்டானோ
நிண்டு கம்பீரம் கொண்டானோ
இண்டவனுடலை நானும்
கண்டதுண்டம் பண்ணிடுவேன்

பண்டுபரவணி தொட்டு அண்டு ஒவ்வோர் வருசமும்
செண்டெனக் களித்த கப்பம் இண்டுதராதே மறுக்க
என்னமதி எண்ணினானோ சேனையின் பலம்
தன்னால் மிகக் கெம்பினானோ
பார் பார் அந்த ஈனனைப் பிடித்து உயர் கான நரி நாய் கழுகு
தான் அரிந்த இருகூறாய் நானரிந்து வீசிடுவேன்

சண்டப் பிரசண்டன் போலே
சண்டைக்கஞ்சேனிண்டவனும் இண்டெனக்கனுப்பும் மொழி
விண்டிடக் கேட்டு நாராசம் செவியினில் ஊற்றும் வாறுபோல்
மிகுந்தசினம் அவிகாரம் மாகு தூற்றுப்போல்
பார் பார் இப்போ சற்றுக்குள் அவனை
எலிப்புற்றுக்குள் அரவம் பூந்து
எற்றியிழுத்தவாறாகச் சட்டெனப்பிடித்திடுவேன்

சொல்லெரும் திசையெண்டிசை உள்ள மறுமன்னவர்கள்
எல்லவரும் கூடினாலும் வெல்ல என்னை ஏவிடாத
இறையவனாயிருக்க அவனும் எந்தன் திறையினையோ மறுக்க
அடடா சென்று எட்டியே அவனை ஆட்டுக்
குட்டியைப்போலே பிடித்துக்
கட்டியே கொணர்ந்து கெறு விட்டகலச் செய்திடுவேன்

எட்டடி வேங்கைக்கிணையாய் முட்டுமோ பசுவின் கன்று
தட்டிடவோ என்னுரையை மெட்டுகளும் மிஞ்சிப்போச்சோ
தரைதனில் லெனக்கும் மேலாய் நல்லதும்
பெண்கள் திறைதனையனுப்பிடாதால்
எங்கள் சமயச் சின்னத்துப் பண்ணாத அந்தப்
பண்ணத்து றெம்மீல் அவனை
இன்னேரம் என்வேலினாலே சின்னாபின்ன மாயரிவேன்.

## சுலுத்தானும் மந்திரியும் தர்க்கம்
## தரு - உரையாடல்

*மெட்டு : திருவளர் தண்டலை*
***இராகம்:** கல்யாணி* ***தாளம் :** ஆதி*

**அரசன் :**

மந்தரப்பூயாசலனே மந்திரியே வாரும்
மறுத்து விட்டான் பெண்திறையைத் திடத்துடனே றெம்மீல்

**மந்திரி :**

இந்தரையை யாளுகின்ற இறையவனே அவனுக்
கிருந்தகெறு அவ்வளவோ அருந்திறை தராமல்

**அரசன் :**

அமர்புரிய வல்லவனெண்டே யுரைத்து விட்டான்
ஆகா அவன் அகங்காரம் அவ்வளவதாச்சோ

**மந்திரி :**

சமர்புரிந்து அவனுடலைக் கண்டதுண்டஞ் செய்வீர்
தங்கமுடிதனைப்பூண்டு எங்களை யாழ்இறையே

**அரசன் :**

எலிக்கு அஞ்சிப்பூனை பயந்தொளித்திடவும் போமோ
இடறவனுடலை நானும் வெகுவிரைவில் அரிவேன்

**மந்திரி :**

தவத்தினையாள் மகிபதியே தானைகளைக்கூட்டி
சண்டை செய்து அவன் தேசம் இண்டுமுற்றாய்ப்பிடிப்பீர்.

**சுலுத்தான் - ஆசரியம்**
***இராகம் :** அடானா*

கோடையிடி குமுறுமோ குழவிகுரல் பேசுமோ குரை
கடல்கள் திரைமோதுமோ
கொக்கரித்திடுதவளையைச் சர்ப்பமுண்ணுமோ கூறுமென்பெயர் கேட்டிடில்
பாடையாய் உடலை விட்டுயிரெடுத்திட யமன் பயமற்று வருகுவானோ
பங்கமுற நாய் நரிகள் உண்ணஇரை தேடுமோ பாரவர் நகைத்திடாரோ
ஆடையாபரணமொடு சேனை பல முற்றதால் அதிக கெறு வந்துபோச்சோ
அண்டர் சேனைகள் வந்தெதிர்த்தாலும் அவளை நான் அடக்காமல் விடுகுவேனோ
வாடை பொடி சேர் யூக மதிவல்லப சமரில் வல்ல தளகத்தனோடு
வளர்சேனைகளை இங்கு வரவழைப்பாய் சண்டை
வகையோடு தொடுப்போம் இனியே.

**வசனம்**

கேளும் மந்திரி அல்லாவின் துணையாலே றெம்மீலுடன் சண்டை செய்யப்போவதற்கு நமது சேனைகளையும் சேனாதிபதியையும் வரும்படி செய்வாயாக.

**மந்திரி – வசனம்**

அப்படியே செய்கிறேன் இராசனே.

## காட்சி – 53

***பாத்திரங்கள் :*** *துருக்கி கப்பித்தான்*
***இடம் :*** *தெரு*

**துருக்கி கப்பித்தான் வரவு**
**கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

தரியலர் கெடிகெட்டோடத் தானை சேனைகள் சுற்றாட
விரிசுடற்கிரணமின்ன விளங்கு வேலிடையிற் துன்ன
கரிநகர் வலிமை துன்னக் காவலன் அழைத்ததாலே
பதியிசை அதனில் சேனாபதிசபை வருகின்றாரே.

**சபை – தரு**

வீரதுரந்திர தீரவொய்யார விதறண சூரனெனும்
கப்பித்தான் பாரமுறும் படைசேனைகள் சூழ் பதிமீது
வந்தனனே கப்பித்தான் ஒண்ணலர் நெஞ்சமொடுங்கி
நடுங்க உகந்த திறத்தனெனும் கப்பித்தான் கொன்னுன
வேல்க்கரம் தன்னினிலங்கக் குறிப்புடன் வந்தனனே
கப்பித்தான்.

**கப்பித்தான் - தரு**

***இராகம் :*** *ஹம்ஸத்வனி* ***தாளம் :*** *ஏகம்*

கிரணக் கிருடமுடி அரசர்க்கரசரான
கெறுவத்துரை சுலுத்தான் அரசன்யெனை அழைத்தான்
பொருணச் சமர் வந்ததோ பொருந்தும் திறை கொடாமல்
மறு மன்னவர்கள் யாரும்
மறுத்து விட்டாரோ

எரியப்பரியொப்புரக் கெறுவத்துறு மருவார்
சரியச்சமர்புரியும் தத்துவன் நானே
கரியைக் கரிமுறிக்கும் பரியத் தொடலவரைப்
புரியப் புற வதைக்கும் பூபதி நானே
அல்லாதெமது வேந்தன் சொல்லை மறுத்
துலகோர் கல்லைப் புரிவதற்குக் கவனம்
கொண்டானோ
வல்லமகிபர் தம்மை அல்ல றப்போர் செய்து
வெல்ல அவர் மனதில் விருப்பமுற்றாரோ

வேலைத்தரித்த சமர்கோலக் களத்தினில் லென்போலத்
திறமுற்றாரிப்புவியில் உண்டோமோ பாலைக் கருமையாய்
நன்னூலைச் சிறிதாயெண்ணும் கோலத்திறைவன்
மனக் குறிப்பைப் போயறிவேன்.

## காட்சி – 54

***பாத்திரங்கள் :*** *சுலுத்தான் ராயன், மந்திரி, கப்பித்தான்*
***இடம் :*** *துருக்கி அரண்மனை*

சந்தவிருத்தம்

***இராகம் :*** *சங்கராபரணம்* ***தாளம் :*** *ஆதி*

மரகதமணிமுடி சிரமதில்லணி திறல் மகிபா செயசரணம்
மண்டொலி கொண்டமலர் வென்றிடு வெற்றிகொள்மன்னா செயசரணம்
புரவலருரமொருயிருசரணமடி தொழு பேரரசே சரணம்
பொங்கமிகுந்து மலங்கிர்த புகழுடையாய் சரணம்
இரவியை நிகர் கிருடரசர்கள் திறை தம்மிறையே செயசரணம்
இன்னகர் மன்னுயிர் தம்மையும் முயிரென எண்ணிடுவாய் சரணம்
உரமுறு கடகரிமிசை வரும் அரசே உன் சமூகந்தனிலே
உத்தம வித்தக மொத்து அழைத்ததை உரை பகர்வாய் சரணம்

**வசனம்**

சரணம் சரணம் சுலுத்தான் ராசனே என்னை அழைத்த கருமம் இன்னதென்று சொல்லுவீராக.

**சுலுத்தானும் கப்பித்தானும்**
**தரு – உரையாடல்**

***மெட்டு :*** *கிரணப்பூரணச்சந்ர...*
***இராகம் :*** *துந்துவராளி* ***தாளம் :*** *சதுஸ்ரஏகம்*

**சுலுத்தான் :**

என்னரிதாகிய நன்னயஞ்சேர் தளகத்தனே நானும்
ஏதெண்டெடுத்துயிப்போதுரைப்பேன் தளகத்தனே.

**கப்பித் :**

உன்னரிதாகிய மின்னணிவேல் மகிபாலனே
எனக் கோது மென்னண்டு யிப்போதறிய மகி பாலனே.

**சுலுத்தான் :**

மன்னவன் றெம்மீலும் பெண்திறையைத் தள கத்தனே தர
மாட்டேனென்று கெறுக்காட்டுகிறான் தனகத்தனே.

**கப்பித் :**

என்னோ அவன் மனம் தன்னையிப்போ மகிபாலனே நானும்
ஏகி அடக்கித் தருகிறேன் பார் மகிபாலனே

**சுலுத்தான் :**

பொன்திறை தன்னைத் தருவேனென்றான் தளகத்தனே
பணம் புக்கினதா மிக அச்செருக்கா தளகத்தனே

**கப்பித் :**

மன்னவனே எங்கள் தென்னவனே மகிபாலனே
நீரும் வாரும் மிப்போ சென்று போர்தொடுப்போம்
மகிபாலனே.

**சுலுத்தான் கவி**

***இராகம்*** - *சங்கராபரணம்*

அஞ்சாத நெஞ்சமொடு எதிர்த்து ஒன்னார் அகங்
கலங்கக் களத்தினில் முன்பாகச் சென்று
பஞ்சாடை அறுத்தெறியும் வீரசூரப் பண்புற கப்பித்தாமேபகரக்கேளாய்
மஞ்சாரும் மலைப்புயத்தான் றெம்மீலோடு மற்பொருதப் போவதற்கு மகிழ்வதாக
எஞ்சாது நமது படைத்தளங்க ளோடு இப்போது புறப்படடுவாய் இயம்பினேனே.

**சுலுத்தானும் கப்பித்தானும்**

**தரு - உரையாடல்**

***இராகம்:*** *ஆனந்த பைரவி* ***தாளம் :*** *மிஸ்ரபாபு*

**சுலுத்** :
வேலைசுற்றுலகானதிற்திறை வீரதத்துவனே சமர்
கொண்டுவந்திடுவோம் சுறுக்குடன் நிண்டு நடப்பாய்

**கப்பி** :
ஆலமொய்த்திடு வேலணைத்திடு மாதிபற்கரசே சம
ரானதைச் செயநான் எழுந்திடுவேன் நடந்தெடுவேன்

**சுலுத்** :
தாளதம்புரு மேளகொம்பு தடாரி முழங்க எஸ்ப்பான்
தன்னையாளும் மன்னனின் கெறுதன்னையெடுப்போம்

**கப்பி** :
வேளவெம்பரி சூழுசேனைகள் தாழிடர்களே வாளால்
வெட்டியாக முருட்டுவேனதி திட்டமீதறியும்

**சுலுத்** :
ஏழை றெம்மீல்தன்னை என்கைவேலினால்க் கொய்தால ன்றி
எஞ்சினங்களடங்கிடாது கனங்கொள் சூரரே

**கப்பி** :
நாளையென்று விடாதடர்ந்து யிவ்வேளையிற் சென்றுஅவன்
நாட்டினில்திறல் காட்டியே கொடிதூக்கிறே னறியும்

**சுலுத்தான் - கவி**

***இராகம் :*** *சங்கராபரணம்*

வீரரணகணத்திலடையவர்கள் சென்னி விரைந்தருத்திப்
பருந்தருந்தப் போடுகின்ற
சூரனெனப் புகழ் படைத்த எனது நேசத்துல்லிப கப்பித்தாமே
சொல்லக்கேளாய்
ஆரபரிவாரமோடு றெம்மீல் என்னும் அரசனுடை
ஊரதில் வந்தணுகினோம் நாம்
தீரமுடன் சேனை படைகளை நிறுத்திச்செருணர் செய்திதூதரினால்
தெரிவிப்பாயே.

**வசனம்**

கேளும் கப்பித்தாமே றெம்மீலுடைய தேசத்தில் வந்து சேர்ந்தோம் சண்டையின் செய்தியைத் தூதரால் அவனுக்கு அறிவிப்பாயாக.

**கப்பித்தான் - வசனம்**

அப்படியே செய்கிறேன் இராசனே.

**கப்பித்தான் - கவி**

***இராகம் : சங்கராபரணம்***

வீராதிவீரனான விறலுறு தூதனே நீ சூரனென்னச் சுறுக்கினில் நடந்து சென்று
பாராளும் றெம்மீல் முன்பு படைக்கு நாம் எழுந்து யிங்கு
காராளிபோலே சூழ்ந்த கதை சொல்லி வருகுவாயே.

**வசனம்**

கேளும் தூதனே றெம்மீலிடம் சென்று நாங்கள் சண்டைக்கு வந்த செய்தியைத் தெரிவிப்பாயாக.

## காட்சி – 55

***பாத்திரங்கள் :*** *தூதன், றெம்மியேல் அரசன்*
***இடம் :*** *றெம்மியேல் அரண்மனை*

**தூதன் - கவி**

***இராகம் : சங்கராபரணம்***

காவலர்கள் போற்றுகின்ற துருக்கிராசன் கருதரிய
சேனைபடைகளையும் கொண்டு
ஆவலுடன் அமர்புரிய மனதிலெண்ணி அரசனே உமது பதியதனில்
வந்தார் தாமுமவருடன் போர்க்கோலம் செய்யச்
சம்மதமோ அல்லாதும் மூர்தனைத் தாரீரோ
வேறுமதிதய மதிலெண்ணம் தன்னை விளம்புவாய்
வேந்தனுக்கு விளங்கத்தானே.

**வசனம்**

கேளும் ராசனே எங்கள் சுலுத்தான் ராசன் உம்முடனே சண்டைக்கு நிற்கும் செய்தியை உமக்குத் தெரிவிக்கச் சொன்னார் அறிவீராக.

### இரண்டாம் வரவு றெம்மியேல்
### ஆசரியம்

***இராகம் : அடானா***

கருடன் குளிக்க உதிரம் கொப்பளிக்கக் கண்டவர்
கள் வெருவியோடக்
கவர்ந்தங்கு பேய்களும்
நாய்களும் ஈரலைக் கவ்விப்பிடித்துதறவே
கெருடன் பருந்துலாவித் தசையருந்திடக் கெடிநெடிய கரவசியினால்
கெட்ட அவனுடல் தன்னை வெட்டாமல்

விடுவேனோ கெறுவமது வந்துபோச்சோ
வருடங்கள் தோறும் மென்னுடைய திறை வாங்கியே
வலிமைகள் மிகந்தோதான்
வண்டலனுடல் கண்டதுண்டமாய் வீழவே வாட்டியே தாட்டிகமுடன்
கெருடன் தனைக்குருதி கண்டிடக் கண்டிடத் தீவிரமதாக யானும்
செய்குவேன் வையமதில்
உய்குவேன் னெம்பிரான் செப்பருங் கிருபையாலே.

**சிந்து**

***இராகம் :*** *கேதாரகௌளை*

பரிமிசை வருநரர் பதியவரும்
பதமதும் பணிவதும் அறியாமல்
சரிசரிபடையவனெடுத்துவரத் தத்துவமுமாமோ

அரிகரி உயிர்வதைபுரிவதுபோல்
ஆதியின் பதமணியாய் வணங்கா உரமுறு சுலுத்தான்
வந்தவழி ஓட்டுவிப்பேன் நானே.

எட்டுணையஞ்சேன் சோனர்களின்
மொட்டைகளெல்லாம் பறந்திடவே தட்டியே பதமாய்ச்
செருக் களத்தில் தான் விழச்செய்வேனே.

மெத்தவேயவனும் திறை வாங்கித்
தத்துவம் மிகவும் மிஞ்சினதோ
இத்தின மென்கை வசியதனால்
இடறுபுரிவேனே.

**றெம்மியேல் மந்திரி தரு – உரையாடல்**

***இராகம் :*** *பிலஹரி* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

**அரசன் :**
வாரும் வாரும் மதிவல்லவா சமர்
வந்ததிப்போததிமெல்லவா
போரைச் செயித்திட நீ வல்லவா உந்தன்
புத்தியென்னெண்டு நீ சொல்லுவாய்

**மந்திரி :**
ஆருக்குமென்புறுவீரனே சமர்க்
கஞ்சாத நெஞ்சுறு சூரனே இந்த
ஊருக்கு நல்லுபகாரனே சமர்க்குற்றணி
செய்திடும் தீரனே

**அரசன் :**
சுலுத்தானவனை வெல்ல வல்லையோ சமர்த்
துணிவதும் மென்னிடமில்லையோ இந்தத்

துலத்திற் தொப்பி எல்லாம் பறக்கவே கிட்டித்
தான் வெல்லுறேன் கொடி சிறக்கவே

மந்திரி :

பெலத்த பீரங்கி மருந்துகள் கொண்டு
தலத்திலெல்லாம் தயார் செய்துமே
இலக்கத்தாலவனை வாட்டியே பிடித்
தேற்றசெய விருதைச் சூடுமே

**அரசன்** :

கத்தியெடுத்துப் பிடிக்கின்றேன் வீர
கண்டாமணியை அடிக்கிறேன் போரில்
புத்தியாய் ஆடிச் செயிக்கிறேன் வயப்போந்தை
போல்ப் பாய்ந்து மடிக்கிறேன்

மந்திரி :

சுத்த படைத்தளகத்தனை வெகுதுல்லிபமாய்
நிமிசத்திலே வரநத்தி அழைத்து விரைவுடன்
அந்தச் சத்துருக்கள் தமை வெல்லுமேன்.

**அரசன் - கவி**

தண்டெடுத்துச் சமர்புரிய வருமொண்ணார்கள்
தங்களுடல் பங்கமுறத் தடித்துவீழ்த்தி
துண்டெடுத்துக்கழுகு கங்கமருந்தப்போடும் துல்லிப வல்லபசேனை
சூரன் தன்னை மண்டெடுத்துத் தொனியறையும்
முரசுமாற்ப மந்திரியே வரவழையும் மகிழ்வினோடு
இண்டெடுத்து நிண்டு சுலுத்தானை வெல்வோம்
யேசுபரன் பாதமலர் எண்ணித்தானே.

**வசனம்**

கேளும் மந்திரி சுலுத்தானோடு சண்டை செய்யப்போவதற்கு நமது சேனாபதியையும் சேனைகளையும் வரும்படி செய்வாயாக.

மந்திரி **– வசனம்**

அப்படியே செய்கிறேன் இராசனே.

## காட்சி – 5G

***பாத்திரங்கள் :*** *கப்பித்தான்*
***இடம் :*** தெரு

றெம்மியேல் கப்பித்தான் வரவு

ஒப்பரும் பதாதிசூழ் ஒண்ணலர் நடுங்கித்தாழ
மற்பொலிபுயமிலங்க வாள்வில்வேல் மகிழ்ந்து
துன்ன இப்புவியாள்கின்ற இறைவன் றெம்மீலுரைக்கு
கப்பித்தான் பரிமீதேறிக் களரியில் வருகின்றானே.

**சபை – தரு**

பொன்னணி மவுலிபுனை றெம்மீலதிபன்

தன்னரும் தானத்தலைவன் வந்தனனே
அணிஅணிபடை முன்னணியது பரவ அதிவித
சேனாபதியும வந்தனனே துணிவுறு மருவாரடியது
பரவ சுத்தவீரத்த னகர்த்தன் வந்தனனே.

கப்பித்தான் தரு

***இராகம் : குந்தலவராளி*** **தாளம் : ஆதி**

சீரார் செங்கனக மளுத்திடு
சிறந்த மாமுடி புனைந்த பூபதி
தாரார் றெம்மீலெனும் மகிபதி
தழைத்த மாபதி அழைத்த சீர்பதி
சரணமலர் பரவுகிரண கொலுவருகு
விரைவாயெனை யழைத்த விதமறிவேனே

போராடித் தேர்பரி கரியொடு
புகுந்தரோ கெறு மிகுந்த மாற்றலர்
ஆராரும் சண்டைகள் செய்திட
அடுத்தரோ பகை தொடுத்தரோவிது
அனைவர் சிரமுடல் கனிரண களமுதிரத்
திரணபானமது புரிகுவேன் நானே

இங்கேறெனுமென் பெயர் கேட்டிடில்
சினத்த சிங்கமும் மனத்தொடுங்கிடும்
அங்கே வருமொண்ணல யார்ரெண்
டறிந்து அவருடல் களைந்து வேலினால்
அலகை நரி கழுகு விரைவினிரையுணவே
புரியமெனது திறம்
பூவறியாதோ

எங்கோனுக்கேயெதிராகவா எழுந்து
குடிசனர் வளைந்து ஊரிலே
அங்கேதுங்க லகமெடுத்திட
அடுத்தனே அவர் மிடுக்கடக்கிட
அரசனழைத்தனரோ விபரமெதுவெனவே
விரைவாயறிவேன் சென்ற வேந்தன் முன்நானே.

**கப்பித்தான் - விருத்தம்**

சீனர் அராபர் மராடர்கள் அடிதொழு திறமுடையாய் சரணம்
செங்கிரணத் தொளிர் தங்கிய மணிமுடி சிரமணிவாய் சரணம்
பானை நிகர்த்திடு மாலை புனைந்திடு பார்த்திபனே சரணம்
பார்முழுதும்பணி வீரதுரந்தரப் பண்புடையாய் சரணம்
ஊனசமர்க்களமானதிலே திறமுடையாய் செயசரணம்
உத்தம வித்தக மொத்தகயத் திறலுற்றவனே சரணம்

ஈனமகற்றினிதான கொலுச்சபையான திலன்புடனே
இன்புறு சேனையோ டென்னை அழைத்ததோதியம் பிடுவாய் சரணம்.

வசனம்

சரணம் சரணம் றெம்மீல் ராசனே என்னையும் சேனைகளையும் அழைத்த கருமம் இன்னதென்று சொல்லுவீராக.

## றெம்மீலும் கப்பித்தானும்

### தரு – உரையாடல்

**மெட்டு:** *கன்னிஇவள் தன் பேச்சும்*

**இராகம் :** *ஹரிகாம்போதி* **தாளம் :** *ஆதி*

ராயன் :

வீரத்திறத்தனே பொல்லாததுறுக்கி வந்துபோரைத்
தொடுத்ததாலிப் போதுன்னை யழைத்தேன்

கப்பித் :

தாரைபுனை மன்னா இக்கணத்தில் துலுக்கன்தன்னை
போரிற் செயிர்த்துமக்குப் புகழ்தாறேனிறையே

ராயன் :

மறுமன்னவனென்றென்னை மதித்திடாதே யமர்க்கு
வருமன்னவனெ என்கை வாளுக்கிரை கொடுப்பேன்.

கப்பித் :

தருமம் தழைக்குமெந்தன் தலைவனே சுலுத்தான்
மருமம் மரை வென்டு தருகிறேன் வாரும்

ராயன் :

பேரும் பெருகுமெந்தன் பெலமென்னிடமிருக்க
ஆரும் மதிக்கவாகும் மீரானைக் கொல்வேன்

கப்பித் :

காரும் காரும் மெந்தன் காலில் விழுந்திட்டாலும்
சேரும் படை முற்றாகச்சிதைத்தழித் திடுவேன்.

### வேறு – சிந்து

**மெட்டு :** *கொந்தவிழ் அலங்கல் மார்பரி...*

**இராகம் :** *எதுகுலகாம்போதி* **தாளம் :** *ஆதி*

ராயன் :

கொஞ்சமும் பயமில்லாமலே துலுக்க மன்னன்
கோபமுடன் சண்டைசெய்ய வேகமாய் வந்தான்
வெஞ்சினங்கள் மிஞ்சுதென் செய்வேன் றெம்மீலெண்டயித்
தேசமெங்கும் பேசுமென் திறங்களும் போச்சோ.

கப்பித் :

குஞ்சரத்துக்கஞ்சுமோ சிங்கம் தினைக்குருவி
கூடுகிண்டாலும் பருந்தை நாடி வெல்லுமோ
மிஞ்சு சுறைபோல்ப் பிடிக்கிறேன்
சமர் செய்களம் மீதினிலியமன் போலே வேகி நிற்கிறேன்

ராயன் :

சேனைபடை மெத்த உள்ளவன்
வீராதி வீரச் செங்கனக மாமுடி புனைந்த சுலுத்தான்
ஏனைதானே தன்னையணியாய் விடுத்து
அந்த ஈனனனைப் பிடித்திடுவோம் தானேகியங்கு.

கப்பித் :

பூனையை எலி எதிர்க்குமோ துலுக்க மன்னன்
போர் புரிந்து உம்மையிந்தப் பாரில் வெல்வானோ
தேனலரும் வெல்லைவெற்பிலே உதித்தயேசு
தேவன்தாள் துணையைக் கொண்டிப்போது செல்லுவோம்

ராயன் :

சீரற்றவுடனே தேரையும் எதிர்த்து அமர்
செய்திட வாகுவிங்கெய்து சுலுத்தான் கூட்டமான
சேனைகள் எல்லாம் அல்லல்லாவெண்டு
கும்பிட்டோடக் கெம்பீரம் கொண்டமர் செய்வோம்.

கப்பித் :

போர்க்களத்தில் போய் எதிர்க்கிறேன் இலவம்பஞ்ச
போலே மருவாரையைப்பார் போக்கி எறிவேன்
சாற்றரிய யேசு தாயாரின் துணைத்தான் கெதி
தங்க முடி மன்னனே தளத்துடன் செல்வோம்.

**சபை – கவி**

***இராகம் : சங்கராபரணம்***

குதித்தெழுந்து சேனைபதாதிகளும் சூழ கொடிவெடி தம்பூர்
தொனிக்கக் குதிரை வீரர் கதித்தெழுந்துயிருமருங்கு ராசன்
மணிவகுத்து கரிநிறை சூழ்ந்திடத்துலுக்கன் ஏசென்
சேனை கொதித்தெழுந்து றெம்மீலுமிருக்கு மந்தக் கூறறியப்
பதியதனில்க் குறிப்பாகச்சென்று
எதிர்த்தெழுந்துமன்னரும் சேனைகளும் கூடி எதிர்த்திட்டார் சண்டை
செய்யத் தொடுத்திட்டாரே.

**சண்டை – தரு**

***இராகம் : குந்தலவராளி*** ***தாளம் : மிஸ்ரபாபு***

சுலுத் :

மெத்த வித்தகமெடுத்தே திறையைத் தராமலே மறுத்தாயொடா
அத்தை நெஞ்சினில் நினைந்தே படையைத் திறத்தொடு எடுத்தேனடா
அகத்திற்றுயர் மிகுத்துற்றிடவதைத்துப் புவியினிற் தத்திட
அரிந்துண்ணுடல் பருந்துண்ணிட விருந்திண்டெறிவேனே.

றெம் :

கத்தபங்கத்திடும் வாறென மெத்தமெத்தக் குதிக்காதடா
சித்தம ஞ்சிடாதெதிர்த்தேயுனை இத்தனைக்கும் பொறுத்தேனடா
தெறித்துன்னுடல் தறித்துத்தலை பறித்துக்குடல் சரித்தோரிகள்
தின்னக் கழுகுண்ணச் சடம் மண்ணுக் கிடுவேனே.

சுலு.கப்பி :

சீறியே பாய்ந்திடும் வேங்கை முன்னோடியே வந்தொரு மான்கலை
கூடியே போர்புரிந்தே புலிநாடியே பின் பயந் தோடுமோ
கொடுங்கூழிகள் பயந்தோடவே சடஞ்சேரி நீரிடம் சேரவே
குட்டித்தொடை தட்டித்தலை வெட்டியெறிவேனே.

றெ.கப் :

கூறியே கொக்கரித்தேயடா வீறியே பூனையின் மேலெலி
ஏறிய விளையாடிடுகதை போலவே சொன்னாயிங்குனை
இடித்துப்போர் முடித்திந்தா படித்துப் பல்வொடிப்பேனடா
இப்போதுரைதப்பாதடா மெய்ப்பாயறி மூடா.

சுலுத் :

சீருடனூர்க்குருவி வெகுதூரமாகப் பறந்தாலுமே
ஆருமதைப் பருந்தாகுமோ பேசுவாரோ பெருந்தீரனே
அள்ளித்திறல் தள்ளித்தலை துள்ளச் செவ்வெள்ளத்துற
அடாமூடனே மதிகேடனே பகுபாடறிவாயே.

றெம் :

பேருறுந்துட்டரின்டென்முன் பேருரைக்கிற் பிறங் காட்டுவார்
காருறும காகமும் குளித்தாலும் வெண் கொக்காகிடுமோ
கசடாவுனதசசோறிகள் நிசமாகவே தரைமீதினிற்
கானத்தெழ நானொத்துறேன் னீனப்பயலே பார்.

சுலு.கப் :

அத்தனைக்கும் கெறுவானதோ பித்தனே பொன் திறையானது
நத்திநீயும் தருவேனென வுற்றகந்தை மொழிகூறவே
நரர்காணவே யினிநாணவே உனை நானுமே தரைமீதினில்
நம்புதரமம்பாரமெழும்படி கொய்வேனே.

றெம்.கப் :

மெத்தமெத்தக் குதிக்காதடாயித் தினத்தொடு பரிபோல்ப் பொர
கிட்டிவெல்லத்தகு மோகிர்த தொப்பியெல்லாம் பறந்தேவிழக்
கெறுவோடவே நலநீடவே பலர்
கூடவே தலமீதினில் கேடாமதிமூடா பகை நாடா தரிவேனே.

### வேறு – சிந்து

***இராகம் : ஆனந்தபைரவி*** ***தாளம் : ஆதி***

றெம் :

இந்தத் தாரணி முழுதையுமே நான்
அந்தத்தோட ரசது செய்யவே
தொந்தத்தோடமரது புரியவே
வந்துற்றாய் மனது கொதிக்குதே
இடருக் குரியாறிட
இப்படியினில் மடமைத்தன மற வாட்டுவேன்னானே

சுலுத் :

சிந்தித்தே செருணர்களத்தினில் முந்திப்போர்
பொருதிட வந்ததால் நிந்தித்தாய் நீசனே சிரமிது

பந்தைப்போல் உருளவே அரிகுவேன்
நிறையுஞ் சினமது குறையும்படியெயென்
பொறையும் திறமையும் புவியினில்லறிவாய்

**றெம்.கப் :**

என்னடா நீசனே என்வலுதன்னை நீயறிகிலேயோ சமர்
பண்ணவே வந்ததால் நெஞ்சது ஒண்ணரும் கோபமதாகுதே
ஈட்டித்திறலது காட்டிச் சமரை விட்
டோட்டிச் செயமுற வாட்டுவேன்னானே.

**சுலு.கப் :**

ஒண்ணலர்ரெவர்களுமென்பெயர்
பின்னமற்றறிவில் மயங்குவார்
உன்னை நான் அறிகிலேனோ வெகு
திண்ணமாய்த் தெரியுமடாயித்
திறை சுற்றிடுபுவி நரர்மெச்சிடவேயுன்
சிரசைக் களைவேன் திறமறியாயோ.

**சுலுத்தான் விருத்தம்**

***இராகம் : சங்கராபரணம்***

அத்தனை கெறுவமொ பித்தனே என்னை நீ சற்றேனும் மதியாமல்
அமர் பொரவந்ததால் எனதகம் நொந்திதோ அழலென வேகிடுதே
பித்தனே யுன்தரமுற்றுமே யிந்தரை தத்திவிழும் படியே
பிசகாதரிகுவேன் நிசமாயுனதுயிர் பிழை நீ பேய்மகனே.

## காட்சி – 57

***பாத்திரங்கள் :*** *சுலுத்தான், மந்திரி*
***இடம் :*** *போர்க்களம்*

**சண்டை**

**சுலுத்தான் - கவி**

***இராகம் : சங்கராபரணம்***

வாட்டிறலிற் கதித்த செயவீரனான வல்லபசேனாபதியே வழுத்தக்கேளும்
பூட்டுசமர்க்கஞ்சியே றெம்மீல் சேனை புறங்காட்டி ஓடுகிறார் பொழுது போச்சு
தீட்டு கதிரிதயமுறனாளைக்கந்தத் தீயவனைப்பிடித்திடறிக் கொண்டு
நாட்டமுடன் நரிகள்ளருந்தச் செய்து நமதுகொடி இழுத்தின்னாடதை யாள்வோம்.

**வசனம்**

கேளும் கப்பித்தாமே றெம்மீலும் சேனைகளும் பயந்துகொண்டு ஓடிப்போகின்றன நாளைக்காலமே அவனைத் துரத்தி ஊரை நமது வசப்படுத்துவோமாக.

## காட்சி – 58

***பாத்திரங்கள் :*** அரசன், மந்திரி, கட்டியன், கப்பித்தான்
***இடம் :*** கோயில்

றெம்மீலும் சேனாபதியும் - சிந்து

மெட்டு : சகலபொருளும்

***இராகம் :*** காம்போதி ***தாளம் :*** ஏகம்

ராயன் :

ஆதியம்பர சோதிநாதனே போற்றி போற்றி
அபயமெனக்கு அருளும் வேதனே போற்றி போற்றி

கப்பி :

மோதுகடல்போல் துலுக்கர் சேனைகள் நெருக்கி எங்களை
முறிய வடித்தார் கெதிஒருவரில்லைப் போற்றி போற்றி

ராயன் :

அஞ்சுகாயனே நெஞ்சங்கலங்குதே சோனர் எங்களை
அடித்தார் இடித்தார் ஆற்றாதோடிவந்தோம் அமலநாதனே

கப்பி :

தஞ்சமெமக்கு நீரே அல்லாமல் ஒருவரில்லை
தாபரம் தந்து காரும் காருமே சருவ ஈசனே.

றெம்மியேல் - தாழிசை

***இராகம் :*** நடபைரவி

அம்பரா அருள்செய்யம்பரா எமது ஆண்டவா துயரை மீண்டவா
ஆறு லட்சணகுணா கணத்திலகு அமலனே தருமவிமலனே
இம்பரும்பர் பணியுந் தயாளகுண
இறைவனே எமது மறையினை ஏற்றிடாத சுலுத்தானெனும் கொடிய
இறைய திறையை ஈயாததால்
கெம்பு கடலலை முழக்கமான படை கெற்சிதத்தோடு தொடுத்துமே
கிட்டினானடிகள் பட்டு நாங்களுமே
தப்பியச்சமது கொண்டுமே கொம்புறுதருவளர்ந்த காவதயடைந்
துன் கெதியை வேண்டினோம்
குருபரா உமது கருணை வைத்து இதுதருணமுதவி செய்யவாருமே.

வசனம்

கிருபாகரயேசுவே இந்த வேளையில் அடியோற்குத் துணையாய் வந்தருளும் சுவாமி.

சம்மனவு வரவு

கவி

***இராகம் :*** சங்கராபரணம்

பொற்சிறகு மினுமினென்னப் புயமிலங்க வில்லூர்திப் பிரபை துன்னச்
சொற்பிரபத்துவந் துலங்கச் சூரியன் போற் சொலித்த கதிர் துலங்கியார்ப்ப
நற்புகழால் றெம்மீலுக்கேகநாதன் நல்லுதவி செய்

செயலை எவிற்றுதற்கு கற்புறவரகஞ் செழிக்கக்
கனிகொண்டாடக் கருத ருஞ்சம்மனசு களரியில் வந்தாரே.

சம்மனசு - சிந்து

**மெட்டு :** பொன்னுலக நாயகனே **தாளம் :** ஆதி

சீருலவு னாதியான தேவனே போற்றி திருத்
தேசுலாவு மாசில்லாத யேசுவே போற்றி

நேருலாவு ஞான இஸ்பிரீத்துவ போற்றி
திறினித்திய தத்துவரொண்டான கத்தனே போற்றி

கத்தனைப் பயின்றருளும் கன்னியே போற்றி
ஆகாசமோடுலகனைத்தும் அரசியே போற்றி

உத்தனாம் றெம்மீலுக்குகந்த தேற்றலைச் சொல்ல
உம்பரத்திருந்துவிட்ட அம்பரா போற்றி.

சம்மனசு – பாயிரம்

**இராகம்** - *முகாரி* **தாளம் :** ஆதி

அம்பரம் புவனம் அடங்கலும் படைத்த
எம்பரப்பொருளெனும் ஏகநாயகனார்
உங்கள் மன்றாட்டை உகப்புடன் கேட்டு
இங்கேனை அனுப்பினார் இயம்பிடக்கேளும்
அஞ்சாதே றெம்மியேல் அமர்தனை வெண்டு
சஞ்சலம் நீங்கச் சந்தியோகவரை ஏசுனார்

அனுப்புவார் இனிய மாசுத்தன் தானுமேவந்து
சண்டையைச் செயித்து
வெற்றியைத் தருவார் விதனத்தை விட்டுச்
சட்டென அமர்க்குத்தான் செல்லுவாயே
எம்பிரான் தன்னை என்னாளும் போற்றுவீர்
அம்பராபரனார் அனுப்புதூதனும் நான்.

றெம்மியெல் - **தேவாரம்**

சூரிய வடிவாய் போற்றி சுகிர்தலங்காரா போற்றி
நேரியலுடையாய் போற்றி நிகழ்த்திடும் ஆஞ்சே போற்றி
பாரியல் படைய வெல்லப் பகரும் தேற்றல் தந்த
நேரியல் கமலபாதம் இறைஞ்சினேன் இறைஞ்சினேனே.

## காட்சி – 59

***பாத்திரங்கள் :*** *சம்மனசு*
***இடம் :*** தெரு

சம்மனசு – மங்களம்

***இராகம் :*** *ஆனந்தபைரவி* ***தாளம் :*** *ரூபகம்*

ஏசுதிறியோகா ஏசுனாதா பதம் போற்றி பூவில்
இன்னல் நீக்கியென்னாளுமாள் உன் சரணம் போற்றி
ஆவே மரிபாலா அனுகூலா சரண் போற்றி
பூவின் அடர் மிடி மைபிணி னீக்கியே ஆதரிப்பீர் போற்றி
தாயே ராசேஸ்பரியுன் திருதாளிணையைப் போற்றி
தயவுவைத்துன்மகனார் அருள் தரவே நிதம் போற்றி
பூவையர்க்குள்ளரசி உந்தன் புதல்வர் எமக்கெதிரி
விட்டுப் பொல்லாங்குகளில்லாமலே செல்வி காரும் போற்றி
அந்தரத்தில் வந்து வரம் தந்தவரே போற்றி
எம்மையாளும் யக்கோ அப்போஸ்தலுன் தாளிணையைப் போற்றி
சந்ததி பெற்றேங்கள் குலம் தழைத்து நன்றாய்ச் செழிக்கச் செய்யும்
சந்தியோகுமை யொரேயுன் தாளிணையே போற்றி.

## காட்சி – 60

***பாத்திரங்கள் :*** *அரசன், மந்திரி, சேனாபதி, கட்டியன்*
***இடம் :*** *அரண்மனை*

றெம்மியேலும் சேனாபதியும்
சிந்து

***இராகம்*** - *புன்னாகரவாளி* ***தாளம் :*** *ஆதி*

ராயன் :
செல்லுவோம் வாரும் வீரரே சமர்க்களத்தில்
செல்லுவோம் வாரும் வீரரே
செல்லுவோம் வாருமிப்போ
செருக்களமானதற்கு
வல்லமரியாயி திரு
மைந்தனைச் சிந்தையிலெண்ணி

கப்பித் :
எத்தனை படையணி மிகுத்து இருந்தாலுமென்ன
எங்களைப் பார்க்கிலும் வீரரங்கமைந்து மாவதென்னகத்
தன்னருள் ளெங்களுக்குக் கனிவுட னிருக்கையிலே
கஸ்டமோ துலுக்கன்படை இச்சணத்தில் வெல்வதற்கு

ராயன் :
சத்துருத்தனமே கொண்டு பட்டணத்துள்ளே நுழைந்து

சண்டை செய்யவந்த அந்தச் சண்டிசுலுத்தான் கூடாரம்
கிட்டுகுது பின்னிடாமல் எட்டியே அமரைச்செய்து
கீர்த்தி பெறுவோம் யேசுவின் தாட்சரணத் துணையாலே

**கப்பித்** :

நீரினிற் பம்பரந்தானும் நிண்டு சுற்றி ஆடிடுமோ
நீசனந்தச் சுலுத்தானும் போரிலெமை வெல்லுவானோ
பாருள்ளோர்க்கரசு செல்வம் பாக்கிய மரியதாயின்
பங்கயப் பதத்துணையை யெங்கள் சென்னிசூட்டி இப்போ.

## காட்சி – 61

**பாத்திரஙக்ள்** : றெம்மியேல் கூட்டம், சுலுத்தான் கூட்டம்
**இடம்** : போர்க்களம்

**சுலுத்தான் - கவி**

சமர்க்களத்தில் பயந்து பிறங்காட்டி ஓடிச்
சமத்தனென மறுபடியும் சண்டைக்கு வாறாய்
சுமக்கரிய சுமைசுமக்கத் துணிந்தவாறாய் துணிந்த
இவன் நெஞ்சமதைத் துண்டமாக்கி
நமக்குரிய திறமையதைக் காட்டவேணும் நால்வகைத் தானையை
அணியை நன்றாய்ச் சேர்த்து
அவக்குறியில்லாது அமர்புரிவோம் வாரும் அடல்செறி சேனாபதியே
அன்பாய்த்தானே.

**சண்டை – தரு**

***இராகம் : கல்யாணி*** ***தாளம் : ஆதி***

**சுலுத்** :

வீரசமர் புரிந்து பயந்தோடிப்போன மூடா
மீண்டும் மென்னோ டமர்க்கு வர வெட்கமில்லையோடா
போரைச் செயித்திடவோ நீ பிரபுத்திபம் கொண்டாய்
பித்தனே உன்சிரம் பந்தைப் போல் தத்தவைப்பேன் கண்டாய்

**றெம்** :

ஆருக்கெடா இந்தமொழி அறைந்ததட்டிவாறாய்
அரைச் சணத்தில் உயிரைவிட்டு அனலில் விழப்போறாய்
நீருக்குள் வாழ்கயலதனை நிகர்த்தி நீ துள்ளாதே
னிலைபரமுன்னுயிர் பறிப்பேன் னீகெறுக்கொள்ளாதே

**சுலு.கப்** :

மின்மினிப்பூச்சியின்னொளிக்கு மிகுந்த இருள்போமோ
வெருட்டுமுந்தன் வெருட்டினுக்கென் வீரம் குறைவாமோ
கல்மலையில் மண்ணெறியக் காயம் வருமோசொல்
கடுகடுக்காதே கைவேலால் கழைந்திடுவேன்னீனில்

**றெம்.கப்** :

என்னையின்னானெண்டறியாதிகட்ச்சி பண்ணுறாயோ

எலிக்குப் பயந்தே பூனை எங்குமேனிப்பாயோ
உன்னுடல் மெய் கழுகினுக்கு உண்பதற்குக் கொடுப்பேன்
உற்றமரில் உன்சிரசை அற்றிடக் கொய் தெடுப்பேன்.

**வேறு – சிந்து**

***இராகம் : அமிர்கல்யாணி*** ***தாளம் : ஏகம் திஸ்ரநடை***

**சுலு :**

மட்டிப்பயலே பண்டிக்குட்டிக் கிணையதாக
இட்ட அமரை நீயும் திட்டத்துடன் வெல்லவோ
இரத்தக் கறையிற் காகம் களித்துக் குளிப்புற்றோட
ஈனத்தனம் செய்குவேன் தானத்துடன் பாரடா

**றெம் :**

கெட்டித்தனமுடன் வெருட்டிப்போடவா
அதட்டிப்பேசியென்முன் கிட்டிச்சமர்க்கு வந்தாய்
கெருடன் காக்கை களுமுன் சடலத்தைக் கறையுண்ணக்
கெறுவோடக் கரவாளால் அரிவேனறி வாயே.

**சுலு.கப் :**

பட்சிக் கருடனொடு மொச்சுத்தினைக்குருவி
மற்ச் செய்ததைவெல்லுமோ னிட்சயத் தோடிப்போ
பருத்திப் பஞ்சினை நூலால் திரித்த பாவனையாகப் படப்போறாய்
பெரும் பாடி வ்விடத்தை விட்டோடு

**றெம்.கப் :**

கெற்ச்சித்தெழுந்து துள்ளியச்சத் தனமில்லாமல்
சற்றும் ராசனெண்டு அற்பன் மதிப்பில்லாமல்
கெறுவுற்ற மணமகள் புருடர்க்கு அமையாத
கெடிதைப் போலவே வந்தாய் அடிபடப்போறாய்.

## காட்சி – 62

***பாத்திரம் : சந்தியோகுமையோர்***

**சந்தியோகுமையோர் வரவு**

**கவி**

***இராகம் : சங்கராபரணம்***

இந்தவிதமாய் றெம்மீல்ராசனோடு எதிர்முட்டித்
துலுக்கன் மன்னன் கெறுவமாக,
கந்துகம் களிர் தேரும் காலாட்சேனை
கரிநிரைபோற் சூழ்ந்து அமர் செய்யும் வேளை
அந்தரத்தில் எங்கள் ஏகநாதன் அனுப்புகிண்ட யக்கோ
அப்போஸ்தல் தானும் வந்து வெள்ளைப்
புரவியதிற் துலுக்கரஞ்ச வாட்டினாரர் திறல் வீரங்காட்டினாரே.

## சிந்து

**மெட்டு** : பொன்னவிர்மந்ர...
**இராகம்** : நாதநாமக்ரியை **தாளம்** : ஆதி

அந்தமும் ஆதி அமலனின் தூய
அடியினைப் போற்றாத் துலுக்கர்களே
வந்திடப்போச்சோ கெறுவமயர்க்கு
வாட்டுகிறேன் விழுத்தாட்டுகிறேன்

சிந்தையிற் துணிவோ பெண்திறை வாங்கச்
சிதடர்களே முழு மடையர்களே
இந்தா உங்கள் தரமது வீழ ஈட்டு கிறேன் வேலால் வாட்டுகிறேன்

சத்தியவேதத்துற்பனநீத தன்மையையறியாச் சண்டிகளே
மொட்டைகள் தெறிக்கத் தொப்பிகள் பறக்கச்
சட்டென வெலால் குத்துகிறேன்

ஆதியின் நீதிக்கேது அனீதி அமர்தொடுத்தீர் வந்தீர் விரைவுடனே
சோதியின் வேதம் மேதினியோங்கத்
துரத்துகிறேன் வெட்டி விழுத்துகிறேன்.

## வேறு – சிந்து

**இராகம்** : காவடிச்சிந்து **தாளம்** : ஏகம் திஸ்ரநடை

அத்தனைக்கும் துணிவாமோ சத்துருக்காள் நீங்கள்
அகந்தை கொண்டு அமர்க்குவர மிகுந்த கெறுவாமோ

சத்தியவேதத்தினையே தான்னிகழப்போமோ
தாக்கிறேன் வேலாலே கிட்டிப் போக்கிறேனே வீழ

பெண்திறையை வாங்கிடவோ முன்பயமதின்றி பித்தனே
அந்தரம் பந்தைப்போல் தத்தச் செய்வேன் சிரங்கள்

இன்று தொட்டின்னகரினுக்குள் எதிரிடை செய்யாதே
எங்கள் சத்தியமறை முறையின்படியே
என்றும் நாமே ஈட்டுகிறேன் வேலாலே ஓட்டமெடுத்திடவே.

## காட்சி – 63

***பாத்திரங்கள் :*** *றெம்மியேல் கூட்டம், சுலுத்தான் கூட்டம், சந்தியோகுமையோர்*
***இடம் :*** *போர்க்களம்*

**சண்டை**

சபை – கவி

***இராகம் :*** *சங்கராபரணம்*

தன்வினை தன்னைக் கெடுக்குமெண்டு
முன்னோர் சாற்றுமுரை மாற்றமற சமர்க்கு வந்த
மன்னவனாம் துருக்கியவன்
சேனை தன்னை மடக்கடித்துச் சந்தியோகுமையோர் வெற்றி
திண்ணமுடன் றெம்மீலுக்கீய அந்த தேர்வேந்தன்
சேனைகுடி தழைத்து நன்றாய் இன்னிலத்தில்
இன்னலொன்றும் மணுகிடாமல் இன்பமுடன் வாழ்ந்திருந்தார்
இனிதாய்த்தானே.

றெம்மியேல் - கப்பித்தான்

தரு

***இராகம் :*** *சுருட்டு* ***தாளம் :*** *ஆதி*

றெம் :

மற்புய சேனாபதியே துட்ட
மருவலர் கட்கதிபதியே துருக்கி
மன்னனைச் சமரினில் வெண்டுமே துணை செய்த
மய்யோரைப் போற்றிக்கொள்வோம்.

கப்பி :

அற்புத நல் உற்பனனே சந்தி
யாகப்பரே பூவினிலெண்டுமே ஆளு
மோடிடரின்றித் தாளிணை நித்தமும் அஞ்சலி புரிவோமே.

றெம் :

மரியசலோமை பாலகனே மயல்
புரிஇடர்கள் சீலகனே விட்டு மறுகியே ஓடவே
திருவருள் புரியக்கோ
மாமுனி பூவினிலே.

கப்பி :

திருவருளைச் சொரிபவனே செப
தேயுதரும் மருவரனே உந்தன்
செம்பதம் தந்தெமை வந்திடாதிடரெண்டும்
தீர்த்தெமைக் காத்தருளே.

றெம் :

கார்ரெருமை சுரபி மறி செறி
வாகியே யெண்டும் பலுகியே நலமுடன்

காசினிமீதினிலே மகவாழ் வற்றுக்
களிப்புறச்செய்வாயே.

கப்பி :

எதிரிகளின்னிடர் பொடியாகவும்
ஏற்கா மிடிபிணியது ரோடியோ
எண்டென்றும் செழிப்புற்று
நன்றாக வாழவே
யேசுவைப் போற்றிடுவோம்.

சந்தியோகுமையோர் கவி

***இராகம் : சங்கராபரணம்***

சற்றுமே அஞ்சவேண்டாம் தரைதனை ஆளும் றெம்மீல்
துற்பிணி மிடிகள் நீங்கிச் சுகமுடன் வளம் பெருக்கி
நற்பரிவாக எண்டும் னாடிய சிறப்புற்றோங்க
இத்தரை தன்னை யாள்வாய் இனிதுடன் இயம்பி னேனே.

வசனம்

கேளும் றெம்மியேல் நீரும் உமது சேனைகளும் தழைத்து என்றென்றும் ஓரிடர்களில்லாமல் வாழ்ந்து கொள்ளுவீராக.

## காட்சி – 63

சந்தியோகு மங்களம்

சிந்து

***இராகம் : மத்தியமாவதி*** ***தாளம் : ஆதி***

மங்கள சோபனத்தைப் பாடியே சித்திர மாமணி
மாடந்தன்னிலேகுவோம்
எங்கும் பரனார் ஆசி ஓங்கவே வந்த
இடர்பிணி யாவும் விட்டு நீங்கவே
சங்கை எம் குலத்தோர் நீள்கவே
னிதம் தழைத்துப் பலுகி ஒன்றாய் வாழவே
வந்த சத்துருவினை மாழவே
சந்தியோகுமையோர் நிதமன்பாக ஆழவே
கன்று காலி பெருகி ஓங்கவே மாரி
துன்றிக் கமங்க ளெங்கும் தேங்கவே
நன்றாய் நெல் விளைவுகள் தாங்கவே துயர்
ஒன்றும் பிணிமிடிமை நீங்கவே
இட்டநன்மைகள் எல்லாம் கூடவே முன்னே
கட்டும் புலவர் றறம் ஓடவே நட்ட பயிர் செழிப்பை நாடவே
யக்கோ நாதன் நலங்கள் வந்து கூடவே
சுந்தரச்சந்ததிகள் ஓங்கவே
பில்லிசூனிய வல்வினைகள் னீங்கவே
எந்தனாளும் களனிதேங்கவே விளை

வெய்தியே உய்வுற்றன்பாய் ஓங்கவே
பஞ்சம் படைக ளடராமலே இந்தப்
பாரினிலோர் தீங்கும் தொடராமலே
அஞ்சுகாயன் துணையால் வாழவே யக்கோ
அப்போஸ்தலர் பாதமலர் வாழியே.

## காட்சி – 64

***பாத்திரங்கள் :*** *துருக்கி கூட்டம்*
***இடம் :*** *துருக்கி அரண்மனை*

துருக்கி கூட்டம்
மங்களம்

***மெட்டு :*** *வானமும் அம்புவியும்...*
***இராகம் :*** *சிந்துபைரவி* ***தாளம் :*** *ஆதி*

**ராசன் :**
திருமேவுமண்டலமும் கதிரோன் திரைவரையும் தந்த
திவ்விய பரத் துய்யசோதியே உய்யவையும் உலகினிலெம்மை
எந்நாளும் உமது பதம் போற்றுவோம்.

**கப்பித் :**
அருள்மேவு சூரியன்போல் சமரானதில் உதித்த வந்த
ஆயிரங்கிரணாயிரம் சோதி வீரியன் அதிகாரியன் யாரோ
ஆரென்று தெரியவில்லை அவரையே.

**மந்திரி :**
செங்கமலப்பிரபை ஒளிர்லங்கிர்த மாமுகத்தைக் காண
தீயநோய் பிணியாவும் நீங்கியே சேயர் நாமும்
செழிப்போடுற்றோமே
முன்செய்த புண்ணியத்தின் நன்மையே

**கட்டி :**
திங்கள் கண்ட குமுதம் போலே எங்கள் இதய நன்மை
கொள்ளச் செய்த மாமுனி துய்யபாதத்தைக் கையெடுத்துத்
துதிப்போமென்னாளும் அவர் பதத்தைப் போற்றில் நன்மையாகுமே.

**ராசன் :**
செய்யும் தொழில் முயற்சி நன்றாய் உய்து தழைத்துச்செனர்
மிடி தீர்த்து எங்களைக் காப்பார் அச்சுதன் தாள் பணிந்து
மனைக்கின்று செல்வோம்
சகல சுகசம்பத்து நீடுமே.

**கப்பி :**
துய்யசந்திரோதையனே யக்கோ தூயமகாமுனியும் வந்து
தோண்டிய தான் தவிர்த்தெமை ஆண்டருள் யக்கோ
அற்புதா போற்றி
இன்றுமென்றும் நமஸ்காரம் செய்குவோம்.

**ராசன் :**
உந்தனடைக்கலத்தில் நாங்கள் உற்ற தனையரல்லோ
பிணி ஓடவும் நன்மை நாடவும் செய்துன் தாழினை தந்து

தாபரிப்பீரே –
அற்புதமிகுந்த நவநாதனே.

கப்பி :

சந்ததி வர்த்தித்துமே என்றும் எந்தனின் மாமனையும் தழை
வாகவும் சுகமேவவும் செய்யுன் தாழினை நிதம்
சந்தியோகு நாதனே
உமது நன்றிதனை மதித்துப் போற்றுவோம்.

## காட்சி – 65

***பாத்திரங்கள் :*** *றெம்மியேல் கூட்டம்*
***இடம் :*** *றெம்மியேல் அரண்மனை*

றெம்மியேல் கூட்டம்
மங்களம்

***இராகம் :*** *நாதநாமக்கிரியை* ***தாளம் :*** *ஆதி திஸ்ரநடை*

றெம்மி :

சீர்மேவும் பருதி தெண்டிரையுலகம்
சேண்பல பொருள்களும் வகுத்த ஞான
தார்மேவு சச்திதானந்த ஜோதி
சரண பங்கயம் சிரம்தனிற் கொள்வோமே.

மந்திரி :

பொன்னோங்குதன்னார் பூவிருது
கரத்திற் புகழுற வேற்றிடும் துகளில்லாத
நன்மைவான் சஞ்சூசை யப்பர் தாளை
நமஸ்கரித்தென்னாளும் நாம் வாழ்வோமே.

கப்பித் :

ஏர்மேவுசந்த ஆனாளினுதரம்
இலங்கிடு நவச்சோதியா யுதித்த
பேர்மேவு மரியம்மாள் ஈந்து சொர்ணப்
பிரகாசபதமலர் பேணிக்கொள்வோம்.

கட்டி :

விண்ணெழும் பருதிபோல் பிரபை வீச வெண்புரவி
யில் வந்து விளங்கும் ஞான
தண்ணரும் சந்தியோமையோர் பாதம்
தழைக்க எங்களைச் செய்யும் தரையின் மீதே.

றெம்மி :

பூமாதுமனைதனில் மேவிடவும்
ஆமேதிதுருவை மேலோங்கிடவும்
சீவியம் மனைமக்கள் தழைத்துனாளும்
செழிக்க யக்கோ அருள் செய்குவீரே.

கப்பித் :

சீவியம் பெருமை கொள்குலத்தில் தங்கி
செழித்துமே செய்பயிர் செழித்துனாளும்

மேவிய மிடிபணி அகன்று வாழ
விளங்கருள் செய் சந்தியோகுநாதா.

றெம் :

தூயவான் சந்தியோமையோர் பாதத்
துணை யருளால் நன்மை துலங்கி வாழ
வாய்மைசேர் சித்திர மனைக்கு இன்று
மகிழ்வோடும் செல்லுவோம் வருகுவீரே.

கப்பி : தேசுறை ஆவணம் முள்ளிக்கண்டல்
சிறந்திடும் முருங்கனில் நிறைந்து எங்கள்
நேசநற்சந்ததி பலுகியக்கோ
நிதத்துணைபணிந்து பொன்மனைக்குச் செல்வோம்.

## காட்சி – 66

***பாத்திரங்கள்** : பாடியவர் அனைவரும்*
***இடம்:** பொது அரங்கு*

பொது மங்களம்

***மெட்டு** : வானசமூக மாமயிலே*
***இராகம்** : புன்னாகரவாளி* ***தாளம்** : சதுஸ்ரஏகம்*

சீரிலங்குத் தாரிலங்கு பிதா, திவ்விய சுதன் இஸ்பிரீத்து
ஏரிலங்கு திறியேக பரர்க்கின்றுமென்றும் மங்களமே

நேரிலங்கு கன்னிமரி நன்மை நித்திலங்கு சஞ்சூசை
பேரிலங்கு சந்தானாள் பாதப்பிரபை ஒளிர் மங்களமே

அற்புதசம் பேதிருபாவுல் தூய அருளப்பர் சஞ்சுவக்கீனு
சற்க்குணசந்தியோகுமையோர் திருச்சரணமலர் மங்களமே

பொற்ப்புறு சந்தொம்மையென்னும் மிகப்புதுமைசெய்யந்
தோனியுடன் தற்பரனார்க்குகந்த சுத்த
வாளர் சகலருக்கும் மங்களமே

தீயவஞ்சகக் கூழிகளை வேலால் சிதைத்த மிக்கேல் ஆஞ்சினோடு
தூயநவகணவானோர் செம்பொற்துலங்கு சரண் மங்களமே

தேசமெங்கும் செழிக்க மழை பெய்து சென்னெல் மிக விளைவாகி
மாசுடைய பவமகண்டு செனர் வாழ்வுறவே மங்களமே

பஞ்சம் மிடி மாய்ந்திடவும் பிணி சஞ்சலங்கள்ளோய்ந்து நன்றாய்
மிஞ்சியே சந்ததி விருத்தி ஓங்கி விளங்கிடவே மங்களமே

செஞ்சொல் மொழிமடவார்கள் கற்பு செழித்து நன்றாய் களித்தோங்கி

வஞ்சமெல்லாம் அகன்று நன்மை ஊரில் மலர்ந்திடவே மங்களமே

செற்பயிர்கள் சித்திக்கவும் மாடாடுய்து எங்கும் வத்திக்கவும்
வையமாள் மன்னவர் நீதி தழைத்து வளர்ந்திடவே மங்களமே

காவனப்பூம் தும்பை திகழ் மலர்க்கதிரெறிக்கும் எம் குலமாம்
ஆவணம் முருங்கன் முள்ளிக்கண்டலதிற் தழைக்கமங்களமே

சத்தியவேதக் குருக்கள் தவச்சன்னியாசர் கன்னியர்கள்
நித்தமுமே தழைத்தோங்கி வாழ நீநிலத்தில் மங்களமே

நாமகளின் பிரவேசம் உற்றுப் பூமகள் வந்துறவாகி
மாமனைகள் செழித்து வளம் ஓங்கி வளர்ந்திடவே மங்களமே

மாதரொடு ஆடவர்கள் மிக வளர்ச்சிசேர் சந்ததிகள் பெற்று
ஏதுமொரு தீதுமற்று குலமும் இலங்க என்றும் மங்களமே

கத்தன் துணைமேவிடவும் சம்பத்துவிருத்தி யாகிடவும்
மெத்து சென்னெல் விளைவுபெற்று குலமும் மேன்மையுற மங்களமே

அப்போஸ்தலர் யக்கோவு நாடகப்பாவிதனைப் பாடியாடி
இப்பதியிற் படிப்போர் கெட்போர் தளைத்திலங்க நித்தம் மங்களமே

சுத்த சந்தியோகுமையோர் செம்பொற்றுணை எமது குலத்திற் தங்கி
நித்தமுமே தாபரிப்பார்இவர் பொற்பாதாரம் மங்களமே.


**முற்றும்**



**புலவர் மரியான் சந்தான் அவர்களின் வீடு**
**முருங்கன்**

*புலவர் கிறிஸ்தோ மரியாம்பிள்ளை அவர்கள் முருங்கன் மக்களின் அன்பான அழைப்பை ஏற்று வருகைதரும் நாட்களில் புலவர் மரியான் சந்தானுடன் இணைந்து கவி பாடவும் கூத்துக்கள் எழுதவும் பயன்படுத்திய வீடு*

**மேற்படி வீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற**
**ஓலைச்சுவடிகள்**





**வாழ்க்கை வரலாறு**

# கிறிஸ்தோ சூசைப்பிள்ளை (நல்லையா)

**கவிஞர்**
**நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா**
**கனடா.**

நாவாய் மண்ணின் கவிப் புதல்வனாய் 1903ம் ஆண்டு கிறிஸ்தோ வைத்தீனா தம்பதியருக்கு மூத்த மகனாய் பிறந்தார். கலை ஆர்வமும் புலமைத்துவமும் கூடவர சிறந்த புலவராகவும் இன்னும் இனிமையாகப் பாடும் குரல் வளத்தை கொண்டவராகவும் விளங்கியுள்ளார். இவர் பல நாட்டுக்கூத்துக்கள் நாடகங்கள் அத்துடன் பல தேவாரங்களையும் எம் மண்ணிற்குத் தந்துள்ளார்.

இவரது இயக்கத்தில் 'இம்மனுவேல்' நாட்டுக்கூத்து பல இளம் கலைஞர்களைக் கொண்டு 1937ம் ஆண்டு மேடையேற்றப்பட்டது. இந் நாட்டுக்கூத்தானது இன்றுவரை காலத்தால் அழியாத காவியமாகப் போற்றப்பட்டு வருகின்றது. இன்னும் நாட்டுக்கூத்தின் கலாநிதி 'புகுந்தான் யோசேப்' அவர்களின் கலையுலக வாழ்க்கை வரலாறு எனும் நூலில் சிறுவன் யோசேப் ரசித்த நாவாந்துறை நாட்டுக்கூத்து எனும் பகுதியில், திரு. யோசேப்புக்கு அப்போது பதின்நான்கு பதினைந்து வயது. இவர் வயதையொத்த வடக்கு நாவாந்துறை காளைகள் அப்போது 'இம்மனுவேல்' நாட்டுக் கூத்தை மேடையேற்றினார்கள். இவ் இளைஞர்களே அரசனாக மந்திரியாக கதாநாயகன் இம்மனுவேலாக நடித்து அற்புதமாகப் பாடினார்கள். இது சிறுவன் யோசேப்பை வெகுவாகக் கவர்ந்து விட்டது. இவ்வுந்துதலால் சிறுவனாக தானும் இவர்களைப் போல் ஆடிப்பாடி நடிக்க வேண்டுமென கிளர்ந்தார். இத்தகைய கிளர்வே இன்றுவரை இவரை நாட்டுக்கூத்துக் கலையுலகில் ஓர் சக்கரவர்த்தியாக்கியது எனலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதாரம் தகவல்துளி )


இப்புகழுக்குரிய புலவர் நல்லையாவிற்கு அப்போது முப்பத்தி நான்கு இந் நாட்டுக் கூத்தானது மூன்று முறை அரங்கேற்றப்பட்டதென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும் (1937, 1957). இன்னும் வேதாகமத்தில் மகபே ஆகமத்தில் வரும் 'ஏழு பிள்ளைகளும் தாயும்' என்ற கதையை நாடகமாக எழுதி அதை மேடையேற்றி சிறப்பான வரவேற்பைப் பெற்றதுடன் வீரமாமுனிவரின் 'தேம்பாவணி' (புனித சூசையப்பர்) காவியத்தையும் குறுகிய நேரக் கூத்தாக இயற்றி அதை மேடையேற்றி மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பையும் பெற்றார். இவர் பெருங்கவியாக இருந்த மரியாம்பிள்ளையின் உறவினராகவும் அவருடனும் சுவாமி ஞானப்பிரகாசருடனும் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் சென் மேரிஸ் சனசமூக நிலையத்தின் முதல் தலைவராக வந்து தொடர்ந்து இருபத்தி ஐந்து வருடங்களுக்கு மேல் இப்பதவியை வகித்து கிராம முன்னேற்றத்திற்கு சிறப்பான பணியாற்றியுள்ளார். இலங்கையின் முன்னாள் பலஸ்தாபன அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. கன்னங்கரா அவர்களின் தலைமையில் நடைபெற்ற முதலாவது சனசமூக நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து சிறப்பித்தார். பின்னர் அதே நாளில் இவர் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் (அப்போதைய 11ம் வட்டாரம்) திரு. அபுசாலி

காலியாத் அவர்களுடன் மகிழூந்தில் அழைத்து வரப்பட்டு இவருக்கு புலவர் பட்டம் வழங்கப்பட்டது.

இவரது இருபத்தைந்து வருட சனசமுக நிலையத் தலைவர் சேவையை முன்னிட்டு சனசமுக நிலையத்தின் வெள்ளிவிழா நிகழ்வு (1962) வண. பிதா கறோவ் அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்துப் பத்திரம் வழங்கப்பட்டு பொன்னுடையும் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டார்.

நாவாந்துறை மக்களால் நாட்டுக்கூத்துப் புலவர் பட்டம் பெற்றதுடன் பல சமுகப் பணிகளிலும் முன் நின்று உழைத்துள்ளார். இவரது படைப்புக்களை தொடர்ந்தும் தேடும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் சென் மேரிஸ் சன சமுக நிலைய வரலாற்றில் இவரின் பெயர் என்றும் அழியா இடத்தைப் பிடிக்கும் என்பதில் ஐயமில்லை.




பூந்தான் யோசேப்பு

' நாட்டுக் கூத்தை மேடையேற்ற , இளவாலை. பெரியவிளான், முருங்கன், திருனல்வேலி, அச்சு நனது குழுவினர் சகிதம் மேடை கே பல புதிய நாட்டுக் கூத்துக்கள்

நிய கலாநிதி திரு. பிரூசிப்பிள்ளை ானதீபன்' என்ற நாட்டுக் கூத்தை திரு. பொன்னுத்துரையும், திரு. த்து மேடையேற்றினர். இதே கோயிற் திருவிழாவின் இறுதி ங்கேற்றப்பட்டது. இப்படியாக த்மாவையே ஒன்றிக்க வைத்தார்.

**சிறுவன் யோசேப்பு ரசித்த நாவாந்துறை நாட்டுக் கூத்து!**

திரு. யோசேப்புவுக்கு அப்பொழுது பதின்மூன்று பதினைந்து வயது. இவர் வயதையொத்த வடக்கு நாவாந்துறைக் காளைகள் அப்போது 'இம்மனுவேல்' நாட்டுக்கூத்து மேடையேற்றினர். இவ் விளைஞர்களே அரசனாக — மந்திரியாக — கதாநாயகன் இம்மனுவேலாக நடித்து அற்புதமாகப் பாடினர். இது சிறுவன் யோசேப்புவை வெகுவாகக் கவர்ந்துவிட்டது இவ்வுந்துதலால் சிறுவனான தானும் இவர்களைப்போல் ஆடிப் பாடி நடிக்கவேண்டுமெனக் கிளர்ந்தார். இத்தகைய கிளர்வே இன்று இவரை நாட்டுக்கூத்துக் கலையுலகில் ஓர் சக்கரவர்த்தியாக்கியது எனலாம். இவர்பால் உறங்கிய நாட்டுக்கூத்து மோகம், பதினெட்டு வயதுவரை யாழ்ப்பாணம் சூசையப்பர் கூட்ட குழு மாணவர்களுடன் இணையவும், பல நாடகங்களை நடிக்கவும் ஈரண்டியது.

# புலவர் சூசைப்பிள்ளை பரம்பரை
# (நல்லையா)

கிறிஸ்தோ (தகப்பன்) — வைத்தீனா (தாய்)

- சூசைப்பிள்ளை (நல்லையா) புலவர்
- செபமாலை (துர்ராசா) சகோதரன்
- தீயோ தங்கக்குட்டி சகோதரி
- பர்னாந்து இருதயமுத்து சகோதரி

செபமாலை (துர்ராசா) சகோதரன் — அடைக்கலம்

தீயோ — தீயோ தங்கக்குட்டி சகோதரி

- மரியாம்பிள்ளை அற்புதமுத்து (மருமகள்)
- பேதுறுப்பிள்ளை சின்னமணி (மருமகள்)

பர்னாந்து — இருதயமுத்து சகோதரி

| | | | |
|---|---|---|---|
| அருமைராசா பவுலீனம்மா (மருமகள்) | அடைக்கலம் மதியாபரணம் (மருமகன்) | சந்தியோ ராசகிளி (மருமகன்) | லூர்த்தம்மா (மருமகள்) |
| | செபஸ்தியாம்பிள்ளை (பாலராசா) (மருமகன்) | செபமாலை மரியை (பொட்டம்மா) (மருமகள்) | |

# புலவர் சூசைப்பிள்ளை (நல்லையா)

| | |
|---|---|
| கிறிஸ்தோ (தகப்பன்) | வைத்தீனா (தாய்) |

**தாயின் சகோதரர்கள்**


| | | | |
|---|---|---|---|
| மனவல் மரியம்மா (பெரிய தாய்) | சந்தியாப்பிள்ளை செல்லாச்சி (சிறியதாய்) | மரிசால் (தாய்மாமன்) இன்னேசம் (பரிமளம்) | ஞானமுத்து (தாய்மாமன்) விக்ரோறியா |
| அடைக்கலம் (ஒன்று விட்ட சகோதரன்) சிலுவைராசா ஒஸ்தியம்மா (ஒன்று விட்ட சகோதரி) | செபமாலை தங்கமணி (ஒன்று விட்ட சகோதரி) செபமாலை பொன்னம்மா (ஒன்று விட்ட சகோதரி) மரியாம்பிள்ளை இரத்தினம்மா (ஒன்று விட்ட சகோதரி) | முடியப்பு (காணிக்கை) லூர்த்தம்மா (மைத்துனி) யோண் (முத்தையா) காணிக்கை மலர் (மைத்துனி) அருமைத்துரை (மைத்துனர்) ↓ | பேதுறுப்பிள்ளை மரியபுஸ்பம் (மைத்துனி) |

அன்ரனி யோசேப்
பவுலீனம்மா
(தங்கப்பொன்)
(மைத்துனி)
வென்சிலாஸ்
மேரியம்மா (ஞானமணி)
மைத்துனி
(இவர்களின் மகன்
வென்சிலாஸ் அனுரா,
கவிஞர், நூலின்
தொகுப்பாளர்.
(பெறாமகன்)
சிந்தாத்துரை (புலவர்)
(மைத்துனர்)
அருள்ராசா
(அரியகுமாரன்)
அடைக்கலமேரி (மலர்)
(மைத்துனி)
தேவராஜா (ஆசைத்துரை)
(மைத்துனர்)

# புலவர் மரிசால் சிந்தாத்துரை

கவிஞர்
நாவாயூரான் வென்சிலாஸ் அனுரா
கனடா.





**நா**வாய் மண்ணில் புலமையின் வித்தாய் 24.09.1948ம் ஆண்டு மரிசால் இன்னேசம் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவர் புகழ் பெற்ற இயற்கவி கிறிஸ்தோ மரியாம்பிள்ளையின் மகள் வழிப் பேரனும் நனி கவி நல்லையாவின் தாய்வழி மைத்துனருமாவார். இரு பெரும் மலைகளில் வரும் அருவியாய் மண்ணில் படர்ந்தவர் இவர். எப்போதும் தனக்குள்ளே கவிபாடி கலையை சுவாசித்தவர்.

துரித கெதியில் கவிதைகள் புனையும் ஆற்றல் படைத்ததுடன் நாட்டுக் கூத்துக்கள் நாடகங்கள், தாளலயம், வில்லுப்பாட்டுகள் போன்றவற்றையும் இயற்றி சிறப்பான வரவேற்பைப் பெற்றவர். இவரது படைப்புக்கள் நாவாய் மண்ணைக் கடந்தும் மன்னார் மாவட்டத்தின் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

இவரது 'வாழும் வரை போராடு' நாடகம் வாழும் மனிதர் மனதைவிட்டு என்றும் நீங்காத காவியமாகும்.


நாவாந்துறை மக்களால் இளம் கலைப் புலவர் என மகுடம் சூட்டப்பட்ட இவர் பல பாத்திரங்களில் நடித்து சிறந்த நடிகராகவும் விளங்கியுள்ளார். திருப்பாடுகளின் காட்சி (பாஸ்)யில் ஊதாரிப் பிள்ளையாக நடித்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். காலத்தால் அழியாத இக் கலைப் புதல்வரின் படைப்புக்கள் பரந்து விரிந்துள்ளதால் இதன் தேடல்கள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. இன்னும் 5.12.1993ம் ஆண்டு இறைமகன் அழைப்பை அன்புடன் ஏற்று மண்ணகம் விட்டு விண்ணகம் சென்றார்.

இவரின் படைப்புக்களிலிருந்து சில...

| நாட்டுக்கூத்து, நாடகங்கள் | போடப்பட்ட இடங்கள் |
|---|---|
| ✶ கிறிஸ்தோப்பர் நாட்டுக்கூத்து | - விடத்தல்தீவு, தேவன்பிட்டி |
| ✶ ஏழுபிள்ளையும் நல்ல தங்காளும் | - நாவாந்துரை (1992), நாச்சிக்குடா, இலுப்பக்கடவை |
| ✶ வேங்கை நாட்டு மன்னன் நாடகம் | |
| ✶ மூவேந்தர் | - விடத்தல் தீவு, நாவாந்துறை |
| ✶ மனம் மாறிய மைந்தன் நாடகம் | |

**சமூக நாடகங்கள்** **போடப்பட்ட இடங்கள்**

- மலரும் மங்கையும்
- அன்புக்காக
- அணைந்த தீபம்
- கொடிய ஏரோது (ஆலய 50வது பொன்விழாவில் நாவாந்துறையில் மேடையேற்றப்பட்டது.
- வாழ்க்கைப்புயல்
- பாகப்பிரிவினை
- மாடி வீட்டு ஏழை
- கிறிஸ்தவ நாடகம்
- இராயப்பர் நாடகம் - நாவாந்துறை
- நகைச் சுவை நாடகம்
- அப்புக்கு வந்த ஆசை - நாச்சிக்குடா, விடத்தல் தீவு.
- எழுர்ச்சி நாடகம்
- வாழும் வரை போராடுவோம் - பல தடவை பல இடங்களில் போடப்பட்டது.
- தாளலயம் - நாவாந்துறை, நாச்சிக்குடா
- வில்லுப்பாட்டு - விடத்தல்தீவு, இலுப்பைக் கடவை, நாச்சிக் குடா, தேவன் பிட்டி
- வீதி நாடகங்கள் - இலுப்பக் கடவை




கவிஞர் நாவாயூரான்
வென்சிலாஸ் அனுரா



அருட்திரு.
தமிழ் நேசன் அடிகளார்







ஜெயந்த் சென்ரர் - 077 724 9536